# ஸ்ரீகலா SRIKALA




ஸ்ரீகலா - நி(ழல்)ஜம் உயிர் கொ(ல்)ள்

பாகம் 2

SK 9

SMS Publications


ஸ்ரீகலா SRIKALA
நி(ழல்)ஜம் உயிர் கொ(ல்)ள் , ஸ்ரீகலா
பாகம் 2
SK 9
SMS Publications
நி(ழல்)ஜம்
உயிர் கொ(ல்)ள்
பாகம் 2
NI(zhal)JAM UYIR KO(l)L
ஸ்ரீகலா


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS


Download

## Contents


நிழல் : 24

நிஜம் : 25

நிஜம் : 26

நிஜம் : 27

நிஜம் : 28

நிஜம் : 29

நிஜம் : 30

நிஜம் : 31

நிஜம் : 32

நிஜம் : 33

நிஜம் : 34

நிஜம் : 35

நிஜம் : 36

நிஜம் : 37

நிஜம் : 38

நிஜம் : 39

நிஜம் : 40

நிஜம் : 41

நிஜம் : 42

நிஜம் : 43

நிஜம் : 44

நிஜம் : 45

நிஜம் : 46

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

"தேரா மன்னா செப்புவது உடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை ஆகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்தீங்கு
என்கால் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி"

"உண்மை தெளியா மன்னனே! சொல்லுகிறேன் கேள். தேவர்களும் வியக்கும்படி ஒரு புறாவினது துன்பத்தை நீக்கின சிபி என்னும் செங்கோல் மன்னனும்; தனது அரண்மனை வாயிலில் கட்டப்பட்ட ஆராய்ச்சி மணியை இடைவிடாது அசைத்து ஒலித்த ஒரு பசுவின் துயரைப் போக்க எண்ணி, அப்பசுவின் துன்பத்திற்குக் காரணமான தனது அரும்பெறல் மகனைத் தானே தனது தேர்ச் சக்கரத்திலிட்டுக் கொன்றவனான செங்கோல் வேந்தன் மனுநீதிச் சோழனும் அருளாட்சி செய்த பெரும் புகழை உடைய புகார் நகரம் என்னுடைய ஊராகும்.

புகார் நகரில் மிக்கப் புகழுடன் விளங்கும் பெருங்குடி வணிகனான மாசாத்துவான் என்னும் வணிகனது மகனாய் பிறந்து, வாணிகம் செய்து வாழ்தலை விரும்பி, ஊழ்வினை காரணமாக உனது பெரிய நகரமாகிய மதுரையிலே புகுந்து, இங்கு அத்தொழிலுக்கு முதலாக என்னுடைய காற்சிலம்புகளுள் ஒன்றினை விற்பதற்கு வந்து, உன்னால் கொலைக்களப்பட்ட கோவலன் என்பான் மனைவி ஆவேன். என்னுடைய பெயர் கண்ணகி"

PDF தமிழ் .com

கண்கள் கலங்கி சிவக்க, தலைவிரி கோலமாய்ப் பாண்டிய மன்னனின் சபையில் நியாயம் கேட்ட கண்ணகியை பார்த்தது போலிருந்தது மேடையில் ஆவேசமாகப் பேசி கொண்டிருந்த அந்தச் சிறுபெண்ணைக் காணும் போது... மதுரையை எரித்த கண்ணகியாய் விழிகளில் தீச்சுவாலையுடன் ஆவேசமாய் அவள் நின்ற போது அரங்கமே எழுந்து நின்று கை தட்டியது...

நிஷிலாவும் எழுந்து நின்று கைத்தட்டினாள்... ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் என்பது போன்ற பூரித்த மனநிலையில் அவள் இருந்தாள்... அரங்கம் நிறைந்த கரவொலியில் அவளது விழிகளில் கண்ணீர் தளும்பியது... கண்களில் கண்ணீர் மல்க, இதழ்களில் புன்னகை பூக்க ஈரைந்து மாதங்கள் சுமந்து பெற்ற மகளைப் பரவசத்துடன் பார்த்திருந்தாள்...

கேரள தமிழ் சங்கத்தின் ஆண்டு விழாவிற்குப் போட்ட நாடகத்தில் ஆதிரை கண்ணகி வேடம் தரித்து நடித்திருந்தாள்...

"ஆதி கலக்கிட்டா இல்லையா நிஷி..." பவித்ரன் மகிழ்வாய் கூற... அதை ஆமோதிப்பது போல் தலையாட்டியவளுக்குப் பேச்சு வரவில்லை...

"அவள் உன்னை மாதிரி நிஷா... ரொம்பத் திறமையான பொண்ணு..." மறுபக்கம் இருந்த துளசி அவளை ஆறுதலாக அணைத்து கொண்டாள்...

'என்னைப் போல் என் மகள் இல்லை... என்னை விட அதிபுத்திசாலி அவள்... தாய்க்குப் பாடம் புகட்டும் தேவதை அவள்... இந்தப் பத்து வயதில் அத்தனை பக்குவம் அவளுக்கு...' அவள் மனதில் நினைத்து கொண்டாள்...

"ஆனா ரொம்ப அழுகாச்சியா நடிச்சா..." என்று முகத்தைச் சுளித்தனர் பவித்ரன், துளசியின் மகன்களான இரட்டையர்கள் ஆர்யா, சூர்யா...

"ஒரே ஃபோரா இருக்கு டாட்... எங்கேயாவது கூட்டிட்டு போங்க..." என்று தந்தையை நச்சரித்தனர் இருவரும்...

"இப்போ டைம் ஆகிருச்சு கண்ணா... இன்னொரு நாளைக்குக் கூட்டிட்டு போறேன்... இன்னைக்கு டின்னருக்கு ஹோட்டலுக்குப் போகலாம்..." என்று அவன் மகன்களைச் சமாதானப்படுத்தினான்...

அதைப் புன்சிரிப்புடன் பார்த்தபடி நின்றிருந்தாள் துளசி... திருமணமான இந்த எட்டு வருடங்களில் அவளது காதல் இன்னமும் அதிகரித்துக் கொண்டே தான் போனது... அது எள்ளளவும் குறையவில்லை... அவளது பார்வையை உணர்ந்தார் போன்று நிமிர்ந்து மனைவியைப் பார்த்த பவித்ரன் 'என்ன?' என்பது போல் அவளைப் பார்க்க... அவள் நாணத்துடன் 'ஒன்றுமில்லை' என்பது போல் தனது விழிகளைத் திருப்பிக் கொண்டாள்...

வெட்கத்தில் சிவந்த மனைவியின் முகத்தை ரசித்தபடி பவித்ரன் அப்படியே நின்றிருந்தான்... திருமணமாகி இத்தனை வருடங்கள் கடந்தும் மனைவியின் வெட்கம், காதல் எல்லாமே அவனுக்குப் புதிதாய், பரவசமாய் இருந்தது...

நிஷிலா இதைப் பார்த்தும் பார்க்காததுமாய் ஆர்யா, சூர்யாவை அழைத்துக் கொண்டு மகளைத் தேடி சென்றாள்... அவள் இவர்கள் இருவரின் அந்நியோன்யத்தைக் கண்டு பொறாமை கொள்ளவில்லை... வருந்தவில்லை... மாறாகச் சந்தோசமே கொண்டாள்...

அவள் தனது வாழ்க்கையைப் பற்றிச் சிறிதும் யோசிக்கவில்லை... கணவனுடன் அப்படி இருக்க வேண்டும், இப்படி இருக்க வேண்டும் என்று நினைத்து அவள் ஒருபோதும் ஏங்கியது இல்லை... திருமண வாழ்க்கையை வெறுத்தவளின் மனம் மீண்டும் அதை நாடவில்லை என்றே சொல்ல வேண்டும்... அவளது மனம் முழுவதும் அவளது படிப்பில் தான் இருந்தது... மகள்,

PDF தமிழ் .com

அவளது துறை சம்பந்தப்பட்ட படிப்பு என்று அவள் தனக்குள் ஒரு வட்டம் போட்டு வாழ பழகி கொண்டாள்...

அதனால் தான் இந்த இளம் வயதில் சிறந்த மனோதத்துவ மருத்துவர் என்று நற்பெயர் வாங்கிக் கொண்டிருக்கிறாள்...

"அம்மா..." என்று கூவியபடி வந்த ஆதிரையை அணைத்து முத்தமிட்டாள் நிஷிலா...

"நல்லா ஆக்ட் பண்ணின அம்மு..." என்று அவள் மகளை மனதார பாராட்டினாள்... அதில் சின்னவள் முகம் மலர்ந்து போனாள்...

"ஆர்யா, சூர்யா... நான் நல்லா ஆக்ட் பண்ணினேன்னா...?"

"சூப்பர் அம்மு..." என்று கூறி அவளை அணைத்து கொண்டனர் அவர்கள் இருவரும்...

தந்தையிடம் அப்படிக் கூறிவிட்டு இங்கே ஆதிரையிடம் இப்படிக் கூறும் அவர்களைக் கண்டு நிஷிலாவுக்குச் சிரிப்பு வந்தது... அவர்கள் இருவரும் அவளுக்குப் பவித்ரன் எப்படியோ? அது மாதிரி தான் ஆதிரைக்கு... ஆதிரைக்கு ஏதாவது ஒன்று என்றால் இருவரும் துடித்துப் போய்விடுவார்கள்...

நிஷிலா குழந்தைகள் மூவரையும் அழைத்துக் கொண்டு தனது காரில் செல்ல... பவித்ரன், துளசி மட்டும் தனித்துத் தங்களது காரில் சென்று கொண்டிருந்தனர்... வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மனைவியை அருகில் இழுத்து தன் மீது சாய்த்துக் கொண்டான் பவித்ரன்...

துளசி அவனை வியப்பாய் பார்த்தாள்... திருமணமாகி ஒரு வருடமாகியும் அவன் அவளிடம் ஒரு நண்பனை போன்று தான் நடந்து கொண்டான்... ஏனெனில் அவனது மனதில் நிஷிலாவின் வாழ்க்கை கரையானாய் அரித்துக் கொண்டிருந்தது... அதை உணர்ந்து அவளும் காதலாய் அமைதி காத்தாள்... கொஞ்சம் கொஞ்சமாக நிஷிலாவை அவளது கூட்டில் இருந்து வெளிக்கொண்டு வந்தாள்

துளசி... அதன் விளைவு பவித்ரனிடம் சிறு மாற்றம் வந்தது...

அந்த மாற்றம் எப்போது எந்தப் புள்ளியில் காதலாய் மாறியது என்று அவளுக்குத் தெரியாது... ஒருநாள் அவன் காதல் கணவனாக அவளை நெருங்கிய போது அவள் அவனைக் காதலாய் அரவணைத்து கொண்டாள்... அன்று தொடங்கிய வாழ்க்கை இதோ இப்போது வரை ஒரே சீராகச் சந்தோசமாகச் செல்கிறது... ஆனாலும் பவித்ரன் வெளிப்படையாகத் தனது மனதினை காட்டி கொள்ள மாட்டான்... இன்று அவன் இப்படி நடந்து கொண்டது அவளுக்குப் பெரும் வியப்பாய்...

"பசங்க தான் இல்லையே... பின்னே ஏன் தள்ளி உட்கார்ந்திருக்க...?" என்றவனின் குரலில் வழிந்த தாபத்தில் அவள் அவனுடன் பசை போட்டது போல் ஒட்டி கொண்டாள்... அதைக் கண்டு அவனது இதழ்களில் மந்தகாச புன்னகை தவழ்ந்தது...

இரவு உணவு முடித்துக் கொண்டு வீடு வந்து சேரும் வரை தொடர்ந்த அவர்களது இணக்க நிலை அவர்களது காதலை இன்னமும் இறுக்கியது அன்றைய உறவில்... என்றுமில்லாத வண்ணமாக அவன் தன் மனைவியைக் கொண்டாடி கொண்டாடி கூத்தாடினான்... ஏனென்று தெரியவில்லை அவன் மிகவும் சந்தோசமாக இருந்தான்...

நிஷிலா இரவில் தூங்காது மருத்துவம் சம்பந்தமாகப் பெரிய புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருக்க... ஆதிரை நேரே அவளிடம் வந்தவள்,

"ம்மா, டைம் ஆச்சு... தூங்குங்க..." என்றவள் அன்னையின் கையில் இருந்த புத்தகத்தை மூடி வைத்து விட்டு அவளைப் படுக்க வைத்து போர்வையைப் போர்த்திவிட்டாள்... தானும் அன்னையின் அருகில் படுத்து அவளை அணைத்து கொண்டாள்...

மகளின் இந்த அன்பான செய்கையில் அவளது விழிகள் கசிந்தது... ஏனெனில் அவள் இப்படி எல்லாம் பொறுப்பாக

PDF தமிழ் .com

இருந்தது கிடையாது... ஆதிரையைப் பார்க்க வரும் சிம்மவிஷ்ணுவின் பெற்றோர் அவள் குணத்தில் அப்படியே தனது தகப்பனை கொண்டிருக்கிறாள் என்று கூறுவார்கள்... ஆனால் அவன் ஒருநாளும் அவளிடம் இத்தனை அக்கறையாய் நடந்து கொண்டது கிடையாது... ஒருவேளை அவர்களது உறவு நல்லமுறையில் அமைந்திருந்தால் அவன் இப்படி அன்பாக இருந்திருப்பானோ என்னமோ...? தினமும் நினைப்பதை இப்போதும் அவள் நினைத்து கொண்டாள்...

'உன்னுடனான சந்திப்பு ஏன் நல்லவிதமாக அமையவில்லை...?' என்று நினைத்து அவள் மனதிற்குள் மறுகினாள்...

இப்போது வயதும் பக்குவமும் வந்து சிம்மவிஷ்ணுவை பற்றிச் சிறிது நல்லவிதமாக நினைக்கத் தோன்றியது... ஆனாலும் அவன் செய்த கெடுதலை மறக்க இயலாது தவித்தது அவளது பெண்மனம்...

"ம்மா..."

"என்னடா அம்மு...?" மகளிடம் கவனத்தைச் செலுத்தினாள்...

"அப்பா இப்போ என்ன பண்ணிக்கிட்டு இருப்பாங்க...?"

அவள் மகளிடம் தந்தையை அடையாளப்படுத்தியே வளர்த்திருந்தாள்... ஏனெனில் மகள் மீது அவன் வைத்த பாசம் அப்படி... அவளுக்குத் தான் அவன் கெட்டவன்... ஆனால் குழந்தையைப் பொறுத்தவரை அவன் நல்லவன் தான்... அதனால் தகப்பனை பற்றி மகளிடம் அவள் மறைக்க விரும்பவில்லை... ஆனால் அவன் சிறையில் இருப்பதை மட்டும் மறைத்துவிட்டாள்... தந்தை வெளிநாட்டில் இருப்பதாய் மகளிடம் கூறியிருந்தாள்...

ஆதிரை மற்ற குழந்தைகள் போல் தந்தையைப் பார்க்க வேண்டும் என்று எல்லாம் ஒரு போதும் அடம்பிடித்தது இல்லை... அவர் வேலையை முடித்துக் கொண்டு வரட்டும்

என்று பெருந்தன்மையுடன் கூறிவிட்டாள் அந்தச் சின்னக் குழந்தை... அவள் தந்தையைத் தேடும்படி பவித்ரனும் இதுவரை வைத்தது இல்லை... அவளைத் தன் மகளாய் அவன் மடி தாங்கினான்... அதனால் தகப்பன் இல்லாத குறை அவளுக்குப் பெரிதாகத் தெரியவில்லை...

"தூங்கிட்டு இருப்பாங்க அம்மு..."

"ஆமாமில்ல..." என்றவள் கதை கேட்டபடி உறங்க ஆரம்பித்தாள்...

அதே நேரம் சிறையில் சிம்மவிஷ்ணு தூங்கவில்லை... மாறாகப் போதையில் திளைத்திருந்தான்... தலைவலிக்காக அவ்வப்போது உட்கொண்ட போதை மருந்தை அவனால் விலக்க முடியவில்லை... தினமும் அதற்குப் பழக்கப்பட்டு விட்டான்... கட்டுப்பாடுகள் அதிகம் இருந்த சிறையில் தீய பழக்கங்களும், கற்பனைக்கு எட்டாத பல விசயங்களும் நிறையவே இருந்தது...

இன்னும் இரண்டு நாளில் அவனுக்கு விடுதலை... ஆனால் அதைப் பற்றிய நினைப்பு சிறிதும் இல்லாது அவன் இருந்தான்... எதிரிகளை அழிக்க வேண்டும் என்கிற உத்வேகம் கூட இப்போது அவனிடம் இல்லை...

****************************

காலையில் வழக்கம் போல் மருத்துவமனைக்குக் கிளம்பினாள் நிஷிலா... நெற்றியில் குங்குமம் எடுத்து வைக்கும் போது அவளது விழிகளில் கண்ணீர் துளிர்த்தது... அர்த்தமே இல்லாத வாழ்க்கைக்கு அர்த்தம் கற்பித்துக் கொள்வது போலிருந்தது அவளது செய்கை... இத்தனை வருடங்களாக அவளது மனதினை கொல்லும் குற்றவுணர்வு இன்றும் அவளைக் கொன்றது...

தண்டனை பெற்றது என்னமோ அவன் தான்... ஆனால் தினம் தினம் மனதால் தண்டனை அனுபவிப்பது அவள் தானே... இதோ இந்தக் கணம் கூட அவளால் அவனைக் கணவனாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை... அதே சமயம்

PDF தமிழ் .com

மனிதனாய் அவன் அவளுக்கு உதவியது அவளது நினைவில் நின்று கொல்கிறது... ஒரு வேகத்தில் அவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டாள் தான்... ஆனால் தினமும் செத்துப் பிழைப்பது அவள் தான்...

இப்போதும் அவள் செய்தது சரியா? தவறா? என்று அவளுக்குத் தெரியவில்லை... அவன் செய்த தவறுக்குத் தண்டனை பெற்று தந்ததை அவளது மனம் சரியென்றே வாதிட்டது... ஆனால் அவனுக்குத் தண்டனை பெற்று தந்ததை அவளது மனசாட்சி ஏற்றுக் கொள்ள முடியாது தவித்தது... அவன் வேறு, அவனது தவறு வேறா...? அது அவளுக்குத் தெரியவில்லை...

மனதினை கட்டுப்படுத்திக் கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தாள்...

துளசி குழந்தைகளை அழைத்துக் கொண்டு பள்ளிக்கு சென்றிருந்தாள்... பவித்ரன் மட்டும் வீட்டில் இருந்தான்...

"அத்தான் சாப்பிட்டீங்களா...?"

"ஆச்சும்மா..."

அவனின் பதிலில் திருப்தியுற்றவளாய் இரண்டு இட்லியை எடுத்து வைத்துக் கொண்டு உண்ண ஆரம்பித்தாள்...

"நிஷிம்மா..."

"என்ன அத்தான்...?"

"நாளைக்கு விஷ்ணு ரிலீஸாகிறான்..."

பவித்ரன் சொன்னதும் அவளது கை அப்படியே அந்தரத்தில் நின்றது... பின்பு அமைதியாக உண்டாள்... அவளைப் பாசத்தோடு பார்த்தவன்,

"உன் மீதும் தவறில்லை... அவன் மீதும் தவறில்லை... வேறு எங்கோ தவறு நேர்ந்திருக்கிறது..." என்று கூறியவனை நிமிர்ந்து பார்த்தவள்,

'அத்தையிடம் தான் தவறிருக்கிறது அத்தான்... அதைச் சொன்னால் நீங்க தாங்கி கொள்வீங்களா...?' என்று நினைத்தபடி மனதில் இருந்ததை அவனிடம் சொல்லாது கையைக் கழுவினாள் அவள்...

"அத்தான் வருகிறேன்..."

அதற்கு மேல் இருந்தால் ஏதாவது உளறிவிடுவோமோ என்று பயந்து வேகமாய் வீட்டை விட்டு வந்தவள் அவரசமாய் வாசலில் இருந்து இறங்கும் போது வாசற்கதவின் நிலையில் காலை இடித்துக் கொண்டாள்... வலதுகாலின் பெருவிரல் நகம் பெயர்ந்து அதிலிருந்து இரத்தம் கசிந்தது...

"பார்த்துப் போகக் கூடாதா நிஷிம்மா...?" என்று கடிந்தபடி பவித்ரன் குனிந்து அவளது காலை பற்றினான்...

"ஒண்ணும் இல்லை அத்தான்... சின்னக் காயம் தான்... நான் பார்த்துக்கிறேன்..." என்றவள் தனது காலை விலக்கி கொண்டாள்...

"ஷ், பேச கூடாது..." என்று அவளைக் கைத்தாங்கலாக அழைத்து வந்தவன் அவளைச் சோபாவில் அமர வைத்துவிட்டு உள்ளே சென்று முதலுதவி பெட்டியை எடுத்து வந்தான்...

அவளது காலுக்கு மருந்து போட்ட பின்னரே அவன் நிம்மதியானான்...

"சரி வா... நான் உன்னை ட்ராப் பண்றேன்..." என்று அவன் அவளை அழைக்க...

"அத்தான் காலில் தானே காயம்... கையில் இல்லையே... அதுவும் சின்னக் காயம்... நானே போய்க்கிறேன்..." என்றவள் தனது காரை எடுத்துக் கொண்டு கிளம்பி சென்றாள்...

அவளைப் பார்த்தபடி நின்றிருந்த பவித்ரனின் மனதில் அவளை நினைத்து வேதனை மட்டுமே எஞ்சியிருந்தது...

PDF தமிழ் .com

*******************

"உனக்காகத் தான்ய்யா இத்தனை வருசமா இவ்வளவு சொத்துக்களையும் கட்டி காத்துக்கிட்டு வந்தோம்... நீ திரும்ப வருவ... ராஜா மாதிரி எல்லாத்தையும் ஆளுவேன்னு எத்தனை நம்பிக்கையா இருந்தோம்... ஆனா நீ இப்படிக் கெட்டு சீரழிஞ்சு கிடப்பதை பார்க்கிறதுக்காகவா நாங்க ரெண்டு பேரும் உயிரோட இருக்கோம்..."

போதையில் கண்கள் சொருக படுத்திருந்த மகனை மடியில் படுக்க வைத்துக் கொண்டு வேதனையில் அரற்றினார் மீனாட்சி... அவனது கைகளில் இருந்த ஊசி குத்திய தழும்புகளைப் பார்த்த சுந்தரபாண்டியன் அதை வருடி கொடுத்தபடி கண்கள் கலங்க அமர்ந்திருந்தார்...

முகத்தில் புதர் போன்று மண்டியிருந்த தாடியினுள் சிம்மவிஷ்ணுவின் முகம் பொழிவிழந்து காணப்பட்டது... அவன் நேற்று தான் சிறையில் இருந்து வந்திருந்தான்... வந்த ஒரு நாளில் இந்த ஆர்ப்பாட்டம்... அவரும் அவனது வேதனை தாங்காது அவனது தேவையை நிறைவேற்றிக் கொடுத்துவிட்டார்... தினம் தினம் இந்த நரக வேதனை என்றால் இதை எப்படித் தாங்கி கொள்ள முடியும்...? அதனால் அவர் உறுதியாக ஒரு முடிவு எடுத்தார்...

"மீனா, நீ வீணே கலங்காதே... நம்ம மகனை மீண்டும் பழைய மாதிரி கொண்டு வர வேண்டியது என் பொறுப்பு... என் மகன் சிங்கம் மாதிரி மீண்டும் மீண்டு வர தான் போகிறான் பார்..."

"இதிலிருந்து மீண்டு வருவானாங்க...?" நம்பிக்கையின்மையுடன் கேட்டார் மீனாட்சி...

"நிச்சயம் வருவான்..." என்று உறுதியாகக் கூறினார் அவர்...

"மாறுவேனாப்பா... நான் பழைய மாதிரி மாறுவேனாப்பா...?" திடுமென ஒலித்த சிம்மவிஷ்ணுவின்

குரலில் அவர் மகனை திரும்பி பார்க்க... அவனது விழிகள் போதையில் சொருகியிருந்த போதும் அவன் அவரைப் பார்த்து தான் கேட்டான்...

"மாறுவ விஷ்ணு... எனக்கு நம்பிக்கை இருக்கு..." அவர் கண்ணீருடன் மகனை அணைத்துக் கொள்ள...

"நான் இதிலிருந்து மீண்டு வரணும்... எனக்கு நிறைய வேலையிருக்கு..." அந்தப் போதையிலும் அவன் தனது எதிரிகளை நினைத்து பல்லை கடித்தான்... அவனது முகம் ஆத்திரத்தில் இறுகி போனது...

மகனின் அந்த உறுதி கண்டு தந்தைக்குச் சந்தோசமாக இருந்தது... அவனை முழுமையாகக் குணமாக்கி விட முடியும் என்று...

மறுநாள் காலையில் சிம்மவிஷ்ணு எழுந்த போது அவனது தலை மிகவும் வலித்தது... வழக்கமாய் வரும் வலி இல்லை... போதை அதிகரித்ததால் வந்த தலைவலி...

"எழுந்துட்டியா கண்ணா..." என்றபடி அங்குக் காபி கோப்பையுடன் வந்தார் மீனாட்சி...

அன்னையைப் பார்க்க முடியாது தலைகுனிந்தான் மகன்... அவனது முகத்தை நிமிர்த்திய மீனாட்சி,

"குடி கண்ணா..." என்று கோப்பையை அவனது கைகளில் வைத்தார்...

அதை வாங்கியவனின் கைகள் நடுங்கியது... அவனது நடுங்கும் கைகளை ஆதரவாக பற்றிக் கொண்டது சுந்தரபாண்டியனின் கைகள்... அவரை ஏறிட்டு பார்த்தவனின் விழிகள் கலங்கியது...

"ப்பா..." என்று நா தழுதழுத்தவனை ஆதரவாய் பார்த்தவர்,

"காபி குடி விஷ்ணு..." என்க...

அவன் அமைதியாக அதைக் குடித்தான்... அவன் குடித்து முடித்ததும் கோப்பையை எடுத்துக் கொண்டு மீனாட்சி

PDF தமிழ் .com

சென்றுவிட... சுந்தரபாண்டியன் மகனை பார்த்து,

"நீ எப்படிப்பா இந்தக் கர்மத்தை பழகின...?" ஆற்றாமையுடன் கேட்டவரை கண்டு அவன்,

"ப்பா..." என்று அணைத்துக் கொண்டான்...

"நான் கொஞ்சம் கொஞ்சமா செத்து கொண்டிருக்கிறேன்..." என்று கூறியவனை அவர் அதிர்வுடன் பார்த்தார்...

"ஆமாம்ப்பா..." என்றவன் தனது உடல்நிலையைப் பற்றிக் கூறி,

"வேதனை தாங்காது ஆரம்பித்த பழக்கம் இப்போது அதை விட என்னால் முடியலை..." என்றவனின் உடல் நடுங்கியது... தன்னை ஆட்கொள்ளும் ஆட்கொல்லி மருந்திற்காக அவனது உடல் ஏங்கியது...

"விஷ்ணு..." என்று கதறிக் கொண்டே அவர் மகனை அணைத்துக் கொண்டார்...

ஒருவனுக்கு எத்தனை முறை தான் துன்பம் வரும்... மகனின் நிலையை எண்ணி அவரது மனம் கலங்கி போனது...

"அப்பா என்னை எப்படியாவது காப்பாத்துங்க... நான் வாழணும்... வாழ்ந்தாகணும்ப்பா..." என்று முதலில் கெஞ்சும் குரலில் மன்றாடியவன் இறுதியில் உறுதியாய் முடித்தான்...

"இதை விட எனக்கு வேறு வேலை என்ன இருக்கிறது விஷ்ணு...? உன்னைக் காப்பாத்துறது மட்டும் தான் என்னுடைய ஒரே வேலை..." என்று கூறியவரின் விழிகளில் கண்ணீர் வழிந்தது...

எல்லாம் இருந்தும் இப்படி மனக்கஷ்டத்துடன் வாழ்வது என்பது மிகப் பெரிய கொடுமை... அப்படியொரு கொடுமையை அனுபவித்துக் கொண்டிருந்தார் சுந்தரபாண்டியன்... மகனது உடல்நிலையைக் கேள்விப்பட்டு மீனாட்சி அழுது தீர்த்தார்... விதிப்பயனை

தாங்கி தான் ஆகவேண்டும் என்று கூறி சுந்தரபாண்டியன் மனைவியைத் தேற்றினார்...

அந்தக் கணமே அவர் தங்களது குடும்ப மருத்துவரை வரவழைத்து அவனுக்குச் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தார்... அவர் அவனைப் பரிசோதித்து விட்டு மூளைக்கட்டிக்கு என்று இருக்கும் சிறப்பு மருத்துவரை பார்ப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தார்... அத்துடன் அவனைப் போதை பழக்கத்திலிருந்து முற்றிலும் விடுவிக்க எண்ணி அவர் கேரளாவில் இருந்த அவரது மருத்துவ நண்பரது மருத்துவமனையைப் பரிந்துரை செய்தார்...

இது அத்தனைக்கும் சிம்மவிஷ்ணு ஒத்துழைப்பு கொடுத்ததால் தான் அனைத்தும் சாத்தியமாயிற்று... அவனது மூளைக்கட்டி கடைசிக் கட்டத்தை நெருங்கிவிட்டது... அறுவை சிகிச்சை அவசியம் என்று அந்த மருத்துவர் கூறிய போது அவனது பெற்றோர் வேதனை கொண்டு மிகவும் தளர்ந்து போயினர்... ஆனால் அவன் அந்தத் துக்கத்தை வலியோடு விழுங்கி கொண்டு அசாதாரணமாக நிமிர்ந்து நின்றான்...

அவன் வாழ வேண்டும்... எதிரிகளை அழிக்க வேண்டும்... அது மட்டுமே அவனது நோக்கமாக இருந்தது... அந்தக் கணம் மனைவி, மகள் யாரும் அவனது நினைவில் இல்லை... அவனது பெற்றோரும் அவர்களைப் பற்றிக் கூறி அவனது வேதனையைக் கிளறிவிட விரும்பவில்லை...

மகள் நிஷிலாவுடன் வளர்வது அவனுக்கு ஏற்கெனவே தெரியும்... 'ஏன்?' என்று கேட்டுச் சத்தம் போட்டவனிடம் தாயும் மகளையும் பிரிப்பது பாவம் என்று அவனது பெற்றோர் கூறிவிட்டனர்... நிஷிலா பவித்ரனை மணக்கவில்லை... தனியாகத் தான் இருக்கிறாள் என்று தெரிந்தும் அவளது வாழ்க்கையில் குறுக்கிட அவனுக்கு விருப்பமில்லை...

முதலில் போதை மருந்து பழக்கத்தில் இருந்து வெளிவர வேண்டி சிம்மவிஷ்ணு கேரளாவில் இருந்த மருத்துவமனையில் சேர்ந்தான்... இதிலிருந்து அவன்

முழுமையாக மீண்டால் தான் மூளைக்கட்டி அறுவைசிகிச்சை மேற்கொள்ள முடியும்…

வேறொருவராக இருந்திருந்தால் உடல் உபாதை தாங்காது மீண்டும் போதை மருந்தை தேடி ஓடியிருப்பர்… ஆனால் சிம்மவிஷ்ணு உறுதியாய் நின்று சிகிச்சை மேற்கொண்டான்… அவனது மனதைரியம் அவனை வாழ வைத்தது என்றே கூறலாம்…

***************

நிஷிலா எப்போதுமே மருத்துவமனையில் வெகு காலமாகச் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு மனரீதியாகத் திடத்தினை அளிப்பதற்காக அவர்களுடன் பேசி அவர்களை உற்சாகப்படுத்தி அவர்களைத் தைரியத்துடன் சிகிச்சையை மேற்கொள்ளவதற்குத் துணை செய்வாள்… இதை அவள் ஒரு சேவையாகச் செய்து வந்தாள்… நகரத்தில் இருந்த மருத்தவமனைகளின் நிர்வாகம் அதற்கான ஏற்பாட்டை அவளுக்குச் செய்து கொடுத்திருந்தது… அப்படித் தான் அவள் சிம்மவிஷ்ணு இருந்த மருத்துவமனைக்கு வந்திருந்தாள்… அவனது பெற்றோர் மகனது கவலையில் அவளிடம் அவனைப் பற்றி எதுவும் கூறவில்லை… அவனைப் பழையபடி மாற்றுவதற்காக அவர்கள் காலநேரம் பாராது பாடுபட்டனர்…

ஏதேச்சையாக எல்லா நோயாளிகளையும் பார்ப்பது போல் அவள் சிம்மவிஷ்ணு இருந்த அறைக்குள் நுழைந்தவள் எதிர்பாராது அங்குக் கணவனைக் கண்டதும் அதிர்ச்சி அடைந்து அப்படியே அசையாது நின்றுவிட்டாள்… அவனும் தான்…

வெகுவருடங்களுக்குப் பிறகு இருவரும் நேருக்கு நேர் சந்திக்கின்றனர்… அவனது தோற்றம் கண்டு அதிர்ந்து போனவளின் விழிகள் கலங்கி போனது… அவளது கலங்கிய விழிகள் கண்டு அவன் சினம் கொண்டான்…

"போடி... முதல்ல இங்கே இருந்து போடி... என் கண் முன்னால் நிற்காதே... போ..." என்று ஆவேசமாய்க் கத்தியவன் தன் கையில் ஏறிக் கொண்டிருந்த ட்ரிப்சை கழற்றி எடுத்துவிட்டுக் குளுக்கோஸ் பாட்டிலை பிடுங்கி தரையில் ஓங்கி போட்டு உடைத்தான்...

அதில் அதிர்ந்து போனவளாய் அவள் வேகமாய் அவன் இருந்த அறையை விட்டு வெளியில் வந்துவிட்டாள்... உடன் வந்த செவிலிப்பெண்ணிடம்,

"அவருக்கு என்ன பிரச்சினை...? ஏன் இங்கே அட்மிட் ஆகியிருக்கிறார்...?" என்று கேள்வி கேட்க...

"ப்ரையின் ட்யூமர்... லாஸ்ட் ஸ்டேஜ்..."

அதைக் கேட்டவள் அதிர்ச்சியில் அப்படியே நின்றுவிட்டாள்...

"இதுல போதை மருந்து பழக்கம் வேற... அவரை அதிலிருந்து மீட்டெடுத்தால் தான் ட்ரீட்மெண்ட் கொடுக்க முடியும்... அதுக்குத் தான் இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்காங்க... ஆனா அதிலிருந்து அவரை மீட்டெடுக்கிறது அவ்வளவு சுலபம் இல்லை... ரொம்பவே அடிக்ட் ஆகியிருக்கிறார்..."

செவிலிப்பெண் கூற கூற அவளது மனதில் சொல்லொண்ணா பாரம் ஏறியது...!!!

"அவன் உயிர் கொள்வது பகை கொள்ள,
அவள் உயிர் கொள்வது தன்னுயிர் கொள்ள,
அவன் அவளுக்காக உயிர் கொள்வதும்,
அவள் அவனுக்காக உயிர் கொள்வதும்,
எக்கணமோ...???
வாழ்வில் சுயநலம் வேண்டும்,
தன்னலம் பேணி காதல் வளர்ப்பது
எப்போதோ...???"

கொள்ளும்...!!!

தமிழ் நாவல்

சிம்மவிஷ்ணு கத்தியதில் பயந்து போய் அறையை விட்டு வெளியில் ஓடிவந்த நிஷிலா இப்போது செவலிப்பெண் கூறியதை கேட்டு அதிர்ச்சி அடைந்தாள்...

"நீங்க சொல்றது உண்மையா சிஸ்டர்...?" செவலிப்பெண்ணின் தோள்களைப் பற்றி இவள் திகைப்புடன் உலுக்கினாள்...

"நான் எதுக்கு டாக்டர் பொய் சொல்ல போறேன்... நீங்க வேணா பேஷண்ட்டோட ஃபைலை எடுத்து பாருங்க..." என்று அவள் மலையாளத்தில் கூற...

நிஷிலா நெஞ்சில் உதிரம் வடிய நிற்க முடியாது அப்படியே சுவற்றில் சாய்ந்து நின்றாள்... மீண்டும் அவளது விழிகள் கலங்க ஆரம்பித்தது... அவன் செய்த தவறுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்து அதை அவனும் அனுபவித்துவிட்டான்... இனியும் அவனை வதைப்பது சரியில்லை என்றே அவளது பேதை மனம் நினைத்தது...

'என் குழந்தையைக் காப்பாற்று' என்று தான் அவனிடம் யாசகம் கேட்டு நின்ற போது ஒரு நொடி கூட யோசிக்காது தனது மகவை காப்பாற்றியவன் அவன்... பழிவாங்க தான் அவளுக்கு மகவை கொடுத்தாலும், அது அவன் மகவு தான் என்றாலும் அந்த நொடி அவளது வார்த்தைக்கு அவன் கட்டுப்படத் தான் செய்தான்... அந்த நன்றி இப்போது அவளது நெஞ்சில் நின்று அவளை வாள் கொண்டு அறுத்தது...

அவனுக்காக எதையாவது செய்ய வேண்டும்... அவனைப் பழையபடி மாற்றியமைக்க வேண்டும் என்று அவளது உள்ளம் பரபரத்தது... இது அத்தனையும் சக மனுசியாய், மருத்துவராய் மட்டுமே அவளது மனம் சிந்தித்தது... மனைவியாக அல்ல... அவனைக் கணவனாக நினைத்தால் தானே மனைவி என்கிற சொல் உயிர் பெறும்... அதற்கு அடிப்படையான காதல் பூ இன்னமும் அவர்களிடையே மலரவில்லையே...

அவள் மனதினை திடப்படுத்திக் கொண்டு சிம்மவிஷ்ணு இருந்த அறையை நோக்கி சென்றாள்... அவள் பின்னே அந்தச் செவிலிப்பெண் தயங்கி தயங்கி வந்தாள்...

ட்ரிப்ஸ் கழற்றியதால் தனது கையிலிருந்து கசிந்த இரத்தத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் சிம்மவிஷ்ணு... அது அவனுக்கு நிஷிலாவின் கலங்கிய விழிகளை ஞாபகப்படுத்தியது... அவனை வேதனை கொள்ளச் செய்ய அவளது ஒற்றைக் கண்ணீர் துளி போதும்... அது அவனது மனதினை இளக்கி, அவனையும் இளக்குகிறது... வேண்டாம், இந்த உணர்வு அவனுக்கு வேண்டாம்... அவனைச் செயலிழக்க செய்யும் இத்தகைய உணர்வுகள் அவனுக்குத் தேவையில்லை... ஆனால் அவனால் அது முடியவில்லை...

கலங்கிய விழிகளுடன் மனக்கண்ணில் வலம் வந்து இம்சித்த மனைவியவளை மறக்க முடியாது அவன் தவித்தான்... அவன் அவளை மறக்க வேண்டும்... அதனால் எழும் வேதனையை அவன் மறக்க வேண்டும்... மொத்தத்தில் அவன் எல்லாவற்றையும் மறக்க வேண்டும்... அதற்கு அவனுக்குத் தேவை போதை... மனம் போதையைத் தேடியதும் அவனது உடலில் பரபரப்புத் தொற்றிக் கொண்டது... மூளை செயல்பட மறுத்தது...

வேண்டியது கிடைக்காத ஆத்திரத்தில் அவன் கீழே கிடந்த கண்ணாடி துண்டில் இருந்து ஒன்றை எடுத்து ஆவேசமாய்த் தனது கையைக் கீறிக் கொண்டான்... இரத்தம் பீறிட்டு வழிந்தது...

அறையினுள் நுழைந்த நிஷிலா, "என்ன பண்றீங்க...?" என்று அலறலோடு அவன் அருகே ஓடிவந்தாள்...

தனது புடவை முந்தானையால் அவனது கையைச் சுற்றி கட்டியவள், "சிஸ்டர், சீக்கிரம் ஃபர்ஸ்ட் எய்ட் ஃபாக்ஸ் எடுத்துட்டு வாங்க..." என்று கத்தினாள்...

"விடுடி என்னை..." என்று ஆக்ரோசமாய் அவளைப் பிடித்து விலக்கியச் சிம்மவிஷ்ணு அவளது புடவை முந்தானையை

எடுத்து அவளது முகத்தில் விட்டெறிந்தான்...

அன்றொரு நாள் அவன் இது போல் செய்தது அவளது நினைவில் வந்தது... அவளையும் அறியாது அவளது விழிகள் அவனது இடது புருவத்தை நோக்கியது... அதிலிருந்த தழும்பு அன்றைய நாளின் கதையை அவளுக்குச் சொல்லியது... அந்த ஞாபகத்தில் அவள் திகைத்து நின்றது ஒரு நொடி தான்... அவனது நிலைமை புத்தியில் உறைக்க மருத்துவராய் அவள் விரைந்து செயல்படத் துவங்கினாள்...

"என்னைத் தொடாதே..." என்று அவளது கையை அவன் தட்டி விட்ட போது அவனது கையில் இருந்த கண்ணாடி துண்டு அவளது கையை லேசாகக் கீறிவிட்டது...

அதைக் கண்டு அவனுள் குற்றவுணர்வு எழ அதைத் தாங்கி கொள்ள முடியாது கோபத்துடன் அவளது கழுத்தை பிடித்து நெரித்தவன், "என்னை விட்டு போன்னு சொல்றேன்ல... போ, என்னை விட்டு போ..." என்று ஆவேசமாகக் கத்தினான்...

போதை வேண்டும் என்கிற அவனது வெறி அவனின் ஆவேசத்தைத் தூண்டிவிட்டது...

"டாக்டர் இப்போ ஃப்ர்ஸ்ட் எய்ட் பண்ண முடியாது... அவருக்கு இந்த இன்ஜெக்சனை போடுங்க..." என்று செவிலிப்பெண் அவளிடம் ஊசியைக் கொடுத்தாள்...

அதைக் கேட்டவன், "முதலில் உன் காயத்திற்கு மருந்தை போடுடி..." என்று கத்தினான்... அந்த நிலையிலும் அவனது அக்கறையைக் கண்டு அவள் வியப்பாய் அவனை நோக்கினாள்...

அதற்குள் அவனது சத்தம் கேட்டு இரு ஆண் ஊழியர்கள் அங்கு ஓடி வந்தனர்... ஆக்ரோசமாய் இருந்த சிம்மவிஷ்ணுவை பிடித்து அடக்கினர்... திமிறியவனின் புஜத்தில் ஊசி மூலம் மயக்க மருந்தை செலுத்தினாள்

நிஷிலா... மெல்ல அவனது விழிகள் சொருகவும் அவள் எல்லோரையும் வெளியில் அனுப்பினாள்...

"இதை க்ளீன் பண்ண ஆளை வர சொல்லவா டாக்டர்...?" என்று கேட்ட செவிலிப்பெண்ணிடம்,

"இப்போ வேண்டாம்..." என்று அவளையும் அனுப்பி வைத்து விட்டு அவன் அருகில் அமர்ந்த நிஷிலா அவனின் கையைப் பிடித்துக் கொண்டாள்...

அவனது தோற்றம் கண்டு அவளது விழிகள் மீண்டும் கலங்கியது... அவன் அவளுக்கு வில்லன் தான்... அவனை அவளுக்குப் பிடிக்காது தான்... ஆனால் அவன் இப்படியாக வேண்டும் என்று அவள் ஒருபோதும் நினைத்தது இல்லையே...

"என் கண் முன்னாடி அழாதேடி... உன் கண்ணீர் என்னைப் பலவீனமாக்குகிறது..." என்று அவன் முனங்கி கொண்டே கண்மூடினான்...

அவனது வார்த்தைகளில் அவனது கையைப் பிடித்திருந்த அவளது கை தனது பிடியை இறுக்கியது...

"விஷ்ணு..." என்று கத்தியபடி அங்கே வந்தார் மீனாட்சி... அறை இருந்த கோலம் கண்டு அவர் பதறிப் போனார்...

"அத்தை..." என்றபடி திரும்பி பார்த்த நிஷிலாவை கண்டு ஒரு நொடி திகைத்த மீனாட்சி மறுநொடி அவளை அணைத்துக் கொண்டு கதறினார்...

"எப்படியிருந்த என் மகனை இப்படிப் பார்க்க என்னால் முடியலைம்மா... யாருக்கு என்ன பாவம் செய்தோமோ...?" என்று பேசி கொண்டே போனவர் அவளது முகத்தைப் பார்த்து,

"யாருக்கோ இல்லை நிஷா, உனக்குச் செய்த பாவம் தான் இவனைத் துரத்துது..." என்று கூறியபடி அழுதார்...

"அப்படியெல்லாம் இல்லை அத்தை... சரியாகிருவாங்க..." என்று அவள் அவரைத் தேற்றினாள்...

தமிழ் நாவல்

"என்னாச்சும்மா...?" என்று விசாரித்தவரிடம் அவள் நடந்ததைக் கூற...

"இப்படித்தான்ம்மா திடீர் திடீர்ன்னு நடந்துக்கிறான்... ரெண்டு நாளைக்கு முன்னாடி அவங்கப்பாவை அடிக்கக் கையை ஓங்கிட்டான்... அவனுக்கு அப்பா மேல மரியாதையை விட அவ்வளவு பாசம்... அப்படிப்பட்டவன் அன்னைக்கு அப்படி வெறி பிடிச்ச மாதிரி நடந்துக்கிட்டான்... எல்லாம் போதை பழக்கம் தான் காரணம்ன்னு மாமா சமாதானப்படுத்தினாங்க... இருந்தாலும் என் மனசு கேட்க மாட்டேங்குதே... விஷ்ணு பழையபடி மாறுவானா நிஷா...?" என்று ஏக்கத்துடன் கேட்டவரை கண்டு,

"நிச்சயம் மாறுவாங்க அத்தை..." என்று அவள் ஆறுதல் அளித்தாள்...

அதற்குள் வெளியில் சென்றிருந்த சுந்தரபாண்டியன் அங்கு வந்து சேர்ந்தார்... அறை கிடந்த கோலம் கண்டு துணுக்குற்றவர் முதலில் அதைச் சுத்தம் செய்ய ஆளை அழைத்து வந்தார்... பணியாள் வெளியேறும் வரை அமைதி காத்தவர் அதன் பின்னரே வாய்த் திறந்தார்... நடந்ததை அறிந்ததும்,

"எங்களை மன்னிச்சிரும்மா... விஷ்ணுவை குணப்படுத்துவதில் மும்முரமா இருந்ததில் உன் கிட்ட இந்த விசயத்தைச் சொல்ல முடியலை..."

"பரவாயில்லை மாமா..." என்று அவள் கூறினாள்... அதில் அவர் நிம்மதி அடைந்தார்...

"டாக்டர்ஸ் என்ன சொல்றாங்க...?"

"போதையை விட்டொழிச்சா தான் ப்ரையின் ட்யூமருக்கு ட்ரீட்மெண்ட் கொடுக்க முடியும்ன்னு சொல்றாங்க... அவனுக்கும் இதிலிருந்து மீளணும்ன்னு ஆசையிருக்கு... ஆனா அது அவ்வளவு சீக்கிரம் நடப்பதாகத் தெரியலை... என் மகன் சாகும் நாட்களை எண்ணி

கொண்டிருக்கிறான்..." என்று உடைந்து போய் அழுத அந்தப் பெரிய மனிதரை கண்டு அவளது விழிகள் கசிந்தது...

"கவலைப்படாதீங்க மாமா... உங்க மகனை பழையபடி கம்பீரமாக மாற்றி உங்க கிட்ட ஒப்படைக்க வேண்டியது என்னுடைய பொறுப்பு..." என்று அவள் அவருக்கு நம்பிக்கை அளித்தாள்...

"அவன்... உனக்கு..." என்று வார்த்தை வராது தடுமாறியவரை கண்டு ஆறுதலாய் புன்னகைத்தவள்,

"அவர் எனக்கு மட்டும் தான் கெட்டவர் மாமா... மத்தவங்களைப் பொறுத்தவரை அவர் நல்லவர் தான்..." முதல் வரியை கூறும் போது அவளது குரல் கமறியது...

மூவரின் விழிகளும் சிம்மவிஷ்ணுவை பார்த்தது... அவனோ ஆழ்ந்த நித்திரையில் இருந்தான்...

"ஆதி எப்படியிருக்கிறாள்...?" பேச்சை மாற்ற எண்ணி சுந்தரபாண்டியன் கேட்டார்...

"நல்லாயிருக்கிறாள்..." என்று கூறியவள் சிம்மவிஷ்ணு அருகில் சென்று அவனைச் சிறிது நேரம் பார்த்திருந்தாள்...

உடல் நன்றாக மெலிந்திருந்தது... முகம் கொள்ளா தாடியுடன் பரதேசி போலிருந்த அவனைக் காண சகிக்கவில்லை... அன்றொரு நாள் பயிற்சி வகுப்பிற்கு அவளைக் காண 'ஸ்டைலிஷ் லுக்'கோடு வந்த அந்தச் சிம்மவிஷ்ணு அவளது நினைவில் நின்று அவளை உயிரோடு கொன்றான்... அந்தக் கணம் அவனைப் பழையபடி மாற்றித் தீர வேண்டும் என்று அவளது மனம் உறுதி பூண்டது...

"வரேன் மாமா, அத்தை..." என்று கூறியவள் அறையை விட்டு வெளியேறினாள்...

சுந்தரபாண்டியனும், மீனாட்சியும் முகமலர தங்களுக்குள் பார்வையைப் பரிமாறி கொண்டனர்...

தமிழ் நாவல்

"நல்லதே நடக்கும் மீனா... இருவருக்கும் இடையே பாலமாக ஆதி இருக்கிறாள்... நம்பிக்கையுடன் இரு..." என்று அவர் மனைவியைத் தேற்றினார்...

நிஷிலா நேரே சிம்மவிஷ்ணுவிற்கு மருத்துவம் செய்யும் மருத்துவரிடம் பேசினாள்... அவனது நோயை பற்றி, இப்போது அவன் இருக்கும் நிலை பற்றி எல்லாம் கேட்டவளுக்கு மனமும், கண்களும் கலங்க ஆரம்பித்தது... வாழ்வின் இறுதி கட்டத்தை எண்ணி கொண்டிருப்பவனிடம் அவளுக்கு இரக்கம் சுரந்தது...

"டாக்டர். நிஷிலா, அவர் நாளைக்கே போதை பழக்கத்தை விட்டொழித்தால் நாளைக்கே ஆபரேசனுக்கு ஏற்பாடு பண்ணலாம்... ஆனால் அது சாத்தியமில்லை... அதனால் தான் ஆபரசேனும் தள்ளி கொண்டே போகிறது... அவரது மரணமும் நெருங்கி கொண்டிருக்கிறது..." என்று கவலையுடன் கூறிய மருத்துவரை கண்டு அவளும் கவலை கொண்டாள்...

"எத்தனையோ நோயாளிகளைத் தினமும் பார்க்கும் நீங்க இவரைப் பத்தி மட்டும் ஏன் இவ்வளவு அக்கறையா கேட்கறீங்க...?" என்றவரை நிமிர்ந்து பார்த்தவள்,

"என் பெயருக்கு முன்னால் இருக்கும் திருமதிக்கான அடையாளத்தைக் கொடுத்தவர் அவர் தான்..." என்று அழுத்தமான குரலில் கூற... அந்த மருத்துவர் அவளை ஆச்சிரியமாகப் பார்த்தார்... பின்பு அவரது பார்வையில் பரிதாபம் வந்தது...

"சாரிம்மா... கடவுள் மேல் பாரத்தைப் போட்டு நம்பிக்கையோடு காத்திரு..."

"நிச்சயம் டாக்டர்... எனக்கு நம்பிக்கை இருக்கு..."

அவரது அறையில் இருந்து வெளியில் வந்தவள் சிம்மவிஷ்ணு பெற்றோரை மீண்டும் சந்தித்து ஆறுதல் கூறிவிட்டு வந்தாள்... அப்போதும் அவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்...

வீட்டிற்கு வந்தவளை வெறிச்சோடிருந்த வீடு வரவேற்றது... பிள்ளைகள் பள்ளிக்குச் சென்றிருக்க, பவித்ரன், துளசி நிறுவனத்திற்குச் சென்றிருந்தனர்... அது கூட அவளுக்கு நிம்மதியை தந்தது... இப்போதிருந்த மனநிலையில் அவளால் யாரையும் எதிர்கொள்ள முடியும் என்று தோன்றவில்லை...

நேரே அறைக்கு வந்தவள் கட்டிலில் அமர்ந்து முழங்காலில் முகம் கவிழ்ந்தாள்... அவளுக்குக் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது... சிம்மவிஷ்ணுவை திருமணம் செய்தது முதல் அவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தது வரை எல்லாம் அவளது மனக்கண்ணில் வலம் வந்தது... அவனுடன் இருந்த இத்தனை நாட்களில் அவனைப் பற்றி அவள் நன்கு அறிந்திருந்தாள்... அவனது மனவுறுதி எங்கே போனது...? ஏன் இப்படித் தன்னைத் தானே அழித்துக் கொள்கிறான்...? ஒருவேளை அவன் சிறைக்குச் சென்றதை அவமானமாகக் கருதி இப்படிப் போதை பழக்கத்திற்கு ஆளாகிவிட்டானோ...? அவனது இந்த நிலைக்குத் தான் மட்டும் தான் காரணமோ? என்று நினைத்தவளின் விழிகளில் விழிநீர் வழிந்தது...

எல்லாவற்றிலும் அவனது தவறுகள் தான் அதிகம் இருந்தது... ஆனாலும் அவனை அப்படியே விட அவளது மனம் விரும்பவில்லை... அவனைப் பழையபடி மாற்ற வேண்டும் என்று அவளது மனம் துடித்தது... தனக்கு ஒரு ஆபத்து என்றதும் அவன் தன்னைப் பாதுகாத்தது போல் தானும் அவனைப் பாதுகாக்க எண்ணினாள் அவள்...

மதிய உணவிற்கு வீட்டிற்கு வந்தனர் பவித்ரன், துளசி... இவளது கையில் இருந்த கீறலை கண்டு பவித்ரன்,

"நிஷிம்மா, கையில் என்ன காயம்டா...?" என்று பதறியபடி அவள் அருகில் அமர... அதற்குள் துளசி முதலுதவி பெட்டியை எடுத்து வந்து கணவனிடம் நீட்டினாள்... அவன் நன்றியோடு மனைவியைப் பார்த்துவிட்டு அதை வாங்கி நிஷிலாவின் காயத்திற்கு மருந்திட்டான்...

"அத்தான்..."

தமிழ் நாவல்

"சொல்லுடா..."

"அவங்க இங்கே வந்திருக்காங்க..."

"யாரும்மா...?" புரியாது புருவம் சுருக்கினான் பவித்ரன்...

"அவங்க..." என்றவள் சற்று தயங்கி, "விஷ்ணு..." என்றாள் மெல்லமாய்...

"எதுவும் தொந்திரவு கொடுத்தானாம்மா...?" பரிவுடன் கேட்டவனை நிமிர்ந்து பார்த்தவள்,

"இல்லை... அப்படித் தொந்திரவு கொடுக்கும் அளவுக்கு அவங்க நல்ல ஆரோக்கியமா இல்லை..." என்றவள் சிம்மவிஷ்ணுவை பற்றிக் கூறலானாள்...

"அடக்கடவுளே..." என்று பவித்ரன் வருந்தினான்...

"இந்தப் பத்து வருடங்களா இந்த நோயோட அவர் உயிர் வாழ்றதே அதிசயம்ன்னு டாக்டர் சொல்றாரு... அவரோட மனோபலம் தான் இதுக்குக் காரணம்ன்னு சொல்றார்... அவருக்கு உயிர் வாழ ஆசையிருக்கு... அதே சமயம் ஏதோ ஒரு மனவலியும் இருக்கு... அது நான் கொடுத்த தண்டனையால் ஏற்பட்டதாகக் கூட இருக்கலாம்... அவங்களோட இந்த நிலைமைக்கு நானும் ஒரு காரணம் அத்தான்... அதை நினைச்சா தான் எனக்கு ஒரே குற்றவுணர்வா இருக்கு..." என்று தலைகவிழ்ந்தவளை பவித்ரன் வாஞ்சையுடன் பார்த்தான்...

அவனது தவறுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தவள் இப்போது அவனது தண்டனை கண்டு வருந்துகிறாளே...

"அவங்களுக்குச் சைக்கலாஜிக்கலா ட்ரீட்மென்ட் கொடுக்கலாம்ன்னு இருக்கேன்..." என்று கூறிவிட்டு அவள் படபடப்புடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

"நல்ல காரியம் தான்... செய்ம்மா..."

"இதில் வேற எந்த நோக்கமும் இல்லை அத்தான்..."

"இருந்தாலும் தவறில்லை நிஷிம்மா... அப்படி ஏதாவது அதிசயம் நடந்தால் முதலில் சந்தோப்படுகிறவன் நான் தான்..." என்றவனைக் கண்டு அவளது விழிகள் பனித்தது...

அன்று மாலை அதே மருத்துவமனைக்குச் சிம்மவிஷ்ணுவை காண நிஷிலா சென்றாள்... அங்கு வெறி பிடித்தார் போன்று கத்தி கொண்டிருந்த சிம்மவிஷ்ணுவை சமாளிக்க முடியாது திணறிக் கொண்டிருந்த மீனாட்சியைக் கண்டு திகைத்து போனவள் இருவரையும் நோக்கி விரைந்து வந்தாள்...

"என்னாச்சு அத்தை...?" என்று மீனாட்சியிடம் கேட்டவளை கண்டு,

"நீ எதுக்குடி இங்கே வந்த...?" என்று கோபத்தில் இரைந்தவனைக் கண்டு அவள் திகைத்து போனாள்...

"நர்ஸ் யாரையும் காணோம்... இவனைச் சமாளிக்க முடியலை..." என்ற மீனாட்சியிடம்,

"அவரை நான் பார்த்துக்கிறேன்..." என்றவள் மீனாட்சியை வெளியில் அனுப்பினாள்... அவள் செல்லலாம் தான்... ஆனால் மீனாட்சி தனியே திணறுவதைக் கண்டு அவள் அப்படிச் சொன்னாள்...

"என்ன செய்யுது...?" என்று கேட்டவளை விழிகளில் வலியை தேக்கி ஏறிட்டவன்,

"வேண்டாம்... இங்கிருந்து போயிரு..." என்று வெறிக் கொண்டு கத்தியபடி அருகில் இருந்ததை எடுத்து வீச துவங்கினான்...

அவனைக் கட்டுக்குள் கொண்டு வர நினைத்தவள் அது முடியாமல் போக அவனை அடக்க இயலாது வேறுவழியின்றி அவனைத் தனது அணைப்பிற்குள் இறுக்கி அடக்கி கொண்டாள்... தனது நெஞ்சோடு சேர்த்து அவனது முகத்தை அணைத்து கொண்டவள்,

"கொஞ்ச நேரம் பொறுமையா இருங்க..." என்று அவனது தோள் வருடி ஆறுதல் அளிக்க...

அவளது நெஞ்சுக்குழியில் முகம் புதைத்தவன் அப்படியே சிறிது சிறிதாக அடங்கிப் போனான்... அன்றொரு நாள் அவளது நெஞ்சில் முகம் புதைத்த ஞாபகம் அவனுள்... அவளது அணைப்பில் அவனது தலைவலி பறந்தோட, அவனது போதை தேவையும் சிறிது அகல துவங்கியது... போதையை விட அவள் தனக்கு முக்கியமோ? என்று அவன் தெளிவாகச் சிந்திக்க ஆரம்பித்தான்... அவனின் ஆழ்மனதின் எண்ணம் மெல்ல வெளிப்படத் துவங்கியது...

அவளின் தேவையை உணர்ந்தவன் அடுத்த நொடி கோபமாய் அவளை உதறித் தள்ளினான்... ஒரு தடவை அவளது தேவை உணர்ந்து அவளை நுகர்ந்து அவன் செய்த பாவம் போதும்... மீண்டும் இன்னுமொரு முறை பாவம் செய்து தனது பாவக்கணக்கை ஏற்றிக் கொண்டே செல்வதா? என்று அவனுக்குத் தன் மீதே கோபம் வந்தது...

"எதுக்குடி இங்கே வந்த...? கொஞ்சம் நஞ்சம் இருக்கிற என் உயிரை எடுக்கிறதுக்கா...?" என்று கத்தியவனைக் கண்டு பயப்படாது ஒரு மருத்துவராய் நிதானித்தவள்,

"உங்க உயிரை எடுப்பதால் எனக்கு என்ன நன்மை கிடைக்கப் போகுது... டாக்டரோட கடமை நோயாளியை குணப்படுத்துவது தான்... அதைத் தான் நான் செய்கிறேன்..."

"இதை நான் நம்பணுமா...? நீ என்னைப் பழிவாங்க தான் வந்திருக்க... என் நிலைமையைப் பார்த்துச் சிரிக்கத் தான் வந்திருக்க..." என்று குரலை உயர்த்தியவனிடம்,

"இது என்ன சினிமாவா...? நான் உங்களைப் பழிவாங்க... அதெல்லாம் இல்லை..." என்று அவள் சொல்லி கொண்டிருக்கும் போதே செவிலிப்பெண் மருந்துடன் உள்ளே நுழைந்தாள்... உடன் மீனாட்சியும்...

தனக்கு ஊசி போட வந்த நிஷிலாவிடம், "விஷ ஊசி போட்டு என்னைக் கொல்ல பார்க்கிறியா...?" என்று அவன் அதற்கும் எகிற...

"முதலில் எனக்குப் போட்டு பார்க்கவா...?" என்று புன்சிரிப்புடன் கூறியவள் அதைத் தனது கை பக்கம் கொண்டு போக...

"வேண்டாம்..." என்று அவளைத் தடுத்துவிட்டு தனது கையை நீட்டியவனைக் கண்டு ஆச்சிரியமாய்ப் பார்த்தவள் அந்த ஊசியை அவனது கையில் செலுத்தினாள்...

அடுத்த நொடி விழி சொருகியவனை அமைதியாகப் பார்த்தபடி நின்றிருந்தவள் கிளம்ப எத்தனிக்க... அதைச் செய்ய முடியாதபடி அவளது கை அவனது பிடியில் சிக்கியிருந்தது... அதை வியப்புடன் பார்த்தவள் அவன் அருகில் அமர்ந்தாள்... இருவரையும் பார்த்த மீனாட்சி அவர்களுக்குத் தனிமை கொடுத்து விட்டு வெளி வராந்தாவில் வந்தமர்ந்தார்...

"ஏன் இப்படி உங்க உடம்பை நீங்களே கெடுத்துக்கிறீங்க...?" என்று கேட்டவளின் கேள்வி அவனது ஆழ்மனதினை அடைந்ததோ...!

"என்னோட வலி உனக்குப் புரியாது..." என்று மெல்லமாய்ப் பதிலளித்தான்...

"சொன்னா புரிஞ்சிக்க மாட்டேனா..."

"ம்ஹூம், அது உனக்குத் தேவையில்லை... என்னுடைய வலி என்னோடு போகட்டும்..."

அந்த வலிக்காகத் தான் அவளது கற்பை தான் கேள்விக்குறி ஆக்கினோம் என்பதை மறந்தவனாய் அவன் அவளுக்குத் தெரிய கூடாது என்று நினைத்தான்... தெரிந்தால் பூஞ்சை மனம் கொண்ட பேதையவள் தாங்க மாட்டாள் என்று நினைத்தானோ...?

அவனின் வலி புரியாது அவள் அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள்...

அவன் ஆழ்ந்து உறங்கியதும் கையை விடுவித்துக் கொண்டு வெளியில் வந்தவள் மீனாட்சியிடம் ஆறுதலாய் பேசிவிட்டு விடைபெற்றாள்... மருத்துவரை காண சென்றிருந்த சுந்தரபாண்டியன் அதுவரை அங்கு வரவில்லை...

இரவு வீட்டிற்கு வந்த போது வீட்டுப்பாடம் முடித்துவிட்டுக் குழந்தைகள் அவளுக்காகக் காத்திருந்தனர்... அவள் மூவருக்கும் கதை சொல்லியபடி இரவு உணவை ஊட்டிவிட்டாள்...

"சித்தி போதும்..." என்று ஆர்யா ஆரம்பிக்க...

"ஆமா சித்தி..." என்று சூர்யா முடித்தான்...

"நல்லா சாப்பிட்டா தான் நல்லா வளர முடியும்..." என்று ஆதிரை கூற...

"உன்னை மாதிரி நெட்டை கொக்கு போலவா...?" என்று ஆர்யா கிண்டல் செய்ய...

"நானாடா நெட்டை கொக்கு...? நீ தான்டா..." என்று ஆதிரை கூற...

"நெட்டை கொக்கு..." என்று கேலி செய்தபடி சூர்யா ஓட... ஆதிரை அவனைத் துரத்தினாள்... ஆர்யாவும் இவர்களுடன் இணைந்து கொண்டான்...

நிஷிலா சிரித்தபடி மூவரையும் பார்த்து கொண்டிருந்தாள்... அப்போது தான் ஆதிரையின் உயரம் அவளது கருத்தை கவர்ந்தது... இந்த வயதில் மகள் சற்று அதிக உயரமாகத் தான் இருந்தாள்... 'ஒருவேளை அவளது அப்பா போலவோ?' என்று சிந்தித்தவளுக்கு அடுத்த நொடி துக்கம் தொண்டையை அடைத்தது... தான் மட்டும் அவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்காமல் இருந்திருந்தால்

இந்நேரம் அவன் எல்லோரையும் போல் தனது மகளுடன் சந்தோசமாக இருந்திருப்பானோ...?

இந்த மகளை அடையாளம் காட்ட மறுத்தவன் தானே அவன் என்று அவளது ஒரு மனம் கோபம் கொண்டது... அதே மகளைக் காப்பாற்ற வேண்டி அவர்களது உறவை ஊருக்கு அடையாளம் காட்டி அவளைத் தன்னுடன் அழைத்துச் சென்றவன் அவன் தானே என்று அவளது இன்னொரு மனம் வாதிட்டது... மொத்தத்தில் அவளது மனமே அவளுக்கு எதிரியாக மாறி அவனுக்குச் சாதகமாகப் பதிலளித்தது...

எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டோம் என்று அவள் தனக்குள் குமைந்து போனாள்... இனியும் பழையதை பிடித்துத் தொங்கி கொண்டிராமல் அவனைச் சரி செய்ய வேண்டும் என்று அவள் மனதில் உறுதி பூண்டாள்...

இரவில் படுக்கும் போது மகளை அணைத்துக் கொண்டு படுத்தவள் மெல்ல அவளிடம், "இப்போ அப்பா உன் கண்முன் வந்தால் நீ என்ன பண்ணுவ அம்மு...?" என்று கேட்க...

"ம்மா..." விழி விரித்து மகிழ்ச்சியாய் பார்த்த ஆதிரை,

"அப்படியே ஓடி போய் அவரைக் கட்டிப்பிடிச்சுக் கிஸ் கொடுப்பேன்..." என்றாள் உற்சாகமாக...

"ஏன் இத்தனை நாளா பார்க்க வரலைன்னு கோபப்பட மாட்டியா அம்மு...?"

"ம்ஹூம், அவர் செஞ்சதை சுட்டிக்காட்டி அவரை ஹர்ட் பண்ண மாட்டேன்... அவர் என்னைப் பார்க்க வந்ததே சந்தோசம்ன்னு அவரைக் கட்டிப்பிடிச்சு என் கூடவே வச்சுக்குவேன்..." சின்னவள் கூறியது தனக்குக் கூறியது போலிருந்தது அவளுக்கு...

"அப்பா எப்போம்மா வருவாங்க...?" முதன்முறையாக மகளது குரலில் சிறு ஏக்கம் எட்டிப்பார்த்தது...

"கூடிய சீக்கிரம்... அப்பாவை உன் கிட்ட பேச சொல்லவா...?"

"ம்மா..." என்று சந்தோசமாய்க் கூவியவள் அன்னையை அணைத்துக் கொண்டு முத்தமழை பொழிந்தாள்...

நெகிழ்ச்சியுடன் மகளை அணைத்துக் கொண்ட நிஷிலாவிற்கு மனதில் சிறு நம்பிக்கை வந்தது... மகளை வைத்து கணவனைக் குணமாக்கி விடலாம் என்று...

மறுநாள் கணவனைக் காண சென்ற போது நிஷிலாவின் முகத்தில் புத்துணர்ச்சி காணப்பட்டது... புன்னகை முகத்துடன் வந்த மனைவியைப் புரியாத புதிராய் பார்த்த சிம்மவிஷ்ணுவும் ஒன்றும் பேசவில்லை... அவனுடன் சுந்தரபாண்டியன், மீனாட்சி இருந்தனர்...

அவன் அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்த நிஷிலா அவனது தினப்படி அறிக்கை எழுதியிருந்த 'நோட்பேடை' எடுத்து பார்த்தாள்... அவனது விழிகள் அவளை அளவிடுவது போல் பார்த்தது... ஒரு மருத்துவருக்கு உரிய கம்பீரத்துடன், அந்த வயதிற்குரிய முதிர்ச்சியுடன் அவளிருந்ததை அவனது மனம் குறித்துக் கொண்டது... அவள் எந்தத் துறையில் சிறப்பு மருத்துவர் என்பதை அறிய அவனுக்கு ஆவலாக இருந்த போதும் அதை அவன் வாய்விட்டு கேட்கவில்லை...

"நல்லா தூங்குனீங்களா...?" என்று கேட்டவளை கண்டு,

"ஏன்...? என் தூக்கத்தைக் கெடுக்கவா...?" என்று அவன் வெடுக்கென்று கேட்டான்...

அவனது வார்த்தைகள் அவளது மனதினை சுருக்கென்று தைத்தது...

"நல்லா தூக்கம் வரலைன்னா அதுக்கு ஏத்த மாதிரி ட்ரீட்மெண்ட் கொடுக்கத் தான் கேட்டேன்..."

"நீ ஒண்ணும் பண்ண வேண்டாம்... போ தாயி..." இருகரம் கூப்பி வணங்கியவன் அடுத்து வாயிற்புறம் நோக்கி தனது கையைக் காண்பித்தான்...

அவனது புறக்கணிப்பை சிறிதும் கண்டு கொள்ளாது அவள், "உங்க மகள் ஆதியை பார்க்க வேண்டாமா...?" என்று கேட்டபடி அலைப்பேசியை எடுத்தவளை கண்டு அவன்,

"வேண்டாம்..." என்று உறுதியாய் மறுத்தான்...

அவள் திகைத்து போய் அவனைப் புரியாது பார்த்தாள்...

"ஏன்...?" என்று சுதாரித்துக் கொண்டு கேட்டவளை கண்டு தீயாய் விழியால் சுட்டெரித்தவன்,

"என்னைக் கட்டுப்படுத்தும் எதுவும் எனக்கு வேண்டாம்... முதலில் நீ, அடுத்து நம் மகள்..."

"நான் வேண்டாம் சரி... ஆனா ஆதி...?"

"அவள் மட்டும் என்ன தனி...? அவளையும் சேர்த்து தான் சொல்கிறேன்..." என்று கோபமாய் உறுமியவன்,

"நான் பகை முடிக்க நினைக்கும் போது என்னைக் கட்டுப்படுத்த யாரும் இருக்கக் கூடாது... என் உயிர் பிரியும் போது என்னுள் வாழும் ஆசையைத் தூண்டிவிட யாரும் அருகில் இருக்கக் கூடாது... மொத்தத்தில் எனக்கு உறவாய் யாரும் இருக்கக் கூடாது... இந்தச் சிம்மவிஷ்ணு பகை முடிக்கப் பிறப்பெடுத்தவன்..." என்றவன் அவளை உறுத்து விழித்து,

"உன் குடும்பத்து ஆளுங்களை விட மாட்டேன்டி... ஒருத்தரை உயிரோட விட மாட்டேன்... அவங்களுக்கு எமன் நான் தான்..." என்று ஆக்ரோசமாய்க் கத்தினான்...

நிஷிலா செய்வதறியாது அவனைப் பார்த்தபடி நின்றிருந்தாள்... அவனது பெற்றோரோ திக்பிரம்மை பிடித்தார் போன்றிருந்தனர்...

அப்போது "அப்பா" என்று ஆதிரையின் குரல் கணீரென்று ஒலித்தது...

சிம்மவிஷ்ணுவின் அத்தனை நேர ஆத்திரம் அந்த ஒற்றை வார்த்தையில் அப்படியே அடங்க அவன் ஒருவித

பரபரப்புடன் சுற்றும் முற்றும் பார்த்தான்... அவனது விழிகளில் ஒளி மீண்டிருந்தது... அவனது முகத்தில் மலர்ச்சி அப்பட்டமாய்த் தெரிந்தது...

"அன்று பகை கொல்ல உருவாக்கப்பட்டவள்,
இன்று உறவு கொள்ள நேசக்கரம் நீட்டுகிறாள்...
பாவக்குழியில் நரகலுக்கு இடையில்
மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும்
உன் பிதாவின் பாவத்தைப் போக்கி,
அவனுக்கு உயிர் கொடுத்து,
அவன் உயிர் துளிர்க்க அன்புரமிட்டு
மீண்டும் தளிர்த்திட வகைச் செய் தாயே..."

கொள்ளும்...!!!

உலகிற்கு மகளைப் பிரசவித்த மனைவி மீது காதல் இல்லை, காமம் இல்லை... அவள் மீது அன்பும் இல்லை, நேசமும் இல்லை... அவள் யாரோ, அவன் யாரோ... ஆனால் இருவரையும் இணைக்கும் பாலமான அவர்களது மகள் வேறில்லையே... மகள் மீதான பாசம் அவனை நெகிழ செய்தது... தான் ஆடாவிட்டாலும் தனது தசை ஆடும் என்பது சரி தானோ...

மகளைத் தேடி அவனது விழிகள் அலைந்ததைக் கண்டு நிஷிலா அவன் முன் தன் அலைப்பேசியைக் காண்பித்தாள்... அதன் திரையில் அவனது மகள் ஆதிரை அவனைப் பார்த்து புன்னகைத்து கொண்டிருந்தாள்... பத்து வருடங்களுக்கு முன் அவளைச் சிறு சிசுவாய் பார்த்தவன் இன்று வளர்ந்த சிறுமியாய்ப் பார்க்கிறான்... அப்படியே அன்னையை உரித்து வைத்தது போலிருந்தது மகளது தோற்றம்... இன்னும் கொஞ்சம் வளர்ந்தால் பதினெட்டு வயது நிஷிலாவே தான்...

மெல்ல மனைவியை ஏறிட்டுப் பார்த்தான்... முன்பிருந்த வெகுளித்தனம் மறைந்து இப்போது அவளது முகத்தில் முதிர்ச்சி வந்திருந்தது... அவனது பார்வையை உணர்ந்து அவள் அவனைக் கேள்வியாய் பார்த்தாள்...

மனைவியிடம் 'ஒன்றுமில்லை' என்று தலையசைத்தவன் கண்ணீர் மல்க பதிவு செய்யப்பட்ட காணொளியில் தேவதையாய் காட்சியளித்த மகளை மென்மையாய் வருடி கொடுத்தான்... மகனது செயலை மனம் கனக்க பார்த்து கொண்டிருந்தனர் அவனது பெற்றோர்...

"ஐ லவ் யூப்பா..." என்று கூறிய ஆதிரையைக் கண்டு அவனது உதடுகளில் புன்னகை மலர்ந்தது...

"மீ டூ..." என்று அவன் சத்தம் வராது மெல்ல முணுமுணுத்தான்...

"அப்பா இங்கே பாருங்க, உங்க எல்லா ஃபோட்டோசையும் நான் கலெக்ட் பண்ணி வச்சிருக்கேன்..." என்றவள் அறையில் இருந்த அலமாரியை திறந்து காண்பித்தாள்...

அதில் சிம்மவிஷ்ணுவின் புகைப்படங்களே நிறைந்திருந்தது... பிறந்தது முதல் முப்பத்தியொரு வயது வரை உள்ள அனைத்து புகைப்படங்களும் அதில் இருந்தது... தான் ஆறு மாத குழந்தையாக இருந்த போது உடை இல்லாது இருந்த புகைப்படத்தை அதில் கண்டவன் தனது தந்தையிடம்,

"இதையெல்லாமா கொடுத்தீங்க...?" என்று கேட்டவனின் முகத்தில் சிறிது வெட்கத்தின் சாயல் படர்ந்தது...

அதை ஆச்சிரியத்துடன் பார்த்தபடி நிஷிலா நின்றிருக்க... அவனது பெற்றோரோ சிரிப்புடன் மகனை பார்த்திருந்தனர்... சற்று முன்பிருந்த கலக்கம் அவர்களை விட்டுச் சென்றிருந்தது...

"அப்பா, இந்த ஃபோட்டோல நீங்களும், அம்மாவும் அழகாயிருக்கீங்க...?" என்று கேட்டபடி வளைகாப்புப் புகைப்படத்தை எடுத்து காண்பித்தாள் ஆதிரை...

அன்று அவன் மனதில் கோபம் இருந்த போதும் அவன் புன்னகையுடன் காட்சியளிக்க... நிஷிலாவோ மனதின் கலக்கத்தை விழிகளில் சுமந்தபடி அவனருகில் நின்றிருந்தாள்...

"அம்மா வயித்தில் நான் இருந்தேனாப்பா...?" என்று மகள் கேட்டதும்,

"ஆமாம்டா..." என்றவனின் விழிகள் அவனையும் அறியாது மனைவியைப் பார்த்தது...

இந்த மகளைக் காப்பாற்ற வேண்டி அவள் போராடிய போராட்டம், பெற்றுக் கொண்ட சூடுகள் எல்லாம் அவனது நினைவில் எழுந்து அவனைக் கண் கலங்க செய்தது... அவனது விழிகள் அவனையும் அறியாது மனைவியின் மாராப்பு இடைவெளியில் தெரிந்த வயிற்றுப் பகுதியினைப்

பார்த்தது... அதை உணர்ந்தவளாய் நிஷிலா தன்னிச்சையாய் புடவையை இழுத்து மூடியவள் கணவனை முறைத்து பார்த்தாள்...

வழுவழுப்பான மேல் வயிறு மட்டுமே அவனது கண்களுக்குத் தெரிந்தது... சூட்டுப்புண் புடவைக்குள் ஒளிந்திருந்தது... அதை உணர்ந்தவனாய் அவன் தனது விழிகளை விலக்க எத்தனித்த போது அவள் புடவையை இழுத்து மூடியதை கண்டு அவன் கோபமாய் நிமிர்ந்து பார்த்து அவளை முறைத்தான்...

"நான் ஒண்ணும் உன்னைச் சைட் அடிக்கலை... சூடு போட்ட வடு இருக்கான்னு தான் பார்த்தேன்..." பெற்றோருக்கு கேட்காத மெல்லிய குரலில் அடக்கப்பட்ட கோபத்துடன் அவன் அவளிடம் முணுமுணுத்தான்...

அவனது கோபத்தில் அவள் தனது தவறை உணர்ந்தவளாய் உதடு கடித்தவள் பின்பு, "சாரி..." என்றாள்... அவனோ அவளை மீண்டும் முறைக்கத் தவறவில்லை...

"எல்லா ஃபோட்டோசும் இருக்கு... ஆனா உங்க மேரேஜ் ஃபோட்டோ மட்டும் தான் என் கிட்ட இல்லை... அதில் அம்மா, நீங்க ரெண்டு பேரும் எப்படி இருந்தீங்க...?" என்று ஆர்வமாய்க் கேட்ட மகளைக் கண்டவனின் முகத்தில் அந்த நாளின் நினைவில் புன்னகை வந்தது...

"அப்பவும் உன் அம்மா இப்படித் தான் அழுது வடிஞ்சிட்டு இருந்தாள்..." என்று அவன் மகள் நேரில் இருப்பது போல் அவளிடம் கூறி மனைவியைக் கேலி செய்தான்...

தங்களது திருமணநாள் நினைவில் அவளது முகம் இறுகி போனது... அதையே நினைத்து கொண்டிருப்பதால் எதுவும் மாறிவிடாது என்று எண்ணியவளாய் அவள் புன்னகை முகமாய்,

"பூச்சாண்டி மாதிரி இருந்தா பயப்படாம என்ன பண்ணுவாங்களாம்...?" என்று கேலியாய் கேட்க...

அவளது குரலில் அவளைத் திரும்பி பார்த்தவன் அவளது முகத்தினை உற்று நோக்கி அவளது உணர்வுகளை அவதானிக்க நினைத்தான்... அப்போதே அவனுக்கு அவளது உணர்வுகளைப் படிப்பது மிகவும் சிரமம்... இப்போது சொல்லவும் வேண்டாம்... ஆனால் அவளது முகத்தில் இருந்த புன்னகை அவனது மனதினை சிறிது ஆறுதல்படுத்தியது...

"நீங்க அழகா தான் இருந்திருப்பீங்க... ஆனா அம்மா தான்...?" என்று இழுத்து குறும்பாய் கண்சிமிட்டி சிரித்த மகளைக் கண்டு அவன் குபீரென்று சிரித்துவிட்டான்...

'பார்த்தாயா...?' என்பது போல் மனைவியை நோக்கி நக்கலாய் ஒரு பார்வையை வீசவும் அவன் தவறவில்லை...

'ம்க்கும்...' என்று உள்ளுக்குள் நொடித்துக் கொண்டவளின் முகம் செல்ல சிணுங்கலை அப்பட்டமாய் வெளிக்காட்டியது...

மகன், மருமகள் புன்னகை முகத்தை நிறைவாய் பார்த்தபடி பெரியவர்கள் மெல்ல அங்கிருந்து நழுவினர்...

புகைப்படங்களுக்கு மத்தியில் இருந்த வாழ்த்து அட்டைகளை எடுத்து காட்டினாள் ஆதிரை...

"இதெல்லாம் உங்க பேர்த்டேக்காக நான் வாங்கி வச்சது..." என்றாள் பெருமையாக...

"ஆமாம், மூணு வயசில் இருந்து உங்களுக்காக வாங்கி வைக்க ஆரம்பிச்சிட்டாள்..." என்ற நிஷிலாவின் முகத்தில் பெருமிதம் வழிந்தது...

அதைக் கண்ட சிம்மவிஷ்ணுவின் விழிகளில் நீர் நிரம்பியது... வாழ்க்கையில் எத்தகைய மகிழ்ச்சியான தருணங்களை அவன் இழந்திருக்கிறான்... அவனுக்கு மனதிற்கு மிகவும் பாரமாக இருந்தது...

"ப்பா, இந்த வருசம் பேர்த்டேக்காவது வருவீங்களாப்பா...?" என்று ஏக்கத்துடன் கேட்ட மகளின் வார்த்தையில் அவனது

கண்களில் தேங்கியிருந்த கண்ணீர் அப்படியே வழிந்தோடியது...

மகளின் ஏக்கமான வார்த்தைகள் தந்தையைக் குற்றவுணர்வில் குமைய செய்ய அவன் அலைப்பேசியை அணைத்துவிட்டு விழிகளை மூடி கட்டிலில் சாய்ந்து கொண்டான்... அவனது மூடிய விழிகளில் இருந்து விழிநீர் நிற்காது வழிந்து கொண்டிருந்தது...

'எனக்கு மட்டும் ஏன் இந்தச் சாபம்...?' அவனது மனம் சத்தமிட்டு ஓவென்று அழுதது...

அவனது மனநிலை உணர்ந்து அவள் அவனது தோளில் ஆறுதலாய் கை வைத்தாள்... அதை உணர்ந்தவனாய் விழிகளைத் திறந்தவன் தீயாய் அவளைச் சுட்டெரித்தான்...

"உனக்கும், எனக்குமான பந்தம் பத்து வருசத்துக்கு முந்தி நான் உன் கழுத்தில் இருந்து தாலியை கழட்டிய போதே முடிந்து போனது... அதைப் புதுப்பிக்க, உயிர்ப்பிக்க நான் விரும்பலை... நீ ஏன் தீராவை கல்யாணம் பண்ணலை...? ஆதிக்கு அவனை அப்பான்னு ஏன் அடையாளம் காட்டலை...? ஏன் இப்படி என் உயிரை எடுக்கிற...?" என்று அவளது தோள்களைப் பிடித்து உலுக்கியபடி கத்தியவனைக் கண்டு அவள் மனதிற்குள் அதிர்ந்தாலும் வெளியில் அவனை இமைக்காது பார்த்திருந்தாள்...

"ஏன்னு ரொம்ப ஈசியா கேள்வி கேட்டுரலாம்... ஆனா அதுக்குப் பதில் சொல்றது ரொம்பக் கஷ்டம்..."

"என்னடி பெரிய கஷ்டம் வந்துர போகுது...? உனக்குப் பிடிச்ச உன் அத்தானை தானே கல்யாணம் பண்ண சொன்னேன்... நீயே அதைச் சொல்லியவள் தானே..." என்றோ அவள் பேசிய வார்த்தைகளை அவன் திருப்பிப் பேசி அவளின் மனதினை நோகடித்தான்...

"ஆதிக்கு பவன் அத்தான் அப்பா இல்லையே... அவளுக்கு நீங்க தானே அப்பா... அப்போ அவளிடம் உங்களைத் தான் அப்பான்னு நான் அடையாளம் காட்ட முடியும்..."

அவளது அந்த வார்த்தைகளுக்குப் பின்னே 'என் மகளின் தந்தையான நீ தான் என் கணவன்' என்கிற அர்த்தம் புதைந்திருப்பதை அவன் கொஞ்சமும் உணரவில்லை...

"எதுக்குடி என் மகள் கிட்ட என்னை அப்பான்னு அடையாளம் காட்டின...? அந்தப் பிஞ்சு மனசோட ஏக்கத்தைப் பாரு... இதுக்கு நீ என்ன பதில் சொல்ல போறடி...? இதுக்கு 'உன் அப்பன் செத்துட்டான்னு' அவள் கிட்ட சொல்லி வளர்த்திருக்கலாமே..." என்று படபடத்தவனின் வார்த்தையில் கோபமில்லை... மாறாகத் துயரமே அதிகம் இருந்தது...

அவள் தனது பார்வையைத் திருப்பிக் கொள்ளாது அவனையே பார்த்திருந்தாள்... அவளது மனமோ அலைகடலாய் ஆர்ப்பரித்தது... அவளது அமைதி அவனைக் கோபமாய்ப் பொங்கியெழ செய்தது...

"ஏன்டி படுத்துற...? என் மகளைப் பார்க்க பார்க்க எனக்கு வாழணும்ன்னு ஆசை வருது... அவளைப் பார்க்கணும்ன்னு ஆர்வம் வருது... என்னையும், என் மகளையும் உன்னால் சேர்க்க முடியுமா...? அதுவும் இந்தக் கோலத்தில் அவள் கிட்ட போய் என்னைக் காட்ட முடியுமா...? அப்படியே காட்டினாலும் இந்த உறவு எத்தனை நாளுக்கு நீடிக்கும்...? சாகப் போகிறவனுக்கு இத்தனை ஆசை தேவையா...? அதை விட என்..." என்று கூறும் போதே அவனது முகம் வேதனையில் கசங்கியது...

"என் மகள் என் பிரிவை தாங்குவாளா...? அவள் ஏங்கி போயிர மாட்டாளா...?" விழிகளில் வலியுடன் கேட்டவனுக்கு மகளுடன் ஆயிரம் வருடங்கள் வாழ வேண்டும் என்கிற ஆசை வானளவு வந்தது...

"ஏன் நீடிக்காது...? அத்தனைக்கும் ஆசைப்படு என்பதை நீங்க கேள்விப்பட்டது இல்லையா...? உறவு எத்தனை நாளைக்கு நீடிக்கும் என்பது உங்களிடம் தான் இருக்கு... உங்க மகளோட சேர்ந்திருக்கிறது உங்க கைகளில் தான் இருக்கு..."

"என்ன சொல்ல வர்ற...?" என்று புரியாது பார்த்தவனை,

"உயிர் வாழ உங்களுக்கு ஆசை இருக்கணும்... இருந்தால் தான் அத்தனையும் சாத்தியம்..."

"இல்லை எனக்கு உயிர் வாழ ஆசையில்லை... என்னோட வேலை முடிஞ்சதும் நான் சாகத் தான் விரும்பறேன்..." என்று அவளது முகத்தைப் பாராது துக்கத்துடன் முனங்கியவனின் முகத்தை நிமிர்த்தியவள்,

"நீங்க சத்தியவான் தான் நான் நம்பறேன்... எனக்குச் செஞ்சு கொடுத்த சத்தியத்துக்காகத் தான் நீங்க இப்படி எல்லாம் பேசறீங்கன்னும் எனக்குத் தெரியும்..." என்று அவனது விழிகளைப் பார்த்தபடி கூறியவள்,

"நீங்க உயிர் வாழணும்... நம்ம மகளுக்காக நீங்க வாழ்ந்து தான் ஆகணும்... இத்தனை நாள் நாம நமக்காக வாழ்ந்துட்டோம்... ஆனா இனி நம்ம மகளுக்காக, அவளோட சந்தோசத்துக்காக நாம உயிர் வாழலாமே..." என்று அழுத்தமாய் அவனுக்கு உறைக்கும்படி கூறியவளை கண்டு அவனது விழிகளில் சிறிது நம்பிக்கை ஒளி தோன்றியது...

"நா... நான் உயிர் பிழைப்பேனா...?" என்று கேட்டவனின் வார்த்தையில் பெரிதும் நம்பிக்கையின்மையே இருந்தது...

"நிச்சயமா... ஆனா அது உங்க கைகளில் தான் இருக்கிறது..." என்றவளின் கூற்றை அவன் அமைதியாக ஏற்றுக் கொண்டான்...

அன்றிரவு ஆதிரை அன்னையிடம் ஆர்வமாக, "என்னோட வீடியோ பார்த்துட்டு அப்பா என்ன சொன்னாங்க...?" என்று கேட்க...

மகளை வாஞ்சையுடன் அணைத்து கொண்டவள், "ரொம்பச் சந்தோசப்பட்டாங்க..." என்றவள் மகளின் உச்சந்தலையில் கன்னம் பதித்து,

"இனி அப்பா சந்தோசப்படுற மாதிரி வீடியோ எடுத்து அனுப்பணும்... சரியா அம்மு...?" என்று கேட்க...

"சரிம்மா..." என்றாள் சின்னவள் சமத்தாக...

மகளை உறங்க வைத்துவிட்டு நிஷிலா பவித்ரனை தேடி சென்றாள்... கணவன், மனைவி இருவரும் தங்களுக்குள் எதையோ பேசி சிரித்துக் கொண்டிருந்தனர்... இவளை கண்டதும் இருவரும் பேச்சை நிறுத்திவிட்டு புன்னகையுடன்,

"வா நிஷி..." என்றழைக்க...

"சாரி..." என்று சங்கடமுற்றபடி அவள் நகர முற்பட... அவளின் கையைப் பிடித்துத் தன்னருகில் அமர வைத்த துளசி,

"உன்னை விட வேறு எந்த விசயமும் எங்களுக்கு முக்கியம் இல்லை நிஷி..." என்று கூற...

மனைவியை மனம் நெகிழ பார்த்திருந்தான் பவித்ரன்... அவன் நிஷிலா மீது பாசம் வைப்பதற்குக் காரணம் இருக்கிறது... ஆனால் துளசி அந்தளவிற்குப் பாசம் வைப்பதற்கு அவனைத் தவிர வேறு காரணம் இல்லை... அவன் அன்பு காட்டும் அனைத்தின் மீதும் அவள் அன்பு பாராட்டினாள்... அதுவே அவள் மீதான அவனது காதலை இன்னமும் அதிகரித்தது...

"சொல்லு குட்டிம்மா... என்ன விசயம்...?" என்று அவனும் கேட்டான்...

"அத்தான்..." என்றழைத்தவள் தலைகுனிந்தபடி தனது கைவிரல்களை ஆராய்ந்தபடி அமர்ந்திருக்க...

"எதுவாக இருந்தாலும் சொல்லுடா...?"

"நாளையில் இருந்து நான் வேலைக்குப் போகலை..."

"என்ன சொல்ற நிஷிம்மா...?" அவன் திகைப்புடன் கேட்டான்...

மருத்துவத்தைத் தன் உயிர்மூச்சாகக் கருதுபவள் திடுமென இப்படிக் கூறியது கண்டு அவனுக்குத் திகைப்பாக

இருந்தது...

"அவங்க என்னால் தான் இப்படி ஆகிட்டாங்களோன்னு எனக்கு வருத்தமா இருக்கு... இப்போ என்னோட முதல் கடமை அவங்களைக் குணப்படுத்துறது தான்... அதுக்கு நான் அவங்க கூடவே இருக்க வேண்டி வரும்..." என்றவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

"அத்தை, மாமாவால் பார்த்துக்க முடியும் தான்... நான் கூட இருந்தால் இன்னும் பெட்டரா இருக்கும்ன்னு ஃபீல் பண்றாங்க... நீங்க என்ன சொல்றீங்க அத்தான்...?" தயக்கத்துடன் நிறுத்தியவளை கண்டு,

"உன்னுடைய விருப்பம் தான் என்னுடைய விருப்பம் குட்டிம்மா... விஷ்ணுவை குணப்படுத்த நீ நினைச்சா அதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை... ஏன்னா அவன் முழுக்க முழுக்கக் கெட்டவன் இல்லை..." என்று புரிதலுடன் கூறிய பவித்ரனை அவள் நன்றியுடன் பார்த்தாள்...

"தேங்க்ஸ் அத்தான்..." என்றவள் புன்னகை முகத்துடன் எழுந்து சென்றாள்...

அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்த துளசி, "நிஷியை புரிஞ்சிக்கவே முடியலை..." என்று கூற...

"நீ விஷ்ணுவை பார்த்தது இல்லையே... பார்த்தேன்னா அவனுக்கு இவள் பரவாயில்லைன்னு நினைப்ப... அவன் அப்படியொரு புரியாத புதிர்..."

பவித்ரனுக்கு இப்போது வரை சிம்மவிஷ்ணுவை பற்றிச் சரியான புரிதல் இல்லை... யாராலும் கணிக்க முடியாதவனாய் அவன் இருந்தான்...

**********************

அடுத்து வந்த நாட்களில் சிம்மவிஷ்ணு நிஷிலா சொன்னதை ஒழுங்காகக் கேட்க ஆரம்பித்தான்... போதை பழக்கம் உடையவர்களை முக்கால்வாசி நேரம் ஆழ்ந்த

உறக்கத்தில் வைத்திருப்பார்கள்... மீதமிருக்கும் நேரம் அவள் அவனிடம் மகளைப் பற்றி மட்டுமே பேசுவாள்... ஜாக்கிரதையாக மற்ற விசயங்களைத் தவிர்த்து விடுவாள்... அப்படி இருக்கும் போது தான் ஒருநாள் அவனாக அவளிடம்,

"நான் ஆதியிடம் பேசணும்..." என்று ஏக்கத்துடன் கேட்க... அவளுக்குப் பரிதாபமாகப் போய்விட்டது...

அன்று ஞாயிற்றுக்கிழமை, அதனால் எல்லோரும் வீட்டில் இருப்பர்... அவள் பவித்ரனுக்கு அழைத்ததும் அவன் உடனே அழைப்பை எடுத்தான்...

"அவங்க அம்மு கூடப் பேசணும்ன்னு சொல்றாங்க..."

"விஷ்ணுவா...?" ஆச்சிரியமாகக் கேட்ட பவித்ரன்,

"சரி கொடு... நானும் விஷ்ணு கிட்ட பேசறேன்..." என்க...

"அத்தான் உங்க கிட்ட பேசணுமாம்..." என்று தயக்கத்துடன் அவள் அலைப்பேசியைச் சிம்மவிஷ்ணுவிடம் நீட்ட... அவனோ சாதாரணமாக அதை வாங்கிக் காதில் வைத்தான்...

"சொல்லு தீரா... எப்படியிருக்க...?"

அந்த நிலையிலும் சிம்மவிஷ்ணுவின் குரல் கம்பீரமாக ஒலித்தது கண்டு பவித்ரனின் உதடுகளில் புன்னகை வந்தமர்ந்தது... 'எந்த நிலையிலும் சிங்கம், சிங்கம் தான்' என்று அவன் நினைத்துக் கொண்டான்...

"நான் நல்லாயிருக்கேன் விஷ்ணு... நீ எப்படி இருக்க...?"

"நல்லா இருக்கேன்..." என்று பதிலளித்தவன் மெல்ல,

"பத்திப்பா எப்படியிருக்காங்க...?" என்று கேட்க...

"யாரு...?" பவித்ரனுக்குச் சிம்மவிஷ்ணு கூறியது புரியவில்லை...

"உன் அப்பா தான்..." என்று விளக்கம் சொன்னதும்...

"அவர் நல்லாயிருக்கார்... உன்னுடைய நிலை தெரிஞ்சு ரொம்ப வருத்தப்பட்டார்... இன்னும் அந்த வருத்தம் அவருக்கு இருக்கு... அதனால் தான் நீயில்லாத இந்த இடைப்பட்ட காலத்தில் உன்னுடைய தொழில் நலிவடைஞ்சப்போ அவர் உங்கப்பாவுக்கு நிறைய உதவி பண்ணி தொழிலை சரியாம பார்த்துக்கிட்டார்... எனக்கு உங்க ரெண்டு பேரை பார்த்துக் கொஞ்சம் பொறாமையா இருக்கு... என்ன மாதிரியான பந்தம் உங்களுடையது...?"

பவித்ரனின் வார்த்தைகளில் பத்ரிநாத்தை நினைத்து சிம்மவிஷ்ணுவின் உதடுகளில் புன்னகை வந்தமர்ந்தது...

"ஏழேழு ஜென்மம் சென்றாலும் விடாது தொடரும் பந்தம் இது தீரா... இதை வார்த்தையால் விளக்க முடியாது... உணர்ந்தால் தான் புரியும்... அவருக்காக நான் எதையும் செய்வேன்..."

"அப்படியா...? அப்படின்னா சிம்ஸ் கம்பெனியோட ஷேர்ஸை கொடுக்கலாமே..." என்று பவித்ரன் கேலியாய் கேட்க...

"அது பத்திப்பாவோடது இல்லையே... அவரோடது என்றால் அவரிடமே கொடுத்திருப்பேன்... இல்லையில்லை அதை வாங்காது பணம் கொடுத்து அதன் சரிவை சரி செய்திருப்பேன் தீரா... எனக்குத் தொழிலை விடப் பத்திப்பா தான் முக்கியம்... ஆனால் சிம்ஸ் கம்பெனி கதை வேறு... எந்தக் காரணம் கொண்டும் அதை விட்டு கொடுக்க முடியாது... உன் அம்மாவிடம் போய்ச் சொல்... விஷ்ணு பழையபடி சிம்மமாய் மாறி அவங்களைச் சந்திக்க வந்துக்கிட்டு இருக்கான்னு..." பழிவெறியில் கண்கள் சிவக்க உறுமியவனைக் கண்டு கவலையுற்றவளாய் நிஷிலா,

"ஆதி கிட்ட பேச தானே சொன்னேன்... நீங்க என்ன பேசிக்கிட்டு இருக்கீங்க..." என்று அவனை அதட்ட...

"ஆமாம் தீரா... ஆதியை பேச சொல்லு..." சிம்மவிஷ்ணு கூறியதும் அடுத்த நொடி ஆதிரையிடம் அலைப்பேசி

சென்றது...

"அப்பா..." என்று அவள் அழைத்ததும்... அவன் தாங்க முடியாது கண்ணீர் வடித்தான்...

ஆணின் அழுகை பெண்ணின் அழுகையைப் போன்று ஆர்ப்பாட்டமாய் வெள்ளமென வெளிப்படாது... அது ஆழமான, சுழல்களை உள்ளடக்கிய அமைதியான நதியாய் இருக்கும்... அப்படியொரு அழுகை அவனிடம் இருந்து வெளிப்பட்டது...

"அப்பா பேசுங்க..." என்று மகள் கேட்டதும் தான் அவனுக்குச் சுற்றுப்புறம் உறைத்தது... அவன் அவசரமாகத் தனது கண்களைத் துடைத்துக் கொண்டான்...

"பேபி..." என்றவனுக்கு அடுத்த வார்த்தை வரவில்லை... மனம் நெகிழ்ந்திருந்தில் அவன் வார்த்தைகள் வராது தடுமாறினான்...

ஆனால் மகளுக்கு அப்படியொரு தடுமாற்றம் இல்லை போலும்... அருவி போல் அவள் சளசளத்தாள்... அதை ஆசை தீர கேட்டவன் வாயிலிருந்து அதிகம் உதிர்ந்த வார்த்தை 'பேபி' மட்டுமே... அதைக் கேட்ட நிஷிலா அவனிடம்,

"அம்மாவும் பேபி, மகளும் பேபியா...? ரொம்ப நல்லது..." என்று முணுமுணுக்க...

"உனக்குப் பொறாமை..." என்று அவளைப் போல் முணுமுணுத்தவன் பின்பு வாய்விட்டுச் சிரித்தான்...

"நீ பேபியாவே இரு... ஆதி நீ சொல்வது போல் அம்மு... ஓகேவா பேபி...?" என்று கேட்டவனைக் கண்டு அவள் திகைப்பாய் விழி விரித்தாள்...

அவனது 'பேபி' என்றழைப்பில் அவளது அடிவயிறு தடதடத்தது... பயமா?, நெகிழ்வா?, சந்தோசமா? என்று இனம் பிரிக்க முடியாத ஒரு வகையான உணர்வு அது... அது சில்லென்று அவளது இதயத்தை ஊடுருவி சென்றது...

"என்ன சரி தானே...?" என்று கண்சிமிட்டி சிரித்தவனைக் கண்டு அவள் முதுகு காட்டி நின்று கொண்டாள்... ஏனோ தெரியவில்லை அவளுக்குப் படபடவென்று வந்தது...

அவனோ அவளைக் கண்டு கொள்ளாதவனாய் மகளிடம் பேசி கொண்டிருந்தான்...

"அப்பா நீங்க எப்போ என்னைப் பார்க்க வர போறீங்க...?" என்று ஏக்கத்துடன் கேட்ட மகளைக் கண்டு அவன் பதில் தெரியாது விழித்தான்...

"என் ப்ரெண்ட்ஸ் கிட்ட எல்லாம் என் அப்பா தான் ஸ்மார்ட், குட்ன்னு உங்களைக் காட்டணும்... நீங்க சீக்கிரம் வாங்கப்பா..." என்று மகள் அழைக்க... அவனது விழிகளில் மீண்டும் கண்ணீர் நிரம்பியது...

"சீக்கிரமே வர்றேன் அம்மு..." என்று கூறியவன் அலைப்பேசியை அணைத்துவிட்டான்...

உடனே பரபரவென்று எழுந்தவன் அங்கிருந்த குளியலறை நோக்கி சென்றான்... நிஷிலா பயத்துடன் அவன் பின்னே சென்றாள்... அங்குச் சுவற்றில் மாட்டியிருந்த சிறு கண்ணாடியில் தனது முகத்தைப் பார்த்தவனுக்கு அத்தனை வேதனையாக இருந்தது... தன் மீதே அப்படியொரு கோபம் வந்தது...

கண்கள் இரண்டும் குழிக்குள் சென்றிருக்க, கண்ணைச் சுற்றி கருவளையம் விழுந்து, முகம் முழுவதும் புதர் போன்று மண்டியிருந்த தாடி என்று அவன் பார்ப்பதற்கு எப்படியோ இருந்தான்... இது அவன் இல்லை என்று அவனது மனம் கூக்குரலிட்டது... கழிவிரக்கம் மனதை கொன்றதில் அவன் ஆவேசமாகக் கண்ணாடியை உடைப்பதற்காகக் கையை ஓங்கி கொண்டு சென்றான்... நிஷிலா ஓடி வந்து அவனது கையைப் பிடித்துத் தடுத்தாள்...

"விடுடி என்னை..." என்று ஆவேசமாகக் கத்தியவனைக் கண்டு பயப்படாது,

"இப்போ என்ன நடந்து போச்சுன்னு இப்படி நடந்துக்கிறீங்க...?"

"இன்னும் என்ன நடக்கணும்...?" என்று குமுறலாய் வந்தது அவனது வார்த்தைகள்...

"நீங்க ஒத்துழைச்சா எண்ணி இரண்டு மாதம் தான் இந்தத் தோற்றத்தை மாத்திரலாம்... இதுக்கு எதுக்குக் கோபப்படுறீங்க...?"

"நடக்குமா...?" என்று சிறுபிள்ளையாய் ஏக்கத்துடன் கேட்டவனைக் கண்டு மனம் இரங்கியவளாய்,

"நடக்கும்... நல்லதையே நினைப்போமே..." என்று கூறியவள் அவனை வெளியில் அழைத்து வர...

"என்னோட ஒரு அடிக்கு நீ தாங்க மாட்ட... நீ என்னைத் தாங்கியபடி அழைச்சிட்டு போறியா...?" கோபமும், கேலியுமாய்க் கேட்டவனைக் கண்டு,

"உண்மை தான்... ஆனா ஆண்கள் உங்களை விடப் பெண்கள் எங்களுக்கு மனோபலம் அதிகம்..." என்றவளை உற்று பார்த்தவனுக்கு அவள் கூறியது சரியே என்று தோன்றியது...

அதற்கு மிகச் சரியான உதாரணம் அவள் தானே...

"உண்மை தான்..." என்று ஒத்து கொண்டவன் கட்டிலில் அமர்ந்தான்...

அப்போது அவனது பெற்றோர் அங்கு வந்தனர்... அவர்களைக் கண்டதும் முகம் மலர்ந்தவன்,

"நான் பேபி கூட..." என்று ஆரம்பித்தவன் மனைவியைப் பார்த்தபடி,

"தப்பு, தப்பு..." என்று கூறி புன்னகைத்தபடி,

"அம்மு கூடப் பேசினேன்ப்பா..." என்று உற்சாகமாய்க் கூற...

அவனது குரலில் இருந்த சந்தோசம் அந்தப் பெற்றோரை மகிழ்வித்தது...

"அப்படியா விஷ்ணு... ரொம்பச் சந்தோசம்..." என்ற சுந்தரபாண்டியனிடம் அவன்,

"அப்பா நாளைக்கு முதல் வேலையா இந்தத் தாடியை எடுக்கணும்..." என்று கூறினான்...

"எடுத்துட்டா போச்சு..." என்று கூறியபடி சிரித்தார் அவர்... அவரது சிரிப்பு மாமியார், மருமகளுக்கும் தொற்றிக் கொண்டது...

சிறிது நேரத்தில் மருந்தின் தாக்கத்தில் அயர்ந்து உறங்க துவங்கிய சிம்மவிஷ்ணுவை பார்த்தபடி அமர்ந்திருந்தனர் மூவரும்...

"நீ வந்து அவனைக் கவனிச்சிக்கிட்டதுக்கு அப்புறம் அவனிடம் நல்ல மாற்றம் தெரியுது நிஷாம்மா... அவனது கோபம் ரொம்பவும் குறைஞ்சு போச்சு... முன்ன மாதிரி போதை வேணும்ன்னு வெறி பிடிச்சுக் கத்துறது இல்லை... அப்படி வெறி வரும் போது அவனே இன்ஜெக்சன் போட சொல்லி கையை நீட்டிவிடுகிறான்..."

"எல்லாம் உங்க பேத்தியை பார்த்த பிறகு வந்த முன்னேற்றம் தான்... அதை விட உங்க மகனுக்கு மனவுறுதி அதிகம்... இதிலிருந்து மீளணும்ன்னு நினைக்கிறார்... அதுவும் ஆதிக்காக... அந்த எண்ணமே அவரை மீட்டெடுக்கும் அத்தை..." என்றவளை புரிதலுடன் பார்த்தார் மீனாட்சி...

"அது என்ன உங்க மகன்... உன் புருசன் இல்லையா...?" என்றார் அவர் கேலியாக...

அதைக் கேட்டு அவளது முகம் கறுத்துப் போனது...

"அது தான் தேவையில்லைன்னு அவரே சொல்லிட்டாரே அத்தை..." என்று கூறியவளின் கை தனது கழுத்தை தடவி

பார்த்தது... இப்போது மெல்லிய தங்க சங்கிலி மட்டுமே அவளது கழுத்தை அலங்கரித்திருந்தது...

அவளது பதிலில் அங்கே கனத்த மௌனம் நிலவியது...

"சரி அத்தை நான் வீட்டுக்கு கிளம்பறேன்... இன்னைக்கு நைட் நான் இங்கே தங்கிக்கிறேன்... நீங்க வீட்டுக்கு போய் அம்மு கூட இருங்க..." என்று அவள் கூற... அவர்கள் சரியென்றனர்...

மதியம் வீட்டிற்கு வந்த அன்னையிடம் மகள் தந்தையைப் பற்றியே அதிகம் பேசினாள்... ஆனால் 'தந்தை கூட நீ எப்படி இருந்தாய்...? அவரை நேரில் பார்த்தாயா...?' என்று துருவி துருவி கேள்வி கேட்டு தாயை தொந்திரவு செய்யவில்லை... அந்த மட்டும் நிஷிலா தப்பித்தாள்...

அன்றிரவு சிம்மவிஷ்ணுவுடன் அவள் தங்கி கொள்ள... பெரியவர்கள் பேத்தியை காண சென்றனர்... நிஷிலா உறக்கம் வராது கையோடு கொண்டு வந்திருந்த மருத்துவப் புத்தகத்தை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தாள்...

திடீரென்று சிம்மவிஷ்ணு வீறிட்டபடி எழுந்தான்... முகமெல்லாம் வியர்த்து வடிய, கண்கள் அங்கும் இங்கும் அலைபாய, கைகள் காற்றில் தடுமாற,

"ம்மா, மூச்சு மூட்டுதும்மா... ஒரே இருட்டா இருக்கும்மா..." என்று அவன் பயத்தில் அலறினான்...

அவனது அலறலில் அவள் புத்தகத்தை அப்படியே போட்டுவிட்டு அவனை நோக்கி சென்றாள்...

"என்னங்க, என்ன பண்ணுது...?" அவனது முகத்தைத் தனது கைகளில் தாங்கியபடி அவள் படபடப்புடன் கேட்க... அவளது முகத்தை உற்று பார்த்தவன் விழிகள் கலங்க,

"என்னை ஏன்ம்மா உங்களுக்குப் பிடிக்காம போச்சு...? என்னை ஏன்ம்மா கொன்னீங்க...? நான் என்ன பாவம்

பண்ணினேன்...? தீராவை போல் நானும் உங்க மகன் தானேம்மா..."

சின்னக் குழந்தை போன்று அவளிடம் கேட்டுக் கண்ணீர் வடித்த சிம்மவிஷ்ணுவை கண்டு முதலில் திகைத்து போன நிஷிலா பின்னர் அவன் கூறிய வார்த்தைகளின் அர்த்தம் புரிந்து அதிர்ந்து போனாள்...!!!

"உதிரத்தை பாலாக்கி ஊட்டி வளர்த்து,
உன் உயிரை கொடுத்து வளர்த்து,
நாலிரண்டு வருடங்கள் பாதுகாத்து வளர்த்து,
எல்லாம் என் மூச்சடக்கத் தானோ...?
என் உலகமே இருள்கிறது,
என் நம்பிக்கை தளர்கிறது,
என் அன்பு தகர்கிறது,
இறுதியில் என் மூச்சு நின்றது...
அன்று உடல்சுகம் பெரிதாய்,
இன்று பணசுகம் பெரிதாய்,
இடையில் என் நலம் அவலமாய்...!!!"

கொள்ளும்...!!!

'இது எப்படிச் சாத்தியம்...?' என்று நிஷிலா திகைத்து போனவளாய் அமர்ந்திருந்தாள்... சிம்மவிஷ்ணுவின் வாழ்க்கையில் என்ன நடந்தது? என்று அவளுக்குத் தெரியவில்லை... ஆனால் அவன் கூறிய 'தீராவை போல் நானும் உங்கள் மகன் தானே' என்கிற வார்த்தைகள் அவளது மனதினை வாள் கொண்டு அறுத்தது...

"மூச்சு முட்டுதே... கண்ணை இருட்டிக்கிட்டு வருதே..." என்று தனது கழுத்தை பிடித்தபடி அலறியவனைக் கண்டு செய்வதறியாது திகைத்தவள் பின்பு சுதாரித்துக் கொண்டு,

"விஷ்ணு இங்கே பாருங்க..." என்று தனது இரு கைகள் கொண்டு அவனது கன்னங்களைத் தட்ட... அவனோ அதை உணராதவனாய் அவளைப் பரிதாபமாகப் பார்த்தபடி,

"ஏம்மா என்னைக் கொன்னீங்க...?" என்று கேட்க...

அவனது குரலில் இருந்த தவிப்பு அவளது மனதினை துயரத்துடன் பிசைந்தது... விழிகள் கலங்க தாய்மை பெருக்கோடு அவனை அணைத்து கொண்டவள்,

"உங்களை யாரும் கொல்லலை... நான் அரசி அத்தை இல்லை... நான் நிஷிலா..." 'உங்க மனைவி' என்று வாய் வரை வந்த வார்த்தையை அவள் மென்று விழுங்கி கொண்டாள்...

அவளது அணைப்பு, அவனது முதுகை வருடிய அவளது கை கூறிய ஆறுதல் எல்லாம் சேர்த்து அவனது பதற்றத்தை கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைத்தது... முற்றிலும் பதற்றம் குறைந்ததும் மனைவியிடம் இருந்து விலகிய சிம்மவிஷ்ணு,

"நீ நல்லவள்... எனக்குத் தெரியும்..." என்று கூறியவன் தலைகுனிந்தபடி அமர்ந்திருந்தான்...

கடந்த காலத்தின் வேதனையின் வலியை மனம் சுமந்திருக்க அதை அப்படியே அவனது முகம்

பிரதிபலித்தது... அதை நினைத்து இப்போதும் அவனுக்கு உள்ளம் வலிக்கிறதே, மூச்சு திணறுகிறதே...

"தூங்குங்க..." என்று கூறியவளை ஏறிட்டு பார்த்தவன் இறைஞ்சும் குரலில்,

"இன்னைக்கு ஒருநாள் மட்டும் எனக்கு... போதை..." என்று தயங்கி நிறுத்தியவனை அழுத்தமாய்ப் பார்த்தவள்,

"உங்களுக்கு உங்க சுகம் முக்கியமா...? இல்லை ஆதி சந்தோசம் முக்கியமா...?" என்று மகளை முன் வைத்து அவள் கேள்வி எழுப்பினாள்...

"ஆதி தான்..." என்று முனங்கியவன் மெல்ல படுக்கையில் படுத்துக் கொண்டான்...

அவள் அவனைப் பார்த்தபடி கட்டிலில் அமர்ந்திருந்தாள்... அப்போது அவனது விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது... அதைக் கண்டதும் அவள் பதறி போய் அவன் அருகில் சென்று,

"இது என்ன சின்னப்பிள்ளை மாதிரி..." என்று கடிந்தபடி அவனது கண்ணீரை துடைத்தாள்...

அவளுக்குத் தெரியாதே இப்போது அவன் எட்டு வயது பாலகன் மனநிலையில் இருக்கிறான் என்று...

அவளது வரவை உணர்ந்தவன் பெரும் கேவலோடு அவளது மடியில் படுத்து முகம் புதைத்துக் கொண்டான்... அவனது முதுகு குலுங்கியதில் இருந்து அவன் அழுகிறான் என்பதை உணர்ந்தவள் அவனது தலையை வருடி ஆறுதல் அளித்தாள்... அவனை எப்படித் தேற்றுவது? என்று அவளுக்குத் தெரியவில்லை... அவளது ஆறுதலில் அவனது அழுகை தேம்பலாய் மாறி பிறகு நின்றே போனது... அவளது சுகமான தலைகோதலில் அவன் தன் துயர் களைந்து நிம்மதியாக உறங்க ஆரம்பித்தான்...

நிஷிலா அவனைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்... சிம்மவிஷ்ணு இளவரசியைப் பற்றிக் கூறிய ஒவ்வொரு

வார்த்தையும் அவளது காதுகளில் ஒலித்தது... அதே சமயம் அவனுக்கும், இளவரசிக்கும் என்ன சம்பந்தம்? என்று அவளுக்குத் தெரியவில்லை... அவன் அவளது வாழ்வில் வந்து போன பிறகு இளவரசிக்கு நிஷிலாவும் எதிரியாகி போனாள்... அவர் அவளுக்கு எத்தனை துன்பங்களை விளைவித்தார் என்பது அவளுக்கு மட்டும் தானே தெரியும்...

அவன் கூறிய 'மகன்' என்கிற வார்த்தையைப் பற்றிக் கொண்டு மேலே விசாரிக்க அவள் முடிவு செய்தாள்... ஆனால் அவள் கனவிலும் நினைக்காத பந்தம் ஒன்று அவர்களுக்கு இடையில் இருப்பதை அவள் தெரிந்திருக்கவில்லை... அறிந்த ஒன்று தான், ஆனால் அதன் பின்னணியில் அவள் அறியாத வேறொரு ரகசியம் இருந்தது...

அவனை மடி தாங்கி அமர்ந்திருந்தவள் அப்படியே உறங்கிவிட்டாள்... மறுநாள் காலையில் கண்விழித்தவள் எழ முற்பட்ட போது மடியில் பாரமாய் உணர்ந்து குனிந்து பார்க்க அப்போது தான் கணவன் தனது மடியில் படுத்துத் துயின்றது நினைவிற்கு வந்தது... அவள் மெல்ல அவனது தலையை நகர்த்தித் தலையணையில் வைக்கும் போது அவன் விழித்துவிட்டான்...

அவனுக்குமே அப்போது தான் மனைவியின் மடியில் தான் படுத்துறங்கியது நினைவிற்கு வந்தது... சிறிது சங்கடமும், வெட்கமுமாய் நிமிர்ந்தவன்,

"சாரி..." என்றபடி எழ... அவள் புன்னகையுடன் அவனைப் பார்த்தவள் பின்பு முகம் சிவக்க தலைகுனிந்து கொண்டாள்... தர்மசங்கடமான மௌனம் இருவரிடத்திலும் நிலவியது...

அதைத் தவிர்க்க எண்ணியவளாய் அவள் குளியலறைக்குச் செல்ல... அவன் நிம்மதி பெருமூச்சு விட்டபடி ஜன்னல் பக்கம் வந்து நின்றான்... காலை நேர குளிர் காற்று முகத்தின் மீது வருடி சென்றது... அவனது கனத்த மனம் லேசாகி புத்துணர்வு பெற்றது...

நிஷிலா குளியலறையில் இருந்து வெளிவரவும், அவனது பெற்றோர் உள்ளே வரவும் சரியாக இருந்தது... மருமகளைப் பார்த்து புன்னகைத்த மீனாட்சி,

"ஆதி நல்லா வளர்ந்துட்டா இல்லையா நிஷா...? ரொம்ப நல்லா பேசுகிறாள்... அதே சமயம் பொறுப்பும் கூட..." என்று பேத்தியை பற்றிச் சிலாகித்துக் கூற...

"அம்மு என்னைப் பத்தி கேட்டாளாம்மா...?" என்று ஆர்வமாய்க் கேட்டபடி அவன் அன்னை அருகில் வந்தான்...

"ஆமாம் விஷ்ணு... இப்போ கிளம்பி வரும் வரை உன்னைப் பத்தி தான் ஒரே பேச்சு..." என்று அவர் மகனை கட்டிலில் அமர வைத்து விட்டு தானும் அவனுடன் அமர்ந்து பேத்தியை பற்றிக் கூறலானார்...

இருவரையும் பார்த்தபடி நின்றிருந்த சுந்தரபாண்டியனின் அருகில் வந்து நின்ற நிஷிலா, "அத்தைக்கு மகன்னா ரொம்ப இஷ்டமோ...?" என்று கேட்க...

"ஆமாம்மா... அவனை உண்டான நாளில் இருந்து பெத்துக் கையில் தூக்கி, வளர்த்து ஆளாக்கி இதோ இந்த நொடி வரை அவன் தான் அவளது உயிர்... நான் கூட அவளது உயிர் இல்லைன்னா பார்த்துக்கோ..." என்று கூறியவரின் குரலில் பெருமை நிறைந்து வழிந்தது...

அவரது வார்த்தையில் அவள் குழம்பி போனவளாய் நின்றிருந்தாள்... இவர்கள் இருவரும் அவனது பெற்றோர் என்றால், இளவரசி அவனுக்கு யார்...? அவர்கள் இருவருக்கும் என்ன சம்பந்தம்? என்று யோசித்து யோசித்து அவளது தலை வலித்தது... மகன் என்கிற உறவை வைத்துக் கொண்டு இதை எப்படிக் கண்டுபிடிப்பது? என்று தெரியாது அவள் விழித்தாள்... இந்த உறவு சிக்கலை பற்றித் தெரிந்தால் தான் அவனுக்கு மேலே சிகிச்சை அளித்து முழுவதும் குணப்படுத்தி மூளைக்கட்டி அறுவை சிகிச்சைக்கு அவனைத் தயார்படுத்த முடியும்...

தனக்குள் யோசித்தபடி மூவரிடமும் விடைப்பெற்று அவள் வீட்டிற்குக் கிளம்பினாள்... அவளது குழப்பமான முகத்தை அவன் பார்த்துவிட்டான்... அவனது மனம் யோசனையில் ஆழ்ந்தது...

நிஷிலா வீட்டிற்கு வந்த போது ஆதிரை பள்ளிக்கு கிளம்பி சென்றிருந்தாள்... பவித்ரனும், துளசியும் மட்டுமே அங்கு இருந்தனர்...

"உனக்காகத் தான் வெய்ட்டிங் நிஷி..." என்ற பவித்ரனை புரியாது பார்த்தாள் நிஷிலா...

"விஷ்ணுவை பார்க்க நாங்க வரலாம்ன்னு இருக்கோம்..." என்றவனைத் திகைப்புடன் பார்த்தவள் பின் தயங்கியபடி,

"அவங்களுக்கு விருப்பமான்னு கேட்டீங்களா...?"

"அதெல்லாம் கேட்டாச்சு..." என்று சிரித்தவனைக் கண்டு நிம்மதியுற்றவளாய்,

"பத்து நிமிசத்தில் கிளம்பி வர்றேன்..." என்றவள் தனது அறையை நோக்கி சென்றாள்...

சொன்னது போல் கிளம்பி வந்தவளுடன் பவித்ரன், துளசி இருவரும் மருத்துவமனைக்குக் கிளம்பினர்... அங்குச் சிம்மவிஷ்ணு இருந்த அறைக்குள் பவித்ரன், துளசி சாதாரணமாக நுழைந்தனர்... ஆனால் நிஷிலாவிற்குத் தான் கால்கள் பின்னி கொண்டது... ஏனெனில் சிம்மவிஷ்ணு முகச்சவரம் செய்து பழைய மாதிரி அழகாக மாறியிருந்தான்... உடல் மெலிந்திருந்த போதும் அவனது கம்பீரம், தோரணை சிறிதும் மாறவில்லை...

பழைய சிம்மவிஷ்ணுவை ஞாபகப்படுத்தியவனின் பார்வையில் அவளது நடை தடுமாறியது... தன்னையே பார்த்திருந்த அவனது பார்வையில் மேனியெல்லாம் ஏதோ செய்தது... முன்பு அருவருப்பாய் தோன்றிய அவனது பார்வை இன்று அவளுள் வேறொரு உணர்வினை தோற்றுவித்தது... மனோதத்துவ மருத்துவரான அவளால் கூட அதை உணர்ந்து கொள்ள முடியவில்லை...

"விஷ்ணு எப்படியிருக்கீங்க...?" என்று கேட்ட பவித்ரனிடம்,

"நல்லாயிருக்கேன்..." என்ற சிம்மவிஷ்ணு,

"அம்முவை அப்பா இல்லாத குறை தெரியாமல் பார்த்துக்கிட்டதுக்கு ரொம்பத் தேங்க்ஸ் தீரா..."

"அவள் என் குட்டிம்மாவோட மகள்... அவளைப் பார்த்து கொள்வதை விட எனக்கு வேறு என்ன வேலை இருக்கிறது...? எனக்குத் தேங்க்ஸ் சொல்லி என்னை அந்நியப்படுத்தாதே..."

"நீ உன் அப்பாவை போல் ரொம்ப நல்லவன்..." என்று கூறி சிம்மவிஷ்ணு சிரித்தான்...

சிறிது நேரம் பேசியிருந்துவிட்டு பவித்ரன், துளசி கிளம்பினர்... சுந்தரபாண்டியன் பவித்ரனுடன் பேசியபடி அவர்களுடன் வெளியில் சென்றார்... தானும் அங்கிருந்து நழுவ பார்த்த நிஷிலாவின் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினான் சிம்மவிஷ்ணு... மகனது செயலில் நாணம் கொண்டு மீனாட்சி வெளியில் சென்றுவிட்டார்...

"கையை விடுங்க..." அவனது செயலில் திகைத்த நிஷிலா அவனது பிடியில் இருந்து தனது கையை உருவி கொள்ள முயற்சித்தாள்...

"நான் எப்படியிருக்கேன்னு சொல்லு...? விடுறேன்..." என்று அவன் பிடிவாதம் பிடித்தான்...

"அது எதுக்கு...?" என்று பதில் சொல்லாது தப்பிப்பதில் அவள் குறியாய் இருக்க...

"சொல்லு..." என்று அவன் விடாது பிடிவாதம் பிடிக்க...

அவன் முகத்தை உற்று நோக்கிய நிஷிலாவினுள் பழைய குறும்பு தலை தூக்கியது...

"சுமாரா இருக்கீங்க..." என்று வலதுகையை ஆட்டியபடி கேலியாய் கூறியவளை கண்டு அவனது முகத்தில் விசம புன்னகை வந்தமர்ந்தது...

"என்னை நல்லா பார்த்து சொல்லு... முன்பொரு நாள் இது மாதிரி உன் முன்னாடி வந்து நின்ற என்னைப் பார்த்து நீ ஆவென வாயை பிளந்தது உன் ஞாபகத்தில் வரலையா...?" குறும்புடன் கேட்டவனைக் கண்டு அதிர்ந்து போனவளாய் அவள் அவனைக் கவனித்துப் பார்த்தாள்...

முன்பொரு நாள் அவளது பயிற்சி வகுப்பிற்கு 'ஸ்டைலிஷ் லுக்'கோடு வந்த சிம்மவிஷ்ணுவை போன்று இருந்தவனைக் கண்டு அவள் இமைக்க மறந்து பார்த்திருந்தாள்...

அவளது பார்வையை உணர்ந்து அவன் மகிழ்ச்சியோடு, "இது... இது தான் நான் எதிர்பார்த்தது..." என்று கூறி அட்டகாசமாய்ச் சிரித்தான்... வாய்விட்டு சிரிக்கும் அவனைத் தாயின் வாஞ்சையுடன் பார்த்திருந்தாள் அவள்...

அவனுடன் மருத்துவமனையில் இருந்த இத்தனை நாட்களில் அவனில் இத்தனை மலர்ச்சியை அவள் இதுவரை பார்த்தது இல்லை... தலைவலி மற்றும் போதையின் தேவை என்று அவன் தன்னை மறந்து வேதனையில் கத்துவது தான் அதிகம் இருக்கும்... மகளைப் பற்றிப் பேசும் போது மட்டுமே அவன் அவனாக இருந்தான்... அதுவும் ஒருநாளில் சில மணித்துளிகளே... இப்போது அவனது மகிழ்ச்சி கண்டு அவள் தானும் மகிழ்ந்தவளாய் நின்றிருந்தாள்...

"நிலா..."

"சொல்லுங்க..."

"அப்போ ஏன் உன் முகம் ஒரு மாதிரியா மாறியது...?"

"எப்போ...?" அவளுக்குப் புரியவில்லை...

"அம்மா ஆதியை பத்தி என் கிட்ட பேசும் போது..."

அப்போது அவள் அவனுக்கும், இளவரசிக்குமான உறவை பற்றி அல்லவா யோசித்துக் கொண்டிருந்தாள்... அதை அவனிடம் சொல்லாது மறைத்தவள்,

"நைட் நீங்க ஏன் அப்படி நடந்துக்கிட்டீங்கன்னு யோசிச்சிட்டு இருந்தேன்..."

அதற்கு அவனிடம் பதிலில்லை... அமைதியாக இருந்தான்... அவனின் அமைதியை கண்டு அவள் ஆறுதலாய் தனது கையை அவனது தோளில் வைத்தாள்... அவளது செயலில் அவனது முகத்தில் பளீரென்ற புன்னகை பளிச்சிட்டது...

****************

"குட்ஈவினிங் டாக்டர்..."

"வாம்மா நிஷிலா... உட்கார்..." என்று புன்னகையுடன் அவளை வரவேற்ற மனோதத்துவ மருத்துவ நிபுணர் ஆபிரகாம் அவளது ஆசிரியர்... அவளது நல்வழிகாட்டி, குரு... சுருக்கமாகச் சொன்னால் அவர் அவளது துரோணாச்சாரியார்...

"டாக்டர், உங்க கிட்ட ஒரு சந்தேகம் கேட்கலாம்ன்னு வந்தேன்..." என்றவள் நேரே விசயத்திற்கு வந்தாள்...

"சொல்லும்மா..."

சிம்மவிஷ்ணுவை பற்றித் தான் சந்தேகிப்பதை அவரிடம் அப்படியே கூறியவள், "அவரோட அப்பா, அம்மா மாமா, அத்தை தான்... அதில் எந்தவித சந்தேகமும் இல்லை... ஏன்னா அவர் அப்படியே மாமாவோட ஜாடை... ஆனா அவர் ஏன் என்னுடைய அத்தையை அம்மான்னு சொல்கிறார்...? அதே போல் அவரை வைத்து என் அத்தைக்கு என்னைப் பிடிக்காமல் போனது... இவங்க ரெண்டு பேருக்கும் இடையில் என்ன சம்பந்தம் இருக்கும்...? இந்தச் சம்பந்தத்தில் சம்பந்தமே இல்லாத நான் இதில் இழுக்கப்பட்டு இருக்கேன்... நீங்க தான் இதற்கான புதிரை விடுவிக்கணும்..." என்று கெஞ்சி கேட்டுக் கொள்ள...

தான் அணிந்திருந்த கண்ணாடியை கழற்றி மேசை மீது வைத்த ஆபிரகாம் தனக்குள் யோசித்தபடி சிறிது நேரம் இருந்தவர் பின்பு,

"பேஷண்ட்டை பார்க்காம எதுவும் சொல்ல முடியாது... நீ சொல்றதை வச்சு பார்க்கும் போது உன் அத்தையால் அவர் பாதிக்கப்பட்டு இருக்கலாம்... அந்தப் பாதிப்பை நாம் தெரிஞ்சுக்கிறதுக்கு ஒண்ணு அவரா சொல்லணும், இல்லை உன் அத்தை சொல்லணும்..."

"இப்போதைக்கு இரண்டுமே சாத்தியமில்லை டாக்டர்..."

"இதைத் தெரிஞ்சு நீ என்ன பண்ண போகிற நிஷிலா...?"

அவரது கேள்வி அவளைக் கூர்மையாய்த் தாக்கியது... இனியும் எதையும் மறைத்து வைத்துப் பிரயோஜனம் இல்லை என்பதை உணர்ந்தவளாய் அவள் சிம்மவிஷ்ணு தனது வாழ்க்கையில் நுழைந்த விதத்தைத் துயரத்துடன் கூறலானாள்...

"அவரோட இந்த நிலைக்கு நானும் ஒரு காரணம்... அதை விட ஏதோ ஒரு சம்பவம் அவரது ஆழ்மனதில் இருந்து அவரை வருத்திக்கிட்டு இருக்கு... இதிலிருந்து அவரை மீட்காவிட்டால் கூடிய விரைவில் அவர் ஒரு மனநோயாளியா மாறுவதற்கான வாய்ப்பு அதிகம் இருக்கு... ஏற்கெனவே ட்ரக் அடிக்ட்... இப்போ இது போல் நடந்தால்...? அதைத் தாங்கி கொள்ளும் சக்தி யாருக்கும் இல்லை... என் மகளுக்காகவாவது அவர் பழையபடி மீண்டு வரணும்... அந்த நினைவு வரும் போது அவரது கண்ணில் தோன்றும் வேதனை, வலியை என்னால் கண் கொண்டு பார்க்க முடியலை..." என்று வேதனை குரலில் கூறியவளை ஆழ்ந்து பார்த்த ஆபிரகாம்,

"உன் கணவரை நீ நேசிக்கிறியா...?" என்று புன்னகையுடன் வினவ...

"இல்லை டாக்டர்... என்னுடைய செயல் ஒரு மனிதாபிமானமுள்ள செயல் மட்டுமே... என் மகளுக்கு நல்ல தந்தையாய், அவரோட பெற்றோருக்கு நல்ல மகனாய் அவர் இருந்தா போதும்..."

"உனக்கு நல்ல கணவனா இருக்க வேண்டாமா...?"

அவரது வார்த்தையில் அவளது மேனி தூக்கிவாரி போட்டது...

"வேண்டாம் டாக்டர்... முடிந்து போன உறவு முடிந்து போனதாகவே இருக்கட்டும்..." என்று அவள் முடிவாய் முடித்துக் கொண்டாள்...

"ஓகே... அது உன் விருப்பம்..." என்றவர் சிகிச்சையைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்...

"நீ சொல்வதை வைத்து பார்க்கும் போது விஷ்ணுவுக்கும், உன் அத்தைக்கும் இடையில் பூர்வஜென்ம பந்தம் ஏதும் இருக்குமோன்னு சந்தேகமாக இருக்கிறது..."

அவளுக்கும் அந்தச் சந்தேகம் இருந்தது... இந்தப் பிறவியில் சிம்மவிஷ்ணு யாரோ...? இளவரசி யாரோ...? எந்தவொரு சம்பந்தமும் இல்லை... அவளும் எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்து பார்த்துவிட்டாள்... பிறப்பு முதல் தொழில் வரை எந்தத் தொடர்பும் இருவருக்கும் இடையில் இருந்தது இல்லை... அப்படி என்றால் இதில் வேறு ஏதோ ஒன்று இருக்கிறது என்று அவளுக்குத் தோன்றியது... இப்போது அவளது குரு கூறியதும் அதை அவள் அப்படியே ஏற்றுக் கொண்டாள்...

"இதைப் பத்தி நாம தெரிஞ்சிக்கிறதுக்கு அவரை ஹிப்னாடிசம் செய்து அவரது ஆழ்மனதின் உணர்வுகளை வெளிக்கொண்டு வரணும்... அதைப் பற்றி நான் உனக்கு விளக்கமாகச் சொல்கிறேன்..."

அதை அவளும் உணர்ந்தே இருந்தாள்... ஆனால் இது பற்றி அவள் இப்போது தான் படித்துக் கொண்டிருக்கிறாள்... அவர் கூறும் விசயங்கள் அவளுக்கு உபயோகமாக இருக்கும் என்றெண்ணியவளாய் அவரது கூற்றைக் கவனமாகச் செவிமெடுக்க ஆரம்பித்தாள்...

"ஹிப்னோ தெரப்பியில் இரண்டு மனசை டீல் செய்கிறோம்... ஒண்ணு வெளிமனம்... அது அலைபாயும் குணமுடையது... முதலில் அதைக் கட்டுப்படுத்த

வேண்டும்... அதைக் கட்டுப்படுத்திய பிறகு சப் கான்சியஸ் மைன்ட் என்கிற உள்மனதை கட்டுப்படுத்த வேண்டும்... ஏனெனில் நம்முடைய அனைத்து குணாம்சங்களுக்கும், மனோநிலைக்கும் உள்மனம் தான் காரணம்... வெளிமனதை கட்டுப்படுத்துவது என்பது ஹிப்னோ தெரப்பி முறையில் ரிலாக்ஸ் செய்ய வைப்பது, சற்றே மனதை தளர்த்துவது... அதன் பிறகு தான் நாம் உள்மனதை அணுகுகிறோம்... இதைத் தான் ஹிப்னாடிசம் என்கிறோம்..."

"ஹிப்னாடிசம் என்பது நம் மனம் எனும் கண்ணுக்கு தெரியாத உணர்வு மண்டலம் எனப்படும் ஒரு உடலுக்குள் சென்று ஆராய்வது..."

"இரண்டுக்கும் வேறுபாடு இருக்கிறதா டாக்டர்...? அதாவது ஹிப்னோ தெரப்பி, ஹிப்னாடிசம் இரண்டுக்கும்..."

"நிச்சயம் இருக்கு... வெளிமனதை அமைதிப்படுத்தி உள்மனதை அணுகுவது ஹிப்னாடிசம்... ஹிப்னோ தெரப்பி என்பது உள்மனசோட பிரச்சினைகளைத் தெரிந்து கொண்டு அதற்கான கட்டளைகளிட்டு நோயை தீர்க்கிறது... இதைத் தவிர மூன்றாவது ஒன்று இருக்கிறது... இது புதை மனம்... இதனுள் செல்லும் போது தான் முற்பிறவி பற்றிய ஆய்வு மேற்கொள்ள முடியும்... உன் கணவருக்கு இருக்கும் பிரச்சினை நிறையப் பேருக்கு இருக்கிறது... ஒரு பெண்ணிற்குத் தண்ணீரை கண்டால் அவ்வளவு பயம்... மழையில் கூட நனைய பயப்படுவார்... அவரை ஹிப்னாடிச உறக்கத்தில் ஆழ்த்தி முற்பிறவி ஆய்வினை மேற்கொண்ட போது போன ஜென்மத்தில் அவர் கடலில் சென்று கொண்டிருந்த போது படகு கவிழ்ந்து தண்ணீரில் மூழ்கி இறந்தார் என்பது தெரிய வந்தது... அது போல் தான் உன் கணவருக்கும் போன ஜென்மத்தில் இப்படி ஏதாவது ஒரு சம்பவம் நடந்திருக்கலாம்... அதன் விளைவு தான் அவர் அப்படிப் பயத்தில் அலறியதாகக் கூட இருக்கலாம்..."

"எல்லாமே அனுமானம் தான்... அவரை ஆய்வுக்கு உட்படுத்தும் போது தான் என்ன காரணம் என்பது தெரிய

வரும்... எதுவாக இருந்தாலும் அதை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும் நிஷிலா..." என்று நிறுத்தியவரை பார்த்து,

"நிச்சயமாய் டாக்டர்... அவர் நல்லபடியா குணமடைந்தால் போதுமானது..." என்றாள் அவள் உறுதியாக...

"இதற்கு அவரது ஒத்துழைப்பு வேண்டும்..."

"நிச்சயம் அவர் ஒத்துழைப்பார் டாக்டர்..." என்று நம்பிக்கையுடன் கூறியவள் அவரிடம் இருந்து விடைபெற்று சென்றாள்...

முதலில் அவள் இந்த விசயத்தைச் சிம்மவிஷ்ணுவின் பெற்றோரிடம் கூறினாள்... மீனாட்சி அதைத் தீவிரமாக மறுத்தார்...

"என் மகன் ஒண்ணும் பைத்தியம் இல்லை... அவனுக்கு எதுக்கு இந்த மாதிரி வைத்தியம் எல்லாம்..." திட்டவட்டமாக அவர் மறுத்தார்...

"அத்தை மனசு விட்டு பேசுவதால் அவரோட ஸ்ட்ரெஸ் குறையும் அவ்வளவே... வேறு ஒண்ணும் பயப்படுவதற்கு இல்லை..."

நல்லவேளையாக அவள் ஹிப்னாடிசம் பற்றி அவரிடம் கூறவில்லை...

"ஆமாம் மீனா... விஷ்ணு ஆபரேசனுக்குப் போகும் போது நல்ல மனநிலையுடன் போகணும்... அப்போ தான் அவன் தைரியமாக எமனோடு போராட முடியும்... அது போக ட்ரக் அடிக்சனுக்கு எல்லாம் இந்த மாதிரி ட்ரீட்மெண்ட் அவசியம் தேவை..."

கணவர் கூறியதும் மீனாட்சி மறுப்பு தெரிவிக்காது அமைதியாகி போனார்... அதே போல் சிம்மவிஷ்ணுவிடம் விசயத்தைக் கூறியதும் அவன் மறுப்பு எதுவும் தெரிவிக்காது உடனே சம்மதித்தான்... ஆச்சிரியமாகப் பார்த்தவளை கண்டு,

"நான் நிறைய நாள் உயிர் வாழ்கிறேனோ இல்லையோ... அது எனக்குத் தெரியாது... ஆனா வாழும் கொஞ்ச நாட்களில் என் மகளோடு சந்தோசமா வாழணும்... அதுக்காக நான் என்ன வேணும்ன்னாலும் செய்வேன்..." என்றவனின் உறுதி அவளை மெய்சிலிர்க்க வைத்தது...

மறுநாளே நிஷிலா சிம்மவிஷ்ணுவை ஆபிரகாமிடம் அழைத்துச் சென்றாள்... அவர் அவனை வரவேற்று நட்புடன் சாதாரணமாகப் பேசி கொண்டிருந்தார்... அன்று அவனிடம் நட்புரீதியாகப் பேசிவிட்டு அனுப்பிவிட்டார்... தொடர்ந்து ஒரு வாரம் அவனுடன் தோழமையுடன் பேசி அவனது மனதிற்கு நெருக்கமாக மாறியவர் அதன் பிறகே தனது சிகிச்சையை ஆரம்பித்தார்...

சிம்மவிஷ்ணுவை ஹிப்னாடிசம் பண்ணும் போது நிஷிலாவையும் உடன் வைத்துக் கொண்டார்... அவனது மனதில் இருப்பதை அவள் அவசியம் அறிந்து கொள்ள வேண்டும் என்று... அதே போல் அவளது மேற்படிப்பிற்கு இது உதவும்...

ஆழ்மயக்க நிலைக்குச் சென்ற சிம்மவிஷ்ணுவிடம் கேள்விகள் கேட்கப்பட்டது... அவன் பதில் ஒவ்வொன்றாகக் கூறிக் கொண்டே வந்தான்... அதைக் கேட்க கேட்க நிஷிலா அதிர்ச்சியில் உறைந்தாள்... ஆபிரகாமோ எதையும் காட்டி கொள்ளாது ஒரு மருத்துவராய் அவனுக்குச் சிகிச்சை கொடுத்துக் கொண்டிருந்தார்...

அவளது வீட்டினரின் அன்பான வெளிமுகத்திற்குப் பின் இவ்வளவு கொடூரமான முகம் ஒளிந்து இருக்கிறதா? என்று அவள் உள்ளம் குமைந்து போனாள்... அத்தை, தந்தை, சின்னத் தந்தையை நினைத்து அவளது மனம் வெதும்பி போனது... எட்டு வயது பாலகனான சிம்மவிஷ்ணுவை நினைத்து அவள் வேதனை கொண்டாள்... அவனது வலி கண்டு அவள் துடிதுடித்துப் போனாள்...

அந்தக் கணம் மாடசாமியை எங்கோ பார்த்தது போலிருக்கிறது என்று தான் நினைத்தது அவளுக்கு ஞாபகம் வந்தது... அவர் இசக்கிமுத்துவின் ஜாடையில்

இருந்தார்... அதனால் தான் அவளுக்கு அப்படித் தோன்றியிருக்கிறது... இப்போது அவளுக்கு எல்லாம் புரிந்தது... சிம்மவிஷ்ணுவிற்கும், தங்களுக்கும் என்ன சம்பந்தம்? என்று...

"கொஞ்ச நேரத்தில் அவர் எழுந்துவிடுவார்... பயப்பட வேண்டாம்..." என்ற ஆபிரகாமை அவள் நன்றியுடன் பார்த்தாள்...

"அவர் மனசில் இருப்பது தெரிஞ்சிருச்சு இல்லையா...? இனி நீ அவருக்கு ட்ரீட்மெண்ட் கொடுப்பது மிகவும் எளிது..."

"சரி டாக்டர்... இனி நான் அவரைப் பார்த்துக்கிறேன்..." என்றவள்,

"ரொம்பத் தேங்க்ஸ்..." என்றாள்...

"இதற்கு என்ன செய்யப் போகிற...?"

"தவறு செய்தவர்கள் தண்டனை அனுபவித்துத் தான் ஆகவேண்டும் டாக்டர்... அது யாராக இருந்தாலும்..." என்றாள் அவள் தீவிரமான குரலில்...

"அது சரி தான்..." என்றவரை கண்டு,

"இதை யாரிடமும் சொல்ல வேண்டாம்..." என்று கேட்டு கொண்டாள் அவள்...

"நிச்சயம் யாரிடமும் சொல்ல மாட்டேன்..." என்று புன்னகைத்தபடி அவர் சென்றுவிட்டார்...

கண்மூடி படுத்திருந்த சிம்மவிஷ்ணு நிஷிலாவின் கண்களுக்கு அநாதரவாய் நிற்கும் எட்டு வயது சிறுவனாகத் தெரிந்தான்... அவனது ஆழ்மனதின் ஓலங்களை அறிந்து கொண்டவள் மனம் கனக்க அவனது தலையை வருடி கொடுத்து அவனது நெற்றியில் முத்தமிட்டாள்... அவளது செயலில் சிறிதும் காதல் கிடையாது... காமம் கிடையாது... மாறாகத் தாய்மை நிறைந்து வழிந்தது...

அவனது முகத்தோடு முகம் வைத்து புதைந்தவளின் விழிகளில் இருந்து கண்ணீர் விடாது வழிந்தது... அன்று அவன் செய்த செயல் அனைத்தும் தவறாகத் தெரிந்தது... அவனைக் காமுகனாகச் சித்தரித்தது... ஆனால் அதன் பின்னே ஒரு சிறுவனின் மனவலி இருப்பதை இப்போது அவள் உணர்ந்து கொண்டாள்... தன்னை வேண்டாமென்று தூக்கி எறிந்த வீட்டினுள் தனது வாரிசை அனுப்பித் தனது காயம்பட்ட மனதினை ஆற்ற அவன் நினைத்திருக்கிறான்...

அவனளவில் அவன் செய்தது எல்லாம் சரியே... அவளைக் கடத்தியது சரியே... அவளைத் திருமணம் செய்தது சரியே... அவளுடன் வாழ்ந்தது சரியே... இவை எல்லாவற்றையும் விட அவளுக்கு ஒரு வாரிசு தந்தது மிகச் சரியே... அவனை வேண்டாம் என்று ஒழித்தவர்களின் வீட்டு வாரிசின் வயிற்றில் அவனின் வாரிசை தந்தது தவறே இல்லை என்று அவளுக்குத் தோன்றியது...

'நீ பெண் தானா?', 'நீ விபச்சாரி' என்று கூறிய அவனது வார்த்தைகள் அனைத்தும் இப்போது அவளுக்குச் சரியாகவே தோன்றியது... அன்று அவனின் தேவை ஒரு பெண், அதுவும் அந்த வீட்டுப் பெண்... வெறுக்கும் வீட்டினரின் பெண்ணுடன் கூடும் கூடல் விபச்சாரத்திற்குச் சமமானது தான்... மனம் வெறுத்து கூடும் கூடல் பெண்ணுக்கு மட்டுமல்ல ஆணுக்கும் அவமானம் தான்... அவனுக்கும் அது கேவலம் தான்... அவனுக்கும் அது விபச்சாரம் தான்...

சிம்மவிஷ்ணு தன்னுடன் வாழ்ந்தது தனக்கு மட்டுமல்ல அவனுக்கும் நரகம் தான் என்பதை இப்போது அவள் புரிந்து கொண்டாள்... அவன் நினைத்திருந்தால் அவர்களது உறவை முறையாக அங்கீகரிக்காது இருந்திருக்கலாம்... அப்படியிருந்தும் அவளை மட்டுமே திருமணம் செய்து, அவளை மட்டுமே மனைவியாக ஏற்று, மனதின் வன்மத்தை அவளிடம் மட்டுமே வெளிப்படுத்தி இருக்கிறான்... பழிவெறியில் அவன் ராவணனாக மாறினாலும் அவளிடம் இராமனாகத் தான் நடந்து கொண்டான்... இன்றுவரை இராமனாகத் தான் வாழ்ந்து வருகிறான்... இதோ இந்தக்

கணம் கூட அவன் அவளுக்காக, அவளுக்கு இழைத்த தவறுக்காகப் பத்து வருடங்கள் சிறையில் கழித்துவிட்டு நோயாளியாகத் திரும்பி வந்திருக்கிறான்...

தன் குடும்பத்தாரால், தன்னால் அவன் அடைந்த துன்பம் கொஞ்சம் நஞ்சமல்ல... இனியாவது அவன் நினைப்பது நடக்க வேண்டும்... அவன் சந்தோசமாக இருக்க வேண்டும்... அவனுக்குத் தான் இழைத்த துரோகத்திற்கு அவள் தன்னையே அவனுக்கு அடிமை சாசனம் எழுதி வைக்கத் தீர்மானித்தாள்...

அவனது மனக்காயத்தை ஆற்றுவதற்காக அவள் தான் காயப்படத் தயாரானாள்... அவனை மனிதனாக மாற்றுவதற்காக அவள் மனிதம் போற்ற தயாரானாள்... இதுவும் ஒருவித அறுவை சிகிச்சை தான்...

"ஐயம் ரியலி சாரி..." அவளது இதழ்கள் அவனிடம் மனமார மன்னிப்பு கேட்டது...

அன்று அவன் செயல்படுத்த நினைத்து தவறி போன செயல் வெற்றியடையவதற்காக இன்று அவள் அவனுக்கு உறுதுணையாக, பக்கபலமாக இருக்கப் போகிறாள்...!!!

"வானில் வட்டமிடும்
வல்லூறுக்கு பயந்து,
தாயிடம் அடைக்கலம்
புகும் சேய் குஞ்சு அவன்,
இங்குத் தாயே வல்லூறாய் மாறி
சேயை தாக்கியது ஏனோ???
அவன் வன்மம் நியாயம்,
அவன் பழிவெறி நியாயம்,
அவன் குரோதம் நியாயம்,
அவன் செயல் நியாயம்,
அவள் மட்டுமே இங்கு அநியாயம்,
அநியாயம் களைந்து நியாயம் வென்றிட,
அடிமை சாசனம் எழுதிட
நினைத்தாள் பாவையவள்...
காதலியாய் அல்லாது,

மனைவியாய் அல்லாது,
மனிதம் போற்றும் மங்கையாய்...!!!"

கொள்ளும்...!!!

எப்போதும் போல் கண்விழித்த சிம்மவிஷ்ணுவிற்கு உடல் எல்லாம் அடித்துப் போட்டது போல் வலித்தது... தலையெல்லாம் பாரமாகியது போன்றதொரு உணர்வு... விழிகளைச் சிரமப்பட்டுத் திறந்தவன் முன் நிஷிலா புன்னகை முகமாய் நின்றிருந்தாள்... அவளது கையில் காபி கோப்பை இருந்தது... அதை அருகில் இருந்த மேசை மீது வைத்தவள்,

"குட்மார்னிங் மாமா..." என்க...

அவளது அழைப்பில் ஒரு நொடி 'ஙே' என்று விழித்தவன் மறுநொடி கோபம் கொண்டான்... ஏனெனில் அவள் அப்படி அழைத்த போதெல்லாம் அவனுக்குப் பெரிய ஆப்பு வைத்து காத்திருந்தாள்... அதனால் இப்போது என்ன ஆப்போ என்றெண்ணியபடி அவன் அவளை உறுத்து விழித்தான்...

"நான் உனக்கு மாமாவா...?" என்று கோபமாகக் கேட்டபடி போர்வையை விலக்கிவிட்டு எழுந்தமர்ந்தவன் அப்போது தான் அந்த அறையைக் கவனித்துப் பார்த்தான்...

'இது... இது... இந்த வீடு...?' அவனுக்குப் பழைய ஞாபகத்தில் வியர்க்க ஆரம்பித்தது... அது பயமல்ல, பதற்றம்... நல்லவள் ஒருத்திக்கு அவன் இழைத்த தீங்கு அவன் மனதினை உறுத்தி அவனைக் குற்றவுணர்வில் குமைய செய்தது...

ஆம், அந்த வீடு நிஷிலாவை அவன் கடத்தி வைத்திருந்த வீடு... நேற்றுவரை கேரள மருத்துவமனையில் இருந்தவன் இன்று மதுரையில் இருக்கின்றான்... இதில் இவள் வேறு 'மாமா' என்று இழைகிறாள்... பத்து வருடங்களுக்கு முன் முற்றுப்பெற்ற கதையை இவள் தொடர்கதையாக்க நினைக்கிறாளோ? என்று சந்தேகித்தவனுள் பெரும் சினம் எழுந்தது...

"இங்கே எதுக்குடி என்னைக் கூட்டிட்டு வந்திருக்க...?" என்று அவன் அவளைப் பார்த்து ஏறக்குறைய கத்தினான்...

அவனது கோபத்தை அவள் சிறிதும் கண்டு கொள்ளவில்லை... அவனது கோபத்தினை எதிர்பார்த்தவளாய்,

"ம், உங்களைக் கடத்திட்டு வந்திருக்கிறேன்... கடத்துற தொழில் உங்களுக்கு மட்டும் தான் சொந்தமா...? ஏன் நானெல்லாம் அதைச் செய்யக் கூடாதா...?" என்று இன்முகத்துடன் கூறியபடி அவள் அவன் அருகில் வந்து நெருக்கமாக அமர... அவனோ யோசனையுடன் தள்ளியமர்ந்தான்...

'என்னவானது இவளுக்கு...? அன்று இதற்காகத் தானே என்னை அப்படி வருத்தி எடுத்தாள்...? இப்போது தானாக முன்வருகிறாள் என்றால்...? இது என்ன புதிதாய்...?' அவன் தனக்குள் யோசனையில் ஆழ்ந்தான்...

மருத்துவமனையில் தன்னை நன்றாகக் கவனித்துக் கொண்டாள் தான் இல்லை என்பதற்கு இல்லை... ஆனால் அவள் அவனை இங்கு அழைத்து வந்தது, அதுவும் அவனுக்குத் தெரியாது அழைத்து வந்தது சரியில்லை என்றே அவனுக்குத் தோன்றியது... இங்கே இருப்பதால் இருவருக்குமே மிகுந்த மனவலி தான் மிஞ்சக்கூடும்... அதை அவன் உணர்ந்தே இருந்தான்... தேவையில்லாத ஒன்றை எதற்கு வலிக்க, வலிக்கப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும்...? என்று அவனுக்கு எரிச்சலும், கோபமும் வந்தது...

"என்ன மாமா...?" என்று கேட்டவளை அவன் உற்றுக் கவனித்தான்...

அவளது விழிகளில் இருந்து அவளது மனவுணர்வுகளை அவனால் படிக்க முடியவில்லை... மனோதத்துவ மருத்துவர் இல்லையா! வெகு எளிதில் தனது மனவுணர்வுகளை வெளிக்காட்டாது மறைத்தாள்... எதற்காக அழைத்து வந்திருக்கிறாள் என்று அவனுக்குத் தெரியாது போனாலும் இதன் நோக்கம் என்னவாக இருக்கக்கூடும் என்று அறிந்தவனாய் அவன்,

"உனக்கு என்ன வேணும்...?" என்று நேரிடையாகக் கேட்டவனின் கேள்வியில் அவள் தடுமாறாது அவனை ஆழ்ந்து பார்த்தவள் அவனை நோக்கி தனது வலக்கை ஆள்காட்டி விரலை நீட்டினாள், 'நீ' என்பது போல்...

அதைக் கண்டு திடுக்கிட்டவன், "உளறாதே..." என்று எரிச்சலுடன் மொழிந்தபடி படுக்கையை விட்டு எழுந்தவன் குளியலறைக்குள் புகுந்தான்...

அவன் செல்வதைப் பார்த்தபடி இருந்தவளின் விழிகளில் தான் எடுத்த முடிவினை செயல்படுத்திவிடும் உறுதி தெரிந்தது... இருநாட்களுக்கு முன் நடந்த நிகழ்வு அவளது மனதில் படமாக ஓடியது...

குளியலறைக்குள் புகுந்து கொண்ட சிம்மவிஷ்ணு குளிர் நீரை முகத்தில் அடித்துத் தன்னைச் சமன் செய்து கொண்டான்... அப்படியிருந்தும் அவனது மனம் சமன்பட மறுத்தது...

'எவ்வளவு தைரியம் இருந்தால் 'நான் வேண்டும்' என்று கூறுவாள்...' என்று அவன் மனதிற்குள் குமைந்தான்...

வேண்டாம் என்று விலகிய ஒன்று அவனது கைகளில் விருப்பமாய்... ஆனால் அவனுக்குத் தான் அதில் விருப்பம் இல்லை... இங்கிருக்கும் காலங்களில் இருவருமே அதிகம் காயப்படப் போகின்றனர் என்று அவனுக்குத் தோன்றியது... இருநாட்களுக்கு முன் நடந்த நிகழ்வு அவனது மனதில் படமாக ஓடியது...

ஆபிரகாமிடம் சிகிச்சையை முடித்துக் கொண்டு மீண்டும் அவனை மருத்துவமனைக்குக் காரில் அழைத்து வந்து கொண்டிருந்த நிஷிலா அவனது கரத்தோடு தனது கரத்தை கோர்த்தபடி நெருங்கி அமர்ந்து கொண்டாள்... அவளை ஒரு தினுசாகப் பார்த்த சிம்மவிஷ்ணு சற்றுத் தள்ளியமர்ந்தான்... அவளோ எதிர்பாராத விதமாக அவனது தோளில் சாய்ந்து கொண்டு அவனது முகத்தை ஏறிட்டு பார்த்தாள்...

"எதுக்கு இப்படிப் பண்ற...?" என்று அவஸ்தையுடன் நெளிந்தவனைக் கண்டு கண்சிமிட்டியவள்,

"என்ன...? எப்படிப் பண்றேன்...?" என்று பதில் கேள்வி கேட்க...

ஓட்டுநர் முன் தர்க்கம் புரிய விரும்பாதவனாய் அவன் கண்மூடி இருக்கையில் சாய்ந்து கொள்ள... அவளோ அவனை வாஞ்சையுடன் பார்த்தபடி வந்தாள்... கணவனது மனமும், உடலும் நலம்பெற அவள் அவனுடன் வாழ்ந்தாக வேண்டும்... அதற்கு அவள் இப்போதிருந்தே தன்னைத் தயார்படுத்திக் கொண்டாள்... அதன் விளைவு தான் இந்த நெருக்கம்... ஏனோ இந்த நெருக்கம் அவளுக்கு வெறுப்பாய் தோன்றவில்லை... மாறாக மனதிற்கு ஒருவித நிறைவை தந்தது...

மருத்துவமனை வந்த பின்பும் அவளது ஒட்டுதல் தொடர்ந்தது... அன்றிரவு அவனது பெற்றோரை வீட்டிற்கு அனுப்பிவிட்டு அவள் அவனருகில் வந்த போது அவன் சற்று அரண்டு தான் போனான்...

"நீ வீட்டுக்கு போயிருக்கலாமே நிலா..."

"ஏன் நான் இருந்தால் என்ன...?"

"ஒண்ணும் இல்லை..." என்று முனங்கியவனின் அருகில் வந்தமர்ந்தவள் அவனது தலையை எடுத்து தனது மடியில் வைத்து வருடி கொடுத்தாள்...

அது அவனுக்கு ஒரு பக்கம் சுகமாக இருந்த போதும், மறுபக்கம் பயமாகவும் இருந்தது...

"நான் சீக்கிரம் சாகப் போறேனா...?" என்று அவளைப் பார்த்து கேட்டவனைக் கண்டு அவள் முறைத்தாள்...

"ஏன் இப்படி அபசகுனமா பேசுறீங்க...?"

"அப்போ நீ ஏன் இப்படி நடந்துக்கிற...?"

"எப்படி...?" என்று பதில் கேள்வி கேட்டவளிடம் பதில் சொல்ல முடியாது அவன் அவளது மடியில் தனது முகத்தைப் புதைத்துக் கொண்டான்...

"எதையும் யோசிக்காம தூங்குங்க..." என்று அவள் அவனை ஆறுதல்படுத்தி உறங்க வைத்தாள்...

மறுநாள் முழுவதும் இணக்கமாக, நெருக்கமாக இருந்தவளின் அருகாமையை அவனும் சிறிது விரும்பத் தொடங்கிவிட்டான் என்றே சொல்ல வேண்டும்... அதனால் அவன் இயல்பு போல் அவளை ஏற்றுக் கொண்டான்...

அன்றிரவு உறங்கியது மட்டும் தான் அவனது நினைவில் இருக்கிறது... மறுநாள் காலையில் எழுந்து பார்த்தால் அவன் இங்கிருக்கிறான்... எல்லாம் திட்டம் போட்டு செய்திருக்கிறாள் என்று அவனுக்கு அவள் மீது கோபம் கோபமாக வந்தது...

ஆம், நிஷிலா திட்டம் போட்டு தான் எல்லாம் செய்தாள்... அவளது குடும்பத்தினர் சிம்மவிஷ்ணுவிற்கு இழைத்த துரோகத்திற்கு அவன் பழிவாங்க எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றி அடையாது போனது குறித்து அவளுக்கு வருத்தமே... அதற்கு அவள் தானே முக்கியக் காரணம்... அதனால் அவனது தோல்வியை வெற்றியடையச் செய்வதற்காக அவள் நிதானமாகத் திட்டமிட்டாள்...

அதன் விளைவு அவனுடன் வாழ்ந்த மதுரை வீட்டிற்கு அவனை அழைத்துச் செல்வது என்று அவள் முடிவு செய்தாள்... அவனிடம் கூறினால் நிச்சயம் மறுப்பான் என்றே அவளுக்குத் தோன்றியது... மீண்டும் அவளைக் காயப்படுத்த அவன் விரும்ப மாட்டான்... ஆனால் அவள் விரும்பியே காயப்படத் தயாராக இருக்கிறாள் என்பது அவனுக்குத் தெரியாதே...

முதலில் அவனது பெற்றோரிடம் கூறி சம்மதம் வாங்கினாள்... அதாவது தான் அவனுடன் சேர்ந்து வாழ்ந்து அவனைக் குணப்படுத்துவதாகக் கூறினாள்... இதைக்

கேட்டதும் சுந்தரபாண்டியன், மீனாட்சி மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர்...

"ரொம்பச் சந்தோசம்மா... இனியாவது என் மகன் மனைவி, மகள்ன்னு சந்தோசமா வாழணும்..." என்று மீனாட்சி ஆனந்தத்தில் அழுதுவிட்டார்... சுந்தரபாண்டியன் எதுவும் சொல்லவில்லை என்றாலும் அவரது முகத்தில் இருந்த மகிழ்ச்சி அதை உணர்த்தியது...

மருமகள் கூறியதும் சுந்தரபாண்டியன் இவர்கள் இருவரும் வாழ்ந்த வீட்டில் இவர்கள் தங்குவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டார்... கூடவே மருதாணியும் வேலைக்காக அனுப்பி வைக்கப்பட்டாள்...

நிஷிலா இதையே பவித்ரனிடம் கூறினாள்... அவனும் இதைச் சந்தோசத்துடன் ஏற்றுக் கொண்டான்...

"ஆனா ஆதி எங்களோடு இருக்கட்டுமே நிஷி..." என்று பவித்ரன் கூற...

"இப்போ ஸ்கூல் லீவு தானே... அம்மு அவங்க பாட்டி, தாத்தா கூட இருக்கட்டும்... எனக்கும் அடிக்கடி அம்முவை பார்ப்பதற்கு மதுரையில் இருந்தால் தான் வசதி..." என்று கூறியவள்,

"நீங்க இங்கே இருந்தது போதும் அத்தான்... சென்னைக்குக் கிளம்பி போங்க..." என்றுரைக்க...

"உண்மையாவா...?" என்று சந்தோசத்துடன் கேட்டவனை உணர்வில்லாது பார்த்தவள்,

"இனி நாம எல்லாம் அங்கே தான் ஒண்ணா இருக்கப் போகிறோம் அத்தான்..." என்றாள் அவள் உறுதியாக...

முன்பு இளவரசிக்கு பயந்து வீட்டை விட்டு வெளியில் வந்த சின்னப் பெண் நிஷிலா அவளில்லை... நரசிம்மமாய் அவதாரம் எடுக்கப் போகும் தனது கணவனுக்கு உதவப் போகும் நரசிம்மலக்ஷ்மி இவள்... எதிரிகளை அவர்கள் இடத்தில் வைத்து வதம் புரிய போகிறாள்... கணவனது

கண்ணில் மரணபயம் காட்டியவர்களுக்கு அவள் மரணபயத்தைக் காட்ட வேண்டாமா...? அவளது மனதில் உறுதி பிறந்தது...

இரவு சிம்மவிஷ்ணுவுக்குக் கொடுத்த மயக்க மருந்தில் அதிக அளவு செலுத்தப்பட்டு அவன் ஆழ்ந்த நித்திரைக்குச் சென்றதும் அவனை அங்கிருந்து மதுரைக்கு அழைத்து வந்துவிட்டனர்... விழித்திருந்தால் நிச்சயம் மறுப்பானே...!!!

நிஷிலா மட்டும் கணவனுடன் தரைவழியில் பயணிக்க... சுந்தரபாண்டியன், மீனாட்சி இருவரும் பேத்தியுடன் வான் வழியே பயணித்தனர்...

குளியலறை கதவு திறக்கும் சத்தத்தில் தன்னினைவு கலைந்த நிஷிலா கணவனைப் பார்த்து புன்னகைத்தாள்... அவனோ இறுக்கமான முகத்துடன் அவளைப் பார்த்தபடி அறையை விட்டு வெளியேறினான்... வரவேற்பறையில் இருந்த சோபாவில் வந்தமர்ந்தவன் இரு கைகளால் தலையைப் பிடித்துக் கொண்டான்... அதைக் கண்டவள் பதட்டத்துடன் அவன் அருகில் வந்து,

"தலைவலிக்குதா...?" என்று பதற்றமும், கவலையுமாகக் கேட்க...

அவளை நிதானமாக ஏறிட்டு பார்த்தவன், "சாகப் போகிறவன்னு பரிதாபப்படுறியா...?" என்று உணர்வில்லாது கேட்டான்...

அவள் பதில் பேசாது பரிதவிப்புடன் அவனைப் பார்த்தாள்... மனதில் உள்ளதை அவனிடம் பகிர முடியாது அவள் தனக்குள் தவித்தாள்...

"உன் பரிதாபம் எனக்கு வேண்டாம்... போடி..." என்று அழுத்தமாக உச்சரித்தவன் உதாசீன பார்வை ஒன்றை அவள் புறம் வீசினான்...

அவனது பார்வையில் அவளது மனம் கலங்கி போனது... இருந்தாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவன் முன் மண்டியிட்டு அமர்ந்தவள்,

"நான் அப்படிச் சொன்னேனா...?" என்று கூறியவளின் விழிகளில் கனிவை தவிர வேறில்லை...

"உன் சம்பந்தப்பட்ட எதுவும் வேண்டாம் போ..." என்று அவன் கோபமாய் முறுக்கி கொண்டான்...

அவள் பதில் பேசாது அவனது கைகளை இறுக பற்றிக் கொண்டாள்... அவளது செயல் அவனது குமுறிய மனதினை சிறிது ஆறுதல்படுத்தியது... அதனால் சற்று அமைதியாக இருந்தான்...

"சின்னய்யா..." என்றபடி அங்கு வந்து நின்றாள் மருதாணி...

"இவள் எதுக்கு இங்கே...?" என்று கூறியபடி அவன் அதற்கும் கத்தினான்...

"நீ போ மருதாணி..." என்று அவளை அனுப்பி வைத்த நிஷிலா,

"என்னோட சமையல் சுமாரா தான் இருக்கும்... வீணா உங்களைப் பட்டினி போட்டு வருத்தின பாவம் வேண்டாமேன்னு தான் வரவழைச்சேன்..."

அவள் கூறிய பாவனையில் அவனுக்குச் சிரிப்பு வந்தது... ஆனால் அவன் சிரிக்காது அடக்கி கொண்டு அவளைப் பார்த்து முறைத்தான்... அவனது புன்னகையைக் கண்டு முகம் மலர்ந்தவளாய்,

"சிரிப்பு வந்தா சிரிச்சிரணும்... அடக்கக் கூடாது..." என்று கண்டிப்பு போல் கூறினாலும் அவளது விழிகளில் குறும்பு வழிந்தது...

"என் கூட நீயிருந்தப்போ இப்படித் தான் சிரிச்சிக்கிட்டு இருந்தியா...? எப்ப பாரு அழுதுக்கிட்டு தானே இருந்த...?"

அவனது வார்த்தையில் அன்றைய நாள் நினைவில் அவள் மௌனமாகி விட்டாள்...

"இது தான் உனக்கும் எனக்குமான உறவு... நம் உறவில் சந்தோசம் கிடையாது... வேதனையும், வலியும் மட்டுமே... இதை மாற்றியமைக்க நினைக்காதே..." என்று அவன் அடிக்குரலில் சீறினான்...

"அப்போ உங்களைப் பத்தி எனக்குத் தெரியாது... இப்போ தானே உங்கள் பத்தி முழுமையா புரிஞ்சிக்கிட்டேன்..." என்று கூறியவள் அவன் அருகில் அமர...

அவனோ விலகி அமர முற்பட்டான்... அவனது கையை இறுக்கி பிடித்தபடி அவனது தோள் சாய்ந்தவள் அவனை அசைய விடவில்லை... வேறுவழியின்றி அப்படியே அமர்ந்தவன்,

"அப்போ புரியாதது இப்போ என்னடி புரிஞ்சிக்கிட்ட...?" என்று அவன் கோபமாய்ப் புருவங்களை நெறித்தான்...

"எனக்காக நீங்க தண்டனை ஏத்துக்கிட்ட செயல் ஒண்ணு போதாதா...?" என்று கேட்டவளை கண்டு அவன் தலைகுனிந்தான்...

"நீ என் மகளைக் காப்பாற்றினாய்... நான் உனக்குக் கொடுத்த வாக்கை காப்பாற்றினேன்... அதற்கும் இதற்கும் சரியாகிவிட்டது... நீ என்னை விட்டு போய்விடு... அது தான் உனக்கு நல்லது..."

"ம்ஹூம், போக மாட்டேன்... நீங்க அடிச்சு விரட்டினாலும் நான் போக மாட்டேன்..."

"அப்போ சரி... நீ இங்கேயே இரு... நான் போகிறேன்..." என்றபடி எழுந்தவன் முன் வந்து நின்றவள்,

"நானும் போக மாட்டேன்... உங்களையும் போக மாட்டேன்... நாம ரெண்டு பேரும் இங்கே தான் இருக்கப் போகிறோம்..."

"இருந்து என்ன பண்ணுவதாக உத்தேசம்..." என்று கேலியாய் கேட்டவனிடம்,

"இதுவரை வாழாத வாழ்க்கையை வாழ உத்தேசம்... உங்களைச் சந்தோசமாக வைத்திருக்க உத்தேசம்..." என்று

அசராது பதிலளித்தவளை வெறுமையாகப் பார்த்தவன் வெளியில் சென்று தோட்டத்தில் போய் அமர்ந்து கொண்டான்...

பின்னேயே வந்து நின்றவளிடம், "நான் எங்கேயும் போகலை... நீ போ..." என்று அவன் எரிந்து விழுந்தான்...

அவள் அவனைத் திரும்பி திரும்பி பார்த்தபடி சென்றாள்... அவனோ அண்ணாந்து வானத்தை வெறித்தபடி அமர்ந்திருந்தான்... கடந்த கால வாழ்க்கை வானில் காணொளியாகத் தோன்றியதோ...? நிஷிலாவின் விருப்பமின்றி அவளைத் திருமணம் செய்தது, அவளது விருப்பமின்றி அவளைத் தொட்டது எல்லாம் அவனது நினைவில் எழுந்தது... அதிலும் அவளது அழுகை அவனது மனதினை இப்போதும் சுடுகிறதே... அன்று சரியாகத் தோன்றிய ஒன்று இன்று தவறாகத் தோன்றியது...

சுமார் பத்து மணியளவில் நிஷிலா அறைக்குள் எட்டிப்பார்த்தாள்... குளித்து முடித்து ஏதோ யோசனையில் அமர்ந்திருந்தவன் முன் வந்து நின்றவள்,

"சாப்பிட வாங்க..." என்றழைக்க...

அவன் வேண்டாம் என்று சொல்லும் முன்னரே அவள், "வேண்டாம்ன்னு மட்டும் சொல்லாதீங்க... சாப்பிட வாங்க..." என்க...

அவன் ஒன்றும் பேசாது நடக்க... அவள் அவனைப் பின்தொடர்ந்தாள்... அவனை எப்படிச் சமாதானப்படுத்துவது? என்று அவளுக்குத் தெரியவில்லை...

உணவு மேசையில் அமர்ந்தவன் முன் தட்டு எடுத்து வைத்தவள் முதலில் பரிமாறியது அவனுக்குப் பிடித்த ஜாங்கிரியை...

"வேண்டாம்..." என்று அவன் அதை எடுத்துப் பாத்திரத்தில் போட்டான்...

"ரொம்ப நாளைக்கு அப்புறம் இங்கே வந்திருக்கிறோம்... இனிப்போடு ஆரம்பித்தால் என்ன...?" என்று கேட்டவளை எரிச்சலுடன் பார்த்தவன்,

"நாம வாழ்கிற வாழ்க்கைக்கு இனிப்பு ஒண்ணு தான் குறைச்சல்..." என்று படபடத்தவனின் வாயில் வலுக்கட்டாயமாக ஜாங்கிரியை வைத்து அழுத்தினாள் அவள்...

அன்றொரு நாள் ஹர்ஷவர்த்தினி இது போல் செய்த போது தூவென்று துப்பியவன் இன்று அதைச் செய்ய இயலாது வேறுவழியின்றி அதைக் கடித்து விழுங்கினான்...

"ஏன் நம் வாழ்க்கைக்கு என்ன குறைச்சல்...?" என்று கூறியபடி புன்னகைத்தவள் அவனது வாயில் இருந்த ஜாங்கிரியை பிய்த்து எடுத்து தனது வாயில் போட்டபடி,

"இனி இது போல் இனிப்பாக இருக்கப் போகிறது..." என்று மந்தகாச புன்னகை ஒன்றை உதிர்த்தவள் அவனது தலைமுடியை கோதி முன்நெற்றியில் தாயின் வாஞ்சையுடன் முத்தமிட்டாள்...

அவளது செயலில் அவன் விதிர்த்து போய் நாற்காலியில் இருந்து எழுந்துவிட்டான்...

"உட்காருங்க..." என்று அவள் மீண்டும் அவனை அமர வைக்க...

அவனோ அமராது விறுவிறுவென அறைக்குச் சென்றுவிட்டான்... அவன் பின்னேயே அவள் சென்றாள்... தன் பின்னால் வந்து நின்றவளை அவன் ஆத்திரத்துடன் பார்த்தான்... அவனது மனம் மிகுந்த உளைச்சலில் இருந்தது... அவள் இந்தத் தருணத்தை எதிர்பார்த்தவளாய் அவனை அமைதியாக எதிர் நோக்கினாள்... அவனுடன் தனியே வரும் போதே அவள் இதையெல்லாம் எதிர்பார்த்து தான் வந்தாள்... இப்படியொரு நிலை வரும் போது அவனை எப்படிச் சமாளிப்பது? என்றும் அவள் தனக்குள் உரு போட்டு வைத்திருந்தாள்...

"உன்னோட டார்ச்சர் தாங்க முடியலைடி... உனக்குப் போதை எவ்வளவோ பரவாயில்லை... எனக்குப் போதை மருந்து வேணும்..." என்று ஆக்ரோசமாய்க் கத்தியவனைப் பயப்படாது பார்த்தவள் கைகளைக் கட்டி கொண்டு,

"போதை மருந்து கொடுக்க முடியாது... உங்களுக்கான மருந்து நான் தான்... நான் மட்டும் தான்..." என்றவளின் கழுத்தை பிடித்து அவன் ஆங்காரமாய் நெரித்தான்...

"உன்னைக் கொன்னுருவேன்டி..." என்று உரக்க கத்தியவனைப் பொருட்படாது,

"கொல்லுங்க..." என்று உறுதியாய் கூறியபடி அவள் அசைவற்று நிற்க...

"ச்சே..." என்றபடி அவன் எரிச்சலுடன் தனது கையை இறக்கினான்...

அந்த நிலையிலும் அவனது மனக்கட்டுப்பாடு அவளை ஆச்சிரியப்படுத்தியது... அவனை நிமிர்ந்து வியப்பாய் பார்த்தவள்,

"போதை மருந்தை விட நான் கேவலமா போயிட்டேனா மாமா...?" என்று ஆதங்கத்துடன் கேட்டவளை அதிர்வுடன் பார்த்தவன் அவளைப் பார்க்க இயலாது தனது முகத்தைத் திருப்பிக் கொண்டான்...

"சொல்லுங்க..." என்றபடி அவள் அவன் முன் வந்து நின்றாள்...

அவளது விழிகளுக்குள் உற்று நோக்கியவன், "போதை எனது வலிகளைப் போக்கும்... உன்னால் அது முடியுமா...?" அவனது உதடுகள் கேலியாய் வளைந்தது...

"ஏன் முடியாது...?" என்று சவாலாகக் கூறியவள் சவரம் செய்யப்பட்டு வழுவழுவென்று இருந்த அவனது தாடையில் தனது இரு கைகளையும் அழுந்த பதித்து அவனது உயரத்திற்கு எம்பியவள் அவனது இதழோடு தனது இதழை அழுத்தமாய்ப் பொருத்தினாள்...

அவளது செயலில் முதலில் அதிர்ந்தவன் பின்பு இளகாது இரும்பாய் விறைப்பாய் நின்றான்...

பெண் நினைத்தால் முடியாதது உண்டோ...! அவனது கோபத்தினைக் கண்டு கொள்ளாது அவள் அவனது இதழ்களில் மூழ்கினாள்... அவளுக்கு இது முதல் முத்தம்... அதனால் அதில் ஏகப்பட்ட தடுமாற்றம்... அவள் தப்பும் தவறுமாய்த் தாம்பத்திய வகுப்பில் தனது முதலடியை எடுத்து வைத்தாள்... அவளது தவறுகள் தெரிந்தும் ஆசானாய் அவன் திருத்தாது அமைதியாக நின்றிருந்தான்...

எவ்வளவு நேரம் இதழில் தேன் எடுக்க முடியும்...? சிறிது நேரத்தில் தனது இதழ்களை விலக்கியவள் அவனைப் பரிதாபமாக ஏறிட்டு பார்த்தாள்... அவனோ நக்கலாக அவளைப் பார்த்தான்...

"முடிஞ்சதா...?" என்று கேலியாய் கேட்டவனை இயலாமையுடன் பார்த்தவள்,

"இல்லை..." என்றபடி அவள் அவனை அணைத்துக் கொண்டு அவனது நெஞ்சில் முகம் புதைத்துக் கொள்ள... அவளது இந்தச் செயலில் அவனது உடல் அதிர்ந்தது...

"வேண்டாம்... விலகி போய்விடு..." என்று முனங்கியவனை அவள் சிறிதும் கண்டு கொள்ளாது இன்னமும் ஆழமாய் அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்...

"என் பொறுமையைச் சோதிக்காதே நிலா..." என்றான் அவன் இறுகிய குரலில்...

"எனக்கும் பொறுமை இல்லை..." அவளது இதழ்கள் மெதுவே முணுமுணுத்தது...

"உண்மையில் உன்னைக் கொன்னுருவேன்டி..." என்றவனது குரலில் அதிகக் கோபமிருந்தது... அது அவனது உடல் உபாதை கொடுத்த வலி...

"ம், பரவாயில்லை..." என்றவளின் முகத்தை ஆவேசமாக நிமிர்த்தியவன்,

"இது என்ன வேசம்...? இந்தத் தவறை நான் செய்ததற்குத் தான் நீ எனக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்த... உனக்கு அது ஞாபகம் இல்லையா...? இப்போது நீ இப்படி இழைவது ஏனோ...?" இளக்காரமாய்ப் பார்த்தவனைக் கண்டு அவளது விழிகளில் கண்ணீர் நிரம்பியது...

"அது நான் தெரியாம பண்ணிய தப்பு... உங்க தவறுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க நினைச்சேன்... ஆனா உங்களுக்கு இல்லை..." என்றவளை அவன் நம்பாது பார்த்தான்...

"ஓ... இது நீ செஞ்ச தப்புக்கு பிராயசித்தமா...? அது தேவையில்லை... அப்படியே இருந்தாலும் என் தவறு இன்னமும் அப்படியே தான் இருக்கிறது... நீ உன் வழியில் போ... நான் என் வழியில் போகிறேன்..." என்று தன்னை உதறி தள்ள முயன்றவனை இறுக்கி பிடித்துக் கொண்டவள்,

"நீங்க என்னைக் கொன்னாலும் நான் உங்களை விட்டு போக மாட்டேன்..." என்க...

அவளது முடியை கொத்தாக பற்றி அவளது முகத்தை நிமிர்த்தியவன், "காயப்பட வலிய வந்து விருப்பம் தெரிவிக்கிற... உன் தலையெழுத்தை நீயே தவறா எழுத நினைக்கிற நிலா..." என்றவனை நோக்கி,

"என்னோட தலையெழுத்து தானே... பரவாயில்லை..." என்றவளை வில்லன் பார்வை பார்த்தவன்,

"போதை மாதிரி என் வலியை போக்க உன்னால் முடியுமாடி...?" என்று கேலியாய் கேட்க...

அவளோ அது தெரியாது சிறுபிள்ளையாய் விழித்தாள்... அதில் மனம் கவர பெற்றவன் அவளது முகம் நோக்கி குனிந்து,

"இனி உன்னால் கூட உன்னைக் காப்பாத்த முடியாதுடி..." என்று கூறியவன் அவள் பதில் கூறும் முன் அவளது இதழ்களைத் தனது இதழ்களால் அணைத்திருந்தான்... அடுத்தக் கணம் அவன் அவளைத் தனது கைகளில் அள்ளி கொண்டு சென்று படுக்கையில் கிடத்தினான்...

அவளைக் கடத்தி கொண்டு வந்து வலுக்கட்டாயமாக அவளுடன் வாழ்ந்த போதும் மென்மையைக் கடைப்பிடித்த சிம்மவிஷ்ணு இன்று வன்மையைக் கடைப்பிடித்தான்... அவனது வன்மையில் பெண்மையவள் மிகவும் திணறி போனாள்... அவள் தனது வலியை வெளியில் சொல்ல முடியாது உதடு கடித்து அடக்கி கொண்டாள்... அவனது மனவலிக்கு அவளது பெண்மை மீண்டும் பலியாகி போனது... அன்று அவள் விருப்பம் இல்லாது... இன்று அவள் விருப்பத்துடன்...

கூடல் முடிந்து அவளது முகத்தினை உற்று பார்த்தவன் அவளது விழியோரம் வழிந்த கண்ணீரை கண்டு கோபமாக,

"இதுக்குத் தான் வேண்டாம்ன்னு சொன்னேன்... உனக்கு என்னைப் பிடிக்காது, நான் தொடுவது பிடிக்காது... பின்னே எதுக்கு என்னைச் சீண்டுற...?" என்று கோபமாய்க் கத்தியவன் அவளுக்கு முதுகு காட்டி படுத்துவிட்டான்...

அவள் தனது விழிகளைத் துடைத்துக் கொண்டு மனதை தேற்றிக் கொண்டு அவனைப் பின்புறமாய் அணைத்தவள்,

"நான் அப்படிச் சொன்னேனா...?" என்றவள் அவனது வெற்று முதுகில் முத்தமிட்டு,

"எனக்கு உங்களை ரொம்பப் பிடிச்சியிருக்கு மாமா..."

அவளது வார்த்தைகளில் திரும்பி பார்த்தவனின் விழிகளில் வியப்பு அப்பட்டமாய்த் தெரிந்தது... அவனது மின்னிய விழிகளைக் கண்டவள்,

"எனக்கு உங்களை எவ்வளவு பிடிக்கும்ன்னு நான் காட்டவா...?" என்று கூறியவள் அவன் இதுவரை சொல்லி

கொடுத்த பாடத்தை நல்ல மாணவியாய் அப்படியே திருப்பிப் படிக்க ஆரம்பித்தாள்...

அதில் அவன் முற்றிலும் செயலிழந்து போனவனானான்... தன்னை மறந்து, தன் வலியை மறந்து அவன் அவளுள் மூழ்கி போனான்...

"அன்று அவனது அருகாமை அருவருத்தது,
இன்று அவனது அருகாமை தித்திக்கிறது...
அன்று அவனது அணைப்பில் தீக்குளித்தாள்,
இன்று அவனது அணைப்பில் சந்தோச சாரலில்
நனைகிறாள்...
அன்றிருந்த அவன் தான், அவள் தான், இன்றும்...
மாறும் மனதில் மட்டுமே மாற்றம்...
மாற்றம் காதலாய் அல்லாது,
காயம் ஆற்றுவதாய் மாறிப் போனது,
விந்தையிலும் விந்தை..."

கொள்ளும்...!!!

மதிய சமையலை சரிபார்த்துவிட்டு அறைக்குள் நுழைந்த நிஷிலா அங்குக் கட்டிலில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த கணவனைக் கண்டு அவன் அருகில் வந்தவள் சிறுபிள்ளை போன்று லேசாக வாயை பிளந்தபடி அவன் உறங்கும் அழகினை புன்னகையுடன் ரசித்துப் பார்த்தாள்... அவனது முகத்தில் உறைந்திருந்த மகிழ்ச்சியைக் கண்டு அவள் மகிழ்ந்து போனாள்... மனதில் எழுந்த சந்தோசத்துடன் அவனது நெற்றியில் முத்தமிட்டவள்,

"நீங்க இதே போல் எப்போதும் சந்தோசமா இருக்கணும்..." என்று கூறியவள் அறையில் இருந்த ஜன்னல் அருகே வந்து நின்று தலையில் இருந்த ஈரத்துண்டை கழற்றியபடி தோட்டத்தைப் பார்த்தாள்...

தலையைத் துவட்டி கொண்டே தோட்டத்தின் அழகினை ரசித்துப் பார்த்தவளுக்கு அன்றைய ஞாபகம் எழுந்தது... இது போன்று எத்தனையோ முறை அவள் இதே ஜன்னல் வழியாக இந்தத் தோட்டத்தினைப் பார்த்திருக்கிறாள் தான்... ஆனால் அப்போது எல்லாம் எழாத ரசிப்புத்தன்மை இப்போது எழுவதைக் கண்டு அவளுக்கே ஆச்சிரியமாக இருந்தது...

அன்று அவளிருந்த மனிநிலைக்கும், இன்று அவளிருக்கும் மனநிலைக்கும் தான் எத்தனை வித்தியாசங்கள்...! தொடுகை ஒன்றே, தொடுபவனும் ஒருவனே, ஆனால் மனதில் எழும் உணர்வுகள் தான் வேறுபடுகிறது... அவனின் சந்தோசத்திற்காக அவள் தன் வெட்கம் துறந்து அவனுடன் ஒன்றியதை நினைத்து பார்த்தவளுக்கு முகம் வெட்கத்தில் சிவந்து போனது...

"பேபி..." அவனது குரல் காதருகில் ஒலித்ததில் அவள் திடுக்கிட்டுப் போய்த் திரும்பி பார்த்தாள்...

அதற்குள் அவன் அவளது இடையோடு சேர்த்தணைத்து அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்திருந்தான்... அவள் நாணம் மேலோங்க ஜன்னலில் முகம் புதைத்து

நின்றாள்... அன்று போல் அருவருத்து முகம் திருப்பாது அவனது தொடுகையில் அவள் இணக்கமாய் இழைந்து நின்றாள்... அவளது இணக்கத்தில் அவன் தன்னை மறந்தான்... முதல்முறை தொடுவதற்கு மட்டுமே அவன் மிகவும் யோசித்தான்... அதன் பிறகு அவன் கள்ளுண்ட வண்டானான்... ஏனெனில் சற்று முன் அவள் காட்டிய சொர்க்கம் அப்படி...

அவனது கைகள் தனது தேவையை அவளிடம் அழுத்தமாய் உரைக்க ஆரம்பித்தது... அதைத் தடுத்தவளை அவன் ஆட்சேபணை பார்வை பார்த்தான்...

"காலையில் சாப்பிடலையே... இப்பவாவது நேரத்தோடு சாப்பிட கூடாதா...?" என்று கேட்டவளை ஒரு மாதிரியாகப் பார்த்தவன்,

"சாப்பிட தான் தயாராகிறேன்..." என்றவன் அவள் மேலே பேச முடியாதபடி அவளது இதழ்களைச் சிறை செய்தான்...

அவனது விருப்பம் அறிந்து ஒத்துழைத்தவளை உல்லாசத்துடன் தனது கைகளில் ஏந்தியவன் கட்டிலில் கிடத்தினான்... விழி மூடி அவனது தொடுகையை அனுமதித்தவளை அவன் ரசித்தபடி அவளை நோக்கி குனிந்தான்... அவளுள் கலந்துவிடத் துடித்தவனாய் வேகமாய்ச் செயல்பட்டவன் அவளது அடிவயிற்றில் இருந்த சூட்டு தழும்புகளைக் கண்டு அப்படியே செய்வதறியாது திகைத்து விட்டான்... அவனது செயலற்ற நிலையை உணர்ந்து கண் திறந்தவள் அவனது பார்வை சென்ற இடத்தைக் கண்டு தானும் திகைத்து போய் அவனைப் பார்த்தாள்... அன்றைய நாள் நினைவில் இருவரது உள்ளமும், கண்களும் கலங்க துவங்கியது...

"சாரி பேபி, என்னால் தானே உனக்கு இந்த நிலைமை..."

விழி கலங்க அவளது வயிற்றில் முத்தமிட்டவனைக் கண்டு அவள் என்ன மாதிரியாக உணர்ந்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை... அவனது இதழொற்றலில் அவளது மேனி சிலிர்த்தது... அன்று அவன் தன்னைக் காயப்படுத்தியதற்கு

இன்று மருந்து போடுவது போலிருந்தது அவனது செய்கை... ஆனந்தத்துடன் விழி மூடியவளின் இமையோரம் விழிநீர் வழிந்தது...

அவள் சந்தோசமும், துக்கமும் தாங்க முடியாது அவனது தலையைத் தனது வயிற்றோடு சேர்ந்து அணைத்து கொண்டாள்... அவளது செயலில் அவன் தலைநிமிர்ந்து அவளைப் பார்த்தான்... அவளது விழிநீர் கண்டு எழுந்தவன் அவளது முகம் நோக்கி குனிந்து தனது இதழ் என்னும் கைக்குட்டையால் அவளது விழிநீரை மென்மையாய் துடைத்தெடுத்தான்... அதில் அவள் விழி திறந்து அவனைப் பார்த்தாள்...

"இப்போ எதுக்கு அழுகை...?" என்று சிறு குரலில் அவளை அதட்டியவன்,

"அப்படிப் பார்த்தால் நீ எனக்குக் கொடுத்த விழுப்புண்களுக்கு நான் ஒப்பாரி வைக்க வேண்டும்..." என்று நமட்டு சிரிப்புடன் கூற...

அவள் அவனது இடதுபுருவத்தின் மீதிருந்த தழும்பினை இதமாக வருடி கொடுத்தாள்... அவனது பிறந்தநாள் அதுவுமாக அவள் கொடுத்த அன்பு பரிசு அல்லவா இது... அதை நினைத்து இப்போது அவளுக்குச் சிரிப்பு வந்தது... மெல்ல இதழ் குவித்து அதற்கு இதமாக ஒத்தடமிட்டவள்,

"சாரி..." என்க...

"நான் சொன்னது அது இல்லை..." என்றவன் தனது நெஞ்சில் அவள் கீறியிருந்த நகக்கீறலின் தடங்களைச் சுட்டிக்காட்டி,

"இது..." என்றான் விசம புன்னகையுடன்...

தான் அவனைக் காயப்படுத்திய தருணங்களை நினைத்து பார்த்தவளை நாணம் ஆட்கொள்ள,

"கிண்டல் பண்ணாதீங்க மாமா..." என்றவள் திரும்பி படுத்துத் தலையணையில் முகம் புதைத்து கொண்டாள்...

"ப்ச்..." என்று ஒற்றைச் சொல்லில் அவன் தனது அதிருப்தியை காட்டினான்...

அதைக் கண்டு மனம் பொறுக்காது வேகமாய் அவன் புறம் திரும்பியவள் அவனை இழுத்து அவனது நெஞ்சில் முகம் புதைத்து அவனது காயங்களுக்கு முத்தத்தால் மருந்திட்டாள்... அவளது ஆவேச இதழொற்றலில் முதன்முறையாக ஊனும், உயிரும் உருகியதில் அவன் தன்னை மறந்தவனாய் சொர்க்கம் எனும் வான்வெளியில் சுகமாய் மிதந்து கொண்டிருந்தான்...

பெண்ணவளின் ஸ்பரிசம் முதன்முறையாக அவனது மனதினை தீண்டி சென்றது... அந்தக் கணம் அவனுக்குப் புரிந்தது அவனது மனவலி அதிகரிக்கும் போது எல்லாம் அவன் ஏன் அவளை நாடி வந்தான்? என்று... அவனது மனவலியை போக்க அவளால் மட்டுமே முடியும் என்று இப்போது அவன் உறுதியாக நம்பினான்... அன்று பழிவெறியாய் தோன்றிய ஒன்று இன்று உயிர்சுகமாய் மாறிப் போனது விந்தையிலும் விந்தை...

பழிவெறிக் கொண்டு அவளுடன் உடலால் இணைந்தவன் இன்று முதன்முறையாகப் பெண்ணவளை உணர்ந்து, அவளின் ஸ்பரிசத்தை உணர்ந்து அவளை ஆட்கொண்டான்... அவளும் முன்பு போல் அவனுக்குப் பயந்து அலறி துடித்து அவனது தொடுகையை வெறுத்து ஒதுக்கி கூடியது போல் அல்லாது இப்போது தனது உடல், பொருள், ஆவி அனைத்தும் அவனுக்கே அர்ப்பணம் என்பது போல் அவன் தாள் பணிந்தாள்...

அவளது மனதினை புரியாமல் அவனும், அவனது மனவலி அறியாது அவளும் முன்பு கூடியது போல் இல்லாது இப்போது இருவருமே ஒருவரை ஒருவர் உணர்ந்து மற்றவர்களுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கூடிய இந்தக் கூடல் இருவருக்குமே அத்தனை நிறைவை தந்தது... மனம் மகிழ்ச்சியில் திளைக்க அவன் அவளை அணைத்துக் கொண்டான்...

"உண்மையில் போதையை விட நீ தான்டி அதிகப் போதை கொடுக்கிற..." என்று அவன் கேலியாய் அவளுக்கு நற்சான்றிதழ் அளித்தான்...

"கொஞ்ச நேரத்துக்கு முந்தி இதுக்குத் தான் அத்தனை ஆர்ப்பாட்டம் பண்ணினீங்க மிஸ்டர். சிம்மவிஷ்ணு..." என்று அவள் போலியாக அவனை முறைத்து பார்த்தாள்...

"அதுக்கு இல்லை... மீண்டும் உன்னைக் காயப்படுத்தி விடக் கூடாதுன்னு..." என்று இழுத்தவனைக் கண்டு சிரித்தவள்,

"இதுவும் ஒரு வகையில் ட்ரீட்மெண்ட் தான்... அதனால் இது தவறில்லை..." என்றவளை கண்டு அவன் அப்பாவியாக,

"அப்படியா...? எனக்கு இன்னும் ட்ரீட்மெண்ட் வேண்டும் போலிருக்கிறதே..." என்றபடி அவளது முகம் நோக்கி குனிந்தான்...

"இன்னைக்கு இந்த ட்ரீட்மெண்ட் போதும்... நாளைக்குப் பார்க்கலாம்..." என்று கூறியபடி அவள் எழுந்து செல்ல...

"அப்போ நைட் இல்லையா...?" என்று ஏக்கத்துடன் கேட்டவனின் அருகில் வந்தவள் அவனது முன்னுச்சி முடியை கலைத்து,

"இருக்கு... எத்தனை தடவை என்றாலும்..." என்று கண்சிமிட்டிவள் அங்கிருந்து செல்ல...

அவன் சிரித்தபடி செல்லும் அவளைப் பார்த்திருந்தான்... இன்று காலையில் எழும் போது கூட இந்த நாள் இத்தனை சந்தோசமாகக் கழிய கூடும் என்று அவன் நினைத்து பார்க்கவில்லை... ஆனால் அவன் நினைத்ததை விட இந்த நாள் நிறையச் சந்தோசங்களை வாரி வழங்குகிறது... கிடைத்த சொர்க்கத்தைக் கை நழுவிட அவனுக்கு விருப்பம் இல்லை... நாளை என்ன நடந்தாலும் கவலையில்லை... இன்றைய சந்தோசமே அவனுக்கு முக்கியமாகத் தோன்றியது...

இந்த வீட்டை கண்டதும் பழைய வேண்டாத நினைவுகள் நிழலாய் அவனை இம்சித்துக் கொன்ற போதும், நிஜமாய் அவனை ஆட்கொண்ட மனைவியவளின் அன்பில் அவன் உயிர் கொண்டான்... முதலில் அவளைத் தொட தயங்கியவன் பின்பு அவள் காட்டிய இணக்கத்தில் தன்னை மறந்தவனாய் அவளுடன் ஒன்றிவிட்டான்... இதோ இப்போது கூட அவளின் அருகாமையை, ஸ்பரிசத்தை அவன் மிகவும் விரும்பினான்... அதிலும் சிறுபிள்ளை சருமம் போன்று கூசி சிலிர்க்கும் அவளது தளிர்மேனியின் மென்மையை உணர்ந்தவனாய் அவன் முகம் கொள்ளா புன்னகையுடன் பலவித கற்பனையுடன் தலையணையில் சாய்ந்தான்...

அவளும் அப்படியொரு மனநிலையில் தான் இருந்தாள்... அவள் மீண்டும் குளித்துவிட்டு வந்து அவனை உணவு உண்ண அழைத்த போது அவனது மையல் பார்வையில் எச்சரிக்கையுடன் சற்று தள்ளி நின்று கொண்டாள்... அதைக் கண்டு சிரித்தவனாய் அவன் எழுந்து உண்ண வந்தான்...

உணவு மேசையில் இருந்த ஜாங்கிரி அவனது கண்ணில் பட்டது... காலையில் நிகழ்ந்தது அவனது நினைவில் எழுந்ததும் அதைக் கையில் எடுத்தவன்,

"உண்மையில் நம் வாழ்க்கை சந்தோசமாகத் தான் ஆரம்பித்திருக்கிறது..." என்றபடி அவன் அவளது வாயில் இனிப்பை வைத்தான்...

அவள் கண்கள் கலங்க அதை உண்ண ஆரம்பிக்கும் முன் அவன் அவளது முகம் நோக்கி குனிந்திருந்தான்... சற்று நேரம் பொறுத்து அவன் நிமிர்ந்த போது அவனது வாய் ஜாங்கிரியை மென்று கொண்டிருந்தது...

"என் வாழ்நாளில் இது மாதிரி ஒரு ஜாங்கிரியை நான் சாப்பிட்டது இல்லை... செம டேஸ்ட்..." என்று அவன் இமைச்சிமிட்டியபடி கூற...

"ஓஹோ..." என்று கூறியபடி உணவை எடுத்து வைத்தவளை கண்டு புரியாது பார்த்தவன் அமைதியாக உணவு உண்ண ஆரம்பித்தான்...

அவள் தனக்கும் சேர்த்துப் பரிமாறிக் கொண்டு அவனருகில் அமர்ந்தாள்... அவளின் முகத்திலிருந்த யோசனையைக் கண்டு அவன்,

"என்ன யோசனை...?" என்று கேட்க...

"நீங்க தினமும் இப்படி ஜாங்கிரி சாப்பிடறதுக்கு ஆள் செட் பண்ணலாமான்னு யோசிச்சிட்டு இருந்தேன்..."

அவள் கூறியதை கேட்டு அவனுக்குப் புரையேறியது... அவள் தன்னிச்சையாக அவனது தலையில் தட்டி பருகுவதற்குத் தண்ணீரை எடுத்து அவனது வாயருகே கொண்டு சென்றாள்... நீரை பருகி கொண்டே அவளைப் பார்த்தவனின் விழிகள் கலங்கியது... ஏற்கெனவே புரையேறியதில் சற்று கலங்கிய விழிகள் தான்... இப்போது அவளது அன்பில் இன்னமும் கலங்கி போனது...

முன்பு தனது எதிரியின் உருவில் இருப்பதற்காக அவளை வெறுத்து அவளது வாழ்வினை சூறையாடியவன் தான்... ஆனால் இன்று அவளது தாய்மை பரிவில் மனம் நெகிழ்ந்து போய் அமர்ந்திருந்தான்... எதிரியாகி போன அன்னையிடம் அவன் எதிர்பார்த்த அன்பு, அவரது உரு கொண்ட பெண்ணிடத்தில் எதிர்பாராது கிடைக்கும் போது அவன் பேச்சற்றுப் போனான்...

அந்தக் கணம் அவனுக்கு ஒன்று புரிந்தது... இவள் தேவதை... அவர் ராட்சசி என்று... புரிதலின்றிச் செய்த தவறு அவனது மனதினை வாள் கொண்டு அறுத்தது...

"இனி நான் ஜாங்கிரி சாப்பிடுவதை விட்டு விடப் போகிறேன்..." என்று கூறியவன் உணவில் கவனமாக...

"ஏனாம்...?" என்று கூறியவளின் வார்த்தையில் இருந்த சோகம் அவனைத் தாக்க... அவன் சட்டென்று தலையைத் திருப்பி அவளைப் பார்த்தான்...

அவளது வார்த்தையில் இருந்த சோகம் அவளது முகத்தில் இல்லை... அவளது விழிகள் அவனைக் கண்டு குறும்பாகச் சிரிப்பது போல் அவனுக்குத் தோன்றியது... அவன் தலையைக் குலுக்கி தன்னைச் சமன் செய்து கொண்டான்...

"உன் ஒருத்தியை தொட்டுவிட்டு நான் படும் அவஸ்தை போதாதா...?" என்று வெடுக்கென்று கூறியவன் பாதிச் சாப்பாட்டில் கையை உதறிக் கொண்டு எழுந்து சென்றான்...

தங்களது அறைக்கு வந்தவனுக்கு மனதினை கட்டுப்படுத்த முடியவில்லை... மிதமிஞ்சிய குற்றவுணர்ச்சி அவனைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கொன்று தின்றது... அவளுக்குத் தான் எத்தனை கெடுதல் செய்த போதும் தனக்கு நன்மை மட்டுமே செய்யும் மனைவியவளை நினைத்து அவன் வேதனை கொண்டான்... சற்று முன் அவள் காட்டிய சொர்க்கம் கூடப் பின்னுக்குப் போய்விட்டது... அவனுக்குத் தன் மீது கோபம் வந்தது... தன்னைத் தானே மனம் வெறுத்துப் போனான்...

மனதின் அலைப்புறுதல் தன்னை மறந்து போதையில் திளைக்கச் சொல்லியது... மனதினை கொல்லும் உணர்வினில் இருந்து தப்பிக்க ஒன்று அவன் மரணிக்க வேண்டும்... அல்லது அவனது உணர்வுகள் மரணிக்க வேண்டும்... பைத்தியம் பிடித்தார் போன்று அமர்ந்திருந்தவனின் தோளினை தளிர் கரம் ஒன்று தொட்டது... அதன் ஸ்பரிசம் அவனது மனதின் வேதனையை மறக்க செய்து அவனை உயிர்பிக்கச் செய்தது... அவன் நிமிர்ந்து மனைவியைப் பார்த்தான்...

"உங்களைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்... எதையும் யோசிக்காம சாப்பிடுங்க... இப்படிச் சாப்பிடாம இருந்தால் உடம்பு தான் கெட்டு போகும்..." என்றவள் கையிலிருந்த தட்டிலிருந்து உணவினை எடுத்து அவன் வாயருகே கொண்டு போனாள்... அவனது மனம் புரிந்து அவன் பின்னேயே வந்துவிட்டாள் அவள்...

அவன் அதை வாங்காது, "எதற்கு இந்த அக்கறை...?" அவனது குரலில் குற்றவுணர்ச்சி மிகுந்து ஒலித்தது...

நிஷிலா அவனது விழிகளை உற்று நோக்கினாள்... அவளது பார்வையின் வீச்சினை தாங்க முடியாதவனாய் அவன் தனது பார்வையை வேறுபக்கம் திருப்பிக் கொண்டான்...

"தவறு செய்துவிட்டேனோ என்று எனது மனசாட்சி என்னை உறுத்துகிறது..." என்றவளின் விழிகள் கலங்கியது...

தன்னைப் போலவே யோசிக்கும் அவளைக் கண்டு வியப்படைந்தவனாய் திருப்பிப் பார்த்தவனின் விழிகள் அவனது மனவுணர்வினை அப்படியே பிரதிபலித்தது...

"என்ன...?" அவனது பார்வையின் அர்த்தம் புரியாதவளாய் அவள் கேட்டாள்...

"தவறு செய்தவன் நான் தானே..." வேதனையில் முகம் கசங்க கூறியவனை அவள் தனது இடது கையால் தாயின் வாஞ்சையுடன் தனது நெஞ்சோடு அணைத்து கொண்டாள்...

அவளது அணைப்பில் அவன் கொஞ்சம் கொஞ்சமாய்த் தனது மனவேதனையைத் துறந்தவனாய் தன்னை மறந்து இருந்தான்...

"நீங்க செய்தது சரி தான்... நான் தான் உண்மை தெரியாது அவசரப்பட்டு உங்களைத் தண்டித்து விட்டேன்..." என்றவளின் கண்ணில் இருந்து கண்ணீர் வழிந்து அவனது உச்சந்தலையில் சொட்டியது...

அவளது கண்ணீரில் அவள் கூறிய வார்த்தைகளின் அர்த்தத்தை உணர மறந்தவனாய் அவளை ஏறிட்டு பார்த்து, "நீ தண்டிச்சது சரியே... தவறு முழுமையும் என் மீது தான்... உன்னைப் போல் ஒரு நல்லவளுக்கு நான் செய்த அநியாயத்துக்கு இந்தத் தண்டனை எல்லாம் போதாது..." என்று கூறியவனின் கைகள் அவளது கண்ணீரை துடைத்தது...

இதற்கு முன்னர் எத்தனையோ முறை அவள் அழுதிருக்கிறாள் தான்... அப்போது எல்லாம் அவளது கண்ணீரை அவன் ஒரு போதும் துடைத்தது இல்லை... மாறாக ஒருவித கொடூரத்துடன் அதைப் பார்த்து ரசித்திருக்கிறான்... ஆனால் இப்போது தனது கண்ணீரை கண்டு பதறி துடித்துத் துடைத்து ஆறுதல் கூறும் அவனின் உண்மையான முகத்தை அவள் ஆச்சிரியத்துடன் விழியகல பார்த்தாள்...

அவளது பிறந்த வீட்டினர் செய்த தவறுக்கு அவர்கள் இருவருமே தண்டனை அனுபவிக்கிறார்கள்... அவர்கள் செய்த பாவத்திற்கு இவர்கள் இருவரும் சிலுவை சுமக்கிறார்கள்... இதில் யாருக்கு அதிகக் காயம்? யாருக்கு அதிக வலி? என்று இருவராலும் பிரித்தறிய முடியவில்லை... இருவருமே உடலாலும், மனதாலும் மிகப் பெரிய வலியை சுமந்து கொண்டிருக்கிறார்கள்...

இதுவரை அவர்கள் இருவரும் கடந்து வந்த பாதை முள்பாதையாக இருந்துவிட்டு போகட்டும்... ஆனால் இனி வகுக்கும் பாதை மலர் பாதையாக மாற்ற வேண்டும்... அதுவும் அவன் செல்லும் வழி அவனுக்கு மலர் தூவி சொர்க்கமாக இருக்க வேண்டும்... அவனுக்கு இசைவாக அவள் அவனது வருங்காலத்தை நல்லபடியாக மாற்றுவாள்... அவன் மனம் மகிழும்படி இனி அவள் நடந்து கொள்வாள்... இதுவரை கணவனைப் புரியாமல் இருந்தது போதும்... இனியாவது அவனது மனம் புரிந்து அவனது காயங்களை ஆற்ற வேண்டும் என்று அவளுள் மனவுறுதி பிறந்தது...

"இப்படியே பேசி கொண்டிருப்பதால் எதுவும் மாறிவிடப் போவதில்லை..." என்றவள் உணவை எடுத்து அவனது வாயில் திணித்தாள்...

உணவை உண்டபடி அவளைப் பார்த்தவன், "உன் கிட்ட ஒண்ணு கேட்கணும்..." என்க...

"கேளுங்க..."

"நான் ஜெயிலில் இருந்து வெளிவர போகும் விசயம் உனக்குத் தெரிஞ்சிருக்கும் தானே..."

அவளுக்கு அது தெரியும்... அதனால் அமைதி காத்தாள்...

"அப்பவும் நீ என்னைப் பார்க்க வரலை... நான் ஜெயிலில் இருந்து வந்து, பிறகு கேரளாவுக்கு ட்ரீட்மெண்ட்க்கு வந்து என்று கிட்டத்தட்ட ஒன்றரை மாசமா நீ என்னைத் தேடி வரலை... ஒருவேளை நீ என்னை ஹாஸ்பிட்டலில் பார்க்கலைன்னா உன் முடிவு என்னவாக இருந்திருக்கும்...? உனக்கு என்னைப் பற்றிய நினைப்பு இல்லாது போயிருந்திருக்கும் இல்லையா...? இல்லை நான் எந்தவித நோயும் இல்லாது பழையபடி திரும்பி வந்திருந்தாலும் நீ என்னை நினைத்துப் பார்த்திருக்க மாட்ட இல்லையா...? இப்போது நீ காட்டும் இந்தக் கரிசனம் நான் நோயாளி என்பதாலா? இல்லை நாளை உயிரை விடப் போகிறவன் என்கிற இரக்கத்தினாலா? எது உன்னை என்னை நோக்கி செலுத்துகிறது...? ஒரு நேரம் உன்னோட அருகாமை சந்தோசத்தைக் கொடுக்கிறது... மறுநேரம் துக்கத்தைக் கொடுக்கிறது... எனக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தவளும் நீ தான்... இதோ இப்போது அம்மா மாதிரி அன்பா பார்த்துக்கிறவளும் நீ தான்... உன்னோட முரண்பாடான குணத்திற்குக் காரணம் தெரியாம எனக்குப் பைத்தியம் பிடிப்பது போலிருக்கிறது..." என்று தலையைப் பிடித்தவனின் அருகில் அமர்ந்தவள்,

"நான் சொல்வது அனைத்தும் உண்மை... அதை நீங்க நம்பணும்..." என்றவள் அவனிடம் தன் மனதில் இருப்பதைக் கூற துவங்கினாள்...

"நீங்க பழையபடி ஜெயிலில் இருந்து வந்திருந்தால் கொஞ்ச நாளில் நான் ஆதியோடு உங்களை வந்து சந்தித்திருப்பேன்... நிச்சயம் ஆதிக்காக என்னை நான் மாற்ற முயற்சித்திருப்பேன்..."

அவன் நம்பாத பார்வையை அவள் புறம் வீசினான்...

"உண்மையாய்... இந்தப் பத்து வருடங்களில் உங்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்துட்டு நான் பட்ட வேதனை எனக்கு மட்டும் தான் தெரியும்... நீங்க கெட்டவராகவே இருந்துட்டு போங்க... ஆனா நானும் ஏன் கெட்டவளா போனேன்னு என்னை நானே திட்டிக்குவேன்... என்னை நானே வெறுத்த கணங்கள் அவை..."

அவளது மனம் புரிந்ததில் அவனது குற்றவுணர்வு இன்னமும் அதிகரித்தது... இத்தகைய பூ மனதுடைய பூவையவளை அவன் தினமும் கசக்கி முகர்ந்தானே என்று அவனுக்குத் தன் மீதே வெறுப்பு எழுந்தது...

"உண்மையில் நான் கெட்டவன் தானே..." சொல்லும் போதே அவனது குரல் கமறியது... இதற்கு அவள் என்ன பதில் கூறுவாள்... பழையதை நினைக்க நினைக்க வேதனை தான்...

"அதை மறந்துவிடுங்களேன்..."

"மறந்துவிடுகிறேன்... நீ மன்னிப்பதாக இருந்தால்..."

"மன்னிக்காமல் தான் உங்களோடு..." என்றவள் மேலே கூற முடியாமல் வெட்கத்தில் முகம் சிவக்க தலைகுனிந்தாள்... பெண்ணவளின் நாணத்தில் ஆணவன் கர்வமாய்த் தலை நிமிர்ந்தான்... அவனது மகிழ்ச்சி மீண்டும் மீண்டது...

"என்னோடு..." என்று உல்லாசமாய்க் கேட்டபடி ஒற்றை விரலால் அவளது முகத்தினை நிமிர்த்தியவனைக் காண இயலாது விழி மூடியவள்,

"இப்போது என் மனசில் இருப்பது எல்லாம் ஒரு மனைவியாய் உங்களைக் குணப்படுத்த வேண்டும் என்கிற எண்ணம் மட்டுமே..." என்க...

"அப்படியா...?" என்று சந்தேகம் போல் கேட்டவனின் குரலில் அவள் மெல்ல விழி திறந்தாள்...

"உண்மையாகத் தான் சொல்கிறேன்..." கலக்கத்துடன் கூறியவளின் கையிலிருந்த தட்டை வாங்கிப்

பக்கத்திலிருந்த சிறிய மேசை மீது வைத்தவன்,

"டெஸ்ட் பண்ணி பார்க்கலாமா...?" என்று அவன் குறும்பு குரலில் கேட்க...

"கை கழுவலையே..."

"இப்போ அது தான் பிரச்சினையா...? பரவாயில்லை..." என்றவன் அவளது வலக்கையைப் பிடித்துத் தனது வாயருகே கொண்டு சென்றான்...

அடுத்தச் சில நிமிடங்களில் அவன் அவளை அழகாகத் தன்வசப்படுத்தித் தனது காரியத்தைச் சாதித்து இருந்தான்... அவர்கள் இருவர் மனதிலும் கடந்த காலக் காயங்கள் இருந்த போதும் அதைப் பெரிதாகக் கண்டு கொள்ளாது கணவன், மனைவி என்கிற பந்தத்தைக் கொண்டு உடலால் நெருங்கியிருந்தனர்... ஆனால் மனதால் இன்னும் நெருங்கவில்லை...

அவனைக் குணப்படுத்த வேண்டும், அவனது காயங்களுக்கு மருந்திட வேண்டும் என்று எண்ணிய பெண்ணவள் அதற்காகத் தன்னையே அவனிடம் ஒப்பு கொடுத்தாள்... ஆணவனும் உணர்வுகளுக்கு அடிமையாகி அவளை ஆர்ப்பாட்டமாய்த் தன்னுள் அடக்கி கொண்டான்... மொத்தத்தில் அவன் வலி தீர்க்க வேண்டி அவள் அவனிடம் அடைக்கலமாக... அவனும் தன் வலி தீர வேண்டி அவளை அரவணைத்து அவளுள் அடைக்கலமானான்...

**********************

அடுத்து வந்த நாட்களில் சிம்மவிஷ்ணு இயல்பாக ஒரு நல்ல கணவனாக நிஷிலாவை அணுகினான்... அவளிடம் அனுசரணையாக நடந்து கொண்டான்... அவளும் அவனுக்கு யோகா, தியானம், உடற்பயிற்சி, சத்தான உணவு என்று அவனை மனரீதியாக மற்றும் உடல்ரீதியாகத் தேற்ற துவங்கினாள்... போதை பழக்கத்தை விட்டொழிக்க உளவியல் மூலம் சிகிச்சை அளித்தது போல், மூளைக்கட்டிக்கும் மருத்துவர் ஆலோசனை கேட்டு

அவனுக்கு மருந்து கொடுத்துக் கவனமாகப் பார்த்து கொண்டாள்... எல்லாவற்றையும் விட அவளது அருகாமை அவனை முற்றிலும் புதிய மனிதனாக மாற்றியிருந்தது... அதற்கு மற்றொரு முக்கியக் காரணம் அவனது அர்ப்பணிப்பான ஈடுபாடு தான்...

போதையின் தேவை அவனைச் சிலசமயம் மிருகமாக மாற்றும்... நிஷிலா எதிரில் வந்தாலே கடித்துக் குதற தோன்றும்... அதே சமயம் அவனது மிருகத்தனத்தை மறக்க அவளது மடியில் தான் அவன் அடைக்கலம் புகுவான்... அதே போல் மனம் சஞ்சலப்படும் நேரங்களில் மகளைப் பற்றி ஏதாவது மனைவியிடம் கேட்டுக் கொண்டு தனது மனதினை கட்டுப்படுத்த முயல்வான்... மொத்தத்தில் அவன் தன் மகளுக்காக வாழ வேண்டும் என்பதற்காக மிகுந்த முயற்சி எடுத்தான்... சொல்வது எளிது, ஆனால் செயல்படுத்துவது மிகவும் கடினம்... அவன் சாத்தியமில்லாத அனைத்தையும் சாத்தியப்படுத்தி இருந்தான் தனது மனவுறுதியால்...

அதே போல் தான் அவளும் அவனுக்காக, அவனது வேதனைக்காக அவன் தனக்குக் கொடுக்கும் வலிகளைத் தாங்கி கொண்டாள்... வலி தாங்க முடியாது தன்னிடம் அடைக்கலமாகும் கணவன் அதன் உரிமையைத் தன்னிடம் இருந்து எடுத்துக் கொள்ளும் போது பூ போன்று மென்மையாய் இருக்கும் பெண்ணவள் புயலில் சிக்கியது போன்று சின்னாபின்னமாகி போனாள்... அத்தனையும் அவள் அவனுக்காகத் தாங்கி கொண்டாள்... அதன் பிறகு அவன் மன்னிப்பு கேட்பான் தான்... அதையும் அவள் சிறுபுன்னகையுடன் கடந்து போனாள்...

அன்று காலையில் இருவரும் சேர்ந்து யோகாசானம் செய்து கொண்டிருந்தனர்... யோகாசனத்திற்கு ஏற்றார் போன்று சிக்கென்று உடை அணிந்திருந்த மனைவியவளின் மீதிருந்த பார்வையை அகற்ற முடியாது தவித்தான் அவன்... உடலோடு ஒட்டி உறவாடிய அந்த வழுவழு கருப்பு நிற உடை அவளின் இடையை எடுப்பாக எடுத்துக் காட்டியது... அது அவனை 'வா வா' என்றழைப்பது

போலிருக்க... அவன் சிறிதும் தயங்காது அவளது இடையில் கை கொடுத்து தூக்கி அவளைத் தன் மடி மீது அமர வைத்துக் கொண்டான்...

"என்ன பண்றீங்க...?" என்று அலறியபடி அவள் திமிற துவங்க...

"ஒண்ணும் பண்ணலையே..." என்று சாதாரணக் குரலில் உரைத்தவனின் இதழ்கள் அவளது பின்னங்கழுத்தில் தாபமாய் ஊர்ந்தது...

"யோகாசனம் செய்யாம என்னதிது...?" என்று அவனது தொடுகையில் அவள் சிணுங்கி கொண்டே கூற...

"யோகாசனம் தானே செய்யணும்... செய்யலாம் வா..." என்றவன் அவளைத் தனது கைகளில் தூக்கி கொண்டு அறையை நோக்கி நடந்தான்...

"அங்கே எப்படி...?" என்று திருதிருத்தவளை கண்டு,

"ஷ், நீ சொல்லி கொடுத்ததை நான் மறுபேச்சு பேசாம கத்துக்கிட்டேன் இல்லையா...? அது போல் நீயும் நான் கத்து கொடுப்பதை மறுபேச்சுப் பேசாமல் கத்துக்கணும்..." என்றவன் அவளை மேலே பேச விடவில்லை...

"பேபி..." என்று தன்னில் புதைந்தவனின் பார்வை, செயல் எல்லாமே அன்று வித்தியாசமாக இருந்தது... அது என்னவென்று அவளுக்குப் புரியவில்லை... ஆனாலும் அவன் கேட்டதைக் கொடுக்க அவள் சிறிதும் தயங்கவில்லை...

"தேங்க்ஸ் பேபி..." என்று சொல்லி கொண்டே தன்னைக் கொஞ்சி கொஞ்சி கூத்தாடியவனிடம்,

"இதுக்கெல்லாமா தேங்க்ஸ் சொல்வாங்க...?" என்று நாணத்துடன் கூறியவளை புரியாத பார்வை ஒன்று பார்த்தவன் ஒன்றும் பேசாது அவளை அணைத்துக் கொண்டான்...

அவன் தனது மனதில் இருப்பதைக் கூற தோன்றாது மௌனமாக இருந்தான்... அவனது மனம் முழுவதும் சந்தோசத்தில் நெகிழ்ந்திருந்தது...

"நான் கோவிலுக்குப் போகணும்..." என்றபடி தன்னை விட்டு விலகியவளை மீண்டும் இழுத்து தன் கையணைவிற்குள் வைத்து கொண்டவன்,

"எதுக்கு...?" என்று கேட்டவனின் முகம் அவளது கழுத்து வளைவில் சுகமாய்ப் புதைந்தது...

"இன்னைக்குப் பிரதோசம்... நான் விரதம்..."

"இதுக்கு எல்லாமா விரதம் இருப்ப...?"

"ம், ம்... இந்தப் பத்து வருசமா அம்முக்காகவும், உங்களுக்காகவும் மட்டுமே..." என்றவளின் முகத்தை நிமிர்த்தி அவன் உற்றுப் பார்த்தான்...

ஒரு காலத்தில் அவனது உயிரை கேட்டவள் அவள்... இன்று அவனுக்காக அவள் விரதம் இருக்கிறாள்...

"என்ன பார்வை எல்லாம் பலமாயிருக்கு...?"

"ப்ச், ஒண்ணுமில்லை..."

"ஒண்ணும் இல்லைன்னு சொல்லி சொல்லி தான் இப்ப கொஞ்ச நாளா இப்படிப் பார்த்துக்கிட்டு இருக்கீங்க..." என்றவளை குறும்பாய் பார்த்தவன்,

"என் பொண்டாட்டி அழகாயிருக்கா, நான் பார்க்கிறேன்... உனக்கு என்ன வந்தது...?" என்று நமட்டு சிரிப்புடன் கூற...

"சும்மா பொய் சொல்லாதீங்க..." என்று கூறியபடி தன்னை விட்டு விலகி சென்றவளை அவன் அப்படியே இமைக்காது பார்த்திருந்தான்...

நிஷிலா கோவிலுக்குக் கிளம்பும் போது அவன் தானும் உடன் கிளம்பி வந்தான்... இதுவரை அவன் எங்கேயும் வந்தது இல்லை... இது தான் முதன்முறை...

"நீங்க இருங்க... நான் போயிட்டு வந்திர்றேன்..."

"துணைக்கு வர்றேனே..."

"இங்கே அப்படி எல்லாம் பயம் இல்லை..."

"இங்கே தனியா இருக்க எனக்குப் பயமாயிருக்கு..." என்றவனின் கேலி புரிய, அவனை முறைத்து பார்த்தவள் ஒன்றும் பேசாது அமைதியாகி விட்டாள்...

அருகில் இருந்த சிவன் கோவிலுக்கு இருவரும் நடந்தே வந்து சாமி கும்பிட்டனர்... அங்கிருந்த அம்பாள் சந்நிதிக்கு சென்று அங்கேயும் வழிபட்டனர்... அங்கிருந்த இரு பெண்கள் சாமி கும்பிடுவதை விட்டு விட்டு இவர்களைப் பற்றிப் புறணி பேசி கொண்டிருந்தனர்...

"அவள் கழுத்தை பார்த்தியா தாலி இல்லை... நெத்தியில் குங்குமம் இல்லை, காலில் மெட்டி இல்லை... கல்யாணமாகாம இவன் கூடக் கூத்தடிச்சிட்டு இருக்கா... என்ன பெண்ணோ..." என்று அவளைப் பற்றி இகழ்வாய் பேச...

அது அவளது காதில் விழுந்த போதும் அவள் அதைப் பெரிதாய் கண்டு கொள்ளவில்லை... மடியில் கனம் இருந்தால் தானே வழியில் பயம்... அவனும், அவளும் கணவன், மனைவி... அதை இவர்களுக்கு நிரூபிக்க வேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை... அதனால் அவள் அமைதி காத்தாள்...

ஆனால் அவனால் அப்படி அமைதியாக இருக்க முடியவில்லை... அர்ச்சனை முடியும் வரை காத்திருந்தவன் பிரசாதம் பெற்றுக் கொண்டதும் அதிலிருந்த குங்குமத்தை எடுத்து அவளது நெற்றியில் வைத்து விட்டான்... அத்தோடு நில்லாது அந்தப் பெண்கள் இருவரையும் சொடக்கிட்டு அழைத்து,

"இவள் என் மனைவி... எங்களுக்குக் கல்யாணமாகி பதினோரு வருசங்கள் முடிஞ்சிருச்சு... என்ன புரிஞ்சதா...? விசயம் தெரியாம இப்படிப் புறம்பேசும் வேலையை எங்க

கிட்ட வச்சிக்கிட வேண்டாம்..." என்று காட்டத்துடன் பேசியவன் அவள் புறம் திரும்பி,

"நீ வா நிலா..." என்று அவளை அழைத்துக் கொண்டு விறுவிறுவெனக் கோவிலை விட்டு வெளியேறினான்...

வீட்டிற்கு வந்ததும் மனைவியை அணைத்துக் கொண்டு அவன் அமைதியாக அமர்ந்துவிட்டான்... அவனது மனம் புரிந்தார் போன்று அவனை ஆறுதலாய் பார்த்தவள்,

"நமக்கான வாழ்க்கையை நாம் தான் வாழணும் மாமா..." என்க...

அவன் மனம் கலங்க அவளைப் பார்த்தவன், "உனக்கு இப்படி இருப்பது அருவருப்பா இருக்குதா...?" என்று கேட்க...

"இல்லை..." என்று அவள் உறுதியாய் கூற...

அவளது நெற்றியில் தனது உதட்டினை அழுத்தமாய்ப் பதித்தவன், "தேங்க்ஸ்..." என்றபடி அங்கிருந்து எழுந்து சென்றான்...

அறைக்குள் நுழைந்து கட்டிலில் சாய்ந்து விழி மூடி கொண்டவன் மனம் துக்கத்தில் இறுகி போயிருந்தது... மகளுக்காக உயிர் வாழ வேண்டும் என்கிற ஆசை அவனது மனதில் மலையளவு இருந்த போதும் அவனது நோய் அவனுக்கு அந்த உத்திரவாதத்தை அளிக்கவில்லையே... அப்படி இருக்கும் போது மீண்டும் மனைவி கழுத்தில் தாலி கட்டி, அவனுக்கு ஏதாவது ஒன்று என்றால் அது மீண்டும் மனைவி கழுத்தில் இருந்து இறங்குவதற்கு அவனுக்குச் சம்மதம் இல்லை... இறங்கிய ஒன்று இறங்கியதாகவே இருந்துவிட்டு போகட்டும்...

"ஐயம் ரியலி சாரி பேபி..." என்று வருத்தத்துடன் முணுமுணுத்தவனின் முகம் சொல்லொண்ணா வேதனையைப் பிரதிபலித்தது...

நிஷிலாவோ கணவன் செல்வதைப் பார்த்தபடி அமர்ந்திருந்தவள் தன்னிச்சையாகத் தனது கழுத்தினை

வருடி கொண்டாள்... தாலி இல்லாத வெறுங்கழுத்து அவளது மனதினை உறுத்த தான் செய்தது... ஆனால் அதைப் பற்றித் தானாகச் சென்று அவனிடம் கேட்க அவளது மனம் இடம் கொடுக்கவில்லை...

'அவனாகக் கொடுத்தால் வாங்கிக் கொள்வாயா...?' அவளது மனசாட்சி கேட்ட கேள்விக்கு அவளிடம் பதில் இல்லை...

விடையில்லா கேள்வியை நோக்கி தானே அவளது முடிவில்லா பயணம் இனி செல்ல போகிறது...!!!

"என்னுயிர் உனக்கே,
என்னூன் உனக்கே,
என் மகிழ்ச்சி உனக்கே,
என் வேதனை உனக்கே,
என் ஆனந்தம் உனக்கே,
என் வலி உனக்கே,
என் புன்னகை உனக்கே,
என் கண்ணீர் உனக்கே,
இது காதலா? கடமையா?
இது விதியா? சதியா?
இது பாசமா? பாதகமா?
இது சரியா? தவறா?
எது எப்படியிருப்பினும்
நான் உன்னோடு...
என் இராமன் நீ
ஜெயம் கொள்ள,
தீக்குளிக்கும் சீதை
நான்...!!!"

கொள்ளும்...!!!

எப்போதும் தன் பின்னேயே வந்து ஆறுதல் அளிக்கும் மனைவி இப்போது வாராது இருப்பது கண்டு மனம் பொறுக்காது கட்டிலில் இருந்து எழுந்த சிம்மவிஷ்ணு அவளைத் தேடி வரவேற்பறைக்கு வந்தான்... அங்குச் சோபாவில் இரு கைகளால் தலையைத் தாங்கியபடி அமர்ந்திருந்த நிஷிலாவை கண்டதும் அவனது மனம் பாகாய் உருகி போயிற்று... நேரே அவள் முன் வந்து நின்றவனை அவள் நிமிர்ந்து பார்த்தாள்... அவன் சிறிதும் தாமதியாது அவள் முன் மண்டியிட்டு அமர்ந்து அவளது கைகளைப் பற்றிக் கொண்டான்... அவனது செயலில் அவள் தான் பதறி போனாள்...

"எழுந்திருங்க..." என்று பதற்றமும், கூச்சமாக அவள் கூற... அவன் அதைக் கவனியாதவனாய்,

"சாரி பேபி..." என்க...

அவன் மன்னிப்புக் கேட்டதில் அவளது விழிகளில் நீர் கோர்த்துக் கொண்டது... ஆண் என்கிற திமிருடன், அகம்பாவத்துடன் வளைய வரும் சிம்மவிஷ்ணுவா இவன்...? அவளுக்கு வியப்பாய் இருந்தது... அதே சமயம் மனதிற்கு இதமாகவும் இருந்தது...

"மன்னிப்பு எல்லாம் எதுக்கு...? நீங்க எந்தத் தப்பும் பண்ணலையே...?" அவனது முன்னுச்சி முடியை விளையாட்டாய் கலைத்து அவனைக் கண்டு ஆறுதலாய் புன்னகைத்தாள் அவள்...

"நான் உன்னைப் பார்த்து சொன்ன வார்த்தையை இப்போ ஊரார் சொல்லும்படி வச்சிட்டேனே பேபி..." என்றவனின் முகம் வேதனையில் கசங்கியது...

'என்ன வார்த்தை?' என்று கேட்க தேவையின்றி இப்போதும் அந்த வார்த்தை அவளது மனதில் ஆழமாய் முள்ளாய் தைத்து வலிக்கச் செய்கிறதே... 'வேண்டாம், பழையதை

நினையாதே மனமே!' என்று மனதிற்குக் கண்டிப்புடன் கட்டளையிட்டவள்,

"ஒரு மனைவி படுக்கையறையில் அப்படித் தானே நடந்து கொள்ள வேண்டும்... அதனால் அது தப்பில்லை..." என்று கூறியவளை இமைக்க மறந்து பார்த்தான் அவன்...

அவள் தனக்காகப் பொய் கூறுகிறாள் என்று அவனுக்கு நன்கு தெரிந்தது... ஆனால் அவன் எதற்காக அப்படிச் சொன்னான்? என்பது அவனுக்கு மட்டும் தானே தெரியும்... அதுவும் இந்த இடைப்பட்ட காலத்தில் அதன் அர்த்தத்தை அவன் முழுமையாகப் புரிந்திருந்தான்... அதை அவளிடம் சொல்வதற்கு இது சரியான சந்தர்ப்பம் இல்லை என்று எண்ணியவனாய் அதை மனதில் போட்டு புதைத்துக் கொண்டு,

"இதைத் தான் அன்று உன்னிடம் சொல்ல வந்தேன்... நீ வீணே கோபப்பட்டாய்..." என்று நமட்டு சிரிப்புடன் கூற...

"போதும், போதும்... வேற ஏதாவது பேசுங்க..." என்று அவள் நாணத்துடன் அந்தப் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்தாள்... அவனும் விளையாட்டுத்தனத்தைக் கைவிட்டவனாய் அவளைச் சீரியசாகப் பார்த்தவன்,

"தாலி உன் கழுத்தில் இருந்தாலும் இல்லைன்னாலும் நீ என் மனைவி தான்..." என்றான் அழுத்தமான குரலில்...

"நம்ம உறவு நம்ம ரெண்டு பேருக்கு மட்டும் தெரிஞ்சா போதும்..." அவள் அவனைப் பார்த்து ஆதரவாகப் புன்னகைத்தாள்...

"ஏன்டி, என்னை மன்னிச்சு என்னை உயிரோடு கொல்லுற...? இதுக்கு நீ உண்மையில் என் உயிரை எடுத்து இருந்திருக்கலாம்..." தலைகுனிந்தபடி வேதனையுடன் கூறியவனின் முகத்தை நிமிர்த்தியவள்,

"நீங்க நிறைய வருசம் வாழணும்ன்னு நான் ஆசைப்படறேன்..."

"எதுக்கு...?" ஆதங்கத்துடன் வந்தது அவனது வார்த்தைகள்...

"இப்படி ஒரு ஹேண்ட்சம் ஹஸ்பெண்ட் யாருக்கு கிடைப்பாங்க...? எனக்கு நீங்க கிடைச்சிருக்கீங்களே... உங்களைக் கொஞ்சி கொஞ்சி கொண்டாட வேண்டாமா...?"

அவளது வார்த்தைகளில் அவனது கவலை மறைந்து அவனது உதடுகளில் சிரிப்பு மலர்ந்தது...

"அவ்வளவு அழகாவா இருக்கேன்...?" என்று அவன் கேள்வியாக ஒற்றைப் புருவத்தைத் தூக்க...

"செம ஸ்மார்ட்டா இருக்கீங்க..." என்று விழிகளில் மையல் வழிய அவள் கூற... அதில் அவனும் சேர்ந்து கிறங்கி போனான்...

"உண்மையாவா பேபி...?" அவளது தொடைகளில் அவன் தனது கைகளை ஊன்றி அதில் நாடி பதித்து அவளது முகம் அருகே நெருங்கிருந்தவனின் விழிகளில் ஆவலுடன் கூடிய எதிர்பார்ப்பு எட்டிப்பார்த்தது...

"ம், ம்..." என்று வேகமாய்த் தலையாட்டிவளின் காதோரம் வழிந்த முடியினை எடுத்து உட்புறமாய்ச் சொருகிவிட்டபடி அவளைப் பார்த்தவன்,

"நான் அழகா? இல்லையான்னு? எனக்குத் தெரியாது... ஆனா நீ ரொம்ப அழகு... அந்த நிலா போல் மாசுமருவில்லாத அழகு நீ..." என்றவனை அவள் இமைக்க மறந்து பார்த்தாள்...

"இந்த நிலா எனக்கு மட்டுமே சொந்தமா இருக்கணும்ன்னு நினைச்சோ என்னமோ நம்ம கல்யாணம் முடிஞ்ச அன்னைக்கே சட்டப்படி நம்ம கல்யாணத்தைப் பதிவு செஞ்சிட்டேன்... நீ என்னை விட்டு விலகி இருந்தாலும் நீ தான் என் சட்டப்படி மனைவி... நீ ஒருத்தி மட்டும் தான்டி எனக்கு மட்டுமே சொந்தமானவள்..."

அவன் சொல்லி முடிக்கும், "மாமா..." என்று சிறு கூவலுடன் அவள் அவனைக் கட்டி கொள்ள...

அவளது திடீர் தாக்குதலை தாங்க முடியாது அவன் அப்படியே தரையில் வீழ்ந்தான்... பூப்பந்தாய் தன் மீதிருந்த பெண்ணவளை அவன் மனம் நெகிழ இறுக அணைத்துக் கொண்டான்... அவளது விழியில் இருந்து வழிந்த கண்ணீரை அவனது கழுத்து வளைவு உணர்ந்தது...

"ஏய் இப்போ எதுக்குடி இப்படி ஒப்பாரி வைக்கிற...?" தனது அன்பை கூட அவன் அதட்டலாகக் கேட்டான்...

"எனக்கு அழுகை வருது... நான் அழறேன்... உங்களுக்கு என்ன வந்தது...?" என்று கூறியவள் தனது அழுகையை நிறுத்தவில்லை...

"அப்போ எனக்கு இந்த அழுகுணி பொண்ணு வேண்டாம்ன்னு விட்டுட்டு போயிருவேன்..."

"ஏன் அவள் காத்திருக்காளாமா...?" அந்த அழுகையிலும் அவளுக்குக் கோபம் வந்தது...

"யாரு...?"

"ஹர்ஷி..."

"ஹா ஹா... அவளை நீ மறக்கலையா...? அவளுக்குக் கல்யாணமாகி ரெண்டு குழந்தைங்க இருக்காங்க... இப்போ போய் நான் நின்னா அவள் புருசன் என்னைக் கண்டதுண்டமா வெட்டி போட்டுருவான்..."

"ஓஹோ, அப்படி ஒரு ஆசையிருக்கா...?" என்று கோபமாய் நிமிர்ந்தவள் அவனது முன்னுச்சி முடியை பிடித்து வேகமாய் ஆட்டினாள்...

"ஏய் விடுடி... யாராவது பார்க்க போறாங்க... நடு ஹாலில் படுத்துக்கிட்டு இப்படிக் கூத்தடிச்சிக்கிட்டு..." என்று அவன் கோபம் போல் கூறினாலும் அவளை விட்டு விலகவில்லை... மாறாக அவனது அணைப்பு இறுக தான் செய்தது...

சுற்றுப்புறம் உணர்ந்து அவள், "ஐயோ..." என்றபடி அவனிடம் இருந்து விலக முயல... அவன் அவளை விலக விடவில்லை...

"மருதாணி பார்த்தால் என்ன நினைப்பாள்...?"

"அவள் அப்பவே நம்மளை பார்த்துட்டு வெட்கப்பட்டுட்டு உள்ளே ஓடி போயிட்டாள்..."

"ச்சீ..." என்று அவள் வெட்கத்துடன் அவனது நெஞ்சில் முகம் புதைக்க...

"என்ன நினைச்சிருப்பாள், இந்த நிலா பொண்ணு பார்க்கத்தான் பூனை மாதிரியிருக்கு... பாய்ஞ்சா புலின்னு நினைச்சிருப்பாள்..." என்று தன்னைக் கேலி செய்தவனுக்கு அவள் பல அடிகளை இலவசமாகக் கொடுக்க...

அடித்த கைகளை லாவகமாகப் பிடித்துத் தடுத்தவன் அவளது இதழ் நோக்கி முன்னேறினான்... இருவரது உதடுகளுக்கு இடையில் தனது கையைக் கொண்டு சென்று தடுப்பு சுவராய் தடுத்தவள்,

"விரதம்..." என்க...

"விரதம் எல்லாம் காலையோடு முடிஞ்சு போச்சு பேபி..." என்று முணுமுணுத்தபடி அவன் அருகில் வர...

அவனைத் தள்ளிவிட்டவள் கலகலவெனச் சிரித்தபடி அறையை நோக்கி ஓட... அவனும் புன்னகையுடன் அவள் பின்னேயே ஓடிவந்தான்...

இருவரது மனம் முழுவதும் அவர்களது சொல்லப்படாத நேசம் மலர்ந்து மணம் பரப்பியதில் அவர்களது அன்றைய உறவு இனிய இல்லறமாக மலர்ந்தது...

சிம்மவிஷ்ணு ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்துவிட... நிஷிலா தான் கொண்டு வந்திருந்த மருத்துவம் சம்பந்தப்பட்ட புத்தகத்தில் ஆழ்ந்துவிட்டாள்... நேரம் சென்றதே தெரியாது

அதில் மூழ்கி போனவள் சிம்மவிஷ்ணுவின் குரலில் தான் நிமிர்ந்தாள்...

"நிலா..." என்றபடி தன் முன்வந்து நின்றவனைக் கண்டு அவள் முகம் மலர,

"எழுந்துட்டீங்களா...? இருங்க காபி கொண்டு வர்றேன்..." என்றபடி அவள் எழ முயற்சிக்க...

"பிறகு குடிக்கிறேன்..." என்றபடி அவளை அமர வைத்தவன் அங்கிருந்த மேசை மீது சாய்ந்து நின்று கொண்டு அவள் மேசையில் வைத்திருந்த புத்தகத்தை எடுத்து பார்த்து,

"போதைக்கு அடிமையானவர்களை எப்படிக் கையாள்றதுன்னு படிச்சிட்டு இருக்கியா...?" என்றவனை அவள் ஆச்சிரியமாகப் பார்த்தாள்...

"நீங்க படிச்சிருக்கீங்களா...?" என்று கேட்டவளை கண்டு ஏனோ கோபமாய் முறைக்கத் தோன்றாது அவன் நமட்டு சிரிப்புடன்,

"ஏதோ இங்கிலீஷ் வாசிக்கும் அளவுக்குப் படிச்சிருக்கேன்..." என்றான்...

"பொய் சொல்லாதீங்க..." என்றவளை உற்று நோக்கியவன் அடுத்த நொடி வாய்விட்டுச் சிரித்தான்...

"லண்டன் பிசினஸ் ஸ்கூலில் பிசினஸ் மேனேஜ்மெண்ட் படிச்சிருக்கேன்..." என்றவனை அவள் ஆவென்று பார்த்தாள்... அவளது வாயை மூடியவன்,

"உன்னளவுக்கு எல்லாம் நான் படிப்ஸ் கிடையாது... ஏதோ சுமாரா படிப்பேன்..." என்றவனின் இதழோரம் துடித்ததில் இருந்தே தெரிந்தது அவன் பொய் சொல்கிறான் என்று...

"ப்ராடு... பொய் மேல் பொய்..." என்று அவள் அவனது வயிற்றில் விளையாட்டாய் குத்தினாள்... அவளது கைகளைத் தடுத்தவன் அதை அப்படியே இழுக்க அவளது முகம் அவனது வயிற்றருகே வந்தது... அவனை நிமிர்ந்து பார்த்தவள்,

"உங்களைப் பத்தி எனக்கு எதுவுமே தெரியாது... ப்ளீஸ் சொல்லுங்க..."

"நீ அப்பா, அம்மா கிட்ட கேட்கலையா...?"

"இல்லை..." என்று அவள் தலையசைக்க...

"என்னைப் பத்தி என்ன சொல்ல இருக்கு...? என் அப்பா அம்மாவுக்கு நான் ஒரே மகன்... எனக்கு வயசு நாற்பத்தி ஒண்ணாகுது..." என்று மேலே கூறுவதற்காக யோசித்தவனிடம்,

"அடப்பாவி நீங்க அரைக்கிழவனா...? ஓ மை காட்... உங்களுக்கும் எனக்கும் பன்னிரெண்டு வயது வித்தியாசம்... ஒரு சின்னப் பொண்ணைக் கல்யாணம் பண்ணியிருக்கீங்க மிஸ்டர். சிம்மவிஷ்ணு... சட்டப்படி இது குற்றம்..." என்று வேண்டுமென்றே எகிறியவளை கண்டு அசராது,

"அதனால் தான் உனக்குப் பதினெட்டு வயசு முடியும் வரை காத்திருந்தேன்... இல்லைன்னா பதினேழு வயசில் உன்னைப் பார்த்த போதே கடத்திட்டு வந்திருப்பேன்..." என்றான் அவன் அசால்ட்டாக...

"என்னயிருந்தாலும் நீங்க பண்ணியது தப்பு தானே..."

"ஓஹோ... அப்போ உன் அத்தானை கல்யாணம் பண்ணிக்க இருந்தியே... அவனுக்கும், உனக்கும் எத்தனை வயசும்மா வித்தியாசம்...?" அமைதியாகத் தன்னை ஏறிட்டவளை முறைத்து பார்த்தவன்,

"பத்து வயசு வித்தியாசம்... உனக்கும், எனக்கும் அதை விட இரண்டு வயது மட்டுமே அதிக வித்தியாசம்..."

"அது... பெரியவங்க பார்த்து முடிவு பண்ணியது..."

"இது நான் முடிவு பண்ணியது..." என்றான் அவன் அமர்த்தலான குரலில்...

'இவன் அடங்க மாட்டானா...?' என்பது போல் அவள் அவனைப் பார்க்க...

'நான் எதற்கு அடங்கணும்...?' என்று அவன் அடங்காது சிலிர்த்துக் கொண்டு அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு மேசை மீதிருந்த அவளது அலைப்பேசியை எடுத்து இருவரையும் இணைத்து 'செல்ஃபி' ஒன்றை எடுத்தவன் அதை அவளிடம் காட்டி,

"நம்ம ரெண்டு பேருக்கு இடையில் ஏதாவது வயசு வித்தியாசம் தெரிகிறதா...? நீயே பார்த்து சொல்..." என்க...

நிஷிலா அலைப்பேசியை வாங்கி அந்தப் புகைப்படத்தைப் பார்த்தாள்... தூங்கி எழுந்ததில் முடி கலைந்து முன்நெற்றியில் அடங்காது சிலும்பி கொண்டு நிற்க, இளம் நீல நிற டீசர்ட்டில் சிம்மவிஷ்ணு அட்டகாசமான அழகுடன் அம்சமாய் இருந்தான்... இங்கு இருந்த இந்த ஒரு மாத காலமாக அவள் அவனை நன்கு கவனித்ததில் முன்பை விட அவன் நன்கு மெருகேறி அழகாக மாறியிருந்தான்... அவன் மாநிறம் தான்... இப்போது வீட்டில் இருப்பதாலோ என்னவோ அவன் நிறம் அதிகரித்துக் காணப்பட்டான்... மொத்தத்தில் அவன் ஆணழகனாக இருந்தான்...

அவள் தான் சற்று மெலிந்து ஏனோ தானோவென்று காணப்பட்டாள்... மருத்துவராய் இருந்ததால் வெளியில் செல்கையில் மட்டும் ஆடையை நேர்த்தியாக உடுத்துபவள் வீட்டில் இருந்தால் மட்டும் ஏனோ தானோவென்று உடுத்துவாள்... இதோ இப்போது கூட இரவு உடையில் அவள் எப்படியோ இருந்தாள்... அவனது உறவினர்கள் கூறியது போல் சிங்கம் போன்று கம்பீரமாக இருப்பவனின் அருகே அவள் சுண்டெலியாகச் சோம்பி போய்த் தெரிந்தாள்...

"வித்தியாசம் தெரியலை... இதில் நீங்க தான் ரொம்ப இளமையா தெரியறீங்க..." என்று அவள் முணுமுணுக்க...

"இப்பவாவது ஐயாவோட மகிமை புரிஞ்சதே..." என்று அவன் பெருமையுடன் தனது காலரை ஏற்றிவிட்டுக்

கொள்ள...

"உங்களுக்குப் பொருத்தம் இல்லாத என்னை எதுக்குத் தேடி வந்து கல்யாணம் பண்ணணும்...?"

ஏதோ ஒரு வேகத்தில் கூறியவள் பின்பு தனது தவறு உணர்ந்து நாக்கை கடித்துக் கொண்டாள்... அவன் என்னமோ தன்னை விரும்பி மணந்த மாதிரி கூறி கொண்டிருக்கிறோமே என்று... அவர்களது திருமணத்திற்குப் பின் இருக்கும் அவனது மனவலி, பழிவாங்கல் பற்றி நன்கு தெரிந்தவளாய் அவள் வாய் மூடி கொண்டாள்...

"பொருத்தம் இல்லைன்னு யார் சொன்னா...?" குனிந்து அவளது தோளில் கை போட்டு அணைத்துக் கொண்டு அலைப்பேசியை அவள் கண்முன் காட்டியவன்,

"தளிர்கொடி மாதிரி நீ எவ்வளவு அழகாயிருக்க... இந்தச் சிம்மனுக்கு ஏத்த மான் குட்டி நீ தான்டி..." என்று கன்னத்தோடு கன்னம் இழைய சரச குரலில் கூறியவனை ஏறிட்டு பார்த்தவள்,

"நம்பலாமா...?"

"நம்பி தான் ஆகணும்..."

"ம், ம்... நம்பிட்டேன்..." என்று வேண்டுமென்றே கெத்து காட்டியவளை கண்டு,

“இப்போது இந்த மான் குட்டியை கபளீகரம் செய்ய இந்தச் சிங்கத்துக்கு ஆசையாக இருக்கிறதே...” என்றபடி அவனது கைகள் அவளை ஆசையுடன் அள்ளி கொண்டது...

*****************

காலையில் எழுந்ததில் இருந்த தன் கண்ணில் அகப்படாமல் தனக்குக் கண்ணாமூச்சி காட்டி கொண்டிருந்த மனைவியவளை சமையலறையில் வைத்துச் சிறை செய்தான் சிம்மவிஷ்ணு...

"விடுங்க... சமையல் வேலையிருக்கு..."

"நீ சமைக்கப் போறியா...? அப்போ கட்டாயம் விட முடியாது..." என்று அவளது இரு கைகளோடு சேர்த்து அவளைப் பின்புறம் இருந்து அணைத்து கொண்டவன் அவளது தோள்வளைவில் இருந்து எட்டிப்பார்த்தான்...

இளம் மஞ்சள் நிறத்தில் கூழ் மாதிரி ஏதோ ஒன்று அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்தது...

"யாரை கொல்ல விசம் தயாரிக்கிற...?" என்று கேலி செய்தவனைத் திரும்பி பார்த்து முறைத்தவள்,

"முதல்ல உங்களுக்குத் தான் கொடுக்கணும்..." என்றாள் கோபமாக...

"நீ விசம் கொடுத்தா குடிக்காம இருப்பேனா...? அமிர்தமா நினைச்சு குடிச்சிருவேன்..." என்றவனின் குரலில் இருந்த நெகிழ்ச்சியைக் கண்டு அவள் புரியாது அவனை நோக்கினாள்...

"மிருகத்தை விடக் கேவலமாய் இருந்த என்னை மனுசனாக்கி இருக்கேடி... அதுக்கு நான் என்ன செஞ்சாலும் தகும்... ஆஃப்டர்ஆல் என் உயிரை தர மாட்டேனா...?"

"அது என்ன பொசுக் பொசுக்குன்னு உயிரை தர தயாரா இருக்கீங்க...? அது என்ன வெல்லக்கட்டியா...? இனிமே அது உங்க உயிர் இல்லை மிஸ்டர். சிம்மவிஷ்ணு... அது என்னுடைய உயிர்... என் பெர்மிசன் இல்லாம யாருக்கும் கொடுக்கக் கூடாது... அது நானாக இருந்தாலும் கூட..."

"உத்தரவு மகாராணி..." என்று பணிவுடன் கூறியவனின் விழிகள் குறும்பாய்ச் சிரித்தது...

'என் இரவுகளின் அடிமை' என்று அவளைத் தூற்றியவன் இப்போது அவளை 'மகாராணி' என்று போற்றுகிறான்... அன்று அவன் கூறிய வார்த்தைகளின் பின்னே இருந்த அவனது மனவலியையும் அவள் அறிவாள்... அதே போல்

இன்று அவன் கூறும் இந்த வார்த்தையின் பின்னிருக்கும் அவனது மனநெகிழ்வையும் அவள் அறிவாள்... இது தான் இவனது உண்மையான குணம்...

"மகாராணியின் காலில் விழுந்து உத்தரவு கேட்க வேண்டும்..." என்று விசமத்துடன் கூறியவளின் காதில் அவன் ரகசியமாக,

"ஏன் நான் உன் காலில் விழுந்ததே இல்லையா...?" என்று கேட்டவனின் குரலிருந்த கிறக்கம் அவளையும் தொற்றிக் கொண்டது...

"எங்கே நின்னுக்கிட்டு என்ன பேச்சு...?" அருகில் இருந்த கரண்டியை எடுத்துத் தன்னை அணைத்திருந்த அவனது கை மீது ஒரு அடி போட்டாள்...

"ஏன்டி...?" என்று கேட்டவன் தனது கையை விலக்கி கொள்ளவில்லை... மாறாக,

"நம்ம ரூமுக்கு வா... நான் எப்படி உன் காலில் விழுந்தேன்னு செய்முறையாய் விளக்கம் காட்டுகிறேன்..." என்று அவளது கைப்பிடித்து அழைத்தான்...

"பருப்புப் பாயாசம் கட்டி விழுந்திடும்..." என்றவள் நகர மறுத்தாள்...

"இன்னைக்கு என்ன விசேசம்...? பாயாசம் எல்லாம் செய்கிற...?" என்று கேட்டபடி அவன் அங்கிருந்த மேடை மீது ஏறியமர...

"முக்கியமான விருந்தாளி நம்ம வீட்டுக்கு வர்றாங்க..."

"யாரது...?"

"சஸ்பென்ஸ்..." என்று அவனைப் பார்த்து கண்சிமிட்டியவள் பம்பரமாய் வேலையைப் பார்க்க... அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தவனின் மனதில் பலவித உணர்வுகளின் போராட்டம்...!

'யாரிவள்...? எனக்காகவே கடவுளால் படைக்கப்பட்டவளோ...? இவளை ஏன் நல்ல முறையில் சந்தித்துத் திருமணம் செய்து கொள்ளாது போனேன்...? ஏன் புத்திகெட்டு நடந்து கொண்டேன்...? எனது தவறுகள் அனைத்தையும் மறந்து, மன்னித்து அரவணைத்துக் கொள்ளும் இவள் தேவதை தானோ...!' அவன் மனதிற்குள் நெகிழ்ந்தபடி அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்...

வீட்டின் அழைப்புமணி அடித்ததில் அவன் தன்னினைவு கலைந்து அவளை யோசனையாய் பார்த்தான்...

"போய்க் கதவை திறங்க..." அவள் உற்சாகமாய்க் கூற...

"நானா...? வேண்டாம்..." என்று கூறியவன் தலைகுனிந்து கொண்டான்... அவனுக்கு இருக்கும் மனநிலையில் அவன் யாரையும் பார்க்க விரும்பவில்லை...

"நீங்களே தான்... ப்ளீஸ், எனக்காகப் போய்ப் பாருங்க..." என்று கெஞ்சும் குரலில் அவள் கொஞ்ச...

"என்னைக் குரங்காட்டியாய் ஆட்டுவிக்கிற..." என்று முணுமுணுத்தபடி அவன் சென்றான்... அவனைப் புன்னகையுடன் பார்த்தபடி அவள் நின்றிருந்தாள்...

வாசற்கதவை திறந்தவன் இனிய அதிர்ச்சியுடன் அப்படியே நின்றுவிட்டான்... ஏனெனில் அங்கு நின்றிருந்தவர் மாடசாமி... அவன் அவரைப் பார்த்து பத்து வருடங்களாயிற்று... சிறைக்குச் சென்ற பிறகு அவன் அவரைப் பார்க்கவில்லை... அவராலும் அவனை வந்து பார்க்க முடியவில்லை...

"அப்பா..." அவனது குரல் நெகிழ்ந்தது...

"சுடலை..." என்றபடி அவரும் கண்கள் கலங்க அவனை அணைத்துக் கொண்டார்...

"எப்படிப்பா இருக்க...? உன்னைப் பார்க்காம நான் நானா இல்லைப்பா... எந்த உறவு முறை வச்சிட்டு நான் உன்னைப் பார்க்க வர...? ஆனா நீ கண்டிப்பா என்னைப் பார்க்க

வருவன்னு நம்பிக்கையோடு காத்திருந்தேன்... அதே மாதிரி மருமக பொண்ணு ஆள் அனுப்பி என்னை இங்கே கூட்டிட்டு வந்திருச்சு..."

அவர் கூறியதும் அவன் மனைவியைத் தேடி உள்வாயிலை பார்க்க... அங்கே கதவு நிலையில் சாய்ந்து கைகளைக் கட்டியபடி புன்னகையுடன் நின்றிருந்த மனையாளை கண்டு அவனது விழிகள் கலங்கியபடி நன்றியுரைத்தது...

"வாங்க மாமா... உட்காருங்க..." என்று வீட்டு மருமகளாய் அவள் அவரை வரவேற்று அமர வைத்தாள்...

தந்தையும், மகனும் கொஞ்சி உறவாடி சந்தோசமாய்ப் பேசி கொண்டிருந்தனர்... சிறுபிள்ளையாய் அவரது காலடியில் அமர்ந்து அவரது பேச்சினை ரசித்துக் கொண்டிருந்த கணவன் இப்போது அவளது கண்ணுக்கு எட்டு வயது சிறுவனாகத் தெரிந்தான்... அந்த எட்டு வயது சிறுவனின் மனவலியை உணர்ந்தவளின் விழிகளில் கண்ணீர் திரண்டது... அவள் சட்டென்று உள்ளே சென்றுவிட்டாள்...

குளியலறைக்குள் புகுந்தவளுக்கு அடக்கமாட்டாது அழுகை பொங்கியது... சிறிது நேரத்தில் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு அவள் வெளியில் வந்தாள்...

மதிய உணவு உண்ண இருவரையும் அழைத்தவள் தானே இருவருக்கும் பரிமாறினாள்... மாடசாமி ஆசையோடு உண்ண முயன்ற போது,

"ப்பா பார்த்து, இன்று உங்க மருமகளுக்குச் சோதனை எலிகள் நாம தான்..." என்று கூறி அவளது சமையலை அவன் கிண்டலடிக்க...

"அப்படிக் கஷ்டப்பட்டு ஒண்ணும் நீங்க சாப்பிட வேண்டாம்..." என்று அவன் முன்னிருந்த தட்டை நகர்த்தியவள்,

"நீங்க சாப்பிட்டுட்டு சொல்லுங்க மாமா..." என்க...

மாடசாமி ஒரு வாய் எடுத்து வாயில் வைத்து சுவைத்தபடி முகம் மலர, "அமிர்தமா இருக்கும்மா..." என்று மருமகளைப் பாராட்ட...

"கேட்டுக்கோங்க..." என்றவளை நோக்கி,

"தெரியாமல் சொல்லிட்டேன் தாயி... தட்டை கொடு..." என்று அவன் கெஞ்ச...

போனால் போகிறது என்பது போல் அவள் தட்டை எடுத்து அவன் முன் வைத்தாள்...

"எல்லாம் என் நேரம்டி... எனக்கு ஒரு நேரம் வரும், அப்போ உன்னைக் கவனிச்சிக்கிறேன்..." என்றவனின் இறுக்கமான குரலில் அவள் திகைத்து போய் அவனைப் பார்க்க...

அவனது விழிகளோ அவளிடம் அவனது கவனிப்பு எப்படிப்பட்டது என்பதைப் பற்றி ரகசிய மொழியில் கூறியதில் அவள் முகம் சிவக்க வேறுபக்கம் திரும்பி கொண்டாள்... அதைக் கண்டு அவன் உள்ளுக்குள் நகைத்துக் கொண்டான்...

இருவரும் உண்டுவிட்டுச் சென்றதும் நிஷிலா எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்திவிட்டு வந்த போது வானம் மழை வருவது போல் லேசாக இருட்ட துவங்கியது...

"மருதாணி..."

கொடியில் காயும் துணிகளை எடுக்க வேண்டி அவள் மருதாணியை அழைத்தாள்... அவளை அங்குக் காணவில்லை...

"எங்கே போய்த் தொலைந்தாளோ...?" என்று முணுமுணுத்துக் கொண்டே அவள் துணிகளை எடுக்கச் சென்றாள்...

அதற்குள் மழை லேசாகத் தூற துவங்கியது... அவசரமாக எல்லாத் துணிகளையும் எடுத்து வந்து உள்ளே இருந்த கொடியில் காயப் போட்டவள் பின்பு தங்களது அறைக்கு

உடை மாற்ற சென்றாள்... அவள் பின்னேயே வந்த சிம்மவிஷ்ணு அவள் அறைக்குள் நுழைந்ததும் அவளைப் பின்னால் இருந்து அணைத்துக் கொண்டான்...

"விடுங்க... ட்ரெஸ் எல்லாம் ஈரமாயிருக்கு..."

"மழையில் ஏன் நனைஞ்ச...?"

"வேண்டுதல்..." என்று அவனைப் பார்த்து முறைப்புடன் கூறியவள்,

"மருதாணியைக் காணலை... அதான் நானே எல்லாத் துணிகளையும் எடுத்து உள்ளே போட்டேன்... தெரியாத ஊரில் எங்கே போனாள்ன்னு தெரியலை..." என்று கவலையோடு கூறியவளிடம் அவன் இழைந்தபடி,

"மருதாணிய விட்டா ஊரை வித்துட்டு வந்திருவாள்... நீ கவலைப்படாதே..." என்றவன் அவளது முகத்தைத் திருப்பி அவளது இதழோடு இதழ் பதித்தான்...

முதலில் திமிறியவள் பின்பு அவனது அணைப்பில் பாந்தமாய் அடங்கினாள்... சிறிது நேரம் கழித்து மூச்சுவாங்க அவளை விடுவித்தவன் அவளைக் கண்டு மந்தகாச புன்னகையுடன்,

"தேங்க்ஸ்டி..." என்க...

"எதுக்கு...?" தெரிந்து கொண்டே அவள் கேட்க...

"எல்லாத்துக்கும்..." என்று அவன் கண்சிமிட்டி சிரித்தான்...

"உங்க சந்தோசம் தான் என் சந்தோசம்..." என்று அவனது நெஞ்சை தொட்டு காண்பித்தவளின் கையைப் பிடித்து அவளது விரல்களின் நுனியில் முத்தமிட்டவன்,

"சந்தோசத்தைக் கொண்டாடுவோமா...?" என்று குறும்பாய் கேட்க...

"மாமா இருக்கும் போது இது என்ன விளையாட்டு...?" தனது கையை அவள் இழுத்துக் கொள்ள...

"அப்போ அவர் இல்லாத போது விளையாடலாமா...?"

"என்னமோ விளையாடாத மாதிரி பேச்சை பார்..." என்று முறைப்புடன் கூறியவள் அவனை வெளியில் தள்ளி கதவை சாத்தி கொண்டாள்...

கதவின் இருபக்கமும் நின்றிருந்தவர்களின் முகத்தில் அப்படியொரு நிறைவான புன்னகை மலர்ந்தது...

************************

"மருதாணி, நிலா எங்கே...?"

காலையில் மனைவியை வீட்டில் காணாது சிம்மவிஷ்ணு அலறினான்...

"பாப்பா வெளியில் போயிட்டு வர்றேன்னு போச்சுங்க..."

அவன் யோசனையுடன் அமர்ந்துவிட்டான்... இந்த ஊரில் அவளுக்கு யாரையும் தெரியாதே... எங்கே சென்றாள்? என்று அவன் குழப்பத்துடன் அமர்ந்திருந்தான்...

மதிய நேரம் வீட்டிற்குள் நுழைந்த நிஷிலாவை கோபமாய் வரவேற்றான் சிம்மவிஷ்ணு...

"சொல்லாம கொள்ளாம எங்கே போயிருந்த...?" அவள் அதற்குப் பதில் சொல்லாது,

"நீங்க எழும்பறதுக்குள்ள வந்திரலாம்ன்னு தான் போனேன்... சாரி கொஞ்சம் லேட்டாகிருச்சு..."

அவளது மன்னிப்பை கண்டு கொள்ளாதவனாய், "எங்கே போன...?" என்றான் விழி சுருங்க...

அவனை நேர்ப்பார்வை பார்த்தவள், "அம்முவை பார்க்க போயிருந்தேன்..." என்றாள் நிதானமாக...

"என்னையும் கூட்டிட்டு போயிருக்கலாமே..." என்றான் அவன் ஏக்கத்துடன்...

"அது முடியாது..."

மகளைக் கண முடியாத அவனது ஆதங்கம் கோபமாய் வெளிப்பட்டது...

"ஏன்டி முடியாது...?" அவன் கோபத்துடன் அவளைப் பிடித்து உலுக்கினான்...

"முடியாதுன்னா முடியாது..." என்று அவள் நிர்தாட்சண்யமாய் மறுத்தாள்...

அடுத்த நொடி அவன், "எனக்கும் என் மகளுக்கும் இடையில் வர நீ யாருடி...?" என்று கோபமாய் அவளது கழுத்தை பிடித்து நெரித்திருந்தான்...

பழைய சிம்மவிஷ்ணுவாய் அவன் ரௌத்திரம் பொங்க நின்றிருந்தான்... அவனது அக்னிபார்வையில் நிஷிலாவின் தண்டுவடம் பயத்தில் சில்லிட்டது...!!!

“அவனின் ரணத்திற்கு மருந்தாய் அவள்,
அவளின் ரணத்திற்கு மருந்தாய் அவன்,
ஒருவர் இல்லையேல் மற்றவர் இல்லை... இருந்தும்,
அவளைப் புரியாது அவன் கோபம் கொள்வதும்,
அவனைப் புரியாது அவள் பயம் கொள்வதும், ஏனோ?
காதல் மலரும் போது காயங்கள் ஆற கூடுமோ...???”

கொள்ளும்...!!!

மருத்துவமனை வரந்தாவில் வேகமாக நடந்து வந்த நிஷிலாவின் முகத்தில் வியர்வை துளிகள் பூத்திருந்தது... அவளது மனமோ அச்சத்தில் அதிர்ந்து கொண்டிருந்தது... கணவன் இருந்த அறையின் முன் அமர்ந்திருந்த அவனது பெற்றோர் முன் வந்து நின்றவள்,

"அவரை ஆபரேசன் தியேட்டருக்கு கூட்டிட்டு போயிட்டாங்களா...?" என்று கேட்டவளின் முகத்தில் அப்படியொரு பரபரப்பு இருந்தது... தாமதமாக வந்த காரணத்தால் அவளது மனம் பயத்தில் வேகமாக அடித்துக் கொண்டது...

"விஷ்ணு நீ இல்லாம போக மாட்டேன்னு சொல்லிட்டான்ம்மா... உனக்காகத் தான் அவன் காத்துக்கிட்டு இருக்கிறான்... போய்ப் பாரும்மா..."

மீனாட்சிக்குப் பதில் கூற கூடப் பொறுமையற்று அவள் வேகமாக அறை கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றாள்... அவளது கண்கள் கணவனைத் தேடி அவன் மீது நிலைத்து நின்றது... அறுவை சிகிச்சைக்காகத் தலைமுடி மழிக்கப்பட்டு மொட்டையாக இருந்தவனைக் காண காண அவளுக்கு அழுகை வரும் போலிருந்தது... எப்படியிருந்தவனின் நிலை இப்படியாகி விட்டதே என்றெண்ணி அவள் வேதனை அடைந்தாள்...

சிம்மவிஷ்ணுவோ அவளைப் புன்னகையுடன் பார்த்திருந்தான்... இளஞ்சிவப்பு, இளம்பச்சை கலந்த கைத்தறி புடவையில், எளிமையான அலங்காரத்தில், கையில் கோவில் பிரசாத கூடையுடன் இருந்தவளின் அழகு அவனுள் முதன்முறையாகச் சொட்டு சொட்டாக இறங்கியது... அவளுடன் வாழ்ந்து ஒரு குழந்தையைப் பெற்றெடுத்து அதற்குப் பத்து வயதாகி விட்ட இத்தனை வருடங்களில் இப்போது தான் அவளது அழகு தன்னைப் பாதிப்பதை உணர்ந்து அவன் தனக்குள் வெட்கம் கொண்டான்...

அவனைப் பரிசோதித்துக் கொண்டிருந்த அவர்களது குடும்ப மருத்துவர் அவளின் வரவை உணர்ந்து இருவருக்கும் தனிமை கொடுத்துவிட்டு வெளியில் சென்றுவிட்டார்... அவர் சென்றதும் அவன் 'வா' என்பது போல் தனது வலக்கையை அவளை நோக்கி நீட்டினான்... அவனின் அழைப்பை உணர்ந்து அவளும் அவனை நோக்கி வேகமாக வந்தாள்... அவளைப் பார்த்து சிரித்தபடி,

"இன்னைக்கு என்ன அதிசயமா இருக்கு...? ஒழுங்கா தலைவாரி, நீட்டா ட்ரெஸ் எல்லாம் பண்ணியிருக்க..." என்று கேட்டவனின் வார்த்தையில் அவள் தனது கவலையகன்று அவனை முறைத்து பார்த்தாள்...

"நான் எப்போதும் இப்படித் தான்..." என்று அவள் கோபமாய் முறுக்கி கொள்ள...

"பொய் சொல்லாதே... முட்டிங்கால் வரை கவுன் மாட்டிக்கிட்டு, தலைமுடியை மேலே தூக்கி கொண்டை போட்டுட்டு இருந்த நிலாவை தான் நான் அதிகம் பார்த்திருக்கிறேன்..."

"கல்யாண முடிஞ்ச நாளில் இருந்து உங்களுக்காக நான் அலங்காரம் பண்ணிக்கலையா...? அப்படிப் பண்ணாம இருந்தா மருதாணி தான் சும்மா விடுவாளா...?" எந்தவித கோபமும் இல்லாது சாதாரணமாகக் கேட்டவளின் முகத்தைப் பார்க்க முடியாது அவன் குற்றவுணர்வில் வேறுபக்கம் தன் தலையைத் திருப்பிக் கொண்டான்...

அதை உணராது அவள் அவனது முகத்தைத் தன்புறம் திருப்பித் தன் கையிலிருந்த பிரசாத கூடையில் இருந்து குங்குமத்தை எடுத்து அவனது நெற்றியில் பூசிவிட்டாள்... அப்போது தான் அவனது முகச்சுணக்கத்தை அவள் கண்டாள்...

"ஏன்...? என்னாச்சு...?" அவளது விழிகள் அவனது முகத்தில் அலைபாய்ந்தது...

"நான் அப்போ..." என்று இழுத்து நிறுத்தியவனைக் கூர்ந்து பார்த்தவள்,

"அப்போ...?" என்று கேள்வியாகப் பார்க்க...

"உன்னைக் கவனிச்சுப் பார்த்தது கிடையாது... முதன்முறையாக உன்னைக் கவனிச்சுப் பார்த்தது ஹாஸ்பிட்டலில் வச்சு தான்..." என்றவனின் குரல் இறங்கி போய் ஒலித்தது...

அவனைப் போன்றதொரு மனநிலையில் தான் அவள் இன்னமும் இருக்கிறாள்... அதனால் அந்தப் பேச்சை மாற்ற எண்ணியவளாய் அவன் முன் பிரசாத கூடையை நீட்டியவள்,

"எனக்கு வச்சு விடுங்க..." என்க...

அவளது கையிலிருந்த குங்குமத்தை பார்த்தவனின் மனம் அதிர்ந்தது... மெல்ல அவளிடம், "வேண்டாம்..." என மறுத்தான்...

"ஏன்...?"

"நான் உயிரோடு திரும்பி வருவேன்ங்கிற நம்பிக்கை எனக்கு இல்லை..." என்றவனைக் கோபத்துடன் பார்த்தவள்,

"இப்படியெல்லாம் பேசுனீங்க... உங்களை நானே கொன்னுருவேன்... ஆபரேசன் நல்லபடியா முடிஞ்சு நீங்க உயிர் பிழைச்சு வரணும்... நீங்க ஆயிரம் வருசம் உயிர் வாழணும்..." என்றவளை இமைக்க மறந்து பார்த்தவனின் விழிகளில் இருந்து கண்ணீர் கரகரவென வழிந்தது...

"ப்ளீஸ் அழாதீங்க... எனக்கும் அழுகை வருது..." என்றவள் தாங்க முடியாது அவனது முகத்தோடு முகம் வைத்துக் கண்ணீர் வடித்தாள்... இருவரது விழிநீரும் கலந்து அவனது கன்னத்தில் வழிந்தோடியது...

"ஏன்டி என் மேல் இவ்வளவு பாசம் வைக்கிற...?"

"இத்தனை நாள் உங்களைப் புரிஞ்சிக்காம இருந்துட்டேன்... நீங்க நல்லவருன்னு இப்போ தான் நல்லா புரிஞ்சிக்கிட்டேன்..." என்றவள் கண்ணீரை துடைத்துக் கொண்டு மீண்டும் பிரசாத கூடையை எடுத்து அவனிடம் நீட்டினாள்...

"ஒருவேளை இந்த ஆபரேசனில் நான் செத்துட்டா...? வேண்டாம்..." மீண்டும் மறுத்து முனங்கியவனைக் கண்டு கோபம் கொள்ளாது,

"ஆதிக்காகவாவது நீங்க நம்பிக்கையோடு இருக்கணும்... அவளுக்காக நீங்க நல்லபடியா திரும்ப வரணும்... ஆதி உங்களை ரொம்ப மிஸ் பண்ணுகிறாள்..." என்று வருந்தியவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"கடைசிவரைக்கும் நீ என் மகளை என் கண்ணில் காட்டவே இல்லைடி..." மனத்தாங்கலுடன் கூறியவனைக் கண்டு அவள் பெருமூச்சு விட்டாள்...

அன்று சிம்மவிஷ்ணு அவளது கழுத்தை பிடித்து நெரித்த போதும் அவள் அவனை மகளைக் காண அனுமதிக்கவில்லை... அப்படியிருந்தும் அவன் அவளது சொல் பேச்சு கேட்காது தானே கிளம்பினான்..

"நீங்க பழைய சிம்மவிஷ்ணுவா மாறி ஆதி முன் போய் நிற்கணும்... அதைத் தான் அவளும் விரும்புவாள்... இப்போ இப்படியிருக்கிற அப்பாவை இல்லை... அதே போல் அவளோட அப்பாவா நீங்க கடைசிவரை அவள் கூட இருக்கணும்... இந்த உறுதியோட நீங்க உங்க ஆபரசேனை வெற்றிகரமா முடிச்சிட்டு அவளைப் போய்ப் பாருங்க... அப்போ அப்பா, மகளுக்கு இடையில் நான் வர போவதில்லை..." என்று தீர்மானமாகக் கூறியவளை கண்டு அவன் ஓய்ந்து போய் அமர்ந்துவிட்டான்... அவள் கூறியதிலும் உண்மை இருக்கிறதே...

அதை நினைத்து பார்த்தவனின் மனம் சுணங்கி போனது... அவனது மனச்சிணுக்கத்தைக் கண்டு கொண்டவளின் விழிகளில் கண்ணீர் துளிர்த்தது...

"எனக்கும் மட்டும் அந்த ஆசையில்லையா என்ன...? அவளுக்கு விவரம் தெரிஞ்ச வயசில் இருந்து அவளோட அப்பா ஏக்கத்தைக் கூடயிருந்து நான் பார்த்திருக்கிறேன்... மத்த குழந்தைங்க மாதிரி அவள் எதையும் வெளிக்காட்டிக்க மாட்டாள்... ஆனா மனசுக்குள் அவள் நிரம்ப வருத்தப்படுவாள்... அதனால் தான் நான் அப்படிச் சொன்னது... அவளுக்கு அப்பாவா நீங்க காலம் முழுவதும் அவள் கூடயிருந்து அன்பு செலுத்தணும்... அவளோட எதிர்காலத்தை நீங்களும், நானும் சேர்ந்து தான் அமைச்சு கொடுக்கணும்... அவளுடைய பொறுப்பைத் தனியா என் கிட்ட தள்ளிட்டு போயிராதீங்க..." என்றவளின் விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது...

அதைக் கண்டு அவனது மனதில் உறுதி பிறந்தது... அதே சமயம் மனைவியைக் கண்டு இரக்கம் சுரந்தது... இத்தனை நாள் அவளைத் தனியே தவிக்கவிட்டது போதும்... இனியும் அவளைத் தனியே தவிக்கவிடக் கூடாது என்று திடமாய் முடிவெடுத்தவன் அவளது கையைப் பிடித்துக் கொண்டு,

"உனக்காக, நம் மகளுக்காக நான் நிச்சயம் உயிர் பிழைத்து வருவேன்..." என்று கூறியவனை அவள் முகம் மலர பார்த்தாள்...

ஆதவனைக் கண்ட கமலம் போன்று முகம் மலர்ந்தவளின் மலர்ச்சி அவனையும் தொற்றிக் கொள்ள அவன் மகிழ்வாய் குங்குமத்தை எடுத்து அவளது நெற்றியில் வைத்துவிட்டான்...

"உங்களுக்காக நாங்க ரெண்டு பேரும் காத்துக்கிட்டு இருக்கோம் என்பதை நினைவில் வச்சுக்கோங்க..."

"நிச்சயமா..." என்று வசீகரமாகப் புன்னகைத்தவனைக் கண்டு அவள் நிம்மதியுற்றாள்...

சுந்தரபாண்டியன், மீனாட்சி இருவரும் அந்த அறையினுள் நுழைந்தனர்... ஆதிரையை மருதாணி பொறுப்பில் விட்டு விட்டு அவர்கள் இருவரும் இங்கு வந்திருந்தனர்...

"விஷ்ணு..." மகனின் தோற்றம் கண்டு கண்கலங்கியது இருவருக்கும்...

"அப்பா, அம்மா தைரியமா இருக்கணும்... உங்க மகன் மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லையா...? எதிரிகளைப் பந்தாடிய எனக்கு எமனை பந்தாட தெரியாதா என்ன...?" என்று அவன் அவர்களைப் புன்னகையுடன் ஆறுதல்படுத்த...

இத்தனை நேரம் சிறுபிள்ளை போன்று தன்னிடம் நம்பிக்கையின்மையுடன் பேசியவனா இவன்? என்று நிஷிலா அவனை ஆச்சிரியத்துடன் பார்த்தாள்...

"அந்த நம்பிக்கை எங்களுக்கு இருக்கு விஷ்ணு..." என்று அவர்கள் தங்களைத் தேற்றி கொண்டனர்...

அதற்குள் செவிலிப்பெண்கள் அவனை அறுவை சிகிச்சை அறைக்கு அழைத்துச் செல்ல வந்தனர்... அவன் அமைதியாக ஸ்ரெட்ச்சரில் ஏறி படுத்தான்... அவனைத் தள்ளி கொண்டு போகும் போது நிஷிலாவும் அவனது கையைப் பற்றியபடி உடன் நடந்தாள்... அறைக்குள் அவனைக் கொண்டு செல்லும் முன் அவளது கை அவனது கையை அழுத்தமாகப் பிடித்தது... அதில் அவன் செவிலிப்பெண்களிடம்,

"ஒரு நிமிசம்..." என்று அனுமதி கேட்க... அவர்கள் சரியென்று தலையசைத்தனர்...

கலங்கிய விழிகளுடன் தன்னைப் பார்த்த நிஷிலாவை அருகில் அழைத்தான் சிம்மவிஷ்ணு... அவள் அவன் அருகே சென்று குனிந்து அவனது முகத்தைப் பார்க்க... மிக அருகில் தெரிந்த அந்த அழகு முகம் அவனது மனதில் ஆழ சென்று பதிந்தது... அவளது விழிகளில் தெரிந்த கலக்கத்தில் அவனது மனம் கலங்கி போயிற்று... அவளுக்காகவாவது தான் பிழைத்து வர வேண்டும் என்று அவன் ஆசை கொண்டான்... அவளுக்காகவே அவன் நிறைய வருடங்கள் உயிர் வாழ வேண்டும் என்று அவன்

விருப்பம் கொண்டான்... இந்தக் கணம் மகளின் நினைவு கூட அவனுக்குப் பின்னுக்குப் போய்விட்டது...

இந்த மூன்று மாத காலமாகத் தனக்காக வாழ்ந்த மனைவி மட்டுமே அவனது மனதினை ஆக்கிரமித்து இருந்தாள்... அவளது தன்னலமற்ற அன்பு அவனது மனதில் சாரலாய் சுகமாய் இறங்கியது... எதிரியாகி போன கணவனிடத்தில் அன்பு பாராட்ட அவளால் மட்டுமே முடியும்... அவளது அன்பில் திகட்ட, திகட்ட சுகமாய் நனைந்த நினைவுகளை நினைத்து பார்த்தவனின் உதடுகளில் ரகசிய புன்னகை தவழ்ந்தது...

உள்ளத்தின் உணர்வு போராட்டத்தில் தவித்த அவளது இதழ்களைத் தன் கைவிரல் கொண்டு மென்மையாய் வருடியவன், "எப்ப பாரு அழுதுக்கிட்டு இருக்கிற இந்த அழுகுணி பொண்ணு எனக்கு வேண்டாம்..." என்று நமட்டு சிரிப்புடன் கூற... அவள் தன் வருத்தம் மறந்து அவனைப் பார்த்து முறைத்தவள்,

"போடா, நீ தான் அழுக்கு பையன்..."

அவளது ஏகவசனத்தில் அவனது முகம் பூவாய் மலர்ந்தது... அவளது கீழுதட்டை பிடித்திழுத்தவன்,

"எத்தனை வருசமாச்சு நீ இப்படி என்னை வா, போன்னு பேசி..." என்றவனை அவள் வியப்பாய் பார்க்க...

"இப்போது தான் பழைய நிலாவை பார்க்கிற மாதிரியிருக்கு... சின்னப் பொண்ணா இருந்தாலும் அவள் ரொம்பத் தைரியமானவள்... உன்னை மாதிரி அவள் அழ மாட்டாள்..."

அவன் எதையும் மறக்கவில்லை என்பதை உணர்ந்து அவளது மனம் நெகிழ்ந்து போனது... அவளது விழிகளில் துளிர்த்த நீர் அவனது கன்னத்தில் சொட்டியது...

"திரும்பவும் அழுகையா...?" என்று அவன் சலித்துக் கொள்ள... அவள் அவனை முறைத்தாள்...

"சரி, சரி முறைக்காதே... இந்த அழுக்கு பையனுக்கு இந்த அழுகுணி பொண்ணு போதுமாம்... ஏன்னா அவளைத் தான் அவனுக்கு ரொம்பப் பிடிச்சிருக்காம்..."

தன்னையும் அறியாது தன் மனதினை அவன் வெளிப்படுத்தினான்... அவனது வார்த்தைகளில் அவள் திகைத்து போய் அவனை விழிவிரித்துப் பார்த்தாள்... அவனோ உல்லாச புன்னகையுடன் அவளது கன்னம் தட்டியவன் பின்பு அவளது கையைப் பிடித்து அதில் ஒரு அழுத்தம் கொடுத்தான்...

"நான் வருகிறேன்..." அவன் சொன்னதும் அவள் அவனை விட்டு விலகி நின்றாள்...

சிம்மவிஷ்ணு தலையைத் திருப்பிப் பெற்றோரை பார்த்து புன்னகைத்தவன் பின்பு அவளைப் பார்த்து விழிகளால் ஆறுதல் சொல்லிவிட்டுப் புன்னகை முகமாய் அறுவை சிகிச்சை அறைக்குள் சென்றான்...

தனித்து நின்ற மருமகள் அருகில் செல்ல முயன்ற மனைவியைத் தடுத்த சுந்தரபாண்டியன், "இந்த நேரம் ஆறுதலை விட அமைதி தான் தேவை..." என்று கூறி விட... மீனாட்சி கவலையுடன் நாற்காலியில் அமர்ந்துவிட்டார்... சுந்தரபாண்டியனும் கலக்கத்துடன் மனைவி அருகில் அமர்ந்தார்...

அவன் சென்றதும் நிஷிலா ஓய்ந்து போய் அங்கிருந்த வேறொரு நாற்காலியில் அமர்ந்தாள்... கணவன் நல்லபடியாகப் பிழைத்து வர வேண்டும் என்கிற வேண்டுதலோடு இனி தான் என்ன மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவளது மனம் வேகமாகச் சிந்திக்க ஆரம்பித்தது... அதை விட வேகமாக அவளது மனம் பழைய நிகழ்வுகளை நினைத்துப் பார்த்தது...

மயக்க மருந்தின் வீரியத்தில் சிம்மவிஷ்ணுவின் நினைவுகள் மெல்ல மங்க துவங்கியது... அவன் தன்னை மறந்த நிலையிலும் மனைவியவளின் மதி முகத்தை

மறக்கவில்லை... அந்தளவிற்கு அவள் அவனுள் ஆழமாகப் பதிந்திருந்தாள்... விழிகளுக்குள் இருள் சூழ, சூழ அவனது மனதில் கடந்தகாலக் கருப்பு நாட்கள் படமாக விரிந்தது... அவனது நினைவுகள் வேகமாகப் பின்னோக்கி பயணிக்க ஆரம்பித்தது...

அதே நேரம் சிம்மவிஷ்ணு அறுவை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருப்பதை அறிந்த இளவரசி செய்வதறியாது திகைத்தார்... அவன் திரும்ப உயிரோடு வந்தால் எல்லாம் நாசாமாகி போகுமே... அவரது தொழில் மட்டுமல்லாது வாழ்க்கையும் சேர்த்து அல்லவா...? இத்தனை நாள் இறுமாப்பாய்த் தைரியமாக இருந்தவர் இன்று மிகவும் தளர்ந்து போனார்... அவரது மனம் கடந்த காலத்திற்குப் பயணப்பட்டது வேண்டா வெறுப்பாய்... அவர் மறக்க நினைக்கும் கசப்பான வெறுப்பான நிகழ்வுகள் அல்லவா அது...

*******************

நாகர்கோவில் அருகே இருந்த அஞ்சேரி என்கிற ஊர் விவசாயத்தை முக்கியத் தொழிலாகக் கொண்ட ஊர்... நீர்வளம் நிறைந்த அந்த ஊர் பார்ப்பதற்குப் பச்சைப்பசேல் என்று செழிப்புடன் இருந்தது... அந்த ஊரில் செல்வாக்கு பெற்ற ஜமீன் குடும்பம் செல்வரத்தினத்தின் குடும்பம்... பெற்றோரை இழந்து தம்பி மணிபாரதி மற்றும் தங்கை இளவரசியுடன் அவன் தனியே வாழ்ந்து வந்தான்...

யாரையும் அருகில் அண்டவிட்டது கிடையாது... ஏனெனில் பணக்காரன், உயர்ந்த சாதி என்கிற திமிர் எப்போதும் அவனது இரத்தத்தில் ஊறியிருந்தபடியால் யாரிடமும் இறங்கி சென்று பழக மாட்டான்... அதிலும் வேலைக்காரர்களைக் கேட்கவும் வேண்டாம்... அவனது தம்பியும், தங்கையும் அதே மாதிரி தான் இருந்தார்கள்...

திமிர் பிடித்த பதினாறு வயது இளவரசியைக் காதல் நோய் தாக்கியதில் அதன் மயக்கத்தில் அவளது திமிர் சற்று அடங்கித் தான் போயிற்று... அவள் அதே ஊரில் இருக்கும் கல்லூரியில் படிக்கும் இசக்கிமுத்துவிடம் காதல்

வயப்பட்டாள்... வட இந்தியாவில் கஷ்டப்பட்டு அண்ணன் சம்பாதித்து அனுப்பும் பணத்தில் இசக்கிமுத்து நன்றாக உடை அணிந்து கொண்டு நாயகன் போல் வலம் வந்தான்... வயது இருபத்தியொன்று, கல்லூரியில் மூன்றாமாண்டு படித்துக் கொண்டிருந்தான்... அவனது சொந்த ஊர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள விஜயநாராயணம்... இங்குக் கல்லூரியின் விடுதியில் தங்கி படித்துக் கொண்டிருக்கிறான்...

அவனது கல்லூரியும், அவளது பள்ளியும் அருகருகே இருந்தது... எப்படியோ, எந்தப் புள்ளியிலோ இளவரசிக்கும், இசக்கிமுத்துவுக்கும் ஈர்ப்பு ஏற்பட்டு அது காதலாக மாறிப் போனது... அவளுக்கு அவனது சாதி தெரியாது, அந்தஸ்து தெரியாது, இப்படி எதுவுமே தெரியாது அவனைக் காதலித்தாள்... வயதின் மயக்கமா? ஹார்மோன் கோளாறா? எது அவளை அவனை நோக்கி செலுத்தியது என்று அவளுக்குத் தெரியவில்லை...

அதே போல் தான் அவனும்... அவள் பணக்கார வீட்டுப் பெண் என்பதைத் தவிர வேறு எதுவும் அவனுக்குத் தெரியாது... திரைப்பட நாயகி போல் அழகாக இருந்தவளை கண்டு அவனது மனமும், மதியும் மயங்கி போனது... அவன் தன்னவளை தேவதை போல் கொண்டாடினான்... அதில் தான் அவள் அவனிடம் வீழ்ந்து போனாளோ என்னமோ...?

அன்று இசக்கிமுத்துவை சந்திக்க வந்திருந்த இளவரசியின் விழிகளில் அச்சம் படர்ந்திருந்தது... அவனுக்காக வகுப்பு நடந்து கொண்டிருக்கும் போதே தலைவலி என்று பொய் சொல்லிவிட்டு வெளியில் வந்துவிட்டாள்... இருவரும் தனியே சந்திக்கும் பனங்காட்டில் அவள் மட்டும் தனியாக நின்றிருந்தாள்... பனைவோலையின் சலசலப்பில் அவளது நெஞ்சம் ஒவ்வொரு நொடியும் அதிர்ந்து அடங்கியது...

அப்போது அங்கே வந்த இசக்கிமுத்து அவள் இருப்பதைக் கண்டு அவளை நோக்கி வேகமாக ஓடிவந்தான்...

"என்ன புள்ள நேரத்தோட வந்துட்ட...?"

"முத்து, உன் கிட்ட ஒரு விசயம் சொல்லணும்..." நாலா பக்கமும் பயத்துடன் விழிகளை ஓட்டினாள் இளவரசி...

"இந்தத் தோடு உனக்கு அழகாயிருக்கு இளா..." என்றபடி அவளை அணைத்தவனின் உதடுகள் அவளது காது மடலை வருடியது...

அதில் மனம் மயங்கியவள் அவனுடன் இழைந்து நின்றபடி, "முத்து..." என்று இழுக்க...

"சொல்லு புள்ள..." என்றவனின் கைகள் அவளது மேனியில் சற்று எல்லை மீறி அலைபாய்ந்தது...

அவர்கள் இருவருமே காதல் மோகத்தில் பல முறை சற்று எல்லை தாண்டி இருக்கின்றனர்... அதனால் வந்த தைரியம் இது...

"நான்..."

"நீ...?"

"கர்ப்பமா இருக்கேன்னு நினைக்கிறேன்..."

அவளின் மேனியை வீணை போல் மீட்டி கொண்டிருந்தவனின் கைகள் ஒரு நொடி தயங்கி நின்றது... பின்பு முன்பை விட அதிகச் சுதந்திரமாய் அலைபாய்ந்தது...

"ப்ச், விடு முத்து..." என்று சிணுங்கியபடி அவனிடம் இருந்து விலகி நின்று அவனை முறைத்து பார்த்தவள்,

"இப்போ என்ன பண்ணாலம்ன்னு சொல்லு...?" என்றவளை திடுமெனத் தூக்கி சுற்றியவன்,

"சந்தோசமான விசயத்தைச் சொல்லியிருக்க இளா... நான் ரொம்பச் சந்தோசமா இருக்கேன்..." என்று அவன் உண்மையான மகிழ்ச்சியுடன் முகம் எல்லாம் பூரிக்கக் கூற... அவள் தான் சற்று குழம்பி போனாள்...

"இது தப்பு இல்லையா...? இன்னும் கொஞ்ச நாளில் என் வயிறு காட்டி கொடுத்திடும்... என் அண்ணன்களுக்கு நான் என்ன பதில் சொல்றது...?" அவள் பயத்துடன் அவனைப் பார்த்தாள்...

அவளது வார்த்தைகளில் அவன் யோசனையாய் நின்றிருந்தான்... பின்பு மெல்ல,

"நான் ஏமாத்திருவேன்னு பயப்படுறியா...? வேணும்ன்னா ஒண்ணு பண்ணு... இப்பவே என் கூட வா... நம்ம சுடலைமாடன் கோவிலில் வச்சு உனக்குத் தாலி கட்டி என் பொஞ்சாதியா ஆக்கிக்கிறேன்..." என்று அவன் அவளது கையைப் பிடித்திழுத்தான்...

"ஐயோ என்ன பண்ற முத்து...?" அவள் அவனது கையை உதறினாள்...

"அப்போ என்னை என்ன பண்ண சொல்லுற...?" தான் என்ன செய்ய வேண்டும்? என்று அவனுக்குச் சத்தியமாகப் புரியவில்லை...

"நாம இந்த ஊரை விட்டு எங்கேயாவது ஓடி போயிரலாம் முத்து... நீயும், நானும் கல்யாணம் பண்ணிட்டு இந்த ஊரில் நிம்மதியா வாழ முடியாது... முக்கியமா என் அண்ணனுங்க நம்மளை வாழ விட மாட்டாங்க..." காதலின் வேகம் அவளை அப்படிப் பேச வைத்தது...

"என்ன பண்ணிருவான்ங்களாம் உன் நொன்னையன்ங்க..." இளரத்தம் அல்லவா அதனால் இசக்கிமுத்து அடாவடியாகப் பேசினான்...

"ப்ளீஸ் முத்து... நாம வாழணுமா...? இல்லை அவங்க கையில் சாகணுமான்னு நீயே முடிவு எடு... நான் கிளம்பறேன்..." என்று பையை எடுத்துத் தோளில் மாட்டி கொண்டு அவள் செல்ல முயன்ற போது அவளைத் தடுத்து நிறுத்தினான் அவன்...

"என்ன...?"

அவளின் முன் மண்டியிட்டு அமர்ந்து அவளது தாவணியை விலக்கி வயிற்றில் மென்மையாக முத்தமிட்டவன் அவளை ஏறிட்டு பார்த்து,

"நம்ம குழந்தைக்கு..." என்று வசீகரமாகச் சிரித்தவனிடம் அவள் விரும்பியே தொலைந்தாள்...

அவனது தலையைத் தனது வயிற்றோடு சேர்த்து அணைத்து கொண்டவள், "குழந்தையோட அம்மாவுக்கு இல்லையா...?" என்று கிறக்கத்துடன் கேட்க...

"அம்மா தான் அப்பாவை விட்டுட்டுக் கிளம்பறதில் குறியா இருக்காளே..." என்று அவன் மனத்தாங்கலுடன் கூற...

"போகலை..." என்றவளின் வார்த்தையில் வழிந்த தாபத்தில் அவன் அவளைத் தனது கைகளில் அள்ளி கொண்டான்...

தனது கைகளில் அவளை ஏந்தியபடி அங்கிருந்த சிறு ஓலை குடிசைக்குள் சென்றவன் அடுத்த நொடி அவளைத் தனது அணைப்பில் கொண்டு வந்திருந்தான்... சிறிது நேரம் கழித்துத் தனது காரியத்தைச் சாதித்துக் கொண்டு விலகியவனை இழுத்து அணைத்து கொண்டவள்,

"எனக்குப் பயமாயிருக்கு முத்து..." என்க...

முகத்தில் வியர்வை வடிய படுத்திருந்தவளின் வியர்வை துளிகளைத் துடைத்துவிட்டவன்,

"இன்னைக்கு நைட் வீட்டை விட்டு கிளம்பி வந்திரு... ராஜஸ்தான்ல என் அண்ணா வேலை பார்க்கிறாரு... அவர் கிட்ட நாம போயிட்டா யாராலையும் நம்மளை கண்டுபிடிக்க முடியாது..."

"என் அண்ணங்களைப் பத்தி உனக்குத் தெரியாது முத்து... உன் அண்ணாவை வச்சு நம்மளை ஈசியா கண்டுபிடிச்சிருவாங்க..."

"அவ்வளவு ஈசியா கண்டுபிடிக்க முடியாது இளா... என் அண்ணன் எங்க ஊருக்கு வந்து வருசக்கணக்கா ஆகுது...

எங்கப்பா, அம்மா இறந்ததுக்கு வந்தது... அதுக்குப் பொறவு அவர் அங்கே வரலை... அவர் வடக்கே இருக்காருன்னு தான் எல்லோருக்கும் தெரியும்... ஆனா எங்கேன்னு யாருக்கும் தெரியாது..." என்றவன் அவளது நெற்றியோடு முட்டியபடி,

"முதலில் உங்க அண்ணன்களுக்கு நீயும், நானும் காதலிக்கிறோம்ங்கிற விசயம் தெரியுமா...?"

"அண்ணன்களுக்கு மட்டுமில்லை யாருக்குமே தெரியாது..." என்றவளின் முகத்தில் சிறுநிம்மதி எழுந்தது...

"அப்போ தைரியமாயிரு புள்ள..." என்றவன் எழுந்து நின்று கொண்டு அவள் எழுவதற்காகக் கை நீட்டினான்... அவனது கையைப் பிடித்துக் கொண்டு எழுந்தவள் தனது உடையைச் சரிப்படுத்திக் கொண்டு வீட்டிற்குக் கிளம்பினாள்...

"இளா..."

"என்ன முத்து...?"

"கட்டின உடையோட நீ வந்தா போதும்... உன் வீட்டில் இருந்து எதையும் எடுத்துட்டு வர வேண்டாம்... உனக்கு வேண்டியது எல்லாம் நான் தான் செய்யணும்..." என்றான் அவன் உறுதியான குரலில்...

"ம்..." என்றவள் சந்தோசமாய்த் தலையாட்டினாள்...

ஆண்மகனான அவனது தன்னம்பிக்கை அவளுள் கர்வமான சிலிர்ப்பை ஏற்படுத்தியது...

இளவரசி வீட்டிற்குள் நுழைந்த போது பத்ரிநாத்தின் கார் அங்கு நின்றிருந்தது... வரவேற்பறையில் அமர்ந்து பத்ரிநாத் செல்வரத்தினம் மற்றும் மணிபாரதியிடம் பேசி கொண்டிருந்தான்... அவனது விழிகள் உள்ளே நுழைந்த இளவரசியைக் காதலாகப் பார்த்ததை மற்ற இரு ஆண்களும் அறியவில்லை... அவர்கள் இருவரும் தொழில் பேச்சில் சுவாரசியமாக இருந்தனர்...

"வசி எப்படியிருக்க...?" அன்பு பொங்க கேட்ட பத்ரிநாத்தின் பக்கம் திரும்பாது அவள்,

"நல்லாயிருக்கேன்..." என்றபடி உள்ளே சென்றுவிட...

அவளது அடக்கமான அழகில் அவன் அப்படியே வீழ்ந்து போனான்... சென்னை பட்டணத்தில் எத்தனையோ அழகான பெண்களைப் பார்த்திருந்தாலும் ஏனோ அவனது மனம் அடக்கமும், பண்புமாய் இருக்கும் இளவரசியிடம் மையம் கொண்டிருந்தது... அவளின் வயதை கருதி அவன் தனது காதலை அவளிடமும், அவளது அண்ணன்களிடமும் சொல்லாது மறைத்திருந்தான்... எங்கே போய்விடப் போகிறாள்...? என்கிற அசட்டையான எண்ணமும் கூட...

இரவில் ஆண்கள் மூவரும் தொழில் நிமித்தமாய் மதுரை நோக்கி பயணிக்க... வேலைக்காரர்களின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு இளவரசி வீட்டை விட்டு ஓடிவந்து விட்டாள்... இசக்கிமுத்துச் சொன்னது போல் அவளுக்காகக் காத்திருந்தான்... இரவோடு இரவாக அவர்கள் கேரளா வழியாக இராஜஸ்தான் பயணம் செய்தனர்... தமிழ்நாடு வழியாக என்றால் அவளது அண்ணன்கள் கண்டுபிடித்து விடுவார்களோ என்று அச்சம் கொண்டனர்...

மறுநாள் காலையில் வேலைக்காரர்கள் இளவரசி வீட்டில் இல்லாததை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு செல்வரத்தினத்திற்கு அழைத்து விசயத்தைக் கூறினர்... விசயம் கேள்விப்பட்டு அவர் அச்சமடைந்து தொழில் பேச்சை புறக்கணித்துவிட்டு தம்பியையும், பத்ரிநாத்தையும் அழைத்துக் கொண்டு ஊருக்கு திரும்பினார்...

இளவரசி ஓடி போயிருப்பாள் என்று யாரும் சந்தேகிக்கவில்லை... யாரோ அவளைக் கடத்தி சென்றிருக்கலாம் என்றெண்ணி தான் அவளைத் தேட துவங்கினர்... ஆனால் எங்கும் எந்தத் துப்பும் கிடைக்கவில்லை... அந்தளவிற்கு யாருக்கும் தெரியாது மிகவும் ரகசியமாக இளவரசி, இசக்கிமுத்து பழகி வந்தனர்... ஒரு கட்டத்தில் இளவரசியைத் தேடி தேடி அவர்கள் சோர்ந்து போயினர்... இளவரசி எங்கே

இருக்கிறாள்? என்று தெரியாது விழித்தவர்களுக்கு அவள் உயிரோடாவது இருப்பாளா? என்று பெருத்த சந்தேகம் தோன்றிவிட்டது...

பெரும் துக்கத்துடன், கண்ணீருடன் அவர்களது நாட்கள் கழிந்தது... அவர்கள் இருவருக்கும் ஆறுதலாக இருந்தது பத்ரிநாத் தான்... அவன் தனது தொழிலை விட்டு விட்டு அவர்களுக்காக அங்கிருந்தான்... அவனுக்குமே இளவரசியைக் காணாது மிகுந்த வருத்தமாக இருந்தது... அவனும் தன்னிடம் இருந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவளை நாலாப்புறமும் தேடி சோர்ந்து போய்விட்டான்... அவனது மனதில் சொல்லொண்ணா வலி எழுந்தது... யாரிடமும் சொல்ல முடியாத வலி இது... அவன் அதைத் தனக்குள் போட்டு புதைத்துக் கொண்டான்...

திடீரென்று தன் முன் வந்து நின்ற தம்பியை கண்டு திகைத்துப் போனான் மாடசாமி... அதை விட அவனுடன் ஒரு பெண் வந்திருப்பதைக் கண்டு அதிர்ந்து போனான்... இசக்கிமுத்து அண்ணனை தனியே அழைத்துச் சென்று தனது காதல் விவகாரத்தைக் கூறினான்... அடுத்த நொடி மாடசாமியின் கை அவனது கன்னத்தைப் பதம் பார்த்தது...

"உன்னை விட வயசில் மூத்தவன் நான்... நான் கூட இன்னும் கல்யாணத்தைப் பத்தி யோசிக்காம உனக்காக, உன்னோட எதிர்காலத்துக்காக உழைச்சிட்டு இருக்கேன்... இன்னும் நீ படிப்பை கூட முடிக்கலை... அதுக்குள்ள உனக்குக் காதல் கேட்குதா...? ஒரு பொண்ணை இழுத்துட்டு வந்திருக்கியே அவளைக் காலம் முழுசும் கண்கலங்காம காப்பாத்த உன்னால் முடியுமா...? அதுக்கு உனக்கு ஒரு வேலை வேண்டாமா...?" கோபத்துடன் கத்தினான்...

"நீங்க வேலை பார்க்கிற கம்பெனியில் ஏதாவது வேலை வாங்கிக் கொடுங்கண்ணா..."

"ஆமா, நான் இங்கே உடுப்பு கசங்காம ஏசி ரூமில் உட்கார்ந்து வேலை பார்க்கிறேன் பாரு... நான் இங்கே மார்பிள் கல்லு அறுக்கிற வேலை பார்க்கிறேன்... அது

எவ்வளவு கஷ்டம்ன்னு உனக்குத் தெரியுமா...?" என்று தனது கையைத் தம்பியிடம் நீட்டினான் மாடசாமி...

அண்ணனின் இரண்டு கைகளும் காய்த்து போயிருந்ததைக் கண்டு இசக்கிமுத்துவின் கண்கள் கலங்கியது...

"அண்ணா சாரிண்ணா...." என்று அவன் கண்ணீர் வடிக்க...

"சரி விடு... இப்போ யோசிச்சு எந்தப் பிரயோஜனமும் இல்லை... இனி என்ன பண்ணலாம்ன்னு யோசி..." என்று மாடசாமி மூத்தவனாக அறிவுரை கூறினான்...

"நான் கஷ்டப்பட்டாலும் இளாவை காப்பாத்துவேன் அண்ணா... எனக்கு ஒரு வேலை மட்டும் வாங்கிக் கொடுங்க..." என்று கெஞ்சியவனை அதற்கு மேல் வருத்த மாடசாமிக்கு விருப்பம் இல்லை...

அவனது நிறுவனத்தில் விசாரித்துத் தம்பிக்கு ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்தவன் மறுநாள் இசக்கிமுத்து, இளவரசிக்குத் திருமணம் முடித்து வைத்தான்...

"பார்க்க பெரிய இடத்து பொண்ணு மாதிரியிருக்கு... அதைக் கண்கலங்காம வச்சுக்கோ இசக்கி..." என்று தம்பிக்கு அறிவுரை கூறியவன் தம்பிக்கு என்று தனியே வீடு பார்த்துத் தனிக்குடித்தனம் வைத்துவிட்டான்...

"எங்க கூட வந்து இருங்களேன் அண்ணா..." இசக்கிமுத்து அவனை வற்புறுத்த... மாடசாமி மறுத்துவிட்டான்...

"நான் எப்போதும் தங்கியிருக்கிற ரூம் எனக்கு வசதியா தான் இருக்கு..." என்று கூறிவிட்டு அவன் தனது அறைக்குச் சென்றுவிட்டான்...

யாருமில்லாத தனிமை, அருகில் கொள்ளை அழகுடன் காதல் மனைவி... இசக்கிமுத்து காதலும், தாபமும் பொங்க மனைவியை அணைத்தான்...

"இளா இப்போ எனக்கு எவ்வளவு சந்தோசமாயிருக்கு தெரியுமா...?" என்று சரசமாய்க் கூறியபடி அவன் அவளிடம்

இழைந்தான்...

"நாம இங்கே தான் இருக்கப் போறோமா...?" அந்தச் சின்ன வீட்டினை சுற்றி அவள் தனது விழிகளைச் சுழற்றினாள்...

ஓடு வேய்ந்திருந்த அந்தச் சிறுவீடு அவளுக்குப் பிடிக்கவே இல்லை... ஒற்றை அறையில் ஏசியில்லாது மின்விசிறி ஓடி கொண்டிருந்ததில் அவளுக்கு வியர்த்து வழிந்தது...

"ஆமா இளா..." என்றபடி அவன் அவளைத் தன்வசம் கொண்டு வர...

"ரொம்ப வியர்க்குது முத்து... இப்போ வேண்டாமே..." என்று அவள் அவனைத் தள்ளிவிட...

"வியர்க்குதா...? சொல்லவே இல்லையே..." என்றவன் தனது இதழால் அவளது வியர்வை துளிகளைப் பருக துவங்கினான்... அதில் பாவையவள் மெல்ல மனம் மயங்கினாள்...

"இப்ப குளுகுளுன்னு இருக்கா இளா..."

அவளது காதோரம் கிசுகிசுத்தவனின் குரலில் அவள் உண்மையில் சிம்லாவின் குளுமையை அனுபவித்தாள்... அந்தக் குளுமையைப் போக்க வேண்டி அவள் அவனது வெம்மையைத் தேடி அவனுடன் ஒன்றினாள்...

"கண்ணே! மணியே! கட்டிக்கரும்பே!
கொஞ்சினாலும், கெஞ்சினாலும், கிறக்கினாலும்
வயிற்று பசிக்கு காதல் உணவாகுமோ?
காற்றைச் சுவாசித்து நேசித்து வாழ
முற்றும் துறந்த முனிவனா நீ?
பல காதல் தோற்குமிடம் வறுமை...
காதல் தோற்பதில்லை,
காதலர்களே தோற்கின்றனர்...
உன் காதல் எந்த வகைக் கண்ணே?"

கொள்ளும்...!!!

"இன்னைக்கு ஸ்கேன் பார்க்க டாக்டர் வர சொல்லிருக்காங்க..."

காலை உணவை எடுத்து வைத்தபடி கூறிய இளவரசியை ஏறிட்டு பார்த்த இசக்கிமுத்துவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது...

"இதையெல்லாம் முதலிலேயே சொல்றது இல்லையா...? இப்படித் திடுப்புன்னு வந்து சொன்னா நான் பணத்துக்கு எங்கே போவேன்...?" என்று அவன் அவளிடம் காய்ந்தான்...

அவனது வார்த்தைகளில் அவளது விழிகளில் முணுக்கென்று கண்ணீர் துளிர்த்தது...

"மூணு வாரத்துக்கு முந்தி தான் அவ்வளவு செலவு பண்ணி வளைகாப்பு வச்சது... அதுக்கே நிறையப் பணம் செலவழிஞ்சு போச்சு... இப்போ பணத்துக்கு நான் என்ன பண்ணுவேன்...?" என்றவன் தனக்குள் யோசனையில் ஆழ்ந்தான்...

இளவரசி கண்ணாடி வளையல்கள் அணிந்த தனது கையால் தனது மேடிட்ட வயிற்றைத் தடவி கொண்டாள்... குழந்தை உதைப்பதை அவளது கை உணர்ந்தது... இதைக் கணவனிடம் கூறி அதற்கும் திட்டு வாங்கிக் கொள்ள அவள் தயாராக இல்லை...

"கேட்கிறதுக்குப் பதில் சொல்லு புள்ள...?" என்று இயலாத கோபத்தில் அவன் அவளிடம் எகிறினான்...

"நீ கேட்கிற நிலைமையிலா தினமும் வீட்டுக்கு வர்ற...?" ஆதங்கமும், கோபமுமாய் அவள் அவனைப் பார்த்தாள்...

கண்கள் கலங்க தன்னைப் பார்த்த மனையாளை கண்டு அந்தக் காதல் கணவன் மனம் பாகாய் உருகி போனது...

"உனக்கே தெரியும் இளா... நான் பார்க்கிற வேலை அத்தனை சுளுவானது இல்லைன்னு... பணத்துக்காகக் காலம் நேரம் பார்க்காம உழைக்க வேண்டியிருக்கு... அப்படி

உழைச்சு களைச்சு வீட்டுக்கு வரப்போ உடல் வலி தாங்க முடியாம குடிச்சிர்றேன்... எனக்கு வேறுவழி தெரியலை இளா... உடம்பெல்லாம் ஊசி குத்துற மாதிரி வலிக்குது... அந்த வலியை மறக்க தான் தண்ணி அடிக்கிறேன்... மத்தபடி நான் என்ன மொடாக்குடியனா...? சம்பாதிக்கிற பணம் அத்தனையும் உன் கிட்ட கொடுத்துட்டு என் செலவுக்குக் கூட உன் கிட்ட இருந்து தானே வாங்கிட்டு போறேன்..."

அவனது வார்த்தையில் இருந்த நியாயம் அவளுக்கும் புரிவதாய்... அதனால் அவள் ஒன்றும் பேசவில்லை...

"சாப்பிடு..." என்றவள் சுவற்றில் சாய்ந்து கால் நீட்டி அமர்ந்து கொண்டாள்...

"நீ சாப்பிட்டியா...?"

"இல்லை... இனிமேல் தான்..."

அவளின் அருகில் உணவு தட்டுடன் அமர்ந்தவன் தனது உணவில் இருந்து அவளுக்கு ஊட்டிவிட்டான்... அவள் மௌனமாக அதை வாங்கிக் கொண்டாள்... அவனுடன் அவள் இங்கே வந்து ஐந்து மாதங்களாகி விட்டது... ஏனோ ஐந்து யுகங்கள் கடந்தது போன்று அவளுக்கு வாழ்க்கை அத்தனை அலுப்பாக இருந்தது... வேலைக்காரர்களை ஏவி கொண்டு சொகுசாகக் கால் மேல் கால் போட்டுக் கொண்டு இருந்த பிறந்தவீட்டு வாழ்க்கைக்காக அவளது மனம் மிகவும் ஏங்க துவங்கியது... ஆனால் இது அவளாகத் தேடி கொண்ட வாழ்க்கை... மீண்டும் ஊர் திரும்பினால் அவளது அண்ணன்கள் இருவரும் அவளைக் கொன்று சாகடித்து விடுவார்கள்... உயிருக்கு பயந்தே அவள் ஊர் ஆசையில்லாது இந்த வாழ்க்கையைச் சகித்துக் கொண்டிருந்தாள்...

கோபமும், எரிச்சலுமாய்க் கழியும் வாழ்க்கையில் ஆபூர்வமாய் இசக்கிமுத்து காட்டும் காதல் மட்டுமே பாலைவன சோலையாக அவளது வாழ்க்கையைப் பசுமையாகப் பூத்து குலுங்க செய்திருந்தது...

இல்லையென்றால் அவள் மனம் வெறுத்து போயிருப்பாள்... அவளுக்கு அவன் தேவைப்படும் போது எல்லாம் அவன் குடித்துவிட்டு மட்டையாகி இருப்பான்... இரவு முழுவதும் அவள் அவனை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருப்பாள்... சிலருக்கு இது காமமாகத் தெரியலாம்... ஆனால் அவளுக்கு வாழ்க்கை வாழ்வதற்கான சக்தியே அது தான்... அந்தச் சின்னச் சந்தோசம் மட்டுமே அவளுக்கு எஞ்சியிருந்தது...

இதோ இப்போது அன்பு காட்டும் கணவன் மீதான அவளது பார்வை மாறிப் போயிருந்தது... உணவு உண்டு முடித்துவிட்டுக் கை கழுவிவிட்டு வந்த இசக்கிமுத்து அப்போது தான் அவளது பார்வையை உணர்ந்தவனாய் அவள் அருகே மண்டியிட்டு அமர்ந்தான்...

"என்ன இளா...?" அவனின் குரல் குழைந்து ஒலித்தது... மனைவியின் பார்வைக்கான அர்த்தம் கணவனான அவனுக்குப் புரியாதா என்ன...?

அவள் ஒன்றும் பேசாது அவனை இழுத்து அணைத்து கொண்டாள்... விலக மனமின்றிச் சிறிது நேரம் அப்படியே இருந்தவன் மெல்ல அவளிடம்,

"ஹாஸ்பிட்டல் போகணும்ல... நான் போய்ப் பணத்துக்கு ஏற்பாடு பண்ணிட்டு வர்றேன் இளா..."

ஆசையோடு தழுவும் போது அவன் பணம் பற்றிப் பேசியதும் அவள் தனது கைகளைத் தளர்த்திக் கொண்டாள்... அவன் புன்சிரிப்புடன் அவளது கன்னத்தைத் தட்டியவன்,

"ட்ரெஸ் மாத்திட்டு ரெடியாயிரு... நான் இப்போ வந்திர்றேன்..." என்றவன் சட்டையை அணிந்து கொண்டு வெளியில் சென்றான்...

அவன் சென்றதும் மேடிட்ட வயிற்றுடன் கீழே பரத்தி வைக்கப்பட்டிருந்த பாத்திரங்களைக் கஷ்டப்பட்டுக் குனிந்து எடுத்து வைத்தவளுக்கு மூச்சு வாங்கியது...

பிறந்தவீட்டில் உணவு மேசையில் அமர்ந்து காலாட்டி கொண்டு உண்டது நினைவில் எழுந்து அவளை வருத்தியது... தன் நினைவுகளால் அவள் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் அவஸ்தையாய் அல்லாடினாள்...

"அண்ணா ஒரு நிமிசம் இங்கே வாங்களேன்..."

அப்போது தான் வேலைக்கு வந்த மாடசாமி தன்முன் வந்து நின்ற தம்பியை கேள்வியாய் பார்த்தான்...

"வேலைக்குப் போகாம இங்கே என்ன பண்ற...?"

"இன்னைக்கு நான் லீவுண்ணா..."

"ஏன்டா...?"

"இளாவை ஹாஸ்பிட்டல் கூட்டிட்டு போகணும்ண்ணா..."

இசக்கிமுத்து, இளவரசி நல்ல மாதிரியாகக் குடும்பம் நடத்துவது கண்டு மாடசாமிக்கு மிகுந்த மகிழ்ச்சி... தம்பியின் காதல் திருமணத்தில் அவனுக்குச் சிறிது நம்பிக்கை இல்லை தான்.. ஆனால் இப்போது முழுதிருப்தி, நம்பிக்கை வந்துவிட்டது... அதிலும் அதிகம் பேசாத இளவரசியை அவனுக்கு நிரம்பப் பிடித்திருந்தது...

"வேற பொண்ணா இருந்தா உன்னை வேண்டாம்ன்னு தூக்கி போட்டுட்டு போயிருப்பாடா... ஆனா இந்தப் பொண்ணு பாரு, உன்னைச் சகிச்சுட்டுக் குடும்பம் நடத்துது..." தம்பியின் குடிப்பழக்கம் அறிந்து மாடசாமி அவனைக் கடியும் போது கூறும் வார்த்தை இது...

இளவரசி மீது மாடசாமிக்கு எப்போதுமே மரியாதை கலந்த அன்பு உண்டு... அதற்கேற்றபடி அவளும் அவனிடம் பதவிசாக நடந்து கொள்வாள்...

இப்போது தம்பி தன்னைக் காண வந்த நோக்கத்தைத் தானாக ஊகித்துக் கொண்டான் மாடசாமி... இதுவரை வீட்டுச் செலவு அனைத்தையும் இசக்கிமுத்து தான் பார்த்துக் கொண்டான்... எதற்காகவும் அவன் தன்

அண்ணனிடம் வந்து நிற்கவில்லை... அந்த விதத்தில் தம்பியை நினைத்து அவனுக்குப் பெருமை தான்...

"பணம் எதுவும் வேணுமாடா...?"

"ஆமாண்ணா..." இசக்கிமுத்து அண்ணனை நன்றியோடு பார்த்தான்...

"சரி வா... பேங்குக்குப் போய் எடுத்து தர்றேன்..." என்ற மாடசாமி விடுப்பு கூறிவிட்டு தம்பியை அழைத்துக் கொண்டு வங்கிக்குச் சென்றான்...

பணத்தை வாங்கிக் கொண்ட இசக்கிமுத்து, "இந்த மாசம் சம்பளம் வந்ததும் திருப்பிக் கொடுத்திர்றேன்..." என்க...

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம் இசக்கி... இளா புள்ளய நல்லபடியா பார்த்துக்கோ..." என்றவனிடம் சரியென்று மகிழ்வோடு தலையசைத்துவிட்டு அவன் கிளம்பினான்...

மனைவியை அழைத்துக் கொண்டு மருத்துவமனை வந்து ஸ்கேன் பார்த்துவிட்டு திரும்பும் போது மிகுந்த மகிழ்ச்சியோடு இருந்தான் இசக்கிமுத்து... திரையில் கண்ட குழந்தையின் உருவம் அவனைத் தந்தையாகப் பெருமிதம் கொள்ளச் செய்தது...

"என் மகன் என்னை மாதிரி இருக்கணும் இளா..." என்று மனம் நெகிழ்ந்து கூறிய கணவனைக் கண்டு அவளது இதழ்களில் மெல்லிய புன்னகை எட்டிப்பார்த்தது... அதைக் கண்டு அவனும் சந்தோசம் அடைந்தான்...

அதன் பின் வந்த நாட்கள் அமைதியாகக் கழிந்தது... சரியாக ஒன்பது மாதங்கள் முடிந்த தறுவாயில் இளவரசிக்கு வலி எடுத்தது... அப்போது இசக்கிமுத்து வேலைக்குச் சென்றிருந்தான்... பக்கத்துவீட்டு பெண்மணியின் துணையுடன் அவள் மருத்துவமனையில் சேர்ந்தாள்...

வலியில் துடித்தவளை கண்டு அங்கிருந்த செவிலிப்பெண், "என்னமோ நீ மட்டும் தான் புள்ளைய பெத்துக்கிற மாதிரி

அலட்டிக்கிற... புருசன் கூடப் படுக்கும் போது சுகமா இருந்துச்சுல்ல... அதே மாதிரி இப்போ வலியை பொறுத்துக்கணும்..." என்று ஹிந்தியில் கடுமையுடன் கூறிவிட்டு செல்ல... இளவரசியின் முகம் பேயறைந்தார் போலானது...

அரசாங்க மருத்துவமனையின் அவலங்களில் இதுவும் ஒன்று... நன்கு வலி வரும் வரை அவள் வராந்தாவில் இருந்த மர பெஞ்சில் படுக்க வைக்கப்பட்டாள்... பிரசவ வலியோடு அவமானப்பட்ட வலியும் சேர்ந்து கொள்ள அவள் மனம் நொந்து போனாள்...

"இளா..." என்றபடி பதட்டத்துடன் அங்கு வந்து சேர்ந்தான் இசக்கிமுத்து... கணவனிடம் கோபம் கொள்ள முடியாதபடி அவன் பின்னேயே மாடசாமியும் வந்து சேர்ந்தான்...

வலியில் துடிக்கும் மனைவியைக் கண்டு செய்வதறியாது துடித்தான் இசக்கிமுத்து... சாமானியன் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை... மருத்துவராக அழைக்கும் வரை பிரசவ அறைக்குக் கூட அவளை அழைத்துச் செல்ல முடியவில்லை... பெற்றோர் இருவரையும் இருவேறு நிலைகளில் பதட்டப்படுத்திய அவர்களது மகன் சரியாக மாலை நேரம் பிறந்தான்...

மயக்கம் தெளிந்து மகனை பார்த்த இளவரசி முகத்தைச் சுளித்தாள்... ஏனெனில் அவர்களது மகன் கறுப்பாக இருந்தான்... பால் நிறம் கொண்டவளுக்கு இத்தனை கரிய நிறத்தில் மகனா...? அவளது நெஞ்சம் குமுறியது...

"எங்க ஐயாவே வந்து பிறந்திருக்காரு புள்ள..." என்று மகனை இசக்கிமுத்துக் கொண்டாடினான்... மாடசாமியும் அதை ஆமோதித்தான்...

இசக்கிமுத்து கருப்பும் இல்லாது வெளுப்பும் இல்லாது மாநிறத்தில் இருந்தான்... அதனால் தான் அவனது தோற்றம் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது... ஆனால் மகன் மாடசாமியை போன்று கருப்பாக இருந்தான்... கணவனிடம் கேட்டதற்கு அவன் பெருமையாக,

"எங்க பரம்பரை நிறம் இது தான் இளா..." என்று கூற... அவள் மனம் வெறுத்து போனாள்...

அதை விட அரசாங்க மருத்துவமனையில் படுக்கை கிடைக்காது அவளைத் தரையில் படுக்க வைத்திருந்த அவலம் வேறு நடந்தேறியது... மகன் பிறந்த மூன்றாம் நாள் அவள் வீட்டிற்கு வந்துவிட்டாள்...

மகனுக்குப் பெயர் வைப்பதில் கணவனுக்கும், மனைவிக்கும் பிரச்சினை எழுந்தது... அவன் தனது தந்தையின் பெயரான சுடலைமுத்து பெயரை வைக்க வேண்டும் என்று கூற... அவளோ தங்களது தெய்வமான கண்ணனின் பெயரை வைக்க வேண்டும் என்று கூறினாள்...

"சுடலைமுத்து..." என்று அவன் கூற...

"கிருஷ்..." என்று அவள் பிடிவாதம் பிடித்தாள்... கடைசியில் அவன் தான் இறங்கி வந்தான்...

"நான் சுடலைன்னு கூப்பிடறேன்... நீ கிருஷ்ன்னு கூப்பிட்டுக்கோ..." என்று... அதில் அவள் சற்றுச் சமாதானம் அடைந்தாள்...

சுடலைமுத்து வளர, வளர இளவரிசியின் குணம் சிறிது சிறிதாக மாறத் துவங்கியது... ஏனென்று தெரியாத கோபம் கணவன் மீது எழுந்தது... அதன் விளைவு அவள் அடிக்கடி இசக்கிமுத்துவின் ஏழ்மை நிலையைச் சுட்டிக்காட்டி இகழ்ந்து பேசினாள்... அதே சமயம் தனது பிறந்தவீட்டை உயர்த்திப் பேசவும் மறக்கவில்லை... அதில் அவனுக்கும் கோபம் வந்தது... சிலசமயம் அவன் அவளைக் கையை நீட்டி அடித்துவிடுவான்... பிறகு அவளது காலில் விழாத குறையாகக் கெஞ்சி, கொஞ்சி சமாதானப்படுத்துவான்...

இவர்களது சண்டையில் சின்னவன் பாதிக்கக் கூடாது என்பதற்காக மாடசாமி பெரும்பாலும் சுடலைமுத்துவை தன்னுடன் அழைத்துச் சென்றுவிடுவான்... இரவில் சண்டை போடும் கணவன், மனைவி காலையில்

சமாதானமாகி இருப்பதைக் கண்டு மாடசாமி இதையே வழக்கமாக்கி கொண்டான்... அதனால் அவனுக்கும், சின்னவனுக்கும் இடையில் பிரிக்க முடியாத பந்தம் ஏற்பட்டது... இதனாலேயே மாடசாமி தனது திருமணத்தைப் பற்றி நினைத்து பார்க்கவில்லை...

"அப்பா..." என்றழைத்தபடி சுடலைமுத்து மாடசாமியை சுற்றி சுற்றி வந்தான்...

அந்த வயதில் அவனுக்கு நினைவாற்றல் மிகவும் அதிகம்... அவர்கள் வீட்டிற்கு அருகில் இருந்த ஆசிரியர் ஒருவர் அவனுக்கு உலக வரைபடத்தைக் காட்டி நாடுகள் மற்றும் கொடிகளைப் பற்றிச் சொல்லி கொடுத்தார்... அதை ஒரே முறையில் அவன் கற்பூரமாகப் பிடித்துக் கொண்டான்... அவனது அறிவை கண்டு வியந்தவர் மெல்ல அவனுக்கு நிறைய விசயங்களைச் சொல்லி கொடுக்க ஆரம்பிக்க, அவன் அழகாக அதை ஞாபகம் வைத்து கூற துவங்கினான்... மூன்று வயதில் அவன் வசிக்கும் ஊரில் அவன் பிரபலமடையத் துவங்கினான்...

"உன்னை வச்சு எந்தப் பிரயோஜனமும் இல்லை... ஆனா என் மகன் என்னை மாதிரி புத்திசாலி..." என்று இளவரசி இப்போது மகனை கொண்டாடினாள்...

இசக்கிமுத்துச் சின்னச் சிரிப்புடன், "நானில்லாம உனக்கு மகன் எங்கே இருந்துடி வந்தான்..." என்று அவளிடம் கேலியாய் கேட்டான்...

"ம்க்கும்..." கழுத்தை நொடித்துக் கொண்டு போன இளவரசியின் முகத்திலும் புன்னகையின் சாயல்...

"இளா..." என்று கத்தியபடி அவளின் பின்னே சென்று அவளை அணைத்தவன்,

"சுடலைக்கு ஒரு தம்பியோ, தங்கையோ வேண்டாமா...?" என்று அவளிடம் சரசமாக இழைய...

அவள் பதில் கூறாது அவனது விருப்பத்திற்கு இசைந்து கொடுத்தாள்... அவளுக்கும் அவன் தேவையாக

இருந்தானோ என்னமோ... அவள் மோகத்துடன் அவனை அரவணைத்து கொண்டாள்... எல்லாம் முடிந்து புடவையை எடுத்து தன் மீது போட்டு கொண்டவள் அவிழ்ந்திருந்த கூந்தலை அள்ளி முடிந்தபடி,

"நீ சம்பாதிக்கிற பணத்துக்கு இந்த ஒரு குழந்தை போதும்..." என்றபடி எழுந்து சென்றுவிட்டாள்...

ஒரு நொடி விக்கித்துப் போன இசக்கிமுத்து மறுநொடி தனக்குள் சிரித்துக் கொண்டான்... மனைவியின் அறிவான பேச்சு அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது... அவனது ஏழ்மையை அவள் சுட்டிக்காட்டி பேசுகிறாள் என்பதை அவன் உணரவே இல்லை...

இளவரசியைப் பொறுத்தவரை மனம் என்றோ விலகி சென்றிருக்க உடலால் மட்டுமேயான ஒரு உறவு அவர்களுக்கு இடையில் தொடந்து கொண்டிருந்தது... இசக்கிமுத்து எப்போதும் போல் இருந்தான்... கோபம் வரும் போது அவளிடம் கோபப்பட்டுக் கொண்டு, சந்சோசம் கொள்ளும் போது அவளைச் சந்தோசத்துடன் கொண்டாடி கொண்டு என்று அவன் சராசரி கணவனாக இருந்தான்...

"ம்மா, சீக்கிரம் வாங்க..." ஐந்து வயது சுடலைமுத்து அன்னையை அவசரப்படுத்தினான்...

"இருடா வர்றேன்..." என்றபடி அங்கே வந்தாள் இளவரசி...

இன்று தொலைக்காட்சியில் அவனது அறிவுக்கூர்மையைப் பற்றிப் பேட்டி எடுக்க வர சொல்லியிருந்தார்கள்... அதற்குத் தான் அவர்கள் மூவரும் கிளம்பி கொண்டிருந்தனர்... அழகு தேவதையாய் வந்து நின்ற மனைவியைப் பார்வையால் பருகினான் இசக்கிமுத்து...

"ரொம்ப அழகாயிருக்க இளா..." கணவனது வார்த்தையில் அவளுள் கர்வம் வந்தமர்ந்தது...

"ஆமா, ஆமா... என்னோட அம்மா தான் அழகு..." என்று சுடலைமுத்து அவளது காலை பிடித்துக் கட்டி கொண்டான்...

"புடவையைக் கசக்காதே கிருஷ்..." என்று அவள் மகனை அதட்ட...

"நீ வாடா மவனே..." என்று இசக்கிமுத்து மகனை தூக்கி கொண்டான்... இருவரையும் புன்னகையுடன் பார்த்தபடி இளவரசி வீட்டை பூட்டிவிட்டு அவர்களுடன் கிளம்பினாள்...

பத்ரிநாத் தங்களது கடைக்குத் தேவையான சலவைக்கல் வாங்குவதற்காக இராஜஸ்தான் வந்திருந்தான்... இப்போது தான் இந்தத் தொழிலில் அவன் புதிதாக இறங்கியிருந்தான்... இப்போது அவனது கட்டுமான தொழில் நன்றாக நடப்பதால் அதற்குத் தேவையான பொருள்களைத் தானே வாங்கி விற்க முடிவு செய்தான்... இது அவனுக்குமே நிரம்ப லாபத்தைப் பெற்று தரும்...

நட்சத்திர விடுதியில் தங்கியிருந்த பத்ரிநாத் பொழுது போகாது தொலைக்காட்சி பெட்டியை உயிர்ப்பிக்க... அதில் சுடலைமுத்துவின் பேட்டி ஒளிபரப்பாகி கொண்டிருந்தது... சின்னவனின் அறிவுக்கூர்மையைப் பார்த்து வியந்தபடி அமர்ந்திருந்த பத்ரிநாத் சிறிது நேரத்தில் சிறுவனின் பெற்றோர் என்று அங்கு வந்தமர்ந்தவர்களைக் கண்டு அதிர்ந்து போனான்...

தன் மனம் கவர்ந்த இளவரசியை மனைவியாக, தாயாகக் காண அவனால் முடியவில்லை... பட்டென்று தொலைக்காட்சி பெட்டியை அணைத்துவிட்டான்... அவனது மனம் நிலை கொள்ளாது தவித்தது... துக்கம் தொண்டையை அடைத்தது... கடந்த ஆறு வருடங்களாக அவன் அடைந்த துன்பத்தை விட இப்போது அவன் அதிகத் துன்பம் அடைந்தான்... சிறிது நேரம் செய்வதறியாது அமர்ந்திருந்தவன் அடுத்து என்ன செய்வது என்று யோசிக்க ஆரம்பித்தான்...

இந்த விசயத்தை எப்படித் தன் நண்பனிடம் சொல்வது? என்று தெரியாது திகைத்தான் அவன்... தங்கையை எதிரிகள் யாரோ கடத்திவிட்டார்கள் என்றெண்ணி ஒவ்வொரு எதிரிக்கும் அவர்கள் அடி பலமாகக் கொடுத்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் 'இல்லை, உன் தங்கை

காதலித்து வீட்டை விட்டு ஓடிவிட்டாள்' என்று கூறினால் எவ்வளவு அதிர்ச்சியாக இருக்கும்?

அதனால் அவர்களை நேரில் சந்தித்துப் பேசி கொள்வோம் என்று அவன் தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டான்... அங்கிருந்து கிளம்பும் முன் அவன் மறக்காது தொலைக்காட்சி நிலையத்தைத் தொடர்பு கொண்டு சுடலைமுத்துவின் பெயரை கூறி முகவரியை பெற்றுக் கொண்டான்...

பத்ரிநாத் ஊருக்கு வந்து விசயத்தைக் கூறியதும் மணிபாரதி தாம்தூம் என்று கோபத்தில் குதித்தான்... செல்வரத்தினமோ அமைதியாக அமர்ந்திருந்தான்...

"அண்ணா, நீ உம்முன்னு ஒரு வார்த்தை சொல்லு... அங்கேயே அவளையும், அவளது குடும்பத்தையும் கொன்னு புதைச்சிட்டு வர்றேன்..."

"பாரதி..." நண்பனின் கோபம் கண்டு பத்ரிநாத் திகைத்துப் போனான்... சிறுகூட்டை கலப்பதற்காகவா அவன் மெனக்கெட்டு இங்கே வந்து தகவல் கூறியது...?

"நீ இப்படி எல்லாம் பேசுவேன்னு தெரிஞ்சிருந்தா நான் இந்த விசயத்தைச் சொல்லாம மறைச்சிருப்பேன்... நீ உன் தங்கை மேல் பாசம் வச்சிருக்கேன்னு நான் நினைச்சது தப்பா போயிருச்சு... நீ இப்படின்னு எனக்குத் தெரியாம போயிருச்சு... போடா..."

கோபமும், விரக்தியுமாய் உரைத்த நண்பனை கண்டும் மணிபாரதியின் ஆத்திரம் கொஞ்சமும் குறைவதாய் இல்லை...

"அந்த ஓடுகாலிக்கு நீ சப்போர்ட் பண்ணி பேசாதே பத்ரி..." என்று அடங்காது கர்ஜித்தான் மணிபாரதி...

"பாரதி..." அதட்டலாய் ஒலித்தது செல்வரத்தினத்தின் குரல்...

"அண்ணா..." மணிபாரதி திகைப்பாய் சகோதரனை பார்க்க...

"நாளைக்கே நீயும், நானும் போய் அரசியைப் பார்த்து பேசி ஊருக்கு அழைச்சிட்டு வருவோம்..." என்று முடிவாய் கூற... அதை மணிபாரதியால் எதிர்க்க முடியாது போனது...

இப்போது பத்ரிநாத் நிம்மதியுடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்... அவன் சென்றதும் செல்வரத்தினம் மணிபாரதியை கடிந்து கொண்டான்...

"யார் முன்னாடி என்ன பேசணும்ன்னு உனக்கு விவஸ்தை கிடையாதா...?"

"பத்ரி என் ப்ரெண்ட்..." மணிபாரதி கோபம் அடங்காது பதில் கூறினான்...

"இருக்கட்டுமே... எல்லாத்துக்கும் ஒரு எல்லை இருக்கு... அவன் முன்னாடி இப்படித்தான் வெட்டு குத்துன்னு பேசுவியா...?"

"அண்ணா..." எரிச்சலுடன் பார்த்தான் மணிபாரதி...

"இந்த விசயம் கேள்விப்பட்டதும் எனக்கும் உன்னைப் போல் கொலைவெறி வந்தது... ஆனா அவளைக் கொன்னால் மட்டும் எல்லாம் சரியா போயிருமா...? சரியாகாதுடா... அவளை இங்கே வரவழைச்சுச் சத்தம் இல்லாம நம்ம திட்டத்தை நடைமுறை படுத்தணும்..."

"என்ன செய்யப் போறீங்கண்ணா...?"

"முதலில் அந்த ஓடுகாலியை இங்கே வரவழைப்போம்... அதுக்குப் பிறகு நாம நினைச்சதை நிதானமா செயல்படுத்துவோம்..."

"புரியுதுண்ணா..." மணிபாரதி வெகுதிருப்தியாய் தலையசைத்தான்...

மறுநாள் இருவரும் இராஜஸ்தான் கிளம்பி சென்றனர்... பத்ரிநாத் சென்னைக்குக் கிளம்பி சென்றுவிட்டான்...

இளவரசியைக் கணவன், குழந்தை சகிதமாகக் காண அவனால் முடியாது... என்னயிருந்தாலும் காதல் மனம் அல்லவா...? அவனால் தன்னுடைய இழப்பை தாங்கி கொள்ள முடியவில்லை...

மகனை பள்ளி வேனில் அனுப்பி வைத்துவிட்டு திரும்பிய இளவரசி அங்கே தனது இரு அண்ணன்களும் நின்றிருப்பதைக் கண்டு அதிர்ந்து போனாள்... திகைப்புடன் வாயிற் கதவை பிடித்தபடி அவள் நின்றுவிட்டாள்...

"வீட்டுக்குள்ளே கூப்பிட மாட்டியா அரசி..." இருவரும் அன்பொழுக கேட்க...

"அண்ணா..." என்று நா தழுதழுத்தது அவளுக்கு...

"அண்ணன்ங்களை இப்பத்தான் உன் கண்ணுக்கு தெரிஞ்சதா...? ஒரு வார்த்தை கூடச் சொல்லாம எங்களை விட்டு பிரிஞ்சு வந்துட்டியே... உன்னைக் கண்ணால் பார்ப்போமான்னு இந்த ஆறு வருசமா வேதனையோடு காத்திருக்கிறோம் அரசி..."

இருவரும் வராத போலி கண்ணீரை துடைத்து கொண்டனர்... அந்த நடிப்பை உண்மை என்று நம்பிய இளவரசி,

"அண்ணா..." என்று கூவலுடன் அவர்களை அணைத்து கொண்டாள்...

அவளது சத்தம் கேட்டு இசக்கிமுத்து வீட்டினுள் இருந்து வெளியில் வந்தான்... மனைவியின் அண்ணன்ங்களைக் கண்டு அவனது முகம் பேயறைந்தார் போலானது... இப்படி ஒரு திருப்பத்தை அதுவும் ஆறு வருடங்கள் கழித்து அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை...

இசக்கிமுத்துவை கண்டதும் மற்ற ஆண்கள் இருவரும் அவன் யார்? என்ன? என்பதை உணர்ந்து கொண்டனர்...

'இந்தப் பயலுக்கு என் தங்கச்சி கேட்குதா...' அவர்களது மனம் கொதித்தது... ஆனாலும் வெளியில் அதைக் காட்டி கொள்ளவில்லை...

"மாப்பிள்ளை..." செல்வரத்தினம் தன்னை அழைத்ததைக் கண்டு அவனுக்குப் பயம் அகன்று மயக்கமே வந்துவிட்டது...

"என்னையவா கூப்பிட்டீங்க...?" அவன் திகைப்புடன் கேட்க...

"என் தங்கை கணவர் நீங்க தானே...?" என்று மணிபாரதி கேட்க... அவன் ஆமென்று தலையசைக்க...

"அதான் மாப்பிள்ளைன்னு கூப்பிட்டேன்..."

செல்வரத்தினம் அட்டகாசமான சிரிப்புடன் இசக்கிமுத்துவை அணைத்துக் கொண்டான்... தனது செயலை வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்த தம்பியை இசக்கிமுத்துவின் தோள்வளைவில் இருந்து எட்டிப்பார்த்து விசமமாய்க் கண்சிமிட்டினான் செல்வரத்தினம்... அதில் மணிபாரதி சிறிது சமாதானம் அடைந்தான்...

வீட்டிற்குள் நுழைந்தவர்கள் அந்த வீட்டினை கண்டு முகம் சுளித்தபடி, "நீ உன் பெயருக்கு ஏத்த மாதிரி மாளிகையில் அரசி மாதிரி வாழ வேண்டியவள்... நீ இப்படிக் கஷ்டப்படுறதை பார்க்கும் போது வருத்தமாக இருக்கும்மா..." என்று செல்வரத்தினம் தனது குரலில் பாசத்தைத் தேக்கி வைத்து வசனம் பேச... அதில் உடைந்து போன இளவரசி,

"நீங்க ஒத்துக்க மாட்டீங்கன்னு பயந்து போயிட்டேன் அண்ணா..."

"நான் அப்படிப் பண்ணுவேனா அரசி... அதுவும் என் செல்ல தங்கை உன்னிடம்..." என்று நிறுத்தியவன்,

"சரிம்மா... நடந்ததை மாத்த முடியாது... இனி நீ, மாப்பிள்ளை, என் மருமகன் எல்லோரும் நம்ம வீட்டுக்கு வந்திருங்க... நாம எல்லாம் சேர்ந்து ஒண்ணா சந்தோசமா

இருப்போம்..." என்று முடித்த செல்வரத்தினத்தின் எண்ணத்தை மணிபாரதியும் ஆமோதித்தான்...

"சரிண்ணா..." என்று உடனே சம்மதித்தாள் இளவரசி... வளமான வாழ்க்கை அவளது கண்ணில் வலம் வந்தது...

"கொஞ்சம் யோசிக்கணும்ங்க..." என்று இசக்கிமுத்துத் தயங்கினான்...

"அவர் அப்படித்தான் சொல்வாரு அண்ணா... நான் பார்த்துக்கிறேன்..." என்ற இளவரசி தனது சகோதரர்களைச் சிறிதும் சந்தேகப்படவில்லை...

அன்று முழுவதும் அங்கிருந்து விட்டு மாலையில் பள்ளியில் இருந்து வந்த மருமகனை தூக்கி கொஞ்சிவிட்டே அவர்கள் இருவரும் விடுதிக்கு திரும்பினர்...

விடுதி அறைக்குள் நுழைந்ததும் தான் அணிந்திருந்த சட்டையைக் கழற்றி தூக்கி எறிந்தான் செல்வரத்தினம்...

"முதல்ல குளிக்கணும்டா... அந்த வீட்டு தீட்டு நம்ம மேல ஒட்டிக்கிச்சு..." கோபமாய்க் கூறிய அண்ணனை போன்றே மணிபாரதிக்கும் கோபம் வந்தது...

"அரசி மகனை பார்த்தியாண்ணா...? எந்தங்கச்சிக்கு இப்படியொரு வாரிசா...? அவள் அழகுல கால்வாசி கூட அந்தப் பய இல்லை... இதை எல்லாம் கையைக் கட்டிட்டு பார்க்கணும்ன்னு நமக்குத் தலையெழுத்து..." என்று அவன் தன் பங்குக்குப் புலம்பினான்...

"முதல்ல அவளை அங்கே கூட்டிட்டு போவோம்டா... அதுக்குப் பிறகு பார்த்துக்கலாம்..." என்று செல்வரத்தினம் கூற... அதைச் சரியென்று ஏற்றுக் கொண்டான் மணிபாரதி...

அன்றிரவு இளவரசி இசக்கிமுத்துவிடம் பிடிவாதம் பிடித்தாள்... அவனோ அங்குச் செல்ல மிகவும் யோசித்தான்...

"இப்போ தான் எனக்கு நிம்மதியா இருக்கு... எங்க வீட்டுக்கு போனா நாம ராஜா, ராணி மாதிரி சந்தோசமா வாழலாம்... இப்படி ஐஞ்சுக்கும், பத்துக்கும் கஷ்டப்பட வேண்டியது இல்லை..." என்று அவள் சந்தோசம் கொண்டு புலம்பினாள்... போதாக்குறைக்கு மகனை வேறு அவளுக்குச் சாதகமாகப் பேச சொல்லி தயார்படுத்தினாள்...

சுடலைமுத்துவும் அன்னையின் பேச்சை கேட்டுக் கொண்டு தந்தையிடம் நச்சரித்தான்...

"ப்பா, நாம மாமா கூடப் போய் இருப்போம்ப்பா..." மனைவியின் பேச்சிற்குக் கரையாத இசக்கிமுத்து மகனின் பேச்சிற்குச் சிறிது கரைந்தான்...

"பார்க்கலாம் சுடலை..." அவனது இந்தப் பதில் இளவரசிக்கு மிகுந்த திருப்தி அளித்தது...

மறுநாள் இசக்கிமுத்து மாடசாமியிடம் சென்று இந்த விசயத்தைக் கூறினான்... அவனோ மகிழ்ந்து போனான்...

"அவங்களே இறங்கி வந்திருக்காங்கன்னா நீ ஏன்டா முறுக்கிட்டு இருக்க...? அவங்க கூடப் போய்ச் சந்தோசமா இருடா..." என்று அவன் தனது சம்மதத்தைத் தெரிவித்தான்...

அண்ணனும் சம்மதித்துவிடத் தம்பி அதற்கு மேல் இதைப் பற்றி அதிகம் யோசிக்கவில்லை... தனது குடும்பத்தினருடன் மாமனார் வீட்டிற்குக் கிளம்பிவிட்டான்... மாடசாமியால் சுடலைமுத்துவை பிரிய முடியவில்லை... அவனை அணைத்துக் கொண்டு கண்ணீர் வடித்தான்... சின்னவனும் அவனை அணைத்துக் கொண்டான்...

"ப்பா, நீங்களும் எங்க கூட வந்திருங்க..." என்று அவனை அழைக்க... சின்னவனின் அன்பில் மாடசாமியின் விழிகள் கசிந்தது...

"நீ முதலில் போ சுடலை... நான் பிறகு வர்றேன்..." என்று அவனைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தான்...

தங்களது இறுதி பயணத்தை நோக்கி தாங்கள் சென்று கொண்டிருக்கிறோம் என்று தெரிந்தால் அப்போதே இசக்கிமுத்து அவர்களுடன் செல்லாது நின்றிருப்பானோ...? தன்னோடு, தனது மகனின் முடிவும் எழுதப்பட்ட ஒன்று என்று விதி செய்த சதியை சாதாரண மனிதன் அவனால் உணர்ந்து கொள்ள முடியவில்லை... தன் தலையில் தானே மண்ணை அள்ளி போட்டுக் கொண்டான் அந்த முட்டாள்...

மனித மனம் பல விசித்திரங்களைக் கொண்டது... அதற்கு அளவு கடந்து நேசிக்கவும் தெரியும்... அளவு கடந்து வெறுக்கவும் தெரியும்...இன்று இசக்கிமுத்துவை நேசிக்கும் இளவரசி நாளை அவனை அடியோடு வெறுத்து ஒதுக்கப் போகிறாள் என்பதை அவளே அறிந்திருக்க மாட்டாள்... இவ்வளவு ஏன் தனது மகனையும் தான் வெறுத்து ஒதுக்குவோம் என்று அவள் கனவில் கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டாள்...

காலதேவன் கோரமுகத்துடன் அவர்களுக்காக அஞ்சேரியில் காத்து கொண்டிருந்தான்...!!!

"காதலுக்கு விலை பணமாக இருக்கலாம்
காதலுக்கு விலை சாதியாக இருக்கலாம்
காதலுக்கு விலை அந்தஸ்தாக இருக்கலாம்
காதலுக்கு விலை கௌரவமாக இருக்கலாம்
காதலுக்கு விலை காதலாக இருப்பது
புதுமையன்றோ!"

கொள்ளும்...!!!

"அப்பா..."

வரவேற்பறை சோபாவில் அமர்ந்திருந்த ஆணின் உருவத்தை மாடசாமி என்று நினைத்து சுடலைமுத்துப் பின்னால் இருந்து உருவத்தின் கழுத்தை கட்டி கொண்டான்... சின்னவனின் வார்த்தையில், ஸ்பரிசத்தில் மெய்சிலிர்க்க திரும்பிய பத்ரிநாத் அவனைக் கண்டு புன்னகைத்தான்... தனது பெரிய தந்தை இல்லாது யாரோ வேறொரு புதியவனைக் கண்டு சின்னவன் திகைத்து போய் அணைத்திருந்த கைகளை விடுவித்துக் கொண்டு பின்னால் நகர்ந்தான்... அவனது விழிகளில் ஏமாற்றம் அப்பட்டமாய்த் தெரிந்தது...

"இங்கே வா..." பத்ரிநாத் அவனை அன்போடு அழைக்க...

அவனோ தலையசைத்து மறுத்து அங்கேயே நின்றிருந்தான்... ஏனெனில் அவனது இரு மாமன்களும் பத்ரிநாத்துடன் அமர்ந்திருந்தனர்... ஏனோ அவனுக்கு மாமன்களிடம் சிறுபயம் இருந்தது... அவன் இங்கு வந்த நாளில் இருந்து மாமன்கள் இருவரும் தனது அன்னை முன் தன்னை அன்பாக நடத்துவதையும், அன்னை இல்லாத சமயம் தன்னை ஒதுக்குவதையும் அவன் நன்கு உணர்ந்திருந்தான்...

சிறுவயதிலேயே அவன் புத்திசாலி குழந்தை என்பதால் மாமன்களின் குணம் அறிந்து அவன் ஒதுங்கி போனான்... ஏனோ இந்த விசயத்தைப் பெற்றோரிடம் சொல்ல அவனுக்கு விருப்பம் இல்லை... சொன்னால் அவர்கள் மாமன்களிடம் சண்டை போட்டு விடுவார்களோ என்று அவன் பயந்தான்... அந்தளவிற்கு அவன் சண்டை என்கிற வார்த்தையை அறவே வெறுத்தான்...

பத்ரிநாத் எழுந்து அவன் அருகே வந்தவன் சின்னவன் முன் மண்டியிட்டு அமர்ந்து தனது கோட் பையில் இருந்து சாக்லேட்டை எடுத்து அவனிடம் நீட்டினான்... அவன் அதைச் சுடலைமுத்துவுக்காகத் தான் வாங்கி வந்திருந்தான்...

சாக்லேட்டை கண்டதும் சின்னவன் முகம் மலர்ந்தது... ஆனாலும் வாங்கிக் கொள்ளவில்லை...

"வாங்கிக்கோ...." புன்சிரிப்புடன் கூறிய பத்ரிநாத்தை அதிசயமாய்ப் பார்த்த சுடலைமுத்து சிறுவெட்கத்துடன் அதை வாங்கிக் கொண்டான்...

"உன் பெயர் என்ன...?"

"சுடலைமுத்து..." என்க...

"ஸ்வீட் நேம்..." என்று தன்னை அணைத்து கொஞ்சிய பத்ரிநாத்தை சின்னவனுக்கு மிகவும் பிடித்துப் போனது... அதனால் பத்ரிநாத் கொடுத்த சாக்லேட்டை பிரித்துச் சுவைத்துக் கொண்டே,

"உங்க பெயர் என்ன...?"

"பத்ரிநாத்..."

"பத்தி..." என்று முழுப்பெயரை சொல்ல முடியாது திணறிய சின்னவன் இறுதியில்,

"பத்திப்பா..." என்றான் முகம் மலர...

சின்னவனின் 'அப்பா' என்றழைப்பில் பத்ரிநாத்தின் மனம் நெகிழ்ந்து போனது... பெண்களுக்கு மட்டும் தான் தாய்மை உணர்வு உண்டு என்று யார் சொன்னது...? இதோ இங்கு ஆறடி ஆண்மகனும் தாயாய் மாறி கண்கள் கலங்க சின்னவனை அரவணைத்துக் கொண்டான்... பத்ரிநாத் இப்போது தான் பெற்றோரை இழந்திருந்தான்... அத்தோடு காதல் தோல்வி வேறு அவனைத் தாக்கியதில் அவன் மனதளவில் மிகவும் துவண்டு போயிருந்தான்... வறண்ட பாலைவனமாய் இருந்த அவனது வாழ்க்கையில் மெல்லிய சாரலை தூவினான் சின்னவன்...

"அப்படியே கூப்பிடு சுடலை..." என்று மனம் நெகிழ்ந்து போனவனாய் பத்ரிநாத் கூற...

"அவன் பெயர் சுடலை இல்லை... கிருஷ்..." என்று கூறியபடி அங்கு வந்தாள் இளவரசி...

இளவரிசியின் குரலில் பத்ரிநாத்தின் தேகம் விறைத்தது... முயன்று சமாளித்தபடி எழுந்து நின்றவன் மனதை கட்டுப்படுத்திக் கொண்டு அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்...

"அவன் சொன்னதைத் தான் சொன்னேன்... அவனுக்குக் கிருஷ் பிடிச்சியிருந்தா அவனே சொல்லியிருப்பானே..." என்று சிரித்தபடி சின்னவனைத் தூக்கி வைத்துக் கொண்டான்... சுடலைமுத்துவும் அவனது தோளில் பாந்தமாய்ச் சாய்ந்து கொண்டு அன்னையைப் பார்த்தான்...

'அப்பன் சொல்லி கொடுத்து, சொல்லி கொடுத்து அந்தப் பெயரே இவனுக்குப் பிடிச்சு போச்சு... என்ன தான் பத்து மாசம் சுமந்து நான் பெத்தாலும் அப்பன் புத்தி தான் இவனுக்கு இருக்கு...' மகனை முறைத்து பார்த்தாள் இளவரசி...

தொழில் நிமித்தமாய் ஒருநாள் மட்டுமே அங்கு இருந்துவிட்டு கிளம்ப வேண்டும் என்று எண்ணியிருந்த பத்ரிநாத்தின் முடிவு சின்னவனுக்காக ஒரு வாரமாகத் தளர்த்தப்பட்டது...

'பத்திப்பா' என்று தன் பின்னேயே சுற்றி வந்த சின்னவனைப் பெரியவனுக்கு மிகவும் பிடித்துப் போனது... பத்ரிநாத் குளிக்கச் சென்றால் கூடச் சுடலைமுத்துப் படுக்கையில் படுத்துக் கொண்டு அவனுக்காகக் காத்து கொண்டிருப்பான்... ஏனெனில் தன்னையும் ஒரு பெரிய மனிதனாகக் கருதி அன்பு காட்டும் பத்ரிநாத்தை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது...

இங்கு வந்ததில் இருந்து தாய் ஒரு பக்கம் வெளியில் சென்றாள் என்றால், தந்தை இன்னொரு பக்கம் வெளியில் சென்றுவிடுவான்... இருவரும் வீட்டில் இருப்பதே இல்லை... பழைய ஊர், பழைய நண்பர்கள் என்று அவர்களுக்குப்

பொழுது போக நிறைய விசயங்கள் இருந்தது... அதனால் சின்னவனுக்குத் தனிமையே துணையாகி போனது... அந்தத் தனிமையைப் போக்க வந்த நல்ல துணையாகப் பத்ரிநாத்தை எண்ணியவன் அவனையே சுற்றி சுற்றி வந்தான்...

அன்று வழக்கம் போல் பத்ரிநாத் கதை சொல்ல சுடலைமுத்துத் தாடையில் கை வைத்தபடி விழிகள் அகல அவனைப் பார்த்திருந்தான்...

"முயல் எப்படி ஓடுச்சு...?" என்று பத்ரிநாத் கேட்க...

"நான் சொல்றன்... நான் சொல்றேன்..." என்று கையைத் தூக்கியபடி ஓடிவந்த சுடலைமுத்து முயல் போல் துள்ளி காட்ட... பத்ரிநாத்தும் சின்னவனுக்கு இணையாக அதே போல் செய்து காட்டினான்...

இருவரும் இணைந்து அறை முழுவதும் ஓடி விளையாட... சிறிது நேரத்தில் சுடலைமுத்து பத்ரிநாத்தை துரத்த அவனும் சிரித்தபடி முன்னே ஓடினான்... வேண்டுமென்றே சுடலைமுத்துக் கைகளில் அகப்பட்டுக் கொண்டவன் அவனைத் தூக்கி சுற்றியபடி படுக்கையில் விழுந்தான்... இருவருக்குமே மூச்சுவாங்கியது...

அந்தக் காட்சியைப் பார்த்தபடி இசக்கிமுத்து, இளவரசி நின்றிருந்தனர்...

"சுடலை இங்கேயே இருக்கட்டும் இளா... அவனோட சந்தோசத்தைக் கலைக்க வேண்டாம்..." என்று அவன் கூற... அதை ஆமோதித்தபடி இளவரசி சென்றுவிட்டாள்...

இசக்கிமுத்து தானும் நகர முற்பட்ட போது பத்ரிநாத் அவனைப் பார்த்துவிட்டான்... முதலில் தனது காதலியின் கணவனான இசக்கிமுத்துவை பார்த்து பேச சங்கடப்பட்ட பத்ரிநாத் இப்போது சுடலைமுத்துவின் தந்தையாய் அவனைக் கண்டு சிநேகத்துடன் சிரித்தான்...

"ஏன் அங்கேயே நின்னுட்டீங்க...? உள்ளே வாங்க..." பத்ரிநாத் படுக்கையில் இருந்து எழுந்து நிற்க...

சுடலைமுத்து அவனது முதுகில் தொற்றிக் கொண்டான்...

"சுடலை கீழே இறங்கு... அங்கிள் பாவம்ல..." இசக்கிமுத்து மகனை சத்தம் போட்டான்...

"இருக்கட்டும் இசக்கி..." என்ற பத்ரிநாத் அவனிடம் அவனது வேலை சம்பந்தமாகப் பேசி கொண்டிருந்தான்...

"இங்கேயே ஒரு வேலை தேடணும்... அப்படியே சுடலைக்கு ஸ்கூலும்... இப்போ லீவுன்னால பிரச்சினை இல்லை..."

"பேசாம செல்வா, பாரதி கூடச் சேர்ந்து அவங்க தொழிலை பார்க்கலாமே..."

"இல்லைங்க... அது சரிவராது... சொத்துக்காகத் தான் பொண்ணைக் கட்டிக்கிட்டேன் ஒரு பேச்சு வந்திர கூடாது இல்லையா..."

இசக்கிமுத்துவின் வெகுளியான பேச்சு பத்ரிநாத்துக்கு மிகவும் பிடித்துப் போயிற்று... சிறிது நேரம் பேசியிருந்துவிட்டு இசக்கிமுத்து செல்ல... சுடலைமுத்து பத்ரிநாத்துடன் படுத்துக் கொண்டான்...

இசக்கிமுத்து அறைக்குச் சென்ற போது இளவரசி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்... சிறு ஏமாற்றத்துடன் அவன் மறுபக்கம் வந்து படுத்தான்... இங்கு வந்ததில் இருந்து அவன் மனைவியைத் தொட முடியவில்லை... இளவரசி ஏதாவது சாக்கு சொல்லியபடி அவனைத் தொடாது தடுத்தாள்... அவன் மனதிற்குள் முணுமுணுத்தபடி தூங்கி போனான்...

இரவு உணவு உண்டுவிட்டுத் தோட்டத்தில் அமர்ந்திருந்த போது பத்ரிநாத் மறுநாள் காலையில் தான் ஊருக்குக் கிளம்புவதாக மணிபாரதியிடம் கூறிக் கொண்டிருந்தான்... அதைச் சின்னவன் உன்னிப்பாகக் கவனித்துக் கேட்டு விட்டான்... அழுகையில் அவனது உதடுகள் பிதுங்கியது... ஒரு வார காலமாகத் தன்னுடன் தோழமையுடன் பழகிய தோழனை பிரிய போகும் துயர் அவனுடையது...

"பத்திப்பா, நீங்க போக வேண்டாம்... இங்கேயே இருங்க..." என்றபடி சுடலைமுத்து பெரியவனை அணைத்துக் கொண்டான்...

"டேய் அவனை விடுடா... இது என்ன கெட்ட பழக்கம்..." மணிபாரதி மருமகனை அதட்டினான்... அவனால் சுடலைமுத்துவை தனது தங்கையின் மகனாக எண்ண முடியவில்லை...

"இருக்கட்டும் பாரதி... சின்னப் பையனை போட்டு இப்படி அதட்டுறியே..." என்று பத்ரிநாத் நண்பனை கடிந்தான்...

"பத்திப்பா நீங்க என்னை விட்டு போக மாட்டீங்க தானே..." சின்னவன் ஏக்கத்துடன் பெரியவனைப் பார்த்தான்... அவனது நெற்றியில் முத்தமிட்ட பத்ரிநாத்,

"என் கூட நீயும் வர்றியா...?" என்று ஆசையுடன் கேட்க...

"ஓ... வர்றேனே..." சந்தோசத்துடன் பெரியவனைக் கட்டி கொண்டான் சின்னவன்...

"அப்புறம் எப்படி ஸ்கூல் போறது...? படிக்கிறது..." என்று கேட்டுக் கொண்டே அங்கு வந்தாள் இளவரசி...

"நான் பத்திப்பா ஊருல இருக்கிற ஸ்கூல்ல படிப்பேன்... அப்படித் தானே பத்திப்பா...?"

"ஆமாம் சுடலை..." என்று சம்மதம் அளித்தான் பத்ரிநாத்...

"நடக்கிறதை பேசு..." என்று மகனை அதட்டினாள் இளவரசி...

"ஏன் நடக்காது...?" அவளது முகம் பார்க்காது கூறிய பத்ரிநாத் சுடலைமுத்துவை அணைத்துக் கொண்டு,

"இவனை எனக்குத் தத்து கொடுத்துவிடு... நீ இன்னொரு குழந்தை பெற்று கொள்..." என்று சாதாரணமாகக் கூற... அதைக் கேட்டு இளவரசி திகைப்புடன் பார்க்க... மணிபாரதி நண்பனை ஆராய்ச்சியாய் பார்த்தான்...

"அரசி உன் மகனை கூட்டிட்டு போ... நானும் பத்ரியும் வெளியில் போக வேண்டியிருக்கு..." மாமனின் குரலில் பத்ரிநாத்திடம் இருந்து விலகிய சுடலைமுத்து அன்னையின் அருகில் சென்று நின்று கொண்டான்...

அதைக் கண்டு கண்டன பார்வையை நண்பனை நோக்கி வீசிய பத்ரிநாத், " என்ன பேசணும்...?" என்று முறைப்புடன் கேட்க...

"உன் கல்யாணத்தைப் பத்தி..."

அதைக் கேட்டதும் விறைப்புற்ற பத்ரிநாத் பதில் பேசாது கிளம்பினான்... காரை ஆற்றின் ஓரம் நிறுத்திய மணிபாரதி நண்பன் புறம் திரும்பினான்...

"நீ அரசியை விரும்பினியா பத்ரி..."

நண்பனது கேள்விக்குப் பதில் கூறாது வெளியில் இருளை வெறித்தான் பத்ரிநாத்...

"சொல்லு பத்ரி..."

"ப்ச்... முடிந்து போன விசயத்தைப் பேசி என்னாகப் போகுது...?"

"ஓ..." என்ற மணிபாரதி வேறு ஒன்றும் கேட்கவில்லை... அமைதியாகக் காரை எடுத்தான்...

ஆனால் அன்றே தனது அண்ணனிடம் மணிபாரதி இந்த விசயத்தைக் கூறினான்... அதைக் கேட்டுச் செல்வரத்தினம் யோசனையில் ஆழ்ந்தான்...

"அரசியை இங்கே கூட்டிட்டு வரும் போது மூணு பேரையும் போட்டு தள்ளணும்ன்னு தான் நினைச்சிருந்தேன்... இப்போ நீ சொன்ன விசயத்தைக் கேட்கும் போது ஒருத்தரை போட்டா போதும் போலிருக்கே..."

"என்ன அண்ணா சொல்றீங்க...?"

"இசக்கியை போட்டு தள்ளிட்டு அரசிக்கு பத்ரியை இரண்டாம் கல்யாணம் பண்ணி வச்சிருவோம்... இதன் மூலம் நாம இழந்த மானம், கௌரவம் திரும்பக் கிடைச்சிரும்..."

"அருமையான யோசனை..." என்று அண்ணனை பாராட்டிய தம்பி பிறகு யோசனையுடன்,

"ஆனா இது அரசிக்கு தெரிஞ்சா...?" ஏனெனில் காதல் திருமணம் புரிந்திருக்கும் தங்கையைப் பற்றிச் சிறிது யோசிக்க வேண்டியது இருக்கிறதே...

"தெரிஞ்சா என்ன, கத்துவாளா...? அழுது கரைவாளா...?" என்று கேள்வியுடன் தம்பியை ஏறிட்ட செல்வரத்தினத்தின் முகத்தில் புன்னகை நிறைந்திருந்தது...

"நான் பார்த்த வரைக்கும் ரெண்டு பேரும் அப்படி ஒண்ணும் ஒத்துமையா இருக்கிற மாதிரி இல்லை... இப்போ அரசி இருக்கிற நிலைமையில் புருசன் இல்லைன்னா ரொம்பச் சந்தோசப்படுவாள்... இந்தச் சமயத்தைப் பயன்படுத்தி நாம அவள் மனசை கலைக்கணும்..."

"அப்படின்னா அதை நாம பார்த்துக்கலாம்..." என்று மணிபாரதி கூறிவிட்டான்... அன்றே இசக்கிமுத்துவின் இறுதிநாளுக்கு எமன் நாள் குறித்துவிட்டான்...

மறுநாள் பத்ரிநாத் ஊருக்கு கிளம்பும் போது சின்னவனைத் தன்னுடன் அழைத்துச் சென்றுவிட்டான்... விடுமுறை என்பதால் இசக்கிமுத்து அதற்குச் சம்மதித்தான்... இளவரசி அரைமனதாக ஒத்து கொண்டாள்...

அன்று திருமணத்திற்கு அழைப்பதற்காக அவளது உறவினர்கள் அங்கு வருகை தந்திருந்தனர்... எல்லோரையும் அழைத்தவர்கள் இளவரசியிடம் தனியே,

"நீ மட்டும்ன்னா கல்யாணத்துக்குத் தாராளமா வா அரசி... ஆனா உன் புருசனை மட்டும் கூட்டிட்டு வந்திராதே... போன தடவை அவனை நம்ம மாமா வீட்டு கல்யாணத்துக்குக்

கூட்டிட்டு போயிருந்தியாமே... நம்ம இனத்தோட அவனால் ஒட்டி போக முடியலையாமே... எல்லோரும் அதை என் கிட்ட வந்து சொல்லி சிரிச்சாங்க... பந்தியில் நறுவிசா சாப்பிட கூடத் தெரியலைன்னு... என்ன இருந்தாலும் நீ நம்ம பொண்ணு... நீரடிச்சு நீர் விலகி போகாது... உன்னை நாங்க சேர்த்துக்கிறோம்... ஆனா உன் புருசனை எங்களால சேர்த்துக்க முடியாது..." என்று சொன்னதைக் கேட்டு இளவரசியின் முகம் அவமானத்தில் சிவந்து போனது...

நல்லவளாக இருந்திருந்தால் அந்த இடத்தில் 'என் புருசனை பத்தி கேவலமா பேசாதீங்க' என்று வந்தவர்களைச் சத்தம் போட்டிருக்க வேண்டும்... அதைச் செய்யாது அவளுக்குக் கணவன் மீது கோபம் வந்தது... 'எந்த இடத்தில் எப்படி நடந்துக்கணும்ங்கிற அறிவு கிடையாதா?' என்று அவனை மனதிற்குள் வைதாள்...

அன்றிலிருந்து அவள் கணவனைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தவிர்க்க ஆரம்பித்தாள்... தான் மட்டும் விழாக்கள், விசேசங்களுக்குச் சென்று வர ஆரம்பித்தாள்... அதைக் கூட இசக்கிமுத்துப் பெரிதாக எடுத்து கொள்ளவில்லை... ஆனால் படுக்கையில் தன்னைத் தவிர்க்கும் அவளைக் கண்டு அவனுக்குக் கடும்கோபம் வந்தது...

இராஜஸ்தானில் இருந்தவரை இளவரசியின் ஒரே சந்தோசம் தாம்பத்திய உறவு, அதில் வரும் மகிழ்ச்சி மட்டுமே... ஆனா இங்கு வந்த பின் பட்டுப்புடவையிலும், வைர நகைகளிலும் அவளது சந்தோசம் அடங்கிப் போயிற்று... அதுவே அவளுக்குப் போதுமானதாய் இருந்தது... அதனால் கணவனின் தொடுகை கூட அவளுக்கு வேம்பாய் இருந்தது போலும்... அவனை விட்டு விலகியே இருந்தாள்...

அன்று இசக்கிமுத்து வலுக்கட்டாயமாக இளவரசியின் உறவினர் வீட்டு விசேசத்திற்குச் சென்றுவிட்டு அவமானப்படுத்தப்பட்டுத் திரும்பி வந்தான்...

"வந்த இடத்தில் வாயை வச்சுக்கிட்டுச் சும்மாயிருக்க மாட்டீயா...? உன்னை யார் அங்கே வந்து வாயை திறக்க சொன்னது..." என்று இளவரசி கோபத்தில் சத்தம் போட்டாள்...

"வாய் இருந்தா பேச தான் செய்வாங்க..." அவனும் பதிலுக்குக் கத்தினான்...

"சபை நாகரீகம் தெரிஞ்சு எங்கே என்ன பேசணுமோ அதை மட்டும் பேசணும்..."

"ஓ, எனக்கு நாகரீகம் தெரியாது அப்படித் தானே... ஆமாம், எனக்கு நாகரீகம் தெரியாது... நான் காட்டான் தான்... ஆனா உன் புருசனை பார்த்து எல்லோரும் கேலி செஞ்சு சிரிச்சாங்களே அதைப் பார்த்துக்கிட்டு அமைதியா இருந்த பாரு உனக்குத் தான் நாகரீகம் தெரியும்... வீட்டு மாப்பிள்ளையை மூணாவது மனுசன் கிண்டல் பண்றானே அவனைத் தட்டி கேட்க துப்பில்லாம வேணும்ன்னு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருந்தான்களே உன் நொன்னையன்ங்க அவங்களுக்குத் தான் நாகரீகம் தெரியும்... எனக்குத் தெரியாது தான்..."

"ஆமா, நீ காட்டான் தான்டா... உன்னை மாதிரி ஒருத்தனை கட்டிக்கிட்டு நான் என்ன சுகத்தைக் கண்டேன்..." என்று அவள் மூக்கை சீந்த...

"சிங்கம் மாதிரி ஒரு பயலை கொடுத்திருக்கேன்டி..." அவன் கோபத்தில் உறுமினான்...

"பிச்சைக்காரன் கூடப் படுத்தாலும் தான் பிள்ளை பிறக்கும்... பிள்ளையை எவன் வேணும்ன்னாலும் கொடுக்கலாம்... ஆனா கட்டின பொண்டாட்டியை, பெத்த பிள்ளையை நல்லா வச்சிக்கத் தெரிஞ்சவன் தான் நல்ல ஆம்பிளை..." அவள் பேசி முடிக்கும் முன் அவன் அவளது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை அறைந்தான்...

"ஓ, நான் ஆம்பிளை இல்லையா...?" மீண்டும் உறுமியவனைக் கண்டு அஞ்சாது பார்த்தவள்,

"இல்லை..." என்றவளின் மறுகன்னத்தில் மீண்டும் ஓங்கி ஒரு அறை விட்டவன்,

"போடி நீங்களும் உங்க நாசமா போன நாகரீகமும்..." என்று கத்தியபடி அவன் அங்கிருந்து சென்றுவிட்டான்...

அன்று முழுவதும் அவன் வீட்டிற்கு வரவில்லை... இரவு வெகுநேரம் கழித்து வீட்டிற்கு வந்தவனின் நடையில் மிகுந்த தள்ளாட்டம் இருந்தது... அறைக்குள் நுழைந்தவன் அங்குப் படுக்கையில் நிம்மதியாக உறங்கி கொண்டிருந்த மனைவி மீது பொத்தென்று விழுந்தான்... அவன் விழுந்த வேகத்தில் தூக்கம் கலைந்த இளவரசி அவனிடம் இருந்த வந்த வாசனையை வைத்து,

"குடிச்சியிருக்கியா...?" என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு கேட்டாள்...

"ஆமா... லைட்டா..." என்றவன் அவளது இதழோடு இதழ் பொருத்த எத்தனிக்க... அவளோ வேகத்துடன் அவனை உதறி தள்ளினாள்...

"எங்கேடி போற...?" அவன் அதை விட வேகமாய் அவளைப் பிடித்துக் கட்டிலில் தள்ளினான்...

"ச்சீ... என்ன பண்ற...?" என்றபடி எழ முயன்றவளை எழ முடியாதபடி செய்தான் இசக்கிமுத்து...

"தப்பு பண்ற முத்து..."

"புருசன் பொஞ்சாதிய தொடுறது தப்பா...?"

"எனக்குப் பிடிக்கலை..."

"எனக்குப் பிடிச்சிருக்கே..." என்றவன் அவளைத் தனது கட்டுபாட்டில் கொண்டு வர ஆரம்பித்தான்...

"ச்சீ, நீ மனுசனே இல்லை..." என்று முகத்தைத் திருப்பிவளை கண்டு,

"நான் மிருகம்ன்னே வச்சுக்கோ..." என்றுரைத்தவன் அத்தனை நாள் தாபம், இன்று காலையில் ஏற்பட்ட கோபம், மனைவியின் உதாசீனம் எல்லாவற்றையும் சேர்த்து அவளின் மேனியில் வன்மையாகக் காட்ட ஆரம்பித்தான்... தன் மனதின் ஆத்திரத்தை வெளிப்படுத்த காரணி இல்லாது இருந்தவனுக்கு அவளே காரணத்தை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டாள்...

மறுநாள் காலையில் எழுந்து மனைவியைப் பார்த்த இசக்கிமுத்து அதிர்ந்து போனான்... அவளது உடல் மட்டுமல்லாது முகத்திலும் அவன் பதித்த வன்முறையான முத்திரைகள் கன்றி போய்ச் சிவந்து காட்சியளித்தது...

"இளா... நேத்து ஏதோ போதையில்..." என்றவனைக் கண்டு கொள்ளாது அவள் அறையை விட்டு சென்றுவிட்டாள்...

இசக்கிமுத்துத் தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்துவிட்டான்... இராஜஸ்தானில் இருந்த போது அவனுக்கும், அவளுக்கும் இப்படி அடிக்கடி சண்டை வரும்... அப்போதும் அவன் இப்படித்தான் கையை நீட்டிவிடுவான்... அந்தச் சமயம் அவனது கோபத்தைக் கட்டுப்படுத்தி அவனைச் சமாதானம் செய்து அனுப்புவது மாடசாமியின் வாடிக்கை... இப்போது மாடசாமி இல்லாததால் அவன் அவளிடம் சற்று வரம்பு மீறி நடந்து கொண்டான்...

இசக்கிமுத்து கிளம்பி செல்லும் வரை அமைதியாக இருந்த சகோதரர்கள் இருவரும் தங்கையிடம் பேச வந்தனர்... அவளின் இரு பக்கமும் அமர்ந்து கொண்டு,

"அரசி, என்னம்மா இப்படி உடம்பு எல்லாம் காயமா இருக்கு...?" கண்ணீர் குரலில் செல்வரத்தினம் நாடகத்தை ஆரம்பித்து வைத்தார்...

அதைக் கேட்டு அவளது விழிகளில் விழிநீர் அருவியாய்ப் பொழிந்தது... திருமணமான இத்தனை வருடங்களில் அவளது சோகத்தினைப் பகிர்ந்து கொள்ள யாரும் இல்லாது தனியே அவஸ்தைப்பட்டவள் இன்று சகோதரர்களின் ஆதரவில் மனமுடைந்து போனாள்...

"அரசி..." மணிபாரதி அவளது தோளில் ஆறுதலாய் கை வைக்க...

"அண்ணா..." என்றபடி அவள் அவன் தோள் சாய்ந்து விசும்பினாள்...

"நேத்துப் படுக்கப் போகும் போது கூட நல்லா தானேம்மா இருந்த... ஒரே ராத்திரியில் இப்படியாகிருக்குன்னா...? அந்தப் படும்பாவி உன்னை என்ன பண்ணினான்ம்மா...? சொல்லும்மா... இப்பவே அவனை உண்டு இல்லைன்னு ஆக்கிறேன்..." மணிபாரதி கோபத்தில் கொதித்தான்...

"நீ இப்படிக் கஷ்டப்படுறதுக்காம்மா அவனைக் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்ட... நாங்க உன்னைப் பூவா தாங்கினோமே அரசி... நீ இப்படிக் கண்ணீர் வடிக்கிறதை பார்த்து என் நெஞ்சில் ரத்தம் வடியுது..." செல்வரத்தினம் தன் பங்குக்குப் பாசமலரை வெளிப்படுத்தினான்...

"அவன் சட்டையைப் பிடிச்சுக் கேள்வி கேட்கவா...? இல்லை அவனையும் இப்படி ரத்தம் கன்ற அளவுக்கு அடிக்கவா...?" மணிபாரதி கோபம் அடங்காது கத்தினான்...

"ஷ், பாரதி சும்மாயிரு... இது நம்ம தங்கச்சி வாழ்க்கை சம்பந்தப்பட்ட விசயம்... அவளா எதுவும் சொல்லாத போது நாமளா எதுவும் செய்யக் கூடாது..." என்று தம்பியிடம் ஜாடை காட்டினான் செல்வரத்தினம்... இது எதையும் உணராது இளவரசி அழுது கொண்டிருந்தாள்...

"அதுக்காக அவன் நம்ம பொண்ணை என்ன வேணும்ன்னாலும் பண்ணுவான்... நாம அதைப் பார்த்துட்டு சும்மா இருக்கணுமா...? இதுக்குத் தான் சொல்றது இனம் இனத்தோட சேரணும்ன்னு... கண்ட கண்ட நாயை கூட்டிட்டு வந்து நடுவீட்டில் உட்கார வச்சா இப்படித்தான் நடந்துக்கும்... தராதரம் நாய்க்குத் தெரியாது... நமக்குத் தான் தெரியணும்... உன்னைக் காதலிச்ச பத்ரியை விட்டுட்டு நீ இவனைப் போய் எப்படிம்மா செலக்ட் பண்ணின...? உன் கண்ணுக்கு பத்ரி எல்லாம் ஒரு ஆளா தெரியலையா...?" நைச்சியமாகப்

பத்ரிநாத் அவளைக் காதலிப்பதை சொல்லிவிட்டான் மணிபாரதி...

அதைக் கேட்டு அழுகையை நிறுத்திவிட்டு விலுக்கென்று நிமிர்ந்து பார்த்தாள் இளவரசி...

"என்ன அண்ணா சொல்ற...?" திகைப்பும் வியப்புமாய் அவள் மணிபாரதியை பார்த்தாள்...

"உண்மையைத் தான் சொல்கிறேன்..." என்று அவன் கூற... அவள் விரக்தியாய் தனக்குள் சிரித்துக் கொண்டாள்...

"என் தலைவிதியை நானே நிர்ணயம் பண்ணிக்கிட்டேன்... என்னை விடுங்க..." என்றவள் எழுந்து சென்றுவிட்டாள்...

சகோதரர்கள் இருவரும் தங்களுக்குள் பார்வையைப் பரிமாறி கொண்டனர்...

"அண்ணா இது சரி வருமா...?"

"அடி மேல் அடி அடிச்சா அம்மியும் நகரும்ங்கிற பழமொழியை நீ கேள்விப்பட்டது இல்லையா...? அம்மியே நகரும் போது அரசி மனம் நகராதா என்ன...?" மீசையை நீவியபடி தம்பியை பார்த்தார் செல்வரத்தினம்...

அன்றிரவு இளவரசி தனது ஜாகையை வேறு அறைக்கு மாற்றிக் கொண்டாள்... அதே போல் கணவனுடன் பேசுவதும் இல்லை... அவனைக் கண்டு கொள்வதும் இல்லை... அதற்காக எல்லாம் அவள் கவலைப்படவில்லை... வைர நகைகளைப் பூட்டி கொண்டு பட்டுப்புடவை சரசரக்க அவள் மாதர் சங்கம், விசேச வீடுகள், விழாக்களில் சந்தோசமாகக் கலந்து கொண்டாள்...

இசக்கிமுத்துவின் நிலைமை தான் கவலைக்கிடமாகி போனது... இளவரசியை வைத்து தான் மாமியார் வீட்டில் அவனுக்கு மரியாதை இருந்தது... இப்போது அவளும் அவனை மதிக்காததால் அவளது சகோதரர்கள் மட்டுமில்லாது வேலைக்காரர்கள் கூட அவனை மதிப்பது இல்லை... அதனால் அவன் வீட்டிற்கு வருவதே இல்லை...

கிடைத்த வேலையைச் செய்து கொண்டு அந்தப் பணத்தில் குடித்துவிட்டுச் சாலையோரமாக வீழ்ந்து கிடந்தான்...

அவனைத் தேடி வருவார் யாருமில்லாததால் மறுநாள் காலை வரை அவன் அப்படியே கேட்பாரற்றுக் கிடந்தான்... மறுநாள் சூரிய வெப்பத்தில் அல்லது மழைத்துளியின் குளுமையில் அவனே எழுந்து வீட்டிற்குச் சென்றான்... நாட்கள் செல்ல செல்ல அவனுக்கு வாழ்க்கை நரகமாகி போனது... அதை விடக் கொடுமை மனைவியின் பாராமுகம்...

கணவன் மனைவிக்கு இடையில் சிறு விரிசல் அடைந்திருந்த உறவு மெல்ல மெல்ல பெரும் பிளவாகி கொண்டே வந்தது... அந்தப் பிளவை சரிப்படுத்த தான் யாரும் இல்லை...

அவ்வப்போது தொலைப்பேசியில் பேசும் மாடசாமியிடம் தனது கஷ்டத்தைக் கூறாது தான் சந்தோசமாய் இருப்பதாய்க் கூறிவிடுவான் இசக்கிமுத்து... அதனால் மாடசாமிக்கு இளவரசியின் குணம் முழுமையாகத் தெரியாது போனது...

சரியாக ஒரு வாரம் சென்று சுடலைமுத்துவை திரும்பக் கொண்டுவிட வேண்டி பத்ரிநாத் அங்கு வந்திருந்தான்... அவனை அவனது பெற்றோர் கைகளில் ஒப்படைத்த இரண்டு மணி நேரத்தில் பத்ரிநாத் ஊருக்குக் கிளம்பிய போது வழக்கம் போல் சுடலைமுத்து அவனுடன் வருவதாகப் பிடிவாதம் பிடித்தான்...

ஏற்கெனவே ஆத்திரத்தின் பிடியில் இருந்த இசக்கிமுத்து மகனின் பிடிவாதம் கண்டு கோபம் கொண்டான்...

"சுடலை சொன்ன பேச்சு கேளு..." என்று மகனை அதட்டினான்...

"போப்பா, நீங்களும் அம்மாவும் எப்பவும் சண்டை போடுவீங்க... என்னைக் கண்டுக்க மாட்டீங்க... சாமி அப்பா மாதிரி பத்திப்பா என்னை நல்லா பார்த்துப்பாங்க... நீங்க

எனக்கு வேண்டாம்..." என்று அவன் கண்ணைக் கசக்கி கொண்டு கூற...

மனைவியின் உதாசீனத்தோடு மகனின் இந்தப் பேச்சும் சேர்ந்து கொள்ள இசக்கிமுத்துவின் கோபம் கண்டபடி அதிகரித்தது... அதன் விளைவு யாரும் எதிர்பாராத தருணத்தில் அவன் மகனை அடித்துவிட்டான்...

"சின்னப் பையன் ஏதோ புரியாது பேசுறான்... அதைப் போய் ஏன் பெருசா எடுத்துக்கறீங்க..." என்றபடி பத்ரிநாத் சின்னவனை அணைத்துக் கொண்டான்...

பத்ரிநாத்தை கடிய முடியாதபடி இசக்கிமுத்து கோபத்துடன் நின்றிருந்தான்... அந்நேரம் இளவரசி கணவனை முறைத்து பார்த்தாள்...

"கிருஷ் சொல்றதில் என்ன தப்பிருக்கு... நம்ம வாழ்க்கை அப்படித் தானே போயிக்கிட்டு இருக்கு... எனக்குக் கிடைக்காத நிம்மதி என் மகனுக்காவது கிடைக்கட்டும்... அவனாவது சந்தோசமா இருக்கட்டும்..."

இறுதியில் அவள் தன் மனதில் அழுத்தி கொண்டிருந்த விசயத்தைச் சொல்லியே விட்டாள்... இப்போது எல்லாம் அவளுக்கு இந்த எண்ணம் அடிக்கடி எழாமல் இல்லை... பத்ரிநாத்தை திருமணம் செய்திருந்தால் தான் நிம்மதியாக இருந்திருப்போமோ? என்று... அண்ணனும், தம்பியும் ஒருவரை ஒருவர் அர்த்தம் பொதிந்த பார்வையைப் பரிமாறி கொண்டனர்...

அடுத்த நொடி இசக்கிமுத்து இளவரசியைப் பளாரென்று அடித்திருந்தான்... அத்தனை பேர் முன்னிலையில் தன்னை அடித்த கணவனை அதிர்ச்சியோடு பார்க்காது இளவரசி வெறுப்போடு பார்த்தாள்... 'ச்சீ, நீயெல்லாம் மனிதனா...?' அவளது பார்வை கணவனைக் காறி உமிழ்ந்தது...

"என்னடி உன் நிம்மதி, சந்தோசம் கெட்டு போச்சு... உன்னைக் கல்யாணம் பண்ணிய பிறகு என்னோட நிம்மதி,

சந்தோசம் எல்லாம் போயிருச்சு... நீ மனுசியே இல்லைடி... ராட்சசி..." என்று அவன் கோபமாகக் கத்தினான்...

அதற்கு மேல் கணவன், மனைவி சண்டையைக் காண சகிக்க முடியாதவனாய் பத்ரிநாத் சின்னவனைத் தூக்கி கொண்டு வெளியில் வந்துவிட்டான்... இசக்கிமுத்து இளவரசியை அடித்ததை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை... காதல் கொண்ட மனது வெகுநாட்களுக்குப் பிறகு காதலிக்காகத் துடித்தது... இப்படியொரு வாழ்க்கைக்காகத் தான் இளவரசி இத்தனை அவசரமாகக் காதலித்து, திருமணம் முடித்தாளா...? அவள் மீது அவனுக்கு மிகவும் இரக்கமாக இருந்தது...

அதே சமயம் இசக்கிமுத்து மீது அளவுகடந்த வெறுப்பு ஏற்பட்டது... சின்னப் பெண் என்று தெரிந்து தானே காதலித்துத் திருமணம் செய்து கொண்டான்... அப்போது இருந்த காதல் இப்போது ஏன் இல்லாது போனது... அவனுக்கு இசக்கிமுத்து மீது கோபம் வந்தது...

தன்னவளின் இழிநிலையை நினைத்து அவனது விழிகளில் கண்ணீர் துளிர்த்தது...

"பத்திப்பா அழாதீங்க..." சுடலைமுத்து அவனது விழிகளைத் துடைத்து விட்டான்... அதில் மனம் நெகிழ்ந்து போன பத்ரிநாத் அவனது கையைப் பிடித்து அதில் முத்தமிட்டான்...

"அழ மாட்டேன் கண்ணா..." என்றவனின் முகத்தில் மகிழ்ச்சி மீண்டிருந்தது...

பத்ரிநாத் ஊருக்கு கிளம்பும் போது இசக்கிமுத்து வீட்டில் இல்லை... சுடலைமுத்து மீண்டும் சண்டை வந்துவிடுமோ என்று பயந்து மனதில் இருப்பதைக் கூறாது பத்ரிநாத் பின்னேயே அலைந்து கொண்டிருந்தான்... அப்போது இளவரசியே பத்ரிநாத்திடம் வந்து,

"கிருஷை உங்க கூடக் கூட்டிட்டு போங்க..." என்க...

பெரியவனும், சின்னவனும் ஆச்சிரியமும் சந்தோசமுமாய் அவளைப் பார்த்தனர்...

"அம்மா..." என்று சுடலைமுத்து மகிழ்வுடன் அன்னையின் காலை கட்டி கொண்டான்...

"உன் வீட்டுக்காரர் ஏதாவது..." என்று தயங்கினான் பத்ரிநாத்...

"அவரை நான் பார்த்துக்கிறேன்... நீங்க இவனைக் கூட்டிட்டு போங்க... இவனோட திறமைக்குச் சென்னை மாதிரியான சிட்டியில் படிப்பது தான் சரி... நாங்க அவ்வப்போது அவனை வந்து பார்த்துக்கிறோம்..." என்று அவள் முழுமனதாகச் சம்மதித்தாள்...

பத்ரிநாத் சந்தோசம் கொண்டான்... செல்வரத்தினம், மணிபாரதி இருவரும் ஒன்றும் பேசாது அமைதி காத்தனர்... இனி அவர்கள் செய்யப் போகும் காரியத்துக்குச் சுடலைமுத்து இங்கில்லாது இருப்பதே நல்லது என்றே நினைத்தனர்...

பத்ரிநாத் தனது காரில் முன்பக்க இருக்கையில் சுடலைமுத்துவை அமர வைத்து இருக்கை பட்டியை போட்டுவிட, சுடலைமுத்து அவனது கன்னத்தில் முத்தமிட்டுச் சிரித்தான்... பதிலுக்குப் பத்ரிநாத்தும் முத்தமிட... அந்தக் காட்சி பார்ப்பதற்கு அழகிய கவிதை போலிருந்தது... மறுபக்கம் வந்து ஏறியமர்ந்த பத்ரிநாத் சுடலைமுத்து ஏதோ கூறியதற்கு வாய்விட்டு சிரித்தபடி அவனது தலையைக் கலைத்துச் சிரித்தான்... அதில் சின்னவனும் கிளுக்கி சிரித்தான்...

இந்தக் காட்சியைக் கண்ணிமைக்காது பார்த்து கொண்டிருந்தாள் இளவரசி... அந்தக் கணம் அவள் மனதில் சுடலைமுத்துவை தனது மடியில் வைத்துக் கொண்டு தான் பத்ரிநாத் அருகில் அமர்ந்திருப்பது போல் ஒரு அழகான காட்சி அரங்கேறியது... நினைவே சுகமாக இருந்ததில் இளவரசி அப்படியே கனவில் இருப்பது போல் மிதந்து கொண்டிருந்தாள்...

"மூங்கில் காடு பற்றியெரிய
சிறு நெருப்பு பொறி போதும்...

பெண்ணவள் மனம் பற்றியெரிய
ஆசை எனும் பொறி போதும்...
கனவு ஆசையாகி போனது...
கணவன் நிராசையாகி போனான்...
ஆசை பேராசை கொள்ளும் போது
காதல் நிராசையாகி போகும்..."

கொள்ளும்...!!!

கதவு படபடவெனத் தட்டும் ஒலியில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த இசக்கிமுத்து லேசாக அசைந்தான்... தூக்கமும், நேற்று அடித்த போதையும் அவனை எழ முடியாதபடி நன்கு அசத்தியது... மீண்டும் கதவு படபடவெனத் தட்டப்படவும் எரிச்சலுடன் எழுந்தவன் தள்ளாடி கொண்டே சென்று கதவை திறந்தான்... கதவிற்கு வெளிப்பக்கம் நின்றிருந்த காவலர்களைக் கண்டு அவனது தூக்கமும், போதையும் பயத்துடன் கலைய ஆரம்பித்தது...

"நீங்க யாரு...? நீங்க எதுக்கு இங்கே வந்தீங்க...?" அவனது குரல் குழறலாய் ஒலித்தது...

"ம், உன் மாமியார் வீட்டு ஆளுங்க... வாடா..." என்று அவனது கழுத்தில் கை வைத்து வெளியில் தள்ளினர்...

"என் மாமியார் வீட்டுக்கே வந்து என் மேல கை வைக்கிறீங்களா...?" அவன் தான் மனைவியின் வீட்டில் உறங்கி கொண்டு இருப்பதாக எண்ணி கொண்டான்...

"என்னது மாமியார் வீடா...? இனி தான் நீ மாமியார் வீட்டுக்குப் போகப் போற... இது உன்னை மாதிரி பொம்பளை பொறுக்கிங்க தங்குகிற லாட்ஜ்..."

அந்தக் காவலர் கூறியதை உணர்ந்து அப்போது தான் தான் இருக்கும் இடத்தைக் கண்களைக் கசக்கி கொண்டு பார்த்தான் இசக்கிமுத்து... அது ஒரு பாழடைந்த விடுதியின் அறை...

"ஏய் எழுந்திருடி... உனக்கு வேறு தனியா சொல்லணுமா...?" வேறொரு காவலரின் குரலில் அவன் திரும்பி உள்ளே பார்த்தான்...

அங்கே அரைகுறை ஆடையுடன் ஒரு பெண் கட்டிலில் படுத்திருந்தாள்... காவலர் எழுப்பியதும் சோம்பல் முறித்தபடி எழுந்தவள் இவனைப் பார்த்து கண்ணடித்தபடி,

"நேத்து ரொம்ப வேலை வாங்கிட்டய்யா... உடலு எல்லாம் நோவுது..." என்று கூறியபடி புடவையை எடுத்து உடுத்த துவங்கினாள்...

இசக்கிமுத்துவுக்குப் பயத்தில் கை, கால் எல்லாம் நடுங்க ஆரம்பித்தது... அவன் ஏதோ மனக்குறை தீர குடிப்பானே தவிர, இது போல் பெண் பழக்கம் ஏதும் அவனுக்குக் கிடையாது...

"ஸ்டேசனுக்குக் கூட்டிட்டு போய் இன்னும் தட்டினா இன்னும் நோவும்... வாடி சீக்கிரம்..." என்ற காவலர் அந்தப் பெண்ணை இழுத்துக் கொண்டு வந்து இசக்கிமுத்து அருகே நிறுத்தி இருவருக்கும் சேர்த்து கைவிலங்கிட்டார்...

அதில் சுரணை அடைந்த இசக்கிமுத்து, "சார், நான் அந்த மாதிரி ஆள் இல்லை... நான் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவன்... நான் எப்படி இங்கே வந்தேன்னு எனக்கே தெரியலை... என் மச்சான் ஜமீன்தார் செல்வரத்தினம் கிட்ட கேட்டு பாருங்க..." என்று காவலரிடம் கெஞ்சினான்...

"யாரா இருந்தாலும் ஸ்டேசனுக்கு வந்து பார்க்க சொல்லு..." என்று கண்டிப்புடன் கூறிய காவலர் அவனையும், அந்த விலைமாதுவையும் இழுத்து சென்று ஜீப்பில் ஏற்றினார்...

அந்த ஜீப்பில் இவனைப் போன்று ஒரு ஆண் மட்டுமே மாட்டியிருந்தான்... மற்றவர்கள் எல்லாம் பெண்களே... அவர்களுக்கு நடுவில் அவன் கூனிக்குறுகி அமர்ந்தான்... காவல்நிலையத்துக்குச் சென்ற பின்னர் இவர்களை எல்லாம் வரிசையாக நிற்க வைத்து காவலர்களும் உடன் நின்று புகைப்படம் எடுத்து கொண்டனர்...

மறுநாள் அந்த மாவட்டத்தில் இருந்து வெளியாகும் செய்தித்தாளில் முதல் பக்கத்தில் இந்தப் புகைப்படம் வெளிவந்திருந்தது... அதைப் பார்த்ததும் கோபத்துடன் செய்தித்தாளை தங்கையின் முன் விட்டெறிந்தான் செல்வரத்தினம்...

"நாய் அதோட புத்தியை காட்டிருச்சு பாரு... போயும், போயும் இவன் புத்தி இப்படியா போகணும்...? அழகு சிலை மாதிரி நீ அவனுக்காக இருக்கும் போது அவன் ஏன் இப்படிப் போனான்...? உனக்காகத் தான் அரசி அவனை வீட்டில் அனுமதிச்சது... இந்தக் கேவலத்துக்குப் பிறகு அவனை எப்படி இங்கே அனுமதிக்க முடியும்...?"

"அனுமதிக்க வேண்டாம்..." அந்தச் செய்தியை படித்த இளவரசி உணர்ச்சிகள் துடைத்த முகத்துடன் கூறினாள்...

"அரசி..."

"இனி அவன் எனக்கு வேண்டாம்ண்ணா..." உறுதியான குரலில் கூறியவளை கண்டு சகோதரர்கள் இருவரும் தங்களுக்குள் சிரித்துக் கொண்டனர்...

"சரிம்மா... நாங்க பார்த்துக்கிறோம்..." ஒருமித்த குரலில் இருவரும் கூறவும் அவள் உள்ளே சென்றுவிட்டாள்...

"பாரதி கனக்கச்சிதமா காரியத்தை முடிச்சிட்ட... சபாஷ்டா தம்பி..." செல்வரத்தினம் தம்பியை பாராட்டினான்...

"பணத்தைத் தூக்கி எறிஞ்சா காரியம் தானா நடக்குது..." என்று இறுமாப்புடன் சிரித்தான் மணிபாரதி...

"இனி என்ன பண்ண அண்ணா...?"

"கோர்ட்டில் ஃபெனால்ட்டி கட்டி தான் வெளியில் வரணும்... அப்படி அவன் வெளியில் வரட்டும் பார்த்துக்கலாம்..." என்று அண்ணன் முடித்துக் கொள்ள... தம்பி அமைதி காத்தான்...

இராஜஸ்தானில் இருந்த மாடசாமிக்கு இந்த விவரம் எதுவும் தெரியாது... தெரிந்திருந்தால் தம்பியை உடனே வெளியில் எடுத்திருப்பான்... அவனிடம் இந்தச் செய்தியை

கொண்டு போய்ச் சேர்க்கும் அளவிற்கு அவனுக்குச் சொந்தபந்தங்கள் அங்கு இல்லை... இசக்கிமுத்து இப்படிக் குடித்துவிட்டுச் சாலையில் புரள்வதால் நண்பர்கள் கூட்டமும் அவனிடம் இருந்து தள்ளியே நின்றது...

ஒரு மாத காலம் தண்டனை முடிந்து இசக்கிமுத்து மனைவியைத் தேடி வந்தான்... அவளோ பாராமுகமாய் அவனைப் பார்க்காது நின்றாள்...

"இளா, நான் சொல்றதை கேளு புள்ள... எல்லாமே பொய்... யாரோ எனக்கு எதிரா சதி பண்ணியிருக்காங்க..." என்று அவன் அவளிடம் கெஞ்சும் குரலில் கூற...

"ச்சீ, பண்றது எல்லாம் பண்ணிட்டு இப்படிப் பேச உனக்கு வெட்கமா இல்லை... உனக்கு எதிரா யாரோ சதி பண்ணியிருக்காங்களா...? இதைச் சொல்ல உனக்கே சிரிப்பா இல்ல... நீ எல்லாம் ஒரு ஆளு... உன்னையும் ஒருத்தன் எதிரியா நினைக்கப் போறானா...?" என்று எக்காளத்துடன் கூறிய மனைவியின் வார்த்தையில் அவன் அவமானத்தில் வெட்கி போனான்...

"இளா..." என்று அவன் அவளை அழைக்க...

"அண்ணா, இந்தாளு கழுத்தை பிடிச்சு வெளியில் தள்ளுங்க... இந்தாளு முகத்தில் முழிப்பது கூடப் பாவம்..."

அவள் வெறுப்புடன் கூறியதும் இசக்கிமுத்து மனம் பதறியவனாய், "இளா நான் குடிகாரன் தான்... அதுக்காக நான் கெட்டவன் இல்லை... இதோ இந்த நொடி வரை நான் உன்னை மட்டும் தான் காதலிக்கிறேன்... சாகும் வரை உன்னை மட்டும் தான் காதலிப்பேன்... உன்னைத் தவிர வேறு எந்தப் பொம்பளையையும் நான் மனசால கூடத் தீண்டியது இல்லைடி... என்னைப் போய்ப் பொம்பளை பொறுக்கியை பார்க்கிற மாதிரி பார்க்கிறியே... இது நியாயமா...? என் கூட வாழ்ந்த இத்தனை வருசத்தில் என்னைப் பத்தி உனக்குத் தெரிஞ்சது இவ்வளவு தானா...? உலகமே என்னைக் குத்தம் சொன்னாலும் நீ எனக்குச்

சப்போர்ட் பண்ண வேண்டாமா...?" அவன் அவளது கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினான்...

"ச்சீ... கையை விடு..." என்று அவனது கையை உதறியவள்,

"உனக்கு உடல் சுகத்துக்கு மட்டும் தான் நான் வேணும்... மத்தபடி நான் உனக்குத் தேவையில்லை... உன் கூட வாழ்ந்த வரை உன்னைப் பத்தி தெரிஞ்சிக்கிட்டது இது மட்டும் தான்..."

"இளா..." என்று திகைத்து நின்றவன் அடுத்த நொடி அவளது காலில் விழுந்து கதறினான்...

"என்னை வெறுத்துடாதே இளா..." என்று... அதில் அவள் சற்று அதிர்ந்து போய்ப் பின்னால் நகர்ந்தாள்... அவளைப் போல் அவளது மனமும் அதிர்ந்ததோ...?

இசக்கிமுத்து நல்லவன் தான்... அவன் தன் மனைவியை உயிருக்கும் மேலாக நேசித்தான்... வாழ்க்கையின் தேவைகள் அவனை அழுத்தியதில் அவன் பணத்தின் பின்னால் ஓட வேண்டி இருந்தது... அதனால் மனைவியைச் சிறிது கவனிக்காது போய்விட்டான்... அதை இளவரசி நல்ல மனைவியாக அவனைப் புரிந்து கொண்டு அவனுக்குப் பக்கபலமாக இருந்து அவனைத் தாயாய் வழிநடத்தி இருந்தால் அவனும் தனது ஓட்டத்தை நிறுத்திவிட்டு அவளிடம் இளைப்பாறி இருப்பான்... இங்கு இருவர் மீதும் தவறு இருந்தது... ஸ்வரமாய் இசைக்கப்பட வேண்டிய தாம்பத்தியம் நல்ல புரிதலின்றி அபஸ்வரமாய்ப் போயிற்று...

இன்னமும் இசக்கிமுத்துவை பேச விட்டால் எங்கே தங்கை மனம் மாறிவிடுவாளோ என்று பயந்து மணிபாரதி இசக்கிமுத்துவின் கழுத்தில் கை வைத்து தூக்கி நிறுத்தியவன்,

"நீ சொல்றதை நாங்க எப்படிடா நம்பறது...? நீ எப்படி அந்த லாட்ஜ்க்கு போன...? அப்படியே நீ அங்கே தங்குறதுக்காகப் போயிருந்தாலும் அங்கே அந்தப் பொண்ணு எப்படி

வந்தாள்...?" என்று கேட்டவனின் ஒரு கேள்விக்குக் கூட இசக்கிமுத்துவிடம் பதில் இல்லை...

அவனது மௌனம் செல்வரத்தினம், மணிபாரதி இருவருக்கும் சாதகமாகப் போய்விட்டது... செல்வரத்தினம் அவன் முன் வந்து அவனைக் கன்னம் கன்னமாய் அறைந்து தள்ளி,

"உன்னை எல்லாம் மனுசனா நினைச்சு காதலிச்சாளே என் தங்கச்சி அவளைச் சொல்லணும்... பொறுக்கி நாய் உன் புத்தியை காட்டிட்டியேடா..." என்று காறி உமிழாத குறையாக எகிறியவன் இசக்கிமுத்துவை தரதரவென்று இழுத்து வந்து வெளிவாசலில் கொண்டு வந்து தள்ளினான்...

இத்தனை பாதகம் இவர்கள் செய்த போதும் இசக்கிமுத்து இமைக்காது தன் மனைவியைப் பார்த்தபடி நின்றிருந்தான்... அவளது வெறுப்பான பார்வையில், சிலை போன்ற அவளது தோற்றத்தில் அவன் மிகவும் மனமுடைந்து போனான்... அவனது காதல் மனம் 'என் இளாவா இப்படி?' என்று அதிர்ச்சியுடன் புலம்பியது...

அந்தக் கணம் அவன் ஒன்றை மறந்து போனான்... ஒரு மாத காலமாக அவன் சிறையில் இருந்த போது மனைவி ஏன் தன்னைப் பார்க்க வரவில்லை என்று...? அவன் கொஞ்சம் யோசித்து இருந்தாலும் மனைவியின் மனமாற்றத்தை உணர்ந்து இருப்பானோ? உணர முடியாத அளவிற்குக் காதல் அவன் கண்ணை மறைத்தது போலும்....

இசக்கிமுத்துவை வெளியில் தள்ளிவிட்டு கதவை சாத்திவிட்டு வந்த செல்வரத்தினம், மணிபாரதி தங்கையின் முன்வந்து நின்றனர்...

"இனியும் இவன் உனக்குத் தேவை தானான்னு நீ தான் முடிவு பண்ணணும்... நீ வாழ வேண்டிய வயசு... இவனுக்காகக் கவலைப்பட்டு உன் இளமையைத் தொலைச்சுராதே... உனக்கான வளமான வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது எங்களோட கடமை...

இவனைப் புருசனாவும் நினைக்காதே, மனுசனாவும் நினைக்காதே... பொண்டாட்டி இருக்கும் போதே அடுத்தவள் கிட்ட போன அயோக்கிய ராஸ்கல்..." செல்வரத்தினம் தங்கையிடம் இசக்கிமுத்துவை பற்றிக் கடுமையாய்ச் சாடினான்...

"அண்ணா சொல்வதில் எந்தத் தப்பும் இல்லைம்மா... அவன பாரு, உன்னைக் கொஞ்சமாவது நினைச்சு பார்த்தானா...? அவனது சுகம் மட்டும் தானே அவனுக்குப் பெருசா தெரிஞ்சிருக்கு... நாளைக்கே கூட அவன் வேறு பெண்ணைத் தேடி போகலாம்... இப்படிப்பட்டவன் உனக்குத் தேவையா...? பேசாம விவாகரத்து வாங்கிட்டு வேற கல்யாணம் பண்ணிக்கோ அரசி..." மணிபாரதி வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் அவளது மனதில் நஞ்சை கலந்தான்...

"நிச்சயம்ண்ணா... எனக்கான வாழ்க்கையை நான் வாழ போகிறேன்... இனி அவனுக்காக வருந்த போறதில்லை..." அவள் உறுதியாகக் கூற... அண்ணன், தம்பி இருவருக்கும் நிம்மதியாக இருந்தது...

சரியாக ஒரு வாரத்தில் இசக்கிமுத்து அவமானம் தாங்காது நன்கு குடித்துவிட்டு லாரி முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டான்... அவனது உயிர் போகும் போது கூட அவனது வாய் 'இளா' என்று தான் முணுமுணுத்தது...

*****************

"கமான் சுடலை... உன்னால் முடியும்... இன்னும் வேகமா..."

பத்ரிநாத்தின் ஊக்கமான குரலில் சுடலைமுத்து வேகமாக நீந்தினான்... இளம்சூடான நீரில் காலை நேரத்தில் நீந்துவது அவனுக்கு அத்தனை உற்சாகமாக இருந்தது... அவன் சந்தோசமாய் நீச்சல் குளத்தின் சுவற்றினைத் தொட்டவன்,

"நா ஜெயிச்சிட்டேன்... நா ஜெயிச்சிட்டேன்..." என்று ஆனந்த ஆரவார கூச்சலிட்டான்...

"எஸ்... சுடலை ஜெயிச்சிட்டான்..." பத்ரிநாத் கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி உற்சாகமாய்க் கத்தியவன் பின்பு நீர் சொட்ட சொட்ட ஈரத்துடன் நின்றிருந்த சுடலைமுத்துவை தூக்கி சுற்றினான்...

"ஹேய்..." சந்தோச மிகுதியில் சுடலைமுத்து பெரியவன் கன்னத்தில் முத்தமிட்டான்...

"சரி வா... குளிச்சிட்டு சாப்பிட போகலாம்..." என்று சுடலைமுத்துவை தூக்கி கொண்டு வீட்டினுள் சென்றான் பத்ரிநாத்...

இருவரும் காலை உணவு உண்டு கொண்டிருக்கும் போது தொலைப்பேசி அழைத்தது... அதை எடுத்து பேசிய பத்ரிநாத்தின் முகம் கவலையில் ஆழ்ந்தது... அது நிச்சயம் இளவரசியையும், சுடலைமுத்துவையும் நினைத்து மட்டுமே... ஏனெனில் இசக்கிமுத்து விபச்சார வழக்கில் கைது செய்யப்பட்டது அவனுக்குத் தெரியும்... அவனுக்கு இசக்கிமுத்து மீது அளவு கடந்த கோபம் வந்தது... இது என்ன மாதிரியான செயல் என்று... இளவரசிக்கு அவளது கணவன் துரோகம் இழைத்துவிட்டான் என்று அவன் மனம் குமுறினான்... அதனால் இசக்கிமுத்து மரணம் அவனைச் சிறிதும் பாதிக்கவில்லை...

சில சிமிடங்களில் சின்னவனை அழைத்துக் கொண்டு ஊருக்குக் கிளம்பினான் பத்ரிநாத்... அங்கே அவர்கள் செல்வரத்தினத்தின் வீடு வந்து சேர்ந்த போது இசக்கிமுத்துப் பிணமாக வராந்தாவில் கிடத்தப்பட்டு இருந்தான்... சொந்தபந்தங்கள் யாருமே இல்லை... வீட்டார் மூவரும், சில வேலையாட்களும் மட்டுமே அங்கே இருந்தனர்... விசயம் கேள்விப்பட்டு மாடசாமி இராஜஸ்தானில் இருந்து கிளம்பிவிட்டார்... ஆனால் இன்னமும் வந்து சேரவில்லை...

"அண்ணா, அவனோட அண்ணா கிட்ட நீங்க எதையும் காட்டிக்க வேண்டாம்... எதுவும் சொன்னா மேலே மேலே பிரச்சினை வளர்ந்துட்டு போகும்... இவன் இறப்போட இவன் சம்பந்தப்பட்ட உறவுகளும் நமக்குத்

தேவையில்லை..." என்று இளவரசி தங்களுக்குள் இருந்த மனஸ்தாபத்தை மாடசாமியிடம் தெரிவிக்க வேண்டாம் என்று அண்ணன்களிடம் கூறிவிட்டாள்...

அதே போல் அநாதை பிணமாய்ப் போக இருந்தவனை ஊராருக்காக வீட்டிற்குக் கொண்டு வந்து மரியாதை கொடுத்திருந்தனர்... மற்றபடி அவர்கள் மூவர் மனதிலும் எந்தவித மரியாதையும் இல்லை...

மாடசாமி வருவதற்குள் இறுதி சடங்குகள் அனைத்தும் சுடலைமுத்துவை வைத்து முடித்தாயிற்று... என்ன இருந்தாலும் தகப்பன் இல்லையா...?

"அப்பா ஏன் கண்ணை மூடி தூங்குறாங்க...? ஏன் என் கிட்ட பேச மாட்டேங்கிறாங்க...?" சுடலைமுத்துப் பத்ரிநாத்திடம் கவலையோடு கேட்க... அவன் பதில் சொல்லாது கண்ணீரோடு சின்னவனை அணைத்துக் கொண்டான்...

ஆற்றங்கரை ஓரமிருந்த அவர்களுக்குச் சொந்தமான நிலத்தில் தான் இசக்கிமுத்துவின் இறுதி சடங்கை செய்தனர்... அதில் எல்லாம் ஒரு குறையும் வைக்கவில்லை... ஊரார் மெச்ச எல்லாம் செய்தனர்... இறுதியில் தகப்பனுக்கு எரியூட்டும் போது சுடலைமுத்து,

"அப்பாவை எரிக்காதீங்க... அவருக்குச் சுடும்... அவரை என் கிட்ட பேச சொல்லுங்க.." என்று அழுது கொண்டே கதற... பத்ரிநாத் அவனை அணைத்துக் கொண்டு,

"அப்பா சாமி கிட்ட போயிட்டாங்க கண்ணா..." என்று கண்ணீர் வடித்தான்... அவனது இந்தக் கண்ணீரும் சின்னவனின் துயரத்தை எண்ணி தானே தவிர நிச்சயம் இசக்கிமுத்துவிற்காக அல்ல...

இந்தக் காட்சியைக் கண்டு செல்வரத்தினம், மணிபாரதி ஒன்றும் பேசாது இருந்தனர்... பத்ரிநாத் முன் நல்லவன் வேசம் போட வேண்டிய கட்டாயமே...

வீட்டிற்கு வந்ததும் பத்ரிநாத் சுடலைமுத்துவிடம், "கொஞ்ச நாள் அம்மா கூட இருந்துட்டு வர்றியா...?" என்று கேட்க...

"ம், ம்..." என்று அவன் தேம்பினான்... சோபாவில் அமர்ந்திருந்த இளவரசி அருகில் போய் நின்ற சுடலைமுத்துவை அவள் தொட கூட இல்லை... எங்கோ வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள்... ஒருவேளை மகன் கணவனை ஞாபகப்படுத்தினானோ...???

"புருசன் இறந்த சோகம் பத்ரி..." மணிபாரதி சமாளித்தான்...

"இருக்கும் தானே..." என்ற பத்ரிநாத் அவள் அருகே சென்று சுடலைமுத்துவை தூக்கி வைத்துக் கொண்டு,

"கவலைப்பட்டுக் கொண்டிருப்பதால் எதுவும் மாறிவிடப் போவதில்லை... நமக்கான வாழ்க்கையை நாம் தான் வாழணும்... உனக்குப் புரியும்ன்னு நினைக்கிறேன்..."

பத்ரிநாத் கூறியதும் அவள் விழிகள் பளிச்சிட அவனை ஏறிட்டாள்... அவன் கூறியதோ ஒரு அர்த்தத்தில்... அவள் புரிந்து கொண்டதோ வேறொரு அர்த்தத்தில்...

அன்றே பத்ரிநாத் சுடலைமுத்துவை அழைத்துக் கொண்டு சென்றுவிட... மறுநாள் காலையில் மாடசாமி வந்து சேர்ந்தான்...

"ஆக்சிடென்ட்டான உடல் ரொம்ப நேரம் வைக்க முடியலை..." செல்வரத்தினத்தின் கூற்றை அப்படியே ஏற்றுக் கொண்டான் மாடசாமி...

"இப்படி அல்பாயுசுல போவான்னு நான் நினைச்சு பார்க்கலையே... இப்படின்னு தெரிஞ்சிருந்தா அவனுக்கும், உனக்கும் கல்யாணம் பண்ணி வச்சிருந்திருக்க மாட்டேன்... உன்னோட இந்த நிலைக்கு நானும் ஒரு காரணமா போயிட்டேனே... இதுக்குத் தான் அந்தப் பயலை குடிக்காதேன்னு தலைப்பாடா அடிச்சிக்கிட்டேன்..." என்று மாடசாமி இளவரசியிடம் தலையிலடித்துக் கொண்டு அழுதான்...

மாடசாமி கிளம்பும் போது செல்வரத்தினம் நைச்சியமாக, "இனி அரசியையோ, அவளது மகனையோ பார்க்க வராதீங்க... உங்களைப் பார்க்க பார்க்க அவளோட இழப்புப்

பெரிசா தெரியும்... வீணா வேதனைப்படுவாள்..." என்று கூற...

"புரியுதுங்கய்யா... இனி நான் வர மாட்டேன்... சுடலையை மட்டும் ஒரு தடவை பார்த்துட்டு போயிர்றேனே..."

"அவன் இங்கே இல்லை... சென்னையில் எங்க நண்பனது வீட்டில் இருக்கிறான்..." என்று கூறவும் வேறுவழியில்லாது மாடசாமி ஊர் திரும்பினார்...

சரியாக ஆறு மாதங்கள் கழித்துச் செல்வரத்தினம், மணிபாரதி இருவரும் இங்கே இருக்கும் சொத்துக்களை விற்றுவிட்டுச் சென்னை போகலாம் என்றெண்ணி பத்ரிநாத்திடம் கேட்டனர்...

"தாராளமா வாங்க... வீடு, தொழில் எல்லாம் பார்த்துக் கொடுப்பது என் கடமை..." என்றான் பத்ரிநாத்... நண்பனாக இருந்தாலும் தொழில், பண விசயத்தில் அவன் கறாராய் இருந்தான்...

அதைக் கேட்டு மணிபாரதியின் முகம் ஒரு மாதிரியாக மாறிப் போனது... இருந்தாலும் சமாளித்துக் கொண்டு,

"ரொம்பத் தேங்க்ஸ் பத்ரி..." என்று அழைப்பை துண்டித்துவிட்டான்...

நண்பன் கூறியதை அவன் அப்படியே அண்ணனிடம் கூறினான்... அதைக் கேட்டு யோசனையாய் தாடையைத் தடவிய செல்வரத்தினம்,

"ஒரே வீட்டில் இருந்தால் நம் எண்ணம் ஈடேற வசதியாக இருக்கும்ன்னு நினைச்சோம்... சரி நடப்பதை பார்த்துக்கலாம்..." என்று தம்பியை தேற்றினான் அவன்...

"இனி இங்கே இருக்க வேண்டாம்ன்னு முடிவு பண்ணியிருக்கோம் அரசி... சொத்துக்களை வித்துட்டு சென்னைக்குப் போகலாம்ன்னு இருக்கோம்... உன் மகனும் சென்னையில் தான் இருக்கான்... உனக்கும் அது

வசதியாக இருக்கும்..." தங்கையிடம் கூற அவளும் சரியென்றாள்...

ஒரு நல்ல நாளில் மூவரும் சென்னைக்குக் குடியேறினர்... அவர்கள் அங்கு வந்ததும் அவர்களைப் பார்க்க வந்த பத்ரிநாத்துடன் சுடலைமுத்துவும் வந்தான்... அவன் செல்லும் போது இவனும் உடன் சென்றுவிட்டான்... அம்மாவை விட அவனுக்கு அவனது 'பத்திப்பா' தான் உலகமாகத் தெரிந்தான்... பத்ரிநாத்திற்கும் சுடலைமுத்து தான் உலகமாக இருந்தான்...

இந்த நிலையில் சுடலைமுத்துவின் பள்ளியில் பெற்றோர்களை அழைத்து வர சொல்லியிருந்தனர்... அதைக் கேள்விப்பட்ட இளவரசி பத்ரிநாத்தின் வீட்டிற்குச் சென்றாள்...

"அப்போ நீயே கூட்டிட்டு போயிரு வசி..." என்று பெரியவன் சின்னவன் பொறுப்பை அவனது அன்னையிடம் ஒப்படைத்தான்...

"பத்திப்பா நீங்களும் வாங்க..." என்று சின்னவன் அடம்பிடிக்க... வேறுவழியின்றிப் பத்ரிநாத் உடன் சென்றான்...

இளவரசிக்குக் கார் கதவை திறந்து விட்டது முதல் அவளை முன்னுக்கு விட்டு பின்னே சென்றது வரை பத்ரிநாத் அவளை ஒரு மகாராணி போல் உணர வைத்தான்... ஒரு நல்ல ஆண் பெண்ணுக்கு கொடுக்கும் மரியாதையான சாதாரண நிகழ்வு தான் அது... ஆனால் அதுவே அவளது மனதில் அவனை ஆழப்பதிய செய்தது... இத்தகைய ஒரு வாழ்க்கையைத் தான் அவள் இசக்கிமுத்துவிடம் இருந்து எதிர்பார்த்தாளோ...

இசக்கிமுத்து இறந்து வருடங்கள் மூன்று உருண்டோடியது... திடுமென ஒருநாள் பத்ரிநாத் சுடலைமுத்துவை தான் தத்தெடுக்க விரும்புவதாக அவர்களிடம் கூறினான்... அதைக் கேட்டு இளவரசி கனவில் மிதந்தாள்... ஏற்கெனவே அவள் பத்ரிநாத்துடன்

மனதளவில் வாழ்ந்து வருகிறாள்... அதற்கு இந்தச் செய்தி தூபம் போட்டது... இசக்கிமுத்து என்பவன் அவளது வாழ்வில் வரவே இல்லை என்பது போல் அவள் தன் மனதை தயார்படுத்திக் கொண்டாள்...

இந்தச் செய்தி கேட்டுச் செல்வரத்தினம், மணிபாரதி இருவரும் மகிழ்ந்தனர்... அந்தச் சந்தோசத்தோடு மணிபாரதி நண்பனிடம் மெல்ல அந்த விசயத்தைக் கூறினான்...

"அரசிக்கு ஒரு வாழ்க்கை அமைச்சு கொடுக்கலாம்ன்னு நானும் அண்ணனும் நினைக்கிறோம்... அவளுக்கும் சின்ன வயசு... வாழ வேண்டிய வயசு... நீ ஏற்கெனவே அரசியை விரும்பியிருக்க... அதான் உன் கிட்ட கேட்கலாம்ன்னு..."

"அது சரி வராது பாரதி... என் வாழ்க்கை சுடலை தான்னு நான் முடிவு பண்ணி ரொம்ப நாளாச்சு..." என்று மறுத்துவிட்டு பத்ரிநாத் சென்றுவிட்டான்...

அவன் மறுத்ததுக்குக் காரணம் இளவரசியால் இசக்கிமுத்துவை மறக்க முடியாது என்பதால் தான்... இதை அறியாது அண்ணன், தம்பி இருவரும் பத்ரிநாத் மீது கோபம் கொண்டனர்... இதைத் தெரிந்து கொண்ட இளவரசிக்கு மகன் மீது கோபம் வந்தது... வளமான வாழ்க்கைக்கு அன்று தகப்பன் தடையாக இருந்தான்... இன்று மகன் தடையாக இருக்கின்றான் என்று... மகன் மீதான அவளது குரோதம் வளர்ந்து கொண்டே போனது... அதே போல் பத்ரிநாத்தின் மீதான ஆசையும் கூட...

பத்ரிநாத் தனது சொத்துக்களைச் சுடலைமுத்து பெயருக்கு மாற்றுவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டான்... அது போல் தனது நிறுவனத்திற்கு எஸ்எம் என்று சின்னவனின் பெயரை வைப்பதற்கான ஏற்பாட்டையும் செய்துவிட்டான்... சுடலைமுத்துத் தனக்குப் பிறக்கவில்லை என்றாலும் பத்ரிநாத் அவனைத் தனது மகனாக எண்ணினான்...

இந்த நிலையில் இளவரசியின் ஊரில் திருவிழா வந்தது... அதற்கு அவர்கள் மூவரும் கிளம்பினர்... அப்போது இளவரசி சுடலைமுத்துவை தன்னுடன் வரும்படி அழைத்தாள்... பத்ரிநாத்திற்கு உடன் செல்ல முடியாதபடி தொழில் கூட்டம் ஒன்று மும்பையில் இருந்தது... எட்டு வயது சுடலைமுத்து இப்போது எல்லாம் புரிந்து நடந்து கொண்டான்... அதனால் பத்ரிநாத்தின் வேலைப்பளுவை உணர்ந்து அவன்,

"நீங்க கவலைப்படாம போயிட்டு வாங்க பத்திப்பா... நான் அம்மா கூடப் போகிறேன்..." என்று ஆறுதலாய் கூற... எந்த நேரத்தில் 'போகிறேன்' என்று கூறினானோ அந்த வார்த்தை அப்படியே பலிக்கப் போவதை அவன் அறியவில்லை...

சந்தோசமாக ஊர் திருவிழாவில் கலந்து கொண்டான் சுடலைமுத்து... எப்போதும் பாராமுகம் காட்டும் மாமன்கள் இருவரும் அவனிடம் அன்பை பொழிந்தனர்... அதுவும் அவனுக்குச் சந்தோசமாகத் தான் இருந்தது... அவர்களுக்குமே சுடலைமுத்துவை பத்ரிநாத் தத்தெடுப்பது பிடிக்கவில்லை... தங்கையின் வாழ்க்கைக்கு இடைஞ்சலாக அவன் இருப்பதாக எண்ணினர்... அதனால் அவனைப் போட்டு தள்ள திட்டமிட்டனர்... இதையறியாத அந்தப் பாலகன் சந்தோசமாக வலம் வந்தான்...

அன்று திருவிழா முடிந்து வீட்டிற்கு வந்த சுடலைமுத்துவிற்கு இளவரசி சாப்பாடு ஊட்டி விட்டாள்... திருவிழா கதைகளை ஆர்வத்துடன் சொல்லியபடி அவன் உண்டான்... ஊட்டி முடித்துவிட்டு இளவரசி கை கழுவ சென்றாள்... அப்போது தான் சுடலைமுத்து அந்த வித்தியாசத்தை உணர்ந்தான்... வயிறு, தொண்டை எல்லாம் கபகபவென எரிந்தது...

"அம்மா..." என்று அவன் பயத்தில் அலறினான்...

"என்ன...?" என்று கேட்டபடி அவள் நிதானமாகக் கையைத் துடைத்தபடி அங்கு வந்தாள்...

"என்னமோ செய்யுதும்மா...?" அவன் தனது தொண்டையைப் பிடித்தபடி கதறினான்...

"விசம் சாப்பிட்டா எரியத்தான் செய்யும்..." என்றாள் அவள் அசால்ட்டாக...

"ம்மா..." திகைத்து போய் நின்றிருந்தான் சிறுவன்... அவன் வயதிற்கு விசம் என்கிற சொல் மிகுந்த பயத்தைக் கொடுத்தது...

"அம்மாவுக்காக, அம்மாவோட வளமான வாழ்க்கைக்காக நீ செத்து போயிரு சுடலை... நீ உலகில் இல்லாம போனா தான் பத்ரியோட பார்வை என் மீது படியும்... எனக்குப் பத்ரி தான் வேண்டும்... நீ வேண்டாம்..."

இளவரசி கூறியது சின்னவனுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை... அவனுக்குப் புரிந்த ஒன்றே ஒன்று, அம்மாவிற்குத் தன்னைப் பிடிக்கவில்லை என்பது மட்டுமே...

"அம்மா, என்னை ஏன்ம்மா உங்களுக்குப் பிடிக்கலை...?" அவனது விழிகளில் கண்ணீர் கரகரவென வழிந்தது...

"நீ உன் உருவத்தைக் கண்ணாடியில் பார்த்திருக்கிறியா...? நீ எனக்குப் பிறக்க வேண்டிய மகனா...? அப்படியே உன் அப்பன் வீட்டாளுங்களை உரித்து வைத்து கருப்பா, அழகில்லாம பிறந்திருக்க... உன்னை என் மகன்னு சொல்றதே எனக்கு ரொம்பக் கேவலமாயிருக்கு... நீ உயிரோட இருந்தா உன் அப்பனையும், என்னோட தவறையும் காலம் முழுசும் ஞாபகப்படுத்திட்டே இருப்ப... அதனால் நீ செத்து போயிரு..." இரக்கமே இல்லாது கூறினாள் அந்த ராட்சசி...

"அரசி என்ன காரியம் பண்ணி வச்சிருக்க...?" என்று அவளைக் கடிந்தபடி இரு அண்ணன்களும் அங்கு வந்து சேர்ந்தனர்...

"இவன் அப்பனை நீங்க கொன்னப்போ நான் ஏதாவது கேள்வி கேட்டேனா...? அது போல் இதையும் நீங்க

வேடிக்கை பாருங்க..." என்றவளை கண்டு அவர்கள் திருதிருவென விழித்தனர்...

"எனக்கு எல்லாம் தெரியும் அண்ணா..." என்று அமர்த்தலாகக் கூறியவளை கண்டு ஈயென்று பல்லை காட்டியவர்கள்,

"அதுக்கும் இதுக்கும் சரியா போச்சுன்னு சொல்றியா...?" என்று கேட்டு அசடு வழிந்தனர்...

இளவரசி கூறுவது உண்மை தான்... இசக்கிமுத்து குடித்துவிட்டு சாலையைக் கடக்கும் போது லாரி வைத்து அவனைத் தூக்கி அடித்தது இவர்கள் தான்... அதைத் தற்கொலையாக மாற்றிவிட்டனர் தங்களது பணபலத்தால்... அதைத் தான் அவள் இப்போது சுட்டிக்காட்டினாள்...

"ஆமாம்... நீங்க இதை வெளியில் சொல்லாத வரை நானும் அதை வெளியில் சொல்ல போறதில்லை..." என்று கடுமையுடன் கூறியவள் சாவின் விளிம்பில் நின்று துடிதுடித்துக் கொண்டிருந்த மகனை உணர்விலாது பார்த்தபடி,

"இவன் அப்பனால் என் வாழ்க்கை போனது... இதோ இவனால் என் காதலும் போக இருக்கிறது... அப்படிப் போக நான் விட மாட்டேன்... இவன் உயிரோடு இருந்தால் தானே அவருக்கு இவன் தேவைப்படுவான்... இவன் இல்லைன்னா அவருக்கு நான் தானே தேவைப்படுவேன்... அவருக்கு நான் மட்டும் தான் முக்கியமாக இருக்கணும்... இவனில்லை..." என்று வெறி பிடித்தார் போன்று கத்தியவளை வியப்பாய் பார்த்தனர் இருவரும்...

"நீ பத்ரியை காதலிக்கிறியா அரசி...?"

"ஆமாம், அதுக்குத் தடையா இருக்கிற இவன் உயிரோடு இருக்கக் கூடாது... இவன் எல்லாம் எனக்கு மகனா இருக்கக் கூட அருகதை இல்லாதவன்... இவன் எனக்கு வேண்டாம்... இவன் சாகட்டும்... இவன் உயிரோடு இருந்து

எனக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை..." என்று அவள் கத்த...

"அவ்வளவு தானே இவனை எங்க கிட்ட விடு..." என்ற இரு மாமன்களும் மருமகனை நெருங்கினர்...

ஏற்கெனவே அரை மயக்கத்தில் மயங்கியபடி தாயையும், மாமன்களையும் கண்டு அவன் பயந்திருந்தான்... இப்போது இன்னமும் பயந்தவனாய்,

"கிட்ட வராதீங்க..." என்றபடி பின்னால் நகர... அப்படியே கால் இடறி மல்லாக்க கீழே விழுந்தான்...

இருவரும் வில்லன் சிரிப்பு சிரித்தபடி அவனை நோக்கி குனிந்தனர்... மணிபாரதி அவனின் கை, காலை பிடித்துக் கொள்ள... செல்வரத்தினம் அவனது கழுத்தை பிடித்து நெரித்தார்... மூச்சு திணறிய சுடலைமுத்து தனது மரணப் போராட்டத்தை உணர்வில்லாத விழிகளுடன் பார்த்துக் கொண்டிருந்த அன்னையைப் பார்த்தபடி வேதனையுடன் மயங்கி போனான்... அவன் இறந்துவிட்டான் என்று அவர்கள் எண்ணிவிட்டனர்...

"செத்துட்டான்னு நினைக்கிறேன்..." என்று கூறிய செல்வரத்தினம் சின்னவனைத் தூக்கி தனது தோளில் போட்டுக் கொண்டான்... மணிபாரதி உடன் நடக்க... இளவரசியும் அவர்களுடன் நடந்தாள்...

"நீ எதுக்கு...?"

"நீங்க ஏதாவது சொதப்பிட்டால்...?" என்றவள் தான் உடன் வருவதை உறுதி செய்தாள்...

அதே ஆற்றங்கரையோரம் இசக்கிமுத்துவை எரித்த அதே இடத்திற்குச் சின்னவனைத் தூக்கி கொண்டு வந்தனர்... அங்கே ஆழமாய்க் குழி தோண்டி சின்னவனைப் படுக்க வைத்து அவன் மீது மண்ணைப் போட்டு மூடும் போது மழை பெய்யத் துவங்கியது... சின்னவனின் நிலை கண்டு இயற்கை கோபமடைந்து சீற்றம் கொண்டதோ...???

மயங்கிய நிலையில் இருந்த சுடலைமுத்துவிற்கு மழைத்துளியின் ஸ்பரிசத்தில் சுரணை வந்தது… மெல்ல கண்விழித்துப் பார்த்தவனுக்கு ஒன்றுமே புரியவில்லை… எங்கும் ஒரே இருட்டு… பயத்தில் அலற முயன்றவனுக்குக் கத்துவதற்குத் தொண்டை எழவில்லை… பயத்தில் எழுந்து ஓடிவிடலாம் என்று எண்ணி அவன் தன் உடலை அசைக்க அது அவனால் முடியாமல் போனது… ஏனெனில் அவனது உடல் மீது தொப் தொப்பென்று மண் விழுந்து கொண்டிருந்தது…

“அவன் அப்பனை எரிச்ச இடத்திலேயே இவனையும் போட்டு புதைச்சுருவோம்… அப்பனும் மகனும் ஒண்ணா தூங்கட்டும்…” செல்வரத்தினம் கொக்கரித்தது அவனது காதில் நன்கு விழுந்தது…

என்ன செய்வது என்று தெரியாது அவன் பயத்தில் 'பத்திப்பா' என்று மெல்ல முனங்கினான்… அந்நேரம் மழை வலுக்க துவங்கியதில் அதன் சத்தத்தில் மேலே இருந்தவர்களுக்கு அவன் முனங்கியது கேட்கவில்லை…

அடுத்தச் சில நொடிகளில் அவனது முகத்திலும் மண் விடாது விழுந்ததில் அவன் செய்வதறியாது திகைத்தான்… தப்பிக்கும் மார்க்கம் ஏதும் இல்லாததால் சுவாசிக்கக் காற்று கிடைக்காது மூச்சு திணறியவன் கஷ்டப்பட்டுத் தனது இறுதி மூச்சை இழுத்து விட்டான்… அதற்கு மேல் காற்றின்றிச் சுவாசிக்க இயலாது தவித்தவன் அடுத்த நொடி பரிதாபமாக இறந்து போனான்… அந்தக் கணம் அவனது மனதில் அவனது 'பத்திப்பா' மட்டுமே ஆழப்பதிந்திருந்தார்… அவனது விழியோரம் இரு சொட்டுக் கண்ணீர் வடிந்து மண்ணின் ஈரத்தோடு கலந்து போனது…

சிறு குருத்து ஒன்று தாயின் சுயநலத்தால் வாழ்க்கையை அனுபவிக்காமல் மொட்டிலேயே கருகி போனது…!!!

"அன்னை அன்பாய்,
அன்னை ஆறுதலாய்,
அன்னை ஆதரவாய்,
அன்னை அனுசரணையாய்,

அன்னை அரவணைப்பாய்,
எல்லாம் பொய்யென்றானது
உன்னால் என் அன்னையே!
கருக்குழி கதகதப்பை உணர்த்தியவளே,
இன்று புதைக்குழி கதகதப்பையும்
உணத்தியதேனோ?
வலிக்கிறது என் மரணமல்ல,
உன் சொல், செயல்...!!!

கொள்ளும்...!!!

"சுடலையைப் பார்த்துக்கிறதை விட உங்களுக்கு வேறு வேலை என்ன இருக்கிறது...? திருவிழாவில் காணாம போயிட்டான்னு அசால்ட்டா சொல்லுறீங்க...? இவ்வளவு தானா உங்களோட அக்கறை...?"

சுடலைமுத்து காணவில்லை என்கிற செய்தியை கேட்டதும் பத்ரிநாத் அடுத்த நொடி மும்பையில் இருந்து கிளம்பிவிட்டான்... அவனது உயிர் அவனிடத்தில் இல்லை... அப்படியொரு பதற்றம் அவனிடத்தில் தொற்றிக் கொண்டது... இதோ இந்த நொடி கூட அவனால் நிம்மதியாக இருக்க முடியவில்லை... சின்னவனைக் காணாது அவனது நெஞ்சினில் துயரம் பாரமாய் அழுத்தியது...

"ராத்திரி வீட்டு வாசலில் தான் விளையாண்டுட்டு இருந்தான்... அரசி கிட்ட தண்ணி கேட்டிருப்பான் போலிருக்கு... அவள் வீட்டுக்குள்ள வந்து தண்ணி எடுத்துட்டு திரும்பி வர்றதுக்குள்ள சுடலை காணாம போயிட்டான் பத்ரி... நாங்களும் அவனை எல்லா இடத்திலும் தேடி விசாரிச்சிக்கிட்டு தான் இருக்கோம்..." மணிபாரதி கவலை குரலில் கூறினான்...

இளவரசியின் அழுத முகம், செல்வரத்தினம், மணிபாரதியின் வருத்தம் தோய்ந்த முகத்தைக் கண்டு அவர்கள் கூறுவதை உண்மை என்றே நம்பிவிட்டான் பத்ரிநாத்... பெற்ற அன்னையைச் சந்தேகப்பட முடியுமோ...? அதே சமயம் அந்த ஊர் காவல்நிலையத்தில் புகார் அளிக்கவும் அவன் தயங்கவில்லை...

"போலீசுக்கு எல்லாம் போனா நம்ம மரியாதை என்னாகிறது பத்ரி..." செல்வரத்தினம் தனது விருப்பமின்மையைத் தெரிவிக்க...

"சுடலையை விட எனக்கு என் மானம், மரியாதை முக்கியம் இல்லை..." என்று உறுதியாகக் கூறிய பத்ரிநாத்தை கண்டு மூவரும் விழி பிதுங்கினர்...

பத்துத் தினங்கள் கழித்து ஆள் அடையாளம் தெரியாத அளவிற்கு ஆற்று நீரில் மூழ்கி சிதைந்திருந்த சுடலைமுத்து வயதுடைய, அதே உடலமைப்பு உடைய சிறுவனின் உடலை காட்டி 'இதுவா உங்கள் வீட்டு பையன்...?' என்று காவல்துறையினர் கேட்டதற்கு இளவரசி ஆண்கள் மூவரையும் முந்தி கொண்டு 'ஆமாம்' என்றுரைத்துக் கண்ணீர் விட்டு கதறியழுதாள்...

தாயான அவளது கண்ணீரை உணர்ந்தவனாய் பத்ரிநாத் வேதனையுடன் அவளைப் பார்த்திருந்தான்... அவனுக்குமே சுடலைமுத்து இறந்தது மனதினை மிகவும் வலிக்கச் செய்தது... அந்த வலியை தாங்கி கொண்டு ஒரு தந்தையாய் அவன் சின்னவனுக்கு வேண்டிய இறுதி காரியங்களைச் செய்தான்... மிகவும் கஷ்டப்பட்டுச் சின்னவனின் இறப்பை ஜீரணித்துக் கொண்டு அவன் தனது அன்றாட வேலைகளைப் பார்க்க துவங்கினான்... ஆனாலும் அவனது மனதின் ஆழத்தில் சொல்லொண்ணா வேதனை ஒன்று எந்நேரமும் முணுமுணுவென்று வலித்துக் கொண்டிருந்தது...

"அரசி ஏன் அப்படிச் சொன்ன...? அநாதை பிணத்துக்கு இத்தனை மரியாதை தேவை தானா...?" மூத்தவர் தங்கையிடம் எரிச்சல் பட்டார்...

"அப்படிச் செய்யலைன்னா சுடலை காணாம போனது மிகப் பெரிய பிரச்சினையைக் கொண்டு வரும்... இதோ இப்போ நான் சொன்ன ஒரு பொய்யால் எல்லாம் நல்லபடியா முடிஞ்சு போச்சு..."

"என்னத்தை முடிஞ்சு போச்சு...? அந்தப் பத்ரி பயல் உன் பக்கம் திரும்பி பார்க்கும் வழி தெரியலையே..."

"அதற்கும் ஒரு திட்டம் இருக்கு... அதன்படி நீங்க நடந்துக்கிட்டா போதும்..." என்ற இளவரசி தனது திட்டத்தை விவரிக்கத் துவங்கினாள்... அதைக் கேட்டு அண்ணன், தம்பி இருவரது முகமும் பிரகாசமாய் மலர்ந்தது...

ஒரு வாரம் கழிந்த நிலையில் பத்ரிநாத் தனது அலுவலகத்திற்குக் கிளம்பி கொண்டிருந்தான்... அப்போது மணிபாரதி பதட்டத்துடன் அங்கே வந்தான்...

"பத்ரி, பத்ரி..."

"என்ன பாரதி...? என்ன விசயம்...?" நண்பனது பதற்றம் பத்ரிநாத்திற்கும் தொற்றிக் கொண்டது...

"அரசி..."

"வசிக்கு என்ன...?" அவனது காதல் மனம் வெகுநாட்களுக்குப் பின் விழித்துக் கொண்டது...

"தற்கொலைக்கு முயற்சி பண்ணியிருக்கா பத்ரி..."

"என்னது...?" பத்ரிநாத் திகைத்துப் போய்க் கல்லாய்ச் சமைந்தான்...

"இப்போ பயமில்லை... எப்படியோ காப்பாத்திட்டோம்..." என்ற மணிபாரதியிடம்,

"வீட்டுக்கு போகலாம்..." என்றரைத்தவன் நேரே அவர்களது வீட்டிற்குக் கிளம்பி சென்றான்...

வாடிய கொடி போல் ஜீவனற்றுப் படுத்திருந்த இளவரசியைக் கண்டதும் அவன் தான் யார்? அவள் யார்? என்பதை மறந்தவனாய் மனதிலிருந்த காதல் ஊற்றாய் பெருக்கெடுக்க,

"வசி..." என்று கதறியபடி அவள் அருகில் அமர்ந்தான்...

"ஏன் இப்படிப் பண்ணின...? வருத்தம் யாருக்கு தான் இல்லை... அதுக்குத் தற்கொலை தான் தீர்வா...? அப்படிப் பார்த்தால் உலகத்தில் இருக்கிற முக்கால்வாசி பேர் தற்கொலை தான் பண்ணிக்கணும்..."

அவளது கையைப் பிடித்துக் கொண்டு அவன் ஆறுதல் கூற... அவளோ இது தான் சாக்கு என்று அவனது தோளில் சாய்ந்து கதறியழுதாள்...

"புருசன் போனப்போ கூட மகன் இருக்கான்னு நான் என்னைத் தேத்திக்கிட்டேன்... இப்போ மகனும் இல்லாம... த்ச்சு, வாழவே பிடிக்கலை..." என்று விரக்தியாய் கூறியபடி அழுதவளை தேற்றும் வகையறியாது மௌனமாய் அவளை அணைத்துக் கொண்டான் பத்ரிநாத்... அவனது இயல்பான செய்கையைச் சகோதரர்கள் இருவரும் சந்தோசமாய்ப் பார்த்து கொண்டிருந்தனர்...

பத்ரிநாத் கிளம்பும் போது மணிபாரதி அவனுடன் கார் வரை வந்தான்...

"வசியைப் பத்திரமா பார்த்துக்கோ பாரதி..."

"அண்ணன்ங்க நாங்க எத்தனை நேரம் பத்திரமா பார்த்துக்க முடியும் பத்ரி...? என்ன இருந்தாலும் கணவன் உடன் இருந்து பார்க்கிற மாதிரி வருமா...? அரசிக்கு மறுகல்யாணம் பண்ணி வைக்கலாமான்னு யோசிச்சிட்டு இருக்கோம்..." என்றான் அவன்...

ஒரு கணம் அமைதியாக இருந்த பத்ரிநாத், "வசியை நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்... அவளுக்கு வேண்டிய ஆறுதலை என்னால் கொடுக்க முடியும்ன்னு நான் நம்பறேன்..." என்று உறுதியான குரலில் கூறினான்...

பத்ரிநாத் சம்மதம் தெரிவித்ததும் உடனே தாமதம் செய்யாது மிகவும் எளிமையாக அவர்களது திருமணத்தை நடத்தி முடித்துவிட்டனர் அவளது அண்ணன்கள் இருவரும்... இப்போது தான் அவர்களுக்கு வெகுதிருப்தியாய் இருந்தது... அவர்களுக்குச் சரிசமமான அந்தஸ்துடைய ஒருவன் அவர்களது வீட்டு மாப்பிள்ளையாய் அமைந்தது குறித்து அவர்களுக்குப் பெருமையே...

சுடலைமுத்து இறந்த செய்தி கேட்டு மாடசாமி மிகவும் மனமுடைந்து போனான்... வாழ்க்கையில் எந்தவித பிடிப்பும் இல்லாதது போல் ஒரு உணர்வு அவனிடம்... இராஜஸ்தானில் இருந்தால் சுடலைமுத்துவின் நினைவுகள் அதிகம் வருவதைத் தவிர்க்க எண்ணி அவன்

கொல்கத்தாவில் இருந்த தங்களது நிறுவனத்தின் மற்றொரு கிளைக்கு வேலையை மாற்றிக் கொண்டு சென்றுவிட்டான்...

இறைவனடி சேர்ந்த சுடலைமுத்துவின் ஆன்மாவை கண்டு கடவுளே பரிதாபப்பட்டாரோ என்னவோ... அதனால் உடனே அவனுக்கு மறுஜென்மம் கொடுத்து இந்த ஜென்மத்தில் அவனுக்கு நல்ல பெற்றோரை கொடுத்துவிட்டார்... போன ஜென்மத்தில் அவனுக்குக் கிட்டா தாயன்பு, தந்தையின் பாசத்தை மீனாட்சி, சுந்தரபாண்டியன் இருவரும் அவனுக்கு அள்ளி அள்ளி கொடுத்தனர்... அவனை மிகவும் செல்லமாக வளர்த்தனர்... அவனது ஆழ்மனதின் ஆசை நிறைவேறியதாலோ என்னமோ அவனுக்குத் தனது பெற்றோர் சொல் மிக்க மந்திரம் வேறில்லை... அவன் பெற்றோருக்கு அடங்கிய மகனாய் அவர்களுக்குப் பெருமை சேர்த்தான்...

மன்னர் பரம்பரை என்பதால் எதிரிகள் நிறைய உண்டு... அவர்களைச் சமாளிப்பதற்காகவே அவன் தற்காப்புக் கலைகள் பல பயின்றான்... அதில் கூடப் போன ஜென்மத்துத் தாக்கம் அதிகம் இருந்ததோ என்னமோ... அதைக் கற்கும் போது அத்தனை தீவிரம் அவனிடத்தில் இருந்தது...

சிம்மவிஷ்ணு பிறந்த இரண்டு வருடத்தில் பத்ரிநாத், இளவரசி தம்பதிக்கு பவித்ரன் பிறந்துவிட்டான்... பவித்ரன் பிறந்தபோது மருத்துவமனையில் இளவரசியின் வலி, வேதனையை உணர்ந்து அவளுடனிருந்து அவளைத் தாயாய் தாங்கிய பத்ரிநாத்தின் காதலில் இளவரசியின் மனம் கர்வம் கொண்டது... தனது அழகில் கணவன் மயங்கிவிட்டான் என்கிற அகந்தை அவளுள் எழுந்தது... காதலுக்கு அழகு தேவையில்லை... அன்பு கொண்ட மனம் தான் தேவை என்பதை அந்த ராட்சசி அப்போதும் உணரவில்லை...

பத்ரிநாத் மகனுக்குச் 'சுடலைமுத்து' என்று பெயர் வைக்க முயன்ற போது இளவரசியின் முகம் பேயறைந்தார்

போன்று மாறியது...

"என்ன வசி...?"

"அந்தப் பெயர் வேண்டாம்..." முகம் இருள மறுத்தவளை கண்டு அவன் வேறுமாதிரியாக எண்ணி கொண்டான்... கடந்த காலத்தைக் கடக்க முடியாது தவிக்கிறாள் போலும் என்று...

"சரி, நீயே ஒரு நல்ல பெயர் சொல்..." என்றான் அவன் பரிவாக...

"நம்முடைய பவித்ரமான காதலுக்கு அடையாளமாய் வந்தவன் என்பதால் பவித்ரன் என்று பெயர் வைப்போம்..." என்ற மனைவியை அவன் காதலுடன் அணைத்துக் கொண்டான்...

பத்ரிநாத்தின் வழிகாட்டுதலின்படி இளவரசி மேலே படித்தாள்... அதே போல் பத்ரிநாத் மனைவியைத் தொழிலிலும் ஈடுபடுத்தி அவளது வாழ்வை மேம்படுத்தினான்... இளவரசியின் வாழ்க்கை அவள் விருப்பப்படி நன்றாக அமைந்தது...

தங்கையின் சந்தோசமான வாழ்க்கையைக் கண்ட பின்னரே அண்ணன், தம்பி இருவரும் திருமணம் செய்து கொண்டனர்...

சுடலைமுத்து ஏன் காணாமல் போனான்...? அவன் ஏன் ஆற்றில் மூழ்கி இறந்து போனான்...? என்பது இறுதிவரை யாருக்குமே தெரியாமல் போனது... வழக்கம் போல் காவல்துறை கண்டுபிடித்துக் கொண்டே இருக்கிறது...

சிம்மவிஷ்ணுவின் முப்பதாவது வயது வரை அவனிடத்தில் எந்தவொரு மாற்றமும் இல்லை... ஒரு நாள் அவனது தொழில் எதிரிகளுடன் ஏற்பட்ட மோதலின் போது ஒருவன் அவனது பின்னந்தலையில் ஓங்கி அடித்துவிட்டான்... அதில் மயக்கமடைந்த சிம்மவிஷ்ணு பத்துத் தினங்களுக்கு மேல் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தான்... அப்போது தான் அவனுள் நிழல் பிம்பங்களாய் போன

ஜென்மத்து நினைவுகள் எழ துவங்கியது... முதலில் அதைச் சாதாரணமாக எண்ணி கொண்டு கண்டு கொள்ளாது விட்டவன் பின்பு அந்த நினைவுகளின் தாக்கத்தால் அவனால் எந்த ஒரு வேலையும் செய்ய முடியாத நிலை ஏற்பட்ட போது தான் வேறுவழியின்றி அவன் மருத்துவரை நாடி சென்றான்...

அவனைப் பரிசோதித்த மருத்துவர் அவனுக்கு மருந்துகள் எழுதி கொடுத்து அனுப்பி வைத்துவிட்டார்... மருந்துகள் உண்டதால் அவனது உடல் தான் ஓய்வு கொண்டதே தவிர அவனது நினைவுகள் ஓய்வு கொள்ளவில்லை... ஏனெனில் அதன் தாக்கம் அப்படி... பெற்ற அன்னையே மகனை கொல்வாளா...? அவன் மனதிற்குள் எட்டு வயது சிறுவனாய்க் கதறினான்... மரணத்தின் போது ஏற்பட்ட வலியை அவன் இப்போதும் உணர்ந்தான்... விழிகளில் விழிநீர் பெருக அவன் நடுஇரவில் எழுந்தமர்ந்தான்...

போன ஜென்மத்தில் அவனுக்கு இருந்த நினைவாற்றல் அப்படியே இந்த ஜென்மத்திலும் அவனுக்கு இருந்தது... தன் மனதில் நினைப்பதை அப்படியே காகிதத்தில் எழுத ஆரம்பித்தான்... ஊர் பெயர், பெற்றோர் பெயர், மாமன்கள் பெயர் என்று அவனுக்கு அனைத்துமே நினைவிற்கு வந்தது...

மனசஞ்சலத்தின் அடிப்படையில் அவன் அந்த ஊரை விசாரித்துத் தெரிந்து கொண்டு அங்குச் சென்றான்... அங்குச் சென்று அந்த ஜமீன் வீட்டை பார்க்கும் வரை அவன் தனது மனதின் நினைவுகளுக்கு அத்தனை முக்கியத்துவம் கொடுக்கவில்லை... ஆனால் அந்த வீட்டை நேரில் பார்த்த போது அவனது உடல் பயத்தில் வெடவெடவென நடுங்கியது... எட்டு வயது சிறுவனாய் அந்த மாளிகையைப் பயத்துடன் பார்த்தவனின் கைகள் கார் ஸ்டீயரிங் வீலை இறுக பற்றிக் கொண்டது...

இதுவரை நிழல் பிம்பங்களாய் அவனது மனதில் வலம் வந்த நினைவுகள் இப்போது காணொளியாய் வலம் வர ஆரம்பித்தது... அவன் மாடசாமியுடன் இருந்தது, அதன்

பிறகு இங்கு வந்தது, பத்ரிநாத்துடன் சென்றது, தந்தை இறந்தது, தான் இறந்தது என்று அனைத்தும் அவனது நினைவில் நீங்காது திரும்ப எழுந்தது... அந்தக் கணம் அவன் சுடலைமுத்துவாய் எட்டு வயது சிறுவனாய் மாறிப் போயிருந்தான்...

"என்னை ஏன்ம்மா கொன்னீங்க...?" ஸ்டீயரிங் வீலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதவனைத் தேற்றுவார் அங்கு யாருமில்லை...

மாமன் கூறிய வார்த்தைகளை நினைவில் கொண்டு வந்தவன் தான் புதைக்கப்பட்ட இடத்தை உத்தேசமாகத் தேடி அலைந்து இறுதியில் தான் இறுதி மூச்சை நிறுத்திய இடத்தை அடையாளம் கண்டு கொண்டான்... அந்த இடம் இப்போது சிறு மண்மேடாக மாறிப் போயிருந்தது... அதன் அருகே சென்றவனுக்கு அந்த நாள் துயரம் நெஞ்சினை அடைத்தது... அவன் நெஞ்சை பிடித்துக் கொண்டு மனம் கனக்க அதன் அருகே அமர்ந்தான்... இறுதி மூச்சை விட்ட கணத்தை நினைத்து பார்த்தவனுக்கு இப்போதும் மூச்சடைத்தது... விழிகளில் இருந்து கண்ணீர் பெருகி வழிந்தது... தனக்கு மட்டும் ஏன் இந்த இழிநிலை? என்று அவனது மனம் அந்தக் காலக்கட்டத்திற்கே சென்றுவிட்டது...

பிறகு தன்னைச் சுதாரித்துக் கொண்டு அங்கிருந்து எழுந்தவன் ஊருக்குள் சென்று விசாரித்தான்... அவன் அள்ளி கொடுத்த பணம் ஜமீன் குடும்பத்தைப் பற்றிப் புட்டு புட்டு வைக்க உதவியது...

அதிலிருந்து அவன் அறிந்து கொண்ட விசயம் இது தான்... அவனது தந்தை விபச்சார வழக்கில் கைது செய்யப்பட்டு அந்தச் செய்தி செய்தித்தாளில் வெளிவந்து அந்த அவமானம் தாங்காது தற்கொலை செய்து கொண்டார் என்பது... அதற்கு அடுத்து அவனது இறப்பு... அதன் பிறகு இளவரசி, பத்ரிநாத் திருமணம்... இப்போது அவர்களுக்கு ஒரு மகன் இருப்பதாகத் தகவல்...

பத்ரிநாத்தை பற்றி நினைத்ததும் அவனது மனம் நெகிழ்ந்தது... அவரது அன்பில் திகட்ட திகட்ட

திளைத்தவன் அல்லவா அவன்... அந்த அன்பு இப்போதும் அவர் மீது எழுந்தது... சிறுவயது அவனது 'பத்திப்பா' இன்னமும் அவனது ஞாபகத்தில் அப்படியே இளமையாக இருந்தார்...

மீண்டும் மதுரைக்கு வந்தவன் தனது பெற்றோரிடத்தில் இந்த விசயத்தைப் பற்றி மூச்சு விடவில்லை... தனது செல்வாக்கை பயன்படுத்தி இசக்கிமுத்து பற்றிச் செய்தி வந்த செய்தித்தாளையும், அவன் தற்கொலை செய்து கொண்ட போது வந்த செய்தியையும் சேகரித்துப் பார்த்தவனின் விழிகளில் கண்ணீர் நிரம்பியது...

அன்று தான் சாகும் போது அன்னை கூறிய வார்த்தைகளுக்கு அப்போது அவனுக்கு அர்த்தம் புரியவில்லை... ஆனால் இப்போது அவனுக்கு அதன் அர்த்தம் நன்கு புரிந்தது... அப்போது அவனுக்குப் புரிந்தது எல்லாம் அன்னைக்குத் தன்னையும், தந்தையையும் பிடிக்கவில்லை என்பது மட்டுமே... அதற்கு மேல் அவன் அதைப் பற்றிச் சிந்திக்கவில்லை... சிந்திக்கும் நிலையிலும் அன்று அவனில்லை... இப்போது அவனுக்குத் தெள்ளத்தெளிவாக அன்னை மற்றும் மாமன்களின் சதி நன்கு புரிந்தது...

இது இரண்டும் திட்டமிட்ட கொலை... அதை நினைத்து அவனது மனதில் வன்மம் எழுந்தது... குரோதம் முகிழ்த்தது... பழிவாங்கும் எண்ணம் அடங்காது காட்டு தீ போல் பற்றியெரிந்தது... வீரனாய்த் தைரியமாக நேரிடையாக மோதுபவர்களிடம் நாமும் நேரே மோதலாம்... ஆனால் இது போல் துரோகம் புரிந்து முதுகில் குத்தியவர்களுக்கு அதே துரோகத்தைத் தான் பரிசளிக்க வேண்டும்... எப்படி? எப்படி? எப்படி? என்று அவனது மனம் வேகமாகச் சிந்தித்தது...

சென்னையில் இருந்த இளவரசியின் குடும்பத்தைப் பற்றிய அத்தனை தகவல்களையும் திரட்டி தர சொல்லி ஒரு துப்பறியும் நிறுவனத்திடம் அவன் கேட்டிருந்தான்... அதே போல் மாடசாமியின் விவரங்களைப் பற்றியும் தேடி தர

சொல்லியிருந்தான்... மாடசாமி பற்றிய தகவல் வர நாளானது... ஆனால் இளவரசி குடும்பம் பற்றிய விவரங்கள் அனைத்தும் இரண்டே நாட்களில் அவனது கைகளுக்கு வந்துவிட்டது... முதலில் அவன் யாரையும் பார்க்க விரும்பவில்லை... அவன் முதலில் எடுத்துப் பார்த்தது அவனது 'பத்திப்பாவை' தான்...

லேசாக நரை விழுந்து வயதான தோற்றத்திற்கு அவர் மாறியிருந்த போதும் அவரது கம்பீரம் சிறிதும் குறையவில்லை...

"ஐ லவ் யூ பத்திப்பா..." அவனது உதடுகள் சந்தோசமாய் முணுமுணுத்தது... மீண்டும் தனது சொந்தத்தைப் பார்த்த மகிழ்ச்சி அவனுள்...

ஒவ்வொருவரை பற்றியும் தனித்தனியே இருந்த விவரங்களை உணர்வில்லாத மனநிலையுடன் படித்துக் கொண்டு வந்தவன் கையில் கடைசியாகச் சிக்கியது நிஷிலாவை பற்றிய தகவல்... அவளுக்குப் பதினெட்டு வயதாக இன்னும் இரண்டு மாதங்களே இருந்தது... அவள் ஆள் பார்ப்பதற்கு அப்படியே அவனது இளம்வயது அன்னையை உரித்து வைத்திருந்தாள்... அவன் கோபத்தோடு அவளது புகைப்படத்தின் மீது தனது கை கொண்டு குத்தினான்... அவளைக் கொன்றுவிடும் வேகம் அவனுக்கு வந்தது... இதைத் தான் பாவம் ஓரிடம், பழி வேறிடம் என்பார்களோ...

மீண்டும் அவளது தகவல்களை நிதானமாகப் படிக்கத் துவங்கினான்... அதில் அவளுக்கும், பவித்ரனுக்கும் திருமணம் நடைபெற இருப்பதாகக் கூடுதல் தகவல் இருந்தது... அவன் உடனே அவசரமாகப் பவித்ரனின் தகவலை எடுத்துப் பார்த்தான்... அதிலும் அதுவே இருந்தது...

'இதை எப்படிக் கவனிக்காது விட்டேன்...' என்று ஒற்றை விரலால் தலையைத் தட்டியபடி யோசித்தவனுக்கு அந்த யோசனை பளிச்சிட்டது...

எதற்காகத் தனக்குத் துரோகம் இழைத்தார்களோ அதே துரோகத்தை அவர்களது வீட்டு பெண்ணுக்குச் செய்யத் துடித்தது அவனது மனம்... பழிக்கு பழி... அது தான் அவனது தாராக மந்திரமாக இருந்தது... தவறு செய்துவிட்டு அதற்கான தண்டனை அனுபவிக்காது இத்தனை வருடங்கள் அவர்கள் சொகுசு வாழ்க்கை வாழ்ந்ததே தவறு... இனியும் அந்தத் தவறை நீடிக்க விடலாமோ...?

ம்ஹூம், கூடவே கூடாது... சிம்மம் வேட்டையாடுவதற்காகச் சிலிர்த்துக் கொண்டு தயாரானது... ஆனால் இதில் பாதிக்கப்படப் போவது அப்பாவி பெண் ஒருத்தி என்பதை வன்மம் கொண்ட மனம் உணரவே இல்லை... தான் வாழ கூடாது என்று நினைத்த வீட்டில் தனது வாரிசை வளர்த்திட நினைத்தான் அவன்... அந்தக் கணம் அவன் சிறிதும் சிந்தித்துப் பார்க்கவில்லை... தன்னை அழிந்தவர்கள் தனது வாரிசை அழிக்கத் தயங்க மாட்டார்கள் என்று... அதே போல் தனது தந்தை செய்த அதே தவறை தானும் செய்யப் போகிறோம் என்பதையும் அவன் உணரவில்லை... ஆம், பதினாறு வயது பெண்ணை இழுத்துக் கொண்டு ஓடினான் அவனது தந்தை இசக்கிமுத்து... அதே போல் இவன் பதினெட்டு வயது நிஷிலாவை கடத்தி கொண்டு போனான்... பழிவாங்கும் வெறி அவனது சிந்திக்கும் திறனை முழுமையாக மழுங்கடித்து இருந்தது...

நிஷிலாவின் பழக்கவழக்கங்களை நன்கு அறிந்து கொண்ட சிம்மவிஷ்ணு அவள் இரு தெரு தள்ளி இருக்கும் தனது தோழியின் வீட்டிற்குச் சென்றுவிட்டு மிதிவண்டியில் திரும்பி வந்து கொண்டிருக்கும் போது அவளைக் கடத்தி விட்டான்... எப்போதும் எங்கும் காரில் செல்பவள் தோழி வீடு அருகில் இருக்கும் காரணத்தால் உடற்பயிற்சி போல் மிதிவண்டியில் செல்வாள்... பவித்ரன் அதற்கு மட்டும் அனுமதி அளித்திருந்தான்... அதுவே அவளுக்கு வினையாகி போனது...

கடத்தி கொண்டு வந்த நிஷிலாவை கத்தி முனையில் அவன் திருமணம் செய்து கொண்டான்... ஏனோ கடத்தியவனுக்கு உரிமையில்லாது அவளைத் தொட

அத்தனை தயக்கமாக இருந்தது... அதிலும் தனது தந்தை சுந்தரபாண்டியன் போன்று ஒரு காதல் வாழ்க்கை வாழ எண்ணியிருந்தவன் அவன்... அவனது வாழ்வு விதி செய்த சதியால் இப்படித் தலைகீழாய் மாறி போயிற்று... அப்படியிருந்தும் ஒரு திருமணம், ஒரு மனைவி என்பதில் அவன் உறுதியாக இருந்தான்... அதனால் தான் அவன் தங்களது திருமணத்தைச் சட்டப்படி பதிவு செய்தது... அழுது கொண்டே அவன் செய்யச் சொன்னதைச் செய்தவளுக்கு இது எல்லாம் புத்தியில் உறைக்கவே இல்லை... மாறாக அவள் பயத்தில் கோழிக்குஞ்சாய் வெடவெடவென நடுங்கி கொண்டிருந்தாள்...

அதன் பிறகு அவள் குழந்தை உண்டானது, அவளை அவளது வீட்டில் கொண்டு விட்டது, பிறகு அவளைக் காப்பாற்றியது, அவளுக்காகத் தண்டனை அனுபவித்தது என்று அவன் அடுத்தடுத்து செய்தது, யோசித்தது எல்லாமே அவளுக்காக மட்டுமே...

அவனது இருள் சூழ்ந்த உலகில் 'நிஷிலா' மட்டுமே நம்பிக்கை விடிவெள்ளியாய்... அவனுக்காக அவள் சுயநலமில்லாது அவளையே கொடுத்து அவனைக் காத்தது என்று அவள் மட்டுமே அவனது நினைவாகி போனாள்... அவனது மனம் அவளுக்காக மட்டுமே துடித்தது... அவனது இதழ்கள் மெல்ல முணுமுணுத்தது,

"நிலா... நிலா..." என்று...

"டாக்டர் பேஷண்ட்டுக்கு நினைவு திரும்புதுன்னு நினைக்கிறேன்..." என்று செவிலிப்பெண் கூற...

சிம்மவிஷ்ணுவை பரிசோதித்த மருத்துவர் அவனைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, "எஸ், எல்லாம் நார்மலா இருக்கு... இனி பயப்படத் தேவையில்லை..." என்று கூற...

அதைக் கேட்டு சுந்தரபாண்டியன், மீனாட்சி இருவரும் சந்தோசம் அடைந்தனர்... கடவுளுக்கு மனமார நன்றி செலுத்தினர்...

"நான் போய் மீனாட்சியம்மனுக்கு அபிசேகத்துக்குச் சொல்லிட்டு வர்றேன்... அப்படியே அன்னதானத்துக்கும்..." என்று கிளம்பிய கணவரை தடுத்து நிறுத்தினார் மீனாட்சி...

"என்ன மீனா...?"

"நிஷா பற்றி விஷ்ணு கேட்டால்...?"

"முதலில் அவன் கண்விழிக்கட்டும் அதுக்குப் பிறகு பார்த்துக்கலாம்..." என்றார் அவர் ஆதரவாக...

அதே நேரம் நிஷிலா மகளுடன் விமானத்தில் சென்னையை நோக்கி பறந்து கொண்டிருந்தாள்... கணவனது உயிருக்கு ஆபத்தில்லை என்றதும் அவள் மகளை அழைத்துக் கொண்டு கிளம்பிவிட்டாள்... கிளம்பும் முன் மீனாட்சியிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து,

"உங்க மகன் கிட்ட கொடுத்திருங்க..." என்க...

"நிஷா..." அவர் திகைத்து போய் அவளைப் பார்த்தார்...

"இதைப் படிச்சா அவர் என்னைப் புரிஞ்சிப்பார் அத்தை... கவலைப்படாதீங்க..." என்று அவரைத் தேற்றிவிட்டு அவள் கிளம்பிவிட்டாள்...

"ம்மா, அந்த மேகத்தைப் பாருங்களேன்... குதிரை மாதிரி இருக்குல்ல..." மகளின் குதூகல குரலில் தன்னினைவு கலைந்த நிஷிலா அவளை அணைத்து முத்தமிட்டு,

"ஆமாம்டா அம்மு..." என்றவள் மீண்டும் தனக்குள் மூழ்கி போனாள்...

அன்று கணவன் செய்த தவறுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தவள் அதன் பிறகு ஒரு நாள் கூட நிம்மதியாக இல்லை... கஷ்டப்பட்டு நாட்களைக் கடத்தியவளுக்கு நிம்மதி அளிப்பது போல் ஒரு மாதத்தில் அவளுக்கு மருத்துவம் படிக்கக் கேரளா மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தது... அவள் கேரளா புறப்பட ஆயத்தமாக... பவித்ரனும் தனது தொழிலை அங்கே மாற்றியமைத்துக் கொண்டு அவளுடன் வந்துவிட்டான்... அவள் வேண்டாம்

என்ற போதும் அவன் அவளைத் தனியே விடச் சம்மதிக்கவில்லை...

அவள் படிப்பில் கவனம் செலுத்திய போது எல்லாம் பவித்ரன் தான் ஆதிரையைத் தாயாய்த் தாங்கினான்... வெளியில் தொழிலையையும் கவனித்துக் கொண்டு வீட்டில் ஆதிரையையும் கவனமாகப் பார்த்துக் கொண்டான்... அதற்காக அவன் சிறிதும் முகம் சுளிக்கவில்லை... ஆதிரைக்கு ஆறு மாதம் இருக்கும் போது இளவரசி சிகிச்சை முடிந்து ஊர் திரும்பினார்... தாயை பார்க்க கிளம்பிய பவித்ரன் தன்னுடன் நிஷிலாவையும் கிளம்பச் சொன்னான்... அவள் மறுத்த போதும் அவன் விடவில்லை...

அங்குச் சென்ற ஒரே நாளில் இளவரசி தனது சுயரூபத்தை அவளிடம் காட்ட துவங்கினார்... அவளிடம் நேரிடையாக அல்லாது குழந்தையிடம் காட்டினார்... ஆதிரையைக் கையில் வாங்குவது போல் கையை நீட்டியவர் வேண்டுமென்றே கையை எடுத்துவிட, அது தெரியாது அருந்ததி குழந்தையைப் பிடித்திருந்த கையை எடுத்துவிட்டார்... நல்லவேளையாக ஆதிரை கீழே விழும் முன் பவித்ரன் பாய்ந்து சென்று குழந்தையைத் தனது கைகளில் தாங்கி கொண்டான்...

நிஷிலா ஓடி சென்று மகளைத் தனது கைகளில் வாங்கிக் கொண்டாள்... அவள் பயத்துடன் அத்தையைப் பார்த்தாள்... இளவரசியோ இதழோர இளக்கார சிரிப்புடன் அவளைப் பார்த்திருந்தார்... அதில் அவளது தேகம் பயத்தில் தடதடத்தது... மகளை அணைத்துக் கொண்டு அவள் தனது அறைக்குச் சென்றுவிட்டாள்...

"குழந்தையை ஒழுங்கா பிடிக்க மாட்டியா...?" என்று செல்வரத்தினம் மனைவியைச் சத்தம் போட்டார்...

அன்று இளவரசியைப் பார்க்க துளசி வந்திருந்தாள்... இளவரசியின் நலம் விசாரித்துவிட்டு கிளம்பும் போது அவள் பவித்ரனிடம் வந்து நின்றாள்... அவன் என்ன என்பது போல் அவளைப் பார்த்து வைத்தான்...

"நிஷாவுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சு கொடுக்க உங்களால் மட்டும் தான் முடியும்... அவளை நல்லா புரிஞ்சிக்கிட்டவர் நீங்க தான்... எத்தனை நாளைக்கு அவள் இப்படியே தனிமரமா இருக்கப் போகிறாள்... அவளுடைய மனசை மாத்தி சீக்கிரமே அவளைக் கல்யாணம் பண்ணிக்கோங்க..."

அதற்கு அவன் பதில் சொல்லாது அவளை வியப்பாய் பார்த்தான்... அவன் பதில் பேசாது இருப்பது கண்டு அவள் வருத்தத்துடன் விருட்டென்று அங்கிருந்து கிளம்பி விட்டாள்... இதைப் பத்ரிநாத் பார்த்துவிட்டு யோசனையில் ஆழ்ந்தார்...

அன்றே நிஷிலா கேரளாவிற்குச் செல்ல முடிவெடுக்க... பவித்ரனும் அவளுடன் கிளம்பினான்... பத்ரிநாத் அவளைத் தனியே அழைத்துப் பேசினார்...

"உன் வாழ்க்கையைப் பத்தி நீ என்ன முடிவு பண்ணியிருக்க...?"

"இப்படியே இருக்கப் போகிறேன்..." அவர் கேட்டதன் அர்த்தம் புரிந்து அவள் கூற...

"உனக்குன்னு ஒரு வாழ்க்கை வேண்டாமா...?"

"வேண்டாம்... எனக்கு என் மகள் மட்டும் போதும்..."

"அப்பா வேண்டாமா...?" அவரது 'அப்பா' என்கிற வார்த்தையில் அவளது மனம் அதிர்ந்தது...

"அவரை வெளியில் எடுக்க முடியாதா...? நான் வேணா கேசை வாபஸ் வாங்கிக்கிறேன்..." என்று அறியாமையுடன் கேட்டவளை கண்டு அவரது இதயம் கசிந்தது... அவளது மனம் அவருக்கு நன்கு புரிந்தது... அவளது மனம் ரணமாக இருந்த போதும் அதில் சிம்மவிஷ்ணு தான் ஆழப்பதிந்து இருக்கிறான் என்று...

"முயற்சித்துப் பார்க்கிறேன் நிஷா..."

அவள் கேரளா கிளம்பி சென்றுவிட... அவர் சிம்மவிஷ்ணுவை சந்திக்க ஏற்பாடு செய்தார்... அவரைப் பார்க்க மறுத்தவன் அவரது கோரிக்கையையும் நிராகரித்து விட்டான்...

"நான் ஒண்ணும் நல்லவன் இல்லை... நான் செய்த தவறுக்கான தண்டனை தான் இது..." என்று அவன் தனது விடுதலையை மறுத்துவிட்டான்...

அதைக் கேள்விப்பட்டு அவள் மனம் மறுகி போனாள்... அவளது குற்றவுணர்வு அதிகரித்துக் கொண்டே போனது... அவளது மனமறிந்து பவித்ரன் அமைதியாக இருந்தான்... பத்ரிநாத் மகனின் திருமணப் பேச்சை எடுத்தார்... அவன் மறுத்துக் கொண்டே இருந்தான்... பிறகு நிஷிலா அவனது மனதினை கரைத்துத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்தாள்...

ஆதிரைக்கு இரண்டு வயதாக இருக்கும் போது பவித்ரன், துளசி திருமணம் நடைப்பெற்றது... துளசியின் மனமறிந்து பத்ரிநாத் தான் அவளைத் தனது வீட்டு மருமகளாக முடிவு செய்தார்... துளசி மாமியார் போல் இல்லாது நிஷிலாவிடம் மிகுந்த அன்பாக இருந்தாள்... அந்த அன்பே அவளைப் பவித்ரனுடனான வாழ்வினில் காதலாய்ப் பிணைக்க வைத்தது...

சென்னை விமான நிலையம் வந்துவிட்ட அறிவிப்பு ஒலியில் தன் நினைவு கலைந்த நிஷிலா மகளுடன் இருக்கையில் இருந்து எழுந்தாள்... அவர்களை அழைத்துச் செல்வதற்காகப் பவித்ரன் தனது மகன்களுடன் அவர்களுக்காக வெளியில் காத்திருந்தான்...

"ஆர்யா, சூர்யா..." விமானநிலையம் என்று கூடப் பார்க்காது ஆதிரை காற்றைப் போல் சின்னவர்களை நோக்கி ஓடி வந்தாள்...

"அம்மு..." என்றபடி இரு வாண்டுகளும் அவளை நோக்கி புயல் போல் ஓடியது...

மூன்று பேரும் கட்டிப்பிடித்தபடி வட்டமாக நின்று கொண்டு சந்தோச கூச்சலிட்டு குதித்தனர்... அவர்களைப் பவித்ரனும், நிஷிலாவும் புன்னகையுடன் பார்த்திருந்தனர்... முன்பிருந்ததை விடச் சற்று தெளிவாக, அழகாக மாறியிருந்த மாமன் மகளைக் கண்டு ஆச்சிரியப்பட்ட பவித்ரன்,

"விஷ்ணு எப்படியிருக்கான்...?" என்று கேட்க...

"பயமில்லை அத்தான்... மயக்கம் மட்டுமே... அதுவும் சீக்கிரம் தெளிஞ்சிருவார்..." இயல்பு போல் இயம்பியவள் காரின் பின்பக்க கதவை திறந்து ஏற முயன்ற போது மூன்று வாண்டுகளும் சேர்ந்து வந்து,

"நீங்க முன்னாடி உட்காருங்க... நாங்க ஜாலியா விளையாடிட்டு வர போறோம்..." என்று கூறி அவளை முன் இருக்கைக்குத் தள்ளிவிட்டனர்...

அவள் சிரித்துக் கொண்டே முன்னால் ஏறியமர்ந்தாள்... பவித்ரன் காரை கிளப்பினான்...

"அப்புறம் என்ன செய்யலாம்ன்னு இருக்க...?"

"இங்கே என் ப்ரெண்ட்டோட அப்பாவோட ஹாஸ்பிட்டல் இருக்கு அதில் ஜாயிண் பண்ண போறேன்..."

"அப்போ நீ விஷ்ணு கூட...?" அவன் கேள்வியாய் நிறுத்தினான்...

"இல்லை அத்தான்... நான் இனி இங்கே தான்..." என்றவள் மேலே பேசாது வெளியில் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்...

அவளது வார்த்தையில் அவன் தான் திகைத்துப் போனான்... எல்லாம் சரியாகிவிட்டது என்று அவன் நினைக்கும் போதே மீண்டும் எதுவும் சரியாகாது ஆரம்ப இடத்தில் அப்படியே இருப்பது போல் ஒரு தோற்றம்... அவன் ஒன்றும் பேசாது காரை செலுத்தினான்...

வீடு வந்து சேர்ந்ததும் வாண்டுகள் மூன்றும் கத்தி கொண்டே வீட்டிற்குள் ஓடி சென்றனர்... நிஷிலா புன்னகை முகமாய் வீட்டினுள் நுழைந்தாள்...

"நிஷி..." என்று ஆரவாரத்துடன் துளசி அவளை வரவேற்று அணைத்து கொண்டாள்...

அப்போது நிஷிலாவின் கண்கள் ஓரிடத்தில் நிலைக்குத்தி நின்றது... அங்கு இளவரசி அவளைக் குரோதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்... இப்போது அவரது பார்வையை அவள் தைரியமாக எதிர்கொண்டாள்... அதைக் கண்டு அவரது முகம் யோசனையில் ஆழ்ந்தது... அவரது யோசனை அவளுக்குக் குதூகலத்தைக் கொடுத்ததோ என்னவோ...

அவர் அருகில் சென்று, "அத்தை..." கூவலுடன் அவரை அணைத்து கொண்டவள் அவரது காதில்,

"அம்மு மீது சிறு கீறல் விழுந்தாலும் உங்க உயிர் போகப் போவது உறுதி..." என்றாள் சீறலான குரலில்...

"என் அமாவாசை வானில் முளைத்த
விடிவெள்ளியவள்...
எமனிடமிருந்து உயிர் மீட்ட
சரிபாதி சாவித்திரியவள்...
என்னில் முழுமையாய் கலந்த
என்னுயிரவள்...
என்றும் என்னைக் காத்திடும்
தாயவள்..."

கொள்ளும்...!!!

"என்னடி ரொம்பப் பேசுற...? துளிர் விட்டு போச்சா...? புருசன் பொழைச்சிட்டான்னு ரொம்பச் சந்தோசமோ...?" என்று இளவரசி அடிக்குரலில் நிஷிலாவிடம் உறுமினார்...

"அட பார்டா... மகனை பத்தின லேட்டஸ்ட் நியூசை கூடத் தெரிஞ்சு வச்சிருக்கிறீங்க... சூப்பர் அத்தை... நீங்கள் அல்லவோ சிறந்த தாய்..." என்றவளின் வார்த்தையில் அத்தனை நக்கல் இருந்தது...

"யாருக்கு யாருடி அம்மா...? அவனைப் பெத்தவக் கிட்ட போய் இதைச் சொல்லு..." இளவரசி காட்டமாய் அண்ணன் மகளை முறைத்தார்...

"நீங்க அவரைக் கொல்லாமல் இருந்திருந்தால் அவருக்கு இன்னொரு அம்மா கிடைச்சிருக்க மாட்டாங்க..."

அதைக் கேட்டு இளவரசியின் முகம் பயத்தில் வெளிறியது... அவரது பயத்தினைத் திருப்தியுடன் பார்த்த நிஷிலா,

"அதனால் ஒண்ணும் கெட்டு போகலை... உங்களை விட அன்பான அம்மா தான் கிடைச்சிருக்காங்க... மீனாட்சி அத்தை மாதிரி அம்மா கிடைக்க மாமா ரொம்பவே கொடுத்து வச்சிருக்கணும்..."

"மாமாவா...?" இளவரசி முகம் வேப்பங்காயை உண்டது போல் கசந்தது...

"அத்தை மகன் மாமா தானே...? அதை விட அவர் என் புருசன் இல்லையா...?"

"அவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்து ஜெயிலில் தள்ளிய நீ எல்லாம் என்னைப் பழிக்கக் கூடாது..." என்றவரின் பேச்சில் அவளது முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது... சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டவள்,

"அது நான் தெரியாமல் செய்த தவறு... தவறுன்னு தெரிஞ்சே தவறு செய்துட்டு திமிரா இருக்கிற உங்களை

விட நான் ஒண்ணும் குறைஞ்சு போயிரலை..." என்றவள் அத்தையை விட்டு நகர்ந்தாள்...

இளவரசி கொதிப்புடன் நின்றிருந்தார்... அவர்களைப் பார்ப்பவர்களுக்கு அவர்கள் சாதாரணமாகப் பேசி கொண்டது போல் தான் தெரியும்... ஆனால் என்ன பேசி கொண்டார்கள் என்பது சம்பந்தப்பட்ட இருவருக்கு மட்டுமே தெரியும்...

தந்தை மற்றும் சித்தப்பாவிடம் பேச நிஷிலாவிற்குச் சிறிதும் விருப்பம் இல்லை... ஆனால் அவர்கள் தன் மீது வைத்திருக்கும் பாசத்தை வைத்து அவள் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கிறதே... அதனால் புன்னகை மாறா முகத்துடன் அவர்களிடம் நாசுக்காகப் பேசிவிட்டு எழுந்துவிட்டாள்... மாமா பத்ரிநாத்திடம் பேசும் போது மட்டும் அவளுக்கு இரக்கமாக இருந்தது... அத்தையின் உண்மை முகம் தெரிந்தால் மாமாவின் காதல் மனம் என்ன பாடுபடும்? என்று...

ஆதிரை பவித்ரனின் மகன்களுடன் விளையாட சென்றிருக்க... நிஷிலா தனது அறைக்கு வந்தாள்... அவளின் பின்னேயே அருந்ததி வந்தார்... அன்னையின் வரவை உணர்ந்தாலும் அவள் அமைதியாகப் பெட்டியில் இருந்து துணிகளை எடுத்து அலமாரியில் வைத்து கொண்டிருந்தாள்...

"மாப்பிள்ளை எப்படி இருக்காரு...?" என்று கேட்ட அன்னையை வியப்பாய் திரும்பி பார்த்தவள் சிறு புன்னகையுடன்,

"உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை... கொஞ்ச நாள் மயக்கம் இருக்கும்... ஆனா பயமில்லை..." என்றாள்...

"நீ மாப்பிள்ளை கூடயிருந்து கவனிச்சிருக்கலாமே நிஷா... ஏன் இங்கே கிளம்பி வந்த...?"

அதற்கு அவள் மௌனத்தைப் பதிலாகக் கொடுக்க... மகளைக் கவலையாகப் பார்த்த அருந்ததி,

"நீயும், மாப்பிள்ளையும் சேர்ந்து வாழ போறது இல்லையா...?"

"இல்லைம்மா..." இதற்கு மட்டும் அவள் பதில் சொன்னாள்...

"நிஷா..." என்று அதிர்ந்தவர்,

"அம்முவை கொஞ்சமாவது நினைச்சு பார்த்தியா...?" என்று கேட்க...

"அம்முவுக்கு என்ன...? அம்மா நானிருக்கேன்... அப்பா அவங்க இருக்காங்க... அவள் சந்தோசமா இருப்பாள்..."

"என்னடி குழப்புற...?"

"அவங்க அம்முவை வந்து பார்த்துட்டு போறதையோ, இல்லை அவங்க அவளை அழைச்சிட்டு போய் அவங்க கூட வச்சுக்கிறதையோ நான் தடை சொல்ல போறது இல்லை... முதலில் அவங்க குணமாகி வரட்டும்..."

"என்னென்னமோ சொல்ற நிஷா... ஆனா எனக்கு ஒண்ணும் புரிய மாட்டேங்குது..." என்று புலம்பியவர் மகளிடம்,

"மாப்பிள்ளைக்கும் உனக்கும் ஏதாச்சும் சண்டையா...?"

"ச்சேச்சே, அப்படி எல்லாம் இல்லைம்மா..."

"அவருக்கு உன்னைப் பிடிக்கலையா...?"

அன்னை கேட்டதுக்கு ஒரு நொடி இதழ் கடித்து அமைதியாக இருந்தவள் பின்பு, "தெரியலைம்மா..." என்று உதட்டை பிதுக்கினாள்...

"அப்போ உனக்கு...?" என்றவரது பார்வை மகளைக் கூர்மையாகத் துளைத்து எடுத்தது... அதைத் தைரியமாக எதிர்கொண்ட நிஷிலா,

"தெரியலை..." என்றாள் நிமிர்வாக...

"என்னடி இது கூத்து...? இது தெரியாம தான் அவர் கூட இந்த மூணு மாசமா சேர்ந்து வாழ்ந்தியா...?"

அன்னையின் பேச்சில் வெட்கமும், அவமானமும் ஒருசேர அவளது முகம் சிவந்து போனது... ஒன்றும் பேசாது ஜன்னல் அருகே சென்றவள் வானத்தை வெறித்துப் பார்த்தாள்...

"இந்த மூணு மாசமும் என் மனசில் இருந்தது எல்லாம் அவங்களைக் குணமாக்கணும்... மாமா, அத்தை கையில் அவங்க மகனை உயிரோடு காப்பாத்தி கொடுக்கணும்... அதே மாதிரி அம்முவுக்கு அப்பாவை திரும்பக் கொடுக்கணும்ன்னு தான் நினைச்சேன்... அதை விட நான் செஞ்ச பாவத்துக்குப் பிராயச்சித்தம் செய்ய நினைச்சேன்... அவங்களைப் பழைய மாதிரி கொண்டு வர நினைச்சேன்... இது எல்லாத்தையும் விட..." என்று அன்னையிடம் கூறியவள்,

'நம்ம வீட்டாளுங்க அவருக்குச் செஞ்ச பாவத்துக்கு என்னை அவருக்குத் தந்து அவரை உயிரோடு மீட்டெடுத்து இருக்கேன்...' என்று மனதிற்குள் கூறி கொண்டாள்...

"அவங்க என் வாழ்க்கையில் வந்தது... நான் அவங்க வாழ்க்கையில் வந்தது... எல்லாமே விதியின் விளையாட்டு... அதுக்கு ஒரு முடிவு கட்டத்தான் நான் அவரோட போனது... இனி அவரே எல்லாத்தையும் பார்த்துக்குவார்... நான் தேவையில்லை..." என்று முடிவாக முடித்துக் கொண்டாள்...

"அப்போ கடைசிவரை இப்படிப் பட்டமரமா நிற்க போறியா...?" இதைக் கேட்கும் போதே அருந்ததியின் விழிகளில் கண்ணீர் வழிந்தது...

"இப்போ எனக்கு என்னம்மா குறை...?"

"புருசனோடு சேர்ந்து வாழாதது தான் குறை..."

கணவனோடு வாழ்ந்த காலம் அவளது மனதில் வந்து போனது... அதில் காதல் இருந்ததா? காமம் இருந்ததா?

என்று கேட்டால் அவளுக்குச் சொல்ல தெரியாது... அவனது வலி தீர அவள் தன்னைக் கொடுத்தாள்... அவனின் வேதனை தீர அவள் அவனது கைகளில் விளையாட்டு பொம்மையானாள்... அந்தக் கணம் அவளது மனதில் இருந்தது எல்லாம் அவனின் நலன் மட்டுமே... அவனது உணர்வுகளை அவதானித்தவளுக்கு அந்தக் கணம் தனது உணர்வுகள் எப்படியிருந்தது? என்பதைப் பற்றி எல்லாம் அவள் அறிந்து கொள்ள விரும்பவில்லை...

இப்போதும் அவனது நலன் பற்றிய வேண்டுகோள் அவளது மனதில் இருக்கிறது... ஆனால் அது காதல் என்கிற உணர்வா? இல்லை கணவன் என்கிற உரிமையா? எதுவென்று கேட்டால் அவளிடம் பதில் இல்லை... சகமனிதனிடம் தோன்றும் இரக்கமே அவனிடம் அவளுக்குத் தோன்றியது... மனோதத்துவ மருத்துவரான அவளுக்கே அவளது மனநிலை புரியவில்லை...

"நிஷா..." அன்னை அழைத்ததும் தன்னை மீட்டு கொண்டவள் அவரைப் பார்த்து புன்னகைத்தாள்...

"இவ்வளவு நாள் தனியே தானே வாழ்ந்தேன்... இனியும் அப்படியே வாழ்ந்துவிட்டு போகிறேன்..."

"இவ்வளவு நாள் இருந்தது வேற... ஆனா இப்போ...?"

"இப்பவும் அதே மாதிரி தான்ம்மா... ஒரு மாற்றமும் வந்துவிடப் போவதில்லை..." என்றவள் அத்துடன் அந்தப் பேச்சை முடித்துக் கொண்டாள்...

பகல் முழுவதும் பவித்ரன், துளசி, குழந்தைகளுடன் நேரம் சென்றது... ஆதிரை வெகுநாட்களுக்குப் பின் சென்னை வந்திருப்பதால் மாலையில் கடற்கரை, கடைவீதி என்று அவளை அழைத்துச் சென்று அவள் கேட்டதை எல்லாம் வாங்கிக் குவித்தான் பவித்ரன்... அவளோடு போட்டி போட்டுக் கொண்டு ஆர்யா, சூர்யாவும் தங்களுக்கு வேண்டியதை வாங்கிக் கொண்டனர்... இதை எல்லாம் புன்னகை முகத்துடன் பார்த்து கொண்டிருந்தாள் நிஷிலா...

மாலையில் ஆட்டம் போட்டதால் இரவு வீட்டிற்கு வந்ததும் ஆதிரை உறங்கிவிட்டாள்... மகள் உறங்கியதை கண்டு அவளுக்குப் போர்த்திவிட்டு தனது அலைப்பேசியை எடுத்துக் கொண்டு பால்கனி வந்தாள் நிஷிலா... தனது அலைப்பேசியில் இருந்து மீனாட்சிக்கு அழைத்தாள்... மறுமுனையில் மீனாட்சி எடுத்ததும் அழ துவங்கிவிட்டார்...

"ஷ், அழாதீங்க அத்தை... அவங்க எப்படியிருக்காங்க...?"

"என்னன்னு சொல்ல சொல்றம்மா...? மூக்குல ட்யூப் போட்டு, கையில் அங்கங்கே குத்தி புண்ணாக்கி ட்ரிப்ஸ் போட்டு விஷ்ணுவை பார்க்கிறதுக்கே பாவமாயிருக்கும்மா... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி லேசா நினைவு திருப்பிச்சு... நாங்க போய்ப் பார்க்கிறதுக்குள்ள திரும்ப மயக்கத்துக்குப் போயிட்டான்..."

"அத்தை, மத்த ஆபரேசன் மாதிரி ப்ரையின் ஆபரேசன் கிடையாது... குணமாகக் கொஞ்சம் காலம் எடுக்கும்... வலி தெரியாம இருக்கிறதுக்காகக் கொஞ்ச நாளைக்குத் தூக்கத்தில் தான் வச்சியிருப்பாங்க... நீங்க பயப்படத் தேவையில்லை..."

"நிஷாம்மா நீ இங்கே வந்திரும்மா... தனியா விஷ்ணுவை பார்த்துக்க எனக்குப் பயமாயிருக்கும்மா..."

அவரது வார்த்தையில் அவளது விழிகள் கசிந்தது... என்ன சொல்லி அவரைத் தேற்றுவது என்று அவளுக்குத் தெரியவில்லை...

"எல்லாம் சரியாகும் அத்தை... உங்க மகனுக்கு வில் பவர் அதிகம்... நிச்சயம் அவர் பழையபடி மீண்டு வருவார்..."

'உங்க மகன்' என்றவளுக்கு 'என் கணவன்' என்று சொல்ல ஏனோ வாய் வரவில்லை... மீனாட்சியும் மருமகளின் ஆறுதலில் ஆறுதல் அடைந்தவராய் அலைப்பேசியை அணைத்தார்...

நிஷிலா இருளில் அமைதியாக அமர்ந்திருந்தாள்... அவனது அன்னை, அவளது அன்னை இருவரின்

எண்ணங்களும் ஒரே மாதிரியாகப் பயணித்தது... ஆனால் அவளது எண்ணமோ வேறு திசையில் அல்லவா பயணிக்கிறது... ஆனால் ஒன்று மட்டும் உறுதி, பத்து வருடங்களாக அவளுக்கு இருந்த அலைப்புறுதல், குற்றவுணர்வு இப்போது இல்லை... ஆழ்கடலின் அமைதியாய் அவளது மனம் ஆழ்ந்திருந்தது... பெருத்த நிம்மதி, நிறைவு மட்டுமே அவளை ஆட்கொண்டது... அவள் வெகுநேரம் அப்படியே அமர்ந்திருந்தாள்...

மறுநாள் காலையில் எழுந்து வெளியில் கிளம்புவதற்காகத் தயாராகி வந்தவள் நேரே தந்தையிடம் சென்று, "அப்பா நான் நம்ம கம்பெனிக்கு வரலாம்ன்னு இருக்கேன்..." என்றவளை ஆச்சிரியத்துடன் பார்த்த செல்வரத்தினம்,

"அதுக்கென்ன வாடாம்மா..." என்று அன்போடு கூற...

"நிஷாம்மா ரொம்பச் சந்தோசம்..." என்று அவளது சித்தப்பா மணிபாரதி சந்தோசப்பட்டார்...

இருவரையும் வெறுப்பாய் பார்த்த நிஷிலா நொடியில் தனது முகபாவனையை மாற்றிக் கொண்டாள்... அவளது முடிவினை கேட்டு பவித்ரன், பத்ரிநாத் இருவரும் மகிழ்ந்தனர் என்றால், இளவரசி கோபமடைந்தார்...

"அண்ணா இப்போ எதுக்கு இவள் அங்கே வருகிறாள்...? டாக்டருக்கு எதுக்குப் படிச்சியிருக்கா...? அதைப் போய்ப் பார்க்க சொல்லுங்க..." என்று சிடுசிடுத்தார்...

"அரசி, இந்தக் கம்பெனி எனக்கும் என் தம்பிக்கும் மட்டுமே உரிமையானது... எங்களோட தங்கை என்பதால் உன்னோட பெயரை இதில் சேர்த்திருக்கிறோம்... அதனால் முழு உரிமையும் உனக்குத் தான் இருக்குன்னு ஆடாதே... எங்க ரெண்டு பேருக்கும் நிஷா மட்டும் தான் ஒரே வாரிசு... அவள் வராம வேறு யார் வருவாங்க..." என்று செல்வரத்தினம் கோபமாய்ப் படபடத்தார்...

"வசி நீ என்னோடு கிளம்பு..." என்று பத்ரிநாத் கூற...

"அது எப்படிப் பத்ரி...?" என்று இழுத்த இளவரசியைக் கண்டிப்புடன் பார்த்து,

"என்ன தான் சொந்தபந்தம்ன்னாலும் வாயும் வயிறும் வேறு..." என்று கூற...

"ஆமாம் மாமா... என்ன தான் பெத்த பிள்ளைங்களா இருந்தாலும் வாயும் வயிறும் வேற தான்... இதை அத்தைக்குச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை..." என்று கேலி போல் குத்தி காட்டி பேசினாள் நிஷிலா...

அதைக் கேட்டு இளவரசியின் முகம் ஆத்திரத்தில் ஜொலித்தது...

"பத்ரி, நீங்க கிளம்பி போங்க... நான் இன்னைக்குச் சிம்ஸ் கம்பெனிக்கு போயிட்டு தான் வருவேன்..." என்று அவர் பிடிவாதம் பிடிக்க... பத்ரிநாத் மகனிடம் கண்சாடை காட்டிவிட்டு தனது நிறுவனத்திற்குக் கிளம்பி சென்றார்...

அன்று முதல் நிஷிலா தங்களது நிறுவனத்தின் நிர்வாகத்தில் பங்கு எடுத்து கொண்டாள்... தொழிலிலும் தனது திறமையைக் காட்டி தான் ஒரு சிறந்த நிர்வாகி என்று பெயரெடுத்தாள்... அதற்கு அவள் படித்த உளவியல் படிப்பு ஆட்களை எடை போடுவதற்குப் பெரிதும் உதவியது...

அப்படித் தான் ஒரு நாள் அவர்களிடம் தொழில் ஒப்பந்தம் போடுவதற்காக ஒரு நிறுவனம் வந்திருந்தது... அதன் நிர்வாகிகள் பேசிவிட்டுச் செல்லும் வரை நிஷிலா அமைதியாக இருந்தாள்... அவர்கள் சென்றபின் நிஷிலா,

"இவங்க கூட அக்ரிமெண்ட் போட வேண்டாம்..." என்று உறுதியாக மறுத்தாள்...

"ஏன்...?" எல்லோரும் காரணம் கேட்டனர்... இளவரசி அவளை முறைத்துக் கொண்டிருந்தார்...

"அவங்களோட பேச்சு, நடவடிக்கை எதுவுமே சரியில்லை... ஏதோ ஒண்ணு இடிக்குது... அவங்க நம்மளை ஏமாத்த பார்க்கிறாங்க..." என்று மட்டும் அவள் சொல்ல...

"உன் விளங்காத படிப்பை தொழிலில் கொண்டு வராதே... பிசினஸ்மேன்னா அப்படித் தான் இருப்பாங்க..." என்று இளவரசி அவளைத் திட்ட துவங்க...

"நிஷா, நீ சொன்னா சரி தான்..." என்று செல்வரத்தினம் முடித்துக் கொள்ள... பவித்ரன், மணிபாரதி ஒன்றும் பேசாது நிஷிலாவை ஆதரித்தனர்...

நிஷிலா கூறியது போல் அந்த நிறுவனத்தோடு ஒப்பந்தம் போட்ட போட்டி நிறுவனம் அவர்களிடம் நன்றாக ஏமாந்து போனது... பணம் வாங்கிக் கொண்டு பொருளை கொடுக்காது ஏமாற்றிவிட்டனர்... ஏனெனில் அவர்களது நிறுவனம் நஷ்டத்தில் இயங்கி கொண்டிருந்தது... அதைச் சரிக்கட்டவே இந்த ஒப்பந்த வேசம்...

"நிஷா நீ சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை... நீ சொன்னது அப்படியே பலித்து விட்டது... ஏற்கெனவே நஷ்டத்தில் இயங்கி கொண்டிருக்கும் நம்ம கம்பெனிக்கு இந்த நஷ்டமும் ஏற்பட்டால் தாங்க முடியாது... நல்லவேளை நஷ்டத்தில் இருந்து கம்பெனியை காப்பாத்தி விட்டாய்..." என்று செல்வரத்தினம் மகளின் புத்திசாலித்தனத்தை எண்ணி சிலாகித்துக் கொண்டார்...

அதன் பின்னர் நிஷிலா எடுக்கும் முடிவுக்கு எல்லோரும் கட்டுப்படும் சூழ்நிலை ஏற்பட்டது... இளவரசி அந்தச் சூழ்நிலையை அறவே வெறுத்தார்... அதே சமயம் அண்ணன்களை மீறி நிஷிலா மீது கை வைக்கவும் முடியவில்லை...

திடுமென ஒருநாள் நிஷிலா தனது தந்தை, சித்தப்பாவிடம், "உங்க பங்குகளை எனக்கு எழுதி கொடுத்திருங்க... உங்க காலத்துக்குப் பிறகு என்னால் அத்தை கிட்ட போராட முடியாது... என் மகளுக்குன்னு நான் சேர்க்க வேண்டாமா...?" என்று உணர்ச்சிப்பூர்வமாகப் பேசினாள்...

ஏனெனில் இளவரிசியின் செயல்பாடுகள் அப்படித் தான் இருந்தது... ஒரு நொடி யோசித்த செல்வரத்தினம் மகளிடம்,

"நான் என்னோட பங்குகளை உனக்குத் தர்றேன்ம்மா..." என்று முடிவாய் கூறியவர் தனது தம்பியை பார்த்தார்...

மணிபாரதி இராமனை பின்பற்றும் இலக்குமணராய், "என்னுடையது எல்லாம் என் மகளுக்கும், பேத்திக்கும் மட்டும் தான்..." என்றார் உறுதியான குரலில்...

அதைக் கேள்வியுற்று இளவரசி கோபத்தில் குதித்தார்...

"ஏற்கனவே நஷ்டத்தில் போயிக்கிட்டு இருக்கு... பாதிக் கடன்... கால்வாசிக்கும் மேல் அவனிடம் ஷேராக இருக்கிறது... மீதம் கொஞ்சம் தான் நமக்கு... அதை நிஷாவிடம் கொடுத்தால் என்ன...?" என்று செல்வரத்தினம் மகளுக்காகத் தங்கையிடம் வாதாடினார்...

"அவன் நம் எதிரி... அவனுடைய மனைவிக்கு நீங்க எழுதி கொடுப்பது என்றால்...?" என்று கேள்வியாக நிறுத்திய தங்கையைத் தீர்க்கமாகப் பார்த்த செல்வரத்தினம்,

"அவன் என் மகளோட கணவன்... இந்த வீட்டு மாப்பிள்ளை... அதுவும் சாதாரண மாப்பிள்ளை இல்லை... மதுரையை ஆண்ட ராஜவம்சம்..." என்று பெருமையாக மீசையை நீவி கொண்டார்...

"விட்டா நீயே உன் மகளை அவனுக்குக் கூட்டி கொடுத்திருவ போலிருக்கு..." கிண்டலாய் கேட்ட தங்கையை உறுத்து விழித்தவர்,

"என் மகளை என்ன உன்னை மாதிரி நினைச்சியா...? அவள் சொக்கத்தங்கம்... அவள் கணவன் கூட வாழ சொல்லி விட்டுட்டு வர்றதுக்குப் பெயர் கூட்டி கொடுக்கிறது இல்லை... பதினாறு வயசுல ஒருத்தனை இழுத்துட்டு ஓடுனியே அதுக்குப் பெயர் தான் நீ சொன்னது..." என்றவரை கண்டு,

"அண்ணா..." என்று கோபத்துடன் கத்தினார் இளவரசி...

"இந்தா சும்மா சும்மா கத்தாதே... நீ கேவலமா பேசும் அளவுக்கு என் மகளோ, அவளுடைய வாழ்க்கையோ

இல்லை... என்ன புரிந்ததா...?" என்று கறார் குரலில் கூறியவர் அங்கிருந்து சென்றுவிட்டார்...

ஒருநாள் நிஷிலா மாமா பத்ரிநாத்திடம் சென்று நின்றாள்... அவர் அவள் வந்த நோக்கம் அறியாது,

"வாம்மா, உட்கார்..." சோபாவை காட்டினார்...

அவரிடம் சிறிதுநேரம் தொழிலை பற்றிப் பேசி கொண்டிருந்தவள் பின் மெதுவே, "சுடலை அத்தானின் இறப்பு பத்தி உங்களுக்கு எதுவுமே தெரியாதா மாமா...?" என்று கேட்க...

"அவனின் இறப்புக்கு என்ன...?" என்று புரியாது விழி சுருக்கினார் பத்ரிநாத்...

"ஏன் ஆத்தில் மூழ்கி இருந்தாங்கன்னு...?"

"தவறி விழுந்துட்டதா சொன்னாங்க..."

"ஓ..." என்றவள் அவரைக் கூர்மையாகப் பார்த்து,

"சுடலை அத்தானுக்கு நீச்சல் நல்லா தெரியும் இல்லையா...?"

அவள் சுடலைமுத்துவை பற்றிப் பேசியதும் பத்ரிநாத்தின் முகம் கனிந்தது...

"ஆமாம் நிஷா... நல்லா நீந்துவான்... அவனோட ஸ்கூலில் அவன் தான் ஸ்விம்மிங்கில் ஃபர்ஸ்ட்..." அன்றைய நாளின் நினைவில் அவரது முகம் மலர்ந்தது...

"அப்புறம் எப்படி ஆத்தில் மூழ்கி இறந்தாங்க... லாஜிக் இடிக்கலையா...?" என்றவள் தோளை குலுக்கிவிட்டு சென்றுவிட்டாள்...

பத்ரிநாத் திக்பிரம்மை பிடித்தார் போன்று அமர்ந்திருந்தார்... காவல்துறை விசாரணையின் அறிக்கை அவ்வாறு கூறியதும் அதைப் பற்றி அவர் மேலே சிந்திக்கவில்லை... ஏனெனில் உடல் பார்ப்பதற்கு அப்படித்

தான் இருந்தது... அதனால் அவரும் சந்தேகம் கொள்ளவில்லை...

தனது பர்சை எடுத்து அதிலிருந்த சுடலைமுத்துவின் புகைப்படத்தை மெல்லமாய் வருடி கொடுத்தார்... அவனது தந்தையை வெறுத்தவரால் அவனை வெறுக்க முடியவில்லை... அதனால் தான் அன்று இளவரசி பூஜை என்று சொன்னதும் அங்கிருக்கப் பிடிக்காது அவர் வெளியூர் சென்றுவிட்டார்... ஏனெனில் அன்று பூஜை போட்டது இசக்கிமுத்து, சுடலைமுத்து இருவருக்கும் தான்...

"தப்பு பண்ணிட்டேனோ சுடலை..." என்று நிழலிடம் கேட்டவரின் விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது...

********************

அதே நேரம் சிம்மவிஷ்ணு மெல்ல கண்விழித்தான்... தலை முழுவதும் வலித்தது... ஆனால் முன்பிருந்த வலி இல்லை இது... தலையில் இருந்த தையல்களின் சுருக்சுருக்கென்ற வலி மட்டுமே... அவனுக்கு முழுமையாக நினைவு திரும்பி விட்டதும் அவனுக்கு முதலில் தண்ணீரை பருக கொடுத்தனர்... அதை அவனது உடல் ஏற்றுக் கொள்வதைப் பொறுத்தே அவனது நலம் தீர்மானிக்கப்படும்...

நல்லவேளையாக அவனது உடல் தண்ணீரை ஏற்றுக் கொண்டது... அதன் பிறகு அவனது பேச்சுதிறன் எப்படியிருக்கிறது என்று பரிசோதிக்கப்பட்டது... அதுவும் அவனுக்குச் சரிவரவே அவனது மூக்கில் சொருகியிருந்த குழாயை அகற்றினர்...

அவனுக்குத் தனது பெற்றோரை, குடும்ப மருத்துவரை எல்லாம் அடையாளம் தெரிந்தது... ஆனால் அவனது மனமோ மனைவியை மட்டுமே தேடியது, நாடியது... 'நிலா, நிலா' என்று அவனது மனம் ஓயாது அரற்றியது... வான் நிலா எல்லோருக்குமே கைக்கெட்டாத தொலைவில் தான் இருக்கும்... ஆனால் அவனுக்கு மட்டுமே அந்த நிலா அருகில் வந்து தரிசனம் தந்தது... தனது அன்பால் அவனது தவறை மன்னித்து அரவணைத்துக் கொண்டது... யாருக்கு

கிடைக்கும் இந்தப் பாக்கியம்...? அவளது நினைவில் அவனது விழியோரம் கசிந்தது... ஆனால் யாரிடமும் எந்தக் கேள்வியும் அவன் கேட்கவில்லை...

அடுத்து வந்த நாட்களில் ஆண் செவிலியர் உதவியுடன் அவன் எழுந்து நடமாட ஆரம்பித்தான்... ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை ஆழமாய்ச் சுவாசிக்கச் சொல்லி அறிவுறுத்தப்பட்டான்... ஏனெனில் இருமல் எதுவும் வந்தால் அது தலைக்கு அழுத்தம் கொடுக்கும் என்பதால் அதைத் தவிர்க்கவே இவ்வாறு செய்யச் சொல்லி அறிவுறுத்தப்பட்டான்...

'பிசிகல் தெரபிஸ்ட்ஸ்' எனப்படும் கை, கால்களுக்கு அசைவு, நடப்பதற்கு மாடிப்படி ஏறுவதற்கு என்று அளிக்கப்படும் சிகிச்சை, 'ஆக்குபேசனல் தெரபிஸ்ட்ஸ்' என்பது உடை மாற்றுவது, குளிப்பது, உண்பது போன்ற அன்றாட வேலைகளைத் தடங்கல் இல்லாது செய்வதற்கு அளிக்கப்படும் சிகிச்சை, 'ஸ்பீச் தெரபிஸ்ட்ஸ்' என்பது உச்சரிப்பு, பேச்சுப் பயிற்சி அளிப்பது என்று தனித்தனியாக அவனுக்குச் சிகிச்சை அளித்தனர்... ஏனெனில் மூளைக்கட்டி அறுவை சிகிச்சை செய்பவர்களுக்கு உடல் பலவீனமாக இருக்கும்... பேச்சு குளறும்... நிற்க முடியாது தடுமாறுவார்கள்... இப்படி நிறையப் பிரச்சினைகள் அவர்களுக்கு இருக்கும்... அதை எல்லாம் சரி செய்யவே இத்தகைய சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும்...

எண்ணி மூன்றே மாதங்கள் சிம்மவிஷ்ணு ஆரோக்கியமாய் மாறி சிம்மமாய்க் கர்ஜித்து நின்றான்... அவனது பெற்றோர் இருவருக்கும் நிம்மதியாக இருந்தது... அவன் நலம் பெற்றால் மீனாட்சியம்மன் கோவிலில் நேர்த்திக்கடன் செய்வதாக வேண்டியிருந்ததால் அதைச் செய்ய வேண்டி அவனை அழைத்துப் போயிருந்தனர்... அங்கு அவர்கள் சொன்னதை அமைதியாகச் செய்து முடித்தவன் வீடு வரும் வரை எதுவும் பேசவில்லை... இந்த மூன்று மாத காலமாக அவன் பேச்சு பயிற்சியின் போது மட்டுமே பேசினான்... மற்ற நேரம் எல்லாம் அவன் மௌனம் காத்தான்...

வீட்டிற்கு வந்ததும் அன்னையின் கையைப் பற்றிக் கொண்டு, "நிலா எங்கே...?" என்று வழிகளில் அலைப்புறுதலுடன் கேட்டவனைக் கண்டு அவரது விழிகளில் நீர் நிறைந்தது... அவனுக்குப் பதில் சொல்ல முடியாது அவர் புடவை தலைப்பால் முகத்தை மூடி கொண்டு அழ துவங்கினார்...

சுந்தரபாண்டியன் உள்ளே சென்று ஒரு கவரை எடுத்து வந்து மகனிடம் நீட்டியவர், "நிஷா உன் கிட்ட இதைக் கொடுக்கச் சொன்னப்பா..." என்று கூற... அவன் கைகள் நடுங்க அதை வாங்கிப் பிரித்துப் படித்தான்...

"நீங்க உயிர் பிழைத்த செய்தி கேட்ட பின்னரே நான் இங்கிருந்து கிளம்புகிறேன்... இனியும் நான் இங்கிருந்தால் உங்க எண்ணம் ஈடேறாது... அது போல் என் எண்ணமும்... நீங்க மனதில் நினைத்த காரியம் வெற்றி பெற எனது பிரார்த்தனைகள் எப்போதும் உங்க கூடவே இருக்கும்... நம் மகள் அம்முவை பார்க்க நீங்க எப்போது வேண்டுமானாலும் வரலாம்... இப்படிக்கு, நிஷிலா..."

அதைப் படித்துவிட்டு அவன் ஒன்றும் பேசாது எழுந்து தனது அறைக்குச் சென்றுவிட்டான்... கட்டிலில் அமர்ந்து அந்தக் கடிதத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு அப்படியே கண்மூடி அமர்ந்திருந்தான்... அவன் மனதில் அவள் எழுதிய வார்த்தைகளே நின்று அவனைக் கொன்றது...

'ஏன்டி நான் மகளை மட்டும் தான் பார்க்க வரணுமா...? ஏன் உன்னைப் பார்க்க நான் வர கூடாதா...? ஏன் என்னை விட்டு போன...? நீ என் கூடவே இருக்கணும்ன்னு என் மனசு துடிக்கிறது உனக்குக் கேட்கலையா...? என்னோட மாற்றம் உனக்குப் புரியலையா...? ஏன் இப்படிப் பண்ணின...?' அவனது மனம் ஊமையாக அரற்றியது...

அந்தக் கணம் அவளது கதகதப்பான ஆறுதலான அணைப்பிற்கு அவனது மனம் மிகவும் ஏங்கியது... அது மட்டுமா...? முத்தத்தாலும், அணைப்பாலும் அவனை ஆறுதல்படுத்தும் அவளது தொடுகைக்காக அவனது மனம் ஏக்கம் கொண்டு தவித்தது... தாயாகத் தன்னைத் தாங்கும்

அவளது மடிக்காக அநாதை சிறுவனாய் அவன் மிகவும் ஏங்கினான்... அந்த நொடி அவனுக்கு நன்கு புரிந்தது, அவள் இல்லாது அவனில்லை என்று... தனது ஊனோடு மட்டுமல்லாது அவள் தன்னுயிரிலும் கலந்துவிட்டதை அவன் உணர்ந்தான்...

அறுவை சிகிச்சையின் போது அவன் அவளது நினைவுகளுடனே மயக்கமுற்று அவளது நினைவுகளுடனே உயிர் கொண்டது ஏன்? என்பதற்கான விடை இப்போது அவனுக்குக் கிடைத்தது... அவளுக்காக மட்டுமே தான் வாழ ஆசைப்பட்டது ஏன்? என்பது இப்போது அவனுக்குப் புரிந்தது... புரிந்த விசயங்கள் அனைத்தும் அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அள்ளி தந்தது...

அந்த மகிழ்ச்சிக்கு பெயர் காதல் என்பதையும் அவன் காலத் தாமதமாய் உணர்ந்தான்... அவனது மனம் தனது காதலை உணர்ந்த அடுத்தக் கணம் அவளிடம் போய்த் தானாகச் சரணடைந்தது...

"ஐ லவ் யூ பேபி..." அவனது உதடுகள் சத்தமில்லாது மெல்லமாய் முணுமுணுத்துக் கொண்டது...

அந்தக் கணம் மகளை விட மனைவியே அவனது நினைவிலும், மனதிலும் நீக்கமற நிறைந்திருந்தாள்...

"விஷ்ணு..."

அன்னையின் குரலில் அவன் பட்டென்று விழிகளைத் திறந்தான்... அங்கு அன்னையோடு தந்தையும் கவலையோடு தன்னைப் பார்த்து கொண்டிருப்பதைக் கண்டு புன்னகைத்தான்...

"நிஷா...?" என்று கேள்வியாய் இழுத்தவரை கண்டு,

"என் மனைவியை எப்படி என் வழிக்குக் கொண்டு வரணும்ன்னு எனக்குத் தெரியும்மா..."

"உனக்கும் அவளுக்கும் இடையில் திரும்பவும் ஏதாவது பிரச்சினையா...?"

"நான் சண்டை போட்டால் ஒழிய அவளுக்குத் தானா சண்டை போட தெரியாது... இப்போ நானும் சண்டை போடும் மூடில் இல்லை..."

"அப்புறம் ஏன்டா அவள் அவளோட அம்மா வீட்டுக்கு கிளம்பி போயிட்டாள்...?"

"அவள் போனால் என்ன...? நான் அவள் பின்னோடு என் மாமியார் வீட்டுக்கு போகிறேன்..." என்று அவன் குறும்பாய் கண்சிமிட்டி சிரித்தான்...

அவனது சிரிப்பில் பெற்றோர் மனம் நிறைந்தது... இனி மகனது வாழ்க்கையை அவன் பார்த்து கொள்வான் என்கிற நம்பிக்கை எழுந்தது அவர்களுள்...

***********************

காலையில் எழும் போதே நிஷிலாவிற்குத் தலையைச் சுற்றிக் கொண்டு வாந்தி வருவது போலிருந்தது... பத்து வருடங்களுக்கு முந்தைய நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டியது இன்றைய நிலை... கடந்த மூன்று மாதங்களாக அவளுக்கு இருந்த டென்சனில் இதை எப்படி மறந்து போனாள்...? அதிர்ந்து போனவளாய் அவள் தனது வயிற்றினை இறுக பிடித்துக் கொண்டாள்... கணவனோடு வாழ்ந்த மூன்று மாத வாழ்க்கைக்குக் கிடைத்த முத்தல்லவோ இது...!!!

அவளுக்கு ஓங்கரித்துக் கொண்டு வந்தது... அவள் வாயை மூடி கொண்டு குளியலறையை நோக்கி ஓடினாள்... இரவு உண்டது எல்லாம் வெளிவரும் போலிருந்தது... அந்தளவிற்கு வயிற்றைப் புரட்டி கொண்டு வந்தது... எல்லாவற்றையும் வாந்தி எடுத்துவிட்டு அறைக்குள் வந்து மீண்டும் கட்டிலில் படுத்தாள்...

"நிஷா..." அவளை அழைத்தபடி அவளது தந்தை வந்தார்...

"என்னப்பா...?" என்று கேட்டபடி அவள் எழுந்தமர்ந்தாள்...

அவர் மீது அவளுக்குக் கோபம் இருந்த அதே சமயம் தன்னைப் பெற்றவர் என்கிற பாசமும் இருந்தது... எதுவாக இருந்தாலும் பாதிக்கப்பட்டவன் வந்து தண்டனை கொடுக்கட்டும் என்று அவள் அமைதியாக இருந்தாள்...

"இன்னைக்குக் கம்பெனிக்குக் கட்டாயம் போயாக வேண்டும் நிஷா..."

அப்போது தான் அவளுக்கு அந்த விசயம் ஞாபகம் வந்தது... இன்று அவர்களுக்கு இதுநாள் வரை கடன் கொடுத்தவர் தங்களைக் காண வருகிறார் என்று...

"இதோ கிளம்பிட்டேன்ப்பா..." என்றவள் தனது உடல் நோவை கண்டு கொள்ளாது கிளம்ப ஆயத்தமானாள்...

நிஷிலா அலுவலக அறையில் நுழைந்து அமர்ந்த பத்தாவது நிமிடம் அந்தக் கடன் கொடுத்தவர் அங்கு வந்து சேர்ந்தார்... அவருக்கு அனுமதி கொடுத்தவள் அவரை எப்படிச் சமாளிப்பது? என்று எண்ணியபடி படபடப்புடன் காத்திருந்தாள்... உள்ளே நுழைந்தவரை இல்லை இல்லை நுழைந்தவனைக் கண்டு அவள் அதிர்ந்து போய்த் தனது இருக்கையில் இருந்து எழுந்து நின்றாள்...

அறை கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தது வேறு யாருமில்லை... அவளது கணவன் சிம்மவிஷ்ணு தான்... அவளை இமைக்காது பார்த்தபடி உள்ளே வந்தவன் அவள் அனுமதி வேண்டாது அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தபடி தனது கையை நீட்டி அவளை அமரும்படி சைகை செய்தான்...

அவள் முடுக்கிவிட்ட பொம்மை போல் அவன் சொன்னபடி தனது நாற்காலியில் அமர்ந்து கொண்டு அவனைக் குழப்பத்துடன் பார்த்தாள்... வெள்ளை சட்டை, கருப்பு நிற பேண்ட், அதே நிறத்தில் டை அணிந்து பார்ப்பதற்கு அத்தனை அழகாக இருந்தான் அவன்... கையில் வைத்திருந்த கோட்டை நாற்காலியின் பக்கவாட்டில் தொங்கவிட்டவன் பின்பு நிதானமாக மேசை மீது கையை

ஊன்றி அதில் தனது நாடியை பதித்து அவளை இமைக்காது பார்த்தான்...

அவனது பார்வையினைப் பாவையவளால் தாங்கி கொள்ள முடியவில்லையோ...? அவள் தனது விழிகளைத் தாழ்த்தி கொண்டாள்...

"தென்...?"

கம்பீரமான, ஆளுமையான அவனது அந்தக் குரலில் அவள் தேகம் தூக்கிவாரி போட நிமிர்ந்தாள்... அப்போதும் அவன் தனது இமைக்காத பார்வையினை மாற்றிக் கொள்ளவில்லை...

பார்வையை மட்டுமல்ல பாவையவளையும் மாற்றிக் கொள்ளும் உத்தேசம் அவனிடத்தில் இல்லை...!!!

"பொம்மலாட்ட பொம்மையாய்
ஆடினேன் விதிப்பயனால்...
காதலாட்டத்தில் காதலனாய்
ஆடுகிறேன் உன் நினைவால்...!!!"

கொள்ளும்...!!!

"தென்... வாட்...?"

தடுமாற்றத்துடன் கேட்டபடி தலைகுனிந்த நிஷிலாவின் கை விரல்கள் மேசை விளிம்பின் மீது அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தது... கணவனது இமைக்காத பார்வை அவளை ஏதோ செய்தது...

"அதைத் தான் நானும் கேட்கிறேன்..."

அமர்த்தலான குரலில் சொன்ன சிம்மவிஷ்ணுவின் குரலில் நிமிர்ந்து பார்த்தவள் பின்பு மீண்டும் தலைகுனிந்து கொண்டாள்... அவனுக்குப் பதில் கூற முடியாதபடி அவளது நாக்கு அவளுக்கு எதிராகச் சதிராடியது...

மனைவி தலைகுனிந்து இருந்தது அவனுக்குச் சௌகரியமாகப் போய்விட்டது போலும்... அவன் அவளை அணு அணுவாய் ரசிக்க ஆரம்பித்தான்... எலுமிச்சை நிற ஷிபான் புடவை அவளது வெண்ணிறத்திற்கு அத்தனை பாந்தமாய்ப் பொருந்தியது... நீண்ட முடியை தளர பின்னி சடை போட்டிருந்தாள்... உச்சி வகிட்டில் குங்குமம், இரு புருவங்களுக்கு இடையில் வட்ட வடிவிலான அரக்கு நிற பொட்டு, இதழ்கள் மீது உதட்டுச் சாயம் பூசாது அதன் மீது மினுமினுப்பாய் ஏதோ பூசியிருந்தாள்...

பளபளப்பாய் மின்னிய இதழ்கள் அதனுள் புதைந்து போகச் சொல்லி அவனுக்குத் தாபமாய் அழைப்பு விடுத்தது... தலையைக் குலுக்கி கொண்டவனின் பார்வை அவளது மேல் உதட்டின் வலதுபக்கம் இருந்த மச்சத்தில் நிலைத்து நின்றது... இத்தனை நாளில் அவன் ஒரு தடவை கூட அதைக் கவனித்ததில்லை, ரசித்ததில்லை... இன்று தான் அவன் அதை முதன்முதலாகக் கவனித்துப் பார்க்கிறான்... மச்சத்தைக் கண்டவனுள் பலவித ரசாயன மாற்றங்கள்...

ரோஜா பூவிதழின் மீதிருக்கும் ஒற்றைப் பனித்துளியை ஞாபகப்படுத்தியது அந்த மச்சம்... பூவின் தேனமுதினை

அள்ளி அள்ளி பருகிய ஞாபகம் அவனுள் தித்திப்பாய்... கள்வனின் மனதில் கள்ளத்தனம் புகுந்தது கொண்டதில் அவனது கிறக்கமும், தாபமும் அதிகரித்துக் கொண்டே போனது...

வெகுநேரமாகியும் அவனிடம் இருந்து சத்தம் வராததால் மெல்ல தலையை நிமிர்ந்து பார்த்தவள் அவனது பார்வையைக் கண்டு திகைத்து போய் அவனை விழி விரிய பார்த்திருந்தாள்... அவனது இந்தப் பார்வை அவளது இதயத்தை ஊடுருவி சென்று அவளுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதில் அவளது மேனி அதிர்ந்தது...

மனைவி தன்னைக் கண்டு கொண்டதை கண்டு சிம்மவிஷ்ணு சிறு வெட்கத்துடன் விழிகள் அலைபாயத் தலையைக் கோதி கொண்டு தனக்குள் சிரித்துக் கொண்டான்... விடலை பையன் போன்று இது என்ன உணர்வு? என்று தன்னைத் தானே கடிந்து கொண்டவன் அடக்கப்பட்ட புன்னகையுடன் தனது பின்னந்தலையில் தட்டி கொண்டான்...

அவள் தான் முதலில் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "என்ன விசயமா என்னைப் பார்க்க வந்தீங்க மிஸ்டர். சிம்மவிஷ்ணு...?" என்று கேட்க... அவளது அழைப்பில் வியப்பாய் அவளைப் பார்த்தவன்,

"நமக்குள் பேச பெருசா என்ன விசயம் இருக்கப் போகிறது மிஸஸ். நிஷிலா........." என்று அவன் இழுத்தபடி கேள்வியாய் ஒற்றைப் புருவத்தைத் தூக்கியது அத்தனை அழகாய் இருந்தது...

"மிஸஸ். நிஷிலா சிம்மவிஷ்ணு..." என்றாள் அவள் கம்பீரமாக...

அவளது பெயரோடு தனது பெயரும் இணைந்து ஒலித்ததைக் கேட்டு ரசித்தபடி அவன் அவளைப் பார்த்திருந்தான்... 'உனக்கு ரொம்பவே முத்திருச்சு' என்று அவனது மனசாட்சி அவனைக் கிண்டலடித்தது...

"ஓ... அது தான் உங்க வீட்டுக்காரர் பெயரா...? என்ன பண்றான் அவன்...?"

அவனது கேள்வியில் எரிச்சலுடன் அவனைப் பார்த்தவள், "ம், என் முன்னாடி உட்கார்ந்துட்டு ரம்பம் போட்டுட்டு இருக்கார்..." என்று கோபத்துடன் பொரிந்தாள்...

"சரண்டர்..." அவள் தன்னைக் கணவன் என்று ஒத்து கொண்டதை கேட்டு அவனுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... அந்தச் சந்தோசத்தில் அவன் தனது இரு கைகளையும் தூக்கி அவளிடத்தில் மொத்தமாய்ச் சரணடைந்திருந்தான்...

"ரொம்பச் சந்தோசம்... நான் உன் கணவன் என்பது உன் ஞாபகத்தில் இருந்தால் சரி..." தன்னுடைய உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு கூறியவன்,

"இனி பிசினஸ் பேசலாமா...?" என்றபடி நாற்காலியில் நன்றாகச் சாய்ந்தமர்ந்து கொண்டு அவளைப் பார்த்தவனின் பார்வையில் அத்தனை தீவிரம் வந்திருந்தது...

சற்று முன் அவளிடம் கனிவாய் பேசியவன் இவனில்லை... இவன் பழைய சிம்மவிஷ்ணுவை ஞாபகப்படுத்தினான்... அடிவயிற்றில் ஆயிரக்கணக்கான பயப்பட்டாம்பூச்சிகள் படபடக்க அவள் அவனையே இமைக்காது பார்த்திருந்தாள்... முதன்முறையாக அவன் அவளது மனவுணர்வை அவளது விழி வழியே படித்தான்... அவளது பயத்தில் விழி மூடி தனது உணர்வுகளை அடக்கி கொண்டவன் மீண்டும் விழி திறந்த போது அதில் கனிவும், புன்னகையும் நிரம்பி வழிந்தது...

"ரிலாக்ஸ் பேபி..." அவனையும் அறியாது அவனது குரல் குழைந்து ஒலித்தது...

"ம், ம்..." அவனது குழைவான வார்த்தையில் அவள் சற்று தெளிந்தாள்...

"சொல்லுங்க..." என்றவள் அவனைப் போன்று நிமிர்வாக அமர்ந்தாள்... அவளை மெச்சியபடி பார்த்தவன்,

"சொல்வதற்கு ஒன்றுமில்லை... இந்தப் பத்து வருடங்களாக நான் கொடுத்த கடன் வட்டி, குட்டியோடு சேர்த்து உங்க நிறுவனத்தின் மதிப்பை தாண்டி சென்றுவிட்டது... அதனால்..." என்று நிறுத்தியவன் அவளைத் தயக்கத்துடன் பார்த்தான்...

இதுநாள் வரை அவன் தன் மனதில் நினைத்ததைச் செயலாற்ற இது போன்று ஒரு போதும் தயங்கியது இல்லை... ஆனால் இன்று தனது மனதில் இருப்பதைச் சொல்ல அவன் மிகவும் தயங்கினான்... தனது வார்த்தைகள் அவளைக் காயப்படுத்தி விடுமோ? என்று அவன் மிகவும் பயந்தான்...

அவள் கையமர்த்தி அவனைத் தடுத்துவிட்டு நாற்காலியில் இருந்து எழுந்து சென்று அங்கிருந்த அலமாரியை திறந்து எதையோ தேடினாள்... அவளது பின்னழகு அவனது காதல் மனதினை பித்தம் கொள்ளச் செய்ய அவன் தாங்க முடியாது நாற்காலியில் இருந்து எழுந்து அவளை நோக்கி சென்றான்... அவன் அவள் அருகில் சென்ற அதே நேரம் அவள் கையில் ஒரு கோப்பையுடன் திரும்பினாள்...

வெகு அருகாமையில் நின்றிருந்தவனைக் கண்டு திகைத்து விழித்தவள் பின் சுதாரித்துக் கொண்டு,

"என்ன...?" என்று மிடுக்காய் வினவ...

'ஜஸ்ட் மிஸ்டு...' என்று மனதிற்குள் சொல்லி கொண்டவன் வெளியில்,

"நீ எதையோ தேடின மாதிரி இருந்தது... அதான் தேடி எடுத்து கொடுக்கலாம்ன்னு..." என்றவனது வலக்கை உயர்ந்து அலமாரியை சுட்டிக்காட்டியது...

'அடேய், அவளுக்குத் தேடி எடுத்து கொடுக்கிற ஆளாடா நீ...? அவளிடம் தேடி எடுத்துக் கொள்ளும் ஆள்டா நீ...' அவனது மனசாட்சி அவனைக் கேலி செய்தது...

'ஷ், நீ கொஞ்ச நேரம் அடங்கு...' மனசாட்சியை அடக்கியவன் உயர்த்திய கையை அப்படியே பின்னுக்குக் கொண்டு சென்று பின்னங்கழுத்தை தடவியபடி அங்கிருந்து அகன்றான்...

நாற்காலியில் அமர்ந்தவனிடம் அவள் அந்தக் கோப்பை நீட்டினாள்... அவன் புரியாது அவளைப் பார்த்தான்...

"பிரிச்சு பாருங்க..." என்றவளை கண்டு அவனது விழிகள் கூர்மையடைந்தது...

"நீ வேற தனியா கணக்கு எழுதி வச்சிருக்கியா...? அது தேவையில்லை..." என்று அலட்சியத்துடன் கோப்பை மேசை மீது போட்டவன்,

"என் கணக்கு எப்போதுமே நேர்க்கணக்கு தான்..." என்றான் அவளது விழிகளை ஊடுருவியபடி...

"முதல்ல பிரிச்சு பாருங்க... அப்புறம் டயலாக் பேசுங்க..." அவள் உரிமையாய் அவனை அதட்ட... அவளது உரிமையில் அவனது முகத்தில் இருந்த கடுமை மறைந்து அதில் புன்னகை அரும்பியது...

"சரிங்க டீச்சர்..." என்று அவளைக் கிண்டலடித்தவன் பின்பு யோசனையுடன் அதை எடுத்துப் பிரித்துப் படித்தான்... சில நொடிகளில் அவனது விழிகள் அப்பட்டமாய்த் திகைப்பை வெளிப்படுத்தியது...

"பேபி... இது... எப்படி...?"

அவளது தன்னலமற்ற செயலில் பேச முடியாது திணறியவனின் விழிகள் கலங்கி போனது... 'காதல் ஒருவனைக் கைப்பிடித்தே, அவன் காரியமாவிலும் கை கொடுத்தே' என்பதற்கிணங்க அவனது மனைவி அவனுக்காக மிகப் பெரிய காரியத்தைச் சாதித்து இருந்தாள்... இத்தனைக்கும் அவர்கள் இருவரும் காதல் கொண்டு மணக்கவில்லை... அப்படியிருந்தும் அவள் இதைச் செய்திருக்கிறாள் என்றால்...? அவனது மனம் அவளது அன்பில் நெகிழ்ந்து போனது...

"இன்றிலிருந்து இந்தக் கம்பெனிக்கு சொந்தக்காரர் நீங்க தான்..."

"ஏன் இப்படிப் பண்ணினே...?"

"எங்க வீட்டாளுங்க பண்ணிய பாவத்திற்குப் பரிகாரமா..." அவன் அவளைக் கூர்ந்து நோக்க...

"நீங்க சொல்லுவீங்களே அவங்களை எல்லாம் பழிவாங்கணும்ன்னு... அதுக்காக என்னால் முடிஞ்ச உதவி நான் பண்ணியிருக்கேன்..." என்று அவள் சமாளிப்பாய் கூறினாள்... அவளுக்கு உண்மை தெரிந்த விசயத்தை அவனிடம் கூறவில்லை...

அவள் தனது பெயருக்கு தந்தை, சித்தப்பா எழுதி கொடுத்த நிறுவனத்தின் பங்குகள் அனைத்தையும் தனது கணவனது பெயருக்கு மாற்றி எழுதியிருந்தாள்... இப்போது சிம் நிறுவனத்தின் ஒட்டுமொத்த பங்குகளும் அவன் வசம்...

"அதான் ஏன்...?" அவனது குரல் கலங்கி போய் ஒலித்தது...

"நான் செஞ்ச தப்புக்கு பிராயச்சித்தம்ன்னு வச்சுக்கோங்க..."

அவளது பதிலில் அவனிடம் இருந்து நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது...

"ஆகமொத்தம் நம்மிடையே தவறுகள் மட்டுமே இருக்குன்னு நீ நினைக்கிறியா...?"

"ஆமாம்..." ஒற்றை வார்த்தையில் அவள் பதில் கூறினாள்...

"தவறை சரி செய்ய விருப்பமில்லையா...?"

"சரி பண்ண நினைச்சால் இருவருக்குமே கஷ்டம்... வேண்டாம் விட்டிருங்க..." என்றவள் எழுந்தபடி,

"எனக்கு முக்கியமான அப்பாயிண்ட்மென்ட் இருக்கு... நான் கிளம்பறேன்... இன்னையில் இருந்து நீங்க நிர்வாகத்தைப்

பார்த்துக் கொள்வதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை..."

அவள் அவனிடம் பேசி கொண்டிருக்கும் போதே அவளது அலைப்பேசி அழைத்தது... எடுத்துக் காதில் வைத்தவள்,

"இதோ கிளம்பிட்டேன் டாக்டர்... அங்கே தான் வந்துக்கிட்டு இருக்கேன்..." என்றவள் அவனது பதிலை எதிர்பாராது அலைப்பேசியில் பேசியபடி அறையை விட்டு வெளியேறினாள்...

திக்பிரம்மை பிடித்து அமர்ந்திருந்தவன் பின்பு சுதாரித்துக் கொண்டு அவளின் பின்னே சென்றான்... அதற்குள் அவள் வெளியில் வந்து அலுவலகப் படிகளைக் கடந்து காரை நோக்கி நடந்தாள்...

"நிலா..."

சிம்மவிஷ்ணுவின் குரலில் நிஷிலா திரும்பி பார்த்தாள்... அலுவலகப் படிகளில் ஸ்டைலாகக் கீழிறங்கியவனின் வேகநடையின் வசீகரம் அவளை வெகுவாய்க் கவர்ந்தது... இதுவரை அவள் அவனைக் கவனித்துப் பார்த்தது இல்லை... முதன்முறையாக அவள் அவனைக் கவனித்துப் பார்த்தாள்...

இடது கையில் கோட்டை தொங்க விட்டுக் கொண்டு ஸ்டைலாக வந்தவனின் தலைமுடி அவனது வேகநடையில் அவனைப் போன்றே அடங்காது சிலும்பி கொண்டிருந்தது... அறுவை சிகிச்சை செய்ததன் அறிகுறி எதுவும் அவனிடத்தில் இல்லை... அவனிடத்தில் பழைய கம்பீரம் திரும்பியிருந்தது... அன்னையின் அக்கறையான கவனிப்பு அவனை ஆணழகனாக மாற்றியிருந்தது...

"ஹலோ..." அவளது முகத்துக்கு நேரே வலக்கையை ஆட்டியவனின் குரலில் தன்னுணர்வு அடைந்தவள்,

"எதுக்குக் கூப்பிட்டீங்க...?"

"நீ எதுக்கு வச்ச கண்வாங்காம என்னைப் பார்த்த...?"

"ம்ப்ச், உங்க விளையாட்டுக்கு நான் ஆளில்லை..." என்றவள் கார் கதவை திறந்து கொண்டு ஏற போக... கதவை பிடித்துத் தடுத்தவன்,

"உன் உடம்புக்கு என்ன நிலா...?"

அவன் கேட்டதும் அவளது முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது... என்னவென்று அவள் பதில் கூறுவாள்...

"எதுக்கு இந்தக் கேள்வி...?"

"டாக்டர், அப்பாயிண்ட்மென்ட்ன்னு பேசிட்டு இருந்தியே..." என்றவனை இரு கைகளைக் கட்டி கொண்டு முறைத்து பார்த்தாள் அவள்...

"ஹலோ மிஸ்டர்... நானே ஒரு டாக்டர் தான்..."

"ஆமாம்ல..." அவளது பதிலில் அவன் அசடு வழிந்தான்...

"சரி நீ போ..." என்றபடி கார் கதவை நன்கு விரிய திறந்துவிட்டவன்,

"நான் அம்முவை பார்க்க வீட்டுக்கு போகிறேன்..." என்க... அதில் திடுக்கிட்டு நின்றவள்,

"ஓ... அப்போ நானும் வீட்டுக்கு வர்றேன்..." என்றாள் அவசரமாக...

"நீ உன் வேலையைப் பாரு பேபி..."

"இல்லை, இல்லை... நான் வர்றேன்..." என்று பிடிவாதம் பிடித்தவளை கண்டு,

"என்னை யாராவது ஏதாவது சொல்லிருவாங்களோன்னு பயப்படுறியா நிலா...?" குரல் நெகிழ கேட்டான் அவன்...

அவனது வார்த்தையில் திகைத்து போய் நிமிர்ந்தவள் 'ஆம்' என்பது போல் தலையசைத்தாள்...

"உலகம் முழுவதும் சுற்றி திறமையாய் தொழில் பண்ணும் உன் புருசனுக்கு உன் வீட்டாளுங்களைச் சமாளிக்கத்

தெரியாதா என்ன...?"

வசீகரமாக ஒற்றைப் புருவத்தைத் தூக்கியபடி வினவியவனைக் கண்டு அவள் தனது பார்வையைத் திருப்பிக் கொண்டாள்... அவன் செய்யும் ஒவ்வொரு செயலும் அவளை நிலைக்குலைய செய்கிறதே...

"நானும் வர்றேன்..." என்று பிடிவாதம் பிடித்தவளை ஒரு பார்வை பார்த்தவன்,

"சரி வா..." என்று அவளைத் தன்னோடு அழைத்தான்...

"நீங்க உங்க காரில் போங்க... நான் என் காரில் வர்றேன்..." அவளது வார்த்தையில் அவனுக்குச் சட்டென்று கோபம் வந்தது...

"ஏன் மகாராணி என் காரில் வர மாட்டீங்களோ...?"

"நான் மகாராணி இல்லை... அதனால் தான் உங்க கூட வரலை..." என்று அழுத்தம்திருத்தமாய்க் கூறியவளை கண்டு அவனது முகம் சிறுத்துப் போய்விட்டது...

அன்று அவன் கூறிய வார்த்தைகளை அவள் மறக்கவில்லை என்பது அவனுக்கு நன்கு புரிந்து போனது... அவன் நினைத்தது உண்மை தான்... அன்று அவன் அவளை வேசி என்று இகழ்ந்து பேசி காரின் முன்பக்கமாய் ஏறவிடாது செய்தது இன்றும் அவளது மனதில் ரணமாய் இருந்தது... அதனால் அவளையும் அறியாது வார்த்தைகள் வெளிவந்து விட்டது... அதே சமயம் தனது வார்த்தையால் முகம் சுருங்க நின்றிருக்கும் அவனைக் கண்டு அவளது மனம் வருத்தமும் அடைந்தது...

இத்தனை நாள் அவன் பட்ட வேதனை போதாதா...? இனியும் அவன் வேதனை அனுபவிக்க வேண்டுமா...? ம்ஹூம் கூடவே கூடாது என்று முடிவு பண்ணியவளாய் அவள் தனது கார் கதவை மூடிவிட்டு அவனிடம்,

"வாங்க போகலாம்..." என்க...

இப்போது அவனது முகத்தில் புன்னகை வந்தமர்ந்தது... சந்தோசமாய் அவளுடன் இணைந்து நடந்தான்... அவனின் கார் அருகில் வந்ததும் பழக்கதோசத்தில் பின்கதவை திறக்க போனவள் பின் நிதானித்து முன் கதவை திறக்கும் முன் அவன் அந்தக் கதவை திறந்து வைத்துக் கொண்டு அவளுக்காகக் காத்திருந்தான்... ஒற்றை வார்த்தையில் அவளை வேசியாக மாற்றியவன் இப்போது ஒற்றைச் செய்கையில் அவளை மகாராணி ஆக்கினான்...

அவள் ஏறியமர்ந்ததும் அவன் மறுபக்கம் வந்தமர்ந்து காரை கிளப்பினான்... கார் போக்குவரத்துச் சாலையில் கலக்கும் வரை அமைதியாக இருந்தவள் பின்பு மெல்லமாய் அவனிடம்,

"எப்படி இருக்கீங்க...?" என்று கேட்க...

"ரொம்பச் சீக்கிரம் கேட்டுட்ட..." என்று அவளைத் திரும்பி பார்த்து கேலி செய்து சிரித்தவன்,

"நீயில்லாம நான் நல்லாவே இல்லை..." என்று பட்டென்று தனது மனதினை போட்டு உடைத்தான்...

அதில் அவள் திடுக்கிட்டு போய் அவனைத் திரும்பி பார்க்க... அவனும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்...

"அந்த மாதிரி ஒரு சூழ்நிலையில் என்னை விட்டுட்டு போக உனக்கு எப்படி மனசு வந்தது...? இதை நான் உன் கிட்ட இருந்து கொஞ்சமும் எதிர்பார்க்கலை பேபி... நான் கெட்டவன் தான்... ஆனா நீ ரொம்ப ரொம்ப நல்லவள் இல்லையா... நான் கண் முழிச்சதும் உன்னைத் தான் தேடினேன்... ம்ப்ச், நீ அங்கே இல்லை... அதுக்குப் பிறகும் நீ வரவே இல்லை... உன்னைத் தேடி தேடி என் மனம் ரணமானது தான் மிச்சம்..." என்றவனது குரலில் அப்படியொரு வேதனை இருந்தது...

அவள் ஒன்றும் பேசாது கைவிரல்களை ஆராய்ந்து கொண்டிருந்தாள்... அவளை ஒரு பார்வை பார்த்தவன்

மேலே எதுவும் பேசவில்லை... தனக்காகப் பார்த்து பார்த்து செய்யும் மனைவி எதற்காகத் தன்னைப் பிரிந்து வந்தாள் என்று அவனுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை...

சில நிமிட பயணத்திற்குப் பின் அவளது வீட்டின் முன் அவனது கார் வந்து நின்றது... முதலில் இறங்கிய நிஷிலா கணவனுக்காகக் காத்திருந்தாள்... சிம்மவிஷ்ணு வீட்டினை விழிகளால் உள்வாங்கியபடி இறங்கினான்... இதற்கு முன் அவன் இரண்டு முறை இங்கு வந்திருக்கிறான் தான்... ஆனால் அந்த இரண்டு முறையும் அவன் இதை நிதானமாய்க் கவனிக்கும் மனநிலையில் இல்லை... இன்று அவன் நிர்மலமான மனநிலையில் அதைக் கவனித்துப் பார்த்தான்...

வீட்டின் முன்புறம் இருந்த நீச்சல் குளத்தை அவன் ஆசையோடு பார்த்தான்... அவனது பத்திப்பா கரையில் நின்றிருக்க அவன் நீரில் நீச்சலடித்துக் குதூகலித்த கடந்த காலம் அவன் கண்முன் தோன்றி மறைந்தது... நேரே அங்குச் சென்று நின்றவன் அதை வெறித்தபடி அப்படியே நின்றுவிட்டான்... இந்தத் தோட்டத்தில் தானே அவனும் பத்திப்பாவும் ஓடி பிடித்து விளையாடுவார்கள்... பழைய நினைவுகளை நினைக்க நினைக்க அவனது நெஞ்சம் இனித்ததோடு மட்டுமல்லாது பாரமாய்க் கனக்கவும் செய்தது...

"போகலாமா...?" அவனது வேதனை உணர்ந்து அவனது கையைத் தொட்டு அழைத்தாள் அவனது மனைவி... அவன் பெருமூச்சு விட்டபடி,

"ம்..." என்றவன் அவளுடன் இணைந்து நடந்தான்...

அன்று சனிக்கிழமை காலைவேளை என்பதால் எல்லோரும் வீட்டில் இருந்தனர்... பவித்ரனும், துளசியும் மட்டும் அலுவலகத்திற்குக் கிளம்பி கொண்டிருந்தவர்கள் சிம்மவிஷ்ணுவை கண்டதும் இன்ப அதிர்ச்சியில் திகைத்து நின்றுவிட்டனர்...

"விஷ்ணு வா, வா..." என்று ஆர்ப்பாட்டமாய் வரவேற்றான் பவித்ரன்...

"வாங்க..." என்று துளசி இன்முகத்துடன் வரவேற்றாள்...

அதற்குள் பெரியவர்கள் அனைவரும் அங்குக் கூடிவிட்டனர்... பத்ரிநாத் அன்போடு அவனை வரவேற்றார் என்றால் செல்வரத்தினம், மணிபாரதி மகளுக்காக அவனைச் சிரித்த முகத்துடன் வரவேற்றனர்... நிஷிலாவே அவனை ஏற்றுக் கொண்ட பின்னர் மற்றவர்கள் முகம் திருப்புவதில் அர்த்தம் இல்லையே... இளவரசி மட்டும் அவனை வேண்டாவெறுப்பாய் கணவனுக்காக வரவேற்றார்... அதிலும் சிம்மவிஷ்ணு அவர்களது வீட்டு வரவேற்பறையில் அவனது மனைவியின் அருகில் அமர்ந்திருப்பது கண்டு அவருக்கு ஆத்திரமாக வந்தது... தனது பலவீனம் தெரிந்த எதிரி தன்முன் தைரியமாக உட்கார்ந்திருப்பது அவருள் பகையை மூட்டிவிட்டது...

அதை உணர்ந்து கொண்ட சிம்மவிஷ்ணு விசம சிரிப்புடன் மனைவியின் அருகில் இன்னமும் நெருங்கி அமர்ந்தான்... அவளோ அவனைக் கலக்கத்துடன் பார்த்து கொண்டிருந்தாள்... தன்னைக் கொன்றவர்கள் வீட்டில் அவர்கள் முன் அமர்ந்திருப்பது என்பது எத்தகைய வலி, வேதனை என்பது அவளுக்குத் தெரியுமே... அதுவும் அவனது வேதனையை அவளும் உணர்ந்திருக்கிறாளே...

அவளது கலக்கத்தைக் கண்டு அவன் கேள்வியாய் புருவத்தைத் தூக்கினான்... அவள் ஒன்றுமில்லை என்று தலையசைத்துவிட்டு திரும்பி கொண்டாள்... அவன் தனக்குள் சிரித்துக் கொண்டே அவள் புறம் குனிந்து,

"நான் அம்முவை பார்க்கணும்..." என்க...

திடுமெனக் காதோரம் ஒலித்த அவனது குரலில் திடுக்கிட்டு திரும்பியவள், "ஹான், வாங்க..." என்றபடி எழ...

"வெய்ட் அ மினிட்..." என்றவன் வாயிலை நோக்கி விரைந்தான்...

அப்போது மகள் அருகில் வந்த அருந்ததி, "மாப்பிள்ளையே உன்னைத் தேடி வந்துட்டார்... இனியும் முரண்டு பிடிக்காம சந்தோசமா வாழ்கிற வழியைப் பார்..." என்று அறிவுரை கூறினார்... நிஷிலா அமைதியாக நின்றிருந்தாள்...

வெளியில் சென்ற சிம்மவிஷ்ணு கை நிறையப் பைகளோடு திரும்பி வந்தான்... அவனது முகத்தில் அத்தனை சந்தோசம்...

"வா பேபி..." என்று அத்தனை பேர் முன்னிலையில் மனைவியை அழைத்துக் கொண்டு மகளைத் தேடி சென்றான்...

நிஷிலாவின் அறையில் அமர்ந்து மூன்று வாண்டுகளும் காகிதத்தில் ஏதோ வரைந்து கொண்டிருந்தனர்... சிம்மவிஷ்ணுவின் விழிகள் மகளை நேரில் கண்டதும் கலங்கியது... அவனது கால்கள் நிற்க முடியாது துவண்டது... கதவு நிலையில் சாய்ந்து தன்னை மீட்டு கொண்டவன் அறையினுள் நுழைந்து மகளைப் பார்த்து,

"அம்மு..." தனது உள்ளத்து ஒட்டுமொத்த அன்பையும் ஒற்றை வார்த்தையில் தேக்கி வைத்து அழைக்க...

யாரோ தன்னை அழைப்பதை கண்டு திரும்பி பார்த்த ஆதிரை அங்கு எதிர்பாராதவிதமாகத் தந்தையைக் கண்டதும்,

"அப்பா..." என்று கூவலுடன் ஓடி வந்து அவனைக் கட்டி கொள்ள... அவனும் தனது கைகளில் இருந்த பைகளைக் கீழே போட்டுவிட்டு மகளின் உயரத்திற்குக் குனிந்து மண்டியிட்டு அமர்ந்து,

"அம்மு..." என்று அவளை இறுக அணைத்துக் கொண்டான்...

மகளின் பஞ்சு போன்ற பிஞ்சு ஸ்பரிசத்தை உணர்ந்தவனின் உணர்வுகளை வார்த்தைகளில் வடிக்க முடியாது... அவனது அணைப்பு இறுகி கொண்டே போனது... அவனது விழிகளில் கசிந்த நீர் நிற்காது

கன்னத்தில் வழிந்தோடியது... இந்த மகளுக்காக அவன் பட்ட வேதனைகள், துன்பங்கள் தான் எத்தனை...

"ஆர்யா, சூர்யா ஓடி வாங்க... ஆதியோட அப்பா வந்தாச்சு..." என்று ஆதிரை மகிழ்ச்சியோடு சின்னவர்களை அழைத்தாள்...

மகளின் பேச்சில் தன்னைச் சுதாரித்துக் கொண்ட சிம்மவிஷ்ணு தனது விழிகளைத் துடைத்துக் கொண்டு பவித்ரனின் மகன்களைப் பார்த்துச் சிரித்தான்...

"சித்தப்பா..." என்று இரண்டு வாண்டும் அவனை இருபுறம் வந்து கட்டி கொண்டது...

முன்புறம் மகள் அவனது கழுத்தை கட்டியிருக்க... தோளின் இருபுறமும் ஆர்யா, சூர்யா அணைத்திருக்க... இப்படிக் குழந்தைகளோடு இருப்பதே அவனுக்கு அத்தனை சுகமாக இருந்தது... முன்பிருந்த சிம்மவிஷ்ணுவாக இருந்தால் அவர்கள் மூவரையும் ஒருங்கே தூக்கி கொண்டு எழுந்துவிடுவான்... இப்போது அவனால் அதைச் செய்ய முடியவில்லை... ஏனெனில் மூளைக்கட்டி அறுவை சிகிச்சை செய்திருப்பதால் அவன் பாரம் தூக்க கூடாது... அவன் மனைவியைப் பரிதாபமாகப் பார்த்தான்...

அவனின் நிலையை உணர்ந்தவளாய் நிஷிலா குழந்தைகளிடம், "இப்படியே அப்பா முட்டி போட்டு உட்கார்ந்திருந்தால் கால் வலிக்கும்... வாங்க, கட்டிலில் வந்து உட்காருங்க..." என்று அழைக்க...

"அச்சோ கால் வலிக்குதா..." என்றபடி மூன்று வாண்டுகளும் விலகியது...

சிம்மவிஷ்ணு மூவரையும் அணைத்தார் போன்று அழைத்துச் சென்று கட்டிலில் அமர வைத்துவிட்டு வந்து தான் கொண்டு வந்திருந்த பைகளை எடுத்துக் கொண்டு மீண்டும் அவர்களிடம் சென்றான்... அவன் வாங்கி வந்திருந்த விளையாட்டுச் சாமான்கள், சாக்லேட்டுகள் எல்லாவற்றையும் கண்டதும் சின்னவர்களுக்கு மிகுந்த

கொண்டாட்டமாகி போனது... அவனது கன்னத்தில் முத்தமிட்டு நன்றியை தெரிவித்துக் கொண்டனர் மூவரும்... அப்போது அங்கு வந்த பவித்ரனிடம் அவனது மகன்கள் விளையாட்டுப் பொருள்களைக் காட்டி,

"சித்தப்பா வாங்கிட்டு வந்தாங்க..." என்று குதூகலிக்க...

"டேய், இது எல்லாம் அநியாயம்... விஷ்ணு என்னை விட மூத்தவன்... அவன் உங்களுக்குப் பெரியப்பா முறை வரணும்..."

"அப்பா..." என்று கத்தியபடி சின்னவர்கள் இருவரும் தகப்பனை முறைத்தனர்...

ஆதிரை தகப்பனின் கழுத்தை பின்னாலிருந்து கட்டி கொண்டு அவனது முதுகில் ஊஞ்சாடியபடி இதைப் பார்த்து கொண்டிருந்தாள்... மகளது அருகாமையில் சிம்மவிஷ்ணுவின் முகம் பிரகாசமாக ஒளிர்ந்தது... நிஷிலாவும் புன்சிரிப்புடன் சின்னவர்களை வேடிக்கை பார்த்தாள்... ஆர்யா, சூர்யா எப்போதுமே இப்படித்தான் தந்தையை அதட்டுவர்...

"நிஷா சித்தி எங்களுக்குச் சித்தி தானே...?"

"ஆமாம்டா ராசா..."

"அப்போ சித்தியோட ஹஸ்பெண்ட் சித்தப்பா தானே... அவங்க எப்படிப் பெரியப்பா ஆக முடியும்...?" மகன்கள் கேட்ட அதிமுக்கியமான கேள்வியில் பவித்ரன் அசந்து நிற்க... நிஷிலா நமட்டு சிரிப்புடன் அத்தை மகனை பார்த்தாள்...

சிம்மவிஷ்ணு சின்னவர்கள் செய்த கலாட்டாவில் வாய்விட்டுச் சிரித்தான்...

"மூச், இதுக்கு மேல் நான் பேசினேன்னா என்னை என்னன்னு கேளுங்கடா..." என்று பவித்ரன் வாயில் கை வைத்து பணிவாய் சைகை செய்தான்...

"உன் மகன்கள் எப்படிடா இத்தனை புத்திசாலியாய்..." சிம்மவிஷ்ணு போலியாய் வியக்க...

"ஏன் சொல்ல மாட்ட...? உன்னை இளையவனாக்கிய சந்தோசம்..." என்று பவித்ரன் போலி கோபம் கொள்ள...

"நான் எப்போதுமே யூத் தான்டா..." என்று கூறிய சிம்மவிஷ்ணு அதற்கும் அடக்க மாட்டாது சிரித்தான்...

"ஆர்யா, சூர்யா அவங்க அம்மா மாதிரி போல..." மீண்டும் சிம்மவிஷ்ணு பவித்ரனை கிண்டலடிக்க...

"வேணாம், விட்டுரு... வலிக்குது..." வடிவேல் பாணியில் பவித்ரன் அழுது காட்டினான்... பின்பு,

"ஆமாம் விஷ்ணு, இவனுங்க ரெண்டு பேரும் அவங்க அம்மா மாதிரி புத்திசாலிங்க..." என்று அவன் மனைவியை நினைத்துப் பெருமிதப்பட்டுக் கொண்டான்...

சிம்மவிஷ்ணுவின் விழிகள் அவனையும் அறியாது அவனது மனைவியைப் பார்த்தது... பின்பு மகளின் கன்னத்தை வருடி கொடுத்தவாறு,

"அம்மு யாரை மாதிரி...?" என்று கேட்டான்...

"உங்களை மாதிரி..." அம்மாவும், மகளும் ஒருமித்த குரலில் கூறினர்... அதைக் கேட்டு அவனது முகத்தில் அத்தனை கர்வம் வந்தது... ஆணாய்ப் பிறப்பெடுத்தால் மட்டுமே அந்தக் கர்வத்தினை உணர்ந்து கொள்ள முடியும்...

சின்னவர்கள் சிறிது நேரம் சிம்மவிஷ்ணுவோடு விளையாண்டார்கள்... அவர்களால் ஒரு இடத்தில் அமைதியாக உட்கார்ந்து விளையாட முடியவில்லை... அதனால் தோட்டத்திற்கு விளையாட சென்றனர்... அவர்களின் பின்னோடு செல்ல முயன்ற சிம்மவிஷ்ணுவை தடுத்து நிறுத்திய நிஷிலா,

"எப்போ கிளம்பறீங்க...?" என்று கேட்க...

அவன் திகைப்பாய் அவளைப் பார்த்தான்... அவ்வளவு நேரமிருந்த இணக்கநிலை அவனிடம் இருந்து காணாமல் போனது...

"அப்பனையும், மகளையும் பிரிப்பதில் அத்தனை சந்தோசமோ...?" அவனது வார்த்தைகள் கடுமையுடன் வந்தது...

"ஏன் இப்படியெல்லாம் பேசுறீங்க...?" என்றவளது விழிகளில் கண்ணீர் நிறைந்தது...

அவளது கண்ணீரை கண்டு சற்று நிதானித்தவன், "நான் என் மகளோடு இன்னும் கொஞ்ச நேரம் இருக்கப் போகிறேன்..." என்றான் உறுதியான குரலில்...

"அம்முவை உங்க கூடக் கூட்டிட்டு போங்க..."

அப்போது தான் அவளது வார்த்தையில் இருந்த பேதத்தை அவன் உணர்ந்தான்...

"கூட்டிட்டு போய்...?" அவன் யோசனையாய் அவளைப் பார்த்தான்...

"உங்க கூடவே வச்சுக்கோங்க..." என்றாள் அவள் தனது மனதினை திடப்படுத்திக் கொண்டு...

"நீ இல்லாமலா...?"

"ம், ம்..." என்று வேகமாகத் தலையாட்டியவள்,

"இங்கே இருப்பது உங்களுக்கு எத்தனை வேதனையைத் தரும்ன்னு எனக்குத் தெரியும்..."

அவள் இப்படிக் கூறியதும் தான் அவனுக்கு அவள் சொல்ல வருவது புரிந்தது... அவள் அருகே நெருங்கி வந்து நின்றவன் அவளது விழிகளுக்குள் ஊடுருவியபடி,

"உங்க ரெண்டு பேர் பாசத்தின் முன்னாடி என்னோட பகை, பழி எல்லாம் காணாமல் போய்விட்டது பேபி... எனக்கு நீங்க

ரெண்டு பேர் மட்டும் தான் முக்கியம்... என் வாழ்நாள் முழுமையும் நீங்க ரெண்டு பேரும் வேண்டும்..."

அவன் தனது மனதில் இருப்பதை அவளிடம் தெளிவாக எடுத்துரைத்தான்... அவள் மனம் வேதனை கொள்ள அவனை வலியோடு ஏறிட்டாள்...

இதற்காகத் தானே அவள் அவனை விட்டு பிரிந்து வந்தது... அவன் அவளிடத்தில் தன்னியல்பு தொலைந்து போவதும், அவள் அவனிடத்தில் தன்னியல்பு தொலைந்து போவதும் சிறந்த மணவாழ்க்கைக்கு வழி வகுக்காது என்பதை உணர்ந்தவளுக்கு அது தான் காதல் என்பது ஏனோ புரியவில்லை...!

"உச்சி வகிட்டுக் குங்குமம் என்னை
உச்சி முகரச் சொல்லுதடி கிளியே,
அஞ்சனம் தீட்டிய மை விழி என்னை
அஞ்சாது நோக்க சொல்லுதடி கிளியே,
கூர்நாசி என்னைக் கண்டதுண்டமாய்
நூறு கூறாக்குதடி கிளியே,
செவ்வரளி இதழ்கள் என்
சிந்தையைக் கொல்லுதடி கிளியே,
சங்கு கழுத்து என்னை மூச்சடக்கி
சாகச் சொல்லுதடி கிளியே,
மலர் பந்துகள் என்னை நோக்கி
மாறன் அம்பை மாறி மாறி வீசுதடி கிளியே,
பொய்யோ எனும் இடை என்னை மெய்யாய்
தடை தாண்டிட சொல்லுதடி கிளியே,
பூப்பாதங்கள் என்னை மண்டியிட செய்து
உன்னில் சரணடைய சொல்லுதடி கிளியே,
என்னை உன்னில் அடக்கி கொள்ளடி, இல்லை
ஏங்கி ஏங்கி மூர்ச்சையாகி போவேன் நானடி கிளியே!!!"

கொள்ளும்...!!!

"என் வாழ்க்கையை நான் சிக்கலாக்கி கொள்ள விரும்பலை... என் வாழ்நாள் முழுமையும் உங்க ரெண்டு பேர் கூடச் சந்தோசமா வாழ ஆசைப்படறேன்... இனியொரு முறை தவறு செய்துட்டு என் வாழ்க்கையை இழக்க நான் தயாரா இல்லை... பழிவாங்க தான் நான் இதை எல்லாம் செய்தேன்... இல்லைன்னு மறுக்கலை... ஆனா இப்போ உன்னோட அன்பு, அம்முவோட பாசத்துக்கு முன்னாடி எனக்கு எதுவுமே பெருசா தெரியலை..."

பத்து வருட சிறை வாழ்வு சிம்மவிஷ்ணுவின் மனதை செம்மைப்படுத்தியதோ இல்லையோ நிஷிலா காட்டிய அன்பு, அர்ப்பணிப்பு அவனை முற்றிலும் மாற்றியிருந்தது... தன்னலனிற்காக அவளையே கொடுத்த அவளுக்காக அவன் தனது குறிக்கோளையே மாற்றிக் கொண்டான்... இந்த உலகத்தில் எதுவுமே வேண்டாம்... அவள் மட்டும் போதும், அவளது அன்பு மட்டும் போதும் என்று நினைத்து ஏங்கியது அவனது காதல் மனம்...

கணவனது எண்ணம் புரிந்த நிஷிலா சிறிது நேரம் அமைதியாக இருந்தாள்... பின்பு மெல்ல,

"இது சரியா வரும்ன்னு எனக்குத் தோணலை... பழிவாங்கலில் ஆரம்பித்தது தான் நம் உறவு... இப்போது அதன் காரணம் மாறி இருப்பதாக நீங்க சொல்லலாம்... ஆனா அதே காரணம் அப்படியே தான் இன்னமும் இருக்கு... அதை மாத்த முயற்சிக்காதீங்க... நமக்கு இடையில் அன்பு, காதல் இதுக்கு எல்லாம் சாத்தியம் இல்லை..."

அவளது பேச்சு கேட்டு அவனுக்குக் கோபம் வந்த அதே சமயம் அவள் மீது இரக்கமும் சேர்ந்து எழுந்தது... அவள் இப்படிப் பேசுவதற்கு அவனும் ஒரு காரணமல்லவா... ஆனால் கடந்த மூன்று மாத வாழ்க்கையை அவள் மறந்தது போல் பேசுவது கண்டு அவனுக்கு அப்படியொரு கோபம் வந்தது...

"ஓஹோ, அப்போ உன் மனசில் எதுவுமே இல்லாம தான் என் கூடப் படு..." அதற்கு மேலே அசிங்கமாகப் பேச போனவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவளைத் தீயாய் உறுத்து விழித்தான்... அதில் அவள் சற்று பயந்து போய்ப் பின்வாங்கினாள்...

"ஏன்டி என்னைப் போட்டு இப்படி வதைக்கிற...? அன்னைக்கு ஏதோ கோபத்தில் ஒரு வார்த்தை தெரியாம சொல்லிட்டேன்... ஆனா அதையே சொல்லி சொல்லி ஏன்டி என்னை உயிரோட கொல்ற... நான் உன்னோட வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தம் இல்லாம இருக்கலாம்... ஆனா நீ என்னோட வாழ்ந்த வாழ்க்கைக்கு எந்த அர்த்தமும் இல்லையா...?" என்றவனைப் பார்த்து ஏதோ சொல்ல வாய் திறந்தவளை கண்டு கையமர்த்தித் தடுத்தவன்,

"இல்லைன்னு மட்டும் பொய் சொல்லாதே... நீ என்னோட வாழ்ந்த வாழ்க்கை உண்மை... நீ என்னோட பேசி சிரிச்சது உண்மை... எல்லாமே உண்மை... ஆனா இப்போ பேசுற பாரு இது தான் பொய்..." என்று அடக்கப்பட்ட கோபத்துடன் பல்லை கடித்துக் கொண்டு பேசியவனை அவள் வெறுமையாய் பார்த்தாள்...

இந்த வாழ்க்கை அவர்களுக்கு அளிக்கப்பட்ட சாபம் என்பதை அறியாது பேசியவனைக் கண்டு அவளது இதயம் காயமடைந்து அதிலிருந்து வலிக்க வலிக்க இரத்தம் வடிந்தது... தனது வலியை பொறுத்துக் கொண்டு அவனை உணர்வில்லாது பார்த்தவள் மனதினை தேற்றிக் கொண்டு,

"அம்முக்காக நீங்க இப்படிச் சொல்றதா இருந்தால் ஒண்ணு செய்யலாம்... அம்முவை உங்க கூடக் கூட்டிட்டு போங்க..."

மகளுக்காக என்றதும் அவனுக்கு அப்படியொரு கோபம் வந்தது... அவன் அவளுக்காக நாய் மாதிரி வந்து காவல் காத்து நிற்க, அவள் என்னடா என்றால் மகளைக் காரணம் காட்டுகிறாள்...

"அம்முக்காகன்னா அவளை மட்டும் என்னோட கூட்டிட்டுப் போயிருப்பேன்... இல்லை அவளை அடிக்கடி வந்து

பார்த்துட்டு போவேன்... ஒரு தகப்பனோட கடமையை நான் சரியா செய்வேன்... ஆனா நான் சொல்றது அதில்லை... அதை எப்படி உனக்குப் புரிய வைக்கிறது..." இயலாமையுடன் அவளைப் பார்த்தவனைக் கண்டு,

"நீங்க எதுவும் புரிய வைக்க வேண்டாம்..." என்றவளை கண்டு அவனுக்குக் கோபம் வந்தது...

"ஓஹோ நான் புரிய வைக்கத் தேவையில்லை... சரிதான், நான் புரிய வைக்கலை... ஆனா என் தலையெழுத்தை மாத்த நீ முயற்சிக்காதே... என் தலையெழுத்தை நானா நினைச்சா தான் மாத்த முடியும்... நீயில்ல நம்ம பொண்ணு நினைச்சாலும் மாத்த முடியாது... நீ சொன்னா நான் கேட்டுப்பேன்னு நீ எப்படித் தப்பு கணக்கு போடுற...? நீ வேண்டாம்ன்னா நான் விட்டுட்டு போயிருவேன்னு நினைச்சியா? நீ வேணும்ன்னு தான் நான் வந்திருக்கிறேன்... என் தலையெழுத்து நீ தான்னு நான் எழுதி ரொம்ப நாளாச்சு பேபி..." அழுத்தம் திருத்தமாய்க் கூறியவனை அதை விட அழுத்தமாய்ப் பார்த்தவள் அந்த வார்த்தைகளை உதிர்த்தாள்...

"வேணும்ங்கிறதை எடுத்துக்கிறதை நான் வேண்டாம்ன்னு சொல்லலையே... அது வேறு, இது வேறு..." அவள் வேண்டுமென்றே தான் அப்படிச் சொன்னாள்...

சிம்மவிஷ்ணு முதலில் அதிர்ந்து போய் ஸ்தம்பித்து நின்றவன் பின்பு அய்யனாராய் ஆவேசமாய் மாறினான்... விட்டால் அவளை அடித்திருப்பான் போலும்... அடங்காத ஆத்திரத்துடன் அவளது தலைமுடியை கொத்தாகப் பற்றியபடி,

"என்னடி சொன்ன..? என்னைப் பார்த்தா உடல் சுகத்துக்கு அலையறவன் மாதிரியா இருக்கு...? அன்னைக்குப் பழிவாங்க தான் உன்னைத் தொட்டேன்... இல்லைங்கல்லை... அதுக்குப் பிறகு நீயா வந்தப்போ நான் உன்னைத் தொட்டேன் தான்... அதையும் இல்லைங்கல்லை... அப்போ அந்த நேரம் நான் நானா இல்லை... இதோ இப்போ கூட நீயா தான் வர்ற... ஆனா

நான் உன்னைத் தொட மாட்டேன்டி... இப்போ எனக்கு வேண்டியது உன் உடம்பு இல்லை... உன் மனசு... ஒரு ஆம்பிளையை இதை விட யாராலும் இவ்வளவு கேவலமா பேச முடியாது... அன்னைக்கு நான் வாய் வார்த்தையில் சொன்னதை நீ செயலில் நிரூபிக்க நினைக்கிற... அப்படித் தானே...?" என்று கோபமாய் உறுமியவன் அவளது தலைமுடியை மேலும் இறுக்கியபடி அவளது முகத்தைத் தன் முகத்தருகே கொண்டு வந்தவன்,

"என் கண்ணைப் பார்த்து உண்மையைச் சொல்லுடி... நான் உன் புருசன் தானே அதில் ஏதாவது மாற்றம் இருக்கா...? இல்லை என்னை விட்டுட்டு வேற யாரையாவது கல்யாணம் பண்ணும் ஐடியா இருக்கா...?"

"மாமா..." என்று திகைத்து போய் அவனைப் பார்த்தவள் பின்பு மெல்ல விசும்பினாள்... என்ன வார்த்தை சொல்லிவிட்டான் அவன் என்று...

அவளது 'மாமா' என்றழைப்பில் அவளது முடியை பிடித்திருந்த அவனது கை சற்றுத் தளர்ந்தது... ஆனால் மனதினை தளர்த்தாது அவளை உறுத்து விழித்தவன்,

"பதில் சொல்லுடி..." என்று உறும...

அவள் வாய் திறந்து பதில் சொல்லவில்லை என்றாலும் ஆமென்பது போல் தலையாட்டினாள்... அந்தப் பதிலே அவனுக்குப் போதுமானதாக இருந்தது போலும்... விறுவிறுவென அவளை இழுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தான்...

வரவேற்பறையை அடுத்திருந்த பூஜையறை முன்பு அவளை இழுத்து சென்றவன் தனது பேண்ட் பையில் இருந்து அதை எடுத்தான்... அவள் யோசனையாய் அவனைப் பார்க்கும் போதே அவன் அதை அவளது கண்முன் விரித்துக் காண்பித்தான்... அது அவன் அவளது கழுத்தில் கட்டிய தாலி... அவன் சிறை செல்லும் முன் அவள் கழுத்தில் இருந்து அவன் கழற்றிய தாலி... அவள் அதிர்ந்து போய்ப் பார்க்கும் போதே நொடி நேரம் கூடத் தாமதியாது

அவன் தாலி சங்கிலியை அவளது கழுத்தில் அணிவித்தான்...

சிம்மவிஷ்ணு நிஷிலாவை இழுத்துக் கொண்டு வரும் போதே வீட்டினர் அனைவரும் என்னவோ ஏதோ என்று அங்குத் திரண்டு விட்டனர்... அவன் அவளது கழுத்தில் தாலி சங்கிலியை அணிவித்தது கண்டு அனைவரும் மகிழ்ந்தனர்... இளவரசியைத் தவிர... செல்வரத்தினம், மணிபாரதி அவனைச் சிம்மவிஷ்ணுவாகப் பார்த்ததால் அவர்களுக்கு எந்தவித உறுத்தலும் இல்லை... ஆனால் இளவரசி அவனைச் சுடலைமுத்துவாகப் பார்ப்பதால் கோபமும், பயமும் கலந்து அவனைப் பார்த்திருந்தார்... நல்லவேளையாகச் சின்னவர்கள் தோட்டத்தில் விளையாடி கொண்டிருந்தனர்...

அங்கே விளக்கு அருகில் இருந்த குங்கும சிமிழை எடுத்து அதிலிருந்து குங்குமத்தை எடுத்து அவளது நெற்றியில் வைத்துவிட்டவன்,

"இப்போ நான் இங்கிருந்து கிளம்பறேன்... நீயும் என் கூட நம்ம வீட்டுக்கு வரணும்..." என்றபடி அவளது கையைப் பற்றிக் கொண்டு அழைத்தான்...

"விஷ்ணு இருப்பா... சாப்பிட்டுட்டுப் போகலாம்... நாங்களும் நிஷா கூட வர்றோம்..." என்று பத்ரிநாத் மகிழ்வோடு கூறினார்...

"இப்போ அதற்கு நேரமில்லை... நான் நிலா, அம்முவை கூட்டிட்டு போகிறேன்..." என்று அவன் விடாப்பிடியாய் நின்றான்...

"நான் வரலை..." தனது கையை உருவியபடி நிஷிலா கூற...

"வரலைன்னா கையைக் காலை கட்டியாவது கூட்டிட்டு போவேன்... உன்னைக் கடத்திட்டு போனவனுக்கு இதைச் செய்ய ரொம்ப நேரமாகாது..." அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் அவன் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்...

அதற்குள் சின்னவர்கள் மூவரும் உள்ளே வந்தனர்... தாயும், தந்தையும் இணைந்து இருப்பதைக் கண்டு முகம் மலர அவர்களை நோக்கி ஓடி வந்தாள் ஆதிரை... மகளைக் கண்டதும் அவனது முகமும் மலர்ந்தது...

"அம்மு நாம நம்ம வீட்டுக்கு போகலாமா...?"

"அப்போ இது யார் வீடு...?" என்று குழம்பி போனாள் சின்னவள்...

"இதுவும் நம்ம வீடு தான் அம்மு... நான் சொல்றது அப்பா இருக்கும் வீடு... என் கூட வர்றியா...?" அவன் தன்மையுடன் விளக்கி கூற...

"அப்போ அம்மா...?"

இத்தனை நாள் தந்தை இல்லாது தாயுடன் இருந்தவள் அவள்... இப்போது தந்தை வந்ததும் தாய் தன்னை விட்டு பிரிந்து சென்றுவிடுவாளோ என்று அவள் பயந்தாள்...

"அம்மா இல்லாமலா...? அம்மாவும் தான்... நீ, நான் அம்மா மூணு பேரும்..."

"மீனா பாட்டி, சுந்தர் தாத்தா...?" ஆதிரை தாத்தா பாட்டியை பற்றிக் கேட்க...

"அவங்க உனக்காகக் காத்துக்கிட்டு இருக்காங்க..." என்று அவன் சந்தோசமாய் மகளை அணைத்துக் கொண்டான்...

"அப்போ சரி... நாம போகலாம்..." என்றவள் அன்னையிடம்,

"நாம அப்பா கூடப் போகலாம்... வாங்கம்மா..." என்று கையைப் பிடித்து இழுத்தாள்...

'இதற்கு நீயே பதில் சொல்' என்பது போல் சிம்மவிஷ்ணு கைகளைக் கட்டியபடி மனைவியைப் பார்த்து வைத்தான்... ஆனாலும் அவனது விழிகள் அவளை எதிர்பார்ப்புடன் பார்த்தது...

தந்தையைக் காணாது மகள் தவித்தது நிஷிலாவிற்கு நன்கு தெரியுமே... அதனால் மகளை ஏமாற்ற மனம் வரவில்லை... அதை விடக் கணவனது எதிர்பார்ப்பு பொய்த்து போக அவள் விரும்பவில்லை...

"சரி அம்மு..." என்க... அதைக் கேட்டு சிம்மவிஷ்ணு முகம் மலர அவளைப் பார்த்தான்... அவளோ அவனது பார்வையைச் சந்திக்காது வேறுபக்கம் பார்த்தாள்...

அதன்பிறகு ஒரு நொடி கூடச் சிம்மவிஷ்ணு தாமதிக்கவில்லை... மனைவி, மகளை அழைத்துக் கொண்டு கிளம்பினான்... ஆர்யா, சூர்யாவிற்கு வருத்தமாக இருந்த போதும் ஆதிரை அவளது தந்தையுடன் செல்வது குறித்துச் சந்தோசம் கொண்டனர்...

"சன்டே சன்டே நாங்க அங்கே வந்திருவோம்..." என்று அவர்கள் ஆதிரையிடம் உறுதி கூறினர்... அவளும் சந்தோசமாய்த் தலையாட்டினாள்... தந்தையுடன் செல்லும் குஷி அவளுக்கு...

முன்னிருக்கையில் அமர்ந்தபடி மகள் வளவளத்துக் கொண்டு வர, அவளுக்குப் பதில் அளித்தபடி காரை ஓட்டி கொண்டு வந்தான் சிம்மவிஷ்ணு... பின்னால் அமர்ந்தபடி இதை எல்லாம் இறுக்கமான முகத்துடன் கவனித்தபடி வந்தாள் நிஷிலா... முன்னால் இருந்த கண்ணாடி வழியே அவளைப் பார்த்தவன் அவளிடம்,

"கொஞ்சம் சிரிக்கலாமே..." என்று நமட்டு சிரிப்புடன் கேட்க...

"ஈஈஈஈஈஈஈஈ... போதுமா...?" அவள் தனது முப்பத்திரண்டு பற்களைக் காட்டி இளித்து அவனைப் பயமுறுத்தினாள்...

அதைக் கண்டு அவன் வாய்விட்டு நகைத்தான்... சிரிக்கும் அவனை அவள் உணர்வில்லாது பார்த்தாள்...

"நீ இந்தளவுக்குச் சோகமா வர தேவையில்லை... அங்கே நான் மட்டுமில்லை... உன் அருமை மாமனார், அன்பு அத்தை எல்லோரும் இருக்காங்க... என் கிட்ட இருந்து

அவங்க உன்னைக் காப்பாத்துவாங்க... பயப்படாதே..." என்றவனைக் கண்டு உதட்டை சுளித்தவள்,

"என் கிட்ட இருந்து உங்களை யார் காப்பாத்த போறாங்க...?" என்று அவனைப் போன்று ஸ்டைலாக அவள் புருவம் உயர்த்த... அதைக் கண்டு முதலில் திகைத்தவன் பின் வாய்விட்டு சிரித்தபடி,

"அதைச் சொல்லு... இது ஒத்துக் கொள்ள வேண்டிய விசயம்..." என்று அவன் கண்சிமிட்டியபடி குறும்பாய்க் கூறினான்...

அவன் கூறியதன் அர்த்தம் புரிந்து அவளது முகம் வெட்கத்தில் சிவந்து போனது... வெளியில் வேடிக்கை பார்ப்பது போல் அவள் தலையைத் திருப்பிக் கொண்டாள்... அதைக் கண்டு அவனது புன்னகை இன்னமும் விரிந்தது...

அவனது வீட்டில் மீனாட்சி ஆரத்தி கரைத்து வைத்து அவர்களது வரவிற்காகக் காத்திருந்தார்... மனைவி, மகள் சகிதமாக நின்ற மகனை கண்டு கண்கள் கலங்க ஆரத்தி எடுத்தவர் அவர்களைச் சந்தோசமாய் வரவேற்றார்...

"உன்னையும், அம்முவையும் பார்ப்பதற்காகத் தான்ம்மா மதுரையில் இருந்து இங்கு வந்தோம்... நீ விஷ்ணு கூட வந்தது ரொம்பச் சந்தோசம்... இனியாவது உங்க வாழ்க்கை சந்தோசமா அமையணும்..." மேலும் மேலும் தோண்டி துருவாது நாசுக்காகக் கூறினார் மீனாட்சி...

மாமனார், மாமியாரிடம் சிறிது நேரம் பேசி கொண்டிருந்தவளுக்குத் தலைச்சுற்றுவது போலிருந்தது...

"எனக்கு ரெஸ்ட் எடுக்கணும் போலிருக்கு அத்தை..." என்க...

"வா நிலா..." என்று சிம்மவிஷ்ணு அவளை அழைத்தான்...

பெரியவர்கள் முன் அவனிடம் வம்பு பேசாது அவள் அவனுடன் சென்றாள்... தனது அறைக்கு அழைத்துச் சென்றவன்,

"ரெஸ்ட் எடு..." என்று அவன் கூறும் முன் அவள் கட்டிலில் சென்று சுருண்டு படுத்துக் கொள்ள... அவளது செய்கையை வித்தியாசமாய்ப் பார்த்தவன் அவள் அருகில் வந்து,

"என்ன செய்யுது பேபி...?" என்று கவலை குரலில் கேட்க...

"தலை சுத்துது..." என்றவள் மேலே பேச விருப்பம் இயலாதவளாய் விழிகளை மூடி கொண்டாள்... சிறிது நேரம் அவளைப் பார்த்திருந்தவன் அறையை விட்டு வெளியேறினான்...

பத்து நிமிடங்கள் கழித்துச் சிம்மவிஷ்ணு பழச்சாறு அடங்கிய குவளையுடன் உள்ளே வந்தான்... அவள் அருகே வந்தவன்,

"நிலா இதைக் குடிச்சிட்டு படு... பசியா இருக்கும்..." என்க...

அவனது கனிவான குரலில் வியப்படைந்தவளாய் விழிகளைத் திறந்தவள் எழுந்தமர்ந்தாள்... கணவன் சொல்வது போல் பசியாகக் கூட இருக்கலாம் என்றெண்ணியவள் பழச்சாறை அவனது கையில் இருந்து வாங்கினாள்... அதை ஒரு மிடறு தான் குடித்திருப்பாள்... அப்படியே அவளுக்கு வயிற்றைப் புரட்டி கொண்டு வந்தது...

"உவ்வே..." என்று குமட்டலுடன் வாயை மூடி கொண்டு எழுந்தவளை கண்டு பயந்தவனாய் சிம்மவிஷ்ணு குளியலறை கதவை திறந்து விட்டான்...

அவன் பின்னேயே வந்தவள் அவனை இடித்துக் கொண்டு உள்ளே நுழைந்து வாஷ்பேசினில் வாந்தி எடுத்தாள்... காலையில் உண்டது அனைத்தும் வெளியில் வந்தது... அப்படியிருந்தும் மீண்டும் மீண்டும் ஓங்கரித்தவளை கண்டு இரக்கமுற்றவனாய் அவன் அவளின் பின் சென்று நின்று கொண்டு அவளது தலையை இருபக்கமும் இருந்து பிடித்துக் கொண்டவன்,

"என்ன செய்யுது பேபி...?" அவளது நெற்றியை மென்மையாய் வருடி கொண்டே கேட்க...

நியாயத்திற்கு அவனது இந்த ஆறுதல் அவளை அமைதியடையச் செய்திருக்க வேண்டும், இதத்தை அளித்திருக்க வேண்டும்... ஆனால் அவளுக்கோ அவனது ஆறுதல் பழையை நினைவுகளைக் கிளறிவிட்டது... முகத்தைக் கழுவி கொண்டு நிமிர்ந்தவள் ஆத்திரத்துடன் அவனது கையைத் தட்டிவிட்டாள்...

அவளின் எதிர்பாராத இந்தச் செயலில் அவன் திகைத்துப் போய்த் தடுமாறி நின்றான்...

"அன்னைக்கும் இதே மாதிரி தானே நான் வாந்தி எடுத்தேன்... இதே மாதிரி தானே கஷ்டப்பட்டேன்... அப்போ நான் வேண்டாம்ன்னு போனவன் தானே நீ... முழுசா மூணு மாசம் நான் இருந்தேன்னா செத்தேன்னான்னு கூட நீ பார்க்க வரலை... அப்போ வேணாம்ன்னு போனவன் இப்போ வந்து ஏன் என் உயிரை எடுக்கிற...? உனக்குத் தேவைன்னா நான் வேணும்... இல்லைன்னா நான் வேண்டாம், அப்படித்தானே...? ஆனா எனக்கு நீ வேண்டாம்... போடா, இங்கிருந்து போடா... என் கண்முன்னே முழிக்காதே... போடா..." என்று கண்ணீருடன் அவனைப் பிடித்துத் தள்ளியவள் நிற்க முடியாது அங்கேயே தரையில் அமர்ந்து தேம்பி தேம்பி அழுதாள்...

"ப்ளீஸ் பேபி... இங்கே என்னைப் பாரு..." அவன் அவளின் முன் மண்டியிட்டு அமர்ந்து கொண்டு கெஞ்சினான்...

அவனை நிமிர்ந்து பார்த்தவள், "என்ன சொல்ல போற...? அன்னைக்கு இருந்தவன் இன்னைக்கு இல்லைன்னா...? எனக்கு அன்னைக்கு இருந்தவனும் வேண்டாம்... இன்னைக்கு இருப்பவனும் வேண்டாம்... உன் மகளை நீயே வச்சுக்கோ... எனக்கு நீ வேண்டாம்... எனக்கு யாரும் வேண்டாம்... நான் தனியா இருந்துட்டு போறேன்..." முதல் பாதியை அவனிடம் சொன்னவள் மறுபாதியை தனக்குத் தானே முணுமுணுப்பாகச் சொல்லி கொண்டாள்...

"ம்ப்ச், ஏன்டி என்னைப் புரிஞ்சிக்க மாட்டேங்கிற...?" என்றவனைக் கண்டு ஆத்திரத்துடன் நிமிர்ந்தவள் அவனது சட்டைக்காலரை பிடித்திழுத்து,

"நான் என்ன புரிஞ்சிக்கலை...? உன்னையும், என்னையும் நல்லா புரிஞ்சிக்கிட்டதால தான் நான் இப்படிப் பேசறேன்... வேண்டாம் என்னை விட்டு நீ போயிரு... நாம ரெண்டு பேரும் சேர்ந்து வாழ்ந்தா வீணா மனக்காயம் தான் மிஞ்சும்... நீ எனக்காக ஜெயிலுக்குப் போன... நான் உனக்காக என்னைக் கொடுத்தேன்... அவ்வளவு தான் நம்ம ரெண்டு பேருக்கும் இடையில் உள்ள உறவு... நமக்குள் நடந்த கொடுக்கல் வாங்கல் சரியா போச்சு... அதைப் புதுப்பிக்க வேண்டாம்..."

"பேபி நீ பழசு எதையும் மறக்கலையா...?"

"எதை மறக்க சொல்ற...? நீ என்னைக் கடத்தினதையா...? இல்லை என்னைக் கல்யாணம் பண்ணி தினம் தினம் என்னைக் கற்பழிச்சதையா...? இல்லை குழந்தை உண்டானதும் என்னை அம்போன்னு விட்டுட்டு போனியே அதையா...? இல்லை படிக்கிற வயசுல கைக்குழந்தையோட நான் சீரழிஞ்சதையா...? எதை மறக்க சொல்ற...?"

அவள் தனது மனதின் வேதனையைக் கூற கூற அவனது முகம் வேதனையைச் சுமந்தது... அவன் இயல்பிலேயே கெட்டவன் இல்லையே... அதனால் அவளது வேதனையை அவன் உணர்ந்தான்... அவளைக் காட்டிலும் அவன் பெரும் வலி கொண்டான்... அவன் கண்கள் கலங்க அவளைப் பார்த்தான்... அவனது கலக்கம் அப்போது தான் அவளது அறிவுக்கு எட்டியது... தனது வீட்டார் அவனுக்குச் செய்த துரோகம் அப்போது தான் அவளது புத்திக்கு உறைத்தது... அடுத்த நொடி அவனது சட்டையைப் பிடித்துத் தன்னருகே அவனை இழுத்தவள்,

"இதுக்குத் தான் நான் வேண்டாம்ன்னு சொன்னேன்... உங்களால் நான் காயப்பட்டு இருக்கேன்... என் வீட்டாளுங்களால் நீங்க காயப்பட்டு இருக்கீங்க... நாம ரெண்டு பேரும் சேர்ந்து வாழ்ந்தால் அந்த வாழ்க்கையில் நிச்சயம் சந்தோசம் இருக்காது, இயல்பான தாம்பத்தியம் அமையாது... இதுக்கு எல்லாம் தடையா நம்ம கடந்த காலம் ரணமா நம்ம மனசுக்குள் இருக்கும்... உங்களைக்

காயப்படுத்திவிடக் கூடாதுன்னு நானும், என்னைக் காயப்படுத்திவிடக் கூடாதுன்னு நீங்களும் ஒவ்வொரு நாளும் பார்த்து பார்த்து நடந்துக்கணும்... சந்தோசமோ, துக்கமோ எதிராளியை பாதித்துவிடக் கூடாதுன்னு எந்நேரமும் யோசிச்சிட்டே இருக்கணும்... காலம் முழுவதும் இப்படிக் கட்டுப்பாட்டோட வாழ்வது என்பது சாத்தியமில்லாத ஒன்று... சிரிப்பு வந்தா சிரிக்கணும்... அழுகை வந்தா அழணும்... அது போல் உங்க மேல் கோபம் வந்தா நான் கோபப்படணும், திட்டணும்... அது மாதிரி தான் நீங்களும்... அதை விட்டுட்டு என்னோட வார்த்தைகள் உங்களைக் காயப்படுத்திருமோன்னு உங்க முகத்தைப் பார்த்துட்டு நானும், என்னைப் பார்த்துட்டு நீங்களும் காலம் முழுவதும் யோசிச்சிட்டு வாழ முடியாது..."

அவனது நெஞ்சில் முகம் புதைத்து அவள் புலம்பினாள்... அவளது உணர்வுகளைப் புரிந்தவனாய் அவன் அமைதியாக அவளை வருடி கொடுத்து ஆறுதல்படுத்தினான்... மெல்ல அவனை ஏறிட்டு பார்த்தவள்,

"எனக்கு உங்க மேல கோபம் கோபமா வருது... திட்ட தோணுது... அதே சமயம் நீங்க முகம் வாடினா என் மனசு கேட்க மாட்டேங்குது... நான் என்ன பண்றது...?" என்று கேட்டு சிறுமழலை போல் விழித்தவளின் முகத்தைத் தனது கைகளில் தாங்கி கொண்டவன்,

"திட்டணும்ன்னு தோணினால் திட்டு... அடிக்கணும்ன்னா அடிச்சுக்கோ... பெர்மிசன் கிராண்ட்டட் பேபி..." என்று அவன் கண்சிமிட்டி சிரிக்க... அதைக் கேட்டு அவளது முகத்தில் சிறுபுன்னகை எட்டிப்பார்த்தது...

"சிரிப்பு வந்தா சிரிச்சிரணும் பேபி..." என்றவனைக் கண்டு விலகி அமர்ந்தாள் அவள்...

"இன்னும் என்ன பேபி...? நீ என் உயிரை எடுத்தால் கூடச் சம்மதம்ன்னு நான் ஏற்கெனவே சொல்லிட்டேன்... பிறகு என்ன...?"

"எல்லாக் கணவன், மனைவி மாதிரி நம்மால் ஒரு நிறைவான வாழ்க்கை வாழ முடியாது..." என்றவளை கண்டு அவனுக்கு ஆயாசமாக இருந்தது...

"நான் செஞ்சது தப்பு தான்டி... அதுக்கு உன் காலில் விழுந்து மன்னிப்பு கேட்கவா...?" என்றபடி அவளது காலை பிடித்தவனின் கையைத் தட்டிவிட்டவள் தனது காலை புடவைக்குள் இழுத்து கொண்டாள்...

"நீங்க வேணும்ன்னு இதைச் செய்யலையே..." என்று அவள் அவனுக்காக இரக்கம் கொண்டு முனங்கினாள்...

"அப்போ என் மேல் வெறுப்பில்லையே..."

'இல்லை' என்று அவள் தலையாட்டியதை கண்டு நிம்மதி பெருமூச்சு விட்டவன்,

"பின்னே என்ன பேபி...?" என்று தன்மையாகக் கேட்க...

"ஆனா நிறையக் கோபம் இருக்கு... வருத்தம் இருக்கு..." என்று இரு கைகளையும் அகல விரித்துக் காட்டினாள்...

அவளது பாவனையில் அவனுக்குச் சிரிப்பு வந்தது... அதை அவள் கண்டு கொண்டவளாய்,

"என் பொழைப்பு சிரிப்பா இருக்கா...?" என்று கோபம் கொள்ள...

"நீ ஒரு சைக்கியாட்டிரிக் டாக்டர்... நீயே இப்படிக் கோபப்படலாமா...? நிதானம் தவறலாமா பேபி...?"

"முதலில் நான் ஒரு மனுசி... சாதாரண உணர்வுகளைக் கொண்ட மனுசி... அதுவும் எல்லாப் பெண்களைப் போன்று எதிர்கால வாழ்க்கையைப் பற்றிக் கனவு கண்ட சராசரி பெண்... என் கனவு, வாழ்க்கை எல்லாம் உங்களால் கானல்நீராய் போச்சு..." என்றவளின் விழிகளில் இருந்து விழிநீர் விடாது சொட்டியது...

அதைக் கண்டு அவனும் கண் கலங்கினான்... அவளது கைகளை இறுக பற்றிக் கொண்டு, "என் தவறுகளைச் சரி

செய்ய எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கக் கூடாதா...?" என்று கெஞ்சும் குரலில் கேட்க...

எப்போதும் ஆளுமையாக அவனைப் பார்த்தவளுக்கு அவனது இந்தக் கெஞ்சல் மனதினை உருக்கியது... தன்னைத் தானே மனம் வெறுத்தது...

"அதான் எனக்காக ஜெயிலுக்குப் போயிட்டு வந்திட்டீங்களே... ரெண்டு பேர் தவறும் சரியா போச்சு... நீங்க எந்தத் தவறும் செய்யலை... சரியா...?"

இவ்வளவு நேரம் கோபம் கொண்டு கத்தியவள் இப்போது அவனுக்காக அவனிடமே வக்காலத்து வாங்குகிறாள்... அந்தக் கணம் அவனுக்கு ஒன்று புரிந்தது... அவளுக்குத் தன் மீது கோபம், காயம் எல்லாம் இருக்கிறது... அதே சமயம் அவளால் தன்னை வெறுக்கவும் முடியலை என்று...

"சரி..." என்றவன் முதலில் தான் எழுந்து நின்று கொண்டு அவள் முன் தனது கையை நீட்டினான்... அவள் அதைப் பற்றிக் கொண்டு எழுந்து நின்றாள்...

சோர்வுடன் நடை தள்ளாடியவளை கைத்தாங்கலாக அணைத்துக் கொண்டு அறைக்குள் வந்தவன் அவளைக் கட்டிலில் அமர வைத்துவிட்டு அவளைப் பார்த்துக் கவலையாக,

"ஹாஸ்பிட்டல் போயிட்டு வருவோமோ...?" என்று கேட்க... அவனை நிமிர்ந்து பார்த்தவளின் உதடுகள் உணர்ச்சிவசப்பட்டதில் துடித்தது...

"போகணும்..." என்று தலையசைத்தாள் அவள்...

"அப்போ கிளம்பு... நான் கூட்டிட்டு போறேன்..." என்றவனை அவள் இமைக்காது பார்க்க...

"நான் கொஞ்சமே கொஞ்சம் நல்லவன் தான்..." என்று அவன் அவளது கன்னம் தட்டி சிரித்தான்...

"இல்லை நானே போயிக்கிறேன்..."

"இல்லை நானும் உன் கூட வருவேன்..." என்று அவன் பிடிவாதம் பிடிக்க...

அவள் மறுக்காது அவனை அழைத்துக் கொண்டு சென்றாள்... மகளை அவனது பெற்றோரிடம் விட்டு விட்டு சென்றனர்... மருத்துவமனைக்குச் சென்று மருத்துவரை சந்தித்துப் பரிசோதிக்கும் வரை அவள் அவனிடம் குழந்தை உண்டாகி இருக்கும் விசயத்தைக் கூறவில்லை... அவள் அவனிடம் கோபப்பட்ட போது கூறிய வார்த்தைகளை அவனும் கவனித்துக் கேட்கவில்லை...

"கங்கிராட்ஸ்..." என்று வாழ்த்திய பெண் மருத்துவரை சிம்மவிஷ்ணு புரியாது பார்த்தான்...

"எதுக்கு டாக்டர்...?"

"இரண்டாவது முறையா அப்பாவாகப் போறீங்களே... அதுக்குத் தான்..."

மருத்துவர் கூறியதை கேட்டு அவன் இனிய அதிர்வுடன் மனைவியைத் திரும்பி பார்த்தான்... அவளும் அவனைத் தான் பார்த்து கொண்டிருந்தாள்... ஆனால் அவளது முகத்தில் அவன் அளவிற்கு மகிழ்ச்சி இல்லை... அதில் அவனது மகிழ்ச்சி வடிய அவளைக் கேள்வியாய் பார்த்தான்... அவனது கேள்வியான பாவனையில் அவள் தனது முகத்தினை மலர்ச்சியாய் வைத்து கொண்டாள்...

மூன்று மாதங்களுக்கு மேலானதால் 'ஸ்கேன்' பார்க்க வேண்டும் என்று மருத்துவர் கூறினார்... நிஷிலாவுடன் சிம்மவிஷ்ணுவும் அங்குச் செல்ல அனுமதிக்கப்பட்டான்... அங்குச் சென்றதும் அவர்களுக்கு அடுத்த இனிய அதிர்ச்சி காத்திருந்தது... ஆம், நிஷிலா வயிற்றில் இரட்டை குழந்தைகள் உண்டாகி இருந்தது...

கணினி திரையில் தெரிந்த கருவின் நிழல் உருவத்தைக் கண்டு சிம்மவிஷ்ணு பரவசப்பட்டுப் போனான்... அதே சமயம் ஆதிரையை மனைவி உண்டாகி இருக்கும் போது அவன் அலட்சியமாக நினைத்தது அவனது நினைவில்

நின்று அவனைக் கொல்லாமல் கொன்றது... அதை நினைத்ததும் அவனது விழியில் இருந்து விழிநீர் சொட்டி அவளின் முகத்தின் மீது விழுந்தது... அதில் அவள் அவனை ஏறிட்டு பார்த்தாள்... அவனது கலங்கிய விழிகளைக் கண்டு அவளது விழிகளும் கலங்கியது...

எந்தவொரு சந்தோசத்தையும் அனுபவிக்க முடியாது கடந்த காலம் தடைக்கற்களாக அவர்கள் முன் இருப்பதைக் கண்டு அவளது மனம் வெம்பி போனது...

அதே நேரம் அவனும் அவளைப் பார்த்தான்... மனைவி தன்னைப் பார்ப்பதை உணர்ந்து அவன் விழிகளைத் துடைத்துக் கொண்டு அவளைப் பார்த்துச் சிரித்தான்... அவளும் அவனுக்காகத் தனது முகபாவனைகளை மாற்றிக் கொண்டு அவனைக் கண்டு புன்னகைத்தாள்...

மருத்துவர் கூறிய அறிவுரைகளைக் கவனமாகக் கேட்டுக் கொண்டு இருவரும் வெளியில் வந்தனர்... அவனது மனம் வலியை தாண்டி ஒருவித சந்தோசத்தில் திளைத்திருந்தது... சந்தோசமா? பயமா? என்று இனம் புரியாத ஒரு உணர்வு அவளை வந்து ஆக்கிரமித்திருந்தது... ஏனெனில் முதல் குழந்தை உண்டான போது அவள் அனுபவித்த வலி அப்படி...

காரில் வரும் போது இருவரும் அமைதி காத்தனர்... இருவருமே தங்களை அறியாது மற்றவரை காயப்படுத்திவிடுமோ என்று பயந்தனர்... நிஷிலா நினைத்தது போல் இருவரது இயல்பும் மறைந்து போயிருந்தது...

வீட்டிற்கு வந்து விசயத்தைக் கூறியதும் அவனது பெற்றோர் சந்தோசம் அடைந்தனர்... அதிலும் இரட்டிப்புச் சந்தோசம் அல்லவா... மீனாட்சி உடனே இனிப்புச் செய்து மருமகளுக்கு ஊட்டி விட்டார்...

"ரொம்பச் சந்தோசமா இருக்கு நிஷா... என் பேர பிள்ளைகள் வந்த நேரம் நீங்க ரெண்டு பேரும் சந்தோசமா இருக்கணும்..." என்று கூற...

"ஆர்யா, சூர்யா மாதிரி இரண்டு தம்பி பாப்பா வர போறாங்க..." என்று ஆதிரை மகிழ்ச்சியில் குதூகலித்தாள்...

"உன் அப்பா மாதிரி சிங்க குட்டியாய் தம்பிங்க வர போறாங்க அம்மு..."

மனைவியின் முகம் சரியில்லாததை உணர்ந்து சிம்மவிஷ்ணு மகளிடம் பேசுவது போல் மனைவியைச் சீண்டினான்... அவன் நினைத்தது போல் அவனது மனைவி பொங்கிவிட்டாள்...

"ஏன் அம்மு மாதிரி பொண்ணா இருந்தால் ஆகாதாக்கும்...?" என்று அவள் கோபம் கொள்ள...

"எனக்கு ஆட்சேபணை இல்லை... மொத்தம் நாலு பொண்ணுங்களும் என்னைத் தான் சுத்தி சுத்தி வருவீங்க... அப்போ உனக்குன்னு ஒரு பையனாவது வேண்டாமா...? அந்த நல்லெண்ணத்தில் தான் அப்படிச் சொன்னேன்..." அவளது காதோரம் குனிந்து அவன் ரகசியம் பேசினான்...

"நாலா...?" என்று அவள் திகைப்பில் இதழ் குவிக்க...

அதன் அழகில் கவரப்பட்டவனுக்குப் பெண்ணவளின் இதழில் தேன் எடுக்க ஆசை வந்தது... இப்போது எடுத்தால் ராணியவள் தேனீயாக மாறி கொட்டிவிடும் அபாயம் இருப்பதால் அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்...

"நாலே தான்... என் பொண்ணுங்க மூணு பேர்... நாலாவது என் செல்ல குழந்தையான என் மனைவி..." என்று நிறுத்தியவன் அவளது விழியோடு விழி நோக்கியபடி,

"நீ..." என்றான் அழுத்தம் திருத்தமாய்... அதில் அவள் திகைத்து போய் அவனைப் பார்த்தாள்... அவனிடம் இருந்து இப்படியொரு வார்த்தைகளைச் சத்தியமாக அவள் எதிர்பார்க்கவில்லை...

மாலை முழுவதும் மாமியார் பின்னேயே சுற்றி வந்தாள் நிஷிலா... சிம்மவிஷ்ணுவும் மகளுடன் ஐக்கியமானவன் மனைவியைச் சிறிதும் கண்டு கொள்ளவில்லை... இரவு உணவு முடிந்து அப்பாவும் மகளும் அறைக்குச் சென்ற பின்னரும் அவள் அறைக்குச் செல்லாது தொலைக்காட்சி பார்த்தபடி அமர்ந்திருந்தாள்...

"பிள்ளைத்தாய்ச்சி பொண்ணு ரொம்ப நேரம் முழிச்சு இருக்காதே... போய்த் தூங்கு..." மீனாட்சி கூறவும் அவள் வேறுவழியின்றி அறையை நோக்கி சென்றாள்...

அங்குத் தந்தையை அணைத்துக் கொண்டு மகள் உறங்கி கொண்டிருந்த அழகினை நின்று ரசித்தாள்... என்ன தான் பெண் குழந்தைகளைத் தாய் பார்த்து பார்த்து வளர்த்தாலும் அப்பாவை கண்டதும் அம்மாவை மறந்துவிடுகிறார்கள்... அவளுள் மெல்லிய பொறாமை எட்டிப்பார்த்தது...

அங்கிருந்த பெட்டியில் இருந்து தனது இரவு உடையை எடுத்தவள் அதை அணிய ஆரம்பித்தாள்... அவளது மற்றும் மகளது பொருட்களை அருந்ததி உடனே அனுப்பி வைத்து விட்டார்... இதைச் சாக்கு வைத்து மகள் திரும்ப அங்கே வந்துவிடுவாளோ என்று அவர் பயந்து போனாரோ என்னமோ...

சிம்மவிஷ்ணு படுத்தபடி விழிகளால் மனைவியைப் பின்தொடர்ந்தான்... தனக்கு முதுகு காட்டி உடை மாற்றிக் கொண்டிருந்த மனைவியின் சிறுசெய்கையில் அவளது மனம் அவனுக்கு நன்கு புரிந்து போனது... அவளது மனதில் தான் கணவனாக ஆழப்பதிந்திருக்கிறோம் என்று... ஆனால் நல்ல காதல் கணவனாக அல்ல என்பதும் அவனுக்கு நன்கு புரிந்தது... அதற்குக் காரணம் அவன் அவளுக்கு அளித்த கடந்த கால வலி...

அந்தக் காயத்தை மாற்ற அவனால் இயலாது... ஆனால் அவன் ஏற்படுத்திய காயத்திற்கு மருந்திட அவனால் முடியும்... பெண்ணவளின் வலியின் முன் அவனின் வலி அவனுக்கு மிகவும் சிறியதாகத் தோன்றியது...

உடையை மாற்றிய நிஷிலா எங்கே படுப்பது என்று தெரியாது விழித்துக் கொண்டு நின்றாள்... சிம்மவிஷ்ணு எழுந்து வந்து அவளின் கைப்பிடித்துக் கட்டிலில் அமர வைத்தவன் அவளையே உற்றுப் பார்த்தான்... அவளும் யோசனையாய் அவனைப் பார்த்தாள்... அவன் சட்டென்று அவள் முன் மண்டியிட்டு அமர்ந்து அவளது கைகளைப் பிடித்தபடி,

"என்னை நீ நல்ல முறையில் சந்தித்து இருந்தால் என்னைக் காதலித்துக் கல்யாணம் பண்ணியிருப்பியா பேபி...?" அவனது கேள்வியில் அவளது விழிகள் வியப்பில் விரிந்தது...

கடந்த பத்து வருடங்களாக அவளது மனதினை அரிக்கும் கேள்வி இது...! அவளது கேள்விக்குக் கணவன் பதில் கூறுவானா...? இல்லை காலம் பதில் கூறுமா...?

"விழியோடு விழி கலந்து காதலோடு நீ பூட்டும் மங்கலநாணை
நான் நாணத்தோடு தலைவணங்கி வாங்கிக் கொள்ள வேண்டும்,
பிறந்தவீட்டின் பிரிவை உன் கரத்தின் அழுத்தம் துடைத்தெறிய வேண்டும்,
பள்ளியறையில் பிள்ளை மனம் கொண்டு நான் சிணுங்கினாலும்
தாயாய் ஆறுதல் அளித்துக் கணவனாய் நீ என்னை ஆட்கொள்ள வேண்டும்,
உன்னுயிரை சுமக்கும் என்னை உன்னுயிராய் நீ சுமக்க வேண்டும்,
கனவுகள் ஆயிரம், கற்பனைகள் ஏராளம்...
ஒருநாள் கவர்ந்தாய், மணந்தாய், புணர்ந்தாய் எனை...
கருத்தரித்தேன் தனிமை காட்டில் விட்டு சென்றாய்...
கிடைத்த வாழ்க்கையை நிலைத்திட செய்யக் காதலை எதிர்பார்த்த
என்னை வேசியென்று என் வீட்டில் விட்டு சென்றாய்...
உன் ஒற்றைப் பார்வை என் இதயத்தை ஊடுருவ வேண்டும்,

உன் ஒற்றை இதழொற்றல் என் மனதினை உருக்க வேண்டும்,
உன் ஒற்றை அணைப்பு என் ஊனை உறைய செய்ய வேண்டும்,
காதலாய் நிகழ வேண்டிய ஒன்று காலத்தின் கட்டாயத்தில் நிகழ்கிறதோ?
உனக்காக, உன் வேதனைக்காக, உன் வலிக்காக
என் வேதனை, என் வலி மறந்து உன்னுடன் கூடுகிறேன்...
வாழ்க்கை நமக்கிட்ட சாபமிது,
மாற்றிட நினைக்காதே மன்னவனே,
உனக்காக உயிரையும் கொடுப்பவள் நான்...
உனை தாங்குவேன், உனை ஆராதிப்பேன்,
என்னுயிர் உள்ளவரை, மனைவியாயல்ல மனுசியாய்...!!!"

கொள்ளும்...!!!

மனைவியின் அமைதி சிம்மவிஷ்ணுவின் மனதினை வாட்டியதோ என்னவோ...! அவன் மனம் கனக்க அவளைப் பார்த்தான்... அவளோ இன்னமும் திகைப்பில் இருந்து வெளிவராதவளாய் கணவனைப் பார்த்திருந்தாள்... அவள் நித்தமும் தனக்குள் கேட்கும் கேள்வியை அவனும் கேட்பது கண்டு அவள் அதிர்ந்து தான் போனாள்... அப்படியென்றால் கணவனும் அவளைப் போன்றே எண்ணுகிறானோ...? அவளைப் போன்றே நல்லதொரு வாழ்க்கைக்காக ஏங்குகிறானோ...?

"நீ எப்படின்னு எனக்குத் தெரியலை... ஆனா நான் உன்னை நல்ல முறையில் சந்தித்து இருந்தால் உன்னை உயிருக்கு உயிராய் காதலித்துக் கல்யாணம் பண்ணியிருப்பேன் பேபி..."

அவனது வார்த்தைகளில் அவளது விழிகள் வியப்பாய் விரிந்தது... ஏனெனில் அவனைப் பற்றி அவளுக்கு நன்கு தெரியும்... அவன் சிறைக்குச் சென்ற போது எல்லாத் தமிழ் தொலைக்காட்சிகளிலும் அவனது வாழ்க்கையைப் பற்றித் தொகுத்து வழங்கினர்... இந்தியாவில் பெயர் சொல்ல கூடிய அளவில் அவன் ஒரு பெரிய தொழிலதிபன்... உலகம் முழுவதும் அவனது நிறுவனத்தின் கிளைகள் இருந்தது... பேசன் துறையில் இருந்த அழகிகள், நடிகைகள் என்று எல்லோரும் அவனுக்கு வலைவிரித்துப் பார்த்து அவன் அகப்படாததால் விலகி போய்விட்டனர் என்று அந்தத் தொகுப்பில் கூறினார்கள்...

அவனது நிறுவனத்திற்கு மாடலிங் செய்ய வந்திருந்த அழகி ஒருத்தி அவனிடம் வெளிப்படையாக எல்லோர் முன்பும் வழிந்து அதனால் அவன் எல்லோர் முன்பும் கோபப்பட்டு அந்தப் பெண்ணின் கன்னத்தில் ஓங்கி அறைந்த சம்பவத்தைத் தொலைக்காட்சி சுட்டிக்காட்டியது... அந்தளவிற்குப் பெண்களிடம் இருந்து விலகியிருந்தவன் இப்படியொரு காரியம் செய்ததை இன்னமும் நம்ப முடியவில்லை எனவும், அதை அவனே ஒத்துக் கொண்டு

சிறை சென்றது பெரும் வியப்பு அளிக்கிறது எனவும் ஊடகத்துறை ஆச்சிரியப்பட்டது... அது போல் நிறைய அபலை பெண்களுக்கு அவன் மறுமணம் செய்து வைத்திருக்கிறான், அவர்களது வாழ்விற்கு நல்வழிகாட்டி இருக்கிறான்... இப்படிப் பல நல்லது அவன் செய்திருக்கிறான்...

அப்படிப்பட்ட நல்லவன், இராமனை போன்ற உத்தமன் தன்விசயத்தில் மட்டும் ஏன் சறுக்கி போனான்? என்று அவளுக்கு மிகவும் வேதனையாக இருந்தது... இல்லையென்றால் மற்றவர்களைப் போன்று அவர்களும் இனிமையாக இல்லறத்தை நடத்தி இருந்திருப்பார்களோ...? அதை நினைத்ததுமே அவளது விழிகளில் இருந்து விழிநீர் வழிந்தது...

அவன் பதறி போய் அவளது கண்ணீரை துடைத்தவன் அவளது மனதினை மாற்றும் பொருட்டு, "இந்த அரைக்கிழவனை உனக்குப் பிடிக்கலையா...?" என்று கேலி குரலில் கேட்க...

"நீங்க அரைக்கிழவன் எல்லாம் இல்லை... இளமையா தான் இருக்கீங்க..." கண்களில் கண்ணீர் கரை கட்ட தன்னைப் பார்த்து கூறிய மனைவியை இமைக்காது பார்த்திருந்தவன்,

"அன்னைக்குச் சொன்ன மாதிரி இது பொய் இல்லையே பேபி..." என்று கேட்டவனுக்குத் தொண்டை அடைத்தது...

"என்னைக்கு...?" அவள் புருவம் சுருக்கினாள்...

"அன்னைக்குக் கோவில் போயிட்டு வந்தப்போ..." என்று அவன் அந்தச் சம்பவத்தை ஞாபகப்படுத்தினான்...

"அப்போ என் கூட வாழ்ந்த வாழ்க்கையை நீ பொய்ன்னு சொன்ன பிறகு வார்த்தைகள் மட்டும் எப்படி உண்மையா இருக்கப் போகுது பேபி...? இந்தப் புத்தி கெட்டவனைத் திருத்துவதற்காகக் கூட நீ பொய் சொல்லியிருக்கலாம் இல்லையா...? அப்படியே நீ பொய் சொல்லியிருந்தாலும்

தப்பில்லை... உன் மனசில் தான் என்னைப் பற்றி எந்த ஒரு எண்ணமும் இல்லையே... ஆனா அப்போ நான் உன்னைப் பார்த்துச் சொன்னது அனைத்தும் உண்மை... நீ அழகி... அப்பவும், இப்பவும், எப்பவும்..."

அவளுள்ளும் அந்தக் காட்சி விரிந்ததோ...? அவள் பொய்யாகவா அவனுடன் வாழ்ந்தாள்...? அவள் பொய்யாகவா அவனுடன் பேசி பழகினாள்...? இல்லையே... அவள் மனமார தானே அவனுடன் வாழ்ந்தாள்...

"நான் பொய் சொல்லலை... நான் உண்மையைத் தான் சொன்னேன்... அந்த மூணு மாசம் நான் உங்க கூட உண்மையா தான் வாழ்ந்தேன்..." அவளுள் சிறிது கோபம் எழுந்தது...

"அப்போ அந்த வாழ்க்கைக்குப் பெயர் என்ன பேபி...?"

அவள் திகைப்புடன் அவனைப் பார்த்தாள்... அவன் அவளது வலக்கையை எடுத்து முத்தமிட்டபடி,

"எனக்காக உன்னையே அர்ப்பணிச்சியே அதில் அத்தனை காதல் இருந்தது பேபி... எனக்காக உன்னோட வேதனை, வலி, கண்ணீரை மறைச்சியே அதில் அத்தனை நேசம் இருந்தது... ஒரு பெண்ணோட மனசில் காதல் இல்லாம ஒருத்தனோட முழுமனசோட படுக்க முடியாது... அப்படிப் படுத்தால் ஒண்ணு அது வன்கொடுமையா இருக்கணும்... இல்லை விபச்சாரமா இருக்கணும்... இந்த இரண்டுமா நமக்கிடையில் நடந்தது...? உன் மனசை தொட்டு சொல்லு பேபி... நாம ரெண்டு பேர் விரும்பி தானே இணைஞ்சோம்... நாம ரெண்டு பேர் விரும்பி தானே உன் வயித்தில் குழந்தை வந்திருக்கிறது... நிச்சயம் இது காதல் இல்லாம வேறு எது...?"

காதல் என்கிற வார்த்தையில் அவள் உடைந்து போனாள்... முகத்தை மூடி கொண்டு அழுதவளை கண்டு எழுந்து அவள் அருகில் அமர்ந்தவன் அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்...

"நம்ம ரெண்டு பேர் மனசிலும் கல்யாணம், அதுக்குப் பிறகான வாழ்க்கை மீது இருந்த கனவை தான் கடந்த மூணு மாசமா நாம வாழ்ந்தோம்... அதை இல்லைன்னு நீ மறுக்க முடியாது நிலா... ஒருவேளை நீ அதைக் கடமையா நினைச்சா கூடப் பரவாயில்லை... ஆனா நான் காதலா தான் நினைச்சேன்..." என்றவனை அவள் குழப்பமாய் ஏறெடுத்து பார்த்தாள்...

அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டவன், "முதலில் என்னோட வலி மறக்க தான் நான் உன்னை நாடினேன்... அதை மறுப்பதற்கு இல்லை... ஆனா அதுக்கு அப்புறம் நான் உன்னைத் தேடியது எல்லாம் காதலால் தான்... அப்போ நான் அதை உணரலை... நீ கூட என் கிட்ட அடிக்கடி கேட்பியே 'ஏன் இப்படிப் பார்க்கிறீங்க'ன்னு அப்போ எல்லாம் நான் ரொம்பச் சந்தோசமா இருந்தேன்... அந்தளவுக்கு நீ எனக்குச் சந்தோசத்தைக் கொடுத்த... உன்னைத் தலை மேல் தூக்கி வச்சு கொண்டாடணும்ன்னு எனக்குத் தோணும்... ஆனா அதைச் செய்ய முடியாம வெட்கம் வந்து தடுக்கும்... ஏன்னா அப்போ நமக்குள் அந்தளவுக்கு அந்நியோன்யம் இருந்தது இல்லை..."

அவன் பேச பேச அவள் ஆச்சிரியமாக அவனைப் பார்த்தாள்...

"ஆபரேசன் தியேட்டருக்கு போகும் போது என் மனசில் இருந்தது எல்லாம் நீ தான்... நீ மட்டும் தான்... உனக்காக மட்டுமே உயிர் பிழைக்கணும்ன்னு நினைச்சேன்... இதுநாள் வரை நான் உனக்குக் கொடுத்த துன்பம் போதும்... இனியாவது உன்னை நல்லபடியா வச்சுக்கணும்ன்னு நினைச்சேன்... அதே மாதிரி ஆபரேசன் முடிஞ்சு கண் முழிச்சதும் முதலில் நான் தேடியது உன்னைத் தான்... ஆனா நீ அங்கே இல்லை..." என்றவனது குரலில் அத்தனை ஏக்கமிருந்தது...

"எனக்கு... எனக்கு இங்குக் கொஞ்சம் வேலையிருந்தது..." என்றாள் அவள் மெல்லமாக...

"எது...? கம்பெனியை என் பெயருக்கு மாத்துகிற வேலையா...?"

அவள் பதில் பேசாது தலைகுனியவும் அவளது முகத்தை நிமிர்த்தியவன், "இதை மாத்த எனக்குத் தெரியாதா...? எனக்கு இது எல்லாம் வேணாம்டி... நீ தான் வேணும்... நீ மட்டும் தான் வேணும்..." என்று உணர்ச்சிவசப்பட்டவனைக் கண்டு அவள் தள்ளியமர்ந்தாள்...

"இன்னும் என்னடி...?" அவனுக்கு ஆயாசமாக வந்தது...

"எனக்குக் கொஞ்சம் யோசிக்கணும்..." மெல்லமாய் முனங்கியவளை கண்டு அவனுள் இரக்கம் சுரந்தது...

"கொஞ்சம் என்ன நிறைய யோசி... அப்படியே என்னைப் பத்தியும் கொஞ்சம் யோசி... இப்போ என் மனசில் இருப்பது நீ மட்டும் தான்... நான் உன்னைக் காதலிக்கிறேன்... இது பார்த்தவுடன் வந்த பருவ கவர்ச்சி காதல் இல்லை... உடல் கவர்ச்சி காதலும் இல்லை... என் மனசு உன்னைத் தேடுவதால் வந்த காதல்... நீ இல்லைன்னா நான் இல்லை என்பதை எனக்கு உணர்த்திய அற்புதமான காதல் இது... நீ இறந்தால் உன்னோடு மரித்துப் போகணும்ங்கிற துடிப்பில் வந்த காதல் இது... இதுக்கு மேல என் மனசை எப்படிச் சொல்றதுன்னு எனக்குத் தெரியலை..."

அதற்கும் மௌனமாகத் தலையாட்டியவளை கண்டு அவனுக்குப் பெருமூச்சு வந்தது...

"தூங்கு..." என்று அவளிடம் கூறியவன் பால்கனி கதவை திறந்து கொண்டு அங்குச் சென்றான்...

அவன் செல்வதைப் பார்த்தபடி கட்டிலில் படுத்தவளுக்குத் தூக்கம் வரவில்லை... நடந்தது எல்லாவற்றையும் அவளது மனம் மௌனமாக அசை போட்டது... எல்லாவற்றையும் தொகுத்து பார்த்தவளுக்கு ஒன்று மட்டும் புரிந்தது... அவன் மீதும், தன் மீதும் எந்தவித தவறும் இல்லை என்று... தவறு செய்த தனது வீட்டாரை நினைத்து தான் அவளுக்குக் கோபம் வந்தது... எட்டு வயது சிறுவனான

சுடலைமுத்துவின் வேதனையை ஒரு அன்னையாய் உணர்ந்தவளுக்கு இப்போது கணவனாய் இருக்கும் சிம்மவிஷ்ணு மீது இரக்கம் வந்தது... அவனுள் இருக்கும் சிறுவனின் மனநிலையை நினைத்துப் பாவமாக இருந்தது...

ஆணவனின் வலியின் முன் பெண்ணவளின் வலி ஒன்றும் இல்லாததாய்ப் போனது... அதே சமயம் கணவன் தன்னைப் பகடைகாயாக எண்ணி தன் வாழ்க்கையில் விளையாண்டதை எண்ணி அவளது மனம் வேதனை கொண்டது... வெகுநேரம் முழித்திருந்தவள் எப்போது தூங்கினாள் என்று அவளுக்கே தெரியாது...

"குட்மார்னிங்ம்மா..." மகளின் குரலில் நிஷிலா மெல்ல கண்விழித்தாள்...

"குட்மார்னிங் அம்மு..." மகளின் கன்னத்தில் முத்தமிட்டு அவளை அணைத்து கொண்டாள்...

"ம்மா, அப்பா எங்கே...?"

மகள் கேட்டதும் தான் அவளுக்குத் தாங்கள் கணவன் வீட்டில் இருக்கிறோம் என்பதே ஞாபகத்தில் வந்தது... அவசரமாக எழுந்தமர்ந்தவள் படுக்கையில் கணவனைத் தேடினாள்... அங்கு அவன் இல்லாததை உணர்ந்து அவள் யோசனையாய் பால்கனி கதவை பார்த்தாள்... பின்பு அவள் மெல்ல எழுந்து பால்கனியை நோக்கி செல்ல... அவளை முந்தி கொண்டு ஆதிரை அங்கு ஓடினாள்...

பால்கனியில் இருந்த நாற்காலியில் அயர்ந்து உறங்கி கொண்டிருந்தான் சிம்மவிஷ்ணு... அப்படி அவனைப் பார்க்கவே பாவமாக இருந்தது... இரவெல்லாம் அமர்ந்தபடி உறங்கியிருக்கானே என்று அவள் அவனுக்காகப் பரிதாபப்பட்டபடி கதவை பிடித்துக் கொண்டு அப்படியே நின்றுவிட்டாள்...

"குட்மார்னிங்ப்பா..." என்று கூவியபடி ஆதிரை அவனது மடியில் அமர்ந்து அவனைக் கட்டி கொள்ள... மகளது

குரலில் விழித்தவன் அவளைப் பார்த்து,

"குட்மார்னிங்டா..." என்று கூறி புன்னகைத்தான்... கதவோரம் நின்றபடி தன்னைப் பார்த்த மனைவியைக் கண்டு அவன்,

"குட்மார்னிங் பேபி..." என்க...

"குட்...மார்னிங்..." என்று திணறியவளை அவனது விழிகள் சுவாரசியமாகப் பார்த்தது...

இரவு உடையில் சின்னப் பெண் போன்று எந்தவித ஒப்பனையும் இல்லாது இருந்தவளை அவனது விழிகள் ரசனையுடன் விழுங்கி கொண்டது... அவளது இயல்பான இந்தக் குணம் தான் அவனை அவள்பால் ஈர்க்கிறதோ... எத்தனையோ பெண்கள் விதவிதமான அலங்காரத்தில் அவனை மயக்க வந்த போது மயங்காத அவனது மனம் ஒப்பனையற்ற இந்தப் பாவையிடத்தில் மயங்கியது அதிசயம் தான்... அவள் தன்னை மயக்க முயலாததால் தான் அவன் அவளிடத்தில் மயங்கி நிற்கின்றானோ...!

இல்லையென்றால் பழிவாங்க நினைத்த குடும்பத்துப் பெண்ணிடம் இரக்கம் கொண்டு அவளுக்காகச் சிறை சென்றிருப்பானா...? இல்லை இப்போது அவன் விரும்பியே அவளிடத்தில் சிறையாகி இருப்பானா...? இந்தப் பெண்ணவளிடத்தில் ஏதோ ஒன்று அவனை ஈர்க்கிறது...

"என்ன பார்வை...?" என்று முணுமுணுத்தவளை கண்டு அவனது உதடுகளில் நமட்டுச் சிரிப்புத் தவழ்ந்தது... மகள் இருப்பதால் அவன் ஒன்றும் பேசாது அமைதியாக இருந்தான்...

"அம்மு காலையில் என்ன குடிப்பாங்க...?" மகளிடம் கேட்டான்...

"மில்க்..." என்று கூவிய மகளை மடியில் இருந்து இறக்கிவிட்டு நாற்காலியில் இருந்து எழுந்தவன்,

"நாம கீழே போய்ப் பாட்டி கிட்ட பால் கேட்போம்..." என்று மகளை அழைத்துக் கொண்டு பால்கனியை விட்டு அறைக்குள் வந்தான்...

"நீங்க இருங்க..." கணவனிடத்தில் கூறியவள் மகளிடம்,

"அம்மு வா... நான் கூட்டிட்டு போறேன்..." என்க...

"இந்த மாதிரி நேரத்தில் நீ அடிக்கடி படியேறி இறங்க வேண்டாம்... நம்ம ரூமை கீழே மாத்த சொல்றேன்..." என்றவன் அவளது பதிலை எதிர்பார்க்காது மகளை அழைத்துக் கொண்டு சென்றான்...

அன்னையிடம் சொல்லி மகளுக்குப் பால் வாங்கிக் குடிக்க வைத்தவன் தனக்கும், மனைவிக்கும் காபி, பாலை எடுத்துக் கொண்டு அறைக்கு வந்தான்... ஆதிரை பாட்டியோடு தோட்டத்திற்குச் சென்றுவிட்டாள்...

அவன் வந்த நேரம் நிஷிலா குளியலறையில் ஓங்கரித்துக் கொண்டிருந்தாள்... அவன் பதற்றமாய் அங்கே சென்று பார்த்தான்... பல் துலக்கியவளுக்கு வாந்தி வந்துவிட்டது... அவளது நிலையைக் கண்டு அவனுக்கு இதயம் கனத்தது...

அவள் அருகே வந்தவனைக் கண்டு, "நீங்க போங்க... நான் வர்றேன்..." என்று கூறியபடி அவள் முகம் கழுவினாள்...

அவன் குழாயை மூடிவிட்டு அவளைத் தனது கைகளில் ஏந்தி கொண்டான்...

"ஐயோ என்ன பண்றீங்க...?" என்று திமிறியவளை கண்டு,

"ஷ், பேசாம இரு..." என்று அவன் அதட்ட...

"எனக்கு உங்க கரிசனம் தேவையில்லை... என்னைப் பார்த்துக் கொள்ள எனக்குத் தெரியும்..." அவளையும் அறியாது அவளது மனச்சுணக்கம் வெளிப்பட்டது...

அவன் ஒன்றும் பேசாது அவளைக் கட்டிலில் அமர வைத்தவன் பால் அடங்கிய தம்பளரை அவளிடம் கொடுத்துவிட்டு,

"பெண்ணுக்கு மட்டும் தான் கல்யாண வாழ்க்கை பற்றிய கனவு இருக்கும்ன்னு நினைக்காதே... ஆணுக்கும் உண்டு... அதற்கு நானும் விதிவிலக்கல்ல..." என்றவன் அவளது முகம் பார்க்காது குளியலறைக்குள் புகுந்து கதவை சாத்தி கொண்டான்...

அவள் திக்பிரம்மை பிடித்தபடி மூடிய கதவை பார்த்திருந்தாள்... இரண்டு மனமாய் ஊஞ்சலாடும் தனது மனதினை குறித்து அவளுக்கே தன் மீது கோபம் வந்தது...

குளியலறையில் ஷவருக்குக் கீழே நின்றிருந்த சிம்மவிஷ்ணு வருத்தமும், கோபமும் கலந்த மனநிலையில் இருந்தான்... வருத்தம் அவளை நினைத்து, கோபம் அவனை நினைத்து...

அவன் குளித்து முடித்து வரும் வரை அவள் அப்படியே அமர்ந்திருந்தாள்...

"இன்னுமா பால் குடிக்கிற...?" என்று கேட்டபடி அவன் அவள் கையிலிருந்த தம்பளரை எட்டிப்பார்த்தான்... பால் அப்படியே இருந்தது...

அவள் அவனை ஏறிட்டு பார்த்தாள்... இடுப்பில் துண்டை கட்டி கொண்டு நின்றிருந்தவனின் நெஞ்சில் இருந்த கீறல்கள் அவளது கண்ணில் பட்டு முகத்தைச் சிவக்க வைத்தது... அவள் வேகமாகத் தலையைக் குனிந்து கொண்டாள்...

அவளது வெட்கத்தில் அவனுள் ஆணாய் கர்வம் முளையிட அவன் தனது தலையை அழுந்த கோதி கொண்டு சத்தமில்லாது சிரித்தான்... வானத்தில் பறக்கும் ஒரு உணர்வு... சற்று முன் மனதினை வாட்டிய கோபம், வருத்தம் எல்லாம் காணாமல் போனது...

"பாலை குடி..." என்று அவளது தலை மீது கை வைத்து ஆட்டியபடி கூறியவன் உடை மாற்ற சென்றான்...

"ஒரு நிமிசம்..." என்றவளை திரும்பி பார்த்தவன்,

"மாமான்னு கூப்பிடலாம்... நான் ஒண்ணும் சொல்ல மாட்டேன்..." என்று சிரிப்புடன் கூற... மீண்டும் முகம் சிவந்தவள் தலைகுனிந்தபடி,

"எங்க வீட்டுக்கு போகணும்..." என்க...

"போயிட்டு வா... அம்முவை நான் பார்த்துக்கிறேன்..."

"நீங்களும் என் கூட வரணும்..."

"நானா எதுக்கு...?"

"அங்கே வந்து சொல்றேன்..." என்று மிடுக்காகப் பதிலளித்தவளை கண்டு அவனது உதடுகளில் புன்னகை அரும்பியது...

"வர வர நிலா பெண் தைரியமாகிட்டே போறாங்களே..."

"சிங்கம் கூட இருக்கும் போது பயம் எதற்கு...?" குறும்பும், தெனாவெட்டுமாய்க் கூறியவளை கண்டு அவன் வியப்பாய் பார்த்தான்...

"அவ்வளவு நம்பிக்கையா என் மீது...?"

"ம்... ம்..." என்று வேகமாய்த் தலையாட்டியவளை கண்டு அவனது மனம் நெகிழ்ந்தது...

"என் உயிர் உள்ளவரை இந்த நம்பிக்கையைக் காப்பாற்றுவேன்..." என்றவனைக் கண்டு இப்போது அவளது மனம் நெகிழ்ந்தது...

உடை மாற்ற சென்றவனை மீண்டும் அழைத்தவள், “இனிமேல் இப்படிச் சட்டுன்னு தூக்கிராதீங்க...”

“எதை...?” அவனது விழிகளில் குறும்பு கூத்தாடியது...

“பாரத்தை...”

“பாரமா நான் எதையும் தூக்கலையே...” நமட்டு சிரிப்புடன் அவன் கேட்க...

“கொஞ்ச நேரம் முன்னே என்னைத் தூக்குனீங்களே...”

“ஆமாம் அதுக்கென்ன...?”

“இப்போ தான் ஆபரேசன் முடிஞ்சிருக்கு... இப்போ பாரம் தூக்கினா தலைக்கு ரொம்ப ப்ரெஷர் கொடுத்த மாதிரி இருக்கும்... வீண் விசப்பரீட்சை வேண்டாம்...”

அவள் சொல்ல வருவது புரிந்து, “உனக்காக எந்த விசப்பரீட்சையையும் எதிர்கொள்ள நான் தயார்...” என்று அவன் தீவிரமாய்க் கூற...

“ப்ளீஸ்...” என்று கெஞ்சியவளை கண்டு மனம் இரங்கியவனாய்,

“இதுவும் உனக்காகத் தான்...” என்றபடி அவன் உடை மாற்ற சென்றான்... அவனைப் பார்த்தபடி அவள் நின்றிருந்தாள்...

இருவரும் கிளம்பி வந்த போது ஆதிரை பாட்டியிடம் குளித்து, உணவு உண்டு தயாராக இருந்தாள்... மீனாட்சி, சுந்தரபாண்டியனிடம் விடைப்பெற்று மகளை அழைத்துக் கொண்டு இருவரும் கிளம்பினர்...

"போகும் போது ஸ்வீட் வாங்கிட்டு போகணும்..."

ஒரு நொடி நெற்றி சுருக்கி யோசித்தவன் பின் முகம் மலர, "நீ நடத்து பேபி... ஐயம் ஆல்வேஸ் வித் யூ..." என்று அவன் நிறைவாகப் புன்னகைத்தான்...

நிஷிலா வீட்டிற்குச் சென்ற போது அங்கு இவர்களுக்காக அவளது குடும்ப வழக்கறிஞர் காத்திருந்தார்... அவரை ஏன் அவள் வரவழைத்து இருக்கிறாள்? என்று அவளது வீட்டினருக்கு புரியவில்லை... எல்லோருக்கும் குழப்பமாக இருந்த போதும் அவளது முடிவிற்குக் கட்டுப்பட்டுக் காத்திருந்தனர்...

"எதுக்கு லாயரை வரவழைச்சேன்னு புரியாம குழம்பிட்டு இருக்கீங்க இல்லையா...? என்னோட கம்பெனி ஷேர்ஸ் எல்லாம் மாமா பெயருக்கு மாத்திட்டேன்... அதை உங்களுக்கு எல்லாம் முறையா அறிவிக்கணும் இல்லையா, அதுக்குத் தான் லாயரை வர சொன்னேன்..."

இதைக் கேட்டு எல்லோரும் யோசனையாய் அவளைப் பார்த்தனர்... இளவரசியோ கொலைவெறியோடு அவளைப் பார்த்தார்...

"இப்போ இதுக்கு என்ன அவசரம் நிஷா...?"

பத்ரிநாத் குழப்பத்துடன் மருமகளைப் பார்த்தார்... சிம்மவிஷ்ணு நல்லவன் தான்... அதற்காக இப்படி நிறுவன பங்குகளை எழுதி கொடுப்பது அவரைச் சற்று யோசிக்க வைத்தது...

"மாமா வேறு, நான் வேறில்லை... பங்குகள் யார் பெயரில் இருந்தால் என்ன...? எல்லாம் ஒன்று தான்... நான் நாளையில் இருந்து ஹாஸ்பிட்டல் போகப் போகிறேன்... என்னால் தொழிலை பார்க்க முடியாது... அதை எல்லாம் விட மாமா கிட்ட நாம வாங்கின கடனுக்குக் கம்பெனியை எழுதி கொடுத்தால் தான் நாம மீள முடியும்..." என்று அவள் அலுங்காது குண்டை தூக்கி போட்டாள்...

"அதை லீகலா மாமா பார்த்துப்பாங்க... இப்போ நான் இங்கே வந்தது இந்த விசயத்தோடு வேறு ஒரு சந்தோசமான விசயம் சொல்வதற்கு..." என்று நாணத்துடன் நிறுத்திவிட்டு அனைவரையும் பார்த்தவள்,

"நான் குழந்தை உண்டாகி இருக்கேன்... அதுவும் ட்வின்ஸ்..." என்று வெட்கத்துடன் புன்னகைத்தவள் கணவனிடம்,

"ஸ்வீட் எடுத்து கொடுங்க..." என்க...

சிம்மவிஷ்ணுவோ அவளது பேச்சை கண்டு அசந்து போய் அமர்ந்திருந்தான்... தனது வீட்டில் எரிமலையாய் குமுறிய நிஷிலா எங்கே...? இதோ இப்போது பனிமலை சாரலாய் தன்னைக் குளிர்விக்கும் இவள் எங்கே...? என்று அவன் பிரமித்துப் போய் மனைவியைப் பார்த்திருந்தான்... அவனது உறைநிலையை உணர்ந்து அவளே இனிப்பை எடுத்து அனைவருக்கும் கொடுத்தாள்...

"விஷ்ணு வாழ்த்துக்கள்... லேட்டான்னாலும் லேட்டஸ்ட்டா வந்திருக்கடா..." என்று கூறியபடி பவித்ரன் மகிழ்ச்சியோடு அவனை அணைத்துக் கொண்டான்...

"தேங்க்ஸ்டா..." என்றபடி அந்த ஆறடி ஆண்மகன் சிறுவெட்கத்துடன் நன்றியுரைத்தான்...

நிஷிலா குழந்தை உண்டாகிய சந்தோசத்தில் நிறுவனம் கைமாறிய விசயம் அனைவருக்கும் மறந்து போனது... எல்லோரும் சந்தோசத்துடன் இனிப்பை வாங்கிக் கொண்டனர்...

இளவரசி அருகே சென்ற நிஷிலா அவரிடம் இனிப்பை நீட்டியபடி, "ஒரு சுடலைமுத்துவை தானே உங்களால் அழிக்க முடிஞ்சது... இப்போ மூன்று சுடலைமுத்துக்கள் வந்துவிட்டது... இதை எல்லாம் பார்க்கும் போது ஆண்டவன் இருக்கிறான் இல்லையா அத்தை..." வேண்டுமென்றே கேலி குரலில் அவள் இழுத்து கூற... இளவரசியோ அவளை முறைத்து பார்த்தார்...

"என்னிடம் விளையாட நினைக்காதே நிஷா..." அடக்கப்பட்ட குரலில் அவர் உறுமினார்...

"நான் விளையாட நினைக்கலை அத்தை... ஆனா விதி விளையாட நினைக்கிறது..." என்று விழிகளால் தனது கணவனைச் சுட்டிக்காட்டியவள்,

"எல்லாவற்றிற்கும் தயாரா இருங்க..." என்று விசம சிரிப்புடன் கூறினாள்...

அதைக் கேட்டு இளவரசியின் மனம் பொருமியது... நிறுவனத்தைச் சிம்மவிஷ்ணு கைப்பற்றியது கண்டு அவருக்குப் பெரும் கோபம் வந்தது... அந்த நிறுவனத்தை வைத்து தானே அவர் கணவன், மகனிடம் தொழில் செய்வதாக உதார் விட்டுக் கொண்டிருந்தார்... அதற்கு அண்ணன்கள் இருவரும் அவர் நிறுவனத்தை நிர்வகித்துக் கொள்ளச் சம்மதித்தது அவருக்கு இன்னமும் வசதியாகப் போய்விட்டது... பெரிய அண்ணன் வேறுவிதமான

கேளிக்கைகளில் ஈடுபட்டார் என்றால், சின்ன அண்ணன் சூதாட்டத்தில் ஈடுபட்டு தொழிலை பார்க்க மறந்தார்... இதெல்லாம் இளவரசிக்குச் சாதகமாகப் போய்விட்டது... அதனால் நிறுவனத்தில் இருந்து தனது விருப்பத்திற்குப் பணம் எடுப்பது, செலவழிப்பது என்று அவர் சந்தோசமாக இருந்தார்... இப்போது அதற்கு எல்லாம் பெரிய ஆப்பு வைத்துவிட்ட சிம்முவிஷ்ணுவை கண்டு அவருக்கு அப்படியொரு கோபம் வந்தது...

சமயம் கிடைத்தால் அவர் அவனைப் பழிவாங்காது போக மாட்டார்... அவர் அடக்கப்பட்ட கோபத்துடன் குடும்பத்துடன் சிரித்துப் பேசி கொண்டிருந்த சிம்மவிஷ்ணு, நிஷிலாவை பார்த்தார்...

கிளம்பும் முன் நிஷிலா முக்கியமான கோப்பை தேடி தனது அறைக்குச் சென்றாள்... தேடியவற்றை எடுத்துக் கொண்டு திரும்பி வரும் போது அவசரமாக மாடிப்படி இறங்க முனைந்தவள் எதன் மீதோ இடறி கீழே விழ போனாள்... அவள் சுதாரிக்கும் முன் அவளது கணவன் அவளைக் கைத்தாங்கலாகப் பிடித்திருந்தான்... அவளைத் தேடி மாடிக்கு வந்தவன் அவள் அறையில் இருப்பதைக் கண்டு அங்கிருந்த பால்கனியில் நின்று தோட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்... அவளது அறை கதவு திறக்கும் ஒலியில் திரும்பி பார்த்தவன் அவளை நோக்கி விரைந்து வந்தான்... அதற்குள் இந்த அசம்பாவிதம் நடந்துவிட்டது...

மனைவியைப் பிடித்த அடுத்த நொடி அவளைக் காலால் இடறிவிட்டு கீழே விழ செய்த இளவரசியின் காலை அவன் இடறி விழ செய்தான்... அந்த நீண்ட மாடிப்படியில் வயதான அவர் விழுந்தால் நிச்சயம் கோமா நிலைக்குத் தான் செல்ல வேண்டும்... பயத்தில் நெஞ்சை பிடித்தவரின் கையைத் தனது ஒரு கையால் பற்றித் தடுத்தவன் மறு கையால் மனைவியை அணைத்தபடி,

"அவ்வளவு சீக்கிரம் உங்களது நினைவு தப்பி நீங்க செய்த பாவத்தில் இருந்து தப்பிவிட முடியாது... நீங்க அணு

அணுவாய் சித்திரவதை அனுபவித்துச் சாக வேண்டும்... அதற்காகவாவது உங்கள் உயிரை பத்திரமாகப் பார்த்துக்கோங்க..." என்றவன் மனைவியின் அதிர்ந்த முகத்தை ஆறுதலாய் பார்த்தபடி,

"பார்த்து வர கூடாதா பேபி..." என்று செல்லமாய்க் கடிய...

"பார்த்து தான் வந்தேன்... இவங்க மறைஞ்சு இருந்ததைக் கவனிக்கலை..." என்றவளுக்கு இன்னமும் பயம் போகவில்லை...

"கோழை அவங்களுக்கு மறைஞ்சிருந்து தான் தாக்க தெரியும்... நீ வா..." என்றபடி மனைவியை அழைத்துக் கொண்டு அவன் கீழே வந்துவிட்டான்...

அதன் பின்பு சிம்மவிஷ்ணு ஒரு நொடி கூட அங்கிருக்க விரும்பவில்லை... மனைவி, மகளை அழைத்துக் கொண்டு தனது வீட்டிற்குக் கிளம்பிவிட்டான்... வரும் வழியெல்லாம் அழுதழுது முகம் எல்லாம் சிவந்திருந்த மனைவியை இயலாமையுடன் பார்த்தபடி வந்தான்...

வீட்டிற்கு வந்ததும் மீனாட்சி மருமகளின் முகத்தைப் பார்த்து, "நிஷாவுக்கு என்னாச்சுடா...?" என்று மகனிடம் கவலையுடன் கேட்டார்...

"அவள் கிட்ட ஏதாவது சண்டை போட்டியாடா...?" என்று சுந்தரபாண்டியன் மருமகளுக்காக மகனிடம் வரிந்து கட்டி கொண்டு சண்டைக்கு வந்தார்...

"நான் சொல்லலை... நீ எனக்காகப் பயப்படத் தேவையில்லைன்னு... இப்போ பார் உன் ஆர்மி மாமனார் என் கிட்ட சண்டைக்கு வருவதை..." என்று மனைவியிடம் குறைப்பட்டுக் கொண்டவன்,

"ஒண்ணும் இல்லைப்பா... அவங்க அம்மாவை பார்த்து ஒரே அழுகை அவ்வளவு தான்..." என்று அவன் சமாளிக்க... சுந்தரபாண்டியன் நம்பாது மருமகளைப் பார்த்தார்...

"ஆமாம் மாமா..." என்று அவள் சமாளித்தாள்...

மதிய உணவை பேத்திக்கு ஊட்டிவிட்ட மீனாட்சி அவளைத் தன்னுடன் உறங்க வைத்துக் கொள்ள... சிம்மவிஷ்ணு மனைவியுடன் தனது அறைக்கு வந்தான்... அவன் உடை மாற்ற செல்லும் முன் நிஷிலா அவனைப் பின்னால் இருந்து அணைத்து கொண்டாள்... அவளாக அவனை அணைத்தது அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது... அணைத்த அவளது கைகளைப் பிடித்து வருடியபடி,

"என்ன பேபி...?" அவன் என்ன தான் கட்டுப்பாடுடன் இருந்த போதும் மனைவியின் அருகாமையில் அவனது குரல் குழைந்து ஒலித்தது...

அவளோ பதில் சொல்லாது அவனது முதுகில் முகம் புதைத்தாள்... அவன் புரியாது பின்னால் கைவிட்டு அவளை முன்னால் இழுத்தான்... அப்போது தான் அவள் அழுவது அவனுக்குத் தெரிந்தது...

"ப்ச், இப்போ எதுக்கு இந்த அழுகை...?" என்று அவன் அவளைக் கடிய...

"இது மாதிரி முதலில் நீங்க ஏன் என்னைக் காப்பாத்த வரலை...?" என்று அவனது சட்டையைப் பிடித்துக் கொண்டு கதறியவளை கண்டு அவன் அதிர்ந்து போனான்...

"இது மாதிரி தானே அம்முவை உண்டாகி இருக்கும் போதும் அத்தை என்னை மாடிப்படியில் இருந்து தள்ளிவிட்டாங்க... உயிருக்கு போராடிக்கிட்டு இருந்த என்னைப் பார்க்க கூட நீங்க வரலை... அத்தையால் நான் எவ்வளவு கஷ்டப்பட்டு இருப்பேன் தெரியுமா...? உங்க குழந்தையை அழிக்க அவங்க கங்கணம் கட்டிக்கிட்டு இருந்தாங்க... ஆனா அது என் குழந்தையும் தான் என்பதை அவங்க உணரவே இல்லை..."

அவளது வார்த்தையில் அவன் ஸ்தம்பித்துப் போய் உணர்வுகளற்று சிலையாய் நின்றிருந்தான்... அன்று மருத்துவமனையில் அந்த வீணாய் போனவர்களின் பேச்சை கேட்டுவிட்டு நிஷிலாவை பார்க்காது திரும்பிய தன்னைக் குறித்து அவன் மிகுந்த அவமானம்

கொண்டான்... அன்றே அவளைப் பார்த்து அவளைத் தன்னோடு அழைத்துச் சென்றிருக்க வேண்டும்... பாழாய் போன பழிவெறியில் மனைவியும், மகளும் அல்லவா துன்பம் அனுபவித்து இருக்கிறார்கள்...

"நிலா..." என்று சிறு கூவலோடு அவளை இறுக அணைத்து கொண்டவன்,

"நான் சொல்வதை நீ நம்பணும் பேபி... நீ ஹாஸ்பிட்டலில் இருக்கேன்னு பத்திப்பா ஃபோன் செஞ்சதும் துடிச்சு போய் உன்னைப் பார்க்க ஓடி வந்தேன்... அப்போ..." அவனது முகம் வேதனையில் கசங்கியது...

"அப்போ...?" அழுத விழிகளுடன் தன்னை ஏறிட்டு பார்த்தவளை கண்டு,

"உன் அப்பா, சித்தப்பா, அத்தை பேசியதை கேட்டு மனம் வெறுத்து திரும்ப வந்துட்டேன்..." அன்றைய நிகழ்வை அவன் அவளிடம் ஒன்றுவிடாது கூறினான்...

அவன் வராமல் இருந்ததற்கான காரணம் இப்போது அவளுக்குப் புரிந்தது... அவனது வலியில் அவளது வலி அவளுக்கு மறைந்து போனது... அவனது கன்னத்தைத் தனது இரு கரங்களால் தாங்கி,

"அதுக்கு எல்லாம் சேர்த்து தான் அத்தைக்குத் தார் அபிசேகம் பண்ணிட்டீங்களே..." என்று அவள் அவனுக்கு ஆறுதல் கூற...

"ம்ஹூம், இது எல்லாம் அவங்களுக்குப் பத்தாது நிலா... மூணாவது முறை தவறு செய்யவும் அவங்க யோசிக்கலைன்னா இன்னமும் அவங்க திருந்தலைன்னு தானே அர்த்தம்... இன்னும் ஏதாவது செய்யணும்..." என்று அவளிடம் கூறியவன்,

'ஆனா அது உன்னையும், நம் மகளையும் பாதிக்காது இருக்கணும்...' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்...

"நீங்க ரொம்ப யோசிக்காதீங்க..."

அவன் தீவிர யோசனையில் இருப்பது கண்டு கவலையுடன் கூறியவளை கண்டு அவன் புன்னகைத்தான்...

"சரி யோசிக்கலை..." என்று சொன்னவன்,

"ரொம்பக் கஷ்டப்பட்டியா...?" என்று பரிவுடன் கேட்க...

"ம், ரொம்ப... அம்மா வீட்டுக்கு போகவே பயமாயிருக்கும்... ஒரு தடவை அத்தை அம்முவை தூக்கும் போது வேணும்ன்னே கீழே போட போனாங்க... அதிலிருந்து நான் அங்கே போறது கிடையாது... கேரளாவில் தான் இருந்தேன்... அம்மா மட்டும் வந்து என்னைப் பார்த்துட்டு போவாங்க..."

அவளது யாருமற்ற நிலைக்கு அவன் அல்லவா காரணம்...! அவனது மனம் பாரமாய்க் கனத்தது...

"சாரி நிலா... நான் தான் எல்லாத்துக்கும் காரணம்..." என்று விழி கலங்கியவனைக் கண்டு,

"நீங்க என்ன வேணும்ன்னா பண்ணுனீங்க... விடுங்க..." என்று அவள் ஆறுதல் கூற...

அவன் அமைதியாகி போனான்... அவளைக் கடத்தியதற்கு அவன் இன்னமும் அவளிடம் காரணம் சொல்லவில்லை... அவளும் அது தனக்குத் தெரியும் என்பதை அவனிடம் காட்டி கொள்ளவில்லை...

அன்று முழுவதும் பெரும் யோசனையில் இருந்தவன் இறுதியில் அந்த முடிவை எடுத்தான்... அவனுக்கு அது சாதகமாக, அவனது எதிரிகளுக்குப் பாதகமாக...!

அரசன் அன்று கொல்வான்... தெய்வம் நின்று கொல்லும்...! தெய்வம் நின்று கொல்ல தயாராகிவிட்டது...!!!

"உன் விழியசைவில் உன்னில் வீழ்ந்தேன்,
உன் இதழசைவில் என்னை இழந்தேன்,
உன்னில் நான் வீழ்ந்து என்னை இழக்க,

நான் என்பதை விட்டொழித்து நாமானேன்...!!!"

கொள்ளும்...!!!

சிம்மவிஷ்ணு, நிஷிலா கிளம்பி சென்ற பின்னர் இளவரசி தனிமையில் தனது இரு அண்ணன்களையும் பிடிபிடியென்று பிடித்துவிட்டார்... இருவர் மீதும் அவருக்கு அப்படியொரு கோபம்...

"உங்க ரெண்டு பேருக்கும் கொஞ்சமும் வெட்கமாய் இல்லை... அன்னைக்கு அவனை அப்படித் திட்டி தீர்த்தீங்க... இன்னைக்கு என்னடான்னா கம்பெனியை வாரி வழங்கியிருக்கீங்க... நீங்க ரெண்டு பேரும் என்ன தான் நினைச்சிக்கிட்டு இருக்கீங்க...? அவன் யாரு, என்னங்கிறது மறந்து போச்சா...?" என்று ருத்ரதாண்டவம் ஆடிய தங்கையை அலட்சியமாய்ப் பார்த்தனர் இருவரும்...

"அவர் யாரு...? நம்ம வீட்டுப் பெண்ணைக் கட்டிய இந்த வீட்டு மாப்பிள்ளை..."

"அவனா இந்த வீட்டு மாப்பிள்ளை...? அவன் ஒரு ரேப்பிஸ்ட்... நம்ம வீட்டுப் பெண்ணைக் கடத்திட்டுப் போய்க் கற்பழிச்சவன் அவன்... அப்படிப்பட்ட அயோக்கியன் கிட்ட பொண்ணைத் தூக்கி கொடுத்ததும் இல்லாம இப்போ கம்பெனியையும் தூக்கி கொடுத்திருக்கீங்க... சபாஷ், இதுக்கு நீங்க ரெண்டு பேரும் மாமா வேலை பார்க்க போயிருக்கலாம்..." இளவரசி சகோதரர்களைக் கடுமையாகச் சாடினார்...

"அரசி..." செல்வரத்தினம் கோபமாய் உறுமினார்...

"என்ன விட்டா ஒரேடியா பேசிட்டு போற... நம்ம வீட்டு பொண்ணா...? இது எப்போதிருந்து...? என் மகள் வயித்தில், அதுவும் பிள்ளைத்தாய்ச்சி வயித்தில் சூடு போட்ட போது இந்தப் புத்தி எங்கே போயிருந்தது...?"

"நல்லா கேளுங்க அண்ணா..." மணிபாரதி தங்கையை முறைத்தார்... நிஷிலா அவருக்கும் செல்ல மகள் அல்லவா...

"ஓ... அண்ணனும், தம்பியும் மகள் விசயத்தில் ஒண்ணு சேர்ந்துட்டீங்களோ...?" என்று இளவரசி குரூரமாய்

அவர்களைப் பார்த்தார்...

"ஆமாம், அதுக்கென்ன..."

"அவன் நல்லவன் கிடையாது... அவனை நம்பாதீங்க... என்னைக்கு இருந்தாலும் அவனால் தான் நமக்கு ஆபத்து..."

"லூசுத்தனமா உளறாதே அரசி... அவனால் நமக்கு என்ன ஆபத்து வந்துட போகுது...?" செல்வரத்தினம் எரிச்சல் பட்டார்...

"அவன் சுடலையைப் பத்தி பேசியதை நீங்க மறந்துட்டீங்களா...? அவன் தான் தான் சுடலைன்னு சொன்னதையும் மறந்துட்டீங்களா...?"

"இந்தக் காலத்தில் இதை எல்லாம் நம்பிக்கிட்டு... எங்களுக்கு இதில் எல்லாம் நம்பிக்கை இல்லை... அவர் சிம்மவிஷ்ணு, நிஷாவோட கணவன்... அவ்வளவே... கூடுதல் பெருமை அவர் மன்னர் பரம்பரை என்பது..."

"அவன் நம்ம பொண்ணை..."

"திரும்பத் திரும்ப இதையே பேசாதே அரசி... தவறு செய்ததை ஒத்துக்கிட்டு அவர் ஜெயிலுக்குப் போயிட்டு வந்துட்டாரு... நிஷாவும் அவரை மன்னிச்சு ஏத்துக்கிட்டா... அதனால் இனி தேவையில்லாததைப் பேசாதே..." என்று கூறிய இருவரும் மேற்கொண்டு பேசாது அங்கிருந்து நகர்ந்துவிட்டனர்...

இளவரசி ஆத்திரத்தில் புசுபுசுவென்று மூச்சுவாங்க நின்றிருந்தார்...

**********************

மறுநாளே சிம்மவிஷ்ணு நிஷிலாவை அழைத்து, "நாம எல்லோரும் மதுரைக்குப் போகலாம்... எப்போதும் இங்கேயே இருக்க முடியாது..." என்க...

"பிசினஸ் எல்லாம் இங்கே தானே இருக்கு... அங்கே போய் என்ன பண்ணுவீங்க...?"

"உன்னைப் பார்க்கிறதுக்கு முன்னாடி நான் எங்கே இருந்து பிசினஸ் பண்ணினேன்...? மதுரையில் இருந்து தானே... இப்பவும் அது போல் பண்ணுவேன்... மதுரையில் இருந்துட்டு உலகம் முழுவதும் பறந்தவன் நான்... சென்னைக்கு வந்து உன் கம்பெனியை பார்த்துக்க மாட்டேனா...?"

"அடேங்கப்பா பெரியாளு தான் நீங்க..." தோளை குலுக்கி புருவத்தை உயர்த்திக் கேலியாய் வியந்தவள்,

"அம்முவுக்கு ஸ்கூல் மாத்துறது ரொம்பக் கஷ்டம்... அது மாதிரி எனக்கும்... இப்ப தான் ஹாஸ்பிட்டலில் ஜாயின் பண்ண போறேன்... இப்ப போய்..." என்று இழுத்தவளை கண்டு போலியாய் முறைத்தவன் மனைவியின் இடையைப் பற்றி அருகில் இழுத்து அவளது நெற்றியோடு நெற்றி முட்டி விளையாடியபடி,

"உன் புருசனை சாதாரணமானவன்னு நினைச்சியா...? என் மகளுக்கு ஸ்கூல்ல சீட் கிடைக்கலைன்னா என்ன, அவளுக்காகப் புது ஸ்கூலையே கட்டி கொடுப்பேன்டி..."

"அப்போ எனக்கு...?" குறும்பாய் விசம சிரிப்புடன் கேட்டவளை கண்டு,

"நீ வேலைக்குப் போகணுமா...? அதெல்லாம் வேண்டாம்... மாமனை கவனிச்சிட்டு வீட்டில் இருந்தால் போதும்..."

அதைக் கேட்டு அவளது முகம் காற்று போன பலூனாய் சுருங்கி போனது... அவள் அவனை விட்டு விலக முயல... அவன் அவளை விலக விடாது தடுத்தவன்,

"என்னைக் கவனிக்கத் தானே சொன்னேன்டி... என்னமோ சமைச்சு கொட்ட சொன்ன மாதிரி மூஞ்சியைத் தூக்கி வச்சிக்கிற... மாமனை பார்க்க என்ன அவ்வளவு கேவலமாவா இருக்கு...?" என்று ஒற்றைப் புருவத்தை உயர்த்தியபடி கேட்டவனைக் கண்டு அவள் ஒன்றும் பேசாது

முகத்தைத் தொங்க போட்டுக் கொண்டு அமைதியாக இருந்தாள்... அவளது முகத்தை நிமிர்த்தியவன்,

"உனக்கும் புதுசா ஒரு ஹாஸ்பிட்டல் கட்டி தர்றேன்... அடுத்தவங்க ஹாஸ்பிட்டலில் எல்லாம் நீ போய் வேலை பார்க்க வேண்டாம்..."

"மாமா..." மனம் நெகிழ தன்னைப் பார்த்தவளை கண்டு,

"நீ மாமான்னு கூப்பிட நான் எவ்வளவு பெரிய லஞ்சம் தர வேண்டியிருக்கு... நான் இப்படியே எல்லாத்தையும் உனக்கு லஞ்சமா கொடுத்தா கடைசியில் என் கிட்ட ஒண்ணும் மிஞ்சாது..."

"யாருக்கு கொடுக்கிறீங்க மிஸ்டர். சிம்மவிஷ்ணு... உங்க வொய்ப்க்கு தானே... அதனால் எல்லாம் பத்திரமா இருக்கும்... அதை விட என்னோட 'மாமா'ங்கிற அழைப்பு ரொம்ப ரொம்பக் காஸ்ட்லியானது... அது அவ்வளவு சீக்கிரம் என் வாயில் இருந்து வராது..." என்றவளை இமைக்காது பார்த்தவன் அவளது இதழை வலக்கை கட்டை விரல் கொண்டு மென்மையாக வருடியபடி,

"அது என்னவோ உண்மை தான் பேபி... உன் வாயில் இருந்து வரும் 'மாமா'ங்கிற வார்த்தைக்கு நான் தவம் இருக்கிறேன்..." என்றவனை ஊனும், உயிரும் உருக அவள் பார்த்திருந்தாள்... அவனது வருடலில் அவளுள் ஏதோ ஒன்று புரண்டது...

"உன் மனசில் காதல் அதிகமாகும் போது மட்டுமே உன் வாயில் இருந்து இந்த அழைப்பு வருகிறது..." என்றவனை இமைக்க மறந்து பார்ப்பது இப்போது அவளது முறையாயிற்று...

"காதல் இல்லைன்னு மட்டும் சொல்லிடாதே... கூட்டி கழிச்சு பாரு கணக்கு சரியா வரும்..." என்று கண்சிமிட்டியபடி கூறியவன் அங்கிருந்து நகர்ந்தான்...

அவன் சென்றதும் அவள் மூச்சடைக்கக் கட்டிலில் தொப்பென்று அமர்ந்தாள்... கணவனது தொடுகை,

அவனது அருகாமை, பேச்சு எல்லாம் அவளுள் குறுகுறுப்பை மூட்டியது...

'இது என்ன சின்னப் பெண் மாதிரி...? மாமா தான் விவஸ்தை இல்லாம பேசுறாங்கன்னா நானும் அதையே யோசிச்சிக்கிட்டு இருக்கேன்...' என்று அவள் தனது தலையில் தட்டி கொண்டாள்...

மறுநாளே சிம்மவிஷ்ணு பெற்றோர், மனைவி, மகளுடன் மதுரைக்குக் கிளம்பிவிட்டான்... நிஷிலாவின் குடும்பம் விமானநிலையம் வந்து வழியனுப்பி வைத்தது... ஆர்யா, சூர்யா அழுது கொண்டே ஆதிரைக்கு விடை கொடுத்தனர்... அடிக்கடி அவர்களைப் பார்க்க வருவதாக அவள் உறுதியளித்த பின்னரே அவர்களது அழுகை நின்றது...

மதுரை வீட்டிற்கு வந்தவர்களை மருதாணி ஆரத்தி கரைத்து வரவேற்றாள்... அவளது சின்னய்யாவை குடும்பசகிதமாகப் பார்ப்பது குறித்து அவளுக்கு ரொம்பச் சந்தோசமாக இருந்தது... மருதாணியின் பேத்தி அதாவது அவளது மகள் பொன்னியின் மகள் ஆதிரைக்கு நல்ல தோழியாகிவிட்டாள்...

"சின்னப் பாப்பா அப்படியே உன்னைப் போல் இருக்கு பாப்பா..." மருதாணி நிஷிலாவிடம் கூறினாள்...

"ஆமாம், என் மகள் என்னை மாதிரியே இருக்கிறாள்..." என்றுரைத்த நிஷிலாவின் வார்த்தையில் பெருமை தெறித்தது...

"பொறக்க போறது ரெண்டும் எங்க சின்னய்யா மாதிரி சிங்க குட்டிங்களா இருக்கணும்..."

அன்று கணவன் கூறிய போது கோபம் கொண்ட நிஷிலா இப்போது மருதாணியின் வார்த்தையில் முகம் சிவக்க கற்பனையில் பறந்தாள்... கணவனைப் போன்று இரு ஆண் குழந்தைகள் நினைப்பதற்கே நன்றாக இருந்தது... கணவனின் கடந்த காலம் தெரிந்ததால் தனது குழந்தைகளுக்குத் தாயன்பை வாரி வாரி வழங்கி

அவர்களை நல்மக்களாய் வளர்க்க வேண்டும் என்று அவள் நினைத்து கொண்டாள்...

சிம்மவிஷ்ணு சொன்னது போல் மகளை நல்ல பள்ளியில் சேர்த்துவிட்டான்... அதே போல் அவளுக்கும் மருத்துவமனை கட்டுவதற்கு இடம் பார்த்துவிட்டான்...

"ஹாஸ்பிட்டல் கட்டும் வரை சும்மாயிருக்காம நம்ம டாக்டர் அங்கிள் ஹாஸ்பிட்டலுக்குப் போயிட்டு வா..." என்று அவன் கூற, அவள் சரியென்று சம்மதித்தாள்...

அதற்கு அடுத்த நாள் வெளியில் கிளம்புவதற்கு ஏற்றார் போன்று உடை அணிந்து கொண்டு வெளியில் செல்லாது கட்டிலில் யோசனையாய் அமர்ந்திருந்த சிம்மவிஷ்ணுவை குழப்பமாய்ப் பார்த்தபடி நிஷிலா மருத்துவமனைக்குக் கிளம்பி கொண்டிருந்தாள்... கைப்பையை எடுத்துக் கொண்டு கிளம்பியவள் பின் மனம் கேட்காது அவன் அருகே சென்றாள்...

"உடம்பு சரியில்லையாங்க..." தனது நெற்றியில் கை வைத்து பார்த்தவளை அவன் மெல்ல ஏறிட்டுப் பார்த்தான்...

அவனது விழிகளில் தெரிந்த தவிப்பில் இவள் துடிதுடித்துப் போனாள்... சிகிச்சையின் போது தன்னிடம் சேயாய் அடைக்கலம் தேடிய கணவனை ஞாபகப்படுத்தினான் இவன்... அவள் உடனே தனது கைப்பையைக் கட்டிலில் வைத்து விட்டு ஒரு கையால் அவனை அணைத்தபடி மறுகையால் அவனது தலையைக் கோதி கொடுத்து,

"என்ன மாமா...?" என்று கேட்க...

அவளது குரலில் வழிந்த அன்பு, அக்கறையில் அவன் பதில் பேசாது அவளை அணைத்துக் கொண்டு அவளது நெஞ்சில் முகம் புதைத்தபடி அமைதியாக இருந்தான்... அவளும் அவனது தலையை வருடியபடி மௌனமாக ஆறுதல் அளித்துக் கொண்டிருந்தாள்... அவளது மனதில் ஏகப்பட்ட குழம்பங்கள்... என்னவானது இவனுக்கு? என்று...

சிறிது நேரம் கழித்து அவனே அவளை விட்டு விலகினான்... இப்போது அவனிடம் அமைதி திரும்பியிருந்தது... இதழ்களில் குறும்பு புன்னகை பூக்க மனைவியை விசமமாய்ப் பார்த்தவன்,

"டாக்டருக்கு படிக்கும் போது கட்டிப்பிடி வைத்தியமும் சேர்த்து சொல்லி தர்றாங்களா பேபி...?" அவன் போலியாக வியந்தபடி வினவ...

"என்ன கிண்டலா...?" அவள் கோபமாய்க் கணவனை முறைத்தாள்...

அவளது இடையைப் பற்றித் தன்னருகே இழுத்தவன், "அப்புறம் எப்படி என் கிட்ட மட்டும் இப்படி நடந்துக்கிற...?" என்று அவன் ஒற்றைப் புருவத்தை ஸ்டைலாக உயர்த்தினான்...

"அது... வந்து..."

"இப்போ புரியுதா...? என் கிட்ட மட்டும் தான் உன்னால் இப்படி நடந்துக்க முடியும்... வேற யார் கிட்டேயும் பக்கத்தில் போகக் கூட முடியாது... ஏன்னா நான் உன் கணவன்... அந்த உறவு கொடுத்த உரிமை இது..." என்றவன் மீண்டும் அவளது நெஞ்சில் முகம் புதைத்து,

"இது எனக்கு மட்டுமேயான இடம்... அது கொடுத்த உரிமை... இப்போ புரிஞ்சதா நமக்குள் இருக்கும் உறவு என்னன்னு...?" என்றவன் அவளது நெஞ்சில் ஆழ முகம் புதைத்து அவளது வாசத்தை ஆழ்ந்து சுவாசித்துத் தன்னுள் சுகமாய் நிரப்பிக் கொண்டான்...

"ப்ச், விடுங்க மாமா..." என்று அவள் கூச்சத்துடன் நெளிந்தாள்...

மீண்டும் ஒரு முறை தனது முகத்தை அவளது நெஞ்சில் அழுத்தமாய்ப் பதித்தவன் பின் அவளை நிமிர்ந்து பார்த்து,

"உன்னில் எனக்கான உரிமையை ஒவ்வொண்ணா செய்முறையாய் உனக்கு விளக்கம் சொல்லி

கொடுக்கணும்ன்னு தோணுது... ஆனா அதுக்கான நேரம் இப்போ இல்லை... நிச்சயம் ஒருநாள் சொல்லி கொடுப்பேன்..." என்று கண்சிமிட்டியபடி எழுந்தவன் அவளது நெற்றியில் இதழ் பதித்து,

"தேங்க்ஸ் பேபி... என் மனசிலுள்ள பாரம் எல்லாத்தையும் கரைக்கும் வித்தை உன்னுடைய கைகளுக்கு மட்டுமே இருக்கிறது..." என்று மனமார நன்றியுரைத்தவன் அவளிடம் விடைப்பெற்றுச் சென்றான்...

கணவன் சென்ற பின்னர் நிஷிலா நெஞ்சம் குறுகுறுக்க அப்படியே நின்றிருந்தாள்... அவன் முகம் புதைத்த கணத்தை எண்ணியவளுள் சிலீரென்ற ஒரு உணர்வு உள்ளத்தைத் தீண்டி சென்றது... இப்போது எல்லாம் கணவனது அருகாமை அவளுள் புதுவித மாயாலோகத்தை அறிமுகப்படுத்தியது...

நாணத்துடன் முகத்தை மூடி கொண்டவள் நெஞ்சு இன்னமும் கணவனது வெப்பமான மூச்சை உணர்ந்தது... அவனது வெப்ப மூச்சில் அவள் பனித்துளியாய் கரைந்து போனாள்... இது தான் காதலா...? அவளுக்கே தெரியவில்லை... அவள் வெகுநேரம் உறைநிலையில் அப்படியே நின்றிருந்தாள்...

காரில் சென்று கொண்டிருந்த சிம்மவிஷ்ணுவோ அதற்கு நேர்மாறான மனநிலையில் இருந்தான்... அவனது முகம் பாறை போல் இறுகியிருந்தது... ஏனெனில் அவன் அடுத்துச் செய்யப் போகிற காரியம் அப்படி... நேரே அவனது கார் போய் நின்ற இடம் மாடசாமி தங்கியிருந்த வீடு... அவனைக் கண்டதும் மாடசாமி முகம் மலர வரவேற்றார்...

"மருமக புள்ள, பேத்தி எல்லாம் சௌக்கியமா சுடலை..."

"எல்லோரும் நல்லாயிருக்காங்கப்பா... இங்கே தான் இருக்காங்க... ஒருநாள் நீங்க வீட்டுக்கு வாங்க..."

"கட்டாயம் வர்றேன்ப்பா... ஆனா என்னைய அங்கே தங்க மட்டும் சொல்ல கூடாது..." என்று வெள்ளந்தியாய் சிரித்த மனிதரை கண்டு அவனது மனம் கனத்தது...

ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்படாத இந்த மனிதர் வாழும் உலகில் தான் இளவரசி மாதிரியான பேராசை பிசாசுகளும் உயிர் வாழ்கின்றது... அவனுக்கு இளவரசியின் நினைவே கசந்தது...

"நீ எப்படியிருக்கச் சுடலை...?" என்று கேட்டவரை அங்கிருந்த திண்ணையில் அமர வைத்தவன் அவரது காலடியில் அமர்ந்து அவரது மடியில் தலை வைத்து படுத்துக் கொண்டு,

"நான் நல்லாயில்லைப்பா..." என்று கூறியவனின் விழிகள் கலங்க துவங்கியது...

"ஏன் ராசா...?" மாடசாமியின் கை அவனது தோளை வருடி கொடுத்தது...

"இந்த விசயத்தை உங்க கிட்ட எப்படிச் சொல்றதுன்னு எனக்குத் தெரியலை... அதனால் தான் இதுநாள் வரை இதை உங்க கிட்ட சொல்லாம மறைச்சு வச்சிருந்தேன்..."

"என்ன விசயம் சுடலை...?" அவருக்குக் குழப்பமாக இருந்தது... அவரை நிமிர்ந்து பார்த்தவன்,

"நான் சுடலை தான் என்பதை நீங்க நம்புறீங்களாப்பா...?" என்று தவிப்புடன் கேட்டவனை விழி கலங்க பார்த்தவர்,

"நாம போடுற சட்டை மாதிரி உன் உடம்பு வேணா மாறியிருக்கலாம் சுடலை... ஆனா இந்த உடலுக்குள் இருக்கும் ஆன்மா என்னோட சுடலை தான்... நான் உன்னை நம்பறேன்..." அவரது ஆதரவான வார்த்தையில் அவன் சற்றுத் தெளிந்தான்...

"இப்போ நான் சொல்ல போறதையும் நீங்க நம்பணும்..."

"உன்னை நம்பாமலா...? சொல்லுப்பா..."

தான் கூற போகும் செய்தி கேட்டு இந்த வெகுளி மனிதரின் மனம் என்ன பாடுபடும் என்று அவன் மனதிற்குள் வேதனை கொண்டான்... அதற்காகச் சொல்லாது இருக்கவும் முடியாது... இசக்கிமுத்து, சுடலைமுத்து இருவரின் இறப்பிற்கு நியாயம் செய்ய வேண்டுமே... மனதை கல்லாக்கி கொண்டு அவன் அன்று நடந்ததை அப்படியே அவரிடம் கூறலானான்...

அவன் சொல்ல சொல்ல அவரது விழிகளில் இருந்து விழிநீர் நிற்க மாட்டாது பொங்கி வழிந்தது... அவன் முழுவதும் கூறி முடித்ததும் அவர் தலையிலும், நெஞ்சிலும் அடித்துக் கொண்டு அழுதார்...

"இந்தக் கையால் தானே உன் அப்பனுக்குக் கல்யாணம் பண்ணி வச்சேன்... காலம் முழுசும் சந்தோசமா வாழ்வாங்கன்னு நினைச்சா அவனை இப்படி அநியாயமா கொன்னுட்டாளே ராட்சசி... அவ சந்தோசத்துக்காகச் சொந்த புள்ளைய கொன்னு இருக்காளே பாதகத்தி... பெத்த வயிறு துடிக்க வேண்டாமா...? எப்படி எல்லாம் பேசி நடிச்சு என்னை நம்ப வச்சு கழுத்தறுத்துட்டாளே... நான் பாவி... அவளைக் கொஞ்சமும் சந்தேகப்படாம போயிட்டேனே..."

வாய்விட்டு அழுது புலம்பியவரை அவன் ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்... அவனது கண்களில் இருந்தும் கண்ணீர் வழிந்தது...

"அவளை அப்படியே விடக் கூடாது சுடலை... ஏதாவது பண்ணணும், ஏதாவது பண்ணணும்..." என்று அழுத விழிகளைச் சட்டையில் துடைத்தபடி அவர் கூற...

"நிச்சயம் ஏதாவது பண்ணுவோம்ப்பா..."

"நீ எப்படிப்பா இந்தத் துரோகத்தைத் தாங்கிக்கிட்ட...? உனக்கு ரொம்ப வலிச்சதா சுடலை...? என் மகனே..." என்று மீண்டும் அவனைப் பார்த்து கதறியவரை கண்டு,

"வலிச்சதுப்பா, ரொம்ப ரொம்ப... மூச்சுக்காத்து இல்லாம உயிருக்கு போராடினப்போ ரொம்ப வலிச்சது... யாராவது வந்து என்னைக் காப்பாத்த மாட்டாங்களான்னு நான் ஏங்கினேன்..." என்று விழி கலங்க கூறியவனின் மனக்கண்ணில் இளமையான பத்ரிநாத்தின் உருவம் வந்து போனது...

இடைப்பட்ட மூன்று ஆண்டுகளில் பத்ரிநாத் சுடலைமுத்துவிற்கு இன்றியமையாதவராக மாறி போனாரே...

"கடவுளே, எம்புள்ள உசிருக்கு இப்படித் தவிச்சிருக்கே... இதுக்கு என் உசிரை எடுத்து இருக்கலாமே..." என்று அழுதவரை அவன் ஆறுதல்படுத்தினான்...

"எனக்கு வர்ற ஆத்திரத்தில் அவளைக் கண்டந்துண்டமா வெட்டி போடணும் தோணுது சுடலை..." என்று ஆத்திரத்துடன் முழக்கமிட்டவரை கண்டு,

"வெட்டிட்டு ஜெயிலுக்குப் போறதால் மட்டும் நிம்மதி வந்துவிடப் போகுதாப்பா... நமக்கு வலிக்கச் செஞ்சவங்களுக்கு இன்னமும் வலிக்கச் செய்யணும்... இந்தச் சமுதாயம், கௌரவம், அந்தஸ்துக்காகத் தானே அப்படிப் பண்ணினாங்க... அதை அப்படியே தலைகீழா மாத்தணும்... அவங்க கௌரவத்தை இழந்து, மானத்தை இழந்து இந்தச் சமுதாயம் முன்னாடி வெட்கி தலைகுனியணும்... அதுக்கு நீங்க தான் எனக்கு உதவி செய்யணும்..."

"என்ன செய்யணும் சொல்லு சுடலை...?"

சிம்மவிஷ்ணு தனது திட்டத்தை அவரிடத்தில் விளக்கி கூறினான்...

"நீங்க கம்ப்ளையிண்ட் மட்டும் பண்ணுங்க... அதுக்கான ஆக்சனை நான் பார்த்துக்கிறேன்..." என்று கூற...

"நிச்சயம் செய்றேன்ப்பா... இப்பவே கிளம்பு நாம போகலாம்..." என்று அவர் கிளம்பினார்...

பெரிய தந்தையும் மகனும் எதிரிகளைப் பழிவாங்க கிளம்பினர்... அஞ்சேரி ஊரில் இருந்த காவல்நிலையத்தில் மாடசாமி புகார் அளித்த போது முதலில் அதை ஏற்க மறுத்தனர்...

"யோவ் உளறாம போய்யா... நாற்பது வருசத்துக்கு முன்னே செத்து போனவனைத் தோண்டி எடுக்கச் சொல்றியே... இருக்கிற கேசை முடிக்கிற வழி தெரியாம நாங்களே விழி பிதுங்கிட்டு இருக்கோம்... இதுல நீ வேற நேரம் காலம் தெரியாம காமெடி பண்ணிட்டு..."

"சார் நான் சொல்றது அத்தனையும் உண்மை..."

"குணசீலத்துல இருந்து தப்பிச்சு வந்துட்டியா...? இப்படியே பேசிட்டு இருந்தேன்னு வையி உன் மேல் பொய் கேசு போட்டு உள்ளே தள்ளிருவோம்... ஓடி போயிரு..." என்று அலட்சியமாகப் பதில் கூறினார் அந்த அதிகாரி...

"இந்தக் கேசை நீங்க எடுக்கலைன்னா தண்ணி இல்லாத காட்டுக்கு நீங்க போகப் போறது உறுதி..." என்றபடி அங்கே பிரசன்னமானான் சிம்மவிஷ்ணு...

முதலில் மாடசாமியை அனுப்பி வைத்துவிட்டு அவன் வெளியில் காத்திருந்தான்... உடன் அவன் வந்தால் என்ன ஏதென்று விசாரிப்பார்கள் என்று எண்ணி அவன் அமைதி காத்தான்... ஆனால் அவன் தனது பலத்தைப் பயன்படுத்தாது காரியமாகாது என்று தோன்றவும் உள்ளே வந்துவிட்டான்...

சிம்மவிஷ்ணுவின் தோரணையில் அந்த அதிகாரியின் விழிகளில் சற்று மரியாதை எட்டிப்பார்த்தது...

"உட்காருங்க சார்..." என்று அவனை அமர சொன்னார்... அவன் முதலில் மாடசாமியை அமர வைத்துவிட்டு பின்பு தான் அமர்ந்தான்...

"பார்த்தா பெரிய இடம் மாதிரி இருக்கீங்க... நீங்களே சொல்லுங்க... இந்தாளு..." அதற்குச் சிம்மவிஷ்ணு

அவரைக் கண்டு ஆட்சேபணையாய் பார்த்து வைத்ததில் அவர் தனது பாவனையை மாற்றிக் கொண்டார்...

"இவர் சொல்றது உங்களுக்கே நியாயமா தோணுதா...?" என்று கேட்க...

"அது ஏன் உண்மையா இருக்கக் கூடாது...?" என்று அவன் திருப்பிக் கேட்க... அவர் யோசனையில் ஆழ்ந்தார்...

"உங்களுக்கு இன்னமும் யோசனை இருந்தால் உள்துறை அமைச்சர் கிட்ட பேசுறீங்களா...?" பத்து வருடங்களுக்கு முன் தொழில்துறை அமைச்சராக இருந்த அவனது ஊர்க்கார அரசியல்வாதி இப்போது உள்துறை அமைச்சராக இருக்கிறார்...

"அதெல்லாம் வேண்டாம் சார்..." என்று அவசரமாக இடைமறித்தார் அந்த அதிகாரி...

"இந்தக் கேசில் குற்றாவளிங்களைப் பிடிக்கிறது மூலம் உங்களுக்குப் பதவி உயர்வு கூடக் கிடைக்கச் சான்ஸ் இருக்கு சார்... ஏன்னா குற்றவாளிங்க ரொம்பப் பெரிய இடத்து ஆளுங்க..." அவன் கூறியதை கேட்டு அவரது முகம் மலர்ந்தது...

"அப்படின்னா சரி சார்..." என்று அவர் புன்னகைக்க...

"நாற்பத்திரெண்டு வருசத்துக்கு முன்னாடி பத்ரிநாத் என்பவர் சுடலைமுத்து என்கிற எட்டு வயது சின்னப் பையனை காணவில்லைன்னு புகார் கொடுத்திருப்பார்... அதே வழக்கை தான் இப்போ இவர் மீண்டும் கொண்டு வந்திருக்கிறார்..." என்று அவன் மாடசாமியை சுட்டிக்காட்டினான்...

"அது ரொம்ப வருசத்துக்கு முன்னாடி நடந்தது... அதுவும் அப்பவே பையன் பாடி கிடைச்சுக் காரியம் பண்ணியாச்சுன்னும் சொல்றீங்க... அப்படின்னா கேசை இழுத்து மூடியிருப்பாங்களே... சரி எதுக்கும் அதைத் தேடி பார்க்க சொல்கிறேன்... இப்போ இவரைப் புதுசா

கம்ப்ளையிண்ட் எழுதி கொடுத்துட்டுப் போகச் சொல்லுங்க..."

மாடசாமி புகார் சொல்ல சொல்ல அங்கிருந்த ஏட்டுக் காகிதத்தில் எழுதி மாடசாமியிடம் கை நாட்டு வாங்கிக் கொண்டார்... அதில் மாடசாமி இளவரசி, செல்வரத்தினம், மணிபாரதி இவர்கள் மூன்று பேரையும் முக்கியக் குற்றவாளியாகச் சேர்த்திருந்தார்... சிறுவனைத் தாங்கள் தான் கொன்றதாக மணிபாரதி குடித்துவிட்டுப் போதையில் கூறியதாக அவர் அதில் வாக்குமூலம் பகிர்ந்திருந்தார்...

மாடசாமியின் புகாரின்படி சந்தேகத்தின் பேரில் முன்பு செல்வரத்தினத்தின் தோப்பாக இருந்த அந்தத் தோப்பில் இருந்த குறிப்பிட்ட மண் மேட்டை தோண்டி பார்ப்பதற்காகக் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் சென்றனர்...

இந்த விசயம் இளவரசிக்குத் தெரியாது போய்விட்டது... ஏனெனில் கடந்த நாற்பது வருடங்களாக அவர்கள் அங்குச் செல்வதில்லை... முதலிலேயே ஊராருடன் ஒட்ட மாட்டார்கள்... இப்போது பட்டணம் சென்றதும் சுத்தமாய்ச் சொந்த ஊரை மறந்து போயினர்... பத்ரிநாத் மட்டும் சுடலைமுத்துவின் நினைவிடத்திற்கு வந்துவிட்டு போவார்... அது அவரது சுடலைமுத்துவின் நினைவிடம் இல்லை என்பதை அறியும் போது அவர் என்னாவாரோ...???

முன்பு பத்தடி ஆழத்தில் புதைக்கப்பட்ட சுடலைமுத்துவின் எலும்புகளைத் தேடி இப்போது அவர்கள் இருபது அடி ஆழம் வரை தோண்டி செல்ல வேண்டியிருந்தது...

சிம்மவிஷ்ணு பேண்ட் பையில் கைவிட்டபடி விழிகள் சிவக்க, முகம் இறுக குழி தோண்டுவதை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்... தான் மூச்சடைக்கத் துடிதுடிக்கப் புதைந்த இடத்தைப் பார்ப்பதற்கும் தனித் தைரியம் வேண்டும்... அது அவனுக்கு இருந்தது...

கடந்த காலம் கண்ணில் விரிய விரிய அவனது மனதில் பழிவெறி கூடி கொண்டே போனது...!!!

"நரசிம்மனாய் வீறு கொண்டு சீறியவனை,
பந்த பாசம் கொண்டு பூவிலங்கு போட்டாய்,
விஷ்ணுவாய் சாந்தசொரூபமாய் மாறி போனேனே,
அன்று பழிவெறிக் கொண்டு ஆடிய வெறியாட்டம்,
இன்று பழி கொல்ல தயங்குவது ஏனோ?
உன்னில் நான் அடங்கியது ஏனோ?
உனக்காகப் பாதை மாறத் துடிப்பது ஏனோ?
என் வெறி அடங்க வேண்டும், உன் மீதான
காதல் அதிகரிக்க வேண்டும்...
மதியால் விதி வெல்ல காத்திருக்கிறேன்...
என் எதிரிகளை வீழ்த்த தந்திரத்தோடு
வழி மீது விழி வைத்துக் காத்திருக்கிறேன்"

கொள்ளும்...!!!

"சார், மண்டையோடு கிடைச்சிருச்சு..."

குழி தோண்டி கொண்டிருந்தவன் மேல் நோக்கி அண்ணாந்து பார்த்துக் கத்தினான்... அவனது குரலில் சிம்மவிஷ்ணுவின் உடல் விறைத்தது... அவனது மனதினுள் பெரும் உணர்வு போராட்டம் நடந்து கொண்டிருந்த போதும் அவன் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது கல்லாக இறுகி போயிருந்தான்...

"வேற எலும்புகள் ஏதாவது இருந்தாலும் பத்திரமா கவர்ல போட்டு எடுத்துட்டு வாய்யா..." காவல்துறை அதிகாரி குழியைப் பார்த்து கத்தினார்...

"சரிங்க சார்..." என்றவன் தனது வேலையில் கவனமானான்...

உயிரும் சதையுமாய்ப் பார்த்தவனை இப்படி எலும்பு கூடாகக் கண்கொண்டு பார்க்க முடியாதவராய் மாடசாமி, "எஞ்சாமி..." என்று பெருங்குரலெடுத்து கத்தியபடி மண்ணில் வீழ்ந்து கதறினார்...

அவருக்கு ஆறுதல் அளிக்க வேண்டும் என்று சிம்மவிஷ்ணுவின் மூளை அறிவுறுத்தினாலும் அவனது மனமோ அவரை விட அதிகமாய்க் கலங்கி தவித்தது... எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் சுடலைமுத்துவின் மரணம், அது நேர்ந்த கணம் அவனை விட்டு மறையாது என்றே அவனுக்குத் தோன்றியது...

அன்று அன்பாய் உணவு ஊட்டி விட்ட இளவரசி அவன் கண்முன் வந்து போனார்... அதன் பின் அவன் வயிறும், தொண்டையும் எரிந்ததில் அவன் பயந்து போய்க் கத்தியது... அன்னையே விசத்தைக் கொடுத்ததாய் கூறியதை அறிந்து சிறுவன் அதிர்ந்தது... மாமன்கள் இருவரும் குற்றுயிராய் துடித்துக் கொண்டிருந்தவனின் இறுதி மூச்சை நிறுத்தியது என எல்லாம் படமாகக் கண்முன் ஓடியது...

"ம்மா..."

அன்று மூச்சடைத்ததைப் போல் இன்றும் அவனுக்கு மூச்சடைக்க அந்த வலியை இப்போதும் உணர்ந்தவனாய் அவன் மெல்லமாய் முனங்கினான்... மூச்சு விட முடியாதபடி திணறியவனுக்கு வியர்த்து வழிய துவங்கியது... நிற்க மாட்டாது அவனது உடல் தள்ளாடியது... அன்று அவன் உணர்ந்த மரணபயத்தை இதோ இப்போதும் உணர்ந்தவனாய் அவன் வலியோடு நின்றிருந்தான்...

குழிக்குள் இருந்தவன் எல்லா எலும்புகளையும் சேகரித்துக் கொண்டு மேலே ஏறி வந்தான்... சுடலைமுத்துவின் எலும்புகளைக் கண்டு இன்னமும் அதிகமாய்க் கதறினார் மாடசாமி... தனது எலும்பு கூட்டை தானே பார்க்கும் அவலநிலைக்குத் தன்னைத் தள்ளிய அந்தக் கடவுளை அந்தக் கணம் அவன் சபித்தான்...

'ஏன் எனக்கு மட்டும் நல்லதொரு அமைதியான வாழ்க்கையை நீ அமைத்து கொடுக்கவில்லை...?' என்று அவன் மனதிற்குள் கடவுளிடம் சண்டையிட்டான்...

"சார் நீங்க சொன்னது உண்மைன்னு இப்போ நிரூபணமாகி இருக்கு..." என்று கூறியபடி காவல்துறை அதிகாரி அவனின் முன் வந்தார்...

அவன் சட்டென்று தன்னைச் சுதாரித்துக் கொண்டவன், "அடுத்து என்ன செய்யப் போறீங்க...?" என்று கேட்க...

"நீங்க கொடுத்த புகாரின் அடிப்படையில் அவங்க மூணு பேர் கிட்டேயும் விசாரணை நடத்தணும்... அந்தம்மாவோட டிஎன்ஏ இந்த எலும்போட டிஎன்ஏவோட மேட்ச் ஆகுதான்னு பார்க்கணும்... இது எல்லாம் சரியா வந்தால் தான் அடுத்தக் கட்டத்துக்கு மூவ் பண்ண முடியும்..."

"நாங்க சொன்னது உண்மைன்னு தெரிஞ்ச மாதிரி மத்தது எல்லாம் உண்மைன்னு தெரிய வரும் சார்..."

காவல்துறை அதிகாரி அவனிடம் விடைப்பெற்று சென்றுவிட... அங்குக் கூடியிருந்த ஊர் மக்களும் கொஞ்சம் கொஞ்சமாய்க் கலைந்து சென்றனர்... எஞ்சியிருந்தது அவனும், மாடசாமி மட்டுமே... குழியைப் பார்த்தபடி இன்னமும் அழுது கொண்டிருந்த மாடசாமி அருகே அவன் தொய்ந்து போய் அமர்ந்தான்... தனது விலையுயர்ந்த உடை அழுக்காவதை கூட அவன் கருத்தில் கொள்ளவில்லை... முழங்காலின் மீது கைகளைத் தொங்க போட்டபடி தொடுவானத்தை வெறித்தபடி அமர்ந்திருந்தவனின் மனம் வேதனையில் குமுறிக் கொண்டிருந்தது...

வெகுநேரம் அப்படியே அமர்ந்திருந்தவன் மெல்ல மாடசாமியின் தோளை தொட்டு, "அப்பா கிளம்பலாமா...?" என்று கேட்டான்...

"அவளை அப்படியே விட்டுட்டுக் கிளம்பச் சொல்றியா சுடலை... ம்ஹூம், அது என்னால் முடியாதுப்பா..."

"அப்பா இதில் நிறைய லீகல் ஃபார்மாலிட்டீஸ் இருக்கு... அது எல்லாம் முடிஞ்சு தான் அவங்க மேல ஆக்சன் எடுப்பாங்க..."

"அதுக்கு இடையில் அவங்க தப்பிச்சு போயிட்டா...?" அவருக்குச் சந்தேகமாக இருந்தது...

"என் கணிப்பு சரின்னா அவங்க தப்பிச்சு போக முடியாம பத்திப்பா பார்த்துக்குவாரு..."

"நாற்பது வருசமா ஒரு கொலைக்காரி கூட அவன் குடித்தனம் நடத்தி இருக்கான்... அவனை எல்லாம் என்ன சொல்ல...? அவளோட லட்சணத்தைப் பத்தி அப்பவே தெரிஞ்சியிருக்க வேண்டாமா...?"

"நான் சொல்லலைன்னா அவங்களைப் பத்தி உங்களுக்கு எப்படித் தெரிஞ்சிருக்கும்...?"

மாடசாமி பதில் பேசாது அமைதி காத்தார்...

"அவங்க நடிப்புக் கலையில் பட்டம் வாங்கினவங்க... அவங்களா உண்மை சொல்லாத வரை யாருக்கும் எந்தவித சந்தேகமும் வராது... இந்த விசயம் மட்டும் பத்திப்பாவுக்குத் தெரியட்டும் அப்புறம் இருக்கு அவங்களுக்கு..." என்றான் அவன் கோபமாக...

"துடிக்கத் துடிக்கக் கொல்லணும்ப்பா..."

"நிச்சயமாய்..." என்றவன்,

"போகலாம்ப்பா, வாங்க..."

அவன் அவரை அழைத்துக் கொண்டு மதுரைக்குக் கிளம்பினான்... அவன் இங்கே கிளம்பி வந்து மூன்று தினங்கள் ஆகிவிட்டது... காவல்துறையில் புகார் கொடுத்து அவர்கள் நடவடிக்கை எடுக்கும் வரை அவன் இங்கேயே நாகர்கோவிலில் தங்கிவிட்டான்... மனைவியிடமும், பெற்றோரிடமும் தொழில் விசயமாய் வெளியில் தங்கியிருப்பதாகக் கூறிவிட்டான்...

மதுரை நெருங்கியதும் அவன் அவரிடம், "அப்பா நம்ம வீட்டுக்கு வாங்களேன்..." இந்த மாதிரியான மனநிலையில் அவரைத் தனியே விட அவனுக்கு மனம் வரவில்லை...

"நான் அங்கே..." என்று தயங்கியவரை கண்டு,

"அங்கே உங்க அருமை மருமகள் இருக்கிறாள்... அதை விட உங்க பேத்தி அம்முவை பார்த்தால் போதும்... எல்லாக் கவலையும் பறந்து போயிரும்..." என்று கூறி புன்னகைத்தவனைக் கண்டு அவர் சரியென்று தலையசைத்தார்...

அவன் உற்சாகமாய்க் காரை தனது வீட்டினை நோக்கி செலுத்தினான்... அவர்கள் இருவரும் வீட்டிற்குச் சென்ற போது பின்மாலை பொழுதாகியிருந்தது... காரை விட்டு இறங்கிய சிம்மவிஷ்ணுவின் காதுகளில் மகள் ஆதிரையின் மழலை குரல் தேனாய் வந்து பாய்ந்தது... அவனது அத்தனை நேர துன்பமும் மறைந்து மனதில் இன்பம் பெருக்கெடுக்க அவன் வேகமாய் வீட்டினுள் சென்றான்... அவனைத் தொடர்ந்து மாடசாமியும் உள்ளே வந்தார்...

வரவேற்பறை சோபாவில் தாத்தாவின் மடியில் ஆதிரை அமர்ந்து கொண்டு அழகாகப் பாடி கொண்டிருந்தாள்... மற்றொரு சோபாவில் மீனாட்சி, நிஷிலா இருவரும் புன்னகையுடன் சின்னவளின் பாடலை ரசித்துக் கேட்டு கொண்டிருந்தனர்... அவர்கள் நால்வரையும் சுற்றி வீட்டு வேலைக்காரர்கள் நின்று கொண்டு ஆதிரை பாடுவதை அதிசயமாகப் பார்த்து கொண்டிருந்தனர்...

"இதயம் ஒரு ஊஞ்சலே இடம் வலம் அது ஆடிடும்...
இன்பத்தில் அது தோய்ந்திடும் துன்பத்தில் அது மூழ்கிடும்
நடந்ததை நாம் நாளுமே நினைப்பதில் பொருள் இல்லையே!?
நடப்பதை நாம் எண்ணினால் அதைவிட உயர்வில்லையே...
பூக்கும் பூவில் வீசும் வாசம் என்ன அழகு !
அதையும் தாண்டி வீசும் நம் நேசம் ரொம்ப அழகு !
அழகே அழகே.....

மழை மட்டுமா அழகு ! சுடும் வெயில் கூட ஒரு அழகு !
மலர் மட்டுமா அழகு ! விழும் இலை கூட ஒரு அழகு
புன்னகை வீசிடும் கார்முகில் அழகு !

வார்த்தைகள் தீர்கையில் மௌனங்கள் அழகு !
மன்னிக்கச் சொல்லிடும் பொய்களும் அழகு !
உண்மையில் அதுதான் விழியாய் அழகு !"

மகள் பாடும் அழகில் சிம்மவிஷ்ணு அப்படியே மெய்மறந்தவனாய் கதவு நிலையின் மீது சாய்ந்தபடி அசையாது நின்றுவிட்டான்... சாதாரணக் கல்லும், மண்ணுமான வீட்டை அன்பும், பாசமுமாய் மாற்றிவிட்டாள் அவனது அருமை மகள்... அவள் பாடிய பாடல் தனக்காகப் பாடப்பட்டது போல் அவனுக்குத் தோன்றியது...

அவன் கடந்த காலத்தைக் கடந்து வர எண்ணினாலும் கடந்த காலத்தில் அவன் செய்த பாவம் அவனது மனையாளாய் அவன் கண்முன் உயிர் கொண்டு வலியுடன் நடமாடுகிறதே... இளவரசிக்கும், அவளது சகோதரர்களுக்கும் தண்டனை வாங்கிக் கொடுப்பதன் மூலம் அவன் சுடலைமுத்துவிற்கு நியாயம் செய்துவிடலாம்... ஆனால் தன்னால் பாதிக்கப்பட்ட பெண்ணவளுக்கு அவன் என்ன நியாயம் செய்துவிட முடியும்...? அவன் வேதனையுடன் விழிகளை மூடி கொண்டான்...

"அப்பா..."

மகளது குரலில் விழிகளைத் திறந்து அவளைப் பார்த்து புன்னகைத்தவன் தனது கால்களைக் கட்டி கொண்ட மகளைத் தூக்கி அணைத்து உச்சிமுகர்ந்தான்...

"அம்மு சூப்பரா பாடுனாங்களே..." என்று அவன் மகளைப் பாராட்ட...

"அம்மா என்னை விடச் சூப்பரா பாடுவாங்க... அவங்க தான் என்னோட டான்ஸ், பாட்டு குரு..." என்று அவனது காதில் ரகசியம் பேசிய மகள் கிலுக்கி சிரித்தாள்...

அவன் வியப்பாய் மனைவியைப் பார்த்தான்... அவளைப் பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது அவளது பெயரை தவிர...

"வாங்க மாமா..." என்று மாடசாமியை வரவேற்ற நிஷிலா மகளைப் பார்த்து,

"அம்மு கீழே இறங்கு... அப்பா வெயிட் தூக்க கூடாதுன்னு சொல்லி இருக்கேன்ல..." என்று அதட்ட...

"அச்சோ, மறந்தே போயிட்டேன்..." என்று நாக்கை கடித்துக் கொண்டு தந்தையின் கைகளில் இருந்து இறங்க துடித்தது சின்னச் சிட்டு...

"சும்மாயிரு நிலா... என் மகளை நான் அப்படித்தான் தூக்கி கொஞ்சுவேன்..." என்றவன் மகளை விடாது அணைத்துக் கொண்டு,

"வாங்கப்பா..." என்று மாடசாமியை உள்ளே அழைத்தவன் சோபாவில் சென்றமர்ந்தான்...

அவன் தனது மகளுடன் தனி உலகத்தில் ஆழ்ந்து போக... சுந்தரபாண்டியன் மாடசாமியுடன் பேசி கொண்டிருந்தார்... வயல், தோப்புத் துரவு, மில் கணக்கு என்று அவர்கள் பேச நிறைய விசயம் இருந்தது... மாடசாமியும் கொஞ்சம் கொஞ்சமாய்த் தனது துக்கத்தை மறந்து அவரது பேச்சில் லயிக்க ஆரம்பித்தார்...

இரவு உணவை மறுத்த மாடசாமியை வற்புறுத்தி உண்ண வைத்தான் சிம்மவிஷ்ணு... அவரைத் தனியறையில் படுக்கச் சொல்லிவிட்டு திரும்பியவனை அவர் தடுத்து நிறுத்தினார்...

"சுடலை உனக்குன்னு ஒரு அழகான குடும்பம் இருக்கு... உன் மனசை சஞ்சலப்படுத்தாம உனக்கான வாழ்க்கையை வாழ பாரு... இத்தனை நாளாய் நீ சுடலையாய் வருந்தியது போதும்... இனிமேல் நீ விஷ்ணுவா உன் வாழ்க்கையைச் சந்தோசமா வாழணும்..."

சிம்மவிஷ்ணு நிஷிலாவை ஏன் திருமணம் புரிந்தான்...? பின் அவளுக்காக ஏன் சிறைக்குச் சென்றான்...? என்பதை எல்லாம் இப்போது ஓரளவிற்கு மாடசாமி தானாக ஊகித்துக் கொண்டார்...

அவர் அருகில் வந்து அவரது கைகளைப் பிடித்துக் கொண்டு ஒரு நொடி பேசாது நின்றவன், "கடந்தகால ரணத்தோடு வாழணும்ன்னு தான் என் தலைவிதி எழுதியிருக்கு போலும்... போன ஜென்மத்தில் மத்தவங்களால் ரணம் என்றால், இந்த ஜென்மத்தில் என்னால் எனக்கு ரணம்... எனக்கு எதிரி நானே... நிலா என்னை மன்னிச்சு ஏத்துக்குவாள்ன்னு நம்பிக்கை இருக்கு... அவளோட மன்னிப்பில் தான் நான் என்னோட ரணத்தை மறக்கணும்... வாழ்க்கை என்ன வைத்து காத்திருக்கிறதோ... அதன்படி செல்ல முடிவெடுத்து விட்டேன்ப்பா..." என்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறினான்...

"நான் வேணா மருமக பொண்ணு கிட்ட பேசவா...?"

"வேண்டாம்ப்பா... அவளே ரொம்ப மெச்சூர்ட்டான பொண்ணு தான்... நான் ஏற்படுத்திய காயம் இன்னமும் ஆறாம அவளுக்கு வலி கொடுக்குது... அதே சமயம் எனக்காகவும் வருந்துகிறாள்... இதோ இப்போ கூட எனக்காகத் தான் இங்கே வந்து இருக்கிறாள்... நான் வருத்தப்படக் கூடாதுன்னு எனக்காக ஒவ்வொண்ணும் பார்த்து பார்த்து செய்கிறாள்... இது எல்லாம் எனக்குப் புரியாமல் இல்லை... ஆனா இதைத் தாண்டி கணவன் என்கிற உரிமை அவளுக்கு வர மாட்டேங்குது... அந்த உரிமையை, உணர்வை கொன்ற பாவி நான் தான்... இது எனக்குத் தேவையான தண்டனை தான்..."

மகனது மனவேதனை உணர்ந்து அந்தப் பெரிய தகப்பன் அமைதியாக இருந்தார்...

"நீங்க தூங்குங்கப்பா... விரைவில் எல்லாம் சரியாகும்..." என்று கூறியவன் அறையை விட்டு வெளியேறினான்...

தனது அறைக்குள் அவன் நுழைந்த போது ஆதிரை உறங்கியிருந்தாள்... மகள் அருகே வந்தவன் அவளுக்குப் போர்வை போர்த்திவிட்டு அவளது நெற்றியில் மென்மையாய் இதழ் பதித்தான்... அங்கிருந்த சோபாவில்

அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்து,

"நீ இன்னமும் தூங்கலையா...?" என்று கேட்டான்...

"இல்லை..." என்றவள் அருகில் அமர்ந்தவன்,

"முக்கியமானது எதுவும் படிச்சிட்டு இருக்கியா...?"

அவனது முகத்தை உற்று நோக்கியவள் அதில் இருந்த சஞ்சலத்தை உணர்ந்தவளாய் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு,

"உங்களை விட எனக்கு எதுவும் முக்கியம் இல்லை..." என்று கூற...

அதில் மனம் நெகிழ்ந்தவன், "தேங்க்ஸ் பேபி..." என்றபடி அவளது மடியில் படுத்துக் கொண்டான்...

கணவனைப் பற்றி அவளுக்கு நன்கு தெரியுமே... அவனது மனதினை ஏதோ ஒன்று உறுத்துகிறது என்பதை உணர்ந்தவளாய் அவள் அமைதியாக அவனது தலையைக் கோதி கொடுத்தாள்...

"நீ நல்லா பாடுவேன்னு அம்மு சொன்னாளே... எனக்காக ஒரு பாட்டு பாடேன்..."

"இந்த நேரத்திலா...? அம்மு எழுந்துர போகிறாள்..."

"சரி வேண்டாம்..." என்றவன் அவளது மடியில் முகம் புதைத்து படுத்துக் கொண்டான்...

நாளை விடியலில் நடக்கப் போகும் கடவுளின் விளையாட்டைக் காண அவன் ஆவலுடன் இருந்தான்... அதே நேரம் அது என்ன மாதிரியான விளைவுகளை உண்டாக்குமோ? என்று திக்திக் மனதுடன் திகிலுடன் அவன் காத்திருந்தான்...

"காணும் மனிதருக்குள் எத்தனை சலனம்
வெறும் கற்பனை சந்தோஷத்தில் அவனது கவனம்

காலை எழுந்தவுடன் நாளைய கேள்வி
அது கையில் கிடைத்த பின்னும் துடிக்குது ஆவி
ஏனென்ற கேள்வி ஒன்று என்றைக்கும் தங்கும்
மனிதன் இன்ப துன்பம் எதிலும் கேள்விதான் மிஞ்சும்
எனக்காக நீ அழலாம் இயற்கையில் நடக்கும்
நீ எனக்காக உணவு உண்ண எப்படி நடக்கும்
நமக்கென்று பூமியிலே கடமைகள் ஊண்டு
அதை நமக்காக நம் கையால் செய்வது நன்று

ஆரம்பத்தில் பிறப்பும் உன் கையில் இல்லை
என்றும் அடுத்தடுத்த நடப்பும் உன் கையில் இல்லை
பாதை வகுத்த பின்பு பயந்தென்ன லாபம்
அதில் பயணம் நடத்திவிடு மறைந்திடும் பாவம்

நாளை பொழுதும் என்றும் நமக்கென வாழ்க
அதை நடத்த ஒருவன் உண்டு கோவிலில் காண்க
வேளை பிறக்கும் என்று நம்பிக்கை கொள்க
எந்த வேதனையும் மாறும் மேகத்தைப் போல"

அவள் பாடிய பாடலின் வரிகள் அவனுக்காகவே பாடியது போலிருந்தது... மகள் பாடிய பாடல் ஒரு வகை ஆறுதல் அளித்தது என்றால் மனைவி பாடிய பாடல் வேறு வகையில் ஆறுதல் அளித்தது... தனக்குள் இருக்கும் சுடலைமுத்துவை மறக்க நினைத்தவன் இனி சிம்மவிஷ்ணுவாய் வாழ்க்கையை அனுபவித்து வாழ வேண்டும் என்று எண்ணினான்... ஏனெனில் இனி சுடலைமுத்துவிற்கு நியாயம் கிடைத்துவிடும் என்கிற நம்பிக்கை அவனுக்கு நிறையவே இருந்தது...

சிம்மவிஷ்ணுவாய் மனதை மாற்றிக் கொண்டவன் மனைவியின் மடியில் புரண்டு நேராகப் படுத்து அவளை அண்ணாந்து பார்த்து,

"ஏன்டி பொண்டாட்டி, இராத்திரி நேரம், பக்கத்தில் ஸ்மார்ட்டான புருசன்... இப்படிக் கிக்கான வேளையில் இப்படித் தான் தத்துவப் பாடலை பாடுவதா...? இது கொஞ்சமல்ல ரொம்பவே அநியாயம்டி..." என்று போலியாக

அலுத்து கொண்டவனைக் கண்டு அவள் திகைப்புடன் விழி விரிய பார்த்தாள்...

"எப்போ பாரு இது என்ன ரியாக்சன்...? முதல்ல இந்த ரியாக்சனை மாத்து... மாமனை பார்த்து ரொமான்ட்டிக் லுக் விடணும் பேபி..." என்று கூறியவனைக் கண்டு அவளது விழிகள் இன்னமும் விரிய, இதழ்களோ 'ஓ'வென்று குவிந்தது...

அவளது கழுத்தில் கை கோர்த்து அவளது முகத்தைத் தன் முகம் அருகே இழுத்தவன் வலக்கை விரல் கொண்டு அவளது இதழ்களை வருடியபடி,

"ரொமான்டிக் லுக் எப்படியிருக்கும்ன்னு தெரியாதா...? இதோ நான் உன்னைப் பார்க்கிற மாதிரி..." என்றவனை அவள் உற்று கவனித்தாள்...

அவனது இதயத்தில் கசிந்த நேசமானது அவனது விழி வழியே கசிந்து அவளைக் காதலாகப் பார்த்தது... கடந்த மூன்று மாதங்களாக அவனது பார்வைக்கு அர்த்தம் புரியாது விழித்தவள், அவன் அதற்கான விளக்கம் கூறிய போதும் அர்த்தம் தெரியாது முழித்தவள் இதோ இப்போது அவனது நேசத்தினை அவனது விழியில் சரியாகப் படித்தாள்... அந்த நொடி அவளது மனம் அவனது பக்கம் சிறிது சாயத்தான் செய்தது...

அவளது கைவிரல் அவளையும் அறியாது அவனது சிகையைக் கோதி கொடுத்தது... அவளது கையை எடுத்து தனது கன்னத்தோடு வைத்து கொண்டவன் அப்படியே கண்மூடி அமைதியாக இருந்தான்...

"நீங்க ஏன் மாமா எனக்கு மட்டும் நல்லவங்களா இல்லாம போனீங்க...?"

நீண்ட நாட்களாக மனதில் போட்டு உழட்டி கொண்டிருந்த எண்ணத்தை அவனிடம் நேரிடையாய் கேட்டவளின் விழிகளில் இருந்து கண்ணீர் சொட்டியது... அவளது கண்ணீரை வேதனையுடன் துடைத்து விட்டவன்,

"இந்தக் கேள்வியைத் தான் நான் தினமும் எனக்குள் கேட்டு கேட்டு என்னை வெறுக்கிறேன் பேபி... நான் செய்த தவறை மன்னிப்பின் பின்னால் நியாயப்படுத்த விரும்பலை... ஆனால் மன்னிப்பை தவிர எனக்கு வேறு வழியில்லை... என்னை உன் கணவனா ஏத்துக்கோன்னு சொல்லலை... முடிந்தால் என்னை மன்னித்துவிடு..."

"கணவனா ஏத்துக்காம தான் மடியில் படுக்க வச்சியிருக்கேனா...?" அவள் சிறு கோபத்தோடு அவனை எழுப்பிவிட முயன்றாள்...

"நான் உன் கணவன்...? நீ என்னை மன்னிச்சு ஏத்துக்கிட்ட...? அப்படித் தானே...?" அவன் ஒவ்வொரு கேள்வியையும் நிதானமாய் அவளைப் பார்த்தபடி கேட்க...

"அப்படியே தான்..." என்றவளை உற்று நோக்கியவன்,

"எங்கே நிரூபி பார்க்கலாம்...?" என்று கூற...

ஒரு நொடி அவனது வார்த்தையில் திகைத்து விழித்தவள் மறுநொடி அவனது முகம் நோக்கி குனிந்தாள்... அவனது மனநிம்மதிக்காகத் தன்னையே கொடுத்தவள் அவள், அவனுக்காக உயிரையும் கொடுக்க நினைப்பவள்... இதோ இப்போதும் அவனுக்காக அவன் கேட்டதைத் தர சித்தமானாள்...

இருவரது இதழ்களும் உரசி கொள்ளும் போது அவனது கை தடுப்பு சுவராய் இடையில் எழுந்து தடுத்தது... அவள் புரியாது அவனைப் பார்த்தாள்...

"நீ எனக்காக எதையும் செய்வேன்னு எனக்குத் தெரியும் பேபி... ஆனா எனக்கு உன்னோட உடல் வேண்டாம்... மனசு வேணும்... அதில் திகட்ட திகட்ட காதல் வேணும்..."

"நான்... அது வந்து..." என்று மேலே கூற போனவளை தடுத்தவன்,

"உன்னோட கண்ணுல இன்னமும் தயக்கம் இருக்கு பேபி... அதில் இன்னமும் காதல் வரலை... அப்படிக் காதல் வரும்

போது நீ சொல்லவே வேணாம்... நானே உன்னை எடுத்துக்குவேன்..."

அவளது மனம் பாராது உடலை மட்டும் எடுத்து கொண்டவன் இப்போது இப்படிப் பேசுவது கண்டு அவளுக்கு ஆச்சிரியமாக இருந்தது...

"கடைசிவரை காதல் வராம போனால்...?" அவள் கேள்வியாக அவனை நோக்கினாள்...

"எனக்கு இந்த வாழ்க்கையே போதும்... நீ என் கூட இருந்தாலே போதும்... வேறு எதையும் நான் உன் கிட்ட இருந்து எதிர்பார்க்கலை..."

"யாரோ சொன்னாங்க ஒருநாள் இல்லை ஒருநாள் என் கிட்ட அவங்களோட உரிமை என்ன என்னன்னு ஒவ்வொண்ணா செயல்முறை விளக்கம் கொடுப்பேன்னு..." என்று குறும்பு குரலில் கூறியவளை ஆசையுடன் பார்த்தவன்,

"என் மனசில் அந்த ஆசை கடலளவு இருக்கு... நடக்கும்ன்னு நம்பிக்கை இருக்கு... நம்பிக்கை தானே வாழ்க்கை..." என்று அவன் கண்சிமிட்டி சிரித்தான்...

அவனது நம்பிக்கையில் அவளது முகம் பூவாய் மலர்ந்தது... அவனைக் கனிவாய் பார்த்தவள்,

"கொஞ்சம் கொஞ்சமா என்னை மாத்திக்க முயற்சி பண்றேன்..." என்க...

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்... நீ எப்போதும் போலிரு... என்னைத் திட்டணும்ன்னா திட்டிக்கோ, அடிக்கணுமா? அடிச்சுக்கோ... எனக்கு மரியாதை தர்ற என் மனைவி நிலாவை விட என்னை 'வாடா', 'போடா'ன்னு கூப்பிடற என் பேபி தான் எனக்கு வேணும்..."

அவனைக் கோபமாய் முறைத்து பார்த்தவள், "போடா..." என்று பல்லை கடிக்க...

"இப்போ இப்போ தான் உன்னை ரொம்பப் பிடிச்சியிருக்கு பேபி..." என்று கூறி அவன் அட்டகாசமாகச் சிரித்தான்...

"ஐயோ அம்மு எழுந்துர போகிறாள்..." என்று அவள் அவனது வாயை மூடினாள்...

மூடிய அவளது கையில் இதழ் பதித்தவன் எழுந்து நின்று கொண்டு, "போய்ப் படு..." என்று கூறியவன் மகளின் பக்கத்தில் சென்று படுத்துக் கொண்டான்...

நிஷிலா மறுபக்கம் வந்து படுத்தவள் அவனைப் பார்த்தபடி, "நாளைக்கு உங்க சித்தப்பாவோட பேத்தி சடங்கு இருக்குதாம்..." என்று கூற...

"நம்ம கல்யாணத்தை ஒட்டி பிறந்த பொண்ணு... பதினொரு வயசு தான் இருக்கும்... அதுக்குள்ள பெரிய பெண்ணாகி விட்டாளா...?" அவன் ஆச்சிரியமாய் மனைவியைப் பார்த்தான்...

"ஆமாம், இப்போ உள்ள பிள்ளைங்க சாப்பிடற ஜங் ஃபுட் தான் இதுக்குக் காரணம்... அதான் நம்ம அம்முவுக்கு ஜங் ஃபுட் அதிகம் கொடுக்கிறது இல்லை..." என்றவளின் கை மகளின் தலையை வருடியது...

"இன்னும் ரெண்டு, மூணு வருசத்தில் அம்முவும் பெரிய பெண்ணாகி விடுவாள் இல்லையா...?"

"ம், ம்... பெண் பிள்ளையைப் பெத்தால் இதை எல்லாம் எதிர்பார்த்து தானாக வேண்டும்..."

அவனது விழிகள் மகளை வாஞ்சையுடன் வருடி கொடுத்தது... பெண் பிள்ளை பிறக்கும் போது தான் ஆணுள் இருக்கும் தாய்மை உணர்வு உயிர்ப்பிக்கிறது...

"அத்தை என்னையும் அவங்க கூட வர சொல்லி கூப்பிட்டு இருக்காங்க..."

அத்தனை நேர இதம் மறைந்து சிம்மவிஷ்ணு முகம் இறுக மனைவியைப் பார்த்தான்...

"அங்கெல்லாம் நீ போக வேண்டாம் நிலா..."

"ஏன் போக வேண்டாம்...?" சட்டென்று எழுந்த கோபத்துடன் அவள் கணவனைப் பார்த்தாள்...

"ப்ச், சொன்னா கேளு... அப்பா, அம்மா ரெண்டு பேர் மட்டும் போயிட்டு வரட்டும்... நீ போக வேண்டாம்..." என்று அவன் முடிவாய் கூறிவிட்டுக் கண்களை மூடி படுத்துக் கொண்டான்...

"ஓ... என்னை உங்க மனைவின்னு சொல்ல உங்களுக்கு அசிங்கமா இருக்கோ..."

"என்ன உளர்ற...?" அவன் கண்விழித்து அவளைப் பார்த்துச் சீறினான்...

"அன்னைக்கு என் கண்முன்னே தானே உங்களோட சொந்தக்காரங்க அத்தனை பேரும் சொன்னாங்க... நான் சுண்டெலி மாதிரி இருக்கேன்னு..." அவள் மனஸ்தாபத்துடன் கூறிவிட்டு முகத்தைத் தூக்கி வைத்து கொண்டாள்...

அவளது வார்த்தையில் அவனது உதடுகளில் புன்னகை அரும்பியது... அவள் பக்கம் திரும்பி படுத்தவன்,

"ஏய் லூசு... யாரு எதைச் சொன்னாலும் அதை அப்படியே நம்பிருவியா...?" என்று அவன் புன்னகையுடன் கேட்க... அவனது புன்னகை அவளுக்கு எரிச்சலை உண்டு பண்ணியது...

"அவங்க சொன்னதைத் தானே நான் சொன்னேன்..."

"நான் கூட உன்னை மான் குட்டி மாதிரி அழகா இருக்கேன்னு சொன்னேன்... அது எல்லாம் உன் ஞாபகத்துக்கு வரலையா...?"

அவன் அப்படிக் கூறிய அன்று அவன் சிங்கமாய் மாறி மான் குட்டியான அவளைக் கபளீகரம் செய்தவிதம் மனக்கண்ணில் காணொளியாய் ஓடி அவளது முகத்தினை

வெட்கத்தில் சிவக்க வைத்தது... அதை ரசனையுடன் பார்த்தவன்,

"இதே போல் நீ எப்போதும் சந்தோசமா இருக்கணும்... கண்டதையும் யோசிச்சு மனசை போட்டுக் குழப்பிக்கக் கூடாது..."

"சைக்கியாட்ரிஸ்ட்க்கே அட்வைசா...?" அவள் போலியாக அவனை முறைக்க...

அவன் 'ஹா ஹா' என்று வாய்விட்டுச் சிரித்தான்... அதில் ஆதிரை புரண்டு அவன் பக்கம் படுத்து,

"அப்பா..." என்று தூக்க கலக்கத்தில் அவனை அழைத்தபடி அவனது கழுத்தை கட்டி கொண்டு அவன் மீது காலை போட்டுக் கொண்டு சுகமாய் விட்ட தூக்கத்தைத் திரும்பத் தொடர்ந்தாள்...

"நான் அத்தை கூடப் போகவா...?" என்று கேட்ட மனைவியை நிமிர்ந்து பார்த்தவன்,

"வேண்டாம்..." என்று உறுதியான குரலில் மறுத்துவிட்டு மகளை அணைத்துக் கொண்டு படுத்துவிட்டான்...

அவள் மனச்சுணக்கத்துடன் கணவனுக்கு முதுகு காட்டி படுத்து கொண்டாள்... அவளது விழிகள் கலங்க துவங்கியது... அவளது மனநிலை புரிந்தாலும் அவன் அவளைச் சமாதானப்படுத்த முயலவில்லை...

********************

மறுநாள் காலை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக விடிந்தது... இளவரசிக்கு மட்டும் மிகவும் மோசமாய் விடிந்தது... ஆம், அவரை விசாரிக்கவெனக் காவல்துறை அவரது வீடு தேடி வந்துவிட்டது...

"அரசன் அன்று கொல்வான்,
தெய்வம் நின்று கொல்லும்,
உன் அணு உன்னை
அணு அணுவாய் கொல்லும்..."

கொள்ளும்...!!!

"ஹேய் நான் தான் வின்..." என்று சூர்யா சந்தோசத்தில் கத்தி கொண்டே வீடு முழுவதும் ஓட...

"இல்லை, நான் தான் வின்னர்..." என்று ஆர்யா அவனைத் துரத்தி கொண்டு ஓடினான்...

இருவருக்கும் தோட்டத்தில் இருந்த செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதில் போட்டி... துளசி இருவருக்கும் இருபக்கத்தைப் பிரித்துக் கொடுத்து நீர் ஊற்ற சொல்லி, யார் முதலில் ஊற்றுகிறார்கள்? என்று சிறு போட்டி வைத்திருந்தாள்... அந்தப் போட்டியில் இருவரும் வெற்றி பெற்றுவிட்டதாய் வீரமுழக்கமிட்டபடி வீட்டிற்குள் ஓடி வந்தனர்...

"டேய் காலங்கார்த்தால எதுக்குடா இப்படிச் சத்தம் போட்டு ஊரை கூட்டுறீங்க... ஓடுங்க இங்கிருந்து..." என்று கோபத்தில் கத்தியபடி சோபாவில் வந்தமர்ந்தார் இளவரசி... நடைப்பயிற்சி மேற்கொண்டு விட்டு மூச்சுவாங்க களைத்து போய் அவர் வந்திருந்தார்...

"ஆர்யா, சூர்யா, ரெண்டு பேரும் வந்து பால் குடிச்சிட்டு போங்க..." நாத்தனாரின் கோபத்தில் இருந்து இரு பேரன்களையும் காப்பாற்றினார் அருந்ததி...

"க்ரனின்னா அது நீங்க தான்... அவங்க டெவில் க்ரனி... நீங்க தான் ஏஞ்சல் க்ரனி..." எப்போதும் இளவரசி அவர்களைத் திட்டி கொண்டிருப்பதால் அவர்கள் இருவருக்கும் அவரைப் பிடிப்பதில்லை...

சமையலறை மேடையில் ஏறியமர்ந்திருந்த இருவரின் கைகளிலும் பால் தம்பளரை கொடுத்த அருந்ததியின் இரு கன்னத்திலும் சின்னவர்கள் முத்தம் பதித்தனர்... அவர் இருவரையும் பாசத்துடன் பார்த்தார்... ஆதிரை அருகில் இல்லாத குறையை இவர்கள் இருவரும் தான் தீர்க்கின்றனர்...

சிறுவர்கள் பள்ளிக்கு கிளம்புவதற்காகத் தங்களது அறைக்கு ஓடினர்... அருந்ததி சிரித்தபடி சமையல் வேலைகளை மேற்பார்வையிட ஆரம்பித்தார்...

காலை உணவு உண்டு விட்டு பத்ரிநாத், பவித்ரன் இருவரும் அலுவலகத்திற்குக் கிளம்புவதற்காகத் தயாராகினர்...

"வசி, எங்களோடு கம்பெனிக்கு வா... இப்படி வீட்டிலேயே இருப்பதால் எரிச்சல் தான் அதிகமாகும்..." பத்ரிநாத் மனைவியின் கைகளைப் பற்றிக் கொண்டு கூற...

"இல்லை பத்ரி... இப்போ நான் மாதர் சங்கத்தில் செம பிசி... இனி என்னால் கம்பெனிக்கு வர முடியாது..."

அன்னை கூறியதை கேட்டு பவித்ரன் நமட்டு சிரிப்புடன் தலையைக் கையில் இருந்த கோப்பிற்குள் மறைத்துக் கொண்டான்... பத்ரிநாத்தோ இயலாமையுடன் தலையை இருபுறமும் அசைத்துத் தன்னை நிலைப்படுத்திக் கொண்டார்...

அப்போது வீட்டிலிருந்த காவலாளி அவசரமாய் உள்ளே ஓடி வந்தான்... மூச்சிரைத்தபடி நின்றிருந்தவனைக் கடுமையாகப் பார்த்தபடி,

"இப்படித்தான் திறந்த வீட்டில் ஏதோ நுழையற மாதிரி நுழைவியா...? இந்த வீட்டில் வேலை செஞ்சா உன் மனசில் இது உன் வீடுங்கிற நினைப்பா...? வேலைக்கார நாய், அதுவும் காவல் காக்கிற நாய் கேட்டில் தான் நிற்கணும்... உனக்கு இங்கே என்ன வேலை...?" என்று இளவரசி கோபத்தில் படபடத்தார்...

"ரிலாக்ஸ் வசி..." என்று மனைவியை அமைதிப்படுத்திய பத்ரிநாத் காவலாளியின் பதற்றத்தை கண்டு யோசனையாய்,

"என்ன விசயம் சொல்லு...?" என்க...

"நம்ம வீட்டுக்குப் போலீஸ் வந்திருக்காங்க..."

"நம்ம வீட்டுக்கா...?"

"ஆமா சார்... நான் தான் உள்ளே வர விடாம தடுத்து நிறுத்தியிருக்கேன்... அதுக்கே அந்தப் போலீஸ் என் கிட்ட கோபப்படுறாரு..."

"உடனே அவங்களை உள்ளே விடு..." என்று உத்தரவிட்ட பத்ரிநாத் குழப்பத்துடன் மகனை பார்த்தார்...

"கம்பனியில் எந்தப் பிரச்சினையும் இல்லை டாட்..." அவனுக்கும் யோசனையாக இருந்தது...

உள்ளே வந்த காவல்துறை அதிகாரியை புன்னகையுடன் வரவேற்றனர் தந்தையும், மகனும்...

"சொல்லுங்க சார்... என்ன விசயமா எங்களைப் பார்க்க வந்திருக்கீங்க...?" பத்ரிநாத் கேட்டதும் அந்த அதிகாரி தலையில் இருந்த தொப்பியை கழற்றி கையில் வைத்தபடி தன்மையாகப் பேச துவங்கினார்...

"உங்க மனைவி, மச்சினர்கள் இருவர் மீதும் ஒருத்தர் கம்ப்ளையிண்ட் பண்ணியிருக்கார்..."

அதைக் கேட்டு அதிர்ந்த இளவரசி, "யாரோ எவனோ கம்ப்ளையிண்ட் கொடுத்தால் ஆள் யாரு, என்னங்கிற விவரம் தெரியாம விசாரிக்க வந்திருவீங்களா...? நான் யாரு தெரியுமா...? தி கிரேட் மிஸ்டர். பத்ரிநாத்தோட வொய்ப்..." படபடவென்று ஆரம்பித்த இளவரசி அலட்டலாக முடித்தார்...

"நாங்க என்ன பண்றது மேடம்...? கொடுத்த கம்ப்ளையிண்ட்டை முறைப்படி விசாரிக்க வேண்டியது எங்களோட கடமை... அதுக்காகத் தான் வந்திருக்கிறோம்..."

"என்ன கம்ப்ளையிண்ட்ன்னு நாங்க தெரிஞ்சுக்கலாமா...?" பவித்ரன் அவரிடம் விளக்கம் கேட்டான்...

"அதை எப்படிச் சொல்றது...?" என்று ஒரு நொடி யோசித்தவர் பின்பு,

"இவங்களோட பையன் சுடலைமுத்துவை இவங்களும், இவங்க அண்ணன்ங்களும் சேர்ந்து கொலை செய்து தோட்டத்தில் புதைச்சிட்டதா கம்ப்ளையிண்ட்..."

அதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த இளவரசிக்கு பேச முடியாது பயத்தில் வாயடைத்துப் போனது... வியர்வை ஆறாகப் பெருக துவங்கியது...

"வாட் நான்சென்ஸ் இன்ஸ்பெக்டர்... யாரை பார்த்து இப்படி ஒரு வார்த்தை சொன்னீங்க... என் மனைவியைப் பார்த்தா...? அவளைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்... அவள் இப்படிச் செய்யக் கூடிய ஆளில்லை... யாரோ ரோட்டில் போகிறவன் சொல்ற கம்ப்ளையிண்ட்க்கு எல்லாம் எங்களால் பதில் சொல்ல முடியாது... நீங்க கிளம்பலாம்..." என்று எழுந்து நின்றபடி கை குவித்து வெளிவாயிலை காட்டினார் பத்ரிநாத்... அவரது முகத்தில் அப்படியொரு கோபம் இருந்தது... கணவனது வார்த்தையில் தைரியமுற்றவராக இளவரசி நிமிர்ந்து அமர்ந்தார்...

ஆனால் அந்த அதிகாரி எழுந்து செல்லாது சட்டமாக அமர்ந்தபடி, "ஆதாரம் இல்லாம நாங்க பேச மாட்டோம் சார்... கம்ப்ளையிண்ட் கொடுத்தது பையனோட பெரியப்பா... அதுவும் இவங்களோட அண்ணன் மிஸ்டர். மணிபாரதி போதையில் அவர் கிட்ட கொலையைப் பத்தி உளறியிருக்கார்..." என்று கூற...

"யாரு...? அந்தப் பட்டிக்காட்டு மாடசாமியா...?" என்று திகைப்பில் வாயை பிளந்தார் இளவரசி... இத்தனை வருடங்கள் கழித்து இப்படியொரு திருப்பம் வரும் என்று அவர் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை...

"துளசி, மாமா ரெண்டு பேரையும் கூட்டிட்டு வா..." பவித்ரன் இறுகிய முகத்துடன் கூறினான்... அவனுக்கு இப்படிக் காவல்துறையில் இருந்து வந்து விசாரிப்பதே அத்தனை தலையிறக்கமாக இருந்தது... கணவன் பேச்சை கேட்டு துளசி உள்ளே சென்றாள்...

"அவர் சொன்னபடி தோப்பில் ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தோண்டிய போது எலும்புகள் கிடைச்சது... அதை ஆய்விற்கு அனுப்பியதில் அது எட்டு வயசு பையனோடதுன்னு தெரிய வந்திருக்கு..."

அதைக் கேட்டுப் பத்ரிநாத் தொய்ந்து போய்ச் சோபாவில் அமர்ந்தார்... சுடலைமுத்துவை நினைத்து அவரது மனம் நடுங்கியது... சுடலைமுத்து இறந்தது உண்மை... ஆனால் எது உண்மையான சுடலைமுத்து என்று அவருக்குத் தெரியவில்லை... அவர் பூஜித்து வரும் சுடலைமுத்துவா? இல்லை இப்போது கண்டெடுக்கப்பட்டு இருக்கும் எலும்புகளா?

"பத்ரி, நாங்க அந்தத் தோப்பை வித்துக் கிட்டத்தட்ட நாற்பத்தைஞ்சு வருசமாச்சு... அங்கே எலும்பு கிடைச்சதுன்னா அந்தத் தோப்புக்கு சொந்தக்காரங்க கிட்ட போய் விசாரிக்கச் சொல்லுங்க... இங்கே வந்து எதுக்கு விசாரிக்கணும்...?" இளவரசி பயத்தில் படபடக்க... அதில் சற்று தெளிந்த பத்ரிநாத்,

"என் வொய்ப் சொல்றதும் சரி தானே..." என்க...

"சார், சந்தேகம்ன்னு வந்த பிறகு விசாரிச்சுத் தெரிஞ்சுக்கிறது நல்லது இல்லையா...?"

"ம், அதுவும் சரி தான்..."

அதற்குள் செல்வரத்தினம், மணிபாரதி இருவரும் அங்கு வந்தனர்... விசயத்தைக் கேள்விப்பட்ட இருவரும் மனதிற்குள் பயந்தாலும் வெளியில் ஒரேடியாக மறுத்தனர்... இதை எல்லாம் அருந்ததி பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்... துளசி குழப்பத்துடன் நின்றியிருந்தாள்...

"நான் உங்களைக் கைது பண்ணவோ இல்லை விசாரிக்கவோ வரலை... ஜஸ்ட் நான் சொல்ற இடத்துக்கு நீங்க உங்க காரில் வந்தால் போதும்..."

"எங்கே...?" ஒருசேர ஒலித்த மூவரது குரலும் வெவ்வேறு தொனியில் ஒலித்தது...

இளவரசி பதட்டமாகக் கேட்க... பவித்ரனோ யோசனையாகக் கேட்க... பத்ரிநாத்தோ குழப்பமாகக் கேட்டார்...

"அந்த எலும்போட டிஎன்ஏவும் மேடத்தோட டிஎன்ஏவும் மேட்ச் பண்ணி பார்க்கணும்... அதுக்கான டெஸ்ட் பண்ண மேடம் ஹாஸ்பிட்டலுக்கு வரணும்..."

"பத்ரி, நான் இதுக்குச் சம்மதிக்க மாட்டேன்... இது என் தாய்மையைக் களங்கப்படுத்துற மாதிரியிருக்கு... என் மகனை நான் எப்படிக் கொல்வேன்...? எந்தத் தாயும் இதைப் பண்ண மாட்டாள்... நான் எதுவும் பண்ணலை... என்னை விட்டிருங்க..." அழுது கரைந்த மனைவியைக் கண்டு இரக்கம் கொண்டார் பத்ரிநாத்...

"இதுக்கு நாங்க ஒத்துழைப்பு கொடுக்க முடியாது இன்ஸ்பெக்டர்... எங்க வீட்டு பையன் நாற்பத்திரெண்டு வருசத்துக்கு முன் காணாமல் போனது உண்மை தான்... அப்பவே அவனைத் தேடி கண்டுபிடிச்சு கொடுத்துட்டாங்க..." என்றவர் குரல் கமற,

"பிணமாக... அதனால் இப்போது நீங்க சொல்வதை வைத்து பார்க்கும் போது இது வேண்டுமென்றே பழிவாங்கவோ இல்லை பணம் பறிக்கவோ போட்ட திட்டம் மாதிரி இருக்கு... அந்தாளுக்கு எவ்வளவு பணம் வேணும்ன்னு கேட்டு சொல்லுங்க... ஒரே செக்கில் கொடுக்கிறேன்... அதுக்காக இப்படிக் கீழ்த்தரமான வேலையில் இறங்க வேண்டாம்ன்னு அவர் கிட்ட சொல்லிருங்க..." பத்ரிநாத்திற்கு அப்படியொரு கோபம் வந்தது...

"சார் நீங்க நினைக்கிற மாதிரி அவர் பணத்துக்கு ஆசைப்பட்டுச் செஞ்ச மாதிரி தெரியலை... எலும்பை தோண்டி எடுத்தப்போ அவர் அப்படிக் கதறி அழுதார்..."

"எல்லாம் நடிப்பா இருக்கும்..." வெறுப்புடன் வந்தது பத்ரிநாத்தின் வார்த்தைகள்...

"அவரோடது நடிப்பாவே இருந்துட்டு போகட்டும்... ஆனா அவரோட கம்ப்ளையிண்ட்டை ஆயிரத்தில் ஒண்ணா தூக்கி எறிய முடியாதபடி எங்களுக்கு மேலிடத்தில் இருந்து ப்ரஷர் சார்... இதில் நாங்க ஒண்ணும் பண்ண முடியாது..."

"எனக்கும் எல்லா மேலிடமும் தெரியும்..." பத்ரிநாத் அமர்த்தலாகக் கூற...

"எஸ்வி இன்டஸ்ட்ரீஸ் ஓனர் மிஸ்டர். சிம்மவிஷ்ணு மாடசாமிக்கு ஃபுல் சப்போர்ட்டா இருக்காரு... எங்களுக்கு வந்த உத்தரவை உங்க கிட்ட சொல்லியாச்சு... நீங்க ஒத்துழைச்சா விசயம் காதும் காதும் வைச்ச மாதிரி முடிஞ்சிரும்... நாங்க நடவடிக்கை எடுத்தா ஊருக்கே தெரிஞ்சி போயிரும்..." அவர் எச்சரிக்கை விடுத்தார்...

'சிம்மவிஷ்ணு' என்கிற பெயரில் பத்ரிநாத் தளர்ந்து போனார்... அவனது 'பத்திப்பா' என்கிற வார்த்தை இப்போதும் அவரது காதுகளில் ஒலித்துச் சின்ன வயது சுடலைமுத்துவை ஞாபகப்படுத்தியது...

'எனக்கு உங்க மூணு பேர் மேலேயும் எந்தக் கோபமும் இல்லை... என் கோபம் எல்லாம் அவங்க மூணு பேர் மேல் தான்' என்று ஆத்திரத்துடன் கூறிய சிம்மவிஷ்ணுவின் முகம் அவரது நினைவில் எழுந்தது...

'உங்களுக்காக நான் எதையும் செய்யத் தயாரா இருக்கேன் பத்திப்பா... ஆனா சிம் கம்பெனி நிலவரம் வேறு... அதை என்னால் விட்டு கொடுக்க முடியாது...' என்று தன்னைப் பார்த்து அன்போடு கூறிய சிம்மவிஷ்ணு அவரது நினைவில் நின்று வதைத்தான்...

யாரென்று தெரியாத சிம்மவிஷ்ணு நிஷிலா வாழ்க்கையில் வந்ததுக்கும், இதோ இப்போது சுடலைமுத்துக் காணாமல் போனதை பற்றி அவன் சந்தேகத்தைக் கிளப்பி விடுவதற்கும் ஏதோ சம்பந்தம்

இருப்பதாகப் பட்டது... அப்படி மட்டும் இல்லாது போகட்டும் அப்போது இருக்கிறது அவனுக்கு... அவரிடத்தில் இரக்கமும், கோபமும் ஒருங்கே தோன்றியது...

"எல்லாம் அவன் வேலை தானா...? எனக்கு அப்பவே தெரியும்... அவன் நம்ம குடும்பத்தைப் பழிவாங்காம இருக்க மாட்டான்னு... இவனை எல்லாம் ஜெயிலிலேயே உள்ளே வச்சிருக்கணும்... வெளியில் விட்டது தான் தப்பா போச்சு..." என்று பொருமியபடி இருந்தார் இளவரசி...

"அப்படின்னா டிஎன்ஏ டெஸ்ட் பண்ண போ வசி..." பத்ரிநாத் மனைவியைப் பார்க்காது வேறு எங்கோ பார்த்தபடி கூறினார்...

"என்னங்க..." என்று இளவரசி அலற...

"டாட்..." என்று தந்தையைச் சத்தம் போட்டான் பவித்ரன்...

"அவன் சொன்னது உண்மை இல்லைன்னு நிரூபிச்சுட்டு வா வசி... இது மட்டும் உண்மை இல்லைன்னு தெரியட்டும்... அதுக்கு அப்புறம் இருக்கு அவனுக்குக் கச்சேரி..." என்று கோபமாய் முழக்கமிட்டவரை கண்டு இளவரசி,

"இல்லை, நான் போக மாட்டேன்..." என்று அழுது கரைய...

"டாட், மாம் பாவம்..." பவித்ரன் அன்னைக்குப் பரிந்து பேசினான்...

"தான் கற்புள்ளவள்ன்னு உலகத்துக்கு உணர்த்த சீதை தீக்குளிச்சாளாம்... உன் அம்மா உத்தமின்னு நிரூபிக்கத் தீக்குளிச்சு தான் ஆகணும் தீரா... அவளைப் போக விடு..." என்று அவர் தீர்மானமாகக் கூறினார்...

"தீரா, உன் அம்மாவை நீயே அழைச்சிட்டு போயிட்டு வா..." என்று மகனிடம் கூறியவர் அங்கிருக்கப் பிடிக்காது எழுந்து சென்றுவிட்டார்...

கணவர் அப்படிக் கூறியதும் இளவரசியின் தைரியம் அப்படியே வடிய மகனை பயத்துடன் பார்த்தார்...

"மாம், நீங்க தப்பு பண்ணலையே... பிறகு எதுக்குப் பயப்படுறீங்க... தைரியமா வாங்க... கூட நானிருக்கேன்..." அவன் ஆறுதல் அளித்து அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றான்...

இளவரசியால் ஓடவும் முடியவில்லை... ஒளியவும் முடியவில்லை... பலியாடு போல் மகனின் பின்னே சென்றார்...

அறைக்குள் சென்ற பத்ரிநாத் சோபாவில் அமர்ந்து விழிகளை மூடி கொண்டார்... அவரது விழிகளில் கடந்த காலம் முதலில் இருந்து படமாக ஓடியது... எங்குத் தவறு நடந்தது என்று அவருக்குத் தெரியவில்லை... காதல் மனைவியைக் குறை சொல்லவும் முடியவில்லை... அதே சமயம் சிம்மவிஷ்ணுவை தவறாக எண்ணவும் முடியவில்லை... வெகுநேரம் யோசித்துக் கொண்டிந்தவரின் மனம் மனைவி பக்கமே சாய்ந்தது...

கொஞ்ச வருடங்களாக அறிமுகமான சிம்மவிஷ்ணுவை விட, காதலோடு வாழும் மனைவியின் மீதான நேசமே அவருக்குப் பெரிதாகத் தெரிந்தது... ஆனாலும் சிம்மவிஷ்ணுவின் 'பத்திப்பா' என்கிற வார்த்தை அவரது மனதினை பிசைந்து இம்சை செய்தது...

இளவரசியின் கணவன் என்பதை விடச் சுடலைமுத்துவின் தந்தை என்கிற உணர்வே அவரிடம் அதிகம் உண்டு... சுடலைமுத்துவா? இளவரசியா? என்று வரும் போது சுடலைமுத்துவே அவரது மனதினை வெற்றி கொள்வான்...

செல்வரத்தினம், மணிபாரதி இருவரும் திகிலடைந்து போய் அமர்ந்திருந்தனர்... இருவரின் முகத்திலும் ஈயாடவில்லை...

"அண்ணா எனக்கு என்னமோ பயமாயிருக்கு..."

"ஷ், நீ வேற சும்மாயிருடா... நானே அடுத்து என்ன பண்றதுன்னு தெரியாம யோசிச்சிட்டு இருக்கேன்..." என்று

தலையில் கை வைத்தபடி தீவிரமாய் யோசித்துக் கொண்டிருந்தார் செல்வரத்தினம்...

******************

"இதுக்குத் தான் தலைப்பாடா அடிச்சிக்கிட்டேன்... இவளை அங்கே கூட்டிட்டு போகாதீங்கன்னு... யாரும் என் பேச்சை கேட்கலை... இப்போ அழுதுக்கிட்டு வந்து நிற்கிறீங்க..." என்று கோபத்தில் அன்னையிடம் படபடத்தான் சிம்மவிஷ்ணு...

அவனது சித்தப்பாவோட பேத்தியின் சடங்கு வீட்டிற்குச் சென்றுவிட்டு வந்த மீனாட்சி, நிஷிலா இருவரும் அழுது கொண்டே வர, சுந்தரபாண்டியன் முகம் இறுகி போய் வந்தார்...

"யார்? என்ன சொன்னாங்க...?" என்று அவன் உறுமினான்...

"வேறு யார் என்ன சொல்வாங்க...? எல்லாம் உன் சித்தியும், தம்பியும் தான்... உன் சித்தி உன் அம்மா கிட்ட உன்னைப் பொம்பளை பொறுக்கி அது இதுன்னு தேவையில்லாம பேசியிருக்கா... உன் தம்பிக்காரன் உன் பொண்டாட்டி கிட்ட 'நீ தான் அவனுக்குத் தண்டனை கொடுத்து ஜெயிலுக்கு அனுப்பிட்டியே... பிறகு எதுக்கு இப்போ அவன் கூட வாழ வந்திருக்க... அவனோட பணம் பெருசா இருக்கா? இல்லை அவன் கொடுத்த..." என்று நிறுத்தியவர்,

"மேலே சொல்லவே நாக்கு கூசுது விஷ்ணு..."

அதைக் கேட்டு நரம்புகள் புடைக்க ஆக்ரோசமாய் நின்றவன், "அவனை எல்லாம் உயிரோட விட்டு வச்சதே தப்பு... அவனைக் கொன்னால் தான் என் வெறி அடங்கும்..." என்று சிங்கம் போல் கர்ஜித்தான் அவன்...

"விடு விஷ்ணு... சல்லிப்பய மேல கைய வச்சு நம்ம தரத்தை நாமளே கீழிறக்கிக்க வேண்டாம்... இனியாவது உன்னோட வாழ்க்கை அமைதியான முறையில் அமையணும்... இந்தச் சண்டை, சச்சரவு, பஞ்சாயத்து எல்லாம் நமக்கு வேண்டாம் விஷ்ணு..."

தந்தை கூறுவது சரியென்றாலும் மாதவனை அப்படியே சும்மாவிட அவனுக்கு மனசு வரவில்லை... தந்தைக்காக அந்த நேரம் அமைதியாக இருந்தான்...

'என்னைக்காவது ஒருநாள் நீ என் கையில் சிக்கின உனக்குச் சமாதி தான்டா...' என்று சித்தப்பன் மகனை நினைத்து அவன் மனதிற்குள் கறுவி கொண்டான்...

"ம்மா, அவன் சொன்னா... எல்லாம் உண்மையாகிருமா...? உங்க மகனை பத்தி உங்களுக்குத் தெரியாதா...?" தாயின் கைகளைப் பிடித்துக் கொண்டு அவன் மனமறுக கேட்டான்...

"உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா விஷ்ணு...? ஆனா உன் சித்தி எல்லார் முன்னாடியும் வச்சி இப்படிக் கேட்டது தான் என்னால் தாங்கிக்க முடியலை..."

"யார் என்ன நினைச்சா என்னம்மா...? நீங்களோ நிலாவோ என்னைப் பத்தி தப்பா நினைக்கலையே... எனக்கு அது போதும்... நிலாவுக்கு நான் துரோகம் பண்ணிய போதும் அவள் என்னை முழுவதும் நம்புகிறாள்... அந்த நம்பிக்கை எனக்குப் போதும்மா..." என்றவனைக் கண்டு அவர் சமாதானம் அடைந்தவராய் விழிகளைத் துடைத்துக் கொண்டார்...

"உனக்கு வேற தனியா சொல்லணுமா...? கண்ணைத் துடை..." என்று அவன் மனைவியை அதட்டினான்...

நிஷிலா துடைக்க, துடைக்க அவளது விழிகளில் கண்ணீர் பெருகி கொண்டே இருந்தது... அவனுக்கு அவளைப் பார்க்க பாவமாக இருந்ததோ என்னமோ...! அவள் அருகில் வந்தமர்ந்தவன் அவளது கைகளைப் பற்றியபடி,

"இதுக்குத் தான் நான் நேத்தே சொன்னேன்... உன்னை அங்கே போக வேண்டாம்ன்னு... நீ தான் கேட்கலை... சித்தி, மாதவனைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்... அவங்க உன் மனசை காயப்படுத்தாம விட மாட்டாங்கன்னு..." என்றவன் அவளது விழிகள் துடைத்துவிட்டபடி,

"இங்கே பார், நீ எதுக்காக என்னை மன்னிச்சு ஏத்துக்கிட்ட என்பது உனக்கும், எனக்கும் தெரிஞ்சா போதும்... நீ என் பணத்துக்காகவோ இல்லை வேறு எதுக்காகவும் என்னைத் தேடி வரலைன்னு எனக்கு நல்லா தெரியும்... என் நிலா பொண்ணு எனக்காக மட்டுமே என்னை ஏத்துக்கிட்டான்னும் எனக்குத் தெரியும்... எனக்காக அவளோட சொத்துக்களை மட்டுமல்ல அவளோட உயிரா நினைக்கிற கற்பை கூட விட்டு கொடுத்திருக்காள்ன்னும் எனக்குத் தெரியும்..."

அவன் கூறியதை கண்டு அவள் விழி கலங்க அவனைப் பார்த்திருந்தாள்... கணவன் தன்னை இந்தளவிற்குப் புரிந்து வைத்திருக்கிறானா? என்று...

"உன்னை விட வேறு யாருடி எனக்கு மனைவியா வந்திர முடியும்... மாதவன் வொய்ப் அவன் கூட வாழ்கிறாள்ன்னா அவன் மூலம் கிடைக்கும் அந்தஸ்துக்காக... இல்லைன்னா இப்படியொரு பொம்பளை பொறுக்கி கூட அவள் வாழ முடியுமா...? ஆனா நீ அப்படி இல்லை... புரிஞ்சிக்கோ நிலா... உன்னை நீயே தாழ்த்திக்கிட்டு அழாதே... வேணும்ன்னா எல்லாப் பழியையும் என் மேல் போட்டுக்கோ... தயவுசெய்து உன் மேல பழியைப் போட்டுக்கிட்டு மறுகாதே..." என்று கூறியவன் அவளை ஆறுதலாக அணைத்துக் கொண்டான்...

அவளுக்கும் அவனது ஆறுதல் தேவையாய் இருந்ததோ என்னமோ...! அமைதியாக அவனது தோளில் சாய்ந்து கொண்டாள்... அவளது கண்ணீர் சிறிது சிறிதாக வற்ற துவங்கியது...

சுந்தரபாண்டியன், மீனாட்சி இருவரும் மகனையும், மருமகளையும் ஆச்சிரியமாய்ப் பார்த்திருந்தனர்... மகனது தவறும் தெரியும், மருமகளது கோபமும் தெரியும்... அதையும் மீறி அவர்கள் மனமொத்து இருப்பது அவர்களுக்கு வியப்பாய் இருந்தது...

அந்நேரம் சுந்தரபாண்டியனின் அலைப்பேசி அழைத்தது... பத்ரிநாத் தான் அவரை அழைத்திருந்தார்...

"பத்ரி எதுக்கு என்னைக் கூப்பிடறாரு..." என்று யோசித்தபடி அவர் அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தார்...

அதைக் கேட்டு சிம்மவிஷ்ணுவின் தேகம் விறைத்தது... நிஷிலா அவனைக் கவலையாக ஏறிட்டு பார்த்தாள்... அவனது உணர்வினை தொலைத்த முகத்தினைக் கண்டு அவளுள் பதற்றம் தொற்றிக் கொண்டது...

"மாமா..." என்றழைத்தவளை கண்டு அவன் புன்னகைக்க முயன்று தோற்றான்...

அவளை அணைத்திருந்த அவனது கை இறுக்கமாய் அவளது தோளை பற்றிக் கொண்டது... அதன் அழுத்தம் கொடுத்த வலியில் அவள் அவனது மனதின் வலியை உணர்ந்தவளாய் தன் வலியை பொறுத்துக் கொண்டு அவனைக் கருணை பொங்க பார்த்திருந்தாள்...

"உங்க மகன் விஷ்ணு என்ன நினைச்சிக்கிட்டு இருக்கான்... ஏன் இப்படிப் பண்றான்...?" என்று பத்ரிநாத் மறுபக்கம் படபடத்தவர் சிம்மவிஷ்ணு செய்து வைத்த காரியத்தின் வீரியத்தைப் பற்றிக் கூறலானார்...

அதைக் குறுக்கே பேசாது முழுவதுமாய்க் கேட்டுக் கொண்ட சுந்தரபாண்டியன், "என் மகன் எது செஞ்சாலும் சரியா தான் செய்வான்... அதில் எனக்கு நம்பிக்கை இருக்கு..." என்று உறுதியாக உரைத்தார்...

மறுபக்கம் பத்ரிநாத் பேசியது சிம்மவிஷ்ணுவிற்குக் கேட்கவில்லை... ஆனால் அவனது தந்தை பேசியது அவனுக்கு நன்கு கேட்டது... அன்று நிஷிலாவிற்கு ஆதரவாகத் தனக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்த தந்தை இப்போது இப்படிப் பேசுவது கண்டு அவனுக்கு வியப்பாக இருந்தது... அதே நேரம் அவர் தன் மீது வைத்திருந்த நம்பிக்கை கண்டு அவனது விழிகள் கசிந்தது...

"அப்படியொரு நம்பிக்கையா அவன் மீது...?"

"இவ்வளவு நாளாய் அவனது செயலுக்கான காரணம் தெரியாம தவித்துக் கொண்டிருந்தேன்... இப்போது நீங்க கூறியது கேட்டு எனக்கு விசயம் கொஞ்சம் புரிகிறது... நீங்களும் யோசித்துப் பாருங்கள் உங்களுக்கும் விசயம் புரியும்..."

'விசயம் கொஞ்சம் புரிவதால் தானே கையைக் கட்டி கொண்டு வேடிக்கை பார்க்கிறேன்... இல்லை என்றால் என் மனைவியை மருத்துவமனைக்கு அனுப்பியிருப்பேனா...?' பத்ரிநாத் வேதனையுடன் நினைத்துக் கொண்டார்...

"உங்களுக்குப் புரிந்து விட்டதா...?" என்று மட்டும் அவர் சுந்தரபாண்டியனிடம் கேட்டார்...

"மன்னர் பரம்பரை என்பது சும்மாயில்லை மிஸ்டர். பத்ரிநாத்... எதையும் யோசித்துத் தான் பேசுவேன்... எதையும் யோசித்துத் தான் செய்வேன்... சும்மா என் மகனை குறை சொல்லாது, என்ன நடந்ததுன்னு கண்டுபிடிக்கும் வழியைப் பாருங்க..." என்று அமர்த்தலாகக் கூறிய சுந்தரபாண்டியன் அலைப்பேசியை அணைத்துவிட்டு மகன் புறம் திரும்பினார்...

"நீ என் மகன் தானா விஷ்ணு...?" அவர் கேட்ட தினுசில் சிம்மவிஷ்ணு அதிர்ந்து போனான்...

"அப்பா..." அவன் திகைப்புடன் எழுந்து நின்றான்...

"சொல்லுடா, நீ என் மகன் தானா...?"

எதற்கும் கலங்காத தந்தை விழி கலங்கியபடி கேட்டதைக் கண்டு அவர் புறம் வேகமாய் வந்து அவரை அணைத்து கொண்டவன்,

"ஏன்ப்பா இப்படி எல்லாம் கேட்கறீங்க...? நான் உங்க மகன்ப்பா... உங்க உயிரில் இருந்து ஜனித்தவன்... அதை மறந்துட்டு நீங்க இப்படிக் கேட்கலாமா...?" அவனுக்கும் அழுகை வரும் போலிருந்தது...

"அப்போ அந்தச் சுடலை யாரு...? மாடசாமிக்கும் உனக்கும் என்ன உறவு...? மொத்தத்தில் நீ யாரு விஷ்ணு...?" அவர் அவனைப் பார்த்துக் கதறினார்...

தன் பிள்ளை தனக்கு இல்லையோ என்கிற அச்சத்தில் அந்த ஆறடி ஆண்மகன் மிகவும் கலங்கி போனார்... அவரது மனைவி மீனாட்சி அவர் அருகில் வந்து,

"ஏன் இப்படி எல்லாம் பேசுறீங்க...? பத்து மாசம் சுமந்து பெத்த எனக்குத் தெரியாதா...? விஷ்ணு நம்ம மகன் தான்ங்க..." என்று அவர் கணவனைச் சமாதானப்படுத்தினார்...

நிஷிலா மாமனாருக்கு விசயம் தெரிந்துவிட்டதோ என்று மனதில் குழப்பத்துடன் அவரைப் பார்த்திருந்தாள்... அவளுக்கு மாமனாரை விடக் கணவனை நினைத்து தான் மிகவும் பயமாக இருந்தது... இப்போது தான் அவன் உடல்நலம் சரியாகி நன்றாக வந்து கொண்டிருக்கிறான்... இந்த நேரம் பார்த்து மீண்டும் பிரச்சினை எழுவதைக் கண்டு அவள் தனக்குள் தவித்துப் போனாள்...

சிம்மவிஷ்ணுவிற்குப் புரிந்து போனது... இன்று இளவரசியை டிஎன்ஏ பரிசோதனைக்கு அழைத்துச் சென்றது அவனுக்குத் தெரியும்... இந்த விசயத்தில் பத்ரிநாத்தின் கோபம் தன் மீது திரும்பும் என்பதும் அவன் எதிர்பார்த்த ஒன்று தான்... ஆனால் அவர் தன்னிடம் பேசுவார் என்று அவன் எதிர்பார்த்திருந்தான்... ஆனால் அவர் நேரிடையாகத் தனது தந்தையிடம் பேசுவார் என்று அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை... பத்ரிநாத் கூறியதை வைத்து தனது தந்தை எல்லாவற்றையும் தொகுத்து எளிதாக விசயத்தை ஊகித்து விட்டார்... அவரது புத்திசாலித்தனத்தை எண்ணி அவன் மனதிற்குள் மெச்சி கொண்டான்...

"பதில் சொல்லு விஷ்ணு... இதுக்கும் நீ நிஷாவை கடத்தியதுக்கும் சம்பந்தம் இருக்கும்ன்னு நினைக்கிறேன்... பதில் சொல்லுடா... இப்பவும் உன் மேல் எனக்கு நம்பிக்கை

இருக்கு... உன்னோட ஒவ்வொரு செய்கைக்கும் பின்னாடி வலுவான காரணம் இருக்கும்ன்னு..."

அவரது நம்பிக்கையில் அவன் உடைந்து போனான்... இசக்கிமுத்து, சுடலைமுத்து பற்றி அவரிடம் சொன்னவன் அவர்களது கொடூரமான இறப்பையும் தந்தையிடம் சொல்லி முடித்தான்... அதைக் கேட்டு சுந்தரபாண்டியன், மீனாட்சி இருவரும் அதிர்ந்து போயினர்... இப்படியும் மனிதர்கள் இருப்பார்களா? என்று...

"நான் தான் செத்து போன சுடலைன்னு சொன்னா உங்களுக்கு வருத்தமா இருக்கும்ப்பா... ஆனா என்னால் அதைச் சொல்லாம இருக்க முடியாது... எனக்குள் இருப்பது சுடலைமுத்துவின் ஆன்மா... அவன் சின்னப் பையன்ப்பா... பாவம், அவனுக்குப் பழிவாங்க தெரியாது... அதற்காகத் தான் நான் அவனுக்காக அவனுடைய பொய்த்து போன உறவுகளைப் பழிவாங்க நினைக்கிறேன்... இது தான் எனக்கும் சுடலைக்கும் உள்ள உறவு... இப்போ புரிந்திருக்குமே மாடசாமி யாரு? இளவரசி யாரு? நான் ஏன் நிலாவை கடத்தினேன்னு..." வேதனையுடன் கூறியவன் அவரது காலடியில் வீழ்ந்து,

"சுடலையோட ஆன்மா என் ஆழ்மனசில் இருக்குது... ஆனா என் மனசில் எப்போதும் விஷ்ணு தான் இருக்கான்... நீங்க ரெண்டு பேரும் தான் என்னோட அப்பா, அம்மா... நீங்களும் என்னை வெறுத்தா மீண்டும் நான் அநாதையா போயிருவேன்ப்பா..." என்று கண்ணீர் விட்டு கதறியவனை,

"விஷ்ணு..." என்று கூவலோடு அவனை எழுப்பித் தன்னோடு அணைத்துக் கொண்டார் சுந்தரபாண்டியன்...

"உன்னை வெறுக்க எங்களால் முடியாது... நீ எங்க உயிர் விஷ்ணு..." என்று அவரும் கண்ணீர் விட்டார்...

தந்தை, தாய், மகன் மூவரும் பாசப்பிணைப்பில் பிணைந்து இருப்பதைக் கண்ட நிஷிலா சத்தமில்லாது எழுந்து தங்களது அறைக்குச் சென்றாள்...

"உனக்கு எப்போ இந்த ஞாபகம் வந்தது...?" சுந்தரபாண்டியன் மகனிடம் கேட்டார்...

"தலையில் அடிப்பட்ட போது..."

அவருக்கு அனைத்தும் புரிந்து போனது... மகனுக்குத் தலையில் அடிப்பட்ட கொஞ்ச தினங்களில் அவன் நிஷிலாவை கடத்தியது ஏன்? என்று இப்போது புரிந்தது...

"உன்னோட கோபம், ஆதங்கம், பழிவெறி எல்லாம் சரி தான் விஷ்ணு... அதுக்காக அந்தப் பொண்ணு என்னடா பாவம் பண்ணுச்சு..."

"அன்னைக்கு இருந்த ஆத்திரத்தில் அப்படிப் பண்ணிட்டேன்ப்பா... இப்போது நினைக்கும் போது ரொம்ப வேதனையா இருக்கு... என் மேலேயே வெறுப்பாயிருக்கு..." என்றுரைத்தவன் மனைவியைத் தேடி அவள் அமர்ந்திருந்த இடத்தைப் பார்க்க... அது காலியாக இருந்தது...

"நிலா எங்கேம்மா...?" அவனுக்கு உள்ளுக்குள் பகீரென்றது...

"இங்கே தானே இருந்தாள்..." மீனாட்சி சுற்றும் முற்றும் பார்த்தார்...

பெற்றோருக்கே இந்த விசயம் இத்தனை அதிர்ச்சி அளித்தது என்றால் மனைவிக்கு இந்த விசயம் எத்தகைய அதிர்ச்சியைக் கொடுக்கும் என்பதை ஊகித்தவனாய் அவன் தனது அறையை நோக்கி ஓடினான்...

"விஷ்ணுவுக்கு நிஷா மேல் ரொம்பக் காதல் இல்லையாங்க...?"

"காலம் கடந்து வந்த காதல்... மருமகள் அதை உணர்ந்தால் சந்தோசமே..." என்றார் சுந்தரபாண்டியன்...

"இப்படியும் ஒரு பெண் இருப்பாளாங்க...? கொஞ்சமும் மனசாட்சி இல்லாம... பாவம் அந்தப் புள்ள..." இளவரசியை நினைத்து மீனாட்சி முகத்தை அருவருப்பாய் சுளித்தார்...

"இருக்காங்களே..." என்று பெருமூச்சு விட்டவர்,

"விஷ்ணுவை அன்பா, பாசமா பார்த்துக்கிறதுக்குத் தான் நீ இருக்கியே... இந்த ஜென்மத்தில் அவனுக்கு ஒரு நல்ல அம்மாவை தான் கடவுள் கொடுத்திருக்கிறார்..."

"எல்லா ஜென்மத்திலும் விஷ்ணு தான் எனக்கு மகன்... நான் மட்டுமே அவன் அம்மா..." தனது மகனை வேறு எவருடனும் பங்கு போட முடியாதபடி தவித்த தாயுள்ளம் கோபமாய்த் தனது உரிமையை நிலை நாட்டியது...

தந்தையான தனக்கே மகனுள் இருக்கும் சுடலைமுத்துவை ஏற்றுக் கொள்ளச் சற்றுச் சிரமமாக இருக்கிறது... தாயான தனது மனைவிக்கு அது மிகவும் கஷ்டமாகத் தான் இருக்கும்... சுந்தரபாண்டியனுக்கு மனைவியின் மனநிலை புரிந்தது...

"யாரு இல்லைன்னு சொன்னா...? சொல்லி தான் பாரேன்... உன் மகன் அப்படிச் சொல்லத்தான் விட்டிருவானா..." என்று அவர் சூழ்நிலையை மாற்றும் பொருட்டுக் கேலி செய்து சிரித்தார்...

"என் மகனை அப்படிச் சொல்ல எனக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு..." பல்லை கடித்துக் கொண்டு கணவரை பார்த்து முறைத்தவர் பின்பு தனது பார்வையை மாற்றிக் கொண்டு,

"ஏங்க, பழிவாங்குறேன்னு அவன் ஏதாவது அவசரப்பட்டுச் செஞ்சிர போறான்ங்க... இப்ப தான் அவன் வாழ்க்கையை அவன் நிம்மதியா வாழ்ந்துட்டு இருக்கான்..."

"அது அவனுக்கும் தெரியும் மீனா... நீ வீணே கவலைப்படாதே..." என்று அவர் மனைவிக்கு ஆறுதல் அளித்தார்...

"இவன் என் விஷ்ணு தானே...?" மீனாட்சியின் தாயுள்ளம் பரிதவித்தது...

"எவடி இவ... விஷ்ணு உருவத்தில் என்னைக் கொண்டு பிறந்திருக்கான்... அவன் என் மகன் இல்லாம வேறு யாரு மகன்...?" என்று அவர் மீசையை முறுக்கி கொள்ள...

"ரொம்பத்தேன் பெருமை..." என்று நொடித்துக் கொண்டாலும் கணவரின் விழியில் வழிந்த கர்வத்தில் மீனாட்சி நாணமடைந்து கணவரது தோள் சாய்ந்தார்... சுந்தரபாண்டியன் மனைவியை ஆறுதலாக அணைத்துக் கொண்டார்...

சிம்மவிஷ்ணு மனைவியைத் தேடி நேரே தனது அறைக்குச் சென்றான்... அவனது எதிர்பார்ப்பை பொய்யாக்காது அவள் அங்கே தான் இருந்தாள்... ஜன்னல் வழியே தோட்டத்தை வேடிக்கை பார்த்தபடி நின்றிருந்தவளை அவனது விழிகள் பதற்றத்துடன் பார்த்தது... விசேசத்திற்குச் சென்றதால் பட்டுப்புடவை கட்டி, தலையில் பூ வைத்து அவள் அழகாக இருந்தாள்... அவளது அழகினை ரசிக்கும் மனநிலையில் அவன் இல்லை...

"பேபி..." அவனது தழுதழுப்பான குரலில் நிஷிலா திரும்பி பார்த்தாள்...

"பேபி..." என்றபடி வேகமாய் அவளை நோக்கி வந்தவன் அவள் அருகில் வந்த அடுத்த நொடி அவளை இறுக்கமாய் அணைத்திருந்தான்...

அவள் அவனது மனவுணர்களைப் புரிந்து கொண்டவளாய் எட்டு வயது சிறுவன் சுடலைமுத்துவாய் அவனை எண்ணி தாய்மை உள்ளத்தோடு அணைத்து கொண்டாள்... அவளது அணைப்பில் அவனது விழிகள் கசிந்தது...

"பேபி, நான்... நான்..." அவளிடம் இருந்து விலகியவன் பேச்சு வராது தடுமாறினான்...

"எல்லாம் எனக்குத் தெரியும்..." அவள் அவனை வாஞ்சையுடன் பார்த்தாள்...

"உனக்கு... எப்போ தெரியும்...?" அவன் திகைப்புடன் அவளைப் பார்த்தான்...

"டாக்டர் ஆபிரகாம் கிட்ட ட்ரீட்மெண்ட்க்கு போனோமே அப்பவே..."

அவன் சோர்ந்து போய் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான்... அவள் அவன் அருகில் அமர்ந்து,

"உங்களோட வருத்தம் எனக்குப் புரியுது... உங்களோட வேதனை, வலி அதனால் நீங்க என்னைக் கடத்தியது எல்லாவற்றையும் நான் நல்லவிதமா புரிஞ்சிக்கிட்டேன்... இந்த விசயத்தில் உங்க மேல எனக்கு எந்தக் கோபமும் இல்லை... எங்க வீட்டாளுங்க மேல தான் எனக்கு ரொம்பக் கோபம் வந்தது... அதனால் தான் உங்களைக் குணப்படுத்தணும்ன்னு உங்க கூட வந்தேன்..."

கணவனின் மனதினை புரிந்தவளாய் அவள் அவனை ஆதரவாய் பார்த்தாள்... அவளது புரிதலில் அவனது இதயம் நன்றியுடன் கசிந்தது...

"என்ன இருந்தாலும் நான் உனக்குப் பண்ணியது தவறு தானே... மன்னிக்க முடியாத தவறு தானே... அப்போ சந்தோசமா இருந்த விசயம் இப்போ நினைக்கும் போது ரொம்ப வேதனையா இருக்கு..." இரு கைகளால் தலையைத் தாங்கியபடி அவன் புலம்பினான்...

"உங்க வலி முன்னாடி என்னோட வலி எல்லாம் சாதாரணம்... நீங்க செஞ்சது சரி தான்... துரோகத்துக்குத் துரோகம்... பழிக்கு பழி..." என்று சாதாரணமாக உரைத்தவளை கண்டு,

"இல்லை, நீ என்ன தான் சொன்னாலும் நான் செஞ்சது தப்பு தான்... உன்னோட வலி முன்னாடி என்னோட வலி ஒண்ணுமே இல்லாதது... நான் என்னை மட்டுமே நினைச்சேனே தவிர, உன்னைக் கொஞ்சமும் நினைச்சு பார்க்கலை... உன் வீட்டாளுங்க உன்னை இப்படிப் புறக்கணிப்பாங்கன்னு நான் கனவுல கூட நினைக்கலை... நான் நினைச்சது ஒண்ணு... ஆனா நடந்தது வேறு ஒண்ணு..."

"இது தான் நல்லவங்களுக்கும் கெட்டவங்களுக்கும் உள்ள வித்தியாசம்... கெட்டவங்க அசால்ட்டா தப்பை பண்ணிட்டு கொஞ்சமும் மனசு உறுத்தாம சந்தோசமா வாழ்வாங்க... ஆனா நல்லவங்களால அப்படி வாழ முடியாது... என் மாமா ரொம்ப ரொம்ப நல்லவங்க... அதான் எனக்காக, எனக்குச் செஞ்ச அநீதிக்காகத் தண்டனை அனுபவிச்சிட்டாங்க... இதிலேயே தெரியலையா? நீங்க நல்லவங்கன்னு..." அவனது மனைவி அவனுக்கு 'நல்லவன்' என்று நற்சான்றிதழ் அளித்தாள்...

"ஒரு ரேப்பிஸ்ட்டை நல்லவன்னு சொல்ல உன்னால் மட்டும் தான் முடியும்..." அவன் வேதனையுடன் கூறியதை கேட்டு அவளது முகம் மாறியது...

"ரெண்டு பேரும் இதையே நினைச்சிட்டு இருப்பதால் எதுவும் மாறிவிடப் போவது இல்லை..."

"ம், அது என்னவோ உண்மை தான்..." என்று தலையைக் கோதி பெருமூச்சு விட்டவன்,

"சுடலையை மறந்து விஷ்ணுவா வாழணும்ன்னு நான் ஆசைப்படறேன்..."

"நிச்சயம் அது நடக்கும்..." என்று ஆறுதல் அளித்தவளை கண்டு புன்னகைத்தவன்,

"நீ என் கூட இருக்கும் வரை எல்லாமே நல்லதாகத் தான் நடக்கும்... என் உயிர் இருக்கும் வரை நீ என் கூடவே இருப்பியா பேபி...?" என்றவனது கை மீது தனது கையை வைத்து ஆமென்பது போல் அவள் அவனைப் பார்த்து புன்னகைத்தாள்...

"எப்படிடி உன்னால் மட்டும் எல்லாத்தையும் புன்னகையுடன் கடக்க முடியுது...?" அவன் ஆச்சிரியமாய் மனைவியைப் பார்த்தான்...

"நான் மனுசங்களைப் படிக்கிற படிப்பை படிச்சிருக்கேன்... அப்படிப்பட்ட நான் என் புருசனான உங்க மனசை படிச்சு புரிஞ்சிக்க மாட்டேனா..." என்றவள் அவன் அருகில்

நெருங்கி அமர்ந்து கொண்டு அவனது கையோடு கை கோர்த்து அவனது தோளில் தலை சாய்ந்தாள்...

"சுடலையைப் பத்தி நீங்க சொல்ல சொல்ல என்னால் வேதனையைத் தாங்கிக்க முடியலை... எட்டு வயசு சிறுவனான உங்களோட வலியை ஒரு அம்மாவா நான் உணர்ந்தேன்... இப்போ அதை நினைச்சாலும் எனக்கு அழுகை தான் வருது..." என்று கூறியபடி கண்ணீர் உகுத்தவளை அவன் தன்னோடு அணைத்துக் கொண்டான்...

அவனும் கடந்த காலத்தை நினைத்து பார்த்தானோ...? அதை எண்ணி அவனது மனம் கனத்துப் போனது...

"அதனால் தான் உங்க கூட என்னால் இணக்கமா இருக்க முடிஞ்சது... உங்க வேதனையைக் குறைக்கணும்ன்னு நான் உங்க கிட்ட என்னைச் சந்தோசமா காட்டிக்கிட்டேன்... நீங்க அதைக் காதல்ன்னு சொல்றீங்க... ஆனா எனக்கு அது தெரியலை... இன்னமும் அந்த உணர்வுக்குப் பெயர் என்னன்னு தெரியலை... என் மனசில் இருந்தது எல்லாம் உங்களைச் சந்தோசமா வச்சுக்கணும்... நீங்க பழைய மாதிரி மாறி எதிரிகளைப் பழிவாங்கணும்... இது மட்டும் தான் என் மனசில் இருந்தது... இதோ இப்போதும் உங்க சந்தோசத்துக்காகத் தான் நான் இங்கே வந்திருக்கேன்... அம்முக்காகக் கூட இல்லை..." என்றவள் அவனை நிமிர்ந்து பார்த்து,

"நான் சொல்றதை உங்களால் புரிஞ்சிக்க முடியுதா...?" என்று அவள் தவிப்புடன் அவனைப் பார்த்தாள்...

"எனக்கு நல்லாவே புரியுது... ஒவ்வொண்ணையும் என் முகம் பார்த்து நீ செய்யும் போதே எனக்குப் புரிஞ்சது... இதோ இப்போ கூட நான் உன் கிட்ட கணவன் உரிமையை நிலைநாட்ட விரும்பினால் நீ எனக்காக அதையும் விட்டு கொடுப்பேன்னு எனக்கு நல்லா தெரியும்..." என்றவனை அவள் வியப்பாய் பார்த்தாள்...

"இவ்வளவு நாள் நான் உன்னைச் சரியா புரிஞ்சிக்கலை... இனியாவது உன்னைச் சரியா புரிஞ்சிக்கிட்டு வாழணும்... உன்னைத் திகட்ட திகட்ட காதலிக்கணும்... இப்படி நிறைய இருக்கு..."

அவன் கூறிய விதத்தில் அவளுக்கும் கணவனை உயிருக்கு உயிராய் காதலித்து வாழ வேண்டும் என்கிற ஆசை மனதில் விருட்சமாய் எழுந்தது...

"நிச்சயம் நடக்கும் மாமா..."

அவளது மாமா என்றழைப்பில் வழக்கம் போல் சந்தோசம் கொண்டவன், "வித் யுவர் பெர்மிசன்..." என்றபடி அவள் புறம் மண்டியிட்டு அமர்ந்தவன் சட்டென்று அவளது மாராப்பை விலக்கினான்...

"அச்சோ என்ன பண்றீங்க...?" அவள் கூச்சத்துடன் புடவையை இழுத்து விட்டு கொண்டாள்...

"அன்னைக்கும் ஹாஸ்பிட்டலில் வச்சு இப்படித்தான் பண்ணினே... இப்பவும் இப்படித் தான் பண்ற...? நான் ஒண்ணும் தப்பான எண்ணத்தில் இதைச் செய்யலை..." என்றவனது முகம் வாடி போனது...

"சாரி, சாரி..." இரு காதுகளையும் பிடித்துக் கொண்டு அவள் மன்னிப்பு கேட்டாள்...

"என் குழந்தைகளுக்கு முத்தம் கொடுக்க வந்தேன்..." என்றவன் அவளது வயிற்றில் மென்மையாக முத்தமிட்டு நிமிர்ந்தான்... அவனது செய்கையில் அவள் உடல் எல்லாம் சிலிர்க்க மெய்மறந்து அவனைப் பார்த்திருந்தாள்...

"குழந்தை உண்டானப்பவே கொடுக்கணும்ன்னு நினைச்சேன்... உனக்கும் பிடிக்குமோன்னு தயக்கமா இருந்தது..."

"பிடிக்காதுன்னு யார் சொன்னா...? குழந்தை உண்டாகி இருக்கும் எல்லாப் பெண்களுக்கும் கணவன் இது போல் முத்தமிட்டா ரொம்பப் பிடிக்கும்... இதுக்கு நானும்

விதிவிலக்கல்ல..." என்று அவள் வெட்கத்துடன் முகத்தை மூடி கொண்டு கூற...

அவன் சிரித்தபடி மீண்டும் முத்தமிட்டான்... முதல் முறை போன்று மென்மையாய் அல்லாது இந்த முறை சற்று அழுத்தமாய்... அவளது மனதினை அறிந்ததால் எழுந்த உற்சாகம் வேறு இப்போது அவனிடத்தில் சேர்ந்து கொண்டது...

அவள் பரவசத்துடன் அவனது தலையை வயிற்றுடன் சேர்த்து அணைத்து கொண்டவள், "அம்மு உண்டாகி இருக்கும் போது இதையெல்லாம் ரொம்ப மிஸ் பண்ணினேன்..." என்று கூறியவளின் ஏக்கம் அவனுக்குப் புரியத்தான் செய்தது...

"சாரி பேபி..." என்று அவனால் மன்னிப்பு மட்டுமே கேட்க முடிந்தது...

"சாரி எல்லாம் வேண்டாம்..."

"அப்போ என்ன வேணும்...?" அவன் அவளை நிமிர்ந்து பார்த்து கேட்டான்...

"தெரியலையே..." என்று கூறியவளின் அறியாமை அவனை மிகவும் கவர்ந்தது...

தன்னை மன்னித்து மன்னித்து மனிதனாக்கும் அவள் மீது அவனுக்குக் காதல் பெருக்கெடுத்து ஓடியது... அவளது விழிகளில் மென்மையாய் இதழொற்றி விலகியவன் அவளது விழிகளுக்குள் தனது விழிகளைக் கலந்தபடி,

"ஐ லவ் யூ பேபி..." என்று தனது காதலை மனைவியிடத்தில் அழுத்தமாய் உரைத்தான்...

அவள் முகம் எல்லாம் சந்தோசத்தில் பூரிக்க அவனைப் பார்த்து நிறைவாய் புன்னகைத்தாள்...!!!

"கண்ணும் கண்ணும் கொள்ளையடிக்கவில்லை,
இதயமும் இதயமும் பேசவில்லை,
உயிரும் உயிரும் உருகவில்லை,

நானே நீ, நீயே நான் எனப் பிதற்றவில்லை,
பார்த்த கணம் பார்வையில் கோபத்தீ பற்றிக் கொண்டது,
தொடுகையோ தினமும் தீக்குளிக்க வைத்தது,
மனமோ வெறுப்பில் தத்தளித்தது,
எதிர் எதிர் துருவங்களையும்
காதல் விட்டு வைக்கவில்லை,
நீயில்லையேல் நானில்லை,
உணர்ந்து கொண்ட கணமோ தாமதம்,
தாமதமென்றாலும் காதல் காதல் தான்...
நான் உன்னைக் காதலிக்கின்றேன்,
இன்றும் என்றும் என்றென்றும்...!!!"

கொள்ளும்...!!!

"ப்பா, இங்கே வாங்களேன்..."

தோட்டத்தில் பூத்திருந்த மலரின் மீது அமர்ந்து தேன் அருந்தி கொண்டிருந்த பட்டாம்பூச்சியைக் கண்டு ஆதிரை உற்சாகமாய்க் குரல் கொடுத்தாள்... காலையில் எழுந்ததும் அப்பாவும், மகளும் நடைப்பயிற்சிக்காகத் தோட்டத்திற்கு வந்துவிட்டனர்... மகளின் உற்சாகக் குரலில் சிம்மவிஷ்ணு அவளின் புறம் திரும்பினான்...

"ஃபட்டர்ப்ளை ஆரஞ்சு, ப்ளாக், வொயிட் கலருல அழகா இருக்குல்ல...?" விழிகளை உருட்டி கொண்டு மகள் கூறிய பாவனை அழகிய கவிதை போலிருந்தது...

"ஆமாம் அம்மு, அழகாயிருக்கு..." என்றவன் மகளின் அழகினை ரசித்தபடி அவளது கன்னத்தில் முத்தம் வைத்தான்...

"நான் அதைப் பிடிக்கப் போறேன்..." ஆதிரை அதன் அருகில் மெதுவே செல்ல... பட்டாம்பூச்சியோ அவளது வருகையை உணர்ந்து பறந்து சென்றது...

"அச்சோ போச்சே..." என்று அவள் அதை ஏக்கத்துடன் பார்த்தாள்...

"அம்மு அங்கே இருக்கு பார்..." என்று குரல் கொடுத்தபடி நிஷிலா அங்கு வந்தாள்...

சிம்மவிஷ்ணு அவளைத் திரும்பி பார்த்தான்... வீட்டில் இருக்கும் போது அவள் எப்போதும் அணியும் முட்டிங்காலுக்குக் கீழ் வரை இருக்கும் இரவு உடையை அணிந்து, தலைமுடியை தூக்கி கொண்டை போட்டிருந்தாள்... இரட்டை குழந்தை என்பதாலோ என்னமோ, நான்காம் மாதத்தில் வயிறு லேசாகத் தெரிந்தது... அவன் அவளைத் தலை முதல் கால் வரை ரசித்துப் பார்த்துக் கொண்டிருக்க... அவளோ அவனைக் கவனியாது,

"அம்மு, வா வா..." என்று மகளுக்கு ரகசிய சமிக்ஞை காட்டியபடி முன்னால் விரைந்தாள்... மகளும் அன்னையின் பின்னே சத்தம் செய்யாது சென்றாள்...

இருவரின் பலமான முஸ்தீபுகளைக் கண்டு சிம்மவிஷ்ணு சிரித்தபடி அங்கிருந்த கல்மேடையில் அமர்ந்தான்... ரோஜா பூ மீதிருந்த பட்டாம்பூச்சியை நிஷிலா எட்டிப்பிடிக்க முயன்று தோற்றாள்... அது அவளுக்கு விளையாட்டு காட்டிவிட்டு ஓடி போனது... அவளும் விடாது அதன் பின்னே செல்ல... ஆதிரையும் துள்ளி குதித்துக் கொண்டு ஆர்ப்பாட்டமாய் அன்னையுடன் சேர்ந்து ஓடினாள்...

பட்டாம்பூச்சியைத் தேடி இரு பெண்களும் பட்டாம்பூச்சி போல் அங்குமிங்கும் ஓடி செல்வதைக் கண்டு சிம்மவிஷ்ணுவின் புன்னகை விரிந்தது... மகளுக்கு இணையாக மனைவியும் சிறுபிள்ளை போன்று துள்ளி குதித்து ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தாள்... சில சமயங்களில் பக்குவமாக நடந்து கொள்ளும் மனைவியையும், இதோ இப்போது குறும்புக்கார பெண்ணாய் இருக்கும் பெண்ணவளையும் அவனது மனம் ஒப்பிட்டுப் பார்த்தது... அவனுக்கே அவளது நடத்தை கண்டு சிரிப்பு வந்தது...

"ஷ், அப்பா... இதுக்கு மேல என்னால் முடியலை..." என்றபடி கணவனது அருகில் வந்தமர்ந்தாள் நிஷிலா...

"குழந்தை உண்டாகியிருக்கும் போது இது என்ன விளையாட்டு...?" என்று அவன் அவளைச் செல்லமாய்க் கடிந்தான்...

"அப்போ தான் குழந்தையும் சுறுசுறுப்பா இருக்குமாக்கும்..." கண்களை உருட்டி கொண்டு குறும்பாய் கூறிய மனைவியைப் பார்த்தவனுக்கு அவளது குழந்தைத்தனத்தை ரசிக்கத் தோன்றியது...

"அப்புறம்...?" அவன் விழிகளில் சுவாரஸ்யம் பொங்க அவளைப் பார்த்திருந்தான்...

"ம், விழுப்புரம்..." என்று அவள் கழுத்தை வெட்ட... அவளது முன்னுச்சி முடி நெற்றியில் படர்ந்து விழிகளை மறைத்தது...

"ஹா ஹா..." என்று அவன் வாய்விட்டு சிரித்தபடி அவளது தலைமுடியை எடுத்துக் காதோரம் சொருகிவிட்டான்...

"ப்பா..." என்றபடி ஆதிரை அங்கே ஓடி வந்தாள்...

அவளது கையில் வெள்ளை நிற ரோஜாப்பூ இருந்தது... இன்று அவளது பள்ளி சீருடையின் நிறம் வெண்மை... அதனால் அவள் வெள்ளைப்பூவை தேர்ந்தெடுத்திருந்தாள்...

"ம்மா, இன்னைக்கு ஸ்கூலுக்கு இந்த ரோஸை நான் வச்சிட்டுப் போகப் போறேன்..." என்று அவள் துள்ளி குதித்தாள்...

"ஓகே அம்மு..." என்ற நிஷிலா மகளைப் பள்ளிக்கு கிளப்புவதற்காக எழுந்தாள்...

"அம்மு இங்கே வாம்மா..." மீனாட்சி பேத்தியை அழைத்தார்...

"பாட்டி..." என்று கத்தியபடி சின்னவள் பெரியவளை நோக்கி சென்றாள்... அவர் பேத்தியை அணைத்து உச்சி முகர்ந்தவர் மருமகளிடம்,

"நான் அம்முவை கிளப்பி விடறேன்... நீ இரும்மா..." என்றபடி பேத்தியை அழைத்துக் கொண்டு வீட்டினுள் சென்றார்... ஆதிரையும் அம்மா தான் வேண்டும் என்று அடம்பிடிக்காது பாட்டியுடன் சமத்தாகச் சென்றாள்...

இருவரும் செல்வதைப் புன்னகையுடன் பார்த்து கொண்டிருந்தவளை சிம்மவிஷ்ணு கைப்பிடித்து அமர வைத்தான்... அவளும் அமர்ந்தவளாய்,

"ஏங்க, அங்கே பாருங்களேன்..." என்று குதூகலமாகக் கத்தினாள்... அவள் கூறிய திசையில் அவன் அவசரமாகத் திரும்பி பார்த்தான்...

அங்கே ஆறு அழகான முயல்குட்டிகள் விளையாடி கொண்டிருந்தது... ஒவ்வொன்றும் வெள்ளை நிறத்தில் புசுபுசுவென்று அழகாக இருந்தது...

"அழகாயிருக்குல்ல...?"

"ஆமாம், ஆமாம்... அழகாயிருக்கு..."

அவனது குரலில் தெரிந்த பேதத்தில் அவள் அவனைத் திரும்பி பார்த்தாள்... அவன் தன்னைப் பார்ப்பதை கண்டு பொய் கோபத்துடன்,

"நான் அங்கே பார்க்க சொன்னேன்..." என்றவளை பிடித்துத் தனது கையணைவில் வைத்து கொண்டவன்,

"அதை விட என் பொண்டாட்டி நீ தான்டி ரொம்ப அழகாயிருக்க..." என்று அவன் அவளைக் கொஞ்சினான்...

"வயசு முப்பதாகப் போகுது... இன்னும் ஸ்கூல் படிக்கிற பொண்ணு மாதிரி சின்னப்பிள்ளையாவே இருக்கேடி..." என்று அவன் அவளது அழகில் மயங்கியவனாய் கூற...

கணவனது வார்த்தையில், அவனது அருகாமையில் அவளது மனமும் மயங்க துவங்கியது... நேற்றிரவு அவன் காதலை கூறியதால் என்னவோ அவனிடத்தில் அவளுக்கு மனதளவில் சிறிது நெருக்கம் ஏற்பட்டிருந்தது... ஆனாலும் குறும்பு கூத்தாட,

"மிஸ்டர். சிம்மவிஷ்ணு, உங்களுக்கு நான் சின்னப் பொண்ணு தானுங்கோ..." என்று அவனைக் கிண்டலடித்தாள்...

"அப்படியா...? ஆனா செய்கிற வேலை எல்லாம் பார்த்தால் அப்படித் தெரியலையே என்னருமை கேடியே..." என்றவனது உதடுகளில் ரகசிய சிரிப்பு மலர்ந்தது...

அவனது வார்த்தைகளில் முதலில் புரியாது விழி சுருக்கியபடி அவனைப் பார்த்தவள் பின்பு அவனது விழிகளில் வழிந்த விசமத்தில், அவனது உதடுகளில்

நெளிந்த ரகசிய புன்னகையில் அவளுக்கு ஏதோ புரிய ஆரம்பித்தது...

"ச்சீ, நீங்க ரொம்ப மோசம் மாமா..." என்று கூறியவள் அவனது பிடியில் இருந்து விலகி வீட்டை நோக்கி ஓடினாள்... அவளது வெட்கம் கலந்த புன்னகையை ரசித்தபடி அவனும் அவளைப் பின்தொடர்ந்தான்...

தங்களது அறைக்கு வந்ததும் மீண்டும் மனைவியைத் தனது கைகளில் சிறை செய்தவன், "நான் மோசமா பேபி...? நான் உன்னை ஒண்ணுமே செய்யலையே..." என்று ஒற்றைப் புருவத்தை உயர்த்தியபடி அவளிடம் கேலியாய் கேட்டவனின் அழகில் மனம் மயங்க நின்றிருந்தவள்,

"ஒண்ணும் செய்யாம தான்..." மேலே சொல்ல முடியாது நாணம் தடுக்க அவளது வலக்கை வயிற்றைத் தடவி கொடுத்தது... அவளது செயலில் அவள் சொல்ல வந்ததைத் தானாக ஊகித்துக் கொண்டவனிடத்தில் சிரிப்பு பீறிட்டது...

"ச்சீ, போங்க..." என்று வெட்கத்தில் அவனை விலக்கிவிட்டுக் கட்டிலில் சென்று படுத்து கொண்டாள்...

சோர்வுடன் தெரிந்தவளின் அருகில் வந்தமர்ந்தவன், "என்ன செய்யுதுடா...?" என்று கவலை குரலில் கேட்டான்...

"டயர்டா இருக்கு... வேற ஒண்ணுமில்லை..."

"நீ ஓடுன ஓட்டத்துக்கு டயர்டாகாம என்ன செய்யும்...?" என்று அவன் அவளைக் கடிந்தான்...

"ஜஸ்ட் ரிலாக்ஸ்க்கு தானே..." என்றவளை முறைக்க முயன்று தோற்றவன் பின் சிரித்துவிட்டான்...

"அடுத்த வெள்ளிக்கிழமை நீ ஃப்ரீயா பேபி...?"

"என்ன விசயம்...?" என்று கேட்டபடி எழுந்தமர்ந்தவளை அவன் தனது நெஞ்சில் வாகாய் சாய்த்துக் கொண்டான்...

"கல்யாண வீடு ஒண்ணு இருக்கு... அதுக்கு உன்னைக் கூட்டிட்டு போகலாம்ன்னு நினைக்கிறேன்..."

"நான் வரலை..." உடனே மறுத்தவளை கூர்ந்து பார்த்தவன்,

"நான் தான் கூட வர்றேன்ல..."

"இருந்தாலும்..." என்று இழுத்தவளை கண்டு,

"என்னை மீறி யாரும் உன்னை எதுவும் பேசிவிட முடியாது... அதனால் தைரியமா என் கூட வரலாம்..." அவன் கூறிய தைரியத்தில் அவளது தலை தானாகச் சரியென்று சம்மதமாக ஆடியது...

"ஆனா இப்படி ஏனோ தானோன்னு கிளம்பி வர கூடாது... சிம்மவிஷ்ணு மனைவின்னு உன்னைப் பார்த்தும் தெரியற மாதிரி அலங்காரம் பண்ணிட்டு கெத்தா வரணும்..." என்றவனைக் கண்டு ஒரு நொடி உறுத்து விழித்தவள் மறுநொடி பக்கென்று சிரித்து விட்டாள்...

"வேணும்ன்னா என் கழுத்தில் ஒரு அட்டையில் 'நான் சிம்மவிஷ்ணு மனைவி'ன்னு எழுதி மாட்டிக்கிட்டு வரவா...?" என்று நமட்டு சிரிப்புடன் கூறியவளின் தலையில் வலிக்காது கொட்டியவன்,

"நான் எவ்வளவு சீரியசா சொல்றேன்... நீ என்னடான்னா விளையாண்டுக்கிட்டு இருக்க..." என்று அவன் அவளை அதட்டினான்...

"நானும் சீரியசா தான் சொல்லுறேன்... நான் எங்கேயும் வரலை..." என்று அவளும் விளையாட்டுத்தனத்தைக் கைவிட்டு விட்டு உறுதியாகக் கூறினாள்...

"நீ என் கூட வந்து தான் ஆகணும்..." அவன் பிடிவாதம் பிடித்தான்...

அவள் முகம் வாட அவனைப் பார்த்தாள்... அவளது முகத்தைத் தனது கைகளில் ஏந்தியவன், "உனக்கு அவமானம் நேருமளவுக்கு நான் விட்டு விட மாட்டேன்... என்னை நம்பு பேபி..." என்று கூறியவனின் உறுதி அவளது மனதினை சிறிது அசைத்தது... அவள் சரியென்று தலையசைத்தாள்...

"தட்ஸ் குட் மை பேபி..." என்றவன் அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட...

முதன்முறையாய் அவனது ஸ்பரிசம் அவளது உள்ளத்தைத் தீண்டி சென்றது... நேற்று அவன் கூறிய வார்த்தையில் இருந்த காதலை இப்போது அவனது ஸ்பரிசத்தில் உணர்ந்தாளோ... மௌனமாய் விழி மூடி அவனது தொடுகையை மனதினுள் உள்வாங்கிக் கொண்டாள்...

"அப்பா எனக்கு..." என்றபடி உள்ளே ஓடி வந்த மகளைக் கண்டதும் அவள் அவசரமாய் விலக... அவனோ நிதானமாய் அவளை விட்டு விலகினான்...

"நாம என்ன தப்பா பண்ணினோம்... முத்தம், அதுவும் நெத்தியில் தானே கொடுத்தேன்... பெற்றோரின் அந்நியோன்யத்தைப் பிள்ளைங்களும் தெரிஞ்சிக்கணும்..." மனைவியைக் கடிந்தவன் மகள் புறம் திரும்பி,

"வாங்க அம்மு..." தனது இரு கைகளையும் அகல விரித்து அவளை அழைத்தான்... குட்டி புயல் ஓடி வந்து அவனது கைகளில் தொப்பென்று விழுந்தாள்...

"அம்மு ஸ்கூலுக்குக் கிளம்பிட்டாங்களா...?"

"எஸ், எஸ்..." என்று குதித்தவள்,

"ப்பா, எனக்குக் கிஸ்..." என்று கன்னத்தைக் காண்பிக்க...

சிம்மவிஷ்ணு சிரித்தபடி மகளது கன்னத்தில் முத்தமிட்டவன், "தாத்தா கூடப் போறியா...? இல்லை நான் வரவா...?" என்று கேட்க...

"தாத்தா வர்றேன்னு சொன்னாங்க..."

"சரி வா..." என்று அவன் மகளை அழைத்துக் கொண்டு வெளியில் செல்ல... நிஷிலா கணவனைப் பின்தொடர்ந்து சென்றாள்...

மகளைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு இருவரும் தங்களது வேலைக்குக் கிளம்பினர்... காரில் செல்லும் போது நிஷிலா அவனிடம்,

"டிஎன்ஏ ரிசல்ட் எப்போது வருதாம்...?"

"ரெண்டு, மூணு நாளாகும் போலிருக்கு..."

"ஓ..." என்றவள் அமைதியாகி போனாள்... சிறிது நேரம் அமைதியாக இருந்தவன்,

"உனக்கு வருத்தமா இல்லையா நிலா...?"

"ஏன்...?"

"குற்றவாளிகளில் உன் அப்பாவும் ஒருத்தர்..."

"இல்லை..." தீர்க்கமாகக் கூறியவள்,

"செய்த தவறுக்குத் தண்டனை அனுபவித்துத் தானே ஆகணும்..."

"அது என்னவோ உண்மை தான்..." வருத்தம் தொய்ந்த குரலில் கூறியவனைத் திரும்பி பார்த்தவள்,

"இனிமேல் நீங்க இப்படிப் பேசுறதை நிறுத்தணும்... நீங்க தப்பு செஞ்சீங்க தான், இல்லைங்கல்ல... அதுக்கான தண்டனையை அனுபவிச்சிட்டு வந்திட்டீங்க... அதுக்கும் இதுக்கும் சரியா போச்சு... இனி நீங்க இப்படிப் பேசினா நான் உங்க கூடப் பேச மாட்டேன்..."

அவளது வார்த்தையில் அவனது வருத்தம் மறைந்து அங்கே உல்லாசம் வந்து இடம் பிடித்துக் கொண்டது...

"வேற எப்படிப் பேசணுமாம்...?" என்றவன் கணவனாய் அந்தரங்கமாய்ச் சில வார்த்தைகளை உதிர்க்க... அதைக் கேட்டு காதை பொத்தி கொண்டவள்,

"அதுக்குன்னு இப்படியா பேச சொன்னது..." என்று அவனைக் கோபமாய்ப் பார்த்தாள்...

"எல்லாக் கணவனும் மனைவி கிட்ட இப்படித் தான் பேசுவாங்க... நானும் அப்படியே..." என்று அவன் கண்சிமிட்டி சிரித்தான்... அதில் அவள் முகம் நாண வெளியில் பார்த்தாள்...

அதற்குள் அவள் வேலை பார்க்கும் மருத்துவமனை வந்துவிட்டது... அவள் இறங்க போகும் முன் அவளது கையைப் பிடித்துத் தடுத்தவன்,

"பதினோரு மணிக்கு ஜூஸ் குடி... ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணாதே... லன்ச்சுக்கு நான் வந்து கூட்டிட்டு போறேன்..."

கணவனது அக்கறை ஏனோ அடிநெஞ்சு வரை சென்று தித்தித்தது... அவனை இமைக்காது பார்த்தவளின் முன் கையை ஆட்டியபடி,

"ஹலோ மேடம், என்ன உட்கார்ந்துட்டே தூக்கமா...?" என்று அவன் கேட்க...

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை..." என்றவள் இறங்க ஆயத்தமாக...

"ஈவினிங் ரெடியாயிரு... அம்முவையும் கூட்டிட்டு ஷாப்பிங் போகலாம்..."

"எதுக்கு...?" அவள் விழி சுருக்கினாள்...

"ஷாப்பிங் எதுக்குப் போவாங்க...?" அவன் போலியாக அவளை முறைத்தான்...

"வாங்க வேண்டியது ஒண்ணும் இல்லையே..."

"என் மனைவிக்கும், மகளுக்கும் வாங்கிக் கொடுக்க எனக்கு நிறைய இருக்கு..." என்றவனது முகம் கோபத்தைத் தத்தெடுக்க ஆரம்பித்தது... கணவனது கோபம் அவளது மனதினை ஏதோ செய்ய அவனது கரம் மீது தனது கரத்தினை வைத்தவள்,

"எதுக்கும் உங்க சொத்துக்களை வித்துப் பணத்தை மூட்டை கட்டிக்கிட்டு வாங்க..." என்று சீரியசாகக் கூற...

அவனோ திகைப்புடன் அவளைப் பார்க்க... அவளோ முகத்தைச் சாதாரணமாக வைத்திருந்தாள்... அவள் கூறியது உண்மை தானா...? இல்லை தனது காதில் தான் கோளாறா...? என்று அவனுக்குச் சந்தேகமாக இருந்தது...

"இப்போ என்ன சொன்ன பேபி...?" என்று அவன் பரபரப்புடன் கேட்க...

"சோத்துக்கு உப்பில்லை, சுரைக்காய்க்கு பருப்பில்லைன்னு சொன்னேன்..." நொடித்துக் கொண்டவளின் இதழோரம் துடித்தது, அடக்கப்பட்ட புன்னகையில்...

"அடியேய் கள்ளி... பொய்யா சொல்ற... பொய் சொல்ற இந்த வாயை..." என்றவன் அவளது இதழை பிடித்திழுத்தபடி அவளது முகம் நோக்கி குனிந்தான்...

"ஐயோ டாக்டர் அங்கிள்..." என்று அவள் கத்த...

"எங்கேடி...?" என்று கேட்டபடி அவன் பதறிக் கொண்டு விலகி அமர்ந்தான்...

அவள் சிரித்தபடி காரில் இருந்து இறங்கியவள், "எப்படி மிஸ்டர்...?" என்று அவனை மிதப்பாகப் பார்த்து வைத்தாள்...

"வர வர வாலு பொண்ணா மாறிட்டு இருக்க..." என்று ஒற்றை விரல் நீட்டி அவளைப் பார்த்து எச்சரித்தவன்,

"ஆனாலும் இந்த வாலு பெண்ணை எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிச்சியிருக்கு..." என்று கூற...

"பிடிக்காம போகத் தான் விட்டுருவோமா..." என்று கண்சிமிட்டி சிரித்தவளை அவன் ஆசையுடன் பார்த்த போது அவனது அலைப்பேசி சிணுங்கியது...

"முக்கியமான மீட்டிங் இருக்கு... பை பேபி..." என்றவன் காரை வேகமாகத் திருப்பிக் கொண்டு போக்குவரத்துச் சாலையில் கலந்தான்...

அவனின் வேகத்தைக் கண்டு பிரமித்தபடி மருத்துவமனையில் நுழைந்தாள் அவள்... கார் ஓட்டுவதில் மட்டுமா அவன் வேகம்? எல்லாவற்றிலும் அவன் வேகம் தான் என்று நினைத்தவளின் முகம் நாணத்தில் இரத்த நிறம் கொண்டது... தனக்குள் சிரித்தபடி புன்னகை முகத்துடன் நோயாளிகளைப் பார்க்க ஆரம்பித்தாள்...

அன்று முழுவதும் அவளது புன்னகை முகம் வாடவில்லை... அதற்கு முக்கியக் காரணம் அவளது கணவன் அவள் மீது வைத்திருந்த காதலே... படிக்கும் காலத்தில் காதல் என்றால் என்னவென்று தெரியாது இருந்தவள்... இவ்வளவு ஏன்...? திருமணமாகி, ஒரு குழந்தை பிறந்த பிறகும் கூடக் காதலை பற்றிப் பெரியதாக எந்தவொரு எண்ணமும் இல்லாது இருந்தவள் அவள்... ஆனால் இப்போது கணவனது காதலில் அவள் கொஞ்சம் கொஞ்சமாய்க் காதலில் விழுந்து கொண்டிருந்தாள்... கணவனை மனமார நேசிக்கத் துவங்கியிருந்தாள்...

************************

அலுவலக அறையில் அமர்ந்திருந்த பத்ரிநாத் கையிலிருந்த கோப்பில் ஆழ்ந்திருந்தார்... அப்போது அங்கு உள்ளே நுழைந்தார் இளவரசி...

"பத்ரி..." மனைவியின் அழைப்பில் அவரை நிமிர்ந்து பார்த்தார் பத்ரிநாத்...

நேற்றிலிருந்து அவர் மனைவியிடம் ஒதுங்கி இருக்கிறார்... அதைக் கூட உணராது ஏதோ ஒரு யோசனையில் இருக்கும் மனைவியை அவரது விழிகள் யோசனையுடன் பார்த்தது... முன்பிருந்த இளவரசியாக இருந்திருந்தால் இந்நேரம் பெரிய ஆர்ப்பாட்டமே நடந்திருக்கும்... அந்த ஆர்ப்பாட்டத்தைக் காதல் என்று இதுவரை அவர் எண்ணியிருந்தார்... அப்படி எதுவும் இல்லையோ? முதன்முறையாக மனதில் சிறு உறுத்தல் தோன்றியது...

"என்ன...?" என்று கேட்ட கணவரின் முகபாவனையை வைத்து அவரின் மனதினை படிக்கும் அளவிற்கு

இளவரசிக்கு நேரம் இல்லை...

"நாம எல்லோரும் குடும்பமா எங்கேயாவது போயிட்டு வருவோமோ...?"

"ஆர்யா, சூர்யாவுக்கு ஸ்கூல் இருக்கும் இந்த நேரத்திலா...?"

"அவங்க இருக்கட்டும்... நீங்க, நான், என் அண்ணன்ங்க, அண்ணி எல்லோரும் போயிட்டு வருவோமா...?"

"எங்கே போகணும்...?"

"யுஎஸ் போகலாமா...? இல்லை ஆஸ்திரேலியா...?" என்று அவர் விழிகள் பளபளக்க கூற...

"நான் கூட ஹரித்துவார் போகலாம்ன்னு நீ சொல்வேன்னு எதிர்பார்த்தேன்..." என்றவர் மனைவியைக் கூர்ந்து பார்த்தார்...

"இப்பவே அங்கே எதுக்குப் போகணும்...?" இளவரசி முகத்தைச் சுளித்தார்...

"இப்ப தான் அங்கே போகணும் வசி... இன்னும் கொஞ்ச நாள் போனா நம்ம உயிருக்கு நாம உத்திரவாதம் கொடுக்க முடியாது..."

"ப்ச், சந்தோசமா பேசிக்கிட்டு இருக்கும் போது எதுக்கு இந்த அபத்தமான பேச்சு...?" சலித்துக் கொண்டார் அவரது மனைவி...

"சரி, அபத்தமா பேசலை... இப்போ சரியா பேசவா...?" என்றவர்,

"நீ இப்போ குற்றவாளி கூண்டில் இருப்பவள்... அவ்வளவு சீக்கிரம் வெளிநாடு எல்லாம் போக முடியாது... அதையும் மீறி போனேனா ஏர்போர்ட்டில் வச்சு அரெஸ்ட் பண்ணிருவாங்க..."

"என்னது...?" இளவரசி பயந்து போனார்...

"உண்மை தான் வசி... உன் மீது போலீசோட சந்தேகம் விழுந்திருக்கு... இப்ப பார்த்து நீ ஏதாவது செஞ்சா விளைவுகள் ரொம்ப மோசமா இருக்கும்..." என்று பத்ரிநாத் மனைவியை எச்சரிக்க... காற்று போன பலூனாய் உற்சாகம் குறைந்தவராய் இளவரசி அங்கிருந்து எழுந்து சென்றார்...

அவர் செல்வதைப் பார்த்தபடி இருந்த பத்ரிநாத்தின் யோசனை இன்னமும் அதிகமானது...

இளவரசி கணவன் கூறியதை அப்படியே சகோதரர்களிடம் வந்து கூறினார்... அவர்கள் தங்கையைத் திட்டினர்...

"இன்னும் எஃப்ஐஆர் கூடப் போடலை... நம்மளை போலீஸ் அரெஸ்ட் பண்ணுமா...? உன் புருசனுக்கு மூளை எதுவும் குழம்பி போச்சா...?" என்று கடுமையாய் கேட்டார் செல்வரத்தினம்...

"அப்படின்னா அவர் பொய் சொல்றாரா...?"

"சந்தேகமே வேண்டாம்... பொய்யே தான்... உன் புருசனுக்கு ஏற்கெனவே விஷ்ணு மேல் ஒரு சாஃப்ட் கார்னர் உண்டு... இப்போ மட்டும் அவனுக்குச் சாதகமா இவன் ஏன் யோசிக்காம இருக்க மாட்டான்...?"

"அப்போ இதுக்கு என்ன தான் தீர்வு...?"

"நம்ம மூணு பேரும் சிங்கப்பூர் போயிருவோம்... அதுவும் நாளைக்கே... எப்படியும் டிஎன்ஏ டெஸ்ட் ரிசல்ட் நமக்குப் பாதகமா தான் வர போகுது... அதனால் புத்திசாலித்தனமா பொழைச்சுக்கிற வழியைப் பார்க்கலாம்..." செல்வரத்தினம் முடிவாய் கூற... மற்ற இருவரும் அதை ஆமோதித்தனர்...

மறுநாள் மூவரும் வெளியில் செல்வதாகக் கூறிக் கொண்டு யாருக்கும் தெரியாது கிளம்பினர்... இளவரசி கணவனிடம் கூட இந்த விசயத்தைக் கூறாது மறைத்துவிட்டார்... இவர்கள் மூவரும் காரிலேறும் போது அந்தக் காவல்துறை அதிகாரி அங்கு வந்தார்... மூவரும்

ஒன்றாகக் காரில் ஏறுவதைக் கண்டு அவர் யோசனையாய் அவர்களைப் பார்த்தார்...

"எங்கே கிளம்பறீங்க...?" சற்று மிரட்டலாய் ஒலித்ததோ அவரது குரல்...

"நாங்க எங்கே போனா உனக்கு என்ன...?" செல்வரத்தினம் முறைப்பாகப் பதில் கூற...

"உங்க மூணு பேர் மேலேயும் எங்களோட சந்தேகம் திரும்பி இருக்கு... இந்த நேரத்தில் நீங்க எங்களைக் கேட்காம எங்கேயும் போகக் கூடாது..."

"அங்கிள்... பாட்டி, தாத்தா எல்லாம் சிங்கப்பூர் போறாங்க..." என்று ஆர்யா காவல்துறை அதிகாரியிடம் அவர்களைப் போட்டு கொடுக்க...

"ஷ்வீஈஈஈஈங்..." என்று விமானம் பறப்பது போல் கையைக் காட்டினான் சூர்யா... அவர்கள் மூவரும் ரகசியமாய்ப் பேசியதை இரு வாண்டுகளும் ஒட்டு கேட்டு விட்டார்கள்...

"உண்மை தானா சார்...?"

"குட்டி பிசாசுங்க... இப்படிப் போட்டு கொடுத்துட்டுங்களே..." இளவரசி கோபமாய் முணுமுணுத்துக் கொண்டார்...

"நீ சொன்னியா அரசி..."

"ஐயோ இல்லைண்ணா... நான் அவர் கிட்ட கூடச் சொல்லலை..."

"என் கிட்ட கூடச் சொல்லாம எங்கே கிளம்பிட்ட வசி...?" என்று அழுத்தமான குரலில் கேட்டபடி பத்ரிநாத் அங்கே வந்தார்...

கணவரை கண்டதும் இளவரசியின் மனம் திக்திக் என்று அடித்துக் கொண்டது...

"சார், இவங்க மேல சந்தேகம் இருப்பதால் இவங்க யாரும் வெளியூர் போகாம இருக்கிறது நல்லது..." அதிகாரி

பத்ரிநாத்திடம் கூறினார்...

"அதை நான் பார்த்துக்கிறேன்..." என்று அவரிடம் உரைத்த பத்ரிநாத் மனைவியிடம்,

"உள்ளே போ வசி..." என்று கடுமையுடன் கூற... இளவரசி முகத்தைத் தொங்க போட்டுக் கொண்டு உள்ளே செல்ல...

"உங்களுக்குத் தனியா சொல்லணுமா...?" என்று மச்சினர்களிடம் காய்ந்தார் பத்ரிநாத்...

அவர்கள் இருவரும் கடுப்புடன் வீட்டிற்குள் சென்றனர்... இதைக் கண்ட ஆர்யா, சூர்யா சந்தோசத்துடன் 'ஹைபை' கொடுத்து கொண்டனர்...

"நம்மளை கூட்டிட்டு போகாம போனா நாம விட்டுருவோமா என்ன...?" இருவரும் வடிவேலு பாணியில் கூறிவிட்டு வீட்டிற்குள் ஓடினர்...

"சார் வர சொன்னீங்களே..." அதிகாரி பணிவுடன் பத்ரிநாத்திடம் கேட்டார்...

"உள்ளே வாங்க..." என்று அவரை அழைத்துக் கொண்டு பத்ரிநாத் வீட்டினுள் சென்றார்...

அதன் பிறகு இளவரசி, செல்வரத்தினம், மணிபாரதி மூவரும் வீட்டை விட்டு வெளியில் கிளம்பினால் கூடக் காவலாளி என்ன? ஏதென்று? கேள்வி கேட்டான்... அப்படியிருந்தும் ஒருநாள் மூன்று பேரும் யாரிடமும் சொல்லாது காரை எடுத்துக் கொண்டு வெளியில் சென்றுவிட்டனர்... பாதி வழியில் பிடிபட்டு மீண்டும் வீடு வந்து சேர்ந்தனர்...

"உங்களுக்கு எல்லாம் கொஞ்சமாவது அறிவிருக்கா...? நீங்க இப்படி நடப்பதால் எல்லாச் சந்தேகமும் உங்கள் மீது தான் திரும்பும்... முடிவு தெரியும் வரைக்கும் அமைதியா இருக்க முடியாதா...?" என்று பத்ரிநாத் மூவரையும் பிடித்துத் திட்டி தீர்த்துவிட்டார்...

"மாம், டாட் சொல்றதில் என்ன தப்பியிருக்கு...? நம்ம மேல் எந்தத் தப்பும் இல்லையே... அதனால் தைரியமா இருங்க..." பவித்ரன் அன்னையைத் தேற்றினான்...

திருடனுக்குத் தேள் கொட்டின கதையாக மூவரும் திருதிருவென முழித்தனர்... அன்று பத்ரிநாத் தனது உடமைகளை எடுத்துப் பெட்டியில் வைத்து அடுக்கியவர்,

"நான் பெங்களூர் போகிறேன்..." மனைவி முகம் பாராது உரைத்துவிட்டு அவர் கிளம்பிவிட்டார்...

மனைவியிடம் சொன்னது போல் அவர் பெங்களூர் போகவில்லை... சென்னையில் இருந்த பண்ணை வீட்டில் தான் தங்கியிருந்தார்... அவரது மனதில் பல குழப்ப மேகங்கள்... விரைவில் விடையறிய வேண்டி அவரது மனம் துடித்தது...

***********************

"வாவ் பேபி... சூப்பரா இருக்கேடி..."

தான் வாங்கிக் கொடுத்த பட்டுப்புடவை, வைர நகைகளில் அழகாக இருந்த மனைவியைக் கண்ணிமைக்க மறந்து பார்த்திருந்தான் சிம்மவிஷ்ணு... அவள் அழகு என்று அவனுக்குத் தெரியும்... ஆனால் இத்தனை அழகு என்று இன்று தான் அவன் தெரிந்து கொண்டான்...

நிஷிலா இங்கு வரும் போது அவளது அன்னை வீட்டில் இருந்து நகைகள் என்று பெரிதாக எடுத்துக் கொண்டு வரவில்லை... இத்தனை வருடங்களில் அவளது வருமானத்தைச் சேமித்து வைத்து நகைகள் வாங்கி இருந்தாள்... அதுவும் மகளுக்காக மட்டுமே... நகை மட்டுமல்ல உடையும் அத்தனை விலையுயர்ந்ததாய் அவள் வைத்திருக்கவில்லை... அதற்காகச் சாதாரணம் என்று அவைகளைக் கழிக்கவும் முடியாது... இரண்டிற்கும் இடைப்பட்ட விலையில் புடவைகள் வைத்திருந்தாள்... அதற்காகத் தான் அவன் அவளை அழைத்துக் கொண்டு கடைவீதிக்குச் சென்றான்...

நகைக்கடை, புடவை கடைக்கு அவளை அழைத்துச் சென்றவன், "எனக்கு லேடீஸ் எப்படி ட்ரெஸ் பண்ணுவாங்க, நகை போடுவாங்கன்னு தெரியாது... அதனால் நீயே உனக்குப் பிடிச்ச மாதிரி எடுத்துக்கோ... சாதாரண விலையில் எதுவும் வேண்டாம்... கொஞ்சம் விலை கூடுனதா வாங்கிக்கோ... அப்படியே அம்முவுக்கும்..." என்று அவன் அவளிடம் உரைத்தான்...

அலைப்பேசியுடன் தனியே அமர்ந்திருந்தவனை அப்படியே விட மனம் இல்லாது, "அது நல்லாயிருக்கா...? இது நல்லாயிருக்கா...?" என்று அம்மாவும், மகளும் மாறி மாறி கேட்டு அவனை ஒருவழிப்படுத்தி எடுத்து விட்டனர்...

இதுநாள் வரை பெண்கள் பக்கம் திரும்பி பார்க்காதவன் எதைத் தேர்ந்தெடுத்துக் கொடுப்பது என்று தெரியாது திகைத்து விழித்தான்...

"ப்ளீஸ் பேபி... எனக்கு இது எதுவும் தெரியாது... என்னை விட்டுரு..." என்று அவன் மனைவியின் காதோரம் மெல்லிய குரலில் கெஞ்சினான்...

"அப்போ நீங்க செரிலாக் பேபியா...?" என்று அவள் கணவனைக் கிண்டலடிக்க...

முதலில் புரியாது விழித்தவன் பின் புரிந்து கொண்டவனாய், "மத்தவங்களுக்கு எல்லாம் நான் செரிலாக் பேபி தான்... ஆனா உனக்கு மட்டும் வளர்ந்த குழந்தை..." என்று குறும்பாய் கண்சிமிட்டி சிரித்தான்...

அவள் முகம் சிவக்க புடவையைப் பார்க்கும் சாக்கில் குனிந்து கொண்டாள்...

"நான் கவனித்துப் பார்த்த ஒரே பெண் நீ மட்டும் தான்... நான் பார்த்தவரை நீ கவுன் தான் அதிகம் போட்டிருக்க... அப்படியிருக்கும் போது புடவை பத்தி எனக்கு என்ன தெரியும்...?" அவன் பாவமாக வினவ...

"ம், தெரியும், தெரியும்... நீங்க ராவணாகிய ராமன்னு..." என்றவளை கண்டு அவனது விழிகள் மின்னியது...

"ராட்சசன் இல்லையா...?"

"இந்த ராட்சசிக்கு ஏத்த ராட்சசன்..." என்று தலை சரித்துச் சிரித்தவளின் பாவனையில் தன்னைத் தொலைத்தவனானான் அவன்...

இதோ இப்போதும் அவளது அழகில் தன்னைத் தொலைத்தவனாய் நின்றிருந்தவனின் கை தொட்டு அசைத்தவள்,

"போகலாமா மாமா...?" என்று கேட்க...

"பிங்க் கலர் சேலையில் பஞ்சு மிட்டாய் மாதிரி இருக்கேடி... அப்படியே கடிச்சு சாப்பிட தோணுது..." என்றவனது வார்த்தையில் அத்தனை தாபம் வழிந்தது...

அவள் முகம் செம்மையுற, "நான் கிளம்பறேன்ப்பா... நீங்க வேணா தனியா இருந்து பஞ்சுமிட்டாயை சாப்பிட்டுட்டு வாங்க..." என்று கூறிவிட்டு நமட்டு சிரிப்புடன் வெளியில் ஓடிவிட்டாள்...

அவன் பெரும் உணர்வையில் சிக்கி தவித்த மனதினை கட்டுப்படுத்த இயலாதவனாய் தலையைக் கோதி கொண்டவன் தனக்குள் புன்னகைத்தபடி அறையை விட்டு வெளியில் வந்தான்...

மீனாட்சி அம்மாள் இருவரையும் சேர்ந்து நிற்க வைத்து திருஷ்டி கழித்த பின்னரே வீட்டை விட்டு வெளியில் செல்ல அனுமதித்தார்... ஜோடியாய்ச் செல்லும் இருவரையும் பார்த்தபடி அவர் கண்கலங்க நின்றிருந்தார்...

"ரெண்டு பேரையும் பார்த்து கண்ணு போடாதடி..." என்று சுந்தரபாண்டியன் மனைவியைக் கிண்டலடித்தபடி அங்கே வந்தார்...

"தாயோட கண்ணு படாதாக்கும்... தகப்பனோட கொள்ளி கண்ணு தான் படும்..." என்று நொடித்துக் கொண்டார் மீனாட்சி...

"இந்தத் தகப்பனோட கண்ணும் படாது..." சளைக்காது பதில் அளித்தார் சுந்தரபாண்டியன்...

"விஷ்ணு எதுக்கு நிஷாவை அங்கே கூட்டிட்டுப் போறான்... ஏதாவது பிரச்சினையை விலைக்கு வாங்கிட்டு வராம இருக்கணும்..."

"அவன் ஒண்ணும் சின்னப் பிள்ளை இல்லை... கூட மருமக பொண்ணு போயிருக்கிறாள்... அதனால் பயப்படாதே..." கணவனது பேச்சில் நிம்மதி அடைந்தவராய் வீட்டினுள் சென்றார் மீனாட்சி...

காரினுள் வித்தியாசமான மணம் கமழ்வதைக் கண்டு யோசனையாய் மனைவியைப் பார்த்தான் சிம்மவிஷ்ணு... அவனது பார்வை உணர்ந்து திரும்பி பார்த்தவள்,

"என்ன...?" என்று கேட்க...

"வித்தியாசமான மணம் வருது... என்ன அது...?"

"பிடிச்சியிருக்கா...?"

"எஸ், ஐ லக் தட் ஸ்மெல்..."

அவள் தனது நீண்ட சடையை முன்னால் எடுத்து போட்டுக் கொண்டு அவனிடம் காண்பித்தாள்... மஞ்சள் நிறத்தில் இலை போன்ற ஒன்று அவளது சடையில் வைத்து பின்னப்பட்டு இருந்தது...

"என்ன இது...?"

"தாழம்பூ... இது தான் அந்த மணம்..."

"வாவ், நேச்சுரல் ஃபெர்ப்யூம்..." அவளது சடையைக் கை நீட்டி பற்றியவன் குனிந்து அதை முகர்ந்து பார்த்தான்...

"இட் ஸ்மெல்ஸ் ஹெவன்லி..." என்றான் மயக்கமாக...

அவனது மயக்கம் அவளையும் தொற்றி கொண்டதோ...! அவள் மெல்ல நகர்ந்து அவனது தோள் சாய்ந்தாள்... அவளது அருகாமையில் அவன் சந்தோசத்தில் விண்ணில்

பறந்தான்... அதன் விளைவு அவனது கைகளில் கார் பறந்தது...

திருமண வீட்டில் மணமகனின் தந்தையே வாசலில் வந்து நின்று இவர்களை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று முதல் வரிசையில் அமர வைத்தார்... சிம்மவிஷ்ணு கர்வமாய் மனைவியின் கையோடு தனது கையைக் கோர்த்துக் கொண்டு கம்பீரமாக நடந்து சென்றான்... நிஷிலா சங்கோஜத்துடன் அவனை ஒட்டி கொண்டு நடந்தாள்... இது தான் சாக்கு என்று அவனது கை அவளது கையில் இருந்து இடம்பெயர்ந்து அவளது இடையில் அமர்ந்து கொண்டது, சமத்தாக... அவளோ கூச்சத்தில் நெளிந்தாள்...

நாற்காலியில் அமர்ந்த பின்னரே நிஷிலா மணமேடையைக் கவனித்தாள்... அங்குச் சிம்மவிஷ்ணுவின் சித்தப்பா குடும்பம் நிற்பதை கண்டு அச்சமடைந்தவளாய் அவள் கணவனது கையை இறுக பிடித்துக் கொண்டாள்... அவனோ அவளது கையை ஆறுதலாகத் தட்டி கொடுத்து,

"பிள்ளப்பூச்சிக்கு எல்லாம் பயந்துக்கிட்டு... தைரியமா இரு... நான் இருக்கிறேன்..." என்று அவன் தைரியமூட்டினான்...

அவனது தைரியத்தில் அவளது தெளிந்து நிமிர்ந்து அமர்ந்த போது இவர்களை முறைத்துக் கொண்டு நின்றிருந்த ஹர்ஷவர்த்தினி அவளது விழிகளில் விழுந்தாள்...!!!

"காதலுக்குச் சோதனை வரும்,
பொறாமை கொண்ட மனிதரால்,
காதலுடன் பிடித்த கரத்தை விடாது
வென்று வா, பொறாமை பிடித்த
மனிதரை மட்டுமல்ல...
உன்னவளையும் சேர்த்து...!"

கொள்ளும்...!!!

திருமணம் முடிந்ததும் மணமக்களுக்குப் பரிசளிப்பதற்காகச் சிம்மவிஷ்ணு எழுந்தான்... அவனது மனைவியோ பசை போட்டு ஒட்டி கொண்டது போல் நாற்காலியில் அசையாது அமர்ந்திருந்தாள்... அவள் எழாததைக் கண்டு அவன் அவளைத் திரும்பி பார்த்தான்...

"வா நிலா... கிப்ட் கொடுத்துட்டு கிளம்பலாம்..."

"இல்லை... நீங்க மட்டும் போய்க் கொடுத்துட்டு வாங்க... நான் இங்கேயே வெய்ட் பண்றேன்..." அநாவசிய பேச்சுக்களைத் தவிர்க்கவே அவள் விரும்பினாள்...

"நீ என் கூட வர்ற... வந்து தான் ஆகணும்..." அவனது குரலில் இருந்த அழுத்தம் அவளது தேகத்தை நடுங்க செய்ய அவள் பயத்துடன் அவனைப் பார்த்தாள்... அவளது பயம் உணர்ந்தவனாய் கண்களில் கனிவை கொண்டு வந்தவன்,

"நான் இருக்கேன்ல... பயப்படாம வாம்மா..." அவனது வசிய குரலுக்குக் கட்டுப்பட்டு அவள் எழுந்து அவனுடன் சென்றாள்...

சிம்மவிஷ்ணுவின் சித்தப்பா குடும்பம் மற்றும் ஹர்ஷவர்த்தினியை தாண்டி அவர்கள் மணமக்களிடம் செல்லும் போது ஹர்ஷவர்த்தினியின் குரல் அவர்களை இடைமறித்தது...

"அத்தானை அவமானப்படுத்திட்டு அவர் கூடவே வாழ வந்திருக்கியே உனக்குக் கொஞ்சமும் வெட்கமாய் இல்லை..." அவள் குத்தலாக நிஷிலாவை பார்த்து கேட்டாள்...

அதில் விழி கலங்கி போன நிஷிலா கணவனது கையை இறுக பிடித்துக் கொண்டாள்... அவன் ஆறுதலாக அவளது கையைத் தட்டி கொடுத்துவிட்டு ஹர்ஷவர்த்தினியை உறுத்து விழித்தான்... அவனது பார்வையில் அவளுக்கு உள்ளுக்குள் உதறினாலும் வெளியில் பந்தாவாக

நின்றிருந்தாள்... இப்படிக் கேவலப்படுத்திய ஒருத்திக்காகவா தன்னை அவன் நிராகரித்தான் என்று அவன் மீது அவளுக்கு அத்தனை கோபம்...

"விஷ்ணு மட்டும் என்ன...? அவனும் அப்படித் தான்... வேறு பொண்ணு கிடைக்காதுன்னு இவ கூட வாழ்றான் போலிருக்கு... கொஞ்சமும் வெட்கம், மானம் இல்லை... ச்சீ..." அவனது சித்தி அதற்குத் தூபம் வேறு போட்டார்...

"இவன் சொத்துக்காக அவள் இவன் பின்னாடி வந்திருப்பாள்... எப்போன்னாலும் விஷ்ணு சாவான் இல்லையா... அதன் பிறகு சொத்துக்களை மொத்தமா சுருட்டிட்டு போகலாம்ன்னு காத்திருக்கிறாள்... இல்லைன்னா இவனை மாதிரியான ஆளுங்க கூட எல்லாம் எவளாவது வாழ்வாளா...?" மாதவன் இளக்காரமாக அண்ணனை பேசினான்...

சிம்மவிஷ்ணுவிற்கு அவர்களை எல்லாம் அந்த இடத்திலேயே வெட்டி வீழ்த்த வேண்டும் என்கிற வெறி எழுந்தது... அப்படி அவன் செய்தால் அவர்கள் சொன்னது எல்லாம் உண்மை என்பது போலாகி விடுமே... அதனால் அவர்களை அமைதியாக, ஆனால் அழுத்தமாகப் பார்த்தான்... அதைக் கண்டு எல்லோருக்கும் உள்ளுக்குள் உதறல் எடுத்தது... பொது இடத்தில் வைத்துக் கேவலமாகப் பேசினால் அவன் அவமானம் தாங்காது அமைதியாகப் போய்விடுவான் என்று எண்ணி இருந்தவர்களுக்கு அவனது இந்தப் பார்வை குளிரை கிளப்பியது...

"நெஞ்சு பொறுக்குதில்லையே... அநீதி ஏற்படும் போது அதைக் கண்டு நெஞ்சு பொறுக்காது கொதித்து எழ வேண்டும்... அதைத் தான் என் மனைவி செய்தாள்... அவள் கற்புள்ள கண்ணகி பரம்பரையில் வந்தவள் அதனால் தான் கணவனாக இருந்தாலும் தவறு, தவறு தான்னு எனக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தாள்... அது போல் தான் நானும்... மன்னர் பரம்பரை என்று வாய் வார்த்தையில் சொன்னால் மட்டும் போதாது... செய்த தவறை உணர்ந்து மனதார தண்டனை ஏத்துக்கவும் தைரியம் வேணும்... அது

எனக்கு இருந்தது... அதனால் தான் தைரியமா தவறை ஒத்துக்கிட்டு ஜெயிலுக்குப் போனேன்... இதில் எங்களோட நேர்மை, தைரியம் தான் தெரியுது... நீங்க சொல்வது போல் இது கேவலமாக இல்லை..." என்றுரைத்தவன் தம்பியிடம் திரும்பி,

"நான் கூப்பிட்டேன்ங்கிற ஒரே காரணத்துக்காக, எனக்காக என் மனைவி என் கூட வந்திருக்கிறாள்... நான் அவளைப் போய்க் கூப்பிட்டேன் என்றால் அதற்குக் காரணம்...?" என்று நிறுத்திவிட்டு ஹர்ஷவர்த்தினியை திரும்பி பார்த்து உறுத்து விழித்தவன்,

"இந்தச் சிம்மவிஷ்ணுவுக்கு மனைவியாக இருக்க நிலாவை தவிர வேறு எந்தப் பொண்ணுக்கும் தகுதியில்லை... என் நிலாவை தவிரச் சிறந்த பெண் இந்த உலகத்தில் வேறு யாருமில்லை... என்ன புரிஞ்சதா...? இனியொரு தடவை இப்படிப் பேசினீங்க... நான் மனுசனா இருக்க மாட்டேன்... மாதவா, உன் மனைவியைப் பார்த்து நேரடியா கேட்க பயந்த கேள்விகளை எல்லாம் என் மனைவியைப் பார்த்து கேட்டு உன் மனசை தேத்திக்கிறியோ...?" என்று தம்பியிடம் நக்கலாக முடித்தான்...

தன்னை உயர்த்திப் பேசிய கணவனைக் கண்டு நிஷிலாவின் விழிகள் வியப்பில் விரிந்தது... தன்னைச் சிறுமைப்படுத்தி விட்டான் என்று அவளது மனதிற்குள் இருந்த துயரம் இப்போது அவன் தன்னைப் பெருமைப்படுத்திப் பேசியதில் காணாமல் போனது...

மாதவனின் மனைவி மலர்விழி அவனைப் பார்த்து முறைத்தாள்... 'அடப்பாவி, நான் இவன் குடும்பத்தில் கும்மியடிக்க நினைச்சா, இவன் என் குடும்பத்தில் கும்மியடிச்சிட்டுப் போயிருவான் போலிருக்கே' என்று மனதிற்குள் அதிர்ந்த மாதவன் வாயை இறுக மூடி கொண்டான்...

"விஷ்ணு, நீ வாப்பா... நரம்பில்லாத நாக்கு இப்படித்தான் பேசும்... நீ கண்டுக்காதே..." என்று மணமகனின் தந்தை

சிம்மவிஷ்ணுவை அழைத்தார்...

"அது என்னவோ உண்மை தான் மாமா..." என்றபடி சிம்மவிஷ்ணு சித்தப்பா குடும்பத்தைப் பார்த்து நக்கலாய் சிரித்தபடி அங்கிருந்து நகன்றான்...

இருவரும் இன்முகமாய் மணமக்களுக்குப் பரிசு கொடுத்துவிட்டுக் கை கோர்த்தபடி அந்நியோன்யத்துடன் மணமேடையை விட்டு கீழே இறங்கினர்...

காரில் அமைதியாக வந்த மனைவியைத் திரும்பி பார்த்த சிம்மவிஷ்ணு, "என்னாச்சு மேடம், ரொம்ப அமைதியா வர்றீங்க...?" என்று அவளைச் சீண்டினான்...

அவளோ விழி கலங்க அவனை நிமிர்ந்து பார்த்தாள்... அதைக் கண்டு அவன் துணுக்குற்றவனாய் தனது இடதுகையால் அவளது கையைப் பற்றி,

"எதுக்கு இந்தக் கண்ணீர்...?" என்று கேட்க...

"உங்க தம்பி பேசினது..."

"அவன் எல்லாம் ஒரு மனுச பிறவின்னு அவன் பேச்சை போய்க் காது கொடுத்து கேட்டுக்கிட்டு... அவன் ஒரு பொம்பளை பொறுக்கி... நானே அவனை நிறையத் தடவை பல பெண்களோட பார்த்திருக்கிறேன்... ஒரு தடவை தோட்டத்து மோட்டார் ரூமில் வைத்து ஒரு பொண்ணை நாசம் பண்ணிட்டான்... அந்தப் பொண்ணு அங்கிருந்து தப்பிச்சு ஓடும் போது நான் பார்த்துட்டேன்... போலீசில் கம்ப்ளையிண்ட் பண்ணும்மான்னு நான் அந்தப் பொண்ணு கிட்ட எவ்வளவோ சொன்னேன்... ஆனா அவள் பயந்துட்டு வெளியில் சொல்ல மாட்டேன்னுட்டாள்... பணப் பலத்தால் அத்தனையையும் மாதவன் மறைச்சு வச்சியிருக்கான்... என்னைக்காவது ஒருநாள் எல்லாம் வெளிவரும்..." என்று கோபமாய்க் கூறிக் கொண்டே போனவனுக்கு அப்போது தான் தான் கூறிய வார்த்தைகளின் அர்த்தம் மூளையில் உறைத்தது...

உறைத்த விசயமோ அவனை உறைய செய்ய... அவன் தனக்குள் இறுகி போனான்... வீடு வரும் வரை அவன் எதுவும் பேசவில்லை...

தங்களது அறைக்குள் வந்ததும் மனைவியை இறுக அணைத்தவன் அப்படியே அசையாது இருந்தான்... காலையில் கணவனது பார்வையும், பேச்சும் அவளுள் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது... அதனால் அவளும் கணவனது அணைப்பில் பாந்தமாக அடங்கி இருந்தாள்... அவனோ அவளது கழுத்தில் முகம் புதைத்து அமைதியாக இருந்தான்... இன்று ஏனோ அவனது கைகளும், உதடுகளும் வழக்கத்திற்கு மாறாக அமைதியாக இருந்தது...

'என்னவானது இவனுக்கு...?' அவள் யோசிக்கும் போதே அவன் அவளை விட்டு விலகினான்... அவள் புரியாது அவனைப் பார்த்தாள்... அவனோ அவளது பார்வையைச் சந்திக்க இயலாதவனாய்,

"மாதவனுக்கும், எனக்கும் ரொம்ப வித்தியாசம் இல்லை... ஐயம் சாரி பேபி..." என்று அவள் முகம் பாராது கூறிவிட்டு அறையை விட்டு விறுவிறுவென வெளியேறி விட்டான்... அவளோ திகைத்து போய் நின்றிருந்தாள்...

**********************

இறுதியில் டிஎன்ஏ முடிவும் வந்தது... எலும்பின் டிஎன்ஏவும், இளவரசியின் டிஎன்ஏவும் பொருந்தியிருப்பதாகத் தெரிந்ததை அடுத்துக் காவல்துறையில் இருந்து அவரைக் கைது செய்ய வந்திருந்தனர்... கூடவே அவரது சகோதரர்களையும் சேர்த்து...

"வேறு யாரோ என் மகனை கொலை செய்து எங்க தோட்டத்தில் புதைத்து இருக்காங்க... இதை நான் செய்யலை... ஐயோ என் க்ருஷ்..." என்று இளவரசி எப்போதோ இறந்து போன மகனை நினைத்து இப்போது போலி கண்ணீர் வடித்தார்...

"அப்போ எதுக்கு ஆற்றில் கண்டெடுக்கப்பட்ட உடலை உங்க மகன்னு சொன்னீங்க..." காவல்துறை தரப்பில் இருந்து கேள்வி கேட்கப்பட்டது...

"அது பார்க்க என் மகனை போலவே இருந்தது..." என்று அழுது சாதித்தவரை கண்டு இரங்காது,

"அதை எல்லாம் ஸ்டேசனில் வந்து சொல்லுங்க..." என்று கூறிவிட்டனர் காவல்துறையினர்...

"மிஸ்டர். பத்ரிநாத், நீங்க நினைவு மண்டபம் கட்டியிருக்கிறதை இடிச்சு அதனுள் இருக்கும் எலும்பை எடுத்து ஆய்வுக்கு உட்படுத்தணும்..." என்று அவரிடம் கேட்டனர்...

பத்ரிநாத் மனமும், விழிகளும் கலங்க, "அது என் சுடலையோடது இல்லைன்னு தெரிஞ்ச பிறகு அந்த நினைவு மண்டபம் இருந்தால் என்ன? இடிந்தால் என்ன?" என்று அவர் உடைந்து போனார்...

"அப்பா..." என்றபடி பவித்ரன் தந்தையின் அருகில் வந்து ஆறுதல் அளித்தான்...

"தீரா, என்னை எப்படியாவது காப்பாற்று..." இளவரசி மகனை பார்த்துக் கதறினார்...

"உங்க மேல் எந்தத் தவறும் இல்லைன்னு நிரூபிச்சுட்டு வாங்க... அதுக்குப் பிறகு நான் உங்களைக் காப்பாத்துகிறேன்..." அவரது முகத்தைப் பார்க்க விரும்பாதவனாய் அவன் வேறு எங்கோ பார்த்தபடி கூறினான்...

"என்னங்க..." இளவரசி பரிதாபமாகக் கணவனைப் பார்த்தார்...

"நானிருக்கிறேன்... நீ தைரியமா போ..." என்று பத்ரிநாத் மனைவியிடம் கூறினார்...

அவரது வார்த்தையில் நம்பிக்கை பெற்றவராய் இளவரசி காவல்துறை ஜீப்பில் ஏறினார்... அக்கம்பக்கத்தில்

இருப்பவர்கள் எல்லோரும் தங்களுக்குள் ரகசியம் பேசியபடி வேடிக்கை பார்த்தனர்… அதைக் கண்டு மூவரும் அவமானத்தில் தலைகுனிந்தனர்…

அன்றே எல்லா ஊடகங்களில் இந்த விசயம் பெரிதாகப் பேசப்பட்டது… கிட்டத்தட்ட நாற்பத்திரெண்டு வருடங்கள் கழித்துக் குற்றவாளிகள் பிடிப்பட்டு இருப்பது எல்லோரிடமும் பரபரப்பை ஏற்படுத்தியது…

பத்ரிநாத் மௌனம் காத்தார்… பவித்ரனும், துளசியும் என்ன செய்வது என்று தெரியாது தவித்தனர்… அருந்ததி மகளுக்கு அழைத்துப் பேசி ஒப்பாரி வைத்தார்… மகளோ அவர்களுக்கு இது தேவை தான் என்று கூறி அன்னையைச் சமாதானப்படுத்தினாள்…

நினைவிடத்தில் இருந்த எலும்பை பரிசோதனைக்கு அனுப்பியதில் அதன் டிஎன்ஏ இளவரசியுடன் ஒத்து போகவில்லை… அதனால் கொன்று புதைக்கப்பட்டது சுடலைமுத்து என்பது உறுதி செய்யப்பட்டது…

காவல்துறையினர் அவர்களது பாணியில் இளவரசி, செல்வரத்தினம், மணிபாரதி மூவரிடமும் விசாரணை நடத்தியதில் அவர்கள் வலி தாங்காது உண்மையைக் கூறிவிட்டார்கள்… இதை அறிந்த பத்ரிநாத் இன்னமும் தனக்குள் இறுகி போனார்… யாரிடமும் ஒரு வார்த்தை பேசவில்லை…

அருந்ததி, பவித்ரன், துளசி மூவரும் அதிர்ந்து போயினர்… இப்படியும் மனிதர்கள் இருப்பார்களா? என்று… அந்தக் கணம் அருந்ததி தனது கணவனை மனதார வெறுத்தார்… கணவனை எந்தளவிற்கு நேசித்தாரோ இப்போது அதை விட அதிகமாய் வெறுத்தார்… பவித்ரனுக்கும் அன்னை மீது அத்தனை வெறுப்பாக இருந்தது… அன்னை என்ற சொல்லுக்கே அவமானம் அவனது அன்னை…

"டாட், அவங்களுக்குச் சாதகமா நீங்க ஏதாவது செஞ்சீங்க, காதல், கத்திரிக்காய், என் மனைவின்னு பாசம் பொங்குச்சு அப்புறம் நான் மனுசனா இருக்க மாட்டேன்… அவங்களுக்கு

இது தேவையான தண்டனை தான்... என்னைக் கேட்டால் இதை விட அதிகத் தண்டனை கொடுத்திருக்கணும்... ஆர்யா, சூர்யா மாதிரி தானே சுடலையும் சின்னப் பையன்... அவனைக் கொல்ல அவங்களுக்கு எப்படி மனசு வந்ததோ...? இத்தனை நாள் என் பசங்களை அவங்க கண்ணில் காட்டாம வளர்த்தேனேன்னு மனசுக்குள் சிறுவருத்தம் இருந்தது... அது நிஷிக்காகத் தானேன்னு என் மனசை தேத்திக்குவேன்... ஆனா இப்போ நிம்மதியா உணர்றேன்... இங்கே இருந்திருந்தா என் பிள்ளைகளுக்குக் கூட அவங்களால் ஆபத்து வந்திருக்கும்... இப்போ புரியுது நிஷிக்கு சூடு வச்சது மாம் தான்னு... அப்போ மாமா சொன்னதை நீங்களும், நானும் நம்பலை... இப்போ நான் நம்பறேன்... அவங்க பெண்ணில்லை... மிருகம், ராட்சசி..."

பவித்ரன் ஆத்திரத்தில் குமுறி கத்திய போதும் பத்ரிநாத் அவனை அமைதியாகப் பார்த்தாரே தவிர, பதில் எதுவும் பேசவில்லை...

மூவரையும் காண சிம்மவிஷ்ணு காவல்நிலையத்திற்குச் சென்றான்... உடன் மாடசாமியும் இருந்தார்...

"இப்பவாவது ஒத்துக்கிறீங்களா...? நான் தான் சுடலைமுத்துன்னு..." என்று அவன் கேலியாய் கேட்க...

"நான் சொன்னப்போ நீங்க எல்லாம் நம்புனீங்களா...? இல்லைல்ல... மன்னர் பரம்பரை, உலகத்தில் இல்லாத மருமகன்னு தலையில் தூக்கி வச்சுக் கொண்டாடினீங்களே இப்போ அனுபவிங்க..." இளவரசி கோபத்தில் படபடத்தார்... மற்ற இருவரும் செய்வதறியாது கைகளைப் பிசைந்து கொண்டு கோபமாய்ச் சிம்மவிஷ்ணுவை பார்த்து முறைத்தனர்...

"இந்தத் தண்டனை எல்லாம் உங்களுக்குப் போதாது... என்னை எப்படித் துடிக்கத் துடிக்கக் கொன்னீங்களோ, அது போல் உங்களை எல்லாம் நான் துடிக்கத் துடிக்கக் கொல்லணும்... அதுவும் என் கையால்... சோ மீட் யூ சூன்..." என்றபடி அவன் அலட்சியமாக விடைப்பெற...

அவர்களோ மரணப் பயத்தில் தங்களுக்குள் பார்வையைப் பரிமாறி கொண்டனர்... மாடசாமி இளவரசியை ஒரு புழுவை பார்ப்பது போல் கேவலமாய்ப் பார்த்துவிட்டு சென்றார்...

கோர்ட்டில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது தான் சிம்மவிஷ்ணு பத்ரிநாத்தை மீண்டும் பார்த்தான்... அவரோ இவனைப் பார்க்கவில்லை...

"பத்திப்பா..." என்றழைத்தபடி அவன் அவர் அருகே வர...

அவரோ 'நீ யார்?' என்பது போல் அவனைப் பார்த்து பார்வையால் அவனை ஒதுக்கி வைத்தார்... அவனோ மனம் கலங்க அப்படியே நின்றான்...

வழக்கை விசாரித்த நாகர்கோவில் நீதிமன்றம் விசாரணையை அடுத்த வாரம் ஒத்தி வைத்தது... எல்லோரும் கலைந்து சென்றனர்... பத்ரிநாத் இளவரசியிடம் பேசுவது தெரிந்து அங்குச் சென்றான் சிம்மவிஷ்ணு...

"நீ கவலைப்படாதே... உன்னை வெளியில் எடுக்க வேண்டியது என் பொறுப்பு..." என்று அவர் மனைவியைத் தேற்றிக் கொண்டிருந்தார்... அதைக் கேட்டு அவனுக்கு ஆத்திரம் வந்தது...

"ஒரு கொலைக்காரிக்குச் சப்போர்ட் பண்றீங்களே பத்திப்பா... உங்க கிட்ட இருந்து இதை நான் எதிர்பார்க்கலை... அவங்க எனக்கு விசம் கொடுத்து கொன்னவங்க... இதோ இவங்க ரெண்டு பேரும் என் கழுத்தை நெரிச்சு கொன்னவங்க... மூச்சுக்காக ஏங்கி எப்படித் துடிதுடிச்சு நான் செத்தேன் தெரியுமா...? அப்போ அந்தக் கணம் கூட நான் உங்களைத் தான் நினைச்சேன்... நீங்க என்னைக் காப்பாத்த வர மாட்டீங்களான்னு... கடைசிவரை நீங்க வரலை... ஐ ஹேட் யூ பத்திப்பா, ஐ ஹேட் யூ..." கோபமும், ஆதங்கமும் அவரிடம் கத்திவிட்டு அவன் சென்றான்...

இளவரசியைக் காவல்துறையினர் அழைத்துச் செல்ல... பத்ரிநாத் சிம்மவிஷ்ணு செல்வதைக் கண்கள் கலங்க பார்த்திருந்தார்... அவனது ஒவ்வொரு வார்த்தையும் அவரது இதயத்தில் சம்மட்டி கொண்டு தாக்கியது போலிருந்தது... இறுதியில் சிம்மவிஷ்ணு கூறிய 'ஐ ஹேட் யூ பத்திப்பா' வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவரது காதில் ஒலித்து அவருக்குச் சுடலைமுத்துவை ஞாபகப்படுத்தியது... சுடலைமுத்துவின் நினைவில் அவரது விழிகளில் துளிர்த்த விழிநீர் அப்படியே கன்னத்தில் வழிந்தோடியது...

வீட்டிற்கு வந்த சிம்மவிஷ்ணு நேரே சென்றது தனது மனைவியைத் தேடி தான்... மதிய உணவிற்கு வீட்டிற்கு வந்த நிஷிலா கணவனுக்காகக் காத்திருந்தாள்...

"ரூமுக்கு வா நிலா..." என்றவனைக் கண்டு,

"சாப்பிட்டு போகலாமே..."

அவள் கூறும்முன் அவன் அறைக்கதவை திறந்து உள்ளே சென்றிருந்தான்... அவள் புரியாது அவனைப் பின்தொடர்ந்தாள்... ஓய்ந்து போன தோற்றத்துடன் கட்டிலில் அமர்ந்திருந்த கணவனைக் கண்டு மனம் பதறியவளாய் அவன் அருகில் சென்றாள்...

"மாமா..." அவன் அருகில் அமர்ந்தவள் அவனது தோளை தொட்டதும் தான் தாமதம் அவன் மொத்தமாய் உடைந்து போய்க் கதறினான்...

"எவ்வளவு கஷ்டப்பட்டு ஒவ்வொண்ணா திட்டம் போட்டு அவங்களை உள்ளே தூக்கி வச்சிருக்கேன்... ஆனா இந்தப் பத்திப்பா அவங்களை வெளியில் எடுக்க முயற்சி பண்றாரு... அவருக்கு என்னோட மனவேதனை புரியலை... அவருக்கு அவரோட மனைவி தான் பெருசா போயிட்டாங்க... அப்போ நான் அவருக்குப் பெருசா தெரியலை... அவர் என் மேல் காண்பிச்ச பாசம் எல்லாம் வேசம் தானா...?"

சின்னவன் சுடலைமுத்துவாய் மாறி தனது தோள் சாய்ந்து புலம்பியவனின் மனநிலையை உணர்ந்து அவள் அமைதியாக ஆறுதல் அளித்தாள்... வெகுநேரம் கழித்தும் அவன் ஆறுதல் அடையும் வழியறியாததால் நிஷிலா வாய் திறந்தாள்...

"வெளியில் வந்தால் உங்களுக்கு நல்லது தானே... இப்போ ஊரறிய அவங்களை அசிங்கப்படுத்தி அவங்க கௌரவத்தைக் கேள்விக்குறி ஆக்கியாச்சு... இனி நீங்க அவங்களுக்குத் தண்டனை கொடுப்பதை மாமா என்ன? யாராலும் தடுக்க முடியாது..." என்று மனைவி கூறிய ஆறுதல் வார்த்தைகளில் சிம்மவிஷ்ணு கண்கள் மின்ன அவளைப் பார்த்தான்...

"ஆமாம், இதுவும் நன்மைக்குத் தான்..." என்று அவன் சந்தோசத்துடன் கூற...

"தட்ஸ் த ஸ்பிரிட்..." என்று அவள் அவனை உற்சாகப்படுத்தினாள்...

"வெளியில் வரட்டும் பார்த்துக்கலாம்..." என்றவன் உற்சாகமாய் அறையை விட்டு வெளியேறினான்...

கணவன் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த நிஷிலாவிற்கு நிம்மதியாக இருந்தது... அவனது கணக்கு ஒவ்வொன்றாய் நேராவது கண்டு... அதே சமயம் அவளுக்குத் தனது தந்தையை நினைத்து சிறிதும் வருத்தம் வரவில்லை... அவருக்கு வேண்டிய தண்டனை தான் என்றே அவள் நினைத்தாள்...

அடுத்து வந்த ஒரு மாதமும் சிம்மவிஷ்ணு மூவரும் வெளியில் வராதிருக்க எல்லா வேலைகளையும் செய்தான் என்றால், பத்ரிநாத் அவர்களை வெளியில் கொண்டு வருவதற்கான அத்தனை வேலைகளையும் பார்த்தார்... இது அவனது கோபத்தினை மேலும் அதிகரித்தது... பத்ரிநாத் தான் நினைத்தது போல் மூவரையும் கஷ்டப்பட்டு வெளியில் எடுத்துவிட்டார்...

"அந்த எலும்பு துண்டுகள் சுடலையோடதாகவே இருக்கட்டும்... ஆனால் அதை என் கட்சிக்காரர்கள் தான் செய்தார்கள் என்பதற்கு என்ன ஆதாரம், சாட்சி...?" என்று அவர்கள் தரப்பு வழக்கறிஞர் வாதாடினார்...

"அவர்களே ஒத்துக் கொண்ட குற்றம் இது..." என்று எதிர்தரப்பு வழக்கறிஞர் தன் தரப்பை கூறினார்...

"அது காவல்துறை அவர்களை அடித்து உதைத்து அப்படிப் பொய்யான வாக்குமூலம் வாங்கிவிட்டனர்... எனது கட்சிக்காரர்கள் அப்பாவிகள்... ஒரு குற்றமும் செய்யாதவர்கள்..." என்று திறமையாக வாதாடினார் அவர்...

இறுதியில் கொலைக்கான போதுமான சாட்சிகள் இல்லாத காரணத்தில் மூவரையும் விடுவிக்க உத்தரவிட்டது நீதிமன்றம்...

"அப்போ சிறுவன் சுடலைமுத்துவுக்கு என்ன தான் நேர்ந்தது...? அவனைக் கொன்று புதைத்தவர்கள் யார்...?" சிம்மவிஷ்ணு தரப்பு வழக்கறிஞர் கோபத்துடன் நீதிபதியை பார்த்து கேட்டார்...

"அதைத் தனியாக விசாரித்துக் குற்றவாளிகளைக் காவல்துறையினர் தான் கண்டுபிடிக்க வேண்டும்... இல்லையேல் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்..." நீதிபதி அவரது அனுபவத்தை வைத்து அப்படியொரு பதிலை கூறினார்...

'காலம் பதில் சொல்லுதோ? இல்லையோ? நான் பதில் சொல்வேன்...' சிம்மவிஷ்ணு மனதிற்குள் ஆத்திரத்துடன் சபதம் போட்டான்...

"நீங்க அவங்களைக் காப்பாத்திட்டதா நினைக்காதீங்க... என்னைக்கு இருந்தாலும் அவங்களுக்கு என் கையால் தான் சாவு..." என்ற சிம்மவிஷ்ணு கோபமாய்ப் பத்ரிநாத்திடம் உரைத்தவன் தனது காரை கிளப்பிக் கொண்டு சென்றுவிட்டான்...

"நீங்க வாங்க போகலாம்..." என்ற பத்ரிநாத் மூவரையும் அழைத்துக் கொண்டு சென்றார்...

"நீங்க என்னை வெளியில் எடுத்துருவீங்கன்னு எனக்குத் தெரியும் பத்ரி..." இளவரசி வழிந்தபடி கூறியதற்கு அவர் புன்னகையையே பதிலாகக் கொடுத்தார்...

"டாட், நீங்க மாம்மை இங்கே கூட்டிட்டு வந்தால் நாங்க எல்லோரும் வீட்டை விட்டு போயிருவோம்..." என்று பவித்ரன் தீர்மானமாகக் கூறிவிட்டான்... அதை அருந்ததியும் ஆமோதித்தார்...

அதனால் பத்ரிநாத் மூவரையும் நாகர்கோவிலில் இருந்து சென்னைக்கு அழைத்து வந்தவர் நேரே தங்களது பண்ணை வீட்டிற்குச் சென்றார்... இளவரசி எப்போதும் போல் கணவனிடம் பேசி சிரித்தார்... செல்வரத்தினம், மணிபாரதி இருவரும் தங்களது அவமானத்தைக் மதுவில் கரைத்து கொண்டனர்... செல்வரத்தினத்திற்கு மனைவி மீது அப்படியொரு கோபம் வந்தது... அவள் எப்படித் தன்னை வீட்டிற்கு வர கூடாது என்று சொல்லலாம் என்று... ஆனால் பவித்ரனுக்குப் பயந்து அங்கே போகாது இங்கேயே இருந்தார்... அவரது மனம் குமுறிக் கொண்டிருந்தது...

"அவனைப் பழிவாங்கணும்டா... பழிவாங்கணும்... நிஷாவுக்காகப் பார்த்தால் அவன் நம்மளை அழிச்சிருவான் போலிருக்கு..." என்று அவர் தம்பியிடம் புலம்பினார்... மணிபாரதி அதை ஆமோதித்தார்...

இதைக் கேட்டபடி அமைதியாக அவர்களைக் கடந்து சென்றார் பத்ரிநாத்...

ஒருவாரம் கழித்து மூவரிடமும் பத்ரிநாத், "நீங்க கொஞ்ச நாளைக்கு நம்ம ஊட்டி எஸ்டேட்டில் போய்த் தங்கியிருங்க... இங்கே இந்தப் பிரச்சனை எல்லாம் ஓய்ந்ததும் மீண்டும் இங்கே வரலாம்..." என்று கூற...

"பத்ரி நீங்களும் வாங்களேன்..." இளவரசி கணவனை ஆசையுடன் அழைக்க...

"நிச்சயம் நான் வருவேன்... ஆனால் இப்போது இல்லை... இங்கே சில தொழில் ஒப்பந்தங்களில் கையெழுத்து போட வேண்டியிருக்கு... அது முடிந்ததும் நான் வருகிறேன்..."

மறுநாள் மூவரும் கிளம்பி ஊட்டிக்கு சென்றனர்... ஊட்டி மலைப்பாதையில் அவர்களது கார் செல்லும் போது அது நிலைத்தடுமாறி பள்ளத்தாக்கில் விழுந்து நொறுங்கி எரிந்து போனது... பல ஆயிரக்கணக்கான அடி ஆழம் என்பதால் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளச் சற்றுச் சிரமமாக இருக்கிறது என்று காவல்துறை ஊடகங்களில் பேட்டி கொடுத்தது...

அதைக் கேள்விப்பட்ட நிஷிலா தனது தாயை பார்க்க துடித்தாள்... என்ன இருந்தாலும் அருந்ததிக்கு கணவரது இழப்புத் துன்பத்தைக் கொடுக்கும் இல்லையா...? அதே சமயம் கணவனிடம் எப்படிக் கேட்பது? என்று தெரியாது அவள் தவித்தாள்... அவள் கேட்கும் முன் சிம்மவிஷ்ணுவே அவளிடம்,

"நீ மட்டும் சென்னைக்குக் கிளம்பு... அம்மு இங்கே இருக்கட்டும்..." என்று மட்டும் கூறினான்... அவனது முகம் உணர்ச்சிகளைத் தொலைத்திருந்தது... அதனால் அவள் மேலே பேச்சை வளர்க்காது அவனுடன் கிளம்பினாள்...

சென்னை வந்ததும் நிஷிலா அன்னையைத் தேடி சென்று ஆறுதல் கூறினாள்... கூடவே சிம்மவிஷ்ணுவும்... பின்பு அவன் மனைவியை அவளது அன்னையிடத்தில் விட்டு விட்டு பத்ரிநாத்தை தேடி சென்றான்... அலுவலக அறையில் அமர்ந்து சுந்தரகாண்டம் படித்துக் கொண்டிருந்த அவர் முன் கோபமாய்ப் போய் நின்றான் அவன்... அவனது வருகை உணர்ந்து அவர் அவனை நிமிர்ந்து பார்த்தார்...

"உட்கார் விஷ்ணு..." என்று மட்டும் சொன்னார்...

"நான் உட்கார வரலை... ஏன் இப்படிப் பண்ணினீங்க...? அவங்க இப்படிச் சட்டுன்னு உயிரை விடவா நான் இத்தனை நாள் கஷ்டப்பட்டது...? அவங்களை அணு அணுவாய் சித்ரவதை செய்து கொன்னு இருக்கணும்... அதைச் செய்ய விடாம பண்ணிட்டீங்களே..." அவன் கோபத்தில் கொந்தளித்தான்...

அதற்கு அவர் ஒன்றும் பேசவில்லை... அமைதியாக அவனைப் பார்த்தார்...

"ச்சே, உங்க முகத்தில் விழிக்கவே பிடிக்கலை..." என்றவன் அறைக்கதவை அறைந்து சாத்திவிட்டு வெளியேறினான்...

அவன் சென்றதும் பத்ரிநாத்தின் முகத்தில் வேதனையின் சாயல் படர்ந்தது...

நிஷிலா அருந்ததியை தன்னுடன் வர சொல்லி பணித்தாள்... சிம்மவிஷ்ணுவும் அவரைத் தங்களுடன் வர சொன்னான்...

"நிஷி, அத்தையை நான் பார்த்துக்க மாட்டானா...? நான் அவங்களைப் பார்த்துக்கிறேன்... நீ கவலைப்படாம போயிட்டு வா..." என்று பவித்ரன் அவளிடம் கூறினான்...

சிம்மவிஷ்ணுவுக்குள் சுடலைமுத்து இருப்பது பவித்ரனுக்குத் தெரியாது... அவன் அதைப் பற்றிப் பெரிதாக யோசிக்க முடியவில்லை... யோசிக்கும் மனநிலையில் அவனும் இல்லை...

"ஆமாம் நிஷா, நான் இங்கே இருக்கேன்... நீ நிம்மதியா, சந்தோசமா உன் புருசன் வீட்டில் போய் வாழு..." என்று அருந்ததியும் கூறினார்...

அதனால் சிம்மவிஷ்ணு, நிஷிலா இருவரும் ஊருக்கு கிளம்பி போயினர்... அவன் பத்ரிநாத்திடம் விடைப்பெறாது கோபமாய்ச் சென்றுவிட்டான்... அதைக் கண்டு அவர் தனக்குள் சிரித்துக் கொண்டார்...

சரியாக ஒரு வாரம் கடந்து சிம்மவிஷ்ணுவிற்குப் பத்ரிநாத்திடம் இருந்து அழைப்பு வந்தது... அவன் அதை எடுக்கவா? வேண்டாமா? என்று தனக்குள் பட்டிமன்றம் நடத்திவிட்டு இறுதியாக மனம் கேட்காது எடுத்தான்... ஆனால் எதுவும் பேசவில்லை... சிறுபிள்ளை போன்று பேசாது கோபித்துக் கொண்டான்...

"உடனே சென்னைக்குக் கிளம்பி வா... கூடவே மாடசாமியையும் அழைச்சிட்டு வா..." என்று அவர் உத்தரவு போல் கூற...

"எதுக்கு...? அதெல்லாம் முடியாது..." என்று அவன் குழந்தையாய் முறுக்கி கொண்டான்...

"நான் எதைச் செய்தாலும் ஒரு அர்த்தம் இருக்கும் விஷ்ணு... சீக்கிரம் கிளம்பிவா..." என்றவர் அழைப்பை துண்டித்துவிட்டார்...

சிம்மவிஷ்ணு பெருத்த யோசனையுடன் மாடசாமியை அழைத்துக் கொண்டு சென்னை கிளம்பினான்... எதற்கு? என்று கேள்வி கேட்ட மாடசாமியின் கேள்விக்கு அவனால் பதில் அளிக்க முடியவில்லை... தெரிந்தால் தானே பதில் சொல்வதற்கு... அதனால் அவன் மௌனம் காத்தான்...

சென்னை வந்து இறங்கியவர்களைப் பத்ரிநாத்தே நேரில் சென்று வரவேற்றார்...

"எப்படியிருக்க விஷ்ணு...? எப்படியிருக்கீங்க மாடசாமி...?" என்று அவர் இருவரையும் உற்சாகமாக வரவேற்க...

அவர்கள் இருவரும் பதில் சொல்லாது முகத்தை இறுக்கமாய் வைத்து கொண்டனர்... அதைக் கண்டு புன்னகைத்த பத்ரிநாத் மேலே பேசாது அவர்களைத் தனது காரில் அழைத்துச் சென்றார்... சென்னையை விட்டுத் தள்ளியிருந்த ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்றார்... அது செங்கல் சூளை போன்று இருந்தது... அதன் அருகில் தகரம் வேய்ந்த ஒரு பெரிய கொடவுன் இருந்தது... அதைத் திறந்து கொண்டு உள்ளே சென்ற பத்ரிநாத் அவர்களை உள்ளே

அழைத்தார்... புரியாது சென்ற இருவரும் உள்ளே நுழைந்ததும் அதிர்ச்சியில் விழிவிரிய அசையாது நின்றுவிட்டனர்...

இளவரசி, செல்வரத்தினம், மணிபாரதி மூவரும் அரைகுறை உயிருடன் அங்கு அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்... ஒரு வாரம் கிடந்த பட்டினி அவர்களின் மூளையின் உணர்வினை மங்க செய்திருந்தது என்றால், அடியாட்கள் அடித்ததில் அவர்களது உடலின் உணர்வுகள் மரத்துப் போயிருந்தது...

"இப்போ உனக்குச் சந்தோசமா சுடலை...?" அவர் கேட்டதும் அவன் விழி கலங்க,

"பத்திப்பா..." என்ற கூவலோடு அவரை அணைத்துக் கொண்டான்...

"உன் பத்திப்பா தான் சுடலை... உன் பத்திப்பா தான்..." என்றவர் அவனை அணைத்துக் கொண்டு கண்ணீர் வடித்தார்...

சுடலைமுத்துவை தனது மனைவி கொன்றதை அறிந்தும் இவ்வளவு நாள் கண்ணீர் விடாது அவர்களைப் பழிவாங்குவதற்காகத் தன்னை அடக்கி கொண்டிருந்தவர் இப்போது முழுவதும் உடைந்து போய்க் கதறினார்...

"இப்போது நீ என்னை நம்புகிறாயா சுடலை...? நான் உனக்குத் துரோகம் நினைப்பேனா...? நீ என்னோட உயிர்... என் மனைவி, மகனை காட்டிலும்..." என்று கூறியவரை கண்டு அவன் பேச்சற்று போனவனாய் வேகமாய்த் தலையசைத்தான்...

இருவரின் பாசப்பிணைப்பை கண்டு மாடசாமியும் கண்கலங்கினார்...

"இது எனக்குத் தெரியாம போனது சுடலை... தெரிந்திருந்தால் அன்றே நான் இவளை கொன்றிருப்பேன்..." என்று கோபத்துடன் மனைவியைப் பார்த்துக் கூறினார்...

"நீங்க என்னை நம்புறீங்களா பத்திப்பா...?" என்றவனை ஆதூரத்துடன் பார்த்தவர்,

"இந்த ஒரு வார்த்தை போதும்... நீ என் சுடலை தான்னு நிரூபிப்பதற்கு... இந்த உலகத்தில் என்னை இப்படிக் கூப்பிடும் ஒரே ஆள் நீ தான்..." அவர் மனநெகிழ்வுடன் அவனை அணைத்துக் கொண்டார்...

"நான் இதை எல்லாம் செய்ததற்குக் காரணம்... குற்றவாளிங்க இவங்க அவ்வளவு சீக்கிரம் செத்துவிடக் கூடாது என்பதற்காகத் தான்... அதனால் தான் டிஎன்ஏ டெஸ்ட்க்கு அப்புறம் இவங்களை நான் ஃபாலோ பண்ணிக்கிட்டே இருந்தேன்... அப்படிப் பின்தொடர்ந்ததனால் தான் இவங்க செய்த கொலை, சிங்கப்பூர் தப்பிக்க நினைச்சது எல்லாம் தெரிஞ்சது... அதைத் தெரிஞ்சுக்கிட்டு தான் அன்னைக்கு நான் அந்த இன்ஸ்பெக்டரை வீட்டுக்கு வர சொல்லி இவங்க தப்பிக்கிறதை தடுத்தேன்... அதையும் மீறி தப்பிச்சப்போ என்னோட ஆளுங்க போலீஸ் ட்ரெஸில் போய் இவங்களை அரெஸ்ட் பண்ணி கூட்டிட்டு வந்துட்டாங்க... இவங்களை என் கண்காணிப்பில் வச்சிருந்ததுக்கு இன்னொரு காரணம் இவங்க உன்னை எதுவும் பண்ணிட கூடாதேன்னு தான்... என் சுடலையைத் தான் நான் இழந்துட்டேன்... என் விஷ்ணுவை நான் இழக்க விரும்பலை..." என்று கூறியவரை அணைத்திருந்த சிம்மவிஷ்ணுவின் கைகள் பாசத்தில் இன்னமும் இறுகியது...

"நான் தான் தப்பா புரிஞ்சிக்கிட்டு உங்க கிட்ட கோவிச்சுக்கிட்டேன்... சாரிப்பா..." என்று அவன் உண்மையாக வருந்தினான்...

"நீ தான் மன்னிக்கணும்ப்பா... இந்த ராட்சசி பத்தி தெரியாம இத்தனை வருசம் இவள் கூட வாழ்ந்திருக்கேனே... என்னை எல்லாம்..." அவர் சொல்லி முடிக்கும்,

"செருப்பால அடிச்சிக்கோ..." என்று ஆத்திரத்துடன் குரல் கொடுத்தார் இளவரசி...

பத்ரிநாத், சிம்மவிஷ்ணு, மாடசாமி மூவரும் அவரைத் திரும்பி பார்த்தனர்...

"ச்சீ, நம்பிக்கை துரோகி... இப்படி நம்ப வச்சு கழுத்தறுத்திட்டியே... நீயெல்லாம் ஒரு மனுசனா...?" என்று இளவரசி குமுற...

"நீ தான்டி துரோகி... உன்னை நம்பி தானே என் புள்ளைய அனுப்பினேன்... உன்னை நம்பி தானே என் புள்ள சோறு சாப்பிட்டான்... சாப்பாட்டில் விசம் வைத்து கொன்ற நீ தான்டி துரோகி, கொலைக்காரி... சுடலை மேல அப்படி என்னடி உனக்குக் கொலைவெறி...?"

பத்ரிநாத் ஆக்ரோசமாய் மனைவியைப் பார்த்து கத்தினார்... காதல், நம்பிக்கை பொய்த்து போன வலி அவருள் பெரும் பிரளயமாய்...

"நீ அவன் மேல் வச்ச பாசம் பிடிக்கலை... உன் கவனத்தை என் மேல் திருப்ப எனக்கு வேறுவழி தெரியலை..."

"ச்சீ..." அருவருப்பாய் முகத்தைச் சுளித்தார் பத்ரிநாத்... இப்படியும் ஒரு பெண்ணா? என்று...

"உனக்கு இசக்கி, சுடலையைப் பிடிக்கலைன்னா விலகி போயிருக்கலாமே... இப்படி அநியாயமா அவங்க உயிரை எடுத்து அவங்க வாழ்க்கையை நாசமாக்கணுமா?" மாடசாமி தாங்க மாட்டாது கேட்டார்...

"உன் தம்பி என் தங்கச்சியை இழுத்துட்டு ஓடினது மட்டும் சரியா...? அதான் அவனை லாரி வச்சு தூக்கினோம்... எங்களுக்கு எங்க கௌரவம், அந்தஸ்து ரொம்ப முக்கியம்..." என்று இரு சகோதரர்களும் அப்போதும் அடங்காது கத்தினர்...

"என்னோட வளமான வாழ்க்கைக்கு இடைஞ்சலாக இருந்த உன் தம்பி, அவன் மகனை நான் தான் கொன்னேன்... எனக்கு அவங்க தேவையில்லை..." என்று இளவரசி பெருங்குரலெடுத்து கத்தினார்...

"ஒரு வாரம் பட்டினி போட்டும் இவங்க திமிர் அடங்கிற மாதிரி தெரியலை... அதனால் ஒரேடியா அடக்கிற வேண்டியது தான் விஷ்ணு... நீ என்ன நினைக்கிற...?" பத்ரிநாத் அவனிடம் கேட்டார்...

"திருந்துறவங்களுக்குத் தான் மன்னிப்பு எல்லாம்... இவங்களுக்கு மன்னிப்பு எல்லாம் கிடையாது... நீங்க என்ன செய்யச் சொல்றீங்களோ அதையே செஞ்சுருவோம்..."

சிம்மவிஷ்ணு அனுமதி தந்ததும் பத்ரிநாத் தனது ஆட்களிடம் கண்சாடை காட்டினார்... அந்த ஆட்கள் மூவரையும் இழுத்துக் கொண்டு வெளியில் சென்றனர்... அதைக் கண்டு இளவரசி, செல்வரத்தினம், மணிபாரதி மூவரும் அலறினர்... அவர்கள் அதைக் கண்டு கொள்ளாது மூவரையும் இழுத்து சென்றனர்...

அவர்களைத் தொடர்ந்து சிம்மவிஷ்ணு, பத்ரிநாத், மாடசாமி மூவரும் வெளியில் வந்தனர்... செங்கல் சூளையில் பச்சை செங்கல்களுக்கு நடுவில் இளவரசி, செல்வரத்தினம், மணிபாரதி மூவரையும் வைத்து அதன் மேலேயும் செங்கல்களை வைத்து அடுக்கினர்... மூச்சடைக்க மரணபயத்தில் அவர்கள் அலறியதை கண்டு மற்ற மூவரும் தேகம் விறைக்க நின்றிருந்தனர்...

"விஷ்ணு, நீ போய் நெருப்பை வை..." என்று பத்ரிநாத் உத்தரவிட...

"நீங்களும் வாங்க..."

"எங்க சார்பா நீயே போப்பா..." மாடசாமி அவனை அனுப்பி வைத்தார்...

"நான் உங்களுக்கு என்னம்மா பாவம் செய்தேன்... என்னை ஏன் கொன்னீங்க...?" என்று சிம்மவிஷ்ணு கேட்ட கேள்வி காதில் விழுந்தாலும் இளவரசியால் பதில் கூறமுடியவில்லை... ஏனெனில் உள்ளே அவருக்கு மூச்சுத் திணறிக் கொண்டிருந்தது...

சிம்மவிஷ்ணு ஒரு நொடி கண்ணை மூடி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு மீண்டும் விழி திறந்தவன் மறுநொடி தாமதியாது சூளையின் அடியில் நெருப்பைப் பற்ற வைத்தான்... அடுத்த நொடி நெருப்புத் திகுதிகுவெனப் பற்றியெரிந்தது... அதே நேரம் மூவரின் மரண ஓலம் விண்ணை எட்டியது... அதைக் கேட்ட மற்ற மூவரும் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை...

பத்ரிநாத் சுடலைமுத்துவை நினைத்து மனதிற்குள் கதறினார்... அதே சமயம் காதல் என்கிற பெயரில் தான் ஏமாந்து போனதை நினைத்து உள்ளுக்குள் ஊமையாகக் கண்ணீர் வடித்தார்... இத்தனை வருடங்கள் கழித்துத் தன் காதல் பொய்த்து போனதை அவரால் தாங்கி கொள்ள முடியவில்லை...

மாடசாமி தம்பியையும், தம்பி மகனையும் நினைத்துக் கண்ணீர் விட்டு அழுதார்...

சிம்மவிஷ்ணு இறுகி போனவனாய் அப்படியே சிலையாய் எரியும் சூளையைப் பார்த்தபடி நின்றிருந்தான்... அந்நேரம் அவனது மனதில் தனது இறப்பு கூட நினைவுக்கு வரவில்லை... அவனது மனைவி நிஷிலா தான் நினைவுக்கு வந்தாள்... இவர்களைப் பழிவாங்கவென்று வீணே அவளது வாழ்க்கையை நாசமாக்கிய தன்னை நினைத்து அவன் கூனிக்குறுகி போனான்... மனைவியை நினைத்து மட்டுமே அவனது விழிகளில் கண்ணீர் துளிர்த்தது...

எதிரிகளின் கதறல் நியாயத்திற்கு அவனுக்குச் சந்தோசத்தைக் கொடுத்திருக்க வேண்டும்... ஆனால் அது சந்தோசத்தைத் தராது அவனுக்குத் துக்கத்தைப் பரிசளித்தது... ஏனெனில் மனைவியின் மனக்காயமே அவனையும் காயப்படுத்தி வேதனைப்படுத்தியது...

"விஷ்ணு..." பத்ரிநாத் அவனது தோளில் கையை வைத்தார்... அதில் சுயவுணர்வு பெற்றவன் சூளையைப் பார்த்தான்... அது புகைந்து கொண்டிருந்தது... நிச்சயம்

உள்ளே இருந்தவர்களின் சதைகள் சாம்பலாகி வெறும் எலும்பு கூடுகளே மிஞ்சியிருக்கும்...

"போகலாம்ப்பா..." பத்ரிநாத் கூற...

அவன் அமைதியாக நடந்தான்... பத்ரிநாத், மாடசாமி இருவரும் அவனுடன் இணைந்து நடந்தனர்... தெய்வம் நின்று கொன்றுவிட்டது, பத்ரிநாத்தின் உருவில்...

**************************

இராமேஸ்வரம் கரையோரம் அதே தை அமாவாசை தினம்... சிம்மவிஷ்ணு இசக்கிமுத்து, சுடலைமுத்து இருவருக்கும் திவசம் கொடுத்துக் கொண்டிருந்தான்... அவனின் பின்னே பத்ரிநாத், மாடசாமி இருவரும் நின்றிருந்தனர்... மூவரின் விழிகளும் கலங்கி இருந்தது... ஆனால் அந்தக் கலக்கத்தையும் மீறி அவர்களது மனதில் பெருத்த நிம்மதி பரவியிருந்தது...

பூஜை முடிந்து பிண்டங்களைக் கரைக்கச் சிம்மவிஷ்ணு கடலை நோக்கி சென்றான்... அவன் செல்வதைப் பார்த்தபடி இருந்த மாடசாமியின் கைகளைப் பிடித்தபடி பத்ரிநாத்,

"இதுக்கு எல்லாம் காரணம் நான் தான்... கஷ்டப்பட்டாலும் உங்க தம்பி எங்கேயோ பொண்டாட்டி, பிள்ளையோட நிம்மதியா இருந்தார்... நான் தான் நல்லது செய்கிறேன்னு அவங்களைக் கண்டுபிடிச்சு இங்கே கூட்டி வந்து இந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டேன்... என்னை மன்னிச்சிருங்க..." என்று கண்ணீர் விட்டார்...

"நீங்க என்ன பண்ணுவீங்க... எல்லாம் விதிப்படி தான் நடக்கும்..." என்று மாடசாமி அவருக்கு ஆறுதல் அளித்தார்...

கடலில் பிண்டங்களைக் கரைத்த சிம்மவிஷ்ணு கடலில் மூழ்கினான்... அவனது மனதில் இசக்கிமுத்து, சுடலைமுத்து இருவரின் பிம்பங்களே...

"அப்பா, ஒரு பிள்ளையா உங்களுக்கும், ஒரு சகோதரனா சுடலைக்கும் கிடைக்க வேண்டிய நீதியை நான் பத்திப்பா துணையோட வழங்கிட்டேன்... இனி நான் சிம்மவிஷ்ணுவா என் மனைவி, குழந்தைகளோடு நிம்மதியா வாழணும்... அதுக்கு நீங்க ரெண்டு பேரும் தான் துணை நிற்கணும்...' என்று மனதிற்குள் அவர்களுடன் மானசீகமாக உரையாடினான்...

சுடலைமுத்துவாய் நீரில் மூழ்கியவன் எழும்போது சிம்மவிஷ்ணுவாய் எழுந்தான்... இனி சுடலைமுத்து இறந்தகாலம்... சிம்மவிஷ்ணுவே நிகழ்காலம்...!!!

"பழிக்கு பழி வாங்கிவிட்ட திருப்தியில்லை,
பெண்ணவள் பாவமும், உயிரும் ஒன்றோ?
உயிர் மீண்டுவிடும் மறுஜென்மத்தில்,
பெண்ணவள் பாவம் மறையுமோ?
ஏழேழு ஜென்மம் அது தொடராதோ?
உன்னுயிர் இப்பிறவியில் உயிர்ப்பிக்க,
பெண்ணவளின் மன்னிப்பால் மட்டுமே முடியும்...!!!"

கொள்ளும்...!!!

இராமேஸ்வரத்தில் திதி கொடுத்துவிட்டு மூவரும் மதுரை வந்தனர்... சிம்மவிஷ்ணு இரு அப்பாக்களையும் அழைத்துக் கொண்டு தனது வீட்டிற்கு வந்தான்... அவர்கள் இராமேஸ்வரம் ஏன் சென்றார்கள்? என்பது வீட்டில் இருந்தவர்களுக்குத் தெரியும்... ஆனால் இளவரசி, செல்வரத்தினம், மணிபாரதி இவர்களின் முடிவு பற்றி எதுவும் தெரியாது... ஊராரை போன்றே இவர்களும் அவர்கள் மூவரும் விபத்தில் இறந்துவிட்டதாகக் கருதினர்... நிஷிலாவிடம் கூடச் சிம்மவிஷ்ணு இதைப் பற்றி மூச்சு விடவில்லை... எதிரியையும் மன்னிக்கும் பூ மனம் கொண்ட மனையாளால் இதைத் தாங்கி கொள்ள முடியாது என்று அவனுக்கு நன்கு தெரியும்...

தங்களது வீட்டிற்கு வந்த பத்ரிநாத், மாடசாமியை வரவேற்ற சுந்தரபாண்டியன் இருவரின் கைகளைப் பிடித்துக் கொண்டு அமைதியாக அமர்ந்துவிட்டார்... சுடலைமுத்து விசயம் கேள்விப்பட்ட பிறகு இப்போது தான் அவர் இருவரையும் நேரில் பார்க்கிறார்... ஒரு தந்தையாய் மற்ற இருவரது மனநிலையையும் புரிந்து கொண்டார் சுந்தரபாண்டியன்...

"விஷ்ணு உங்களுக்கும் மகன் தான்... அதில் எந்தவித மாற்று கருத்தும் எனக்கில்லை..." என்று அவர் இருவரையும் பார்த்து ஆறுதல் கூறினார்...

"நம் மூவருக்கும் அவன் மகன் தான்..." என்று மற்ற இருவரும் மகிழ்வோடு கூறினர்...

சிம்மவிஷ்ணு, நிஷிலா, மீனாட்சி இதை மகிழ்வோடு பார்த்திருந்தனர்... இப்போது அனைவரின் மனதிலும் நிம்மதி நிறைந்திருந்தது...

இரவு நிஷிலா கணவனைத் தேடி வந்தவள் அவன் விருந்தினர் அறையில் பத்ரிநாத் மற்றும் மாடசாமியுடன் இருப்பதைக் கண்டாள்... சிம்மவிஷ்ணுவின் தலை பத்ரிநாத் மடியில் இருந்தது... அவனது கால்கள்

மாடசாமியின் மடியில் இருந்தது... பத்ரிநாத் அவனது தலையை இதமாக வருடி விட்டுக் கொண்டிருந்தார்... மாடசாமி பதமாக அவனது கால்களைப் பிடித்துவிட்டுக் கொண்டிருந்தார்...

அவனோ சுகமாய்த் துயின்று கொண்டிருந்தான்... வெகு வருடங்களுக்குப் பின் அவனை நிம்மதியான உறக்கம் வந்து ஆட்கொண்டது...

இந்தக் கண்கொள்ளா காட்சியை விழிகள் கலங்க பார்த்திருந்தவள் சத்தம் செய்யாது திரும்பிவிட்டாள்... அறைக்கு வந்து மகளை அணைத்துக் கொண்டு படுத்தவள் முகத்தில் புன்னகை நிறைந்திருந்தது... கணவனது சந்தோசம் அவளுக்கும் சந்தோசத்தைக் கொடுத்தது...

நடுஇரவில் விழித்த சிம்மவிஷ்ணு தனக்கு அருகில் மாடசாமி நன்கு உறங்குவதைக் கண்டவன் பத்ரிநாத்தை காணாது தேடினான்... அவரைத் தேட எண்ணி எழுந்தவன் யோசித்தபடி பால்கனிக்குச் சென்றான்... அங்கே அவர் கைகளைக் கட்டி கொண்டு இருள் நிறைந்த வானத்தை வெறித்துப் பார்த்தபடி அசையாது நின்றிருந்தார்...

"பத்திப்பா..."

அவனது அழைப்பில் திரும்பி பார்த்தவர், "தூங்கலையா விஷ்ணு...?" என்று கேட்டார்...

"நீங்க தூங்கலையா...?" என்றவன் அவரை உற்றுப் பார்த்தான்...

"ப்ச்..." என்று விரக்தியில் முனங்கியவரின் விழிகளில் இரு வைர துளிகளாய் விழிநீர் துருத்தி கொண்டிருந்தது...

"பத்திப்பா..." அவன் அதிர்ந்து போனவனாய் அவரது தோள்களில் கை வைத்தான்...

"உங்க மனசில் என்ன கவலைப்பா...?" அவன் கேட்டதற்கு அவரிடத்தில் இருந்து நீண்ட பெருமூச்சு வந்தது... சிறிது நேரம் மௌனமாக இருந்தவர் பின்பு வாய்த் திறந்தார்...

"தொழிலில் பல வெற்றிகளைக் குவித்த நான் வாழ்க்கையில் மிகவும் கேவலமாகத் தோற்றுப் போய்விட்டேன் விஷ்ணு... ஒரு கொலைக்காரி கூடக் கிட்டத்தட்ட நாற்பது வருசங்கள் வாழ்ந்திருக்கிறேன்... எந்தப் புள்ளியில் நான் தப்பு பண்ணினேன்னு எனக்குத் தெரியலை... இப்படிப்பட்ட கேவலமானவளை போய் நான் உயிருக்கு உயிரா காதலிச்சு இருக்கேனே... எனக்கே என்னை நினைச்சு அசிங்கமாயிருக்கு..."

"பத்திப்பா, உங்க மேல் எந்தத் தவறும் இல்லை... தப்பு எல்லாம் அவங்க மேல் தான்... நீங்க காதலிச்சது தப்பில்லை... அந்தக் காதலுக்கு அவங்க உண்மையா இல்லை... இசக்கிப்பாவுக்கும் சரி, உங்களுக்கும் சரி அவங்க உண்மையா, நேர்மையா நடந்துக்கலை... அவங்களுக்கு அவங்க சுகம் மட்டுமே பிரதானமா தெரிஞ்சிருக்கு... இன்னைக்குப் பல இடங்களில் இப்படிப்பட்ட கொலைகள் சர்வசாதரணமாக நடக்கிறது... பணம் இருக்கிறவங்க சுகத்தைத் தேடி இப்படித் தப்பு பண்றாங்க.. பணமில்லாதவங்க பணத்தைத் தேடி இப்படித் தப்பு பண்றாங்க... மொத்தத்தில் சுயவொழுக்கம் இல்லாதது தான் இதற்கு எல்லாம் காரணம்..." என்று அவருக்கு ஆறுதல் உரைத்தவன்,

"அதில் நானும் ஒருத்தன் பத்திப்பா..." என்றான் கீழிறங்கி போன குரலில்...

"நீ அப்படி எல்லாம் இல்லை விஷ்ணு... உன்னோட மனவலியை நிஷா புரிஞ்சிக்கிட்ட மாதிரி எங்களாலேயும் புரிஞ்சிக்க முடியுது..."

"அவளோட மனவலி முன் என்னோட மனவலி எல்லாம் ஒண்ணுமே இல்லாதது பத்திப்பா..." என்று வருந்தியவனைக் கண்டு அவருக்கும் வருத்தமாக இருந்தது...

இதற்கு எல்லாம் காரணம் அவரது மனைவியல்லவா...? ஒரு நல்லவனைக் கெட்டவளாக்கி விட்டாளே... சிம்மவிஷ்ணுவை மட்டுமா? அவரையும் சேர்த்து தான்

அவள் கெட்டவனாக்கி விட்டாள்... மனைவிக்கு வலிக்குமோ என்று எண்ணி அவளை மனதாலும், உடலாலும் துன்புறுத்தாது தான் அவளை ராணி மாதிரி தாங்கியது எல்லாம் அவரது கண்முன் படமாய் விரிந்தது... அவர் காதலுடன் மனைவியை நேசித்திருக்க... அவளோ அவரிடத்தில் இருந்த பணத்தை, அந்தஸ்தை நேசித்திருக்கிறாள்... இதை விடப் பெரிய அவமானம் ஆண்மகனுக்கு வேறில்லை... இப்படிப்பட்ட வாழ்க்கை அவனது ஆண்மைக்கே இழுக்கு அல்லவா...

தகுதி இல்லாதவளுக்காக மனம் வருந்துவது கூட முட்டாள்த்தனம் என்று எண்ணியவர் தனது மனதினை தேற்றிக் கொண்டு சிம்மவிஷ்ணுவிடம்,

"தூங்கலாம் வா..." என்றழைத்தார்... அவனும் பதில் பேசாது அறையினுள் வந்தவன் படுக்காது தேங்கி நின்றான்...

"படு விஷ்ணு..." என்று அவர் கூற...

"நான்... எனக்கு... நிலா கூட..." முழுவதும் சொல்லி முடிக்கும் முன் அவன் திணறிப் போனான்...

"அதுக்குள்ள பொண்டாட்டியை தேடுதாக்கும்..." என்று அவர் அவனைக் கேலி செய்ய... அதைக் கேட்டு அவனது முகம் வெட்கத்தில் சிவந்தது... ஆணின் வெட்கமும் அழகு தான் போலும்...

"அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை பத்திப்பா... அம்முவை பார்க்க போகிறேன்..." என்றவன் அவரது முகம் பார்க்க வெட்கம் கொண்டு அறையை விட்டு ஓடிவிட்டான்... அவரது கேலி சிரிப்பு அவனைத் துரத்தியது...

அறைக்குள் வந்தவன் மகளை அணைத்தபடி உறங்கி கொண்டிருந்த மனைவியைப் பார்த்தபடி அப்படியே நின்றிருந்தான்... பிறகு அவன் அவள் பக்கம் இருந்த சிறு இடத்தில் படுத்துக் கொண்டு அவளை அணைத்துக் கொண்டான்... அவனது அணைப்பில் அவளது உறக்கம் கலைந்தது...

"என்னங்க, இந்நேரம் தூங்காம என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க...?"

"தூக்கம் வரலை..." என்றவன் திரும்பி படுத்தவளின் நெஞ்சில் முகம் புதைத்துக் கொண்டான்...

"ஏனாம்...?" அவள் அவனது தலையைக் கோதி கொடுத்தபடி கேட்க...

"ஏதேதோ பழைய ஞாபகங்கள்..."

"அதான் எல்லாம் நல்லபடியா முடிஞ்சு போச்சே..."

"ப்ச், அது இல்லை... உன்னைப் பத்தி நினைச்சேன்..."

அவன் கூறியது கேட்டு அவளது கை ஒரு நொடி தயங்கி நின்றது... பிறகு சீராக அவனது தலைமுடியை வருடி கொடுத்தது... அந்த நொடி நேர தாமதம் அவளது மனதினை அவனுக்கு நன்கு உரைத்தது... அதை நினைத்து அவன் வேதனையில் ஆழ்ந்தான்...

"ப்ச், இதைப் பத்தி பேச கூடாதுன்னு சொல்லியிருக்கேன் இல்லையா...?"

"பேசாமல் இருக்க முடியும்... ஆனா..." என்றவன் அவளை ஏறிட்டு பார்த்து,

"நினைக்காமல் இருக்க முடியவில்லை..." என்றான் பெரும் வலியோடு...

"நினைக்காமல் இருக்க நான் என்ன செய்யணும்...?" என்று கேட்டாள் அவள் தவிப்போடு...

அவளது தவிப்பை உணர்ந்தவனாய் அவன் அவளைப் பார்த்து புன்னகைத்து, "நீ சந்தோசமா இருந்தால் அதுவே எனக்குப் போதும்... அந்த நினைப்பை கெட்ட கனவா நினைச்சு மறந்திருவேன்..." என்று அவன் வேண்டுகோளாய் அவளது மகிழ்ச்சியை யாசித்தான்...

"இப்பவும் நான் சந்தோசமா தான் இருக்கேன்... இந்த மாதிரி அழகான, அன்பான குடும்பம் யாருக்கு கிடைக்கும்... எனக்குக் கிடைச்சியிருக்கே..." என்று அவள் சந்தோசத்துடன் கூற...

"குடும்பம் சரி... கணவனுமா...?"

"கணவன் இல்லாம குடும்பம் எங்கே இருந்து வந்தது...? இதுக்குப் பிள்ளையார்சுழி போட்டது நீங்க தானே... அதனால் நீங்க தான் ரொம்ப ரொம்ப முக்கியமானவங்க..." என்றவள் அவனது மூக்கை பிடித்து ஆட்டினாள்...

"பேபி, உண்மையைச் சொல்லு... நீ சந்தோசமா இருக்கியா...?"

"ரொம்ப, ரொம்ப..." என்று இரு கைகளையும் விரித்துக் கூறியவள் அவனை அப்படியே அணைத்துக் கொண்டு அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்...

அவளாக அவனை அணுகி இருப்பது இதுவே முதன்முறை... அதுவே அவனுக்கு அவளது மனநிலையை நன்கு பறைச்சாற்ற அவன் புன்னகையுடன் அவளை அணைத்துக் கொண்டான்... இருவருமே கடந்த காலக் கசடுகள் அகன்று ஒருவித நிம்மதியை உணர்ந்தனர்...

********************

அன்று சிம்மவிஷ்ணு வழக்கம் போல் தனது வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டிற்குக் கிளம்பி கொண்டிருந்தான்... அவன் நின்றிருந்தது அவர்களது நூற்பாலையில்... இது பொதுச் சொத்து... இன்னமும் அவனது தந்தைக்கும், சித்தப்பாவிற்கும் பிரிக்கப்படவில்லை... ஆனால் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு முழுவதும் அவன் தான்... ஏக்கர் கணக்கில் அகன்று இருந்தது அந்த நூற்பாலை... காரிலேற போனவனின் காதில் அந்த மெல்லிய கதறல் சத்தம் கேட்டு அவனது தேகத்தை விறைக்கச் செய்தது...

ஏனெனில் இதே மாதிரியான கதறலை அவன் தனது மனைவியிடம் இருந்து கேட்டிருக்கானே... பத்து

வருடங்களுக்கு முன் நடந்தது எல்லாம் ஞாபகம் வந்ததில் அவன் சிலையாகச் சமைந்து போனான்... பின்பு உணர்வுற்றவன் காவலாளியை அழைத்துச் சென்று பார்ப்பதற்குக் கூட நேரமில்லாது அவனே அந்தக் குரல் வந்த திசையை நோக்கி ஓடினான்... நூற்பாலையை ஒட்டி இருந்த தென்னந்தோப்பில் இருந்து தான் அந்தச் சத்தம் வந்தது... அதைத் தொடர்ந்து அங்கே விரைந்து சென்றவன் அங்குக் கண்ட காட்சியில் உண்மையில் மெய் பதறிப் போனான்...

அங்கு அவனது தம்பி மாதவன் பதினைந்து வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்று கொண்டிருந்தான்... அதைக் கண்ட சிம்மவிஷ்ணு ஓடி சென்று அவன் மீது பாய்ந்தான்... கொத்தாக அவனது சட்டையின் பின்பகுதியை பற்றித் தூக்கியவன்,

"என்ன காரியம்டா பண்ணிக்கிட்டு இருக்க நாயே..." என்றபடி அவனை அடி வெளுத்துவிட்டான்...

நல்லவேளையாக அந்தச் சிறுமிக்கு எந்தவித சேதாரமும் இல்லாது அவன் காப்பாற்றிவிட்டான்... அவள் அழுது கொண்டே அவசரமாகத் தனது உடைகளைச் சரிசெய்து கொண்டாள்...

"என்னைய சொல்றியே... நீ மட்டும் என்ன ஒழுங்கா...? இவளை விட மூணு வயது பெரியவளை தானே நீ ரேப் பண்ணின... அண்ணன் எவ்வழியோ தம்பி நானும் அவ்வழியே..." என்று கேலியாய் கூறி விகாரமாய்ச் சிரித்தான் மாதவன்... அவன் முழுப் போதையில் இருந்தது அவன் நிற்க முடியாது தள்ளாடியதில் இருந்து தெரிந்தது...

தம்பியின் குற்றச்சாட்டில் மனம் பாரமாய்க் கனத்ததை விழி மூடி சரி செய்து கொண்ட சிம்மவிஷ்ணு அவனை நேராய் பார்த்து,

"நான் தவறு செய்தேன் தான் இல்லைங்கல்ல... ஆனா அவளுக்கு முறைப்படி தாலி கட்டி என் மனைவியாக்கின பின்பு தான் தொட்டேன்... இதோ இந்த நொடி வரை அவளை

மட்டும் தான் தொட்டிருக்கேன்... இனியும் அவளை மட்டும் தான் தொடுவேன்... உன்னை மாதிரி பல பெண்களைத் தொட்டவன் நானில்லை... உன்னை மாதிரி பொம்பளை பொறுக்கியும் நானில்லை... அந்த விசயத்தில் நான் ஏகபத்தினி விரதன் தான்டா... அதை விட என் மனைவி என்னை மன்னிச்சு ஏத்துக்கிட்டாள்... இதை விட வேறு என்ன வேணும்...? இந்த விசயத்தை மலர் கிட்ட நான் சொல்லவா...? அதனுடைய விளைவுகள் எப்படியிருக்கும்ன்னு உனக்கு நான் சொல்ல தேவையில்லை..."

சிம்மவிஷ்ணு கூறியதை கேட்டு மாதவன் பயந்து போனான்...

"தெரியாம போதையில் பண்ணிட்டேன்... மன்னிச்சிரு..." என்று அவன் மன்னிப்பு கேட்டான்...

"என் கிட்ட இல்லை... அவள் கிட்ட..." சிம்மவிஷ்ணு சின்னவளை கை காட்டினான்...

வேறுவழியின்றி மாதவன் அவளிடம் இரு கை கூப்பி, "என்னை மன்னிச்சுக்கோ..." என்று மன்னிப்பு வேண்டினான்... அவள் பயத்துடன் பின்னால் நகர்ந்தாள்...

"நீ வாம்மா... அவன் கெடைக்கிறான் பொம்பளை பொறுக்கி..." என்று கேவலமான பார்வையை மாதவனை நோக்கி வீசிய சிம்மவிஷ்ணு அந்தச் சிறுமியை அழைத்துக் கொண்டு கிளம்பினான்...

'வேலைக்காரி கிட்டவா என்னைய மன்னிப்பு கேட்க வச்ச...? உனக்கு இருக்குடா...' மனதில் வன்மமாய்க் கறுவி கொண்டான் மாதவன்....

தனது காரில் பின்பக்கம் அவளை ஏற சொன்ன சிம்மவிஷ்ணு தான் முன்பக்கம் அமர்ந்து காரை கிளப்பி ஓட்டியபடி, "நீ இந்த நேரத்தில் இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருந்த...?" என்று கேட்க...

"இன்னைக்குக் கூலி வாங்குற நாள்... ஆனா சின்னய்யா கூலி கொடுக்காம பொறவு கொடுக்கேன்னு சொன்னார்... அதான் இவ்வளவு நேரம் காத்திருந்தேன்... பொறவு தென்னந்தோப்புக்கு வா, கூலி தர்றேன்னு சொன்னாரு... நான் பயந்துக்கிட்டே போனேன்... அங்கே..." மேலே சொல்ல முடியாதபடி அந்தச் சிறுமி அழுதாள்...

எப்போதும் தொழிலாளர்களுக்கு அங்கிருக்கும் கணக்காளர் தான் சம்பளம் கொடுப்பார்... இன்று மாதவன் இடையில் புகுந்து ஏதோ விளையாண்டு இருக்கிறான் என்று சிம்மவிஷ்ணுவிற்குப் புரிந்தது...

"அழாதேம்மா... கண்ணைத் துடை... அப்பா, அம்மா கிட்ட எதையும் சொல்ல வேண்டாம்... பயந்துர போறாங்க..." என்று அவன் கூற... அந்தப் பெண் சரியென்று தலையாட்டியது...

"படிக்க வேண்டிய வயசில் உன்னை எதுக்கு வேலைக்கு அனுப்பியிருக்காங்க...?"

"அப்பா குடிகாரரு... அம்மா தான் வீட்டு வேலை செஞ்சு எங்களை எல்லாம் படிக்க வைக்கிறாங்க... ஆனா வருமானம் போதலை... அதான் நான் மட்டும் வேலைக்கு வந்துட்டேன்... நான் சம்பாதிச்சு தம்பி, தங்கச்சிங்களைப் படிக்க வைப்பேன்..."

சிம்மவிஷ்ணு அந்தச் சிறுமியை ஆதூரத்துடன் பார்த்தான்...

"நான் உன்னைப் படிக்க வைக்கிறேன்... உனக்கு என்ன படிக்க ஆசை...?"

"டாக்டர் ஆகணும்ன்னு ஆசை..." கண்களில் கனவு மின்ன கூறியவள் அவனுக்கு அவனது மனைவி நிஷிலாவை ஞாபகப்படுத்தினாள்...

"நிச்சயம் உன் ஆசை நிறைவேறும்..." என்று அவன் அவளுக்கு உறுதி அளித்தான்...

அந்தச் சிறுமியை அவளது வீட்டில் கொண்டு சென்று பத்திரமாக இறக்கி விட்டவனின் மனம் வீட்டிற்கு வரும் போது மிகவும் லேசாக இருந்தது... அந்தச் சந்தோசமான மனநிலையுடன் அவன் மகளுடன் விளையாடி கொண்டிருந்தான்...

"என்னாச்சு...? இன்னைக்கு ரொம்பச் சந்தோசமாயிருக்கீங்க...?" வினவிய மனைவியைப் பார்த்து,

"நான் உனக்குச் செய்ய முடியாம போன கடமையை ஒரு பொண்ணுக்குச் செய்யப் போகிறேன்..." என்று கூறியவனை அவள் புரியாது பார்த்தாள்...

அவன் விசயத்தை அவளிடம் கூறியதும் சந்தோசமாய் அவனைப் பார்த்தவள், "இது மாதிரி நிறையப் பேருக்கு நல்லது செய்யணும் மாமா..." என்க...

"இந்த மாமா என்றழைப்புக்காகவே நிறையச் செய்யணும் பேபி..." என்று காதல் பொங்க கூறியவன்,

"இது போல் நாம் நிறைய உதவிகளைச் செய்துக்கிட்டு தான் இருக்கோம்... ஆனா இந்தப் பொண்ணு சம்திங் ஸ்பெசல்..." என்றவன் அதற்கான காரணத்தைக் கூறவில்லை... இருக்கும் நல்ல மனநிலையைக் கெடுத்துக் கொள்ள அவன் விரும்பவில்லை...

மறுநாள் மதியம் சிம்மவிஷ்ணு கேள்விப்பட்ட செய்தியில் அவன் அலறியடித்துக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடினான்... அங்கு அவனது சித்தப்பா மகன் மாதவன், அந்தச் சிறுமியின் பெற்றோர், சொந்தக்காரர்கள் அனைவரும் கூடியிருந்தனர்...

"இந்தப் பொண்ணோட இந்த நிலைக்குக் காரணம் இவன் தான் இன்ஸ்பெக்டர்... நேத்து நைட் இவன் தான் காரில் அவளை அவளது வீட்டில் கொண்டு வந்து விட்டிருக்கிறான்..." என்று மாதவன் கூற...

"அடப்பாவி, உன்னை நல்லவன்னு நம்பினோமே... இப்படிப் பண்ணிட்டியே..." என்று சிறுமியின் தாயார் கதறியழுதார்...

காவல்துறை அதிகாரி அவனைச் சங்கடமாய்ப் பார்த்தார்... "சார், இந்தப் பொண்ணு தீக்குளிச்சிருக்கு... அதுக்கு நீங்க தான் காரணம்ன்னு சொல்றாங்க... நீங்க அந்தப் பொண்ணு கிட்ட தப்பா நடந்துக்கிட்டீங்கன்னு..."

சிம்மவிஷ்ணு இதைக் கேட்டு வேதனையுடன் விழிகளை மூடி கொண்டான்...

"நேத்து நைட் இந்தப் பொண்ணை நீங்க கூட்டிட்டு வந்ததுக்குச் சாட்சி அவளுடைய அம்மா, உங்க மில்லோட காவலாளி, அப்புறம் உங்க தம்பி மாதவன்..." அதைக் கேட்டு அவன் விழி திறந்து அவரைப் பார்த்தான்...

"அதனால் நான் தான் குற்றவாளின்னு முடிவு பண்ணிட்டீங்களா...?" என்று இறுக்கமான குரலில் அவன் கேட்டான்...

"ஐயோ, அப்படி எல்லாம் இல்லை சார்... பாதிக்கப்பட்ட பொண்ணோட வாக்குமூலம் தான் முக்கியம்... அவள் கண்விழிக்கிறதுக்காகத் தான் காத்திருக்கிறோம்..."

"இப்போ எப்படியிருக்கா...?" ஒரு பெண் குழந்தையின் தகப்பனாய் அவன் பதட்டத்துடன் கேட்டான்...

"லேசான தீக்காயங்கள் தான்... உடல் முழுசும் நெருப்பு பத்துறதுக்கு முன்னாடி காப்பாத்திட்டாங்க... இப்போ மயக்கத்தில் இருக்குது..."

"ஓ..." என்றவன் அங்கேயே அமர்ந்திருந்தான்... உணவு உண்பதற்கோ, தண்ணீர் அருந்துவதற்கோ கூட அவன் எழுந்து செல்லவில்லை...

விசயம் கேள்விப்பட்டுச் சுந்தரபாண்டியன், நிஷிலா இருவரும் அங்கே ஓடி வந்தனர்...

"டேய் விஷ்ணு, யாரோ என்னமோ சொன்னாங்கன்னு நீ ஏன்டா இங்கே உட்கார்ந்திருக்க...? எழுந்து வா..."

சுந்தரபாண்டியன் மகனை அதட்டினார்...

"மாமா, உங்களைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்... இந்தக் காரியத்தை நீங்க பண்ணியிருக்க மாட்டீங்கன்னு... வாங்க மாமா, நாம போகலாம்..." நிஷிலாவும் அவனை அழைத்தாள்...

மனைவியின் நம்பிக்கையில் அவன் மனம் நெகிழ அவளது கைகளை இறுக பற்றிக் கொண்டான்...

"போதும் மாமா... தெரியாம ஒரு தப்பு செஞ்சிட்டு அதுக்காக ஒவ்வொரு நாளும் நீங்க அவஸ்தைப்படுறது போதும்... நீங்க தப்பு செஞ்சது எங்கிட்ட மட்டும் தான்... நானே அதை ஏத்துக்கிட்ட பிறகு இன்னமும் ஏன் குற்றவாளி மாதிரி ஃபீல் பண்ணிக்கிட்டு இருக்கீங்க... நீங்க வாங்க..." என்று அவள் அழைக்க...

"உன்னோட நம்பிக்கை எனக்குப் போதும் நிலா... நீ போ... இதை எப்படித் தீர்க்கிறதுன்னு எனக்குத் தெரியும்... நான் இருந்து எல்லாத்தையும் முடிச்சிட்டு வர்றேன்..." என்றவனின் குரலில் அத்தனை தீவிரம் இருந்தது...

"இந்த மாதிரி நிலைமையில் நிலா இங்கே இருக்க வேண்டாம்ப்பா... அவளை அழைச்சிட்டு போங்க..." அவன் தந்தையிடம் கூறினான்... மகன் சொல்லை தட்டாது அவர் மருமகளை அழைத்துக் கொண்டு சென்றார்...

பின்மாலை பொழுதில் அந்தச் சிறுமி கண்விழித்தாள்... தனக்கு என்ன நேர்ந்தது என்பதை அந்தச் சிறுமி விளக்கமாகக் காவல்துறை அதிகாரியிடம் கூற ஆரம்பித்தாள்...

"நான் இன்னைக்குத் தோட்டத்துக்கு வேலைக்குப் போயிருந்தப்போ சின்னய்யா எங்கிட்ட வந்து..." என்று அழ ஆரம்பித்தவளை கண்டு கனிவுடன் அந்த அதிகாரி,

"பயப்படாம சொல்லும்மா..." என்க...

"மோட்டார் ரூமுக்கு தூக்கிட்டு போயி..." என்று அவள் முகத்தை மூடி கொண்டு அழ ஆரம்பித்தாள்...

அவருக்கே அந்தச் சிறுமியை நினைத்து அத்தனை வேதனையாக இருந்தது... ஆனாலும் கடமை என்ற ஒன்று இருக்கிறதே... அதனால் அவர் மனதினை தேற்றிக் கொண்டு அவளிடம் வாக்குமூலம் கேட்டார்... அவள் தனக்கு நேர்ந்த கொடுமையைச் சொல்ல துவங்கினாள்... யாருமில்லாத தனிமையைப் பயன்படுத்தி அந்த மனித மிருகம் அவளைத் தன்னுடைய இச்சைக்குப் பயன்படுத்திக் கொண்டான்...

"அவர் தொட்டது எனக்கு உடம்பெல்லாம் அருவருப்பா இருந்துச்சு... உடம்பு எல்லாம் தீ வச்ச மாதிரி எரிஞ்சுச்சு... அதைத் தாங்கிக்க முடியாம தான் நான் தீக்குளிச்சேன்... என்னை ஏன் காப்பாத்தினீங்க...?" என்று அவள் கதறியழுதாள்...

"சின்னய்யான்னா யாரும்மா...? சிம்மவிஷ்ணு ஐயாவா...?" அவர் மெல்ல அவளிடம் கேட்டார்...

"இல்லைங்கய்யா, அவர் தெய்வம்... அந்தத் தெய்வம் அங்கிருந்திருந்தா என்னை எப்படியாவது காப்பாத்தி இருந்திருப்பார்..." என்றவள் முதல் நாள் நடந்ததைக் கூறினாள்...

"அவர் ரொம்ப நல்லவர்ய்யா... இது அவரோட தம்பி..." என்று மீண்டும் அழுதாள்...

காவல்துறை அதிகாரி வெளியில் வந்து சிம்மவிஷ்ணுவிடம் அந்தச் சிறுமி கூறியதை கூற... அவன் அதிர்ந்து போனவனாய் அவரைப் பார்த்தவன்,

"நான் அந்தப் பெண்ணைப் பார்க்கலாமா...?" என்று பரிதவிப்புடன் கேட்க...

"வாங்க சார்..." என்று அவனை அழைத்துக் கொண்டு சென்றார் அவர்...

போனதும் அவன் செய்த முதல் காரியம் அந்தச் சிறுமியை கண்டு கையெடுத்து கும்பிட்டது தான்...

"ஐயா நீங்க போய்..." அதற்கும் அந்தச் சிறுமி கண்கலங்கினாள்...

"நீ என் மானத்தைக் காப்பாத்திய தெய்வம்மா... அதே போல் உனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நான் தண்டனை வாங்கித் தருவேன்... என்னை நம்பு..." என்றவன்,

"இதை எல்லாம் மனசில் வச்சிக்காம நீ நல்லா படிச்சு பெரிய டாக்டரா வரணும்..." என்று கூற...

"என்னால் முடியுமா...?" அவள் ஏக்கத்துடன் கேட்க...

"சாக்கடை நம்ம மேல் பட்டால் நாம என்ன உடலோட பாகத்தை வெட்டியா எடுக்கிறோம் இல்லையே... கழுவி விட்டுட்டுச் சாதாரணமா கடந்து போகிறோம் இல்லையா...? அது மாதிரி தான் இதுவும்..." என்று அவன் அவளைத் தனது மகளாய் நினைத்துத் தேற்றினான்...

"சரிங்கய்யா..." என்று அவள் சந்தோசத்துடன் தலையாட்டினாள்... அவளது அன்னை அவனைக் கண்டு கையெடுத்து கும்பிட்டபடி,

"என்னை மன்னிச்சிருங்கய்யா..." என்க...

"இருக்கட்டும்மா... உங்க நிலையில் யாரா இருந்தாலும் இப்படித் தான் பேசுவாங்க..." என்றவன் சிறுமியிடம்,

"உன் பெயர் என்னம்மா...?"

"புனிதா..."

"பெயரை போலவே நீயும் புனிதமானவள் தான்..." என்றவன் நேரே மருத்துவரை சந்தித்துத் தனியார் மருத்துவமனைக்கு அவளை மாற்றுவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்தான்... அத்தோடு புனிதாவிற்கு அழகியல் அறுவை சிகிச்சை செய்வதற்கும் ஏற்பாடு செய்தான்...

இவ்வளவையும் அவன் செய்து முடித்த போது அவனது தம்பி மாதவன் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டான்... ஆனாலும் விடாது தனது ஆட்கள் மூலம் அவனைக் கண்டுபிடித்து அவனைக் கட்டி வைக்கச் சொன்னான்... நேரே மாதவனைப் பார்த்த போது ஆத்திரம் அதிகரிக்க அவனை அடித்துத் துவம்சம் செய்துவிட்டான்...

"பாவி, உன் மகள் வயசை விட நாலு வயசு தானேடா அந்தப் பொண்ணுக்கு அதிகம்... அந்தப் பொண்ணைப் போய் இப்படிப் பண்ண உனக்கு எப்படி மனசு வந்தது..." என்று ஆங்காரத்துடன் கேட்டவன் நொடி நேரம் கூடத் தாமதியாது அங்கு இளநீர் சீவுவதற்காக வைத்திருந்த அருவாளை எடுத்து அவனது உயிர்நிலையை அறுத்து எறிந்தான்... மாதவனின் அலறல் சத்தம் அந்தத் தோட்டத்தின் மூலை முடுக்கெல்லாம் ஒலிக்க ஆரம்பித்தது...

"இனி எந்தப் பெண்ணை நாசாமாக்கிறேன்னு நானும் பார்க்கிறேன்... ஆம்பிளைங்கிற திமிரா...? இந்தத் திமிரெல்லாம் படுக்கையில் விழுற வரைக்கும் தான்... சாவு எப்போன்னு தெரியாம படுக்கையில் கிடப்பறப்போ தான் ஒரு ஆம்பளையோட அத்தனை திமிரும் அடங்கிப் போகும்... அப்படிக் கிடந்து பாரு உனக்கும் தெரியும்... உன்னை மாதிரி ஆளுங்களை எல்லாம் கொன்னா ஒரேடியா உயிர் போயிரும்... அப்படிப் பண்ணாம இப்படி ஆம்பிளைங்கிற அடையாளத்தை அழிச்சால் தான் ஒவ்வொரு நொடியும் அவமானத்தில் கூனிக்குறுகி ஏன்டா வாழ்றோம்ன்னு தினம் தினம் செத்து பிழைப்பீங்க... இந்த மாதிரி பண்ணுறவங்களுக்கு இது தான் தண்டனை... நீயும் ஒவ்வொரு நொடியும் ஏன்டா உயிர் வாழ்றோம்ன்னு தவிச்சு சாகணும்... உயிரோடு சாவு நாயே..." என்று உறுமியவன் அருவாளை தூக்கியெறிந்துவிட்டு சென்றுவிட்டான்...

இரவு வீட்டுக்கு வந்த சிம்மவிஷ்ணு மகள் உறங்கும் வரை அமைதியாக இருந்தான்... பின்பு மனைவி புறம் சென்று அமர்ந்தவன் நடந்த விசயத்தைக் கூறி,

"நிலா, உனக்கு நேரம் இருக்கும் போது புனிதாவுக்குப் போய்க் கவுன்சிலிங் கொடுத்துட்டு வா... அந்தப் பொண்ணு இதிலிருந்து மீண்டு வந்து படிச்சு முன்னேறணும்..." என்று கூற...

கணவனின் குணம் கண்டு அவள் மனம் மயங்கியவளாய், "நிச்சயம் செய்றேங்க..." என்க...

சிம்மவிஷ்ணு மாதவனைப் பற்றி உரைத்தவன் அவனுக்குத் தான் அளித்த தண்டனையைப் பற்றிக் கூறினான்...

"அவனுக்கு வேண்டிய தண்டனை தான்..." என்று வெறுப்பாய் கூறினாள் நிஷிலா... அவளை ஒரு நொடி உற்று பார்த்தவன் மறுநொடி அவளது காலில் விழுந்து கதறினான்...

"என்னையும் கொன்னு எனக்குப் பாவ விமோசனம் கொடுத்திடு பேபி..." என்று அவன் கண்ணீர்விட்டு அழுதான்...

"மாமா..." அவனது செயலில் அதிர்ந்து போனவளாய் அவள் உட்கார்ந்த நிலையில் தனது கால்களைப் பின்னுக்கு இழுத்து கொண்டாள்...

"ஏன் இப்படி எல்லாம் பேசுறீங்க மாமா...?"

"மாதவனுக்கும், எனக்கும் என்னடி வித்தியாசம்...? நானும் அவனும் ஒண்ணு தானே..." என்று அவன் மனமறுகினான்... அவள் மனம் கேட்காது அவனை இழுத்து தன்னோடு சேர்த்து அணைத்து கொண்டாள்...

"என்னைப் பத்தி அம்முவுக்குத் தெரிஞ்சா எவ்வளவு கேவலமா நினைப்பாள்...? அதை நினைச்சா எனக்குப் பயமாயிருக்குடி..." அவன் சிறுபிள்ளையாய் அரற்றினான்...

"அம்முக்கு தெரியாம பார்த்துக்கலாம்..." அவள் உறங்கி கொண்டிருந்த மகளைப் பார்த்தபடி அவனுக்கு ஆறுதல் கூறினாள்...

"நான் கெட்டவன் தானே... காமுகன் தானே..." என்று அவளைப் பார்த்து அவன் பரிதாபமாகக் கேட்க... அவனது தலை கோதி கொடுத்தவள்,

"இதுக்கு மேல இதைப் பத்தி நாம பேச கூடாது... இதுவே கடைசி முறையா இருக்கணும்... ஏற்கெனவே நான் சொல்லியிருக்கேன்... ஆனா நீங்க கேட்கும் வழி தான் தெரியலை..." என்றவள்,

"நீங்க என் கிட்ட நடந்துக்கிட்டது தப்பு தான்..." அதைக் கேட்டு அவனது முகம் வாடி போனது...

"ஆனா அந்தத் தவறுக்கு பின்னாடி நியாயமான காரணம் இருந்தது... எட்டு வயசு சுடலையோட மனவலி முன்னாடி பதினெட்டு வயசு நிஷிலாவோட வலி மிகவும் சாதாரணமானது... சுடலைக்குக் கிடைக்காத அங்கீகாரத்தை அவனோட வாரிசுக்கு கிடைக்கணும்ன்னு நீங்க நினைச்சது தப்பில்லை... அதுக்காக என்னைக் கடத்தி வந்து கல்யாணம் பண்ணியது, வாழ்ந்தது, குழந்தை கொடுத்தது எதுவுமே தப்பில்லை... நீங்க பண்ணியது எல்லாமே சரி தான்... நீங்க ஒண்ணும் பெண் பித்துப் பிடிச்சு என்னைத் தொடலையே... பெண்ணாசை கொண்டும் என்னைத் தொடலை... பழிவாங்க தொட்டீங்க... அந்த வாழ்க்கை எனக்கு எவ்வளவு கஷ்டமா இருந்ததோ அதே அளவுக்கு உங்களுக்கும் கஷ்டமா இருந்ததை நானும் உணர்ந்தேன்... சிம்மவிஷ்ணுவோட எல்லாத் தவறையும் எட்டு வயசு சுடலைக்காக மன்னிக்கத் தயாரா இருக்கிறாள் உங்க நிலா பொண்ணு..."

அப்போதும் அவனது முகம் தெளியாததைக் கண்டு அவள் அவனது காதருகில் ரகசியமாக, "ஒரு உண்மையைச் சொல்லட்டுமா...?" என்று கேட்க...

"சொல்லு..." அவன் எதிர்பார்ப்புடன் அவளைப் பார்த்திருந்தான்...

"நீங்க இந்த உண்மையை எல்லாம் சொல்லி என்னைக் கூப்பிட்டிருந்தா நானே உங்க கூட வந்திருப்பேன்... உங்க

விருப்பப்படி உங்க கூட வாழ்ந்து, குழந்தை உண்டாகி சுடலைக்கு நியாயம் செய்திருப்பேன்..." என்றவளை வியப்பாய் பார்த்தவன்,

"பேபி..." என்று அவளை அணைத்துக் கொண்டான்...

"இந்த அரைக்கிழவன் கூப்பிட்டிருந்தா உடனே வந்திருப்பியா...?"

"ஏன் என் தங்கத்துக்கு என்ன குறைச்சல்...?" என்று அவனது கன்னம் கிள்ளி முத்தமிட்டவளை கண்டு அவனது குற்றவுணர்ச்சி மறைந்து காதல் பெருகியது...

"நான் அவ்வளவு அழகா இருக்கேனாடி...?"

"செம ஸ்மார்ட்டா இருக்கீங்க..." என்று அவள் இமைச்சிமிட்டி சிரித்தாள்...

"நம்ம அறிமுகம் வேணா தப்பா இருந்திருக்கலாம்... ஆனா அதுக்குப் பிறகு நடந்தது எல்லாம் காதலால் மட்டுமே... நீங்க ஒவ்வொரு தடவை என்னைத் தொடும் போதும் 'உன்னைக் காதலிக்கிறேன்னு' நீங்க ஒரு வார்த்தை சொல்ல மாட்டீங்களான்னு நான் எதிர்பார்ப்பேன்... குழந்தை உண்டாகி இருக்கிறப்போ தினமும் நான் உங்களை எதிர்பார்ப்பேன்... நீங்க வரவே இல்லை... 'நீ எனக்கு வேண்டாம்'ன்னு நீங்க சொன்னப்போ நான் ஒரு பொண்ணா கூட உங்களைக் கவரலையான்னு அழுதிருக்கேன்... அப்போ அது எல்லாம் ஏன்னு புரியலை... ஆனா இப்போ புரியுது..." என்றவளின் நெற்றியில் முத்தமிட்டு நிறைவாய் சிரித்தவன் அவளது கழுத்தில் இருந்த தாலியை எடுத்து காட்டி,

"நான் போட்ட சங்கிலியை கழட்டியவள் இந்தத் தாலியை கடைசிவரை கழட்டலையே... அப்பவே எனக்கு உன் மேல் நம்பிக்கை இருந்தது... கடைசிவரை உன் கணவன் நான் தான்னு... அதனால் தான் இந்தத் திருமணப் பந்தத்தில் உறுதியா இருந்தேன்..."

"அப்படிப்பட்டவர் ஏன் ஜெயிலுக்குப் போகும் முன் தாலியை கழட்டிட்டு போனீங்க...?" அவள் மனத்தாங்கலுடன் கேட்டாள்...

"நோயோட தாக்கம், பத்து வருசத்தில் நான் உயிரோட திரும்ப வருவேனான்னு எனக்குத் தெரியாது... அதனால் தான் நீயாவது நல்லா இருக்கணும்ன்னு அதைக் கழட்டினேன்..."

"நான் எப்படி வேற கல்யாணம்ன்னு பண்ணுவேன்னு நீங்க நினைக்கலாம்..."

"அப்போ இருந்த சூழ்நிலையில் அதைத் தான் நான் யோசிச்சேன்... உனக்கோ சின்ன வயசு... என்னால உன் வாழ்க்கை பாழாகக் கூடாதுன்னு நினைச்சேன்... ஆனா சத்தியவானை எமனிடம் இருந்து காப்பாத்திய சாவித்திரி மாதிரி நீ வந்து என்னைக் காப்பாத்துவேன்னு நான் கனவிலும் நினைச்சு பார்க்கலை..." இப்போதும் அது கனவு போல் அவனுள் பெரும் பிரமிப்பை கொடுத்தது...

"இந்தச் சத்தியவானுக்கு ஏற்ற சாவித்திரி நான் தான்..." என்று அவனது நெற்றியில் முத்தமிட்டவள்,

"உங்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தாலும் ஏதோ ஒண்ணு உங்களையே நினைச்சிட்டு இருக்கத் தோணும்... நான் உங்களை நினைக்காத நாள் இல்லை... தினமும் உங்களை நினைப்பேன்..."

"எனக்குத் தெரியும் பேபி... உன்னோட மனசு பூ மாதிரின்னு..."

"அப்படியும் இருக்கலாம்... என்னையும் அறியாமல் நீங்க ஆழமா என் மனசில் பதிஞ்சு போனதால் கூட அப்படி இருக்கலாம்..."

"அப்படியா...?"

"அப்படியே தான்..." என்று உறுதியாக உரைத்தவள்,

"ஹர்ஷியோட உங்களைச் சேர்த்து பார்த்தப்போ மனசுக்குள் அப்படியொரு கோபம் வந்தது..."

"அதான் பார்த்தேனே... விறுவிறுன்னு வேகமா நடந்து போனியே..." என்று கூறி அவன் சிரித்தான்...

"நான் மட்டுமே உங்க மனைவி... இந்தக் கல்யாணம் உண்மை... இப்படி எல்லாம் சொன்ன நீங்க பொய்த்துப் போனதில் எனக்கு அப்படியொரு கோபம், அழுகை வந்தது... அப்புறம் டாக்டரை பார்த்துட்டு வந்தப்போ உங்க அணைப்பில் அழுதது... அப்புறம் குழந்தையைக் காப்பாத்த சொல்லி உங்க கிட்ட வந்தது... எல்லாமே நான் உங்க மேல் வச்ச நம்பிக்கையால் தான்... அந்த நம்பிக்கைக்கு மறுபெயர் தான் காதல்... அதை உணர இத்தனை வருசங்கள் ஆகியிருக்கு... தாமதமா புரிந்தாலும் நல்லா அழுத்தமா மனசில் பதிஞ்சியிருக்கு... நீங்க தான் என் காதல் கணவன், என் காதல் மன்னன்னு..."

அவளது காதலில் அவன் பிரமித்துப் போனவனாய் அவளை இமைக்காது பார்த்தான்...

"நீங்க கேட்டீங்களே, உங்களைக் கொன்னு பாவ விமோசனம் கொடுக்கச் சொல்லி... அதைக் கொஞ்சம் மாத்தி செய்யலாம்ன்னு இருக்கேன்..."

"எப்படிப் பேபி...?" இன்னமும் பிரமிப்பு மாறாதவனாய் அவன் கேட்டான்...

"தினமும் என் காதலால் உங்க உயிரை எடுத்து பாவ விமோசனம் கொடுக்கலாம்ன்னு இருக்கேன்..." என்று கூறி சிரித்தவளை அவன் மனநெகிழ்வுடன் கண்சிமிட்டாது பார்த்திருந்தாள்...

'யாரோ, இவள் யாரோ...? அன்பினால் திகட்ட திகட்ட என்னைக் கொல்பவளே, நீ யாரோ...? தவம் பண்ணிடவில்லையடி பெண்ணே, வாராது வந்த வரம் நீ, எனக்கெனப் பிரம்மன் வடித்த அதிஅற்புதம் நீ, எத்தனையோ பெண்கள் உலகில் இருந்தாலும், நீயோ

தனிச்சிறப்பு, எனக்கு மட்டுமேயான என் பெண் பிறப்பு!' என்று அவனது மனம் அவளுக்காக ராகம் இசைத்தது...

"இன்ப கதைகளெல்லாம் - உன்னைப்போல்
ஏடுகள் சொல்வதுண்டோ?"
அன்பு தருவதிலே - உனைநேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ?
மார்பில் அணிவதற்கே - உன்னைப்போல்
வைர மணிகளுண்டோ?
சீர்பெற்று வாழ்வதற்கே - உன்னைப்போல்
செல்வம் பிறிதுமுண்டோ?"

கொள்ளும்...!!!

"இப்போ புனிதா எப்படி இருக்கிறாள் நிலா...?"

புனிதா வீட்டிற்குச் சென்றுவிட்டு வந்த மனைவியிடம் சிம்மவிஷ்ணு அக்கறையாய் கேட்டான்...

"நல்லா இருக்கிறாள் மாமா... ஒரு மாசமாகிருச்சு இல்லையா... இப்போ கொஞ்சம் மனசு தேறி படிப்பில் கவனம் செலுத்துகிறாள்..."

"குட்... கேட்கவே சந்தோசமா இருக்கு..."

"மலர் இன்னைக்குப் புனிதாவை பார்க்க வந்திருந்தாங்க...?"

"எதுக்காம்...? புருசன் செஞ்ச தப்புக்கு அவனை அடிச்சு விரட்ட துப்பில்லாம உட்கார வச்சு சாப்பாடு போட்டுக்கிட்டு இருக்கிற அவள் எதுக்குப் புனிதாவை பார்க்க வரணும்...?" அவன் கோபமாய்க் கேட்டான்...

"மாதவன் தப்பு செஞ்சது தெரிஞ்சு அவங்க வீட்டை விட்டு கிளம்பி இருக்காங்க... ஆனா உங்க சித்தப்பா, சித்தி அவங்களோட காலில் விழுந்து குடும்ப மானம் போயிரும்ன்னு கெஞ்சி கூத்தாடி அவங்களைப் போக விடாம தடுத்துட்டாங்களாம்..."

"எங்க பரம்பரையில் இப்படிக் கேடுகெட்ட ஜென்மங்கள்..." அவன் தலையில் அடித்துக் கொண்டான்...

"மாதவன் அரை உயிரா தான் இருக்கான் போல... அதையும் அவங்க தான் என்னிடம் சொன்னாங்க... முடிந்தால் உங்க கிட்ட அவங்களை மன்னிக்கச் சொல்லி சொல்ல சொன்னாங்க..."

"அவங்களை மன்னிக்க நான் யார்...? ஐயோ சாமி, அவங்க சங்காத்தமே வேண்டாம்..." என்று அவன் கேலியாய் இரு கை கூப்பினான்...

"மாமா..." என்று அவள் திடுமென அழைக்க... அவளது அழைப்பு வித்தியாசமாகத் தோன்றவே,

"என்னடி...?" அவன் பதட்டத்துடன் அவள் அருகில் வந்தான்...

நிஷிலா வேகமாக அவனது கையை எடுத்து தனது வயிற்றில் வைத்தாள்... உள்ளே குழந்தைகள் அசைவதை அவன் உணர்ந்தான்... முதன்முதலில் மனைவி ஆதிரையை உண்டாகி இருக்கும் போது அவன் மெய் சிலிர்த்தது அவனுக்கு ஞாபகம் வந்தது...

"பேபி..." விழிகள் மின்ன, முகம் சந்தோசத்தில் பூரிக்க அவன் மனைவியைப் பார்த்தான்...

"பேபிஸ் அசையறது தெரியுதா...?"

"ஆமாம்டி..." என்றவன் அவள் முன் மண்டியிட்டு அமர்ந்து தனது காதினை அவளது வயிற்றின் மீது வைத்தான்...

சத்தம் எதுவும் கேட்காது போனாலும் அவன் குழந்தைகளின் அசைவினை உணர்ந்தான்... மென்மையாய் அவளது வயிற்றில் முத்தமிட்டவன்,

"இப்பவே பேபிஸை பார்க்கணும் போலிருக்கு..." என்று ஆசையுடன் கூறினான்...

"இன்னும் நாலு மாசம் தான்... ஒன்பதாம் மாசம் முடிஞ்சதும் பேபிஸ் பிறந்திருவாங்க... எனக்கென்னமோ நம்ம பேபிஸ் சீக்கிரம் வந்திருவாங்கன்னு தோணுது..."

"அவங்க ரெண்டு பேரும் அவங்க அப்பாவை போல் சுறுசுறுப்பு... அதனால் சீக்கிரம் வந்திருவாங்க..." என்று அவன் சந்தோசத்துடன் சொல்ல...

"ஏன் அம்மா சுறுசுறுப்பு இல்லையா...?" அவள் இடுப்பில் கை வைத்தபடி அவனை முறைத்தாள்...

"அம்மா மாதிரி நல்ல மனசோட, புத்திசாலியா இருப்பாங்க போதுமா...?" அவன் இரு காதுகளையும் பிடித்தபடி

அவளிடம் சரணடைந்தான்...

"அது..." என்று கலகலவெனச் சிரித்தவளை இமைக்காது பார்த்திருந்தான்... இனிவரும் காலங்களில் அவளது சிரிப்பு வாடாது அவன் பார்த்து கொள்வான்...

************************

சரியாக ஏழாம் மாதம் ஆரம்பத்தில் நிஷிலாவிற்கு வளைகாப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது... நிஷிலா வேண்டாம் என்று தடுத்த போதும் சிம்மவிஷ்ணு எல்லோரையும் அழைத்து விழாவை ஆடம்பரமாக நடத்தினான்... சென்னையில் இருந்து பத்ரிநாத், அருந்ததி, பவித்ரன், துளசி, ஆர்யா, சூர்யா அனைவரும் வந்திருந்தனர்... ஆதிரை ஆர்யா, சூர்யாவோடு மிகவும் பிசியாகி போனாள்...

இளஞ்சிவப்பு பட்டுப்புடவையில் தேவதையாய் ஜொலித்த மனைவியை மனையில் அமர வைத்த போது சிம்மவிஷ்ணு இமைக்க மறந்து பார்த்திருந்தான்... அவனது மனம் மனைவியின் அழகில் மயங்கி போனது... கணவனது பார்வையில் பாவையவள் மேலும் செம்மையுற்றதில் அவள் பார்ப்பதற்கு அத்தனை அழகாக இருந்தாள்...

எல்லோரும் வரிசையாக அவளுக்கு நலுங்கு வைத்து வளையல்கள் அணிவித்தனர்... இறுதியில் சிம்மவிஷ்ணு வந்தான்... அவன் சந்தனத்தைத் தனது கைகளில் அள்ளியெடுத்து அவளது இரு கன்னங்களிலும் அழுந்த பூசியபடி,

"எப்படியிருக்கப் பேபி...?" என்று கேட்டான்...

அவன் அப்படிக் கேட்டதிலும் நியாயம் இருந்தது... இந்த இரு நாட்களாக நிஷிலா அவனது கண்களில் படவே இல்லை... அவள் துளசி மற்றும் அவளது அன்னையுடன் சுற்றி கொண்டிருந்தாள்... அவனோ குழந்தைகளை மேய்ப்பதில் பவித்ரனோடு பிசியாக இருந்தான்... அதனால் தான் அவன் இப்படிக் கேட்டது...

அன்று ஆதிரை உண்டாகியிருந்த போது நலுங்கு வைத்த சமயம் சிம்மவிஷ்ணு இப்படிக் கேட்டது, அதற்குத் தான் கோபித்துக் கொண்டது எல்லாம் அவளுக்கு ஞாபகம் வந்தது... அப்போது அவனுக்கான அவளது தேடலுக்கான அர்த்தம் அவளுக்குப் புரியவில்லை... ஆனால் இதோ இப்போது அந்தத் தேடலுக்கான அர்த்தம் அவளுக்கு நன்றாகப் புரிந்தது... புரிந்த விசயம் மனதினை தாக்கியதில் அவள் கண்கலங்க அவனைப் பார்த்திருந்தாள்...

"என்ன பேபி...?" அவளது பார்வையில் தெரிந்த வேறுபாட்டினை உணர்ந்தவனாய் அவன் அவளது தோள்களைப் பற்றி உலுக்கினான்... அடுத்த நொடி அவள்,

"மாமா..." என்றழைத்தபடி அவனது இடுப்பை கட்டி கொண்டாள்...

உறவினர்கள் எல்லோரும் சுற்றி நிற்கும் இந்த வேளையில் மனைவியின் செய்கையில் அவன் சங்கடமாய் நெளிந்தான்... ஆனாலும் அவளை விட்டு விலக முற்படவில்லை... தானும் அவளைத் தனது வயிற்றோடு சேர்த்து அணைத்துக் கொண்டு,

"ஹேய் என்னடி இது...?" என்று கேட்டவனின் வார்த்தைகள் அத்தனை நெகிழ்வுடன் வந்தது... பதில் கூறாது அவள் அவனது வயிற்றில் இன்னமும் ஆழமாய் முகம் புதைத்து கொண்டாள்...

"எல்லோரும் பார்க்கிறாங்க பேபி..." என்றதற்கும் அவள் அசைந்து கொடுக்கவில்லை...

"அம்மு பார்க்கிறாள்டா..." மகளைப் பற்றிக் கூறியதும் அவள் விலகி அமர்ந்தாள்...

"என்னாச்சுடி உனக்கு... ஆர் யூ ஓகே...?" என்று கேட்க...

"ம், ம்..." என்று பதில் அளித்தவளின் கன்னத்தைச் சிறுசிரிப்புடன் தட்டியவன் அவளது நெற்றியில் மென்மையாய் இதழ் பதித்துவிட்டு விலகினான்...

ஆனால் அவன் தனது பார்வையை அவள் மேலிருந்து விலக்கி கொள்ளவில்லை... அவளும் தனது பார்வையை அவனிடம் இருந்து விலக்கி கொள்ளவில்லை... மெல்ல மெல்ல அவளது பார்வைக்கான அர்த்தம் அவனுக்குப் புரிய ஆரம்பித்தது... புரிந்த விசயமோ அவனைச் சிறகில்லாது விண்ணில் பறக்க செய்தது... இத்தனை நாளாய் அவன் அவளிடம் எதிர்பார்த்த பார்வை இது... அவளது காதலுக்காக அவன் செய்தது எல்லாம் வீண் போகவில்லை... இறுதியில் பாவையவள் தனது கடைக்கண் பார்வையை அவன் புறம் திருப்பிவிட்டாள்...

மனதில் மகிழ்ச்சி பொங்க யாரும் பார்க்காத தருணம் அவன் அவளைப் பார்த்துக் கண்சிமிட்டினான்... அவளோ வெட்கத்தில் முகம் சிவந்தபடி தலைகுனிந்து கொண்டாள்... மனைவியவளின் வெட்கத்தில் அவனும் வெட்கம் கொண்டு தலை கோதியபடி அவளைப் பார்த்து நிறைவாகப் புன்னகைத்தான்... அழகான காதல் நாடகம் பார்வையால் அங்கே இனிமையாக அரங்கேறியது...

மதிய உணவின் போது மீனாட்சி மருமகளைத் தனியே அழைத்து, "நீ ரூமுக்கு போம்மா... நான் சாப்பாடு கொடுத்து விடறேன்..." என்க...

"நான் இங்கேயே சாப்பிடறேன் அத்தை..."

"ஒருத்தர் கண்ணு மாதிரி ஒருத்தர் கண்ணு இருக்காது நிஷா... போம்மா..."

அவர் சொன்னதைத் தட்ட முடியாது அறைக்குள் வந்தமர்ந்தவள் தனக்குள் ஆழ்ந்து போனாள்... இத்தனை நாளாய் கணவனிடம் தான் என்ன எதிர்பார்த்தோம்? என்பது இப்போது அவளுக்குத் தெள்ளத்தெளிவாகப் புரிந்து போனது... மஞ்சள் கயிறு அவளிடத்தில் மாயாஜால வித்தையைக் காட்டியிருந்தது... சற்று முன் கண்சிமிட்டிய கணவனது செய்கையை நினைத்து அவள் முகம் சிவந்தவளாய் அதையே எண்ணி கொண்டு அமர்ந்திருந்தாள்...

அந்நேரம் அறைக்கதவு திறக்கப்பட்டது... சட்டென்று அவள் முகத்தைச் சீராக்கி கொண்டு திரும்பி பார்த்தாள்... சிம்மவிஷ்ணு தான் அவளுக்கான உணவு தட்டுடன் உள்ளே நுழைந்தான்... கணவனைக் கண்டதும் மீண்டும் அவளது விழிகளில் காதல் வழிந்தது...

"என்ன பேபி, பார்வை எல்லாம் பலமாயிருக்கு...?" என்று கேட்டபடி அருகில் வந்தவன் கையிருந்த தட்டை மேசை மீது வைத்தான்...

அவள் பதில் பேசாது அவனை அமைதியாகப் பார்த்தாள்... அவனோ குனிந்து அவளது முகத்தை நிமிர்த்தி அவளது விழிகளுக்குள் விழி கலந்தவன் உணவு தட்டில் இருந்த ஜாங்கிரியை எடுத்து அவளது வாயில் வைத்தான்... அவள் புரியாது வாயில் ஜாங்கிரியோடு அவனைப் பார்த்து விழித்தாள்...

அவன் பதில் கூறாது அவளது இதழோடு தனது இதழை பொருத்தி ஜாங்கிரியோடு அவளது இதழையும் சேர்த்துச் சுவைத்தான்... ஜாங்கிரியின் சீனிப்பாகுடன் அவளது இதழ் தேனையும் சேர்த்து பருகியவன் அது தந்த போதையில் முற்றிலும் மயங்கி போனான்... மது உட்கொண்டவனுக்கு மட்டும் போதை ஏற்படவில்லை... அமுதசுரபியாய் மதுவை அள்ளி தந்தவளுக்கும் போதை ஏற்பட்டு அவனிடம் மகுடிக்குக் கட்டுப்படும் பாம்பு போல் மயங்கி நின்றாள்... அவனது செயலுக்கு ஏற்றார் போல் இசைந்து கொடுத்தாள் அவள்...

அவன் நீண்ட நேரம் கழித்தே மனைவியின் இதழ்களை விடுவித்தான்... அவள் கணவனது முகம் காண முடியாது நாணத்தில் தலைகவிழ்ந்தாள்... புடவை முந்தானையை இரு கைவிரல் கொண்டு முடிச்சிட்டபடி இருந்தவளின் முகத்தை நிமிர்த்தியவன்,

"உன் கண்ணில் காதல் தெரிந்ததால் நீ எனக்குச் சொல்லவே வேண்டியது இல்லைன்னு நான் சொன்னது உனக்கு ஞாபகம் இருக்கா...?"

ஆமென்பது போல் அவள் மெல்ல தலையசைத்தாள்... அதை ரசனையுடன் பார்த்தவன்,

"இப்போ உன் கண்ணில் எனக்கான காதல் வழியுதடி... நான் இத்தனை நாளா உன்னிடம் எதிர்பார்த்த காதல் திகட்ட திகட்ட வழியுதடி..." கண்ணில் மயக்கத்தோடு, வார்த்தையில் கிறக்கத்தோடு கூறியவன்,

"இந்த நிமிசம் என்னோட பஞ்சுமிட்டாயை ரசிச்சு, ருசிச்சு பார்க்க ஆசையா தான் இருக்கு... ஆனா என்னோட அகோர பசிக்கு ஃபாஸ்ட் ஃபுட் எல்லாம் போதாது... ஃபுல் மீல்ஸ் தான் வேணும்..."

அவள் புரியாது விழிகளை உருட்டி கொண்டு அவனைப் பார்த்தாள்... அவளது பாவனையில் மனம் கவரப்பட்டவனாய் அவளது விழியில் முத்தமிட்டவன்,

"குழந்தைகள் பிறக்கட்டும்டி... அதுக்குப் பிறகு உன்னைக் கவனிச்சிக்கிறேன்..." என்றவனின் வார்த்தையின் அர்த்தம் அவளுக்கு முழுதாகப் புரிந்ததில்,

"மாமா..." என்று சிணுங்கி கொண்டே அவனது சட்டையைப் பிடித்திழுத்து அவனது வயிற்றில் முகம் புதைத்து கொண்டாள்... அவன் அட்டகாசமான சிரிப்புடன் அவளை அணைத்துக் கொண்டான்...

அன்றிரவு மனைவி, மகளுடன் தனித்து இருக்கும் போது சிம்மவிஷ்ணு மகளிடம், "தங்கச்சி பாப்பாங்களுக்கு என்ன பெயர் வைக்கலாம்...?" என்று கேட்க... அவனது மனையாளோ அவனை முறைத்து பார்த்தாள்...

"எதுக்குடி இப்படி முறைக்கிற...? எனக்குப் பயமாயிருக்கு..." என்று அவன் போலியாகப் பயந்தபடி மகளின் பின்னே ஒளிந்தான்...

"ம்மா, அப்பா பாவம்மா... ப்ளீஸ்..." ஆதிரை தந்தைக்காகக் கெஞ்சியது...

தன்னிடம் கோபம் கொண்டு அன்னை அடிக்க வரும் போது தந்தை இப்படித்தான் அன்னையிடம் 'ப்ளீஸ்' போட்டு அவளைக் காப்பாற்றுவான்... அதையே மகளும் பின்பற்றினாள்...

"அப்படியே நான் உங்கப்பாவை அடிச்சிட்டாலும் போ அம்மு..." என்று நிஷிலா இடுப்பை பிடித்தபடி கட்டிலில் சாய்ந்தமர்ந்தாள்...

"பொண்டாட்டி அடியில் இருந்து தப்பிப்பதற்கு அடுத்தடுத்து அவளுக்குப் பிள்ளைகளைக் கொடுத்திடணும்..." என்று விளம்பர பாணியில் சிம்மவிஷ்ணு விசமத்துடன் கூற... அதற்கும் அவனது மனையாள் அவனைக் கோபத்துடன் முறைத்தாள்...

"அம்முவை வச்சிட்டு என்ன பேச்சு இது...?" என்று அவள் அவனைச் செல்லமாக அதட்ட...

"சாரி..." என்று தனது இரு காதுகளையும் பிடித்தபடி அவன் மன்னிப்பு வேண்டினான்...

"சரி எதுக்கு முறைச்ச...? அதைச் சொல்லு..."

"அதுயென்ன பெண் குழந்தைங்கன்னு முடிவு பண்ணிட்டீங்களா...? ஏன் ரெண்டும் பையனா இருக்கக் கூடாதா...?"

"எனக்குப் பொண்ணு தான் வேணும்..."

"எனக்குப் பையன் தான் வேணும்..."

"சரி, உனக்கும் வேண்டாம், எனக்கும் வேண்டாம்... ரெண்டுக்குமே பெயர் செலக்ட் பண்ணுவோம்... எந்தக் குழந்தை பிறக்குதோ அந்தப் பெயரை வைத்துவிடலாம்..." இறுதியாக அவன் கூற... அதையே அவர்கள் இருவரும் ஆமோதித்தனர்...

"அக்ஷிதா, அக்ஷரா... ஆகாஷ், ஆதர்ஷ்..." ஆதிரை தனது உடன்பிறப்புக்களுக்குப் பெயர் தேர்ந்தெடுத்து கொடுத்தாள்...

அவனுக்கும், அவளுக்கும் அந்தப் பெயர்கள் மிகவும் பிடித்திருந்தது... விழிகளில் கனவு மின்ன இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்...

நாட்கள் வேகமாக உருண்டோடியது... சிம்மவிஷ்ணு, நிஷிலா வாழ்க்கை தொய்வில்லாது சந்தோசமாய், செல்ல சீண்டல்களுடன், சண்டைகளுடன் இனிமையாகச் சென்றது... முதலில் வாழ்க்கை எந்தளவிற்குத் துன்பத்தை அளித்ததோ... அதற்கு எல்லாம் சேர்த்து வைத்து இப்போது அளவிற்கு அதிகமாய் இன்பத்தை அளித்தது... இருவரும் மிகவும் சந்தோசமாக இருந்தனர்... அவர்களைப் போன்று அந்நியோன்யமான ஜோடி எவருமில்லை என்று அனைவரும் பேசினர்... அவர்களது காதலை போன்றே அவர்களது குழந்தைகளும் வளர்பிறையாய் வளர்ந்து வந்தனர்...

ஒன்பதாம் மாதம் முடியும் தறுவாயில் நிஷிலாவிற்குப் பிரசவ வலி ஏற்பட்டது... அவளுடனே அவளுக்கு ஆறுதல் சொல்லியபடி கூடவே இருந்தான் சிம்மவிஷ்ணு... அவளோ வலி தாங்காது அவனைத் திட்டினாள், அடித்தாள்...

"ஏன்டி, நீ ஒரு டாக்டர்... நீயே இப்படி அழுது கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணலாமா...? பார்க்கிறவன் தப்பா நினைக்கப் போகிறான்..."

மனைவி படும் அவஸ்தையைக் கண்டு விழியும், மனமும் கலங்கினாலும் சிம்மவிஷ்ணு அந்த நேரத்திலும் அவளைச் சீண்டி அவளைச் சகஜமாக்க முயன்றான்...

"என்ன அட்வைசா...? உன்னைக் கொன்னுருவேன்டா... பிரசவ வலியை அனுபவிச்சு பாரு... அப்போ தெரியும்... டாக்டராவது, மண்ணாங்கட்டியாவது... முதலில் நான் உணர்வுள்ள ஒரு மனுசிடா..." என்று அந்த வலியிலும் அவள் மறவாது அவனைத் திட்டி தீர்த்தாள்...

அவளது திட்டை எல்லாம் ஏதோ காதல் பொன்மொழிகள் கேட்டது போல் அவளைப் பரவச புன்னகையுடன் பார்த்தவன், "உனக்காக வலி மட்டும் இல்லைடி...

உன்னையே தாங்கிக்க நான் தயாரா இருக்கேன்..." என்று காதலோடு கூற... அவள் விழிகலங்க அவனது கைகளை இறுக பற்றிக் கொண்டாள்...

அவன் நினைத்தது போல் இரண்டும் பெண் குழந்தைகளாகப் பிறந்தது... அதுவும் அவனைப் போன்ற தோற்றத்துடன்... அதைக் கண்டு அவன் மகிழ்ந்தான் என்றால், அவளோ முகத்தைத் தூக்கி வைத்து கொண்டாள்...

"ஒரு பையன் பிறந்திருக்கலாம்..." என்று அவள் மூக்கை உறிஞ்ச...

"இது தான் உன் கவலையா...? அடுத்து பையனுக்கு முயற்சி பண்ணலாம்... டோன்ட் வொர்ரி..." என்று அவன் அவளது காதில் ரகசியம் பேச...

"என்னது...?" அவள் திகைத்து போய் அவனைப் பார்க்க...

"மூணு போதாதுடி... இன்னும் மூணு வேணும்... அதுவும் இரட்டையாக..." என்று அவன் குறும்பாய் கண்சிமிட்டி சிரித்தான்...

"இத்தோடு போதும் மாமா..." என்று அவள் அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள்...

"போதும்டா... இதோடு போதும்..." என்று அவளை அணைத்து நெற்றியில் முத்தமிட்டவன்,

"நீ படுற கஷ்டத்தை என்னால் கண் கொண்டு பார்க்க முடியலைடி..." என்று விழி கலங்கியவனை அவள் ஆறுதலாக அணைத்து கொண்டாள்... அந்தக் கணம் அவளது மனதில் எல்லையில்லா காதல் பொங்கி வழிந்தது என்றால் மிகையில்லை...

இரு குழந்தைகளுக்கும் ஒரு நல்ல நாளில் அக்ஷரா, அக்ஷிதா என்று பெயர் சூட்டினார்கள்... இரட்டை குழந்தைகள் என்பதால் குழந்தைகளைப் பார்க்கவென

அருந்ததி அங்கே தங்கி கொண்டார்... மீனாட்சி, அருந்ததி இருவரும் இரு குழந்தைகளைப் பார்த்து கொண்டனர்...

********************

மூன்று மாதங்கள் கழித்து...

சிம்மவிஷ்ணு தங்களது அறையில் சோபாவில் அமர்ந்து மும்முரமாகக் கோப்பு ஒன்றை பார்த்துக் கொண்டிருந்தான்... அப்போது நிஷிலா உள்ளே நுழைந்தாள்... அவளைத் திரும்பி பார்த்தவன் அவளின் பின்னாடி பார்த்தபடி,

"எங்கே பிள்ளைங்களைக் காணோம்...?" என்று கேட்க...

"மூணு பேரும் அம்மா, அத்தை கூடத் தூங்கிட்டாங்க..."

"எதுக்கு...? அவங்க இல்லாம எனக்குத் தூக்கம் வராதுன்னு உனக்குத் தெரியாதா...? இன்னைக்குத் தூக்கம் போச்சு..." என்று சலித்துக் கொண்டவன் மீண்டும் கோப்பில் கவனத்தைப் பதித்தான்...

"ஏன் தூங்கிறதுக்குப் பொண்ணுங்க தான் வேணுமா...? பொண்ணோட அம்மா வேண்டாமாக்கும்... பிள்ளைங்க வந்த பின்னாடி என்னைக் கண்டுக்கிறதே இல்லை..." என்று அவள் முணுமுணுத்துக் கொண்டே இரவு உடையை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் சென்றாள்...

அவள் கோபம் கொள்வதிலும் அர்த்தம் இருக்கிறது... இரவில் உறங்கும் போது அவனின் ஒரு பக்கம் ஆதிரையும், மறுபக்கம் அக்ஷிதாவும் படுப்பார்கள்... அக்ஷராவுக்கு மட்டும் தந்தையின் நெஞ்சு சிம்மாசனம் வேண்டும்... அதை விட்டு கீழே இறக்கினால் போதும் அம்மணி வீலென்று அலறி எல்லோரின் தூக்கத்தையும் கெடுத்துவிடுவாள்... அதனால் அக்ஷராவை தனது நெஞ்சில் போட்டு தட்டி கொடுத்து தூங்க வைப்பான் சிம்மவிஷ்ணு... இந்த மூன்று மாத வயதில் அவள் தந்தையின் கழுத்தை கட்டி கொண்டு அதில் முகம் புதைத்துக் கொண்டு தூங்குவாள்... இதை எல்லாம் பொறாமையுடன் பார்த்தபடி தள்ளி

படுத்திருப்பாள் நிஷிலா... இன்று எப்படியோ மகளைச் சமாளித்து அன்னையிடம் தள்ளிவிட்டு கணவனைத் தேடி வந்துவிட்டாள் அவள்... அவனோ புரியாத தத்தியாக இருக்கிறானே...

"நிலா, இதுக்கு மேல நீ பொறுமையா இருக்கிறது சரியில்லை... பொங்கி எழு..." குளியலறை கண்ணாடி பார்த்து அவள் தனக்குத் தானே சொல்லி கொண்டாள்...

அவள் வெளியில் வந்த போது அவன் இன்னமும் கையிலிருந்த கோப்பில் தலையைப் புதைத்திருந்தான்... அதைக் கண்டு அவள் கோபத்தோடு அவன் அருகில் வந்தாள்... அவளது வரவினை உணர்ந்து அவன்,

"குட்நைட் பேபி..." என்று அவளைப் பார்த்து கூறி புன்னகைத்தவன் மீண்டும் தனது வேலையில் கவனமானான்...

'அடேய் உன்னை எல்லாம் வச்சு செய்யணும்டா...' மனதினுள் கோபமாய்க் கறுவி கொண்டே அவன் அருகில் சென்றவள் எப்போதும் போல் அவனது கம்பீரமான தோற்றத்தில் மனம் மயங்கி தனது கோபத்தை விட்டொழித்தாள்...

இப்போது எல்லாம் அவள் மனதில் பொங்கும் காதலை கட்டுப்படுத்த அவளுக்குத் தெரியவில்லை... அவன் வேண்டும் என்று அவளது ஒவ்வொரு அணுவும் துடிப்பதை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை... ஆனால் அவனோ அவளது நினைவு இல்லாது சாமியார் போன்று மகள்களுடன் சுற்றிக் கொண்டிருக்கிறான்... அவள் மனதில் பொங்கிய காதலுடன் கணவன் பின்னால் சென்று அவனது கழுத்தை கட்டி கொண்டாள்... அதில் ஆச்சிரியப்பட்டுப் போனவன் அவளைத் திரும்பி பார்த்தான்...

"என்னடி...?" அவனது வார்த்தைகளும் குழைந்து வந்ததோ...!

"ஒன்றா ரெண்டா ஆசைகள்
எல்லாம் சொல்லவே ஒரு நாள் போதுமா
அன்பே... இரவை கேட்கலாம்...
விடியல் தாண்டியும்... இரவே நீளுமா
என் கனவில்... நான் கண்ட... நாளிதுதான்... கலாப காதலா
பார்வைகளால்... பலகதைகள் பேசிடலாம்... கலாப காதலா"

தனக்காக மனைவி பாடிய பாடலில் அவனது விழிகள் வியப்பில் இன்னமும் பெரிதாய் விரிந்தது... அவளோ அவனது வியப்பை ரசித்தபடி அவனது காதருகில் குனிந்து ரகசியமாய்ப் பாடி கொண்டிருந்தாள்... தனது மனதின் ஆசையை ஒவ்வொன்றாய் அவள் கூற... அவனோ கையிலிருந்த கோப்பை மூடி தள்ளி வைத்துவிட்டு அவளது கைகளை முன்னோக்கி இழுத்து அவளைத் தன் முதுகில் தாங்கி கொண்டான்... அவளும் அவனது முதுகில் சுகமாய்ச் சாய்ந்து கொண்டு பாடலை தொடர்ந்தாள்...

"பெண்களை நிமிந்தும் பார்த்திடா - உன் இனிய கண்ணியம் பிடிக்குதே
கண்களை நேர பாத்து தான் - நீ பேசும் தோரணை பிடிக்குதே
தூரத்தில் நீ வந்தாலே என் மனசில்... மழையடிக்கும்
மிகபிடித்த...பாடலுன்றை உதடுகளும்... முணுமுணுக்கும்...
மந்தகாசம் சிந்தும் உந்தன் முகம்
மரணம் வரையில் என் நெஞ்சில் தங்கும்
உனது கண்களில் எனது கனவினை காண போகிறேன்..."

அவளது மனதினை அந்தப் பாடல் எடுத்துரைத்ததில் அவன் அவள் மீது உன்மத்தம் பிடித்தவன் போலானான்... அவன் இமைக்காது அவளைப் பார்த்திருந்தான்... அவனது விழிகளில் அத்தனை காதல் வழிந்தது... அவனது காதலை சொட்டு சொட்டாய் தனது மனதிற்குள் சேமித்து வைத்து கொண்டாள் அந்தப் பாவையவள்...

அவர்கள் இருவரும் காதல் கொண்டு மணக்கவில்லை... காலத்தின் கட்டாயத்தில் மணந்து வாழ்க்கையை ஆரம்பித்தவர்கள்... அத்தனை பழிவெறியிலும் ஒருவர் மீது

ஒருவர் கொண்ட நம்பிக்கை இதோ இப்போது அவர்களைக் காதலாய்ப் பிணைத்திருந்தது...

"பெர்மிசன் கிராண்ட்டட் மாமா..."

கணவனைக் கண்டு கண்சிமிட்டினாள் நிஷிலா... அவளது விருப்பம் அறிந்தவனின் முகம் சந்தோசத்தில், புன்னகையில் விரிந்தது...

"அடிங், என் டயலாக்கை என் கிட்டேயேவா...?" என்றபடி சோபாவில் இருந்து எழுந்தவன் அவளை அடிக்க வர... அவளோ கலகலவெனச் சிரித்தபடி ஓடினாள்... பின்னாடியே துரத்தி சென்று அவளைத் தனது கைகளில் ஏந்தி கொண்டவன் அவளோடு தானும் சேர்ந்து படுக்கையில் விழுந்தான்...

வேகமாய் மூச்சு வாங்கிக் கொண்டிருந்தவளின் முகம் அருகே தனது முகத்தினைக் கொண்டு சென்றவன், "தென்...?" என்று ரகசிய குரலில் கேட்க...

"தென்...?" அவனைப் போலவே ரகசியமாய்க் கேட்டவள் அவனை இன்னும் அருகில் இழுத்து,

"சந்தியா கால மேகங்கள் - உன் வானில் ஊர்வலம் போகுதே
பார்க்கையில் ஏனோ நெஞ்சிலே - உன் நடையின் சாயலே தோணுதே
நதிகளிலே...நீராடும்... சூரியனை... நான் கண்டேன்
வேர்வைகளின் துளிவழிய நீ வருவாய்... என நின்றேன்
உன்னால் என் நெஞ்சில் ஆணின் மனம்
நானும் சொந்தம் என்ற எண்ணம் தரும்
மகிழ்ச்சி மீறுதே... வானத்தைத் தாண்டுதே சாகத் தோணுதே

அன்பே... இரவை கேட்கலாம்... இரவை கேட்கலாம்...
விடியல் தாண்டியும்... இரவே நீளுமா... இரவே நீளுமா
என் கனவில்... நான் கண்ட... நாளிதுதான்... கலாப காதலா

பார்வைகளால்... பலகதைகள் பேசிடலாம்... கலாப காதலா" என்று பாட...

"ஐ லவ் யூ பேபி..." சிம்மவிஷ்ணு மனதின் காதலை சொல்லியபடி தாபமாய் மனைவியினுள் புதைந்தான்...

"ஐ லவ் யூ மாமா..."

முதன்முறையாய் காதலை வாய் வார்த்தையில் கூறிய மனைவியவளை நிமிர்ந்து பார்த்தவன் அடுத்த நொடி காதலை சொல்லிய அவளது இதழ்களைச் சிறை செய்திருந்தான்... அவளும் முழுமனதோடு அவனுடன் ஒன்றினாள்... அப்போதும் அவன் சற்று நிதானித்து அவளிடம்,

"உனக்கு என்னுடைய தொடுகை எதுவும் அருவருப்பா இருக்கா பேபி...? பிடிக்கலைன்னா சொல்லுடா..." என்று கேட்க...

அவனது மனநிலையை அவள் உணர்ந்தவளாய், "இரண்டு மாத கால வாழ்க்கை எனக்குக் கொஞ்சமும் ஞாபகம் வரலை... இடையில் நாம் வாழ்ந்த மூன்று மாத காலச் சந்தோச வாழ்க்கை தான் ஞாபகத்தில் இருக்கு... அப்போ சூட்டுப் புண் பார்த்து நீங்க அழுதது இதெல்லாம் தான் என் நினைவில் இருக்கு..." என்று அவள் கூற...

"இவ்வளவு ஞாபகம் இருக்கிறவள் தான் பிரிந்து போனியா...?" என்று அவன் செல்லமாய் அவளிடம் கோபித்துக் கொண்டான்...

"இதோ இப்போது உங்க கையில் நான் இருப்பது நிஜம்... இதை மட்டும் பாருங்க..."

"நீயே சொல்லிட்ட பிறகு பார்க்காம இருக்க முடியுமா...? பார்த்திட வேண்டியது தான்..." என்றவனின் பார்வை கொஞ்சம் கொஞ்சமாய்க் கணவனின் பார்வையாக மாற ஆரம்பித்தது...

அவள் வெட்கம் தாங்காது அவனது நெஞ்சிலேயே அடைக்கலம் புகுந்தாள்... அவன் சிரித்தபடி அவளை நோக்கி குனிந்தான்...

இருவருமே மனதில் எழுந்த காதலுடன் இணைந்தனர்... முதல் தடவை இணைந்தது போல் தேவைக்கு என்று இல்லாமல், இரண்டாவது தடவை இணைந்தது போல் அவனுக்காக என்று இல்லாமல் இருவருமே தங்களது காதலை மற்றவரிடம் தேடி, தேடி தங்களுக்குள் காதலாய் மூழ்கி போயினர்...

சிம்மவிஷ்ணுவின் வன்மை மற்றும் மென்மை கலந்த காதலுக்குப் பெண்ணவளிடம் இருந்து வன்மை நிறைந்த காதலே பதிலாகக் கிடைத்தது... இதுநாள் வரை கூடலில் காதலை கொஞ்சமும் அறிந்திராதவள் இப்போது கணவன் காட்டிய காதலில் மனம் கனிந்து தனது காதலை அவனிடத்தில் எப்படிக் காட்டுவது என்று தெரியாது அவனிடம் வன்மையாய் உரைத்தாள், தனது உயிர்க்காதலை...

அன்றைய இரவு அப்படியே நீளாதோ? என்று இரு காதல் நெஞ்சங்களும் ஏங்கியது... காலம் கடந்து, வயது கடந்து வந்த காதல் அவர்களைப் பக்குவமாய்ப் பிணைத்திருந்தது...

"காதல் தீவிரவாதி..." கூடல் முடிந்து மனைவியைப் பார்த்து விசமமாய்க் கூறினான் சிம்மவிஷ்ணு...

"நீங்க இத்தனை நாளா, இத்தனை காதலை எங்கே ஒளிச்சு வச்சிருந்தீங்க...? எனக்கு எப்படி என் மனசை உங்க கிட்ட சொல்றதுன்னு தெரியலை... அதான்..." நிறைவாய் புன்னகைத்தபடி கூறியவளின் விழியில் இருந்து கண்ணீர் வடிந்தது...

"இதுக்கும் அழுகையாடி...?" அவன் அவளைச் செல்லமாய் அதட்டியபடி கண்ணீரை துடைத்துவிட்டான்...

"எனக்குச் சந்தோசத்தில் அழணும் போல் தோணுது... இப்படியொரு நிறைவான வாழ்க்கை வாழணும்ன்னு எல்லாம் நான் நினைச்சு ஏங்கியது இல்லை... ஆனா அதை நிறைவேத்திய உங்களுக்கு நான் தேங்க்ஸ் சொல்லியே ஆகணும்..."

"தேங்க்ஸ் இப்படிச் சொல்ல கூடாதே என் நிலா பெண்ணே..." என்றவன் மீண்டும் அவளது முகம் நோக்கி குனிந்தான்...

"எல்லோரும் என்னை நிஷா, நிஷின்னு தான் கூப்பிடுறாங்க... ஆனா நீங்க மட்டும் ஏன் வித்தியாசமா நிலான்னு கூப்பிடுறீங்க...?"

"நிஷின்னா இரவு, இருள்ன்னு அர்த்தம்... ஏனோ இந்த அழகான மதி முகத்தைப் பார்த்து அப்படிக் கூப்பிட மனசு வரலைடி... அதான் நிலான்னு கூப்பிட்டேன்... அதை விட உன் வீட்டாளுங்க எல்லாம் அப்படிக் கூப்பிட்டது வேறு கடுப்பாயிருந்தது..." என்றவன் அவளது முகத்தைப் பார்த்து,

"அது அப்போ... இப்போ இல்லை..." என்று அவசரமாய்ச் சொன்னான்... அவள் புரிந்தது என்பது போல் தலையாட்டினாள்...

"அது போல் தான் உன்னை விபச்..." வேதனையுடன் மேலே கூற போனவனின் வாயை கை கொண்டு மூடியவள்,

"இப்போ எதுக்கு இந்தப் பேச்சு...?" என்று செல்ல கோபம் கொள்ள...

"என் மனசை உறுத்தும் விசயத்தை நான் சொல்லியே ஆகணும் பேபி..."

"ப்ச்..." என்று சலித்தபடி அவள் அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்...

"ஒவ்வொரு தடவை உன்னைத் தொடும் போது எல்லாம் என் மனசில் அப்படியொரு நிறைவு, சந்தோசம் வரும்...

மனசு லேசாகி பறக்கிற மாதிரி ஒரு உணர்வு வரும்... அது என்னன்னு சொல்ல தெரியலை... உன்னை எனக்குப் பிடிக்காது... ஆனா நீ கொடுத்த அந்த உணர்வு எனக்கு ரொம்பப் பிடிச்சியிருந்தது... அதை உன் கிட்ட வெளிப்படுத்திவிடக் கூடாதுன்னு தான் நான் அடிக்கடி அப்படிச் சொல்லி உன்னை என் கிட்ட இருந்து தள்ளி வைப்பேன்..."

"நினைச்சேன், இப்படி ஏதாவது மொக்கை காரணம் இருக்கும்ன்னு..." என்று அவள் அலுத்துக் கொள்ள...

"என்னடி இப்படிச் சொல்ற...?" அவன் பாவமாக அவளைப் பார்த்தான்...

"நான் என்னமோ உங்களை வில்லன் ரேன்ஜ்க்கு நினைச்சிருந்தேன்... கடைசியில் பார்த்தா நீங்க ஒரு காமெடி பீஸ் மாமா..."

"நானாடி காமெடி பீசு... உன்னை என்ன செய்கிறேன் பார்..." கோபத்தோடு அவளது முகம் நோக்கி குனிந்தவனின் கோபம் எல்லாம் அவளது கண்ணில் வழிந்த காதலில் காணாமல் போனது...

"மயக்கிறடி..." என்று கூறியவன் அவளிடம் மயங்கி போயிருந்தான்...

"நீங்க என் ஹீரோ மாமா..."

காதலுடன் கூறியவள் காமத்தோடு அவனது இதழ்களைத் தன்வசப்படுத்திக் கொண்டாள்... மீண்டும் ஒரு காதல் நாடகம் அங்கே இனிமையாக அரங்கேறியது...

**********************

மூன்று வருடங்கள் கழித்து...

"மாமா..."

மனைவி கத்திய கத்தலில் அவன் என்னவோ ஏதோவென்று அலறியடித்துக் கொண்டு வந்தான்...

அவனது இரு கையிலும் இரட்டையர்கள் அக்ஷரா, அக்ஷிதாவும் இருந்தனர்...

"என்னடா...?"

"நாப்கின் வாங்க மறந்துட்டேன்... போய் வாங்கிட்டு வர்றீங்களா...?"

"அக்ஷி, அக்ஷூ தான் நாப்கின் யூஸ் பண்றது இல்லையே... ரெண்டு தங்கங்களும் சமத்தா டாய்லெட் யூஸ் பண்றாங்களே..." அவன் கூறியதும்... அக்ஷரா அவனது கழுத்தை கட்டி கொண்டு,

"அக்ஷூ குட் கேர்ள்..." என்று கூறியது...

"நானும்... அக்ஷியும் குட் கேர்ள்..." என்றது மற்ற வாண்டு...

அதைக் கண்டு தலையிலடித்துக் கொண்ட நிஷிலா, "இது அதில்லை மாமா... நம்ம அம்முவுக்கு வாங்கிட்டு வர சொன்னேன்..."

மனைவி கூறியதும் அவனுக்கு விசயம் புரிந்து போனது... போன மாதம் பெரிய பெண்ணாகிய தனது மூத்தமகளுக்கு என்ன தேவையென்று...

"இதை எல்லாம் ஸ்டாக் வச்சியிருக்க மாட்டியா...?" அவன் சிடுசிடுத்தான்...

"எப்போதும் வச்சிருப்பேன்... இந்தத் தடவை தான் மறந்துட்டேன்..." தவறு செய்துவிட்ட சிறுகுழந்தை போல் விழித்த மனைவியைக் கண்டு திட்டுவதற்கு மனம் வராது,

"வேலை செய்றவங்க கிட்ட எழுதி கொடு... வாங்கிட்டு வருவாங்க..." என்று அவன் சமாதானமாகக் கூற...

"ஏன் நீங்க போய் வாங்கிட்டு வர மாட்டீங்களா...?" அவள் இடுப்பில் கை வைத்துக் கொண்டு முறைத்தாள்...

"நானா...?" திகைப்பாய் கேட்டான்...

"நீங்க தானே அம்முவோட அப்பா...? அதில் என்ன தப்பிருக்கு...? நீங்க மூணு பெண் குழந்தைகளுக்கு அப்பா மிஸ்டர். சிம்மவிஷ்ணு... இதெல்லாம் இயற்கையான விசயம்... இதுக்கு ஏன் நீங்க இவ்வளவு தூரம் யோசிக்கிறீங்க...?"

அவளது வார்த்தையில் அவன் மெல்ல திகைப்பில் இருந்து வெளியில் வந்தவன், "எனக்கு மூணு பெண் குழந்தைகள் இல்லைடி பெண்ணே... நாலு..." என்று அவளது நெற்றியோடு முட்டியவன்,

"நாலாவது அறுந்தவாலு நீயடி..." என்று கூறி சிரித்தான்... தந்தையைத் தொடர்ந்து அக்ஷிதா, அக்ஷரா இருவரும் அன்னையின் நெற்றியில் முட்டி விளையாடினர்...

மனைவி கூறியதை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தவன் தனது வேலைகளில் ஆழ்ந்து போனான்... ஐந்து நிமிடத்தில் ஆதிரை அவன் முன்வந்து நின்றாள்...

"என்னடா அம்மு...?" என்று கேட்டபடி அவன் தனது இரு கைகளையும் விரித்து மகளை அழைத்தான்... ஓடி வந்து தந்தையின் கரங்களில் புகுந்து கொண்ட ஆதிரை அவனது கன்னத்தில் முத்தமிட்டு,

"தேங்க்ஸ்ப்பா... ஐயம் ரியலி ஃப்ரவுட் ஆஃப் யூ..." என்று பெருமையோடு தந்தையைப் பார்த்தாள்...

அவன் எத்தனையோ முறை விலையுயர்ந்த பல பொருட்களை மகளுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறான்... அப்போது எல்லாம் ஆதிரை இது போல் நன்றியுரைப்பாள் தான்... ஆனால் இப்போது இந்த நன்றி அவனுக்குச் 'சம்திங் ஸ்பெசல்'ஆக இருந்தது... அவன் மனநெகிழ்வுடன் மகளை அணைத்துக் கொண்டு,

"அடுத்த முறை அப்பா முன்னாடியே ரெடியா வாங்கி வச்சிர்றேன்... என்ன சரியா...?" என்று கூற... அவள் சந்தோசமாய்த் தலையாட்டினாள்... பின்பு தங்கைகளை அழைத்துக் கொண்டு அவள் விளையாட சென்றுவிட்டாள்...

இருவரின் அன்பினை பார்த்தபடி அங்கு வந்தமர்ந்தாள் நிஷிலா... அவன் நிறைவான மனதுடன் அவளது தோளில் சாய்ந்து கொண்டான்...

"தேங்க்ஸ்டி..." என்று அவன் மனைவியிடம் நன்றியுரைக்க...

"எதுக்கு...?"

"என் வாழ்க்கையை முழுமையடையச் செய்துட்ட பேபி... இப்படி எல்லாம் நான் சந்தோசமாய் வாழ்வேன்னு நினைச்சு கூடப் பார்க்கலைடி... அப்படியொரு சந்தோசமான வாழ்க்கையை நீ எனக்குக் கொடுத்திருக்க..."

கணவனது வார்த்தையில் அவளது மனமும் மகிழ்ச்சியில் திளைத்தது...

சமூக வலைத்தளங்களில் பிரபலமாகி வந்த பேட்மேன்(PadMan) சாவாலை ஏற்றுச் சிம்மவிஷ்ணுவும் அதில் கலந்து கொண்டான்... மாதவிடாய் காலங்களில் பெண்கள் உபயோகப்படுத்தும் நாப்கினை கையில் வைத்துக் கொண்டு அவன் எடுத்து பகிர்ந்த செல்ஃபி அவனது உறவினர்கள், நண்பர்கள், தொழிலாளர்களிடத்தில் அவனுக்கு நல்மதிப்பை ஏற்படுத்தித் தந்தது...

சிம்மவிஷ்ணு மாதிரி நல்ல கணவனாக, தந்தையாக இருக்க வேண்டும் என்று எல்லோரும் நினைக்கும்படி அவன் நல்ல உதாரணமாக இருந்தான்... அதற்கு முக்கியக் காரணம் அவன் வாழ்வில் வந்த நான்கு தேவதைகளே...!!!

********************

சிம்மவிஷ்ணு, நிஷிலாவின் பதினைந்தாவது திருமணநாள் கொண்டாட்டத்திற்காகப் பவித்ரன், துளசி தம்பதியினர் தங்களது மக்களுடன் வந்திருந்தனர்... உடன் பத்ரிநாத், அருந்ததியும் வந்திருந்தார்கள்... சிறியவர்கள் ஐவரும் சேர்ந்து கொண்டு வீட்டை இரண்டாக்கி கொண்டிருந்தனர்...

பெரியவர்கள் நால்வரும் தோட்டத்தில் ரிலாக்சாக அமர்ந்திருந்தனர்... அப்போது பவித்ரனுக்குத் திடுமென அந்தச் சந்தேகம் வந்தது...

"விஷ்ணு நான் உன் கிட்ட ஒண்ணு கேட்டா தப்பா நினைக்க மாட்டியே...?"

"கேளு தீரா..."

"நீ நிஷியை கடத்தியதுக்கும், சுடலைக்கும் ஏதாவது தொடர்பு இருக்குதா...?"

"உன் அத்தை மகன் ரத்தினம் ரொம்ப அறிவாளிடி... எவ்வளவு சீக்கிரம் உண்மையைக் கண்டுபிடிச்சிருக்கான் பாரேன்..." மனைவி காதில் சிம்மவிஷ்ணு ரகசியமாக முணுமுணுத்தான்...

"சும்மாயிருங்க..." என்று அவனை அதட்டினாள் அவனது அருமை மனைவி...

"இல்லை தீரா... நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி உன் மாமன்மகள் ஒரு பார்ட்டியில் என்னைப் பார்த்து மயங்கி என் பின்னாடியே வந்துட்டாள்... வேணும்ன்னா நீயே அவளிடம் கேட்டு பார்..."

"அப்படியா நிஷி...?" அறியாமையுடன் பவித்ரன் கேட்க...

கணவனைத் திட்ட திரும்பிய நிஷிலா அவனது குறும்பு பார்வையில் மனதினை பறிகொடுத்தவளாய், "ஆமாம் அத்தான், ஒரு பார்ட்டியில் தான் நான் இவரைப் பார்த்தேன்... வொயிட் சர்ட், ப்ளாக் பேண்ட், டையில் செம ஸ்மார்ட்டா, அலை அலையாய் முடி அலைபாய மாமா நடந்து வந்த ஸ்டைல் இருக்கே..." என்றவளது மனக்கண்ணில் அன்று அவளது அலுவலகப் படியில் ஸ்டைலாக இறங்கி வந்த சிம்மவிஷ்ணுவின் பிம்பமே வலம் வந்தது...

அவளது விழிகளில் மலர்ந்த கனவினை சிம்மவிஷ்ணுவும் கண்டானோ...! அவனது விழிகளும் அவளைக் காதலோடு பார்த்தது...

இருவரையும் பார்த்த பவித்ரன், "இதுங்க தேறாதுங்க... நாம உள்ளே போகலாம்..." என்று கூறியவன் மனைவியை அழைத்துக் கொண்டு வீட்டினுள் சென்றான்...

சிம்மவிஷ்ணு மகிழ்வோடு மனைவியைத் தனது தோளில் சாய்த்துக் கொண்டான்... அவர்களது சந்தோசத்தைப் பார்த்தபடி வானில் இருந்த மதியானது உற்சாகமாய் வலம் வந்தது... இவர்களின் இந்த மகிழ்ச்சி அவர்களது வாழ்நாள் முழுவதும் தொடரும் என்று நம்புவோமாக...!!!

"காதலடி நீ யெனக்கு, காந்தமடி நானுனக்கு;
வேதமடி நீ யெனக்கு, வித்தையடி நானுனக்கு;
போதமுற்ற போதினிலே பொங்கி வருந் தீஞ்சுவையே!
நாதவடி வானவளே! நல்லுயிரே கண்ணம்மா!"

முற்றும்...!!!